40

MAIN LIBRARY, SEUSL

SJ008540

Ex-Libris S.H.M. Jameel

Donated to the Library

South Eastern University of Sri Lanka

மன்னார் மாவட்ட முஸ்லிம்கள்
வரலாறும் பண்பாடும்
வரலாற்று ஆய்வு நூல்

DONATED
by
S.H.M. JAMEEL

# தேசிய மீலாதுன் நபி விழா
# மன்னார் - 2005

வெளியீடு
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கொழும்பு - 10

008540

மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் வரலாறும் பண்பாடும்
வரலாற்று ஆய்வுநூல்

பக்கங்கள் : 416

அளவு : A5

பிரதிகள் : 1000

தேசிய மீலாத் விழா - (வன்னி 2005)வையொட்டி
வெளியிடப்படுகிறது (டிஸம்பர் 2005)

பதிப்பாசிரியர் : அஷ்ஷெய்க் எம்.ஐ. அமீர்

தொகுப்பாசிரியர் : கலைவாதி கலீல்

ஆக்கம் : நூலாக்கக் குழு

டைப் செட்டிங் : திருமதி ஷாமிலா ஹுஸைனைஸ்

புகைப்படங்கள் : ஏ. எஸ். எம். ஜாவித்
எம்.ஏ. அப்துல் லத்தீப்

முகப்போவியம் : கலைவாதி கலீல்

வெளியீடு :
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கொழும்பு 10.

அநுசரணை :
வன்னி புனர்வாழ்வளிப்பு மாவட்ட அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 03.

Printers : Crescent Publications (Pvt) Ltd.
156, Hospital Road,
Kulubowila, Dehiwala

LIBRARY
25 NOV 2011

# வன்னி புனர்வாழ்வு
# வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர்
# அல்ஹாஜ் றிஷாட் பதியுதீனின் செய்தி

**தே**சிய மீலாத் விழாவையொட்டி வெளியிடப்படும் இவ்வாய்வு நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி யடைகிறேன்.

கடந்த 24 வருடங்களாக இலங்கை அரசு நாட்டின் நாலாபுறமும் தேசிய மீலாத் விழாக்களை நடாத்தி வருகிறது. இது அரசே முன்னின்று நடாத்தும் விழா என்பதால் விழா நடைபெறும் பிரதேசங்களில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொள்கிறது.

ஆனால், இதுகாலவரை வடபுலத்தில் இத்தேசிய மீலாத் விழாக்கள் நடைபெற்றதே இல்லை. வடபுலம் புறக்கணிக்கப்பட்டே வந்தது இதனைக் கருத்தில்கொண்ட நான் அதிமேதகு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தேன். அவ்வேண்டுகோளுக்கு மதிப்பளித்து இவ்வாண்டு இவ்விழாவை வன்னியில் நடாத்துவதற்கு அனுமதி வழங்கினார். அத்தோடு விழாவையொட்டிய அபிவிருத்திகளின் பொருட்டு 75 மில்லியன் ரூபாய்களையும் வழங்கினார். இவ்வரிய வாய்ப்பை வன்னிக்கு வழங்கியதற்காக முதற்கண் ஜனாதிபதிக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய முப்பெரும் மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. உள்நாட்டு யுத்தத்தினால் இம்மாவட்டங்கள் சின்னாபின்னப்பட்டு பலத்த பின்னடைவுடன் காணப்பட்டன. எனவே இன்றைய சமாதானச் சூழலைப் பயன்படுத்தி மீள்கட்டுமாணமும் முஸ்லிம் மக்களுடைய மீள் குடியேற்றமும் நடைமுறைப்படுத்தப்பட்ட வேண்டியிருந்தது. அதற்கு வாய்ப்பாய் இவ்விழா அமைந்தது.

மீலாத் - கிராமங்கள் அமைத்தல், கலாசார நிலையங்களை நிர்மாணித்தல், வீதி புனருத்தாரணம், மின்சாரம் வழங்குதல் போன்ற இன்னோரன்ன அபிவிருத்தித் திட்டங்களுடன் இருநாள் பெருவிழாவாக மன்னார் முசலியிலும் வவுனியா, சூடுவெந்தபுலத்திலும் விழாவை நடாத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

வடபுலத்து முஸ்லிம்களின் புராதன வரலாற்றையும் கலை கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் சித்தரிக்கும் மாவட்ட ரீதியிலான ஆய்வு நூற்கள் நான்கு வெளியிடத் திட்டமிடப்பட்டது. அதன் அறுவடையே உங்கள் கரங்களில் தவழ்கின்ற இந்த மன்னார், வவுனியா வரலாற்று ஆய்வு நூற்களாகும்.

எனது தேர்தல் மாவட்டத்தைச் சாராதவர்களாக இருப்பினும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம்களையும் நான் மறந்து விடவில்லை. அவர்களின் இன்ப துன்பங்களில் பங்குகொள்ள வேண்டியது எனது கடன். எனவே இவர்களது வரலாறும் நூலுருப் பெற வேண்டும். ஆவணமாகப் பதியப்பட வேண்டுமென்று விரும்பினேன். எனவே யாழ்ப்பாண, கிளிநொச்சி மக்களுக்காகவும் ஒரு நூல் வெளியிடப்படுகிறது.

இந்நூல்கள் வெளிவர, உறுதுணை நின்ற அனைவருக்கும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்ட நூலாக்கக் குழுவுக்கும் மனப் பூர்வமான எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

றிஷாட் பதியுதீன்

# மதிப்புரை

மக்கள் யாவரும் ஒன்றே குலம் எனும் மார்க்கத்தைப் போதித்து அதனைச் செயற்படுத்திக் காட்டிய மகான் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பிறந்தநாளை நினைவுபடுத்தும் இந்நன்நாளில் வடபுலத்து முஸ்லிம்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் ஆவணப்படுத்தும் நோக்குடன் வெளியிடப்படும் வரலாற்று நூல்களுக்கு மதிப்புரை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்துக்களும் கிறிஸ்தவர்களும் பெரும்பான்மையாக வாழும் வடபுலத்தில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராயினும் அவர்களுடைய கலாசாரம் அடையாளம் காணடிக்கூடிய அளவுக்கு தனித்துவமானவை. அவற்றைப் படம்பிடித்துக் காட்டுவதே இவ்வெளியீடுகளின் நோக்கம்.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக மீலாதுந்நபி விழா இந்நாட்டில் தேசிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது. பிரதான விழா நடைபெறும் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள முஸ்லிம்களின் வரலாற்றையும் பாரம்பரியத்தையும் உள்ளடக்கிதான வரலாற்று நூல்களை வெளியிடுவது முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் செயற்றிட்டங்களில் ஒன்றாகும். அதனடிப்படையில் ஏற்கனவே களுத்துறை, அநுராதபுரம், கண்டி, மாத்தளை, மாத்தறை, அம்பாறை, கம்பஹா, புத்தளம், பொலநறுவை போன்ற மாவட்ட முஸ்லிம்களினதும் அக்குறணை, பாத்ததும்பறை முதலான பிரதேச முஸ்லிம்களினதும் வரலாற்றுப் பாரம்பரியங்கள் நூலாக்கம பெற்றிருக்கின்றன.

வடபுலத்தில் இவ்வாறானதொரு முயற்சியை தற்சமயம் மேற்கொள்வது சிரமமான ஒன்றாயினும் கிடைக்கப் பெற்ற ஆகக்கூடிய தகவல்களைக்கொண்டு இந்நூற்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

புனர்வாழ்வளிப்பு, வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் கௌரவ றிஷாட் பதியுதீன் அவர்களின் முயற்சியினதும் எழுத்தாளர்களுக்கும் ஏனையோருக்கும் அவர் வழங்கிய உற்சாகத்தினதும் வெளிப்பாடே இந்நூல்.

வாசகர்கள், மேலும் உட்படுத்தப்பட வேண்டுமெனக் கருதும் முக்கிய விடயங்கள் இருப்பின் அவற்றைத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தும்போது மற்றுமொரு குறைநிரப்பு நூலை வெளியிடக் கூடிய சாத்தியக்கூறுகள் கவனத்திற்கொள்ளப்படும்.

இந்நூலாக்க முயற்சியில் ஈடுபட்ட ஆய்வாளர்களையும் எழுத் தாளர்களையும் தகவல்கள் தந்துதவிய பெரியோர்களையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்ட விரும்புகின்றேன்.

திணைக்களத்தின் இவ்வாறான முயற்சிகள் தொடர வேண்டு மெனவும் ஆசைப்படுகின்றேன்.

ஏ.சீ.எம். ராஸீக்,<br>
செயலாளர்,<br>
புனர்வாழ்வளிப்பு, மாவட்ட<br>
அபிவிருத்தி (வன்னி) அமைச்சு.

# மதிப்புரை

வருடந்தோறும் நடைபெற்றுவரும் தேசிய மீலாதுந்நபி விழா இம்முறை வன்னியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளமையும் அதனையொட்டி வன்னியின் மாவட்டங்களில் பலதரப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் செயற்பட்டு வருவதும் இன்றைய சூழலில் முக்கியத்துவம் கொண்டதொன்றாகும்.

வன்னியில் — மன்னார், வவுனியா, முல்லைத்தீவு எனும் மாவட்டங்களில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த முஸ்லிம்கள் மாவட்டங்களின் பெரும்பான்மை இனத்தவர்களுடன் சௌஜன்யமாக வாழ்ந்து வந்தபோதும் குறிப்பிட்ட காலகட்டமொன்றில் அவர்கள் அனைவரும் வடக்கினின்றும் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இது நடந்து பதினைந்து வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் இன்று இவ்வகதி முஸ்லிம்கள் மீண்டும் தமது தாயகம் செல்ல ஏதுவான சூழல் உருவாகியுள்ளது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

நூற்றாண்டுகாலம் வாழ்ந்த முஸ்லிம்கள் வெளியேறியபோதும் அவர்களின் பாரம்பரியம், வாழ்வுமுறை, கலை, கலாசாரம் போன்றவை அம்மண்ணின் மறக்க முடியாத வரலாறுகளாகும். இன்று நடைபெறும் தேசிய மீலாத் விழாவையொட்டி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்

திணைக்களம், இம்மாவட்டங்களின் முஸ்லிம் வரலாற்றுச் சுவடுகளை நூலுருவில் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதன் வெற்றிக்குப் பணிபுரிந்த அனைத்து எழுத்தாளர்களும் அவர்களது ஆக்கங்களும் எதிர்கால சந்ததியினருக்கு நல்லதொரு ஆதனத்தை விட்டுச் செல்பவர்களாக ஆகின்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திற்குமாக ஆக்கப்படும் இந்நூல்கள், அந்தந்த மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு, பாரம்பரியம், கலை, கலாசாரம், மார்க்கச் செயற்பாடுகள் என்பவற்றை எடுத்தியம்புபவையாக அமைகின்றது. விட்டுப்போன பதினைந்து வருட வனவாச வரலாறுகூட இதனுள் அடக்கமே. எனவே, எதிர்காலப் பதிவாக இது மிளிருமென்பதில் ஐயமில்லை.

இந்நூலின் ஆக்கத்திற்குப் பெரிதும் பங்களித்த கலைவாதி கலீல், திணைக்களத்தின் பணிப்பாளர், மற்றைய உத்தியோகத்தர்கள், வன்னிப் புனர்வாழ்வு அமைச்சின் உத்தியோகத்தர்கள் சமூகத்தின் பாராட்டுக்குரியவர்களாவர்.

இந்நூல் முஸ்லிம்களின் மத்தியில் பொக்கிசமாகப் பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாகும்.

ஏ. காலிதீன்,
செயலாளர்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு

## பணிப்பாளர் ஆசி உரை

""நிச்சயமாக உம்மை நாம் அகில உலகத்தார்க்கு அருட்கொடையாகவே அனுப்பி வைத்தோம்"" என்று அல்குர்ஆன் நபி (ஸல்) அவர்களின் வருகை பற்றிக் குறிப்பிடுகின்றது.

இவ்வாறு அல்லாஹ்வினால் புகழப்படுகின்ற நபி (ஸல்) அவர்களை நாமும் புகழ வேண்டும். அவர்கள் காட்டிய வழியில் வாழ வேண்டும் என்ற நோக்கிலேயே இலங்கையில் வருடா வருடம் மீலாத் விழாவினை அரச அங்கீகாரத்துடன் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் விமர்சையாக கொண்டாடி வருகின்றது. இவ்வாண்டின் தேசிய மீலாத் விழா கௌரவ மேல் மாகாண ஆளுநரும் முஸ்லிம் சமய விவகாரங் களுக்கான ஜனாதிபதி ஆலோசகருமான அல்ஹாஜ் அஸ் ஸெய்யித் அலவி மௌலானா அவர்களின் வழிகாட்டலில் வன்னிப் புனர்வாழ்வு மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் கௌரவ அல்ஹாஜ் றிஷாட் பதியுத்தீன் அவர்களின் தலைமையில் வரலாற்றுப் புகழ்மிக்க வன்னி மாவட்டத்தில் பெரு விழாவாக நடை பெறுகின்றது.

இவ்விழாவினை முன்னிட்டு அபிவிருத்திப் பணிகளுக்காக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க அவர்களின் உத்தரவுக்கிணங்க இலங்கை அரசாங்கம் திணைக்களத்திற்கு வழங்கிய ஏழரைக்கோடி ரூபாவும் வன்னிப் புனர்வாழ்வ அமைச்சினால் சுமார் 20 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டு சமூக அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்விழா

மன்னார், வுவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட முஸ்லிம் அகதிகளின் சமூக அபிவிருத்திக்கு வழவகுத்திருப்பது வடமாகாண அகதி முஸ்லிம்களின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும்.

எமது திணைக்களத்தினால் கொண்டாடப்படும் வருடாந்த மீலாத் விழாவின் முக்கிய அம்சமாக அமைவது இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை ஆவனப்படுத்தும் முயற்சியாகும். இந்தவகையில் இவ்வருடம் வடக்கு முஸ்லிம்களின் வரலாறு தொகுக்கப்படுவது பாரியதொரு பணியாகும். கடந்த காலங்களிலும் எமது திணைக்களம் வருடாந்தம் மீலாத் நடைபெறும் மாவட்ட வரலாற்று நூல் வெளியிடுவது பாரம்பரியமாகும். இத்தொடரில் இம்முறை வடக்கு முஸ்லிம்களின் வரலாற்றைக் கூறும் யாழ் - கிளிநொச்சி மாவட்ட வரலாறு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் வரலாறுகள் தொகுக்கப்பட்டிருப்பது முக்கிய நிகழ்வாகும்.

இம்முறை தொகுக்கப்பட்டுள்ள வட முஸ்லிம்களது வரலாற்றுத் தொகுப்புகளும் எதிர்கால சந்ததியினருக்கு வடக்கு முஸ்லிம்களது வரலாற்றை அறிந்துகொள்வதற்காக பெரிதும் உதவும் என கருதுகிறேன். இந்தவகையில் இதனை நூலுருப்படுத்துவதில் பல்வேறு வகைகளிலும் உதவிய வடக்கு மாகாண அறிஞர்கள், ஆய்வாளர்கள், நூலாக்க குழுவினர், நூலைத் தொகுத்தளித்த சகோதரர் கலைவாதி கலீல் அவர்களுக்கும் இந்நூலை அச்சிட்டு வெளியிட உதவிய பதிப்பகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம்.ஐ. அமீர்,
பணிப்பாளர்,
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

# தொகுப்பாசிரியர் கூற்று

தேசிய மீலாத் விழாவொன்றை நடாத்துவதற்கான சந்தர்ப்பம் முதற்றடவையாக வடபுலத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் இம்முறை இதனை வன்னியில் நடாத்துவதற்கான அனுமதியை வழங்கி விட்டார்.

வன்னிப்புனர்வாழ்வளிப்பு மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் அல்-ஹாஜ் றிஷாட் பதியுதீனின் வேண்டுதலின் பேரிலேயே இவ்வனுமதி வழங்கப்பட்டது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வழமையான மீலாத் விழா தொடர்பான காரியங்களுடன் புதிய அபிவிருத்தித் திட்டங்களும் மேற் கொள்ளப்படுகின்றன.

வருடாவருடம், மீலாத் விழாவைச் சிறப்பிக்கும் வகையில் மீலாத் விழா நடைபெறும் மாவட்ட முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு மற்றும் கலை, கலாசார பண்பாட்டியல் தொடர்பான ஆய்வு நூல் ஒன்று வெளியிடப்படுகிறது.

இம்முறை ஆய்வு நூல் விடயத்தில் ஒரு புதிய அத்தியாயம் திறக்கப்படுகின்றது. ஒரு நூல் அல்ல, நான்கு நூற்கள் வெளியிடப் படுகின்றன. வன்னித் தேர்தல் தொகுதியில் மூன்று மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. முன்னார், வவுனியா, முல்லைத்தீவு என்பனவே அவை. எனவே மூன்று மாவட்டங்களுக்குமென தனித்தனியாக இவ்வாய்வு நூற்கள் வெளியாகின்றன. அத்தோடு

வட மாகாணத்தின் ஏனைய இரண்டு மாவட்டங்களுமான யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகியவையும் கருத்திற்கொள்ளப்பட்டன. இம்மாவட்டங்கள் உதாசீனம் செய்யப்பட்டால் சில வேளைகளில் இப்பிரதேசத்து முஸ்லிம்களின் வாழ்வும் வளமும் வெளி உலகுக்குத் தெரியாமலே போய்விடக்கூடிய ஆபத்து உளது. இதனைக் கருத்திற் கொண்டு, இம்மாவட்டங்களையும் இணைத்து எல்லாமாக நான்கு ஆய்வு நூற்களை வெளியிடுவதென்று தீர்மானித்தது வன்னி புனர்வாழ்வளிப்பு அமைச்சு.

இவ்விதைப்பின் மகோன்னத அறுவடையே இன்று உங்கள் கரங்களில் தவழும் இவ்வைந்து நூற்களுமாகும்.

இந்நூற்களை வெளிக்கொணர்வதில் பல சிரமங்களுக்கு முகங் கொடுக்க வேண்டியேற்பட்டது. முதலாவதாக, இம்மாவட்டங்களில் பெரும்பாலும் முஸ்லிம்கள் தற்போது வாழ்வதில்லை. அவர்கள் புலம் பெயர்ந்து இலங்கையின் எண்டிசையிலும் வாழ்ந்து வருகிறார்கள். எனவே இவர்களைச் சந்தித்துத் தகவல் திரட்டித்க் கட்டுரை எழுதுவதில் பெரும் சிரமம்கள் இருந்தன. அடுத்ததாக, வரலாற்றாய்வாரள்களும் அறிஞர்களும் எழுத்தாளர்கரும் எம்மத்தியல் இருப்பினும் அவர்களை இனங்கண்டு, கட்டுரைகளுக்கான தலைப்புக்களை வழங்கி, கட்டுரைகளைப் பெற்றுக் கொள்வதிலும் பல சிரமங்கள் எதிர் கொள்ளப்பட்டன.

ஆதாரபூர்வமான தகவல்கள், தரவுகளுடன் கர்ண பரம்பரைக் கதைகளையும் (செவி வழிச் செய்திகள்) உள்வாங்கியே இவ்வாய்வுக் கட்டுரைகளில் சில வடிவமைக்கப்பட்டன. பல பெறுமதி மிக்க தகவல்களைப் பெறும் பொருட்டு, பல ஊர்களுக்கும் செல்ல வேண்டியிருந்தது. பழைய விடயங்களையும் வரலாற்றையும் அறிந்தவர்கள் பெரியோர்கள் முதியோர்கள் பலரும் மரணடைந்து விட்டபடியால் மிகுந்த சிரமங்களின் மத்தியிலேயே தரவுகளையும் தகவல்களையும் பெற முடிந்தது.

இவ்வைந்து மாவட்டங்களிலும் மன்னார் மாவட்டத்திலேயே முஸ்லிம்கள் அதிக அளவிலும் செறிந்தும் வாழ்கின்றனர் (வாழ்ந்தனர்)

அடுத்ததாக வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைக் குறிப்பிடலாம்.

மன்னார் மாதலத்துக்கு அராபியர்கள் வருகை தந்திருக்கின்றனர்; யவனர்கள் வருகை தந்திருக்கின்றனர்; தேன்னிந்திய அரச வம்சத்தினர் வந்திருக்கின்றனர்; போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆங்கிலேயர் அனைவரும் மன்னாரை ஆண்டிருக்கின்றனர். மன்னாரில் காணப்படும் "பயோபப்" எனப்படும் "பெருக்கு மரம்" அராபியரின் வருகையை நினைவூட்டிக் கொண்டிருக்கும் சின்னமாகும்.

பண்டைய பெருமையையும் பாரம்பரிய கலைச் செழுமையையும் மிக்க மன்னாரில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற முஸ்லிம்களின் பூர்வீக வரலாறும் அவர்களது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களும் மார்க்கப்பற்றும் மத அனுட்டானங்களும் வர்த்தகச் சாதனைகளும் கல்விப் பயன்பாடுகளும் இந்நூலில் பொறிக்கப் பட்டுள்ளன. இவ்வரலாற்றுப் பதிவுகள் மன்னர் முஸ்லிம் மக்களின் வாழ்வியலை கல்லின் மேல் எழுத்தாக்கியிருக்கியிருக்கின்றன.

இத்தனைய வரலாற்றாய்வுக் களஞ்சியம் வெளிவரத்துணை நின்ற அறிஞர் பெருமக்கள் என்றென்றும் நன்றிக்குரியவர்களே!.

வன்னி மீலாத் விழாவிவையொட்டி ஒரு நூலையல்ல, நான்கு ஆய்வு நூற்களை வெளியிடவேண்டுமென்பதில் "விடாப்பிடி"யாக நின்று கட்டளை பிறப்பித்து இவ்வைந்து நூற்களும் வெளிவரத்துணைநின்ற வன்னிப்புனர்வாழ்வளிப்பு மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் அல்-ஹாஜ் றிஷாட் பதியுதீன் விசேட நன்றிக்குரியவராகிறார்.

இது ஒரு பேசும் புத்தகம். நூலைத்திறப்பீர்! முஸ்லிம்களின் சிறப்புமிக்க வரலாற்றை ஒவ்வொரு கட்டுரையும் பேசும்! உணர்ச்சிமயமான இவ்வரலாற்றினால் மன்னார் மாநிலத்து முஸ்லிம்களின் நெஞ்சு பெருமையில் விம்முவது நிச்சயமே!.

**- கலைவாதி கலீல் -**

நூலாக்கக் குழு

01. ஜனாப். ஏ.ஸீ. அப்துல் ஹக் (தலைவர்)

02. அல்ஹாஜ் எம்.கே.எச். முஹம்மது

03. ஜனாப் என்.ஏ. அமானுல்லாஹ்

04. ஜனாப் எம்.எம். இப்றாஹீம்

05. ஜனாப் அலிகான் ஷரீப்

06. ஜனாப் எம். முனவ்வர்

07. ஜனாப் எம்.ஏ. காதர் (மக்கள் காதர்)

08. ஜனாப் ஏ. ஹாஜா அலாவுதீன்

09. ஜனாப் எம்.எம். யூனுஸ்

10. ஜனாப் எம்.ஆர்.எம். ஹஜீக்

11. ஜனாப் எம்.எம். ஸியான

பிரதம ஆசிரியா
கலைவாதி கலீல்

## உள்ளே.....


| | |
|---|---|
| இலங்கையில் முஸ்லிம் சமுதாயம் | 19 |
| மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு | 25 |
| வாழ்வும் வளமும் | 49 |
| மூசலிப் பிரதேசம் | 63 |
| முசலி முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் | 82 |
| மாந்தை - நானாட்டான் பிரதேசம் | 105 |
| இலங்கை வரலாற்றில் மன்னார் எனும் சாளரம் | 139 |
| மன்னார் மாநில பண்பாட்டுப் பாரம்பரியங்களில் கிராமியக் கலைகள். | 147 |
| மன்னார் மாவட்டத்தில் முத்தமிழ் வளர்த்த முஸ்லிம் புலவர்கள் | 159 |
| மன்னார் பிரதேச குதிரை வளர்ப்பும், யானை பிடித்தலும் | 177 |
| மன்னார் முஸ்லிம்களின் கலை இலக்கியப் பயணங்கள் | 191 |
| மன்னார் முஸ்லிம்களும் - பத்திரிகைத் துறையும் | 201 |
| மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் விழிப்புணர்ச்சி | 207 |
| மன்னார் மாவட்ட முஸ்லிம்களும், நாடகத்துறையும் | 216 |
| உயிராபத்தும் சாமர்த்தியமும் மிக்க யானை பிடித்தல் தொழில் | 229 |
| முஸ்லிம் மாதர்களும் அவர்களது சமூகப் பணிகளும் | 235 |

வடமாகாண அபிவிருத்தியில் முஸ்லிம்களின் பங்கு 243

மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியும் பண்பாடும்.
முஸ்லிம்களின் தாய்மொழி தமிழாக இருப்பதற்கான காரணங்கள் 253

எருக்கலம்பிட்டி 281

சிலாவத்துறை - ஓர் அறிமுகம் 296

சிலாவத்துறையின் கலைகளும், கலாசார பண்பாட்டு விழுமியங்களும் 305

வற்றாத நீரூற்றும் வளமிக்க நிலமும் கொண்ட பொற்பதியாம் நற்பதி நம் தாராபுரம் 312

குடியிருப்பு (முர்வீதி) முஸ்லிம்களின் வரலாறும் கலாசார விழுமியங்களும் 381

கடலும் வயலும் கலை நயம் பயிலும் கவின் மிகு கிராமம் விடத்தல் தீவு 407

# இலங்கையில் முஸ்லிம் சமுதாயம்

## அறிமுகம்

இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய இன மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். மொத்தக் குடிசனத்தொகையில் 8 சதவீதம் முஸ்லிம்கள் ஆவார்கள். அரச ஆவணங்களில் முஸ்லிம்கள் 'மூவர்ஸ்' (Moors), மலேயர் (Malays) என குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

மொத்த முஸ்லிம் சனத்தொகையில் மூவர்ஸ் 96 சத வீதமாகவும், மலேயர் 4 சத வீதமாகவும் உள்ளனர். இவர்கள் இஸ்லாம் மதக் கோட்பாடுகளைப் பின்பற்றி வாழ்ந்து வரும் முஸ்லிம் சமுதாயத்தைச் சார்ந்தவரகளாவர்.

## முஸ்லிம்களின் தாய்மொழி தமிழாக இருந்து வருவதற்கான காரணங்கள்

இலங்கையில் வாழந்து வரும் முஸ்லிம்களின் (மூவர்ஸ்) தாய் மொழி தமிழாக இருந்து வருகிறது. இதற்குப் பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன. "ஆரியர் இலங்கைக்கு வருகை தருகின்ற போதிருந்த வேடுவர்களுடன் சேர்ந்த வரலாற்றை உடையவர்களே அரேபியர்கள்", "இவர்கள் இலங்கையின் ஆதிக்குடிவாசிகள்". என்பதாக சுவடித்திணைக்கள ஆணையாளர் கலாநிதி பாலேந்திரா குறிப்பிடுகிறார்.

இத்தகைய வரலாற்றையுடைய அராபியர்கள், பாரசீகர்கள், மொரோக்கர்கள், துருக்கியர் போன்ற வணிகர்கள் தென் இந்தியத் துறைமுகப்பட்டினங்களில் அப் பிரதேச மொழியான தமிழைத் தமது தாய்மொழியாகக் கொண்டு வாழ்ந்தார்கள். அவர்களின் வழித்தோன்றல்களே இலங்கையில் குறிப்பாக வடமேற்குப் பிரதேசத் துறைமுகப்பட்டினங்களான யாழ்ப்பாணம், மாந்தை-மன்னார், புத்தளம், கொழும்பு, பேருவளை ஆகிய இடங்களில் வணிகத் தொடர்புகளை ஏற்படுத்தி வந்தவர்களாவர். எங்கெங்கு தமது குடியேற்றங்களை அவர்கள் அமைத்து வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் தமிழையே தாய்மொழியாகக் கொண்டார்கள். இஸ்லாமிய எழுச்சியின் பின்னரும்முஸ்லிம்கள் தமிழை தாய்மொழியாகத் தொடர்ந்தார்கள்.

இலங்கையில் முதலில் ஏற்பட்ட முஸ்லிம் குடியேற்றம் அரேபியாவிலிருந்து குடிபெயர்ந்து வந்த ஹாஸிம் வம்ச வழியினர் (நபி (ஸல்) அவர்களின் சந்ததியினர்) என்றும் இவர்கள் 8ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் கலீபாவாகவிருந்த அப்துல் மலிக் பின மர்வான் என்பவரால் நாடு கடத்தப்பட்டவர்கள் என்றும் அவர்கள் இலங்கையில் திருகோணமலை, புத்தளம், யாழ்ப்பாணம், மாதோட்டம் மன்னார் குதிரை மலை, கொழும்பு, பேருவளை, காலி ஆகிய இடங்களில் தமது குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டார்கள் என்றும் சேர் அலக்சாந்தர் ஜோன்ஸ்டன் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அரேபியாவிலிருந்து வந்தவர்கள் ஆண்கள்தான் என்றும், தமிழ் பிரதேசங்களில் குடியேறிய அவர்கள் தமிழ்ப் பெண்களை மணந்ததால் அவர்களின் தாய்மொழி தமிழாக இருந்து வந்தது எனவும் அரசரெத்தினம் கூறியுள்ளார்.

இஸ்லாத்தின் இரண்டாவது கலீபா உமர் (றழி) அவர்கள் காலத்தில் அரேபிய முஸ்லிம்கள் தென் இந்தியக் கரையில் தமிழ் பேசிய நகரமான காயல் பட்டினம், கீழைக்கரை ஆகிய இடங்களிலேயே குடியேற்றத்தை அமைத்துக் கொண்டார்கள். அங்கிருந்தே மன்னார் முதலான இலங்கையின் பல பாகங்களுக்கும் இஸ்லாமும் அதனோடு சேர்ந்து தமிழும் பரவியது என இராமநாதன் குறிப்பிட்டுள்ளார்.

12ஆம் - 14ஆம் நூற்றாண்டுகளில் தென்கிழக்கு ஆசிய வணிகத்தில்

அரேபிய முஸ்லிம்கள் முழு உரிமை பெற்றிருந்தனர். அவர்களின் வணிக மொழி தமிழாக இருந்தது. அன்றியும் அவ் வரேபிய முஸ்லிம் வணிகர்கள் தமிழ்ப் பெண்களை விவாகம் செய்ததால் அம் முஸ்லிம்களின் தாய்மொழி தமிழாக இருந்ததோடு, அவர்களின் பண்பாட்டுடன் தமிழர்களின் பண்பாடும் கலப்பதற்கு அதுவே காரணமாகும் என்றும் அரசரெத்தினம் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிங்களப் பிரதேசங்களில் குடியமர்ந்த அரேபிய முஸ்லிம்கள் சிங்களப் பெண்களையே மணமுடித்தார்கள். எனினும் அம் முஸ்லிம்களின் தாய்மொழியும் தமிழாகவே இருந்து வருகிறது. அதற்க என்ன காரணம்? இஸ்லாமிய அறிஞர்களால் தோற்றுவிக்கப்பட்ட அரபு - தமிழ் மொழி நடையே அதற்குரிய காரணம் ஆகும்.

இஸ்லாமிய வேதக்கட்டளைகளாகிய அல்-குர்ஆன், றசூல் (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் என்பவற்றைக் கூறும் அல்-ஹதீஸ் என்பனவும் அவற்றிக்குரிய விளக்கங்களும் அரபு மொழியிலேயே எழுதப்பட்டன. அரபு மொழியில் தேர்ச்சி பெற்றவர்களால் மாத்திரமே அவற்றை விளங்க முடியுமாக இருந்தது. அரபு மொழியைக் கற்காதவர்களும் இஸ்லாமிய கோட்பாடுகள், அனுஷ்டான முறைகள் அதற்கான சட்ட வரையறைகள் போன்றவற்றை அறிவதற்கு வசதியாக அரபு-தமிழ் மொழி நடை தோற்றுவிக்கப்பட்டது. தமிழை அரபு எழுத்தில் எழுதுவதே அம்மொழி நடையாகும். மார்க்க அறிஞர்கள் தாம் பெற்ற அறிவை அரபு - தமிழ் மொழிநடையில் எழுதினார்கள். இதன் காரணமாக மார்க்க விளக்க நூல்கள், இலக்கிய நூல்கள், அனுஷ்டான வழிமுறை நூல்கள் என்பன போன்ற ஆயிரக்கணக்கான நூல்கள் எழுதப்பட்டன. யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முஸ்லிம் அறிஞர்களாலும் இத்தகைய நூல்கள் பல எழுதப்பட்டிருக்கின்றன. அன்றியும் ஒல்லாந்தர் ஆட்சியின் போது யாழ்ப்பாணத்தில் காணி உறுதிகள் அரபு-தமிழ் நடையில் எழுதுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அரபு - தமிழ் நூல்களைப் படித்து மார்க்க அறிவைப் பெற்றுக் கொண்டார்கள்.

தமிழ் சமூகம் வாழ்ந்த பிரதேசங்களில் குடியமர்ந்த அரேபிய

முஸ்லிம்கள் தமிழ் சமூகத்தோடு ஐக்கியமாக வாழ்ந்து வந்தார்கள். அதே போன்று சிங்களச் சமூகத்தவர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் குடியமர்ந்த முஸ்லிம்கள் சிங்கள மொழியைக் கற்றதோடு அச்சமூகத்தவர்களோடும் இணக்கமாக வாழ்ந்து வந்தார்கள்.

**போத்துக்கேயரின் வருகையின் பின்**

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வணிகத்தில் முதன்மை பெற்றிருந்த அரேபிய முஸ்லிம்களின் வியாபாரத்தைக் கைப்பற்றும் நோக்கமாக இலங்கையை அடைந்த பேத்துக்கேய காலனித்துவ ஆட்சியாளர் களால், வடமேற்குக் கரையோரப் பிரதேசங்களும் கைப்பற்றப்பட்டதும், முஸ்லிம்களின் மீது பல பொருளாதாரத்தடைகள் கொண்டுவரப்பட்டன. இதன் காரணமாக வடமேற்குக் கரையை அண்டிய பிரதேசங்களில் வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் மலைநாடு, கண்டி மன்னனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால், கண்டி மன்னன் முஸ்லிம்களுக்கு அடைக்கலம் அளித்து, கண்டி நகருக்கு அருகாமையிலிருந்த சில கிராமங்களிலும் அவர்களைக் குடியமரச் செய்தான். அவ்வாறு குடியமர்ந்த முஸ்லிம்கள் அரசனின் வணிக மேம்பாட்டுக்குத் தமது ஒத்துழைப்பை வழங்கியதோடு, போர்களிலும் அரசனுக்கு உறுதுணையாக இருந்து வந்தார்கள். மலைநாட்டுக்கு இடம் பெயர்ந்து சென்ற முஸ்லிம்களுள் அதிகமானவர்கள் இலங்கையின் கிழக்குப் பிரதேசங்களில் குடியேற்றத்தை அமைத்து விவசாயப் பொருளாதாரத்தை மேற்கொண்டு வந்தார்கள்.

**முஸ்லிம்களின் இன்றைய நிலை**

முஸ்லிம்கள் இலங்கையில் பரவலாக வாழ்ந்து வருவதோடு, அவர் தம் சூழலில் வாழுகின்ற இதர சமூகத்தவர்களோடும் ஐக்கியமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்து வருகிறார்கள்.


முஸ்லிம்கள் விவசாயிகளாகவும், வியாபாரிகளாகவும், உற்பத்தியாளர் களாகவும், பணியாளர்களாகவும் இருந்து நாட்டின் பொருளாதாரத் திற்குத் தமது பங்களிப்பைச் செய்து வருவதோடு அரசியலில் தேசிய

ரீதியாகவும், தமது இனத்துவத்தைப் பேணும் வகையிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். 1990 ஆம் ஆண்டு தமிழ் சமூகத்தினரால் முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தப்பட்ட பலாத்கார வெளியேற்றத்தைவிட பாரிய பிணக்குகள் இதுவரை இரு சமூகங்களுக்கிடையே ஏற்பட்டிருக்கவில்லை என்று கூறலாம்.

அண்மைக் காலங்களில் சிங்கள-தமிழ் சமூகங்களுக்கிடையில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் முஸ்லிம்கள் நடுநிலை வகித்து வந்திருப்பதோடு, தமிழ் சமூகத்தின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருந்து வருகிறார்கள். அன்றியும் சிறுபான்மையினர் கோருவது போன்று உயர்கல்வி வாய்ப்பு, அரச உத்தியோக வாய்ப்பு, அரச காணிப் பங்கீடு போன்ற விடயங்களில் முஸ்லிம்கள் அரசுக்குத் தொல்லை கொடுக்காது ஒதுங்கி வந்திருக்கிறார்கள்.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலிருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை அம்மக்களின் கல்வி, பொருளாதாரம், கலை, கலாசார, உளவியல் ரீதியாகப் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி யுள்ளது என்பது மறைக்க முடியாத உண்மைகளாகும். அதனால் அம்மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக அனைத்துத் தரத்தினரும், குறிப்பாக முஸ்லிம்களை அவர்களின் வாழ்விடங்களை விட்டு வெளியேற்றிய சமூகமும் அக்கறை எடுப்பது அவசியமும் அவசரமும் ஆகும்.

படம் 1 : வடமாகாணமும் அதன் மாவட்டங்களும்



# மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு

***அறிமுகம்***

வெளிநாடுகளில் முதன் முதலாக அறியப்பட்ட இலங்கைப் பிரதேசம், மன்னார் என்று நம்பப்படுகிறது. வெளிநாடுகளுடன் இலகுவாகத் தொடர்பு கொள்ளக்கூடிய ஆழமற்ற கடற் பிரதேசத்தை மன்னார் கொண்டிருந்தமையே இதற்குக் காரணமாகும். அன்றியும் வரலாற்றுக் காலத்தில் அனுராதபுரத்தை விரைவாக அடையக்கூடிய இறங்கு துறையையும் மன்னார் கொண்டிருந்தது.

இலங்கை வரலாற்றில் மிக ஆரம்பகாலத்தில் அறியப்பட்ட குடியிருப் புக்கள் எல்லாம் அனுராதபுரம், மன்னார், புத்தளம் ஆகிய முக்கோணப் பிரதேசத்திலேயே காணப்பட்டன. இவையே, மன்னார் மாவட்டம் ஒரு முக்கிய பிரதேசமாக அறியப்பட்டதற்கான காரணங்களாகும்.

இம்மாவட்டத்தின் நிருவாகப் பிரதேசங்களாக மன்னார். மாந்தை. நானாட்டான். முசலி ஆகிய பிரதேசங்கள் கொள்ளப்படுகின்றன. இப்பிரதேசங்கள் காலனித்துவ காலத்திலிருந்து தனித்துவமான பிரதேசங்களாக நிருவகிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

*மன்னார்த் தீவு*

மன்னார் நிர்வாகப் பிரதேசத்தில், மன்னார் தீவிலேயே முஸ்லிம்கள் தமது குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்திருக்கின்றனர். அன்றியும் தென்கிழக்காசிய வணிகத்தில் முஸ்லிம்கள் ஏகபோக உரிமையைப் பெற்றிருந்த காலத்தில் மன்னார் தீவு, அவர்களின் வணிக மத்திய தலமாக இருந்து வந்திருக்கிறது.

மன்னார்த் தீவு, தென் இந்தியக் கரைக்கு மிக அண்மையில் ஏறக்குறைய 22மைல் தூரத்தில் அமைந்திருப்பதனால் தென் இந்திய மாவட்டங்களில் ஏற்பட்டு வந்த சமயம், அரசியல், மொழி, கலாச்சாரம் ஆகிய மாற்றங்கள் இத்தீவிலும் அவ்வப்போது தாக்கத்தை ஏற்படுத்தக் காரணமாக இருந்து வந்திருக்கின்றது என்ற உண்மையை வரலாற்று நூல்களில் காணமுடிகிறது.

மன்னார்த் தீவு இலங்கையின் வடமேற்குத் திசையில் அமைந்திக்கும் தீவுகளுள் மிகப்பெரியது. இது வடக்கே பாக்கு நீரிணையையும், கிழக்கும் தெற்கும் மன்னார்க் குடாக் கடலையும், மேற்கே மன்னார்த் தீவையும் இந்தியத் துணைக் கண்டத்தையும் பிரிக்கும் வங்காள விரிகுடாக் கடலையும் எல்லையாகக் கொண்டுள்ளது. 24 கி. மீற்றர் நீளமும், 4 கி. மீற்றர் அகலமும் இத்தீவு கொண்டுள்ளது. அரைவறள் வலையத்துள் இத்தீவு அமைந்திருப்பதால் ஒக்டோபர் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையும் வீசும் வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றினால் மழையைப் பெறுகிறது. >1250 மி.மீற்றர் மொத்த மழையையும், சராசரி வெப்பமாக <27.8c ஐயும் இத்தீவு கொண்டுள்ளது

தென் மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று வீச ஆரம்பிக்கும் மே மாதம் ஆரம்பத்தில் இடியுடன் கூடிய மேற்காவுகை மழையையும் இத்தீவு பெறுகிறது. தென் மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று வரண்ட காற்றாக அதிவேகத்துடன் மே மாதம் தொடக்கம் செப்டம்பர் மாதம் வரை வீசும்.

உடை மரத்துடனான கூரிய முட்பற்றைக்காடு, நாவல், ஆல், இத்தி, கருக்குவாச்சி, ஆவாரை, எரிக்கலை, வேம்பு, தென்னை, பனை,

முந்திரி, ஆகிய தாவரங்களையும், கடற்கரையோரங்களில் கன்னா, தாழை, உவரி போன்ற தாவரங்களையும் இத்தீவு கொண்டுள்ளது. மாடு, ஆடு, எருமை, குதிரை, கழுதை, மான், நரி, முயல் போன்ற மிருகங்களையும் புறா, மைனா, கிளி, காகம், கவுதாலி போன்ற பறவைகளையும் இத்தீவு கொண்டுள்ளது.

இத்தீவு சமனான நிலப்பரப்பைக் கொண்டிருப்பினும், பேசாலைக்கும் தலைமன்னாருக்கு மிடையில் ஆங்காங்கு உயரமான மணல் மேடுகளைக் கொண்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலிருந்து முஸ்லிம்கள் 20.10.1990ல் வெழியேற் றப்படு முன்னர் மன்னார்த் தீவில் 36% றோமன் கத்தோலிக்க தமிழர்களும், 34% முஸ்லிம்களும் 27% இந்துக்களும் வாழ்ந்து வந்தனர்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மன்னார் தீவு மிக முக்கியமான தொரு இடத்தை வகித்து வருகிறது. எமக்குக் கிடைக்கும் வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில் நோக்கும் போது மன்னார் தீவில் குடியமர்ந்திருந்த ஆதிக்குடிகளுள் முஸ்லிம்களும் அடங்குவர். இத்தீவில் முஸ்லிம்கள் 13 நூற்றாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதற்கு உறுதியான சான்றுகள் உள்ளன என்பதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள் என ஜோன்சன் எழுதியுள்ளார். மத்திய கிழக்கிலுள்ள பாரசீகக் குடாநாட்டுத் துறைமுகங்களான பென்போர்(பாகிஸ்தான்), ஸிறாப் (ஈரானியக் கரையில்), சுஹார்(ஓமான்), மண்டா (கென்யா), ஆகியவற்றுடனும், மேற்கில் எகிப்து, ஈரான் போன்ற நாடுகளுடனும் மாந்தைத் துறைமுகம் (மாதோட்டம்) வர்த்தக ரீதியாகத் தொடர்புபட்டிருந்த போது வணிகத்தின் பொருட்டும் ஏற்றுமதி, இறக்குமதி படகோட்டுதல், முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல் போன்ற தொழில்களை மேற்கொள்வதற்காகவும், அரேபிய இந்திய வழித்தோன்றல்கள் மன்னார்த் தீவையடைந்தனர். பின்னர் தமது குடியிருப்புக்களையும் ஏற்படுத்திக் கொண்டனர்.

பேராசிரியை கிரிபமுன (Kiribamune) என்பவர் தமது அறிக்கையில்

"அன்மைக்கால தொல்பொருள் ஆய்வுச்சான்றின்படி மாந்தையின் வரலாற்றுக்கால மகா திட்ட (மாதோட்டம் மாந்தை) துறைமுகமானது பாரசீகக்குடாத் துறைமுகங்களுடன் வர்த்தக ரீதியாக மிகவும் சிறந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளது." எனக்குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பாரசீகக்குடாக் கடலின் மேற்குறிப்பிட்ட துறைமுகப் பட்டினங்களில் அண்மைக் காலத்தில் மேற்கொண்ட அகழ்வு ஆராய்ச்சியின் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அரேபியர் களின் வணிக நடவடிக்கைகள் கி.மு. 2ஆம் அல்லது முதலாம் நூற்றாண்டு தொடக்கம் கிபி 12ஆம், 14ஆம் நூற்றாண்டு வரையும் பரந்திருந்தது என்பதையும், அரேபியர்கள் தென்கிழக்கு ஆசிய வணிகத்தில் நிலைத்திருந்ததையும் காட்டுகிறது. பிற்காலப் பகுதியில் இலங்கையுடனான வணிகமும் முஸ்லிம்களின் கையிலேயே இருந்து வந்தது. அக்காலத்தில் மன்னார்த் தீவும், வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூரும் வணிக மையங்களாக நிருவகிக்கப்பட்டு வந்திருக்கின்றன என அறிய முடிகிறது. இத்தகைய காரணங்களே வரலாற்றில் மன்னார் முதன்மை பெற வழிவகுத்தன எனலாம்.

***மன்னார்த் தீவில் மக்கள் குடியேற்றம்***

வரலாற்று ரீதியாக நோக்கும் போது கி.மு. பல்லாண்டு காலத்திற்கு முன் இந்தியாவும், இலங்கையும் இணைந்திருந்ததென்றும் இயற்கை அனர்த்தங்களால் இரு நாடுகளும் பிரிந்தன என்றும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இயற்கை அனர்த்தங்களினால் இலங்கை பிரிபடு முன்னர் தாமிர பரணி ஆற்று வடிநில மக்கள் இலங்கையில் குடியேறினர். இத்தகைய தொரு குடியேற்றம் நீர்வள நாகரீகத்தை அடிப்படையாகக் கொண்ட மன்னார், அனுராதபுரம், புத்தளம், ஆகிய முக்கோண நிலப்பரப்பைக் கொண்டு அமைந்திருக்க வேண்டும். இந்நிலப் பரப்பைச் சோழ மன்னர்கள் சிறிது காலம் ஆண்டு வந்திருக்கிறார்கள். இக்கால எல்லையில் மன்னார் தீவிலும் மக்கள் குடியமர்ந்து இருக்கலாம். அன்றியும் மன்னார் தீவு பிரிக்கப்பட்ட பின்னரும் குடியேற்றம் ஏற்பட்டிருக்கலாம். இந்திய தென்கிழக்குக் கரையில் குடியமர்ந்திருந்த

திராவிடச் சமூகத்தைச் சேர்ந்த பரவர், கடயர் (Kadayas) வலயர், நளவர் போன்ற இன மக்கள் சிறிய வள்ளங்கள் மூலமாகவும், இராமர் நீரணையைக் (Adams' Bridge) கடந்தும் மன்னார் தீவையடைந்து குடியமர்ந்தனர். பரவர் மீன் பிடித்தலைத் தொழிலாகக் கொண்டிருந்தமையால் அதற்குச் சாதகமான கரையோரங்களில் குடியமர்ந்தனர். கடயச் சமுதாயம் சாயமிடும் தொழிலுக்குப் பயன்படுத் தப்படும் உடைமரம், சாயை வேர் போன்றவற்றைச் சேகரிப்பதிலும் சங்கு, சிப்பிகளிலிருந்து சுண்ணாம்பு செய்யும் தொழிலில் ஈடுபட்டும் இத்தொழிலுக்கு ஏற்ற இடங்களில் குடியமர்ந்தனர். மேலும் பனை, தென்னை பயிரிடும் விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தனர். வலயர், நளவர் ஆகியோர்களும் இத்தகைய விவசாய நடவடிக்கை களில் ஈடுபட்டு வந்தார்கள்.

இதே போன்று தென்னிந்தியக் கரையோர நகரங்களான பாம்பன், இராமேஸ்வரம், தொண்டி, வேதானை, அம்மா பட்டினம் போன்ற இடங்களில் குடியமர்ந்த அரபிகள், பாரசீகர்கள், மொரோக்கர்கள், துருக்கியர்கள், யவணர்கள், மொகலாயர்கள் போன்ற அரேபிய வழித்தோன்றல்கள் இந்தியாவுக்கு இடையிலான ஏற்றுமதி, இறக்குமதி படகோட்டிச் சேவையிலும், மன்னார் தீவில் பெறப்பட்ட பொருட்களை உள்ளடக்கிய வணிகத்திலும் ஈடுபட்டு வந்ததோடு, முத்துக்குளித்தல், அம்பர் சேகரித்தல், சங்கு குளித்தல், போன்ற தொழில்களிலும் ஈடுபட்டு வந்தனர். பின்னர் அவ்விடங்களில் குடியேற்றத்தையும் அமைத்துக் கொண்டனர். மாந்தைத் துறையை (மாதோட்டம்) அண்டிய பிரதேசங்களிலும், மன்னார், எருக்கலம்பிட்டி, மினாரா போன்ற பிரதேசங்களிலும் ஆதிக்குடியிருப்புக்கள் அமைந்திருந்தன. இத்தகைய குடியேற்றங்கள் கி.மு. 300 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் முகம்மது சமீம் எழுதியுள்ள 'ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சினைகள்' என்ற நூலில் பின்வரும் தகவல் குறிப்பிடப்படுள்ளது. மகா அலக்ஸாந்தருடைய கட்டளைப்படி கிரேக்க தளபதி ஓனாஸிக்கிறீட்டஸ் (Onesicritos) கி.மு. 327ல் தயாரித்த பூகோளப்படத்தில் மன்னார், புத்தளம் ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த அரேபியர்களைக் குறிப்பிடுகையில் சோனை (Sonai) என்ற பதத்தையும் அவர்கள் குடியிருந்த பிரதேசங்களுக்கு சோனைபொடோமஸ் (Sonaipotomas) என்ற பதத்தையும்

பிரயோகித்திருக்கிறார். எனவே 2300 வருடங்களுக்கு முன் அரேபிய வழித்தோன்றல்கள் இலங்கையின் வட மேற்குக் கரையையடைந்து வர்த்தகத் தொடர்புகளையும் குடியிருப்புக்களையும் ஏற்படுத்தியிருக்கின்றனர். இது அரேபியாவில் இஸ்லாமிய எழுச்சி தோன்றுவதற்கு நீண்டகாலத்திற்கு முற்பட்ட நிகழ்வாகும்.

## *மன்னார் மாவட்டத்தில் தோன்றிய இஸ்லாமிய மறுமலர்ச்சி*

இறுதித் தூதர் றசூல் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 10ஆம் ஆண்டில் (கி.பி 632ல்) அறபா மைதானத்தில் கூடியிருந்த 1,24,000 நபித்தோழர்களுக்கு "இன்றுடன் இஸ்லாம் பூரணப்படுத்தப்பட்டு விட்டது. இறுதிநாள் வரையும் தோன்றும் மனித சமுதாயத்திற்குரிய மார்க்கமாகவும் இதனை அல்லாஹ் அங்கீகரித்துவிட்டான். என்னைக் கொண்டு ஒரு வார்த்தை தெரிந்தாலும் அதனை இங்கு வராத வர்களுக்கு எடுத்துரைப்பீர்களாக" எனக்கூறி த.்.வாப்பணியின் முக்கியத்துவத்தை உணர்த்தினார்கள். அன்று அங்கு சமுகமளித் திருந்த நபித்தோழர்கள் உலகின் பல பாகங்களுக்கும் சென்று இஸ்லாம் மதத்தை மக்கள் மத்தியில் எடுத்துக் கூறினார்கள். அதன் காரணமாகவே உலகெங்கும் இஸ்லாம் பரவியது என்பது சரித்திரச் சான்றாகும்.

இஸ்லாத்தின் இரண்டாவது கலீபா உமர் (றழி) அவர்களின் ஆட்சியின் போது கி.பி 643 ஆம் ஆண்டு (ஹிஜ்ரி 21ல்) மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்களின் தலைமையில் ஒரு குழு இஸ்லாமிய பிரச்சாரத்திற்காக கப்பல் மார்க்கமாக கேரளம், காயல் பட்டினம் ஆகிய கரையோரப்பட்டினங்களுக்கு வந்து ஆங்காங்கு பள்ளி களையும் அமைத்தார்கள் (ஆதாரம் : கலாநிதி அல்-ஹாஜ் R.S. அப்துல் லத்தீபு)

9ஆம் நூற்றாண்டில் (கிபி. 843 – 854) முஹம்மது கில்ஜி தலைமையில் வந்த அரபு முஸ்லிம்கள் காயல் பட்டினம், கீழைக்கரை ஆகிய இடங்களில் குடியேற்றங்களை அமைத்ததோடு, தமிழகத்திலும் இலங்கையிலும் தனித்துவ மிக்க 'முஸ்லிம் சமுதாயமொன்று (Awil) உருவாகிட அடிகோலினார்கள் என தைக்கா சாகிபு ஆலிம் தனது

நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆகவே கீழைக்கரை, காயல்பட்டினம் ஆகிய இடங்களிலிருந்தே மன்னார் தீவுக்கு இஸ்லாம் பரவியது எனலாம்.

சேர். அலக்ஸாந்தர் ஜோன்ஸ்டன் என்பவரின் கூற்றுப்படி 8ஆம் நூற்றாண்டில் கலீபாவாக இருந்த அப்துல் மலிக் பின் மர்வான் காலத்தில் ஹாஸிம் (றசூல் (ஸல்) அவர்களின் வழித்தோன்றல்கள்) வம்சத்தைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணம், மாதோட்டம், மன்னார், குதிரைமலை, புத்தளம், கொழும்பு, பேருவலை, காலிமுகம் ஆகிய இடங்களில் குடியேற்றத்தை அமைத்துக் கொண்டார்கள் என அறிய முடிகிறது.

ஹாஜி ஏ.எம். புவாஜி என்பவரின் குறிப்பின்படி ஹிஜ்ரி 22 ல் (கிபி 643 – 644ல்) யமன் தேச அரச வம்சத்தைச் சேர்ந்த பதியுதீன், சலாகுதீன், முகம்மது ஆகியோர் தலைமையில் நான்கு கப்பல்கள் கீழைத்தேச நாடுகளை நோக்கிப் புறப்பட்டன.

15ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து லெவ்வை அப்பா ஆலிம் என்ற மகான் மன்னார் தீவுக்கு த.்வாப் பணிக்காக வந்து மன்னார், மாந்தை, எருக்கலம்பிட்டி ஆகிய இடங்களில் வாழ்ந்திருந்த மக்களுக்கு இஸ்லாமிய கொள்கைகளை எடுத்துப் போதித்து வந்தார். லெவ்வை அப்பா ஆலிம் இஸ்லாத்தின் முதலாவது கலீபாவாகிய அபூபக்கர் ஸித்தீக் (ரழி) அவர்களின் வம்சாவளியில் பிறந்தவராவார். அவர்களின் மறைவுக்குப் பின்னர் அவர்களின் புதல்வர்களான ஆதம் லெவ்வை, அகமது லெவ்வை, சீனி லெவ்வை, சர்க்கரை லெவ்வை ஆகியோர்களும் மகள் காட்டுமாபீவியும் த.்வாப்பணியை மேற்கொண்டு வந்தார்கள். இவர்கள் எங்கெங்கே வாழ்ந்திருந்தார்களோ அங்காங்கே மரணமடைந்து அடக்கஞ் செய்யப்பட்டார்கள். அவர்களின் அடக்கஸ்தலங்களான கபுறடிகள் மன்னார் பிரதேசத்தில் பல இடங்களில் அமைந் திருக்கின்றன.

008540

## மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் தொன்மை பற்றிய சான்றுகள்.

ஆரேபிய வர்த்தகர்கள் கி.மு. 2ஆம் நூற்றாண்டிலிருந்து தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்தி வந்திருக் கின்றனர். இஸ்லாமிய எழுச்சியின் காரணமாக அராபியர்கள் இஸ்லாத்தை ஏற்ற பின்னர் வணிகத்தில் உத்வேகத்தைக் காண முடிகிறது. கி.பி 8ஆம் நூற்றாண்டில் ஸிந்து மாகாணம் இஸ்லாமிய சாம்ராஜ்யத்துடன் இணைந்த பின்னர் 12ஆம் 14ஆம் நூற்றாண்டு வரை தென் கிழக்காசிய வர்த்தகத்தில் அராபிய முஸ்லிம்கள் முழு உரிமையுடையவர்களாகக் காணப்பட்டனர். மன்னார் தீவு அவர்களின் வர்த்தக சாம்ராஜ்யத்தின் தளமாகக் காணப்பட்டது.

இவர்கள் மரக்கலன்களையே பயன்படுத்தி வந்தமையால் வட கீழ் பருவப்பெயர்ச்சிக் காற்று வீசும் நவம்பர் முதல் பெப்ரவரி வரையுமுள்ள காலப்பகுதிகளிலும், புயற்காற்று வீசும் சீரற்ற காலங்களிலும் தமது மரக்கலங்களைப் பாதுகாப்பதற்கும் பழுது பார்ப்பதற்கும் ஏற்ற இடம் எருக்கலம்பிட்டிக்குத் தென்கரையில் அமைந்திருக்கும் குடாவாகும். அதனால் அப்பிரதேசத்தில் தமது துறைகளையும் பண்டக சாலைகளையும், குடியிருப்புக்களையும் அமைத்துக் கொண்டார்கள். இதன் காரணமாக அராபிய வர்த்தகர்களின் செயற்பாடுகள் எருக்கலம்பிட்டியிலும் அக்கிராமப்பகுதியைச் சேர்ந்த மினாராவிலும் அதிகரித்தன. மேலும் அராபிய வர்த்தகர்கள் தமக்குப் பயன்படக்கூடிய குதிரைகள், கழுதைகள் பேன்ற கால் நடைகளையும், அக் கால்நடைகள் உணவாக உட்கொண்டுவந்த பெருக்கு, உடை ஆகிய மரக்கன்றுகளையும் தம்முடன் எடுத்து வந்து அவற்றை ஆங்காங்கு நாட்டி வளர்த்தும் வந்திருக்கிறார்கள் என அறிய முடிகிறது.

### பெருக்கு மரம்

மன்னார் தீவின் சில பகுதிகளிலும் எருக்கலம்பிட்டியை அண்டிய சில இடங்களிலும் பெருக்கு மரங்கள் காணப்படுகின்றன. மரத்தின் அடிப்பகுதி ஏறக்குறைய 15 அடி விட்டமும், வரட்சியைத் தாங்கக்

கூடியதும் சிறிய இலைகளையுடையதுமாகும். இம்மரங்கள் மன்னார் தீவின் இயற்கைத் தாவரங்களைச் சேர்ந்தவையன்று. மன்னார் தீவில் இப்பெருக்கு மரங்களின் பரம்பல் முஸ்லிம்களின் தொன்மையைக் கூறும் இன்றைய ஆதாரங்களுள் ஒன்றாகக் கடுதப்படுகிறது. இம்மரங்கள் ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு முன்னர் செடியாக கிழக்கு ஆபிரிக்க நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு மன்னார் தீவில் நாட்டப்பட்டவையாகும். இம்மரத்தின் இலைகள் குதிரைகளின் தீனியாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறன.

எருக்கலம்பிட்டிக்கு வடபுறத்திலும் மன்னார்த் தீவின் பல பாகங்களிலும் இப்பெருக்கு மரங்கள் காணப்படுகின்றன. மன்னார் - பள்ளிமுனை பிரதான வீதியின் அருகே பழமைவாய்ந்த பெருக்கு மரம் ஒன்றுள்ளது. அது 1477 ஆம் ஆண்டளவில் அராபியக் கடலோடிகளால் நாட்டப்பட்டதென குறிபிடப்பட்டுள்ளது. இவற்றை ஆதாரமாகக் கொண்டு நோக்குமிடத்து மேற்குறிப்பிட்ட பகுதிகளில் அராபிய முஸ்லிம் வர்த்தகர்களின் செல்வாக்குப் போத்துக்கேயருக்கு முந்திய கால கட்டத்தில் காணப்பட்டது என்பதை உறுதி செய்கிறது.



### உடை மரம்

மன்னார் தீவில் உடைமரம் மிகவும் செழித்து வளர்ந்து வருகிறது. இம்மரம் கூரிய நீண்ட வெள்ளை நிறமான முட்களையும். மிகச் சிறிய இலைகளையும் உடைய மரமாகும். இவை நீண்ட வரட்சியையும் தாங்கி வளரக்கூடியவை.

இத்தகைய உடை மரங்களை ஓமான் பகுதிகளிலும், அப்பகுதியை அண்டிய பிரதேசங்களிலும் இன்றும் காணமுடிகிறது. உடை மரத்தின் இலைகள், காய்கள் ஆடு, குதிரை, கழுதை இனங்களின் தீனியாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதனால் அராபிய வர்த்தகர்கள் மன்னார் தீவுக்கு வந்தபோது இம்மரக்கிளைகளையும் தம்முடன் கொண்டு வந்து ஆங்காங்கு நாட்டி வளர்த்திருக்கலாம். அல்லது மன்னார் தீவின் இயற்கைத் தாவரமாகிய உடை மரத்தை அவர்கள் பயன்படுத்தியும் வந்திருக்கலாம் எனக் கருதலாம்.

### கழுதை இனம்

கழுதை இனக் கால்நடைகள் சிறிய குதிரைகளின் அமைப்பின் சாயலையுடையன. ஆனால் அவற்றின் வால்கள் மாட்டின் வால்களைப் போன்றன. சாம்பல் நிறமும், சாம்பலும், கருமை நிறமும் கலந்த நிறமுடையன. இத்தகைய கழுதை இனங்களை இன்றும் ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக் போன்ற பகுதிகளில் காண முடிகிறது. பொதிகளைச் சுமந்து செல்வதற்கும் சிறிய வாகனங்களை (வண்டில்களை) இழுத்துச் செல்வதற்கும் இம்மிருகங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அராபிய வர்த்தகர்கள் தமது பொதிகளைச் சுமப்பதற்காக இம்மிருகங்களையும் தம்முடன் எடுத்து வந்திருக்கிறார்கள். கரவன் பிரயாணங்களின் போது சாமான் பொதிகளைச் சுமந்து செல்வதற்கு இம்மிருகங்கள் பயன்பட்டு வந்திருக்கின்றன. இம்மிருக வர்க்கம் தற்போது பல்கிப்பெருகி எவ்வித பயனுமற்று வாழ்ந்து வருகிறன. அதே போன்று அராபிய வர்த்தகர்களால் பயன்படுத்தப்பட்ட குதிரைகளும் கவனிப்பாரற்று மன்னார், நெடுந்தீவு கால நிலைக்கு ஏற்ப வளர்ச்சியடைந்து அலைந்து திரிகின்றன.

மினாரா

மன்னார்த் தீவின் வடகரையில் எருக்கலம்பிட்டிக்கு அணித்தாக ஓர் வெளிச்ச வீட்டின் சிதைந்த பகுதி காணப்படுகின்றது. இதன் அமைப்பை நோக்கும் போது இது ஏறக்குறை 40 அடி உயரமும் 15 அடி விட்டமும் கொண்ட ஒரு கோபுரமாக இருக்க வேண்டும் என எண்ண முடிகிறது. இக்கோபுரம் 'மினாரா' என்று அழைக்கப்பட்டு வந்திருக்கிறது.

'மினாரா' என்பது ஓர் அரபுப்பதம். உயரமான கோபுரங்களை இவ்வாறு அழைப்பர். அன்றியும் இஸ்லாமிய கட்டிடக்கலையில் 'மினாரா' ஓர் அம்சமாகக் கருதப்படுகிறது. ஆதலால்தான் பள்ளிவாசல்களின் கட்டிடங்களோடு மினாராவும் ஒரு அம்சமாக அமைக்கப்படுகிறது. மக்கா, மதீனா, போன்ற இடங்களில் அமைந்திருக்கும் புனித இறை இல்லங்களிலும், சரித்திரப் புகழ் பெற்ற தாஜ்மகாலிலும் இத்தகைய உயர்ந்த மினாராக்களைக் (கோபுரங்களை) காண முடிகிறது. வட இந்தியாவை முஸ்லிம்கள் ஆட்சி செய்தபோது அமைக்கப்பட்ட கட்டிடங்களில் பரவலாக அத்தகைய மினாராக்களைக் காண முடிகிறது. பழைய டெல்லி நகரில் 'குதுப்மினார்' என்று அழைக்கப்பட்டு வரும் ஓர் கோபுரம் இன்றுமுள்ளது.

எருக்கலம்பிட்டிக்கு அணித்தாக அமைந்திருக்கும் மினாரா போத்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் அராபிய முஸ்லிம் வர்த்தகம் உன்னத நிலையில் இருந்த காலப்பகுதியில் பாக்கு நீரிணையால் சென்ற கப்பல்களுக்கும் ஏனைய மரக்கலன்களுக்கும் திசையைக் காட்டும் வெளிச்ச வீடாக இது பயன்பட்டு வந்திருக்கிறது.

காசிச் செட்டி என்ற அறிஞர் 1778 ஆம் ஆண்டு தான் எழுதிய வரலாற்று நூலில் இக்கோபுரம் போத்துக்கீசர் காலத்திற்கு முன்பே 'மினாரா' என்று அழைக்கப்பட்டது என்றும், இது கப்பல்களை வழிகாட்டும் வெளிச்ச வீடாகப் பயன்படுத்தப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய சான்றுகளை நோக்கும் போது போத்துக்கீசர் இலங்கைக்கு வருமுன்னர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே மினாராப்பகுதி யிலும் அதனைச் சூழவுள்ள எருக்கலம்பிட்டிப் மன்னார் பகுதியிலும் நிரந்தரமான முஸ்லிம் குடியிருப்புக்கள் இருந்தன என்பதும் மினாராப் பிதேசம் ஒர் துறைமுகமாக இருந்து வந்திருக்கிறது என்பதும் நிரூபணமாகிறது. அன்றியும் இந்தியாவிலிருந்து மரக்கலங்கள் மூலமாக மினாராத் துறைக்குக் கொண்டுவரப்பட்ட வணிகப் பொருட்கள் புத்தளம், அனுராதபுரம், வவுனியா ஆகிய இடங்களுக்கு கரவன் (Caravan) மூலமாக எடுத்துச் செல்லப்பட்டும், அதே போன்று அவ்விடங்களிலிருந்த வணிகப் பொருட்கள் மினாராத் துறையை யடைந்து அங்கிருந்து மரக்கலங்கள் மூலம் தென்னிந்தியத் துறைமுகப் பட்டினங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன என அறிய முடிகிறது.

## இறை நேசர்களின் அடக்கஸ்தலங்கள்

இஸ்லாமிய சமய ரீதியாக முக்கியத்துவம் பெற்ற இறைநேசச் செல்வர்களாகிய சமயப் பெரியார்களின் அடக்கஸ்தலங்கள் சியாரம், தர்ஹா, அல்லது கபுரடி என்று அழைக்கப்படுகின்றன. இலங்கையில் முஸ்லிம்களின் வரலாற்றை எடுத்துக்கூறும் ஆதாரங்களுள் ஒன்றாக இவ்விறை நேசர்களின் அடக்கஸ்தலங்கள் காணப்படுகின்றன. மன்னார் மாவட்டத்திலும் பரவலாக இத்தகைய பல அடக்கஸ் தலங்கள் இன்றும் அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றன. தலைமன்னார், மினாராவடி, கரிசல், எருக்கலம்பிட்டி, தாராபுரம், கீரி, மன்னார் ஆகிய இடங்களில் இத்தகைய அடக்கஸ்தலங்களைக் காணமுடிகிறது. இது ஒரு வகையில் இம்மாவட்டத்தின் முஸ்லிம்களின் நீண்ட கால வரலாற்றையும் முஸ்லிம்களின் சமய தனித்துவத்தையும் எடுத்துக்கூறும் சான்றாகவும் அமைந்திருக்கின்றது.

## அகழ்வு ஆய்வுச்சான்றுகள்

பாரசீகக் குடாக்கடலில் அமைந்துள்ள துறைமுகப் பட்டினங்களிலும், மாந்தைத் துறைமுகத்தை அண்டிய பிரதேசங்களிலும் அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு ஆய்வு மூலமாக அராபிய முஸ்லிம் வணிகர்களின் தொன்மை நிரூபணமாகிறது.

பேராசிரியை கிரிபமுன (Kiribamune) என்பவரின் ஆய்வு அறிக்கையில் "அண்மைக் காலத் தொல்பொருள் ஆய்வுச் சான்றின்படி மாந்தையின் வரலாற்றுக் காலமாக மகாதிட்ட (மாதோட்டம் - மாந்தை) துறைமுகமானது பாரசீகக் குடாத் துறைமுகங்களுடன் வர்த்தக ரீதியாக மிகவும் சிறந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளது" என குறிப்பிட்டுள்ளார்.

அன்றியும் மன்னார் புளியந்தீவிலும் மன்னார்த் தீவின் தென் புறத்திலும் கண்டெடுக்கப்பட்ட 'மீஸான்" கற்களும் 12ஆம் 14ஆம் நூற்றாண்டு களில் அராபிய முஸ்லிம்கள் மாதோட்டம், மன்னார் தீவு ஆகிய இடங்களில் மேற்கொண்டு வந்த வணிகத்தின் ஏகபோக உரிமையைப் பறைசாற்றுகின்றன.

பிற சான்றுகள்

அராபிய முஸ்லிம் வர்த்தகர்கள் மாந்தைத் துறைமுகத்துடன் மிக நீண்ட காலமாகத் தொடர்புகளை வைத்திருந்தார்கள் என்று வரலாற்று நூல்களில் காணமுடிகிறது. செனவிரட்ன என்ற வரலாற்று ஆசிரியர் மாந்தையுடனான முஸ்லிம்களின் வரலாற்றுக்கால வர்த்தகத் தொடர்புகளை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"மாதோட்டத் துறைமுக நகரத்தில் இஸ்லாமிய சமயத்தைத் தழுவிய அராபிய முஸ்லிம் வர்த்தகர்களின் சந்ததியினர் மிக நீண்ட காலமாக வாழ்ந்தார்கள். இவர்களின் வீடுகள் டமஸ்கஸ், பக்தாத் ஆகிய நகரங்களில் காணப்பட்ட வீடுகளுக்கு ஒப்பான கட்டிடக் கலையைக் கொண்டவையாகக் காணப்பட்டன. இவர்கள் மிகவும் வசதியான வர்த்தகர்களாக இருந்தார்கள். இவர்களின் வீடுகள் மாடி அமைப் பினையும் கூரைகள் தட்டையாகவும் காற்றோட்டம் கொண்ட உப்பரிக்கைகளைக் கொண்டவையாகவும் இருந்தன" என அவரின் அறிக்கை அமைகிறது.

மன்னாருடனான முஸ்லிம்களின் வரலாற்றுத் தொடர்பு ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தோடு மட்டுமல்லாமல் முத்துக்குளித்தல், அம்பர் சேகரித்தல், சங்கு குளித்தல் போன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாகக் காணப்பட்டது. முஸ்லிம்கள் மன்னாரின் தெற்குக்

கரையோரமாக முத்துக் குளித்தல் நடவடிக்கைகளில் சுழியோடி களாகவும், படகோட்டிகளாகவும், வர்த்தகர்களாகவும் தம்மை ஈடுபடுத்தியிருந்தார்கள் (Van 1888 and Steuart 6,1843)

பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் விரிவுரையாளராகப் பணியாற்றி, தற்போது ஆஸ்திரேலியாவின் பல்கலைக்கழகம் ஒன்றில் பேராசிரியராகப் பணிபுரியும் கலாநிதி ஏ.சீ.எல். அமீரலி "1800 - 1915 காலப் பகுதியில் இலங்கை முஸ்லிம்களின் ஏற்றுமதித் தொழில்" என்ற ஆய்வுக் கட்டுரையில் 1860 ஆம் ஆண்டிலே கீழக்கரையி லிருந்து மட்டுமே 200 படகுகள் முத்துச் சிலாபத்திற்கு வந்திருந்தன. 1890ல் முத்துக்குளிக்க வந்த 1300 – 1400 பேரில் 800 பேர் கீழைக்கரை, பாம்பன், தொண்டியைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். இதே ஆண்டில் 300 இலங்கை முஸ்லிம்கள் எருக்கலம்பிட்டி-மன்னார் பிரதேசங்களிலிருந்து வந்திருந்தனர். 1908ஆம் ஆண்டில் எண்ணிக்கை மிகவாகப் பெருகிப் போயிற்று எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஏறக்குறைய இதே போன்ற நடவடிக்கைகளில் மன்னார் வடபுறமான மாந்தைப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் சங்கு குளித்தலில் ஈடுபட்டு வந்தார்கள். துவினன் என்பவர் மன்னார் பிரதேசத்தின் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த சங்கு குளித்தலைப் பற்றிக் குறிப்பிடும் போது "மன்னார் வட பிரதேசம் சங்கு குளிப்பதற்கு மிகவும் பிரபல்யமாகக் காணப்பட்டது. அரேபியாவிலிருந்தும், கீழைக்கரையி லிருந்தும் வந்த முகம்மதிய சுழியோடிகள் இத்தொழிலில் மிகக் கூடுதலாக ஈடுபட்டார்கள். பின்னர் இப்பிரதேசத்தில் இவர்கள் குடியேறினார்கள்." என்று கூறியுள்ளார். (Yeman 1902)

மன்னார் மாந்தைப் பிரதேசங்களுடனான முஸ்லிம்களின் தொடர்பு இலங்கையுடனான காலனித்துவ ஆட்சியாளரின் தொடர்பால் வெகுவாகக் குறையத் தொடங்கியது. இவர்கள் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரானவர்கள் ஆகையால் முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தினார்கள். இதனால் இப்பிரதேசத்தின் கரையோரங்களில் குடியிருந்த முஸ்லிம்கள் உள்நாடு நோக்கி இடம் பெயர்ந்தனர். எனினும் மன்னார் கரையோரம் சார்ந்த மாந்தை, எருக்கலம்பிட்டி, மன்னார் ஆகிய பிரதேசங்களில்

முஸ்லிம்களின் வரலாற்றுத் தொடர்ச்சி எல்லாக் காலங்களிலும் காணப்பட்டன. ஒல்லாந்தர் கால அரசாங்க அறிக்கைகளின்படி மன்னார் பிரதேசக் கரையோரக் குடியிருப்புக்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் காலனித்துவ ஆட்சியாளர்களினால் முத்துக் குளித்தலிலும் சங்கு குளித்தலிலும் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்பதற்கான குறிப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. (The Duch Record in Ceylon Govt. – 1972) என இவ்வறிக்கை கூறுகிறது. 1975 ஆம் ஆண்டின் ஒல்லாந்த ஆட்சிக்கால அறிக்கையில் இதற்குச் சான்றுள்ளது. முஸ்லிம் முத்துக் குளிப்பாளர்களைத் தாங்கள் தவிர்க்க முடியாமல் தொழிலுக்கு வைத்திருக்க வேண்டிய நிலை இருந்த தாகவும் அவர்கள் முரண்பாடான சமய நம்பிக்கையுடையவர்களாக இருந்தமையால் அவர்கள் மீது கடுமையான தலைவரிகளைத் தாம் விதித்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். அக்கால மன்னார் முஸ்லிம்கள் முத்துக் குளிப்பதிலும், சங்கு குளிப்பதிலும் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாகக் காணப்பட்டதே அதற்குக் காரணமாகும். அன்றியும் மன்னார் தீவின் முக்கிய பொருளாதாரமாகிய முத்துக் குளித்தல், சங்கு குளித்தல் ஆகியவற்றில் காலனித்தவ ஆட்சியாளர்கள் தங்கியிருந்ததும் மற்றொரு காரணமாகும்.

இத்தகைய ஆதாரங்களிலிருந்து எருக்கலம்பிட்டி உட்பட்ட மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் போத்துக்கேயரின் வருகைக்கு முன்பிருந்தே நிலையான குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை நன்கு விளங்க முடிகிறது.

### *தொழில் முயற்சிகள் :*

மன்னார் தீவில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் வணிகம் மற்றும் வர்த்தக முயற்சிகளிலும், மீன்பிடித்தலிலும் அதனோடு இணைந்த தொழில்களிலும், கடல் மற்றும் விவசாய முயற்சிகள் போன்றவற்றிலும் ஈடுபட்டு வந்தார்கள். மன்னார் தீவில் வாழ்ந்திருந்த முஸ்லிம்களுள் 90% மக்கள் மேற் கூறிய தொழில் முயற்சிகளிலேயே ஈடுபட்டு வந்திருக்கிறார்கள்.

50% முஸ்லிம்கள் பலசரக்கு வியாபாரம், தேனீர்கடை, ஜவுளிக்கடை, சாய்ப்புச்சாமான் வியாபாரம் போன்ற தெழில்களை மன்னார் பெரிய கடைத்தெருவிலும் சொந்தக் கிராமங்களிலும் நடாத்தி வந்தார்கள். வாங்கி விற்றல், கொண்டு திரிந்து விற்றல் போன்ற நடவடிக்கை களிலும் ஈடுபட்டு வந்தனர். கடைச் சிப்பந்திகளாகவும் வாகனச் சாரதிகளாகவும் கடமை புரிந்திருக்கிறார்கள். மீன், கருவாடு போன்றவற்றை ஏற்றுமதி செய்தல், விவசாய முயற்சிகளில் ஈடுபடல், முடிவுப்பொருட்களை தீவுக்கு வெளியே கொண்டு செல்லல் போன்ற முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தனர். உடை மரங்களிலிருந்து விறகு சேகரித்தல், கொப்பராப் போடுதல் போன்ற தொழில்களிலும் இஸ்லாமியர்கள் ஈடுபட்டு வந்தனர்.

மன்னார் பெரிய கடைத்தெருவைப் பொறுத்தரை அங்கு வர்த்தக தொழிலை மேற்கொண்டவர்களுள் மற்றைய சமுதாயத்தவர்களோடு ஒப்பிடும் போது பெரும்பான்மை வர்த்தகர்கள் முஸ்லிம்களாகவே இருந்தனர். மன்னார் பெரிய கடைத்தெருவின் வர்த்தக சேவை மன்னார் மாவட்டம் மாந்தைப் பிரதேசம், நானாட்டான் பிரதேசம், கிளிநொச்சி மாவட்டம் வரை பரந்திருந்தது. இங்கு மொத்த வியாபாரமும், சில்லறை வியாபாரமும் நடைபெற்று வந்தது. முஸ்லிம்கள் மன்னாரிலிருந்து இடம்பெயரு முன்னர் மன்னார் பெரிய கடைத் தெருவிலிருந்த வர்த்தக நிலையங்களில் 61% உரிமை முஸ்லிம்களின் கையிலேயே இருந்தது. பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பப் பகுதியிலிருந்தே மன்னார் பெரிய கடைத் தெரு ஒரு வர்த்தக மைய நிலையமாக இருந்து வந்திருக்கிறது என அறிய முடிகிறது.

விவசாய முயற்சியை நோக்கின் மாதோட்டப் பகுதியிலிருந்த சொந்தக் காணிகளிலும், குத்தகையாகப் பெறப்பட்ட காணிகளிலும் இருபோக நெற்செய்கையை முஸ்லிம்கள் மேற்கொண்டு வந்ததோடு சிலர் தமது சொந்த விவசாயக் காணிகளில் குடியிருப்புக்களையும் அமைத்துக் கொண்டார்கள்.

ஆடு, மாடு, கோழி வளர்த்தல் போன்ற முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தனர். மேட்டு நிலத் தோட்டக் காணிகளில் பனை, தென்னை, மா, முந்திரி ஆகிய பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்தனர். சில

பிரதேசங்களில் வாழைச் செய்கை, முருங்கைச் செய்கை, கத்தரி, மிளகாய், வெற்றிலை, மரவள்ளி போன்ற பயிர்களையும் செய்கைபண்ணி வந்தனர்.

கடல் தொழில் தொடர்பாக மன்னாருக்குத் தென்புறமாக முத்துச்சிலாபம், மறிச்சுக்கட்டி ஆகிய இடங்களை அண்டிய முத்துச்சிப்பிகள் பெறப்பட்ட கண்டமேடைகளில் முத்துச்சிப்பிகளின் உற்பத்தி இல்லாதொழிந்ததன் காரணமாக முத்துக்குளித்தல் கைவிடப்பட்டது. சங்கு ஏற்றுமதியும் தடைசெய்யப்பட்டதால் அத்தொழிலும் கைவிடப்பட்டது. அதனால் பரவைக்கடற் பகுதிகளில் கடலட்டைகளைச் (Beach-de-mer) சேகரிக்கும் தொழிலை மேற்கொண்டு வந்தனர். கடலட்டைகள் சிங்கபூர், ஹொங்கொங், சீனா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு நல்ல வருவாயைக் கொடுத்து வந்தது. எஞ்சியோர் ஆழ்கடல், பரவக்கடல் மீன்பிடித் தொழில்களில் ஈடுபட்டு வந்தனர். உள்நாட்டுத் தேவை போக எஞ்சிய மீன்கள் ஐஸ் இடப்பட்டும், கருவாடாகப் பதப்படுத்தப்பட்டும் தீவுக்கு வெளியேயுள்ள இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

கச்சேரி மட்டத்திலான இலிகிதர், சேவகர் போன்ற உத்தியோகங் களிலும், தபாற்கந்தோர் சேவையிலும், வங்கிச் சேவையிலும் முஸ்லிம்கள் இடம் பிடித்திருந்தனர். ஆண்களும், பெண்களும் பாடசாலை ஆசிரியர்களாகக் கடமைபுரிந்து வந்தனர். அரச தொழிலை மேற்கொண்டு வந்தவர்களுள் 3 வீதமானவர்கள் பாடசாலை ஆசிரியர்களேயாவார்கள். பள்ளிவாசல்களில் கதீப்களாகவும், அரபு மத்ரசாக்களை நடாத்துபவர்களாகவும் கடமைபுரிந்து வந்தனர்.

1972ஆம் ஆண்டுக்குப்பின் மன்னார் தீவில் ஏற்பட்ட கல்வி மறுமலர்ச் சியின் காரணமாகக் கணிசமான முஸ்லிம்கள் பட்டதாரிகளாக, வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, பாடசாலை அதிபர்களாக ஆனார்கள். அன்றியும் உள்ளநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கக்கூடிய முஸ்லிம்களும், உயர் ஸ்தானிகராக கடமை புரியக் கூடிய முஸ்லிம்களும் மன்னார்த் தீவிலிருந்து உருவாக்கப்பட்டார்கள். மன்னார் தீவைச்சேர்ந்த கணிசமான முஸ்லிம்கள் கல்வி அதிகாரிகளாகக் கடமை புரிந்தார்கள். பல முஸ்லிம்கள் அரசியல்

வாதிகளுமானார்கள். 20.10.1990 ஆம் ஆண்டில் முஸ்லிம்கள் அனைவரும் மன்னார் மாவட்டத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டதும், மேற்கூறப்பட்ட தொழில் வளங்கள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்ததன் காரணமாக அவர்களின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. முஸ்லிம் பாடசாலைகள் மூடப்பட்டதன் காரணமாக கல்வி வளத்தில் இருள் சூழ்ந்து விட்டது எனலாம்.

## *கலையும் கலாச்சாரச் செயற்பாடுகளும்*

மன்னார் தீவில் வாழ்ந்த முஸ்லிம்களின் கலை கலாச்சாரப் பாரம்பரியங்களில் ஏனைய இனமக்களின் கலாச்சாரச் செல்வாக்கு காணப்பட்டாலும், இஸ்லாமிய சமய நம்பிக்கையினதும், வழிகாட்டியினதும், தனித்தவம் குறிப்பிடப்படும் அளவு முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அன்றியும் இஸ்லாமிய சமய மறுமலர்ச்சிக்கு ஏற்ப முஸ்லிம்களின் கலை கலாச்சார நடவடிக்கைகளில் தனித்தவமான மாற்றங்கள் ஏற்பட்டு வருவதையும் காணமுடிந்தது.

### கலைகள்

ஆரம்பகாலந் தொட்டு முஸ்லிம் கிராமங்களில் கலை நிகழ்ச்சிகள் வழக்கிலிருந்து வந்தன. கலை நிகழ்ச்சிகள் பாடல், ஆடல், நாடகம், கைவினை பொருட்கள் எனபன முக்கியம் வாய்ந்தன. சமய நிகழ்வின் போதும், திருமணம் போன்ற விசேட நிகழ்ச்சிகளின் போதும் சீனடி, சிலம்படி ஆட்டம், களிகம்பு நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுவதுண்டு. சீனடி, சிலம்படி ஆட்டம் என்பது ஒரு தற்பாது காப்பு விளையாட்டாகும். ஒரு கம்பின் துணையுடன் எதிரியிலிருந்து தன்னைப் பாதுகாக்கும் அதே வேளையில் அதே கம்பினால் எதிரியையும் எவ்வாறு தாக்கிப் பின்னோடச் செய்யலாம் என்பதனை இவ்விளையாட்டு விளக்குவதாக அமையும். களிகம்பு நடனம் என்பது தற்காலத்தில் பெண்கள் ஆடும் கோலாட்டம் போன்றுள்ளது. இதனை ஆண்களே ஆடுவார்கள். நபி (ஸல்) மீது அல்லது இறை நேசர்கள் மீது புனையப்பட்ட பாக்களைப் பாடியவாறு தாளத்திற்கு ஏற்ப கம்புகளையடித்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வருவார்கள்.

பெருநாட் காலங்களில் பெண்கள் ஊஞ்சல் ஆடச் செல்லும் வழக்கம் பரவலாக எல்லா முஸ்லிம் கிராமங்களிலும் இருந்துவந்ததொரு நிகழ்ச்சியாகும். இந்நிகழ்வின் போது பெண்கள் ஆசைக்கவி என்னும் நாட்டார் பாடல்களைப் பாடிவருவது வழக்கமாகும்.

சில முஸ்லிம் கிராமங்களில் நாடகங்களும் நடிக்கப்பட்டு வந்துள்ளன. காந்தரூபி நாடகம், கபுகாபு நாடகம், செங்கோட்டு நாடகம் போன்ற நாடகங்கள் நடிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

பனையோலைகளால் இளைக்கப்பட்ட வண்ண வண்ணப் பாய்கள் பெட்டிகள் போன்றவைகள் இத்தீவில் வாழ்ந்திருத்த முஸ்லிம்களின் கலையுணர்ச்சியை நன்கு பிரதிபலிப்பவையாக இருந்து வந்தன.

## இலக்கியச் செயற்பாடுகள்

மன்னார் தீவில் வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் நாடகம் எழுதுவதிலும், அவற்றை நடிப்பதிலும், கவிதைகள் புனைவதிலும் ஈடுபாடுடைய வர்களாக இருந்திருக்கிறார்கள்.

ஆசைக்கவி, ஊஞ்சலாட்டம், தாலாட்டு என்பன முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வந்த கவிதைகளாகும். இளம் ஆண்களும், பெண்களும் தங்கள் உள்ளக்கிடக்கைகளை ஆசைக்கவிகள் மூலமாக வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள். அக்கவிகளை ஆண், பெண் தனித்தும் இணைந்தும் பாடியுள்ளார்கள். ஊஞ்சல் பாட்டு என்றும் இவைகள் அழைக்கப்படும்.

## களிகம்புப் பாடல்கள்

இக்காலத்தில் பெண்கள் கோலாட்ட நடனம் ஆடுவது போன்று அக்காலத்தில் முஸ்லிம் ஆண்கள் சிறிய கம்புகளை அடித்து நடனமாடினர். இத்தகைய நடனம் களிகம்பு நடனம் எனப்படும். களிகம்பு நடனம் ஆடும்போது அதற்குரிய பாட்டுக்களைப் பாடி ஆடுவர். விசேட விழாக்களின் போதும், அமைச்சர், அறிஞர்களை வரவேற்கும் போதும் இத்தகைய நடனமாடுவது வழக்கமாகும். களிகம்பு நடனம் பல்லவி, மல்லிவெட்டு, எட்டடி, பத்தடி போன்ற

அங்கங்களை உடையது. அத்தகைய பாடலொன்று வருமாறு.

பல்லவி (அடி)

பாவில்லு பார்க்கலாம் பெண்ணே
மகிழ்வாக நடந்துவா கண்ணே (பாவில்லு)

மல்லி

தொட்டுக் கறியோடு கட்டிச் சாதம் கட்டி
தோகை மயிலாளே கொட்டைப் பாக்கு வெட்டி
சுற்றிப் புகையிலை வெற்றிலையும் கட்டி
சுண்ணாம்பு எடுத்தெந்தன் பின்னே நடந்துவா
துள்ளல்

பன்றி சிறுத்தைகள் குள்ள நரி முயல்
பாயும் வரிப்புலி ஓடும் மரவணில்
வென்றி மயிலினம் நின்று நடமிட
வேறு புறாக்களும் பாடுது கேளடீ (பாவில்லு)

**விளையாட்டுக்கள்**

மன்னார்த தீவு முஸ்லிம் கிராமங்களில் பலவகையான பாரம்பரிய விளையாட்டுக்கள் இருந்து வந்தன. கிளித்தட்டு மறித்தல், வார் ஓடுதல், றவுண் பந்து அடித்தல், நொண்டி யடித்தல், கிட்டியடித்தல், போளை சுண்டுதல், கண்ணாம்பூச்சி ஒழித்தல், குஞ்சு ஒழித்தல், கீச்சுக்கீச்சுத்தம்பளம் வைத்தல், புலியும் வெள்ளாடும் போன்ற விளையாட்டுக்களைக் குறிப்பிடலாம். நிலாக்காலங்களில் கிளித்தட்டு மறித்தல் விளையாடப்படும். மாலை நேரங்களில் ரவுன் பந்து அடித்தல் விளையாடப்படும். எஞ்சிய விளையாட்டுக்கள் ஓய்வான நேரங்களில் விளையாடப்பட்டு வந்துள்ளன. கண்ணாம்பூச்சு ஒழித்தல், குஞ்சு ஒழித்தல், கீச்சுக் கீச்சு தம்பளம் வைத்தல், புலியும் வெள்ளாடும், பாண்டி விளையாட்டு, போன்ற விளையாட்டுக்கள் பெண் பிள்ளைகளாலும் (10-12 வயதுப் பிள்ளைகள்) விளையாடப்பட்டு வந்தன. பாண்டி விளையாட்டு பெண்களால் வீட்டு முற்றங்களில்

ஆடப்பட்டு வந்த ஒரு விளையாட்டாகும். இன்றும் இவ்விளையாட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வயது முதிர்ந்தவர்களால் தாயம் உருட்டுதல், தாம் விளையாடுதல், புலியும் வெள்ளாடும் போன்ற விளையாட்டுக்கள் ஆடப்பட்டு வந்தன. இராட்டின ஊஞ்சல் (Giants wheel) ஆடுதல் மஉளி வைத்தல் போன்ற விளையாட்டுக்களும் சில முஸ்லிம் கிராமங்களில் ஆடப்பட்டு வந்திருக்கின்றன. மரத்தினால் குதிரை, யானை, புலி, சிங்கம் போன்ற மிருக உருவங்களை அமைத்து இருவர் நின்று விசையைச் சுற்றுவதன் மூலம் இராட்டினத்தின் சுழற்சியை ஏற்படுத்தக் கூடிய அமைப்பில் அது அமைந்திருக்கும். மஉளி வைத்தல் என்பது மந்திரவாதிகளுக் கிடையில் நடைபெறும் போட்டி நிகழ்ச்சியாகும். ஒரு மந்திரவாதியால் நிகழ்த்தப்பட்ட ஒன்றை மற்றைய மந்திரவாதி தோற்கடிக்கச் செய்யும் நிகழ்ச்சியாகும்.

### கலாச்சாரம்

கலாச்சாரம் என்பது ஒரு சமூகத்தின் தனித்தவமான வாழ்க்கைமுறை, பழக்கவழக்கம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். முஸ்லிம்கள் தமது சுற்றுச் சூழலில் வாழ்ந்திருந்த ஏனைய மக்கள் குழுக்களில் இருந்து தம்மைத் தனித்துவப்படுத்திக் காட்டக்கூடிய பலவகையான வாழ்க்கை முறைகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்டிருந்தார்கள். இவற்றில் இம்மக்களின் தனித்துவமான மொழிப்பிரயோகம், உடைகள், ஆபரணங்கள், உணவு வகைகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மன்னார் தீவு முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் அரபு மொழிப்பிரயோகம் அதிகமாகக் காணப்பட்டது. இவர்கள் அரபு மொழியை வாசிக்கும் ஆற்றல் கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள். அன்றியும் அரபுச் சொற்களை மிக அதிகமாக தமிழோடு கலந்து பேசும் வழக்க முடையவர்களாகவும் இருந்தார்கள்.
முஸ்லிம்களை அவர்களின் உடையைக் கொண்டு வேறுபடுத்திக் காணக்கூடியதாக இருந்தது. ஆண்கள் தொப்பி அணிவதும், பெண்கள் முக்காடு போடுவதும் இப்பிரதேசத்திற்கான இஸ்லாமிய தனித்துவத் துக்கான எடுத்துக்காட்டாகும். துருக்குத் தொப்பி, ஜின்னா தொப்பி போன்றவற்றை அணிவது அக்காலப் பழக்க வழக்கங்களாகும்.

மாப்பிள்ளை கட்டாயமாக துருக்குத் தொப்பி அணிய வேண்டும் என்பது நடைமுறையில் இருந்துவந்த பழக்கமாகும்.

உணவு வகைகளிலும், உணவு தயாரிப்பதிலும், உணவு உண்ணும் முறையிலும் முஸ்லிம்கள் மத்தியில் தனித்துவமான நடைமுறைகள் காணப்பட்டன. தோற்பணியாரம், அடை, பிட்டு, கொழுக்கட்டை, கோழியப்பம், ரொட்டி போன்ற உணவு வகைகளும், வட்டிலப்பம், குருநாகல் கேக், வெங்காயப்பணியாரம், சீனிப்பலகாரம், சீப்புப் பலகாரம், போன்ற தின்பண்டங்களும் பழக்கத்தில் இருந்துவந்தன. வீடு தேடி வருபவர்களை அன்புடன் உபசரித்து, அழகிய வர்ணப்பாயில் இருக்கவைத்து, வெற்றிலைத் தட்டம் கொடுக்கும் வழக்கம் பரவலாக இருந்து வந்தது. இவ்வெற்றிலைத் தட்டத்தில் மணப்பாக்கு, மணப்புகையிலை, மணக்காசுக்கட்டி, கரிசல் வெற்றிலை போன்றவை நிறைந்து இருக்கும்.

சிறுவர், சிறுமியர்களுக்கு வெள்ளியால் செய்யப்பட்ட ஆபரணங்கள் அணிவிக்கும் பழக்கம் இருந்து வந்தது. சிறுவர்களுக்கு கழுத்தில் காறை, கைவிலங்கு, கால்விலங்கு, தம்பித்தோழன் போன்ற ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டன. சிறுமிகளுக்கு அரைமுடி சம்பச்சலங்கை, காப்பு, தண்டை, கொலுசு ஆகிய ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டு வந்தன. பெண்கள் மணிக்கோர்வை, அட்டியல், ஒட்டியானம், தண்டை, கொலுசு, கை, கால் விரல்களில் மோதிரங்கள் போன்ற ஆபரணங்களை அணிவது வழக்கமாக இருந்து வந்தது. வீட்டுத் தளபாடச் சாமான்களாக பெட்டகம், செம்பிலாலான வெற்றிலைத் தட்டம், செம்புப் படிக்கன், சேர்வைக்கால் போன்றவைகள் பாவிக்கப்பட்டு வந்தன. உடுதுணிகளை பனையோலையால் செய்யப்பட்ட தாய்மூடிப் பெட்டிகளில் வைக்கும் பழக்கம் இருந்து வந்தது. பொருளாதாரம் வளர்ச்சியடைந்ததும் மரத்திலாளான அலுமாரிகள், கதிரைகள், மேசைகள் கட்டில்கள் என்பன புளக்கத்தில் இருந்து வந்துள்ளன. பெரும்பாலான வீடுகளில் சாய்மானக் கதிரையும் இருந்து வந்திருக்கிறது.

## விழாக்களும் சடங்குகளும்

பலவகையான சடங்குகளும், விழாக்களும் மன்னார் முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வந்திருக்கின்றன. இச்சடங்குகளுக்கும், விழாக்களுக்கும் ஒப்பான நிகழ்வுகள் தமிழ் மக்கள் மத்தியில் காணப்பட்டன. ஆனால் அவ்வாறான நிகழ்வுகள் இஸ்லாமிய முறைக்கு அமையப் பெற்று முஸ்லிம்களின் தனித்துவத்தை பிரதிபலிப்பவையாக இருந்து வந்தன.

திருமண வைபவத்தின்போது வீட்டுக்கு முன் கன்னிக்கால் நாட்டி பந்தல் போட்டு, வாழை மரங்கள் நாட்டி, நிறக்கடதாசியால் சோடிக்கப்படும். மாப்பிள்ளை உடை அணிந்து தலையில் துருக்குத் தொப்பி அணிந்து, இனபந்து சகிதமாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். முதலில் பள்ளிவாசலுக்குச் சென்று துஆப்பிரார்த் தனையில் ஈடுபட்ட பின்னர் பெண்வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவார். மாப்பிள்ளை பெண்வீட்டாரினால் வெள்ளை விரிக்கப்பட்டு, ஆராத்தி எடுத்து கண்ணியமாக அழைத்துச் செல்லப்படுவார்.

மாப்பிள்ளைக்கு வெள்ளி மோதிரங்கள் அணிவிக்கப்பட்டன. பிற்காலத்தில் இவை தங்க மோதிரங்களாக மாறின. ஜரிகை மாலைகள், சால்வைகள் என்பனவும் மாப்பிள்ளைக்கு அணிவிக் கப்பட்டு வந்தன. மணப்பெண்ணுக்கு கூறை உடுத்தி, தாலி கட்டும் பழக்கமும் இருந்து வந்தது.

முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வந்த மற்றொரு சடங்கு விருத்த சேதனம் என்னும் கத்னா வைபவமாகும். முஸ்லிம் ஆண்களுக்குச் சிறுபராயத்தில் செய்யப்படும் மார்க்கச் சடங்காகும். மௌலூது, பைத்தும், தக்பீரும் இசைக்கப்பட்ட பின்னர் கத்னா நடைபெறும். இவ்வைபவமும் திருமண வைபவம் போன்று நடைபெறும். கத்னா செய்யப்படும் சிறுவர்களும் மாப்பிள்ளை என்றே அழைக்கப்பட்டு வந்தனர். பெண்கள் பராயமடைதலுடன் தொடர்புடைய சடங்கு களுக்கும் இனபந்துக்கள் அழைக்கப்பட்டு மங்களகரமான நிகழ்வாக செய்யப்படும் வழக்கமும் முன்னொரு காலத்தில் காணப்பட்டது.

## இஸ்லாமிய மறுமலர்ச்சி

முஸ்லிம்களின் வாழ்வு, கலை, கலாச்சாரத்தை தன்னிச்சையாக மாற்றும் ஆற்றலை இஸ்லாம் கொண்டிருந்தது. இஸ்லாமிய வளர்ச்சி தளர்ச்சி பெற்ற காலத்தில் பிற கலாசார, கலை அம்சங்கள் இம்மக்கள் மத்தியில் மேலோங்கிக் காணப்பட்டன. எனினும் இஸ்லாமிய மறுமலர்ச்சியினூடாக அவை புனரமைக்கப்பட்டுப் புதுமைப் படுத்தப் பட்டன. இஸ்லாமிய சமய நம்பிக்கைக்கு முரணான கலை, கலாச்சார நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் மக்களால் கைவிடப்பட்டன.

இதனால் மன்னார் தீவு முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வந்த கலை, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், புதிய விளக்கத்தோடு வெளிவந்த இஸ்லாமிய சமய நம்பிக்கைக்கு மாறானவை என்று கருதப்பட்டமை யால், இப்பிரதேச மக்கள் மத்தியில் இருந்து அவை படிப்படியாக கைவிடப்படும் நிலைமை காணப்பட்டது. குறிப்பாக கத்னா தொடர்பான சடங்குகள், பெண் பராயமடைதல் சடங்குகள், பூக்குளி இறங்குதல், கபுறடி வழிபாடுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இஸ்லாம் பற்றிய புதிய சிந்தனையை மன்னார் தீவில் உருவாக்கியதில் இலங்கை தப்லீக் ஜமாஅத்தினரின் பணி மிக முக்கியமானது. 1959ஆம் ஆண்டளவில் மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தப்லீக் ஜமாஅத் படிப்படியாக வளர்சி கண்டது. இக்காலத்தில் தாராபுரம் மாவட்டம் மர்கஸ் ஆனது மன்னாரைச் சேர்ந்த மீன்பிடி இலாகா பரிசோதகர் (பிசரீஸ்) கௌத், தாராபுரம் O.K. செய்னுலாப்தீன், தாவூத் மாஸ்டர், புதுக்குடியிருப்பு M.M. அபூபக்கர் மாஸ்டர், அப்துல் அஸீஸ், மரைக்கார், எருக்கலம்பிட்டி M.P.A. ஜப்பார், பெரிய மடு அபுல் கைரி மாஸ்டர், விடத்தல் தீவு காதர் முஹைதீன். சுல்தான் மாஸ்டர், பண்டாரவெளி பீர் முகம்மது மாஸ்டர் போன்றோர்கள் புனித பணியில் முன்னின்று உழைத்தனர். மேலும் பல்வேறு தரத்தினரும் குறிப்பாக ஆசிரியர்கள் இப்பணியில் அரும் பங்கு வகித்தனர். இதன் காரணமாக இஸ்லாமிய கோட்பாடுகளுக்கும், கருத்துக்களுக்கும் மாறான செயல்கள் அனைத்தும் மறைந்ததோடு, பிற மதத்தவர்களின் பழக்கவழக்கங்கள் முஸ்லிம்கள் மத்தியில் இருந்து களையெடுக் கப்பட்டுப் புடம் போடப்பட்ட பொன்னாக மாற்றமடைந்தது எனலாம்.

# வாழ்வும் வளமும்

அறிமுகம்:

வாழ்வும் வளமும் என்ற இப்பகுதியில் மன்னார்த் தீவு முஸ்லிம் கிராமங்கள் பற்றிச் சுருக்கமாக விபரிக்கப்படுகிறது.

டென்ஹாம் (Denham 1902) என்பவரின் அறிக்கையின்படி மன்னார் தீவில் முஸ்லிம்களின் செறிவைக் கொண்ட பல கிராமங்கள் இருந்திருக்கின்றன. மன்னார் பட்டினம், எருக்கலம்பிட்டி, தாராபுரம் (தாராக்குண்டு) புதுக்குடியிருப்பு, துள்ளுகுடியிருப்பு, கரிசல் தலைமன்னார் ஆகியவையே அக்கிராமங்களாகும். 1990 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் இம்மாவடத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப் பட்டபோது இக்கிராமங்களோடு கோரைப்பண்ணை, பேசாலை, காட்டாஸ்பத்திரி ஆகிய முஸ்லிம் கிராமங்களும் இருந்தன.

இக்கிராமங்கள் அனைத்தும் மன்னார் உதவி அரசாங்க அதிபரின் (தற்போது மன்னார் பிரதேச செயலாளர்) கீழ் இருந்து வந்தவை யாகும். ஒவ்வொரு கிராமமும் பல்வேறு தனித்தன்மைகளைக் கொண்டிருந்தது. அதனால் அக்கிராமங்களின் வரலாறு சமய, சமூக, கல்வி, கலாசார, பண்பாட்டு வளங்கள் ஆகியன எடுத்துக் கூறப்படுகின்றன.

## வரலாற்றுப்பின்னணி

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மன்னார் தீவு மிக முக்கியமானதொரு இடத்தை வகித்து வருகிறது. எமக்குக் கிடைக்கும் வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில் நோக்கும் போது மன்னார் தீவில் குடியமர்ந்திருந்த ஆதிக்குடிகளுள் முஸ்லிம்களும் அடங்குவர். இத்தீவில் முஸ்லிம்கள் 13 நூற்றாண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதற்கு உறுதியான சான்றுகள் உள்ளன என்பதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள் என ஜோன்சன் (Johnson 1827) கூறியுள்ளார். இக்கூற்றின் அடிப்படையில் நோக்கும் போது தென்னிந்திய கரையோரப் பகுதிகளில் வாழ்ந்திருந்த திராவிடச் சமுதாயத்தின் வழித்தோன்றல்கள் மன்னார் தீவையடைந்து தமது குடியிருப்புக்களை அமைத்துக் கொண்ட காலகட்டத்தில், அப்பிரதே சங்களில் வாழ்ந்திருந்த அராபிய, இந்திய முஸ்லிம்களின் வழித் தோன்றல்களும் மன்னார்த் தீவில் குடியமர்ந்தார்கள் என்பதாகும்.

மன்னார்த் தீவின் ஆரம்ப குடியிருப்புக்களாக மன்னார்ப் பட்டினம், எருக்கலம்பிட்டி, மினாராவடி, மாந்தை ஆக்கிய இடங்கள் இனங் காணப்பட்டுள்ளன. மன்னார் பட்டினத்தின் குடிப்பரம்பல் குடியிருப்பு (முஸ்லிம் வட்டாரம்) பெரிய கடை உப்புக்குளம் ஆகிய இடங்களில் அமைந்திருந்தன.

## மன்னார் குடியிருப்பு (முஸ்லிம் வட்டாரம்)

மன்னார் குடியிருப்பு என்று அழைக்கப்படும் பிரதேசம் மன்னார் பட்டின சபையின் ஆறு வட்டாரங்களுள் ஒன்றாக அமைந்த முஸ்லிம் வட்டாரமாகும். இப்பிரதேசத்தில் 95 சத வீதமானவர்கள் முஸ்லிம்களாக இருந்தார்கள். இப்பகுதி மன்னார் பெரிய கடைப்பகுதிக்கு வட மேற்குத்திசையில் அமைந்துள்ளது.

இப்பிரதேசத்தின் ஆதிக்குடியிருப்பு தற்போது காட்டுப்பள்ளி என்று அழைக்கப்படும் பெரிய பள்ளிவாசலில் அமைந்திருந்தது. மாந்தைத் துறைமுகத்தோடு அரேபிய, இந்திய முஸ்லிம்களின் வர்த்தக மேம்பாடு ஏற்பட்டிருந்த காலத்தில் பெரிய பள்ளி, பள்ளிமுனை ஆகிய

பிரதேசங்களில் அரேபிய, இந்திய முஸ்லிம்களின் வழித்தோன்றல் களும், துறைமுகத்திற்கு வந்து போகும் கப்பல்களில் தொழில் புரிவோரும் குடியமர்ந்திருந்தார்கள். மன்னார் பிரதேசத்தின் ஆட்சி போத்துக்கேய காலனித்துவ ஆட்சியாளருக்குக் கைமாறியபோது அவர்கள் தமது மார்க்கத்தை பரப்புவதில் கண்ணுங்கருத்துமாக இருந்தார்கள். இந்நிலையில் பள்ளிமுனையில் வாழ்ந்திருந்த திராவிட மக்கள் ரோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுவினர். இங்கு குடியிருந்த முஸ்லிம்கள் உப்புக்குளத்திற்கும், குடியிருப்புக்கும் இடம்பெயர்ந்து சென்றார்கள்.

இந்நிலையில் பெரிய பள்ளியில் குடியமர்ந்திருந்த முஸ்லிம்களும் அவ்விடத்தைவிட்டு குடியிருப்பில் குடியமர்ந்தார்கள். பெரிய பள்ளிவாசல் பகுதியில் அக்காலத்தில் அமைக்கப்பட்ட ஒரு பள்ளிவாசலும், இறைநேசரின் அடக்கஸ்தலமும் உள்ளன. அக்காலத்தில் மையவாடியாக இருந்த பகுதியே தற்போதைய குடியிருப்புப் பள்ளிவாசல் அமைந்திருக்கும் பகுதியாகும். குடியிருப்பு ஆரம்பகாலம் முதல் சமய, கலாசார, பாரம்பரியங்களில் சிறப்புப் பெற்று வந்துள்ளது. முதியோர்களுக்குப் பணிவுடன் நடக்கும் தன்மையையும் மார்க்க அனுட்டானங்களில் பேணுதல் உடைய அறிஞர்களை இக்கிராமம் கொண்டிருந்தது. 1000 பேர்வரை தொழக்கூடிய ஒரு பள்ளிவாசலையும் அதனோடு இணைந்த குர்ஆன் மத்ரசாவையும் 1200 மாணவர்கள் கல்வி கற்கக்கூடிய ஓரளவு வசதிகளைக் கொண்ட ஒரு மகா வித்தியாலயத்தையும் கொண் டுள்ளது. 100 வீத கல் வீடுகளையுடையதும், செல்வந்தர்களையும், ஆங்கிலக் கல்வியறிவு மிக்கவர்களையும், மன்னார் மாவட்ட இதர முஸ்லிம் கிராமங்களுக்கு ஒரு முன்னோடியாகவும் குடியிருப்பு முஸ்லிம்கள் திகழ்ந்து வந்தார்கள். இக்கிராமத்தின் இதர சிறப்புகள் பற்றிய கட்டுரை 2ஆம் பாகத்தில் இடம்பெற்றுள்ளது.

**உப்புக்குளம்**

காரணப் பெயராக உப்புக்குளம் என்று அழைக்கப்பட்டு வரும் இக்கிராமம் மன்னார் பெரிய கடைக்கும் பள்ளிமுனைக் கிராமத்திற்கும் இடையில் அமைந்திருக்கிறது. போத்துக்கீச காலனித்துவ ஆட்சியின்

முன்பே இங்கு முஸ்லிம் மக்கள் வசித்து வந்திருக்கின்றார்கள். முத்துக்குளித்தல், சங்கு குளித்தல் தொழில்களை இவர்கள் மேற்கொண்டு வந்ததோடு பருவ கால பொருளாதார நடவடிக்கையாக இப்பிரதேசத்தில் மழை நீரைத் தேக்கிவைத்திருந்த குளத்தின் மூலமாக நெற்செய்கையையும் மேட்டு நிலப்பயிராக புகையிலைச் செய்கையையும் மேற்கொண்டு வந்தார்கள். பல்வேறு காலங்களில் குடியேறிய பல இடத்தைச் சேர்ந்த மக்கள் இங்கு வாழ்ந்து வருகிறார்கள். வியாபாரத்திலும் முஸ்லிம்கள் ஈடுபட்டுவந்தார்கள். வடக்கின் மாடு வியாபாரம் அம்முஸ்லிம்களின் முக்கிய தொழிலாக இருந்து வந்தது.

1900 ஆண்டுக்குச் சற்று முன்னுள்ள காலப்பகுதியில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பின் காரணமாக நன்னீர்குளம் உப்பு நீராக மாறியதனால் இக்கிராமம் **உப்புக்குளம்** என்ற காரணப் பெயரைப் பெற்றது. மேலும் இம்மாவட்டத்தில் 1937, 1954, 1964ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட சூறாவளியின் காரணமாகவும் கடல் நீரால் இக்கிராமம் முற்றாக மூழ்கியதன் காரணமாகவும் அங்கிருந்த குளம் நிரந்தரமான உப்புக்குளமாகவே மாறிவிட்டது.

இக்கிராமத்தில் 82% முஸ்லிம்களும் 15% இந்துக்களும் 3% பாட்டாளி, கனரீஸ் தொழிலாளர்கள் போன்றோரும் வாழ்ந்தார்கள். இக்கிராமத்தோடு இணைந்து 1477ஆம் ஆண்டு அரேபிய வணிகர்களால் நாட்டப்பட்டதாகக் கருதப்படும் பழமை வாய்ந்த பெருக்கு மரமும் 1818ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட டச்சுக் கோட்டையும் உள்ளது. 1990 ஆம் ஆண்டு இங்கிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டபோது 736 குடும்பங்கள் வாழ்ந்திருந்தார்கள்.

மதக்கடமையை நிறைவேற்ற ஒரு பள்ளிவாசலும் குர்ஆன் மத்ரசா ஒன்றும் அமைந்திருந்தது. இக்கிராமத்தோடு இணைந்திருக்கும் மகா வித்தியாலயத்தில் கல்வியைப் பெற்று வந்தார்கள்.

இங்கு வாழ்ந்திருந்த மக்களுள் பெரும் பகுதியினர் மாதோட்ட விவசாய நடவடிக்கைகளிலும் சம்மாட்டிகளாகவிருந்து மீன்பிடித் தலையும் அது தொடர்பான சேவைகளையும் மேற்கொண்டு

வந்திருக்கிறார்கள். கிழக்குக் கடற்கரை ஓரங்களில் இக்கிராம மக்களுக்குச் சொந்தமான 36 வாடிகளும், நூற்றுக்கு மேற்பட்ட தோணிகளும் தெப்பங்களும் இருந்திருக்கின்றன. கருவாடு போடுதல், குளிரூட்டப்பட்ட மீன் தொழில் போன்றவற்றை மேற்கொண்டு வந்தனர். பெரிய கடைத்தெருவிலும் கணிசமான வர்த்தக சேவையை மேற்கொண்டுவந்தார்கள். அல்-ஹாஜ் C.S. சுலைமான், அப்துல் சலாம், முஹம்மது ரட்ணம், பக்கீர் முஹிதீன், குத்தூஸ், அப்துல்காதர், மதார்முகைதீன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கல்வியிலும் கணிசமான உப்பக்குள மக்கள் முன்னேற்றமடைந் திருந்தார்கள். C.S. சலைமான், O.A. சலாம், P.M. காசிம், M.M. நாகூர்ப்பிச்சை, மதார் முகைதீன் ஆகியோர்கள் மன்னார் பட்டின சபை உறுப்பினராகச் சேவையாற்றியுள்ளார்கள். இக்கிராமத்தைச் சேர்ந்த N.M. சிக்கந்தர் வெளிநாட்டுத் தூதுவராகப் பணியாற்றி வருகிறார். M.M.M. ஆலம் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்து இளைப்பாறி தற்போது மரண விசாரணை அதிகாரியாகப் பணியாற்றிவருகிறார். N.M. காதர் நெய்னா அதிபராகவிருந்து இளைப்பாறியுள்ளார். தற்போது அதிபர்களாக N.M. அஹமது யாசின் M.C.M. அன்பு ஜவஹர்ஷா, அப்துல் முனாப் ஆகியோரும் S.M. பாருக் வங்கியாளராகவும் சேவையாற்றி வருகிறார்கள். S. முகம்மது அப்துல்காதர், காதர் முகைதீன் (கோசாலி) ஆகிய பரிகாரிகள் இங்கு வாழ்ந்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களோடும் கிறிஸ்து சமயச் சகோதரர்களோடும் ஐக்கியத் தோடு வாழ்ந்து வரும் உப்பக்குள மக்கள் இஸ்லாமிய கலை கலாசாரம், பண்பாடுகளில் பற்றுள்ளவர்களாகவும் விளையாட்டுத் துறையில் அதிகம் ஈடுபாடுடையவர்களாகவும் இருந்து வருகிறார்கள். 1990 ஆம் ஆண்டு பலாத்கார வெளியேற்றத்தின் போது இடம் பெயர்ந்தவர்களில் பலர் 1992 ஆம் ஆண்டு மீண்டும் தமது கிராமத்தில் குடியேறி வாழ்ந்து வருகிறார்கள்.

பெரிய கடை :

மன்னார் பெரிய கடைப்பகுதி ஒரு துறைமுகமாக இருந்து வந்திருந் தமையால் அது ஒரு கடைத்தெருப்பகுதியாக அமைந்தது. மன்னார்த் தீவில் மக்கள் குடியேறிய காலகட்டத்தில் இந்தியாவி லிருந்து பெரிய பாய்மர வள்ளங்கள் (வத்தைகள்) மூலமாக பல்வேறு பொருட்கள் இங்கு சந்தைப்படுத்தப்பட்டு விற்பனை செய்யபட்டு வந்த காரணத்தால் அது பெரியகடை எனப்பட்டது. ஆரம்பகாலம் முதல் தென்னிந்திய முஸ்லிம் வழித்தோன்றல்களே வியாபாரிகளாக இருந்து வந்திருக் கிறார்கள். மு.கா. மரைக்கார் கா.ம.அ. கச்சு முகம்மது. ஆலிபசரு புடவைக்கடை, அ.அ. விதானை கடை, M.M. இபுராகீம் (பட்டின சபை உறுப்பினர்) C.S. சுலைமான் நாகூர்ப்பிச்சை ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இங்கு மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரமும் நடைபெற்றறு வந்தது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் எருக்கலம்பிட்டி தாராபுரம், முஸ்லிம்களும் தமிழ் சகோதரர்களும் பெரிய கடையில் வியாபார சேவையில் ஈடுபட்டு வந்தார்கள். ஏறக்குறைய 61% வியாபாரம் முஸ்லிம்களின் கையிலேயே இருந்தது. பெரிய கடைப் பகுதியி ஏறக்குறைய பதினைந்து முஸ்லிம் குடும்பங்களே வாழ்ந்து வந்தன.

ஒல்லாந்தர் 1818ல் தமது கோட்டையை மன்னாரில் அமைத்ததன் காரணமாகவும், பிரித்தானிய காலனித்தவ ஆட்சியின் போது மன்னார் ஏற்றுமதி இறக்குமதி துறைமுகமாக இருந்து வந்ததோடு உள்நாட்டு நிருவாகத்தைச் சீர் செய்ய கச்சேரி அமைக்கப்பட்டதனாலும் பெரிய கடைத் தெருவின் வியாபார சேவை மன்னார் மாந்தை நானாட்டான் வன்னிப்பிரதேசம் வரை பரந்திருந்தது. எனலாம்.

முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்திற்கு முன்னர் மன்னார் பெரிய கடைத்தெருவின் வியாபார சேவையில் 45 வீதம் எருக்கலம்பிட்டி முஸ்லிம்களாலும் 5 வீதம் தாராபுர மக்களாலும் 22 வீதம் குடியிருப்பு, உப்புக்குள முஸ்லிம்களாலும் எஞ்சிய விகிதம் தமிழ் சகோதரர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது முஸ்லிம்களின் வியாபார சேவை கணிசமான அளவு குறைந்து, ஏனைய சமுதாயத்தினரின் சேவை அதிகரித்துள்ளநிலை பெரிய கடைத்தெருவில் காணப்படுகிறது.

தாராபுரம் :

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியின் 4 வது மைல் கல்லில் இக்கிராமம் அமைந்திருக்கிறது. பிரதான வீதியிலிருந்து இக்கிராமத்திற்குச் செல்லும் உப பாதையின் வழியாக ፣ கி.மீ தூரம் சென்றால் ஒரு வெட்டுக்குளத்தைச் சந்திக்கலாம். மழை காலங்களில் இக்குளத்திலும் அதனை அண்டிய தாழ்நிலப் பகுதிகளிலும் நீர் நிரம்பியிருக்கும். அதனால் இம்முஸ்லிம் கிராமம் தாராக்குண்டு என்ற காரணப்பெயரால் அழைக்கப்பட்டு பின்னர் தாராபுரம் என பெயர் மாற்றப்பட்டது.

எருக்கலம்பிட்டியில் மக்கள் குடியேற்றத்தை அமைத்து அக்குடியேற்றம் வளர்ந்து வந்த காலப்பகுதியில் இக்கிராமக்குடியேற்றம் ஏற்பட்டிருக்கக் கூடும் என எண்ண வெண்டியுள்ளது. இடநெருக்கடியின் காரண மாகவும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கமாகவும் எருக்கலம்பிட்டி முஸ்லிம்கள் இங்கு குடிபெயர்ந் திருக்கக் கூடும். தொடர்ந்து எருக்கலம்பிட்டிக்கும் தாராபுரத்திற்கு மிடையில் சமயபிரச்சாரத் தொடர்புகளும், குடும்ப உறவுகளும், திருமண உறவுகளும், பள்ளிவாசல் நிருவாகத் தொடர்புகளும் இருந்து வந்திருக்கின்றன. அன்றியும் போத்துக்கேய காலனித்துவ ஆட்சியின் போது மினாரா எருக்கலம்பிட்டியில் வாழ்ந்திருந்த முஸ்லிம்களுக்குப் பல இன்னல்கள் இழைக்கப்பட்டன. மினாராப் பகுதியில் இருந்த முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள். இச்சமயத்தில் தாராபுரத்திற்கு மக்கள் குடிபெயர்ந்திருக்கவும் கூடும் எனக் கருதவும் இடமுண்டு. தாராபுரம் தொடர்பான விரிவான கட்டுறை இந்நூலின் 2ஆம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

எருக்கலம்பிட்டி

மன்னார் - தலை மன்னார் பிரதான வீதியில் 5ஆவது மைல்கல்லின் வடபுறத்தில் எருக்கலம்பிட்டி முஸ்லிம் கிராமம் அமைந்திருக்கிறது. ஏறக்குறைய 1500 குடும்பங்களைக் கொண்டிருந்த இக்கிராமம் மூன்று புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு ஆழமான கிராமமாகும். நில வளமும் நீர்வளமும் அமையப்பெற்ற இக்கிராமத்தில் அராபிய

இந்திய முஸ்லிம்கள் போத்துக்கீச காலனித்துவ ஆட்சியாளரின் வருகைக்குப் பல்லாண்டு காலத்திற்கு முன்பிருந்தே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். வணிகர்களாகவும், சங்கு எடுப்பவர்களாகவும் இவர்கள் இருந்து வந்திருக்கிறார்கள்.

பொருளாதார வளத்தைப் போன்றே மார்க்க வழிபாடும் கல்வி வளமும் இக்கிராமத்தில் நிரம்பப்பெற்றிருந்தது. புலவர்கள், கல்விமான்கள், அறிஞர்கள் பலரும் வாழ்ந்திருந்த இக்கிராமத்தில் மக்களிடையே பணிவு, பண்பு, ஒழுக்கம், விருந்தோம்பல் போன்ற பண்புகள் மலிந்து கிடந்த.

95 வீதமான கல்வீடுகளைக் கொண்ட இக்கிராமம் காலத்திற்குக் காலம் அராபியா, இந்தியா போன்ற இடங்களிலிருந்து வந்த மார்க்க அறிஞர்களின் வழிக்காட்டுதலைப் பெற்றது. அத்தகைய மகான்களின் கல்லறைகள் பல இக்கிராமத்தை அலங்கரிக்கின்றன.

கலை, கலாசார, பண்பியல் விழுமியங்களும் வணிகமேம்பாடும் நிரம்பப்பெற்றிருந்த இக்கிராம முஸ்லிம்கள் வன்செயலால் இடம் பெயர்ந்தார்கள். அவர்களுள் ஏறக்குறைய 250 குடும்பங்கள் வரை மீளக்குடியமர்ந்துள்ளார்கள். இக்கிராமம் தொடர்பான கட்டுறை இந்நூலின் 2ஆம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

### புதுக்குடியிருப்பு

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியின் 7ஆம் மைல் கல்லடியில் பிரான வீதியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் தென்புறமாக இம் முஸ்லிம் கிராமம் அமைந்துதிருக்கிறது. ஏறக்குறைய 150 குடிகளைக் கொண்டிருக்கும் இக்கிராமத்தில் மதக்கடமைகளை நிறைவேற்ற ஒரு ஜும்ஆப் பள்ளிவாசலும், அதனோடு இணைந்த குர்ஆன் மத்ரசாவும் அமைந்திருக்கிறது. பலவந்த வெளியேற்றத்தின் போது இடம் பெயர்ந்து சென்ற மக்களுல் அனேகர் மீண்டும் இங்கு குடியேறியுள்ளார்கள்.

இக்கிராமத்தின் ஆதிக்குடிகள் மினாராப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த அராபிய - இந்திய முஸ்லிம் வணிகர்களின் வழித்தோன்றல்கள் ஆவார்கள். போத்துக்கீச காலனதித்துவ ஆட்சியின் போது மினாராத் துறைமுகப்பட்டினத்தில் வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டபோது அங்கிருந்து வந்து இக்கிராமத்தில் குடியேற்றத்தை அமைத்துக் கொண்டார்கள். இதன் காரணமாகவே இம் முஸ்லிம் கிராமம் புதுக்குடியிருப்பு என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது.

இக்கிராம மக்களுள் சிலர் மீன்பிடித்தலோடு தொடர்புடைய தொழில்களை மேற்கொண்டு வருவதோடு ஆடு, வளர்த்தல் காட்டு விறகு சேகரித்து விற்றல், வாழை, முருங்கை, முந்திரி, தென்னை வளர்த்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

களிகம்பு, சீனடி, கரப்பந்து போன்ற விளையாட்டுக்களிலும் கலை, கலாசார, நிகழ்ச்சிகளிலும் ஈடுபட்டுவருகின்றார்கள். க.பொ.த. (சா.த) வகுப்புக்களை நடாத்தக்கூடிய ஒரு பாடசாலை அமைந்திருக்கிறது. தற்போது ஏறக்குறைய 250 மாணவர்கள் அங்கு கல்விகற்று வருகிறார்கள். மக்கள் இடம்பெயரும் போது M.M. அபூபக்கர் அப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிவந்தார். அல்ஹாஜ் P.K. மரைக்கார் றபிக், அனீஸ் போன்றோர் ஆசிரியத்தொழிலை மேற்கொண்டிருந்தார்கள் அன்றியும் இக்கிராம மக்கள் தப்லீக் ஜமாஅத் வேலையில் அதிகம் ஈடுபாடு உடையவர்களாக இருந்து வருகிறார்கள். மரைக்கார், ஹாஜா முகைதீன் ஆப்தீன், மர்ஹூம் அபூபக்கர் மாஸ்டர், றபீக் மாஸ்டர், அப்துல் அஸீஸ் போன்றோர் குறிப்பிடத்தக்க கார்கூன்களாவார்கள்.

கரிசல் :

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில 9ஆம் கட்டையடியில் 1 கிலோ மீட்டர் தூரத்தில் தென்புறமாக இக்கிராமம் அமைந் திருக்கிறது. இக்கிராமத்தில் முஸ்லிம்களும், கிறீஸ்தவர்களும் சரிசமமாகவும், இன ஐக்கியத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். பலாத்கார வெளியேற்றத்தின் போது இடம்பெயர்ந்து சென்ற மக்களுள் 75 வீதமான முஸ்லிம்கள் மீண்டும் குடியேறியுள்ளார்கள். வளமான

வண்டல் (கரிசல்) நிலத்தை இக்கிராமம் கொண்டிருப்பதன் காரணமாக கரிசல் என்ற காரணப்பெயரை இது பெற்றுள்ளது.

ஏற்குறைய 100 குடிகளைக் கொண்ட முஸ்லிம்கள் தனிப்பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். மீன்பிடி, ஆடு வளர்த்தல், வாழை, வெற்றிலை, புகையிலை, மரக்கறி, முந்திரி, தென்னை போன்ற பயிர்ச் செய்கையில் முஸ்லிம்கள் ஈடுபட்டு வருகிறார்கள். ஒரு ஜும்ஆப்பள்ளியும், அதனோடு இணைந்த குர்ஆன் மத்ரசாவும் அங்கு உண்டு. இங்கு வாழ்ந்து வரும் இரு சமூகத்தினருக்கும் பொதுவான ஒரு பிரதம பாடசாலை அமைந்திருக்கிறது.

மார்க்க அனுஷ்டானங்களிலும், கலாச்சாரப் பாரம்பரிய விளையாட் டுக்களிலும் இம்மக்கள் ஈடுபட்டுவருகிறார்கள். ஒரு சிலர் வணிகத்தையும் மேற்கொண்டுவருகிறார்கள்.

### பேசாலை காட்டாஸ்பத்திரி

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் பேசாலைக்கு அணித்தாக இம்முஸ்லிம் கிராமம் அமைந்திருக்கிறது. ஏறக்குறைய 50 குடும்பங்களை உள்ளடக்கிய இக்கிராமத்தில் ஒரு ஜும்ஆப்பள்ளி அமைந்திருக்கிறது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே இக்குடியேற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும் என அறிய முடிகிறது. வன் செயல் காரணமாக குடிபெயர்ந்த முஸ்லிம்கள் மீண்டும் இங்கு குடியேறியுள்ளார்கள்.

இங்குள்ள முஸ்லிம்க்ளில் பெரும்பாலானோர் மீன்பிடித்தலிலேயே ஈடுபட்டுவருகின்றனர். சம்மாட்டிமார்களின் கீழ் தொழிலாளிகளாகக் கடமையாற்றி வருகின்றனர். ஒரு சிறிய தொகையினர் சுயமாக மீன்பிடித்தலை மேற்கொண்டும் வருகிறார்கள். இங்குள்ள சிறுவர்கள் கல்விகற்பதற்காகப் பேசாலை றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கே சென்று வருகிறார்கள்.

## தலைமன்னார்

தலைமன்னார் மன்னார் தீவின் மேற்கு அந்தத்தில் அமைந்திருக்கிறது. இங்கிருந்து இந்தியக்கரை 29 கிலோ மீற்றல் தூரத்தில் அமைந்திருக்கிறது. வங்காள விரிகுடா இரு நிலத்திணிவுக்குமிடையில் அமைந்திருக்கிறது.

தலைமன்னார் முஸ்லிம் குடியிருப்புக்கள், தலைமன்னார் புகையிரத நிலையம், தலைமன்னார் பீயர் ஆகிய இடங்களில் அமைந்திருந்தன. தலைமன்னார் புகையிரத நிலையத்தில் ஏறக்குறைய 25 குடும்பங்கள் வரை வாழ்ந்தார்கள். அதிகமானவர்கள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார்கள். புகையிரத நிலையத்தில் அமைந்திருந்த கடைகளுள் 15 வியாபார நிலையங்கள் முஸ்லிம்களுடையதாக இருந்தன. ஒரு சிறிய பள்ளிவாசலும் அங்கிருந்தது. மக்களின் வெளியேற்றத்தின் பின்னர் அப்பிரதேசம் குடிகளற்றுக் காணப்படுகிறது.

## தலைமன்னார் பீயர்

தலைமன்னார் பீயர் முஸ்லிம் குடியேற்றம் ஒரு துறைமுகம் சார்ந்த குடியிருப்பாகும். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இக்குடியேற்றம் இப்பகுதயில் அமைந்திருக்க வேண்டும் என்பதற்கான சாதக நிலைமைகள் காணப்படுகின்றன. ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆட்சியாளரினால் 1867ஆம் ஆண்டுக்குப் பின்னர் மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களில் பெருந்தோட்டப்பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டன. இத்தோட்டங்களில் வேலைசெய்வதற்காகப் பெருந்தொகையான தென்னிந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் தனுஷ்கோடியிலிருந்து கப்பல் மூலமாகத் தலைமன்னார் பீயரில் இறக்கப்பட்டார்கள். அங்கிருந்து பொல்காவலைக்கு வழிகாட்டியாக கம்பியால் இணைக்கபட்ட (கம்பிரோடு) பாதை வழியாக கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து புகையிரத மூலமாகக் கண்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இக்கால கட்டத்தில் தலைமன்னார் பீயர் குடியேற்றம் உண்டாகியிருக்கக் கூடும் என ஊகிக்க வேண்டியுள்ளது.

தலைமன்னார் பீயர் குடியேற்றம் தோன்றுவதற்கு முன்னர் தலைமன்னாரின் தென் பகுதியியில் தலைமன்னார் கிராமத்திற்குத் தெற்காக அமைந்திருந்த பழைய விளக்கக்கூடு பிரதேசத்தில் ஒரு குடியேற்றம் அமைந்திருந்தது. பருவ காலங்களில் நீர் கொழும்புப் பிரதேசங்களிலிருந்து வரும் தமிழ் சிங்கள மீனவர்கள் இப்பகுதியில் வாடிகளை அமைத்து மீன்பிடித்தலை மேற்கொண்டு வந்தார்கள்.

பழைய விளக்குக் கூட்டுப் பிரதேசத்திலிருந்து தனுஷ்கோடிக்கரை வரையும் தரைத்திட்டுக்களைக் கொண்ட தீடைகள் பல அமைந் திருக்கின்றன. இத்திட்டின் வழியாக தென்னிந்திய மக்கள் மன்னார் தீவையடைந்து குடியேற்றங்களையும் அமைத்தனர். அன்றியும் பாசிமணி, மின்னறமணி, சந்தன வில்லை, கற்பூரம், குங்குமம் போன்ற பொருட்களை இந்தியாவிலிருந்து எடுத்து வந்து வியாபாரம் செய்து வந்த பட்ட நூல் காரர்களும் நிலப்பாதையைப் பயன்படுத்தினார்கள் என அறிய முடிகிறது. பழைய விளக்குக் கட்டுப் பகுதியில் பழைய கிணறும் கப்பலொலி தர்ஹா என்று அழைக்கப்படும் இறைநேசச் செல்வரின் அடக்கஸ்தலமும் காணப்படுகிறது.

தென்னிந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் வருகையின் காரணமாகத் தலைமன்னார் பீயர் முக்கியத்துவம் பெற்ற போது பழைய விளக்குக் கூட்டுப்பிரதேசதம்தில் குடியிருந்த முஸ்லிம்கள் தலைமன்னார் பிரதேசத்திற்கு இடம் பெயர்ந்து சென்றார்.

1905 ஆம் ஆண்டு கொழும்பு பொல்காவலை அனுராதபுரம் - யாழ்ப்பாண புகையிரதப்பாதை திறக்கப்பட்டது. இக் கால எல்லையில் மதவச்சி தலைமன்னார் புகையிரதப் பாதையும் திறக்கப்பட்டது. அன்றியும் சிரமமான தனுஷ்கோடி தலைமன்னார் கப்பற்சேவையும் ஆரம்பமானது. தோட்டத்தொழிலாளர்கள் தமது தாயகம் சென்று திரும்புவதற்கு கொழும்பு தலைமன்னார் புகையிரதச் சேவை பெரிதும் உதவியது. இக்காலத்தில் தலைமன்னார் பீயர் பிரதேசத்தின் குடியேற்றம் விருத்தியடைந்தது எனலாம்.

தலைமன்னார் பீயர் முஸ்லிம் குடியிருப்பில் ஏறக்குறைய 150 குடும்பங்கள் வாழ்தார்கள். மீன் பிடித்தலிலும் வர்த்தக சேவையிலும்

20 வீதமக்கள் ஈடுபட்டு வந்தார்கள். எஞ்சியோர் தலைமன்னார் பீயர் புகையிரத கப்பல் சேவைகளில் பணியாளர்களாகவும் இந்தியப் பிரயாணிகளின் பொதிகளை ஏற்றி இறக்க உதவும் போட்டர்களாகவும் வெவையாற்றி வந்தார்கள்.

இக்கிராமத்தில் ஒரு ஜும்ஆப்பள்ளியும் கனிஷ்ட பாடசாலையொன்றும் அமைந்திருந்தது. இங்கு வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் இந்திய கரையோரப்பட்டினங்களான பாம்பன், தொண்டி, இராமேஷ்வரம் போன்ற இடங்களில் வாழ்ந்திருந்த முஸ்லிம்களின் வழித்தோன்றல்கள் ஆவார்கள் இக்கிராம முஸ்லிம்களின் உடை, நடை, பேச்சு கலாசாரம் என்பன இந்திய முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களை ஒத்ததாக அமைந்திருந்தன. விருந்தோம்பும் பழக்க முடையவர்களாகவும் சமய கலாசாரத்தைப் பேணும் பண்புடையவர்களாகவும் அம்முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தார்கள்.

புகையிரத கப்பல்சேவை நடைபெறும் நாட்களில் தலைமன்னார் பீயர் சுறுசுறுப்பு மிகுந்த நகரமாகக் காட்சியளிக்கும். வங்கிச் சேவை, சுங்கச் சேவை கடற்படைச் சேவை பொலிஸ் சேவை போன்ற அமைப்புக்கள் அங்கிருந்தன. அரசாங்கக் கட்டிடங்கள் அரச ஊழியர்களால் நிரம்பி வழிந்தன.

பருவகால மீன்பிடித்தல் தொழிலை மேற்கொள்வதற்காக நீர்கொழும்பு, சிலாபம், வென்னப்புவ போன்ற இடங்களிலிருந்து வந்த தமிழ் பேசும் சிங்கள மீனவர்களின் நூற்றுக்கணக்கான தெப்பங்களும், தோணிகளும் அவர்களின் தற்காலிக வாடிகளும் தலைமன்னார் பீயர் கரையோரங்களை நிரப்பி அலங்கரித்து வந்தன.

புகையிரத சேவை, கப்பற்சேவை இல்லாதொழிந்த போதும், முஸ்லிம் மக்கள் இப்பிரதேசத்தை விட்டு வெளியேறிய பின்னரும் பியர் கிராமம் சோபை இழந்து பாழடைந்து விட்டது.

குடி யெர்ந்து சென்ற மக்களுள் நாலைந்து குடும்பங்கள் மீளக் குடியமரந்துள்ளார்கள் என அறிய முடிகிறது.

# முசலிப் பிரதேசம்

## அறிமுகம்

முசலிப் பிரதேசம் மன்னார் மாவட்டத்தின் நிருவாகப் பிரதேசங்களுள் ஒன்றாக, காலனித்துவ காலத்திலிருந்து தனித்துவமான பிரதேசமாக நிருவகிக்கப்பட்டு வந்திருக்கிறது. (Administrative Reports of Various years).

முசலிப் பிரதேசம் இலங்கையின் வடமேற்கில் அமைந்துள்ள பல்வேறு வளங்களைக் கொண்ட ஒரு நிலப்பரப்பாகும். இப்பிரதேசத்தின் வடக்கு எல்லையாக அருவியாறும் (மல்வத்துஓயா) தெற்கு எல்லையாக மோதர ஆறும் அமைந்துள்ளது. மேற்கே இந்து சமுத்திரம் காணப்படுகிறது. 486 சதுர கி.மீ பரப்பைக் கொண்ட இப்பிதேசத்தில் முல்லை, மருதம், நெய்தல் நிலங்களின் பண்புகள் காணப்படுகின்றன.

வரலாற்றுக் காலத்திலிருந்து உலகில் முத்து சேகரித்தலைக்கு பிரபல்யமான இடங்களுள் ஒன்றாகவும், சங்கு, அம்பர் போன்ற கடற்திரவியங்கள் பெறப்படும் கடல் வலயம் காணப்படும் இடமாகவும் முசலிப் பிரதேசம் இருந்து வந்திருக்கிறது. முசலிப் பிரதேசத்தின் உலகப் பிரபல்யத்திற்குரிய மற்றொரு அம்சம் இப்பிதேசத்தின் யானைகளாகும். பழைய உலக நாகரீகப் பிரதேசங்களால் யானை வர்த்தகத்திற்கும், யானைத்தந்தங்களுக்கும் பிரபல்யமான பிரதேசமாக முசலி காணப்பட்டது.

இப்பிரதேசத்தின் மற்றொரு அம்சம் விவசாயப் பொருளாதா நடவடிக்கையாகும். மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் கி.பி. 4ஆ நூற்றாண்டில் கட்டப்பட்தாகக் கருதப்படும் இரண்டு பெரிய நீர்பாசன திட்டங்களையுடையதாக முசலிப் பிரதேசம் விளங்குகிறது. அன்றிய மன்னார் மாவட்டத்தில் அதிகமான முஸ்லிம்களின் செறிவை கொண்ட ஏறக்குறைய 70 சதவிகிதத்தைக் கொண்ட பிரதேசமாகவு முசலி விளங்குகிறது. மேலும் இப்பிரதேசத்தில் முஸ்லிம்களோ தமிழர்களும், சிங்களவர்களும் வாழ்ந்து வந்தமையும் மற்றொ சிறப்பு அம்சமாகும். தமிழ் - முஸ்லிம்கள் மிக நீண்ட காலமா நல்லுறவைப் பேணி வாழ்ந்து வந்திருக்கிறார்கள். கிறிஸ்து சமயத்தை பின்பற்றி வாழ்ந்த தமிழ் மக்கள் கடல்வள நடவடிக்கை களி அதிகமாக ஈடுபட்டு வந்துள்ளார்கள். சிங்கள மக்கள் பருவகா மீனவர்களாக இப்பிரதேச கரையோர மீன்பிடியோடு தொடர்புடையதா மிக நீண்ட காலமாக இருந்து வந்திருக்கிறார்கள். முஸ்லிம்களி அதிகமானோர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதோ( தமது சமய, இன தனித்துவத்தைப் பாதுகாத்தும் இப்பிரதேசத்தி வாழ்ந்து, ஏனைய இன மக்களோடு ஐக்கியத்தோடும் வாழ்ந் வந்தார்கள்.

**வரலாறும் குடிசனமும்.**

முசலியின் வரலாறு மிகப்பழைமையானது. வரலாற்று அறிஞர்களி கூற்றுப்படி இலங்கையின் மிக ஆதி நாகரீகம் முசலி, மாந்தை அனுராதபுரம் ஆகிய மூன்று பிரதேசங்களையும் இணைக்கு முக்கோணப் பிரதேசத்தில் காணப்பட்டது என்று விளக்கப்படுகிற (Hocart – 1924). விஜயனின் இலங்கை வருகையும் முசலி பிரதேசத்தோடு சேர்த்துப் பார்க்கப்படுகிறது. (Seneviratne 1979 அத்தகைய சிறப்புமிக்க துறைகளையும் கரையோரத்தையும் கொண் பிரதேசங்களுல் ஒன்றாக முசலிப் பிரதேசம் விளங்குகிறது.

முசலியின் உள்நாட்டுப் பிரதேசம் சிங்கள, தமிழ் மன்னர்களா அபிவிருத்தி செய்தமைக்கு இப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருக்கு அகத்தி முறிப்பு நீர்பாசனத்திட்டமும், வியாயடி நீர்பாசனத் திட்டமு சான்றாக உள்ளன.

முசலியின் வரலாற்றுச் சிறப்புக்களில் முதன்மையானது இப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வற்த முத்துக் குளிப்பாகும். இத்தொழில் ஏறக்குறைய 2000 – 3000 ஆண்டுகள் பழமை வாய்ந்த தென்றும், இது உலகிலேயே மிகப்பழமைவாய்ந்த தொழில் நடவடிக்கையாகக் காணப்பட்டதென்றும் வரலாற்று ஆசிரியரான Van (1888) குறிப்பிடுகிறார்.

முசலிப் பிரதேசத்தின் மூதாதையர்கள் முத்துக் குளித்தலோடு தொடர்பு பட்டிருந்த அரேபிய வழித்தோன்றல்களும், கீழைக்கரையில் வாழ்ந்திருந்த இந்திய வழித் தோன்றல்களும் என அறிய முடிகிறது. முத்துக் குளிப்புடன் தொடர்புபட்டிருந்த இப்பிரதேச மக்கள் பிற்காலத்தில் சங்கு குளித்தல், கடல் திரவியம் தேடுதல் ஆகிய பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தார்கள். இத்தகைய கடல் பொருளாதார நடவடிக்கைகள் பருவகாலங்களில் மேற் கொள்ளப்பட்டு வந்தன. அதனால் கடல் பொருளாதார நடவடிக்கை களில் ஈடுபடமுடியாத காலங்களில் இப்பரதேசமக்கள் விவசாய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தார்கள். முசலிப் பிரதேசத்தில் அமைந்திருந்த குளங்களும், கால்வாய்களும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சாதகமாக இருந்தன.

முசலியின் யாகைள் பல சிறப்புத்தன்மைகளைக் கொண்டிருந்ததால் அதிகமான கேள்விகள் இருந்தன். (Cannon and Davis 1995). தென்னாசியாவில் யானைகளுக்குப் பிரபல்யமான இடங்களில் ஒன்றாக முசலி காணப்பட்டது. (Jeyewardene, 1994) யானை ஏற்றுமதி மூலமாக முசலி அதிக வருமானத்தையும் சர்வதேச புகழையும் பெற்றுக் கொண்டது. (Boake. 1988)

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க முசலி முஸ்லிம்கள் தனித்துவமான கலாச்சாரத்தைக் கொண்ட மக்களாக, கட்டுக் கோப்பான சமூக அமைப்பும், இன ஐக்கியமும், பரந்த கண்ணோட் டமும், பரோபகாரமும் கொண்ட மக்களாக வாழ்ந்து வந்ததோடு, நிலையான, நிறைவான வாழ்க்கை அமைப்பைக் கொண்டவர் களாகவும் வாழ்ந்தார்கள்.

வரலாற்றுக் காலத்திலிருந்தே மக்கள் இப்பிரதேசத்தில் வாழ்ந்து

வந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இப்பரதேசத் தில் வாழ்ந்த ஆதிக்குடிவாசிகளுள் முஸ்லிம்களும் அடங்குவர். எனினும் அவர்கள் பற்றிய விபரங்களைப் பெறமுடியாதுள்ளது. எனினும் 1834ஆம் ஆண்டு சைமன் காசிச்செட்டி என்ற அறிஞர் முசலிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களில் முஸ்லிம்களே மிகப் பெரும்பான்மையினராக இருந்தனர் என்று குறிப்பிடுகிறார் (Chitty, 1834). இவர்கள் பற்றிய தரவுகள் காலனித்துவ ஆட்சியாளர் காலத் தில் குறிப்பாக பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டுப் புள்ளித்திரட்டுக்களிலிருந்து அறியக் கூடியதாகவுள்ளது.

1921 ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பீட்டின்படி, அக்காலத்திலிருந்து முசலி வடக்கு, முசலித் தெற்கு என்ற இரண்டு உடையார் பிரிவுகளிலிருந்த 21 கிராமங்களிலும் முஸ்லிம்களே பெரும்பான்மை யினராக் காணப்பட்டனர். சராசரியாக 85 வீத மானவர்கள் முஸ்லிம்களாயிருந்தனர். சில கிராமங்களில் 90 – 100 வீதமானவர்கள் முஸ்லிம்களாகக் காணப்பட்டனர்.

குடிப்பரம்பல்

முசலிப் பிரதேசத்தின் குடிப்பரம்பலை நோக்கும்போது, இங்கு வாழ்ந்திருந்த மூவின மக்களும் தனித்துவமான குடியிருப்புகளில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். மிகப் பெரும்பாண்மையான குடியிருப்புகள் இப்பரதேசத்தின் வட புறமாக அருவியாற்றுக்குத் தெற்கே ஒரு முக்கோண வடிவில் பரந்திருக்கிறது. இப்பிரதேசத்தில் பெரும்பாண்மையினராக முஸ்லிம்கள் வாழ்ந்தனர். அரிப்பு, கொக்குப்படையான் போன்ற தமிழ் குடியிருப்புக்களும் இப்பிரதேசத்தில் காணப்பட்டன.

மற்றொரு குடியிருப்புச் செறிவு இப்பிரதேசத்தின் தென் எல்லையில் மோதர ஆற்றுக்கு வடக்காகக் காணப்படுகிறது. இப்பரதேசத்திலும் முஸ்லிம்களே பெரும் பான்மையினராக உள்ளனர். இம்முஸ்லிம் குடியிருப்புக்குத் தெற்காக முள்ளிக்குளம் என்ற தமிழ் குடியிருப்பு ஒன்று காணப்படுகிறது.
முசலி பிரதேசம் ஆறு கிராம சேவையாளர் பிரிவாகப் பிரிக்கப்பட்டு

நிருவகிக்கப்பட்டு வந்தது. அதில் அரிப்பு கிராம சேவையாளர் பிரிவைத்தவிர்ந்த ஏனைய ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளிலும் முஸ்லிம்களே பெரும்பான்மையினராகவும் கணிசமான எண்ணிக்கை கொண்டவர்களாகவும் இருந்தனர் என்பதை 1981ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பீட்டுப் புள்ளி விபரங்களிலிருந்து அறிய முடிகிறது.

வடபுறமாக அருவியாற்றுக்குத் தென்புறமாக அமைந்திருந்த குடியிருப்புச் செறிவின் தென் அந்தத்தில் மிக அண்மைக்காலத்தில் அரசினரால் கொண்டச்சி மரமுந்திரிகைக் குடிறேற்றத்தை அடிப் படையாகக் கொண்ட சிங்களக் குடியேற்றமொன்று தோற்றுவிக் கப்பட்டது.

ஆகவே முசலி மூவின மக்களும் குடியேற்றத்தை அமைத்து ஐக்கியத்தோடு வாழ்ந்து வந்த ஒரு பிரதேசமாக இருந்து வந்தது எனலாம்.



அல்லி ராணி கோட்டை

கிராம அடிப்படையில்
முசலிப்பிரதேச முஸ்லிம் சனத்தொகை – 1921

| முசலி [illegible] | மொத்த சனத்தொகை | முஸ்லிம் சனத்தொகை | முஸ்லிம்களின் விகிதாசாரம் |
|---|---|---|---|
| *முசலி வடக்கு* | | | |
| உடையார் பிரிவு | 1529 | 1013 | 66 |
| மேத்தன் வெளி | 59 | 58 | 98 |
| அவக்கை சிறுகுளம் | 36 | 36 | 100 |
| வாரிவெளி | 77 | 69 | 90 |
| பண்டாரவெளி | 104 | 96 | 92 |
| மணற்குளம் | 21 | 21 | 100 |
| இலந்தைக் குளம் | 48 | 46 | 96 |
| அகத்தி முறிப்பு | 148 | 146 | 99 |
| பெ.பு. பொற்கேணி | 220 | 218 | 99 |
| இலந்தைக் குளம் | 42 | 42 | 100 |
| வேப்பங்குளம் | 107 | 105 | 98 |
| பி.வாணியன் குளம் | 105 | 100 | 92 |
| நாலாங்கட்டை | 65 | 65 | 100 |
| *முசலி தெற்கு* | | | |
| உடையார் பிரிவு | 1595 | 1076 | 68 |
| சிலாவத்துறை | 204 | 118 | 58 |
| முசலி | 88 | 75 | 85 |
| கொண்டச்சி | 124 | 117 | 94 |
| இலக்கரிக்குளம் | 42 | 35 | 83 |
| புதுவெளி | 192 | 180 | 94 |
| கூளாங்குளம் | 103 | 101 | 98 |
| தம்பட்ட முதலிக்கட்டு | 86 | 80 | 93 |
| கரடிக்குளி | 147 | 145 | 99 |
| மறிச்சுக்கட்டி | 436 | 115 | 85 |
| பாலைக்குழி | 118 | 110 | 93 |

*தகவல்: Hasbullah (5) 1997,11*

## முசலியின் பொருளாதாரம்

ஏறக்குறைய 500 சதுர கிலோ மீற்றர் பரப்புடைய முசலிப் பிரதேசம் எல்லா வளங்களையும் கொண்டது. இப்பிரதேசத்தின் தரை அமைப்பு, மண்வளம், நீர்ப்பாசன வசதிகள் என்பன விவசாய நடவடிக்கை களுக்குச் சாதகமாக உள்ளன.

## விவசாயம்

முசலியின் மொத்த நிலப்பரப்பில் 16% மான பிரதேசம் பல்வேறு விவசாய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதோடு, தொழிலாளர் களில் 75% த்திற்கு அதிகமானவர்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார்கள். விவசாய நடவடிக்கைகளில் நெற்செய்கை, சேனைப் பயிர்ச் செய்கை, மேட்டு நிலப் பயிர்ச் செய்கை, மந்தை மேய்த்தல் ஆகியனவற்றைக் குறிப்பிடலாம். இப்பிரதேசத்தில் காணப்படும் வண்டல் மண், கால்வாய்கள், தாழ்நில சமதரைத் தன்மை, பெரிய, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்றன நெற் செய்கையை மேற்கொள்ள வாய்ப்பாக உள்ளன. இப்பிரதேசத்தில் அமைந்துள்ள அகத்திமுறிப்புத் திட்டம், வியாயடி நீர்ப்பாசனத் திட்டம் விவசாயத்திற்குப் பெரிதும் உதவி வந்திருக்கிறது. அகத்திமுறிப்புத் திட்டத்திற்கு அருவி ஆறும், வியாயடித்திட்டத்திற்கு அனுராதபுர பிரதேசத்திலிருந்து உற்பத்தியாகி கடலை நோக்கி ஓடிவரும் மோதர ஆறும் நீரை வழங்குகிறது.

இது தவிர ஆழமான கிணற்றிலிருந்து நீரைப் பெற்று நெற்செய்கைக்கும் மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்தி வந்தார்கள். பண்டாரவெளி, புதுவெளி, வாரி வெளி, சிறுக்குளம், முசலி முஸ்லிம்களின் விவசாயமுறை இந்த அடிப்படையில் அமைந்திருந்தது. இப்பிரதேசத்தில் ஏறக்குறைய 300 ஏக்கர் நெல் நிலத்திற்கு மேலதிக நீறை வழங்க கிணற்று நீர்ப்பாசனம் உதவிவந்தது.

அகத்திமுறிப்பு, பாலைக்குளி, கரடிக்குளி, பூநொச்சி, பிச்சைவாணியன் குளம், ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த விவசாயிகள் சேனைப்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வந்தனர். காடுகளை வெட்டி, எரித்து,

மழை கிடைக்கும் காலங்களில் சோளம், பாசிப்பயறு, கௌபி, மிளகாய் போன்ற பயிர்களே இவ்வாறு செய்கை பண்ணப்பட்டன. நெல் பயிரிடப்படாத வயல் வெளிகளிலும் மேட்டு நிலங்களிலும் மிளகாய், வெண்டி, கத்தரி, தக்காளி, புடோல், பயறு போன்ற மரக்கறி இனங்கள் பயிரிடப்பட்டு வந்ததன. பண்டாரவெளி, புதுவெளி கூளாங்குளம், முசலி, வாரிவெளி, மணற்குளம் போன்ற கிராமங்களில் இத்தகைய மேட்டு நிலப் பயிர்ச்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

## மந்தை வளர்ப்பு

முசலிப் பிரதேசத்தில் 18 சத விகிதமான நிலப்பரப்பு மந்தை வளர்த்தலுக்குப் பொருத்தமான புல்நிலம், சிறு காடுகளைக் கொண்டுள்ளது. பிச்சை வாணியன்குளம், அகத்திமுறிப்பு, புதுவெளி, முசலி, வாரிவெளி, மணற்குளம், மறிச்சுக்கட்டி, கரடிக்குளி, பாலைக்குளி ஆகிய கிராமங்களின் சூழல்களில் மந்தை வளர்ப்பதற்கான வாய்ப்புகள் காணப்பட்டன. மாடு, எருமை, ஆடு போன்ற மிருகங்கள் பெரிய எண்ணிக்கையில் இப்பிரதேசத்தில் வளர்க்கப்பட்டன. கால்நடை வளர்ப்போடு பால், தயிர், நெய் போன்றவற்றின் உற்பத்தியும் நடைபெற்று வந்துள்ளது. 1990 ஆம் ஆண்டு பலவந்த வெளியேற்றத்தின் போது 15,581 மாடுகள் 3,503 எருமைகள், 24,377 ஆடுகள் இப்பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்தன.

## காட்டு வளம்

முசலிப் பிரதேசத்திலுள்ள மொத்த நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதிகள் காடுகளாகும். 60 வீதமான நிலம் அடர்ந்த காடுகளாகவும், ஏனையவை மென் காடுகளாகவும், கிராமங்களின் அண்மையில் காணப்பட்டன. யானை பிடித்தல், தேன் சேகரித்தல், விறகு சேகரித்தல், கனிகளும், விதைகளும், கிழங்குகளும் சேகரித்தல், வீடு கட்டுவதற்கும் தளபாடங்கள் செய்வதற்குமான பாலை, முதிரை,

தம்மனை, கருங்காலி போன்ற மரங்களை பெறுதல் போன்ற நடவடிக்கைகளை இப்பிரதேச மக்கள் பகுதி நேரத் தொழிலாக மேற்கொண்டு வந்தார்கள்.

### கடல் வளம்.

முசலிப் பிதேசம் கடல் பயன்பாட்டுடன் தொடர்புடையது. 18 மைல் நீளமான கடற்கரையைக் கொண்டதும், ஆழமான இந்து சமுத்திரத்தின் ஒரு பகுதியாகவும் உள்ளது. கரையோர மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடியுடன், களப்புப் பிரதேசத்தில் இறால், நண்டு பிடித்தல், சங்கு, அட்டை எடுத்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிறிஸ்து காலத்திலிருந்து 20ஆம் நூற்றாண்டு ஆரம்ப காலம் வரையும் முத்துக்குளித்தல் மேற்கொள்ளப்பட்டு வந்த முத்துச் சிப்பியின் உற்பத்தி இப்பிரதேசத்தில் இல்லாதொழிந்ததால் கடல் தொடர்பான பிற நடவடிக்கைகளில் இப்பிரதேச மக்கள் ஈடுபட்டு வந்தார்கள். இப்பிரதேசத்தில் வாழ்ந்த கிறிஸ்தவ மக்களே அதிகமாக கடல் தொடர்பான நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தார்கள். தமிழர்கள் செறிவாகவுள்ள கொக்குப்படையான், முள்ளிக்குளம் ஆகிய பிரதேசங்களிலேயே கடற்தொழில் அதிகமாக நடைபெற்று வந்தது. மேலும் பருவ காலங்களில் கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம், கொச்சிக்கடைப் பிரதேசங்களிலிருந்து சிங்கள, கிறீஸ்தவ மீனவர்கள் முசலிப்பகுதியில் இடம் பெயர்ந்து வந்து மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருவது வழக்கமாகவிருந்து வந்தது. முஸ்லிம்கள் மீன்பிடித்தலில் அதிகம் நாட்டமில்லாமல், விவசாயத் தொழிலிலேயே அதிகம் ஈடுபாடு உடையவர்களாக இருந்து வந்தார்கள்.

### வர்த்தகமும் கைத்தொழிலும்.

முசலிப் பிரதேசத்தில் விவசாயம், கடல் சார்ந்த தொழில்கள் தொடர்பான வர்த்தகம் என்பன மேற்கொள்ளப்பட்டு வந்தன. இப்பிரதேசத்தில் மூலவளப் பற்றாக்குறையின் காரணமாக கைத்தொழில் நடவடிக்கைகள் முன்னேற்றங் காணவில்லை. எனினும் வேப்பங்குளக் கிராமத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் பாயிழைத்தல்,

அருவி ஆற்றுக்கரையோரத்தில் செங்கல் உற்பத்தி ஆகிய தொழிலில் ஈடுபட்டு வந்தார்கள். சிலாவத்துறையில் வர்த்தகத் துறையிலான ஈடுபாடுகள் காணப்பட்டன.

**முசலியின் குறைவிருத்திக்கான காரணங்கள்.**

பொருளாதாரக் குறிகாட்டிகளின் அடிப்படையில் முசலி ஒரு குறைவிருத்திப் பிரதேசம் என அடையாளம் காணப்பட்டது. இப்பிரதேசத்தில் காணப்பட்ட வறுமை, பருவகால வேலையின்மை, தலா வருமானக்குறைவு என்ற அடிப்படையில் இதனை அறிந்து கொள்ளமுடியும். அன்றியும் இப்பிரதேசத்தில் கல்வி, மருத்துவம், ஏனைய சமூக நல அபிவிருத்திகள் என்பனவும் வளர்ச்சி குன்றிய நிலையிலேயே காணப்பட்டன.

நிலவளம், நீர்வளம், கடல்வளம், காட்டு வளங்களைக் கொண்ட முசலிப் பிரதேசம் குறைவிருத்தி நிலையில் இருந்து வந்ததற்குக் காரணம் அரசினரின் தொடர்ச்சியான புறக்கணிப்பு என்பதைத் தவிர வேறு காரணம் எதுவும் இல்லை.

முசலிக் கரையோரத்தில் முத்துக் குளிப்புப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததும் காலனித்துவ ஆட்சியாளர்கள் இப்பிரதேசத்தின் அபிவிருத்தியில் அக்கறை காட்டவில்லை. இப்பிரதேசத்தின் நெல் விளைச்சல் முயற்சியில் எவ்வித அக்கறையும் எடுக்கப்படவில்லை. 1930ஆம் ஆண்டு வரை அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத்திட்டத்தில் எவ்வித திருத்த வேலைகளும் செய்யப்படவில்லை. அன்றியும் இத்திட்டம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகள் கைவிடப்பட்டன.

முத்துக் குளித்தல் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததும் காலனித்துவ ஆட்சியாளர்கள் இப்பிரதேசத்தில் பெறப்பட்ட யானை வர்த்தகத்தில் ஈடுபட்டார்கள். யானை பிடிக்கும் முசலி பணிக்கர் முஸ்லிம்களுக்கு ஒரு சிறு தொகையே வழங்கப்பட்டது. இவ்வர்த்தகத்தில் பெறப்பட்ட பெருந் தொகைப் பணம் அரசாங்கத்திற்கும் காலனித்துவ ஆட்சியாளருக்கும் சென்றடைந்தது. ஆங்கில ஆட்சியின் போதும் பிரித்தானிய அதிகாரிகளினால் முசலி முஸ்லிம்கள் புறக்கணிக்

கப்பட்டே வந்திருக்கிறார்கள். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரும் இப்பிரதேசம் தொடர்ந்து புறக்களிக்கப்பட்டே வந்திருக்கிறது. உதாரணமாக அருவியாற்று (மல்வத்துஓயா) நீரின் பங்கு சிங்களப் பிரதேசங்களில் கூடுதலாகப் பயன்படுத்தப்பட அனுமதி வழங்கப் பட்டதன் மூலம் மன்னார் பிரதேச விவசாயிகள் அரசினால் புறக் கணிக்கப்பட்டார்கள். அதேபோன்று வரண்ட வலைய அபிவிருத்தித்திட் டங்கள் எதிலும் மன்னார் உட்பட்ட தமிழ் பேசும் மக்கள் வாழும் மன்னார் மாவட்டம் உள்ளடக்கப்படவில்லை. மன்னார் மாவட்டத்தில் சிபார்சு செய்யப்பட்டிருந்த கிராமிய ஒருங்கிணைப்பு அபிவிருத்தித்திட் டங்களும் இனப்பிரச்சினை காரணமாக அரசினால் கைவிடப்பட்டது. கொண்டச்சி முந்திரிச் செய்கை அபிவிருத்தித் திட்டத்தில் சிங்கள மக்கள் குடியேற்றத்திற்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் முசலி முஸ்லிம், தமிழ் மக்களின் வறுமை, வேலையின்மை, அபிவிருத்தி யின்மையைப் போக்கும் திட்டங்களில் காட்டப்படவிலலை.

முசலியின் நீர்ப்பாசன அபிவிருத்தியில் மாவட்ட அதிகாரிகள் அக்கறையற்றவர்களாகக் காணப்பட்டனர். அருவியாற்று நீர்ப் பங்கீட்டில் கட்டுக்கரைக் குளத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டதால், அகத்திமுறிப்பு நீர்வழங்கல் பாதிக்கப்பட்டது. அதனால் அத்திட்டத்தின் கீழிருந்த விவசாயக் கிராமங்கள் பாதிக்கப்பட்டன. மாவட்ட மட்டத்திலான கடல்வள அபிவிருத்தித் திட்டங்களில் முசலிப் பிரதேசம் புறக்கணிக்கப்பட்டது.

முசலிப் பிரதேசத்தைவிட்டு மக்கள் வெளியேறிய பின் இப் பிரதேசங்களில் காணப்பட்ட குளங்கள், வாய்க்கால்கள் என்பன இயற்கை அழிவுக்கு உட்பட்டுவிட்டன. வடகிழக்குக்கான சமாதானத்தீர்வு முன்னெடுக்கப்பட்டு சாதகமான முடிவுகள் பெறப்பட்டு, புனர்வாழ்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும் போது நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்டு வந்த முசலிப் பிரதேசத்தில் பொருத்தமான புனர் நிர்மாணப்பணிகளை நிறைவேற்ற அரசு முன்வரவேண்டும். கடந்த பதினைந்து ஆண்டுகளாக அகதி வாழ்க்கையில் அல்லற்பட்டு வரும் முசலிப்பிரதேச மக்களின் எதிர்கால அபிவிருத்திக்கு இத்தகைய புனர்வாழ்வுத் திட்டங்கள் பொருத்தமான தீர்வுத்திட்டமாக அமையும் என்பது உறுதி.

## கலையும், கலாசாரமும்.

ஆரம்ப காலந்தொட்டு முஸ்லிம் கிராமங்களில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் வழக்கில் இருந்து வந்திருக்கிறன. ஆண்களால் ஆடப்படும் களிம்பு என்று அமைக்கப்படும் கோலாட்டம் பிரபல்யமான கலை நிகழ்ச்சியாகும். சிறிய கம்புகளை அடித்துப் பாடிப்பாடி ஆண்கள் தாழத்திற்கு ஏற்ப ஆடிவருவர். பெருநாட்களின் போதும், விஷேட தினங்களிலும் இத்தகைய களிகம்பு நிகழ்ச்சி நடைபெற்று வந்திருக்கிறது. சீனடி எனப்படும் தற்பாதுகாப்பு விளையாட்டும் சில கிராமங்களில் நடைபெற்று வந்திருக்கிறது.

## விளையாட்டுக்கள்

முசலிப்பிரதேச மக்களிடையே பலவகையான விளையாட்டுக்கள் ஆடப்பட்டு வந்திருக்கின்றன. வாரோடுதல், கிளித்தட்டு மறித்தல், றவுன்பந்து அடித்தல், நொண்டியடித்தல் ஆகியன பாரம்பரிய விளையாட்டுக்களாக இருந்து வந்திருக்கின்றன. ஊரி அல்லது சோவிகளைக் கொண்டு பாண்டி விளையாட்டில் பெண்கள் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள்.

## கலாசாரம்

கலாச்சாரம் என்பது ஒரு சமூகத்தின் தனித்துவமான வாழ்க்கை முறையையும் பழக்க வழக்கங்களையும் குறிக்கும். முசலி மக்கள் தனித்துவமான ஒரு சலாச்சாரத்தைப் பின்பற்றி வந்தார்கள். உடை, ஆபரணங்கள், உணவு வகைகள், பழக்க வழக்கங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். ஆண்கள் தொப்பி அணிவதும், பெண்கள் சீலையுடித்தி முக்காடு இட்டு வாழ்ந்து வந்தார்கள். குறிப்பாக திருமணத்தின்போது மாப்பிள்ளை துருக்குத் தொப்பி அணிவது அக்காலத்தில் அவசியமாகக் காணப்பட்டது. பேச்சு வழக்கில் அதிகமான அரபுச் சொற்கள் பாவிக்கப்பட்டன. உணவு சமைப்பது, உணவு உண்ணுவது போன்ற பழக்க வழக்கங்களில் அவர்கள் தமது தனித்துவத்தைப் பேணிவந்தார்கள்.

முசலி முஸ்லிம்கள் மத்தியில் சில பழக்கவழக்கங்களும் நடைமுறையில் இருந்து வந்தன. இரவு நேரங்களில் மான் வேட்டை, முயல் வேட்டைக்குச் செல்வது சாதாரண நடைமுறையாக இருந்து வந்தது. மான் வேட்டைக்குச் செல்பவர்கள் காட்டில் சில நாட்கள் தங்கியிருந்து வருவது வழக்கமாகும். இக்காலத்தில் சுட்டுப்பெறப்படும் மான், மரை இறைச்சியை வற்றல் வைத்து கொண்டு வருவது வழக்கமாகும். பருவ காலங்களில் தேன் சேகரிக்கச் செல்வதும் அம்மக்களின் வழக்கமாக இருந்து வந்தது. விருந்தினர்களுக்கு தேன் ரவ்வைகளைக் கொடுத்து உபசரிக்கும் வழக்கம் உடையவர்களாக முசலி முஸ்லிம்கள் இருந்து வந்தார்கள்.

கரடிக்குளி, மறிச்சுக்கட்டி முஸ்லிம் பணிக்கர்கள் யானை பிடிக்கும் வழக்கம் உடையவர்களாக இருந்து வந்தார்கள். சில சமயங்களில் காட்டு யானைகளாலும், காட்டு விலங்குகளாலும் விபத்துக்கள் நிகழ்வதுண்டு. இத்தகைய விபத்துக்களிலிருந்து கார்மானம் தேடும் பொருட்டு எருக்கலம்பிட்டி விதானைப்புலவரால் இயற்றப்பட்ட 'யானைக்காதல்' என்ற பதிகத்தைப் பாடி நேர்ச்சை செய்து யானை பிடிக்கச் செல்வது அக்கால வழக்கில் இருந்து வந்த ஒரு செயலாகும்.

அன்றியும் வீடுகளில் மௌலூது ஓதுதல், கந்தூரி வழங்குதல் ஆகிய நடைமுறைகளும் முசலிப் பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் இருந்தன.

பள்ளிவாசல் கந்தூரிகள், பள்ளிவாசல்களின் திறப்பு விழாக்கள் போன்ற நிகழ்வின் போது கொடுக்கப்படும் விருந்தில் காட்டிலிருந்து சுடப்பட்டுக் கொண்டு வரப்படும் மான், மரை இறைச்சிகளே சமைத்துக் கொடுக்கப்படும் வழக்கம் இருந்து வந்தது.

## விழாக்களும், சடங்குகளும்

பலவகையான சடங்குகளும், விழாக்களும் முசலிப்பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வந்தன. முஸ்லிம்கள் வாழ்ந்த பிரதேசங்களில் இருந்த தமிழர்கள் மத்தியிலும் இவற்றிற்கு ஒப்பான நிகழ்வுகள் காணப்பட்டன. எனினும் அவ்வாறான நிகழ்வுகள்

இஸ்லாமிய தனித்துவத்தைப் போற்றும் வகையிலேயே முஸ்லிம்கள் மத்தியில் நடைமுறையில் இருந்தன.

திருமண நிகழ்வின் போது தலைவாயிலில் வாழை மரங்களை நாட்டுதல், பந்தல் போடுதல், சோடனை செய்தல் மணமக்களை ஆராத்தி எடுத்தல், கூறை அனுப்பித்தல், தாலிகட்டுதல், சீதனம் கேட்டுப்பெறல் போன்ற நடைமுறைகள் முசலி முஸ்லிம்களின் மத்தியில் இருந்து வந்த பழக்க வழக்கங்களாகும். இத்தகைய பழக்க வழக்கங்கள் தமிழர்களின் பண்பாடாகும்.

முசலிப் பிரதேசக் கிராமங்களில் சீறாப்புராணப் பாராயணம் நடைபெற்று வந்திருக்கிறது. றசூல் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை செய்யுள் வடிவில் உமர் புலவரால் எழுதப்பட்ட காப்பியமே சீறாப்புராணம் ஆகும். இப்புறாணத்திற்கு ஆற்றலுள்ள புலவர்களால் விரிவுரை கூறப்படும். கொண்டச்சி சரீபுப்புலவர் (நொண்டிப்புலவர்) முசலி முகம்மது கௌது புலவர், கபீபு முகம்மது புலவர் ஆகியோர்கள் சீராவுக்கு விரிவுரை வழங்கி வந்திருக்கிறார்கள். ஒரு கிராமத்தில் இந்நிகழ்வு நடந்தால் அயல் கிராம மக்களும் அவ்வைபவத்தில் பங்கு கொண்டு வந்தார்கள். பல இரவுகள் தொடர்ந்து நடைபெறும் இந்நிகழ்வின் இறுதி இரவில் நார்சா என்ற விஷேட உணவு தயாரித்து மக்களுக்குப் பங்கிடுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது.

## இலக்கியச் செயற்பாடுகள்

முசலிப் பிரதேசம் ஆரம்பகால முதல் கல்வி கேள்விகளில் அதிகம் சிறப்புப்பெற்று வந்துள்ளது. வேப்பங்குளம், பொற்கேணி, கரடிக்குளி, மறுச்சுக்கட்டி ஆகிய இடங்களில் பல புலவர்கள் வாழ்திருப்பது இதற்குச் சான்றாக உள்ளது. களிகம்பு எனப்படும் கோலாட்ட நிகழ்வின் போது பாடுவதற்கென பல பாடல்களை இப்புலவர்கள் இயற்றித் தந்துள்ளார்கள். இஸ்லாமிய புராண நூல்களுக்கு விவுரை வழங்க வல்ல கல்வித்திறன் மிக்க புலவர்கள் பலரும் இங்கு வாழ்திருக்கிறார்கள்.

பண்டாரவெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட க. நெயினா முகம்மது மரைக்காயர் ஒரு சிறந்த புலவரகவும், பிரசித்தமான நொத்தாரிசாகவும் விளங்கினார். அவரால் சீட்டுக்கவி, வழிநடைச்சிந்து, பிரார்த்தனைப் பாடல் போன்ற படைப்புக்களை ஆக்கி இருக்கின்றார்.

பண்டாரவெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட க. கிதுறு முகம்மது மரைக்காயர் என்பரும் ஒரு புலவராகும். இவர் இயற்கையிலேயே கவிப்புலன் மிக்கவராகத் திகழ்ந்தார். எழுத்தறிவு குன்றிய அன்றைய நாளில் தனது உள்ளக்கிடக்கைகளையும் உணர்வுகளையும் பாடல் மூலம் வெளிக்கொணரும் வல்லமை மிக்கவராகத் திகழ்ந்தார். எனினும் அவருடைய படைப்புக்கள் நூலுருப் பெறாமல் அழிந்துவிட்டன.

கூளாங்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட K. ஜமால்தீன் புலவர் சிறந்த ஆற்றல் உள்ளவர். மக்களின் வறுமை நிலை, சமுக விரோதச் செயல்கள், ஏக இறை வல்லமைகள் என்பவைகளைக் கருப் பொருளாகக் கொண்டு ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளார். வானம் பார்த்த பயிர்ச்செய்கையை மேற்கொண்டிருந்த அன்றைய நாளில் உரிய காலத்தில் மழைகிடைக்கவில்லை. பயிர்கள் வாடி வதங்கின. மழைகிடைக்கப் பிரார்த்தித்துப் பாடிய ஒரு பாடலின் சில அடிகள் வருமாறு.

சீர்பெறும் இலங்கை நகரென்றுஞ் செழித்து
சேம முறு வாகு பெற உனதடி பணிந்து
ஏர் பெருக மங்கலச் செல்வமது உறுக
ஏகனே நன்மாரி இவ்வருச மீவாய்
அல்ஹம்து லில்லாஹி ஆன புகழெல்லாம்
ஆதியே உனையன்றி வேறு கதியுண்டோ
பல்வினைக டீர்துறுக உனது றகுமத்தால்
வாவிகளில் நீர்பெருக வாகுமழை பொழிவாய்

புதுவெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட நெய்னா முகிதீன் சாகிபு மரைக்கார் சிறந்த புலவர். இவர் ஒரு பிரசித்த நொத்தாரிசு. சிறு வயதினராக இருக்கும்போதே கவி பாடும் திறமை பெற்றிருந்தார்.

இவர் கொடுக்கல் வாங்கல், மக்களின் நாளாந்த நடவடிக்கைகள், இறை நம்பிக்கை போன்ற அம்சங்களை உள்ளடக்கிய பாடல்களைப் பாடியுள்ளார். மரணத்தைப் பற்றியும், அதன்பின்னுள்ள நிகழ்வுகள் பற்றியும், பாடியுள்ள பாடலின் சில வரிகள் பின்வருமாறு,

நல்ல புனலியற்றி – நாற்றத் துடக் ககற்றி
சொல்லும் கபனுடுத்தி தொழுது சந்தூக்கிலேற்றி
தூக்கியே சுமந்து செல்லும்
துக்கதின முன்கர் நக்கீர் வந்தே சலாம்
பக்குவமாய் கேட்டு – அக்கணத்தில் காக்க

நெ. முகம்மது கௌதுப் புலவர் முசலிக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட புலவராவார். சீறாப்புராணத்திறகு விரிவுரை வழங்க வல்லவராகத் திகழ்ந்தார். இவருடைய ஆக்கங்கள் கிடைக்கப் பெறவில்லை.

புதுவெளியைப் பிறப்பிடமாவும், சிலாவத்துறையை வாழ்விடமாகவும் கொண்டு வாழ்ந்த நெ.மு.ஹபீபு முஹம்மது மரைக்காயர் ஒரு சிறந்த புலவராகவும், காதியாகவும், சமாதான நீதவானாகவும் கடமைபுரிந்து வந்துள்ளார். இவர் ஒரு சிறந்த புராண விரிவுரையாளரும் ஆவார். 1990 ஆம் ஆண்டு நடந்தேறிய பலவந்த வெளியேற்றத்தின் போது பாடிய கவிதையின் சில வரிகள் வருமாறு:

நாடிழந்து நகரிழந்து நங்கையரின் நகையிழந்து
காடுவழியாக சிலர் கஷ்டப்பட்டு வந்தாரல்லோ
ஆடிழந்து மாடிழந்து அரண்மனைகள் தானிழந்து
தோடிழந்து தொங்கிழந்து துயரப்பட்டு வந்தோம் அல்லாஹ்
வீடிழந்து நெல்லிழந்து வேலைசெய்த மாடிழந்து
பாடுபட்ட பணமிழந்து பரிதவித்து வந்தோம் அல்லாஹ்

அளவக்கைச் சிறுக்குளத்தில் பிறந்த 'கவியப்பா' என்று செல்லமாக அமைக்கப்பட்டு வந்த மீ. ஹபீபு முகம்மது என்பவரும் ஒரு சிறந்த புலவர், களிம்பு, கோலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப பாடல்களைப் பாடும் திறன் மிக்கவராகத் திகழ்ந்தார்.

மேலும் க.பக்கீர் முகம்மது, க. முகம்மது காசிம், மு. முகம்மதுக் காசிம், மு. முகம்மது மஸ்தான், மு. அலி முகம்மது, க. முகம்மது சரீபு, செ.சே. சேகுதாவுது, மு.முகம்மது முகைதீன், மு.கச்சு முகம்மது ஆகிய புலவர்களும் முசலிப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் ஆக்கங்கள் இன்று கிடைக்கக் கூடியதாக இல்லை.

**இனப்பிரச்சினையும் முசலி முஸ்லிம்களும்**

முசலிப் பகுதியில் இன ஐக்கியம் நிலவிய காலகட்டத்தில் இலங்கையில் இன விரிசல்கள் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டே வந்தன. 1983 ஆம் ஆண்டு ஜூலை வன் செயல்கள் தமிழ் மக்கள் ஆயுதப்போராட்டத்தில் குதிக்கக் காரணமாக இருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்திருந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் படிப்படியாகத் தீவிரமடைய, இலங்கை அரசும் இம்மாவட்டங்களில் இராணுவப்பலத்தை அதிகரித்தது.

இந்நிலையில் சிறுபான்மை இனமான முஸ்லிம்கள் பக்கம் சாரா நிலைப்பாட்டைக் கடைபிடித்து வந்தார்கள். தேசிய ரீதியாக சிங்களவரும், பிரதேச ரீதியாக தமிழர்களும், முஸ்லிம்களின் சகபாடிகளாக இருந்தார்கள். முசலிப்பகுதியில் இலங்கை இராணுவமும் தமிழ் ஆயுதக் குழுக்களும் நேரடியாக மோதிக்கொண்ட போது, இப்பிரதேசத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களின் செயற்பாடு எவ்வாறிருந்தது என்பதை நோக்குவோம்.

**இலங்கை இராணுவம்:**

மன்னார் பிரசேத்தில் மிக நீண்ட காலமாக இலங்கை இராணுவ முகாம்கள் காணப்பட்டன. கரையோரப் பாதுகாப்பு நோக்கம் கருதி சிலாபத்துறையிலும் இராணுவ முகாமொன்று அமைந்திருந்தது. முசலிப் பிரதேசத்திலும், வில்பத்துக் காட்டுப் பிராந்தியத்திலும் தமிழ் ஆயுதக்குழுக்களின் அரசுக்கெதிரான அச்சுருத்தல்களை பலவீனம் செய்யுமுகமாக சிலாபத்துறையில் அமைந்திருந்த இராணுவம் ஆட்பலத்தினாலும், ஆயுதப் பலத்தினாலும் ஸ்தீரமப்படுத்தப்பட்டது.

## தமிழ் ஆயுதக் குழுக்கள்

தமிழ் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் முசலிப் பிரதேசத்தில் பரவலாகக் காணப்பட்டது. முசலியின் தென்பகுதியில் ஆயுதக் குழுக்களின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. ஆயுதக்குழுக்கள் தமக்குத் தேவையான பணம், உணவு, ஆளுதவி போன்றவற்றை இப்பரதேச மக்களிடமிருந்து பெற்றதினால் இங்கு வாழ்ந்த தமிழ், முஸ்லிம்மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டார்கள்.

இப்பிரதேசத்தில் இந்திய அமைதிப்படையினர் தமது கட்டுப்பாட்டை ஏற்படுத்தி, தமிழ் போராட்டக் குழுக்களுக்கு எதிராகப் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அந்நிலையில் முஸ்லிம், தமிழ் மக்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் சேதமேற்பட்டது. பல இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். பலர் சித்திரவதை செய்யப் பட்டார்கள். முசலிப்பகுதியின் சிவில் நிர்வாகம் சீர்குழைந்த நிலையில் காணப்பட்டது.

## ஊர்காவற் படை

முசலிப் பிரதேச மக்கள் தனித்துவமானவர்கள். தமது பிரதேசமும் தனித்துவமானது என நம்பினார்கள். ஆயுதக்குழுக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் போர் நிகழ்ந்து வந்த காரணங்களினால் சிவில் நிர்வாகம் சீர்குலைந்திருந்தது. பொலிஸ் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. அதனால் கிராம மக்கள் தமது சமூக நன்மைகளையும் பிரச்சினைகளையும் உள்ளூர் மட்டத்திலேயே தமக்குள்ளேயே தீர்க்க முற்பட்டார்கள். இதன் காரணமாக ஒவ்வொரு கிராமமும் அங்கு அமைந்திருந்த பள்ளிவாசல் நிருவாகத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடந்து வந்தார்கள். அனைத்து முஸ்லிம் கிராமங்களும் ஒன்று இணைந்த பள்ளிவாசல் சமாஜம் என்ற அமைப்பை ஏற்படுத்தி சிவில் நிருவாகத்தை மேற்கொண்டு வந்தார்கள். எனினும் பள்ளிவாசல் சமாஜத்தின் செயற்பாடுகள் சமயம், சமூக மட்டத்திலேயே காணப்பட்டது. ஆயுதக்கலாசார காலகட்டத்தில் பள்ளிவாயில் நிருவாகத்தின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டன. இச்சூழ்நிலையில் இலங்கை

அரசாங்கத்தால் ஊர் காவற்படைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. ஆயுத அச்சுறுத்தலுக்கு எதிராக கிராம மட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டு ஊர்காவற்படையினர் உருவாக்கப்பட்டார்கள். ஆரம்பத்தில் எல்லையோர கிராமங்களை ஆயுதக் குழுக்களிலிருந்து பாதுகாக்க இத்தகைய ஊர்காவல் படை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் தமிழ் ஆயுதக்குழுக்களைப் பலவீனப் படுத்தும் நோக்கமாக முஸ்லிம் கிராமங்களில் அரசினால் ஊர்காவற்படையினர் உருவாக்கப்பட்டார்கள்.

இதேபோன்று முசலிப்பகுதியிலும் ஒரு ஊர்காவற்படை உருவாக்கப் பட்டது. தத்தமது கிராமத்தில் ஒழுங்கையும், சீரான வாழ்க்கை முறையையும் அமைப்பதற்கு இப்படை உதவக்கூடும் என்பதனால் முஸ்லிம் இளைஞர்கள் இப்படையில் இணைந்தனர். மன்னார் உப அரசாங்க பிரிவிலிருந்த சில கிராமங்களிலும், முசலி மாவட்டத்திலும் ஊர்காவற்படை உருவாக்கப்பட்டது.

ஆயுதக்குழுக்கள் மத்தியில் பல போட்டி இயக்கங்கள் காணப்பட்ட அன்றைய காலகட்டத்தில், முஸ்லிம்களின் தற்பாதுகாப்புக்காக எடுக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஆயுத முயற்சியே முஸ்லிம்களின் ஊர்காவற்படை என்ற கருத்து மன்னார் மாவட்ட ஆயுதக்குழுக்களின் மத்தியில் நிலவியது. அதனால் இப்படை தமக்கு எதிரானவர்கள் என்று அவர்கள் எண்ணவில்லை. அதனால் இவ்விரு குழுக்களுக்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கையும், நல்லுறவும் காணப்பட்டு வந்தது. இந்திய அமைதி காக்கும் படையினர் மன்னார் மாவட்டத்தில் நிலைகொண்டிருந்த வேளையில் ஊர்காவற்படையினரால் பாவிக்கப்பட்டு வந்த ஆயதங்கள் அனைத்தும் பறித்தெடுக்கப்பட்டன. எஞ்சியிருந்த ஆயுதங்கள் அரசாங்கத்தின் உத்தரவுக்கு அமைய இலங்கை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆயுதங்களைப் பறிகொடுத்த முசலி முஸ்லிம்கள் நிராயுதபாணியாகிப் பலவீன மடைந்தார்கள்.

# முசலி முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம்

1990 ஒக்டோபர் 23ஆம் திகதி காலை 8 மணிக்கு வேப்பம்குளம் பள்ளிவாசலின் ஒலிபெருக்கியின் மூலம் முஸ்லிம்களின் வெளியேற்ற உத்தரவு வாசிக்கப்பட்டது. "48 மணித்தியாலங்களுக்குள் முஸ்லிம் அனைவரும் தத்தமது கிராமத்தை விட்டு வெளியேற வேண்டும். என்பதுதான் அந்த அறிவித்தல்.

வெளியேற்ற உத்தரவு காட்டுத் தீ போல் அயற் கிராமங்களுக்கும் பரவியது. வேளியேற்ற உத்தரவு அனைத்து மக்களையும் அதிர்சியடையச் செய்தது. வேப்பங்குளத்திற்கு அனுப்பப்பட்ட அதே உத்தரவு அகத்திமுறிப்பு, பண்டாரவெளி ஆகிய கிராமங்களைுக்கும் அனுப்பப்பட்டிருந்தன. அதே போன்று முசலி தெற்குக் கிராமங்களுக்கும் வெளியேற்ற உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

பலவந்த வெளியேற்ற உத்தரவை முசலி முஸ்லிம் பெரியார்கள் மிகவும் நிதானமாக அணுக முயன்றனர். இப்பிரதேசத்தில் இயங்கிவந்த பள்ளிவாசல்களின் சமாஜம் வெளியேற்ற உத்தரவையிட்டு ஆலோசனை நடாத்தி வந்தது.

வெளியேற்ற உத்தரவை எவ்விதத்திலும் உதாசீனப்படுத்த முடியாதிருந்தது. மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மன்னார் மாந்தை, நானாட்டான் பிரதேசங்களிலும் வெளியேற்ற உத்தரவு பிரப்பிக்கப்பட்ட செய்தியையும் முசலி முஸ்லிம்கள் அறிந்திருந்தனர். ஆகவே முசலி

முஸ்லிம்களின் பாதுகாப்பை நோக்கமாக வைத்து அனைவரும் தமது தாயகத்தை விட்டு வெளியேறுவது என்ற முடிவுக்கு ஏற்ப ஒவ்வொரு கிராமமும் தமக்கு உசிதமான பாதை வழியாக வெளியேறத் தொடங்கினார்கள்.

## முசலி வடக்கு கிராம முஸ்லிம்களின் இடம்பெயர்வு

முசலி வடபுற முஸ்லிம் கிராம மக்கள் 25ம் திகதி காலையில் இருந்து சாரிசாரியாக சிலாபத்துறையை நோக்கி இடம்பெயர ஆரம்பித்தார்கள். வேப்பங்குளம், பிச்சைவாணியன் குளம், பொற்கேணி, அகத்திமுறிப்பு கிராம மக்கள், அகத்திமுறிப்பு அணைக்கட்டின் வழியாக சேறும் சகதிகளையும் கொண்ட கஷ்டமான ஒற்றையடிப் பாதையின் மூலமாக தெற்கு நோக்கிச் சென்று கொண்டச்சி முஸ்லிம் கிராமத்தை அடைந்தார்கள். அக்கிராமத்தில் இருந்த பாடசாலையில் தங்கினார்கள். பூநொச்சிக்குளம், பண்டாரவெளி மக்கள், சிலாபத்துறையை அடைந்து அங்குள்ள பாடசாலை, பள்ளிவாசல், தனியார் வீடுகளில் தங்கினார்கள்.

இதே நேரத்தில் மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் ஒரு பகுதியினர் சிறிய படகுகளில் சிலாபத்துறை வரை கரையோரமாகப் பிரயானம் செய்து கற்பிட்டியை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள். 25ம் திகதி வெள்ளிக்கிழமையாகையால் சிலாவத்துறைப் பள்ளியில் ஜும்மாத் தொழுகையை நிறைவேற்றிவிட்டு தமது பிரச்சினைகளை அல்லாஹ்விடத்தில் முன்வைத்து உருக்கமாக துஆக் கேட்டபின் வெளியேறத் தொடங்கினார்கள்.

## முசலி தெற்குப்பகுதி முஸ்லிம்களின் வெளியேற்றம்

முசலி தெற்குப் பிரதேசங்களில் வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் இவ் அகதிகளோடு இணைந்து கொண்டு பரம்பரையாகத் தேடிய சொத்துக்களையும் வீடு வாசல்களையும் இழந்து வெறுங்கையோடு வெளியேறிய ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள்

அனைவரும் வில்பத்து அடர்ந்த காட்டினூடாக முசலியை விட்டு வெளியேறினார்கள். ஏற்கனவே அபயம் தேடிக் கொண்டச்சியை அடைந்த வேப்பங்குளம், பொற்கேணி மக்களும் அவசர அவசரமாக வில்பத்து வனாந்திரத்தின் ஊடாக வெளியேறினார்கள். இவ்வாறு நில வழியாகப் பிரயாணத்தை மேற்கொண்ட மக்களை மிதிவெடிகள் புதைக்கப்பட்டிப்பதால் தரைப்பாதையை விடுத்து கடல் வழியால் செல்லுமாறு இராணுவம் கூறியது. தரைப்பயணத்தைவிட கடற்பயணம் பயங்கரமானது எனக் கருதிய முசலி முஸ்லிம்கள், மிதிவெடியிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு மிருகங்களைத் தமக்கு முன்னால் சாய்த்துக் கொண்டு சென்று 26ந் திகதியன்று 15 மைல் தூரத்திலிருந்த ஒரு இடத்தில் மர நிழலில் அமர்ந்து உணவருந்தி ஓய்வு எடுத்தார்கள். அதன்பின் முஸ்லிம்கள் வெல்லச்சி என்ற சிங்களக் கிராமத்தையடைந்தார்கள். இக்கிராம மக்கள் அகதிகளை அன்பாக உபசரித்து உணவளித்து, பொதுக் கட்டிடங்களில் உறைவிடமும் கொடுத்தார்கள். வெல்லச்சி கிராம மக்களால் நாலைந்து நாட்கள் வரை உபசரிக்கப்பட்ட முஸ்லிம்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் துணையோடு அனுராதபுர மாவட்ட கணேவல்பொல, மருதங்கடவல, கொல்லாங்குட்டிகம, இஹலபுளியங்குளம், ஆகிய இடங்களில் அமைத்துக் கொண்ட சிறிய சிறிய தற்காலிகக் குடிசைகளில் அகதிகளாக வாழ்ந்து வந்தார்கள்.

## கடல் வழியினூடாக வெளியேற்றம்

23, 24, 25ஆம் திகதிகளில் அகதி மக்களின் எண்ணிக்கை சிலாவத்துறையில் மணித்தியலத்திற்கு மணித்தியாலம் அதிகரித்த வண்ணம் இருந்தது. சிலாவத்துறை இராணுவ முகாமில் அதிருப்தியடைந்த மக்களில் ஒரு பகுதியினர் கொண்டச்சி நோக்கிச் சென்ற பின் எஞ்சிய மக்கள் சிலாவத்துறை, கற்பிட்டிப்பகுதிகளில் மீன்பிடித்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட சிறு படகுகள் மூலமாக கற்பிட்டியை நோக்கிக் கடற்பிரயானத்தை மேற்கொண்டார்கள். 30ஆம் திகதி வரை இவ்வெளியேற்றம் நடைபெற்றது.

கற்பிட்டியையடைந்த முசலி முஸ்லிம்களையும், மன்னார் மாவட்டத்திலிருந்து வந்த இதர முஸ்லிம்களையும் கற்பிட்டி இறங்கு

துறையில் அரசாங்கமும், எருக்கலம்பிட்டிப் பிரமுகர்களும் வரவேற்று, உணவும் வழங்கினார்கள். பல்லாயிரக்கணக்கான அகதிகள் கற்பிட்டியை வந்தடைந்ததன் காரணமாக, கற்பிட்டியிலுள்ள பாடசாலைகளிலும் அரச கட்டிடங்களிலும் அகதிகள் தங்க வைக்கப்பட்டார்கள். சில தினங்களுக்குள் கற்பிட்டியில் தங்கியிருந்த அகதிகள் அயலிலிருந்த குறிஞ்சிப்பிட்டி, கண்டக்குளி, பள்ளிவாசல்துறை, முசப்பிட்டி, திகளி, ஏத்தாளை, கண்டக்குடா, ஆலங்குடா, நுரைச்சோலை, பூலாச்சேனை ஆகிய முஸ்லிம் கிராமங்களுக்கும் அதற்கு அப்பாலும் தற்காலிக தங்குமிட வசதிகளை உள்ளூர் மக்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும், நண்பர்களும், உறவினர்களும் ஏற்படுத்தி அகதி மக்களை உபசரித்தார்கள்.

தற்காலிக முகாம்களில் இவ்விதமாக குடியேறிய அகதிகள் தற்போது சுயமாகக் காணிகளை விலைக்கு வாங்கியும், மீள் குடியேற்றக் கிராமங்களிலும் வீடுகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

## பலவந்த வெளியேற்றமும் பொருளாதார இழப்புக்களும்

பலவந்த வெளியேற்றத்தின் காரணமாக முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்புக்கள் அனந்தம் இவ்விழப்புக்கள் மதிப்பிடக் கூடியதாக இருப்பினும் இம்மக்களுக்கு ஏற்பட்ட கலாசார, உளவியல் தாக்கங்கள் இலகுவில் மதிப்பிடக்கூடியவை அன்று.

முசலி முஸ்லிம்களின் பொருளாதார இழப்புக்களுள், நீர்ப்பாசன குளங்கள், கால்வாய்கள், கடல், காட்டு வளங்கள் போன்றவை அடங்கும். அடுத்து தனிப்பட்டவர்களுக்கும், குடும்பங்களுக்கும் உடமையாக இருந்த சொத்துக்கள் 1990ஆம் ஆண்டு முசலியில் 3,555 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தார்கள். இவர்களின் தொழில் விவசாயமாக இருந்தமையால் விவசாய நிலம் கால்நடைகள், குடியிருப்பு, பணம், தளபாடங்கள், பொருட்கள், வாகனங்கள், வர்த்தகத்தாபனங்கள், வர்த்தகத் தொடர்பான வாகனங்கள் என்பனவும் இழக்கப்பட்ட பொருளாதாரத்துள் அடங்கும். பின்வரும்

அட்டவணையில் பொருளாதார இழப்புக்களின் அண்ணளவான மதிப்பீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

பலவந்த வெளியேற்றத்தின்போது முசலி முஸ்லிம்களின் சமய, சமூக, கலாசார நிறுவனங்களுக்கும் அவற்றிற்கு உரிமையாக இருந்த காணிகள், கட்டிடங்கள், சொத்துக்ளின் இழப்புக்களும் கவனத்திற்குக் கொள்ளப்படவேண்டும்.

இவையன்றி சிலாவத்துறை குடியிருப்பில் ஏறக்குறைய 57 வர்த்தக சேவை நிலையங்கள் இருந்தன. பலசரக்கு மொத்த வியாபார தாபனம், சில்லறைக்கடைகள், தேனீர்க் கடைகள் பேக்கரி, தையல் கடை, எரிபொருள் நிலையம், ஜவுளிக்கடைகள், இறைச்சிக்கடை, குளிர்பானம், மரக்கறிக்கடை, சைக்கிள் பாட்ஸ் கடைகள் என்பன அமைந்திருந்தன.

முசலி முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இப்பொருளாதார இழப்புக்குப் பொருத்தமான பரிகாரம் தேடப்படுவது அவசியமாகும். இம்மக்களை அவரவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதன் மூலம் அவ்வப்பகுதிகளிலுள்ள குளங்கள். கால்வாய்கள், கடல், காட்டுவளங்கள் போன்றவற்றைத் திரும்பவும் இம்மக்கள் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்பதாகும். மேலும் அம்மக்களால் இழக்கப்பட்ட பணம், நகை, கால்நடைகள் போன்ற உடமைகளுக்கான பொருத்தமான மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டு இம்மக்கள் தமது வாழ்க்கையை ஸ்திரப் படுத்துவதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கிராம அடிப்படையில் முசலிப்பிரதேச முஸ்லிம் குடும்பங்களின் இழப்பு விபரம்.

| கிராமங்களின் பெயர் | விபரம் தந்த குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்த சனத்தொகை | கல் வீடு | நகை ஒரு குடும்பத்திற்கு | சராரி நிலம் ஏக்கர் | உரிமையாயிருந்த கால்நடை | | | தளபாடப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மாடு | ஆடு | கோழி | |
| வேப்பங்குளம் | 289 | 1386 | 64 | 4 | 5 | 3169 | 1750 | 2082 | 16891 |
| பொற்கேணி | 272 | 1205 | 91 | 5 | 5 | 4122 | 1868 | 1307 | 16281 |
| கொண்டச்சி | 246 | 1101 | 64 | 5 | 5 | 1446 | 1857 | 1879 | 10408 |
| அகத்திமுறிப்பு | 215 | 997 | 71 | 4 | 5 | 1664 | 1249 | 2139 | 11462 |
| கரடிக்குளி | 181 | 855 | 77 | 3 | 5 | 2825 | 1795 | 2437 | 14233 |
| சிலாவத்துறை | 177 | 827 | 68 | 4 | 4 | 2091 | 461 | 1178 | 17881 |
| மறிச்சுக்கட்டி | 168 | 745 | 90 | 0 | 6 | 774 | 952 | 1568 | 17863 |
| பாலைக்குளி | 144 | 446 | 58 | 5 | 5 | 2308 | 2008 | 1062 | 10222 |
| பண்டாரவெளி | 151 | 632 | 74 | 3 | 6 | 1413 | 438 | 1220 | 17483 |
| புதுவெளி | 144 | 492 | 83 | 7 | 8 | 2238 | 1116 | 3330 | 25956 |
| த.மு.கட்டு | 100 | 468 | 82 | 3 | 3 | 902 | 169 | 1334 | 11135 |
| மணற்குளம் | 88 | 369 | 64 | 4 | 4 | 828 | 627 | 973 | 14130 |
| கூளாங்குளம் | 86 | 378 | 90 | 5 | 6 | 947 | 557 | 2257 | 13494 |
| பூநொச்சிக்குளம் | 60 | 276 | 77 | 7 | 6 | 952 | 250 | 737 | 16466 |
| பி.வா.குளம் | 48 | 256 | 48 | 5 | 4 | 500 | 314 | 255 | 1366 |
| முசலி | 38 | 175 | 68 | 4 | 6 | 1098 | 73 | 402 | 15486 |
| இலந்தைக்குளம் | 24 | 103 | 100 | 3 | 5 | 344 | 137 | 212 | 10458 |

*(தகவல் : Hasbulla (5) 1997,100)*

## குடிசனத்தொகை விபரம் மன்னார் மாவட்டம் - 1981

| | மொத்தக் குடித்தொகை | பௌத்தர் | இந்து | முஸ்லிம் | றோ.க | கிறிஸ்தவர் | ஏனையோர் | முஸ்லிம்களின் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மன்னார் பட்டின சபை | 14469 | 407 | 3069 | 3494 | 7427 | 68 | 04 | 25 |
| மன்னார் தீவுக் கிராமங்கள் (உ.அ.அ.பிரிவு) | 34642 | 1228 | 7888 | 11023 | 14141 | 262 | 100 | 40 |
| மாந்தை மேற்கு | 23996 | 170 | 10509 | 5110 | 8149 | 48 | 10 | 21 |
| நானாட்டான் | 19916 | 694 | 6368 | 1736 | 10645 | 553 | 20 | 10 |
| முசலி | 13917 | 825 | 666 | 8716 | 3641 | 64 | 05 | 64 |
| மொத்தம் (மன்னார் மாவட்டம்) | 106940 | 3224 | 28500 | 30079 | 44003 | 995 | 139 | 28 |

தகவல்: குடித்தொகை மதிப்பீட்டுப் புள்ளி விபரம் — 1981.

சிலாவத்துறை குடியிருப்பின்
வர்த்தக சேவை நிலையங்கள் பற்றிய விபரங்கள்

| வியாபாரத்தின் தன்மை | தொகை |
|---|---|
| பலசரக்கு மொத்த வியாபாரம் | 02 |
| பலசரக்குக்கடை | 23 |
| தேனீர் கடை | 05 |
| பேக்கரி | 02 |
| தையல் கடை | 02 |
| சிற்றுண்டிச்சாலை | 03 |
| கருவாட்டுக்கடை | 01 |
| மரக்கறிக்கடை | 03 |
| எண்ணெய்க்கடை | 02 |
| பாத்திரக்கடை | 01 |
| ஜவுளிக்கடை | 03 |
| ஆலை | 01 |
| சைக்கிள் உதிரிப்பாகங்கள் | 01 |
| குளிர்பானக்கடை | 01 |
| சைக்கில் பாட்ஸ் | 01 |
| இறைச்சிக்கடை | 01 |
| பழுது பார்த்தல் | 01 |
| மீன் சந்தைப்படுத்தல் | 01 |
| மொத்தம் | 57 |

*(தகவல் : Hasbullah, (5) 1997, 190-191)*

வாழ்வும் வளமும்

முசலிப் பிரதேச முஸ்லிம் கிராமங்கள் பற்றி இப்குதியில் விளக்கப்படுகிறது. 1990 ஆம் ஆண்டு முசலிபிரதேசத்தில் 27 நிரந்தரக் குடியிருப்புக்கள் காணப்பட்டன. அவற்றில் 21 முஸ்லிம் குடியிருப்புக்களாகும். ஏனைய 5 தமிழ்க் குடியிருப்புக்கள், ஒன்று சிங்களக் குடியிருப்பு.

முசலிப்பிரதேச முஸ்லிம் கிராமங்கள் பல தனித்துவமான பண்புகளைக் கொண்டிருந்தன. சிலாவத்துறையைத் தவிர்ந்த ஏனைய அனைத்துக் கிராமங்களும் விவசாய அடிப்படைப் பொருளாதாரத்தைக் கொண் டிருந்தன. நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டன. கிராமக் குளங்களி லிருந்து விவசாயத்திற்கான நீர் பெறப்பட்டது. குளங்களை அண்டிக் கிராமங்கள் அமைந்திருந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் இஸ்லாமிய சூழல் அமைந்திருந்தது. பள்ளிவாசலும் அதனோடு இணைந்த அரபு மத்ரசாக்களும் இருந்தன. இஸ்லாமிய சமய, சலாச்சாரப் பாரம் பரியங்கள் இம்மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருந்தன.

முசலிப் பிரதேச முஸ்லிம் கிராமங்கள் இரண்டு தொகுதிகளாகக் காணப்பட்டன. வடக்கே அகத்தி முறிப்பு நீர்ப்பாசனத் தொகுதியினுள் 18 முஸ்லிம் கிராமங்களும், தெற்கே வியாயடி நீர்ப்பாசனத் தொகுதியினுள் 3 முஸ்லிம் கிராமங்களும் காணப்பட்டன. கிராமங்களுக்கிடையில் குடும்ப உறவுகளும், தமிழ் முஸ்லிம் உறவுகளும் காணப்பட்டன.

**வேப்பங்குளம்**

அருவி ஆற்றைக் கடந்து முசலிப் பிரதேசத்துள் நுளையும் போது முதலில் சந்திப்பது வேப்பம் குளம் ஆகும். இது ஒரு பெரிய கிராமம். முருங்கன்-சிலாவத்தறை பிரதான வீதி இக்கிராமத்தை ஊடறுத்தச் செல்கின்றது. பிரதான வீதியின் இரு மருங்கிலும் வர்த்தகக் கடைகளும். பொதுக்கட்டிடங்களும் அமைந்திருக்கின்றன. ஜும்ஆப் பள்ளிவாசல், அரசாங்கப் பாடசாலை, கூட்டுறவுசங்கத் தலைமை அலுவலகம், கமநல சேவை நிலையம், நெல் சந்தைப்படுத்தும் சபை, களஞ்சியச்சாலை ஆகியன இங்கு அமைந்திருந்தன. இங்கு அமைந்திருந்த பள்ளிவாசலில் 300 பேர்வரை தொழக்கூடிய வசதியிருந்தது. ஏறக்குறைய 300 குடும்பங்கள் அக்கிராமத்தில் வாழ்ந்தார்கள்.

கிராமத்தில் உட்பகுதியில் நீர்ப்பாசனக் குளங்களும் பரந்த வயல் வெளிகளும் காணப்பட்டன. இக்கிராமத்தில் மொத்தத்

தொழிலாளர்களுள் 75 வீதமானவர்கள் விவசாயிகளாவார்கள். இக்கிராம மக்கள் கல்வி கேள்விகளில் ஆரம்ப முதலிலிருந்தே சிறப்புப்பெற்று வந்திருக்கிறார்கள். புலமையில் சிறப்புப் பெற்றிருந்த காதர் உசன் புலவர். அவருடைய மகன் கச்சு முகம்மது புலவர், அவருடைய மகன் அப்துல் அஸீஸ் புலவர் ஆகியோர்கள் இங்கு பிறந்து வளர்ந்தவர்களாவார்கள். மேலும் இவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த மா.மு. நெய்னா புலவர் அவரது மகன் சுலைமான் புலவர் ஆகியோர்களும் அக்கிராமத்தில் வாழ்ந்திருக்கிறார்கள்.

களிகம்பு, கோலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளில் ஈடுபாடு உடையவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். இக்கிராம மக்கள் யானை பிடித்தலிலும் பிரபல்யம் பெற்றவர்களாக இருந்திருக்கிறார்கள்.

1990 ஆம் ஆண்டு பலவந்த வெளியேற்றத்தின் போது அகதிகளாகச் சென்ற வேப்பம்குளம் மக்கள் ஆலங்குடா "C" அகதி முகாமிலும் குருநாகல் மாவட்ட வெல்பந்துவெவ, இகல கினியெம, எலபடகம, ஆகிய கிராமங்களில் வாழ்ந்தார்கள். 1995ஆம் ஆண்டின் பின் புத்தளம் தம்பபண்ணி என்ற அரச காணி முகாமில் குடியேறினார்கள். தங்கள் சொந்த மண்ணில் மீளக்குடியேற வேண்டுமென்ற அவாவோடு அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

### பிச்சை வாணிப நெடுங்குளம்

இக்கிராமம் வேப்பம்குளக் கிராமத்திற்குத் தெற்காக ஒரு மைல் தள்ளி அமைந்திருக்கிறது. இது இயற்கைச் சூழலில் அமைந்த ஒரு அழகான கிராமமாகும். இக் கிராமத்தில் 35 குடும்பங்கள் வாழ்ந்தன. விவசாயம், மிருக வளர்ப்பு, (எருமை வளர்ப்பு) என்பன முக்கிய பொருளாதார நடவடிக்கையாக இக்கிராமத்தில் இருந்து வந்தன. இக்கிராமத்திலிருந்து 50 வீதமான வீடுகள் கல்வீடுகளாகும். இடம் பெயர்ந்து அகதிகளாக உள்ள மக்கள் புத்தளம் முசல்பிட்டியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

## நாலாங்கட்டை

முருங்கன் சிலாவத்துறை பாதையில் தெற்கு நோக்கி நாலாவது மைலில் இக்கிராமம் அமைந்திருந்தது. ஏறக்குறைய 60 குடும்பங்கள் வாழ்ந்திருந்த இக்கிராமம் மேட்டு நிலப்பயிர் செய்கைக்கு ஏற்ற இடமாக இருந்தது. செங்கல் உற்பத்தி, பாயிழைத்தல், போன்ற சிறு கைத்தொழில் நடவடிக்கைகளும் இங்கு காணப்பட்டன. சமயம், கல்வி, சந்தை ஆகிய தேவைகளுக்கு இக்கிராமம் வேப்பம்குளக் கிராமத்தையே நம்பியிருந்தது. இங்கு குடியேறியிருந்த மக்களின் பெரும்பகுதியினர் அம்பாறை மாவட்டத்திலிருந்து வந்து குடியேறியவர்களின் சந்ததிகளாவார்கள்.

## பொற்கேணி

பொற்கேணி என்பது பொன்தரும் களம் எனப்பொருள்படும். முசலிப் பிரதேசத்திலுள்ள மிகப் பெரிய கிராமங்களுள் இதுவும் ஒன்றாகும். அகதிகளாக இக்கிராம மக்கள் இடம் பெயர்ந்து சென்ற சமயத்தில் ஏறக்குறைய 300 குடும்பங்கள் இங்கு வாழ்ந்தார்கள். இக்கிராமம் வேப்பம் குளத்திற்குத் தெற்காக ஒன்றரை மைல் தூரத்தில் அமைந்திருந்தது. இக்கிராமத்தின் வீதியின் இருமருங்கிலும் குடியிருப்புக்கள், பொதுக் கட்டிடங்கள், வர்த்தக நியைங்கள் என்பன காணப்பட்டன.

ஆரம்ப காலப்பகுதியில் பொற்கேணிக் கிராமமே முசலி வடக்கு மக்களின் முக்கிய வியாபாரத்தளமாகக் காணப்பட்டது. ஆங்கிலேய காலத்து அதிகாரமுடைய அரச நிருவாகியாக (உடையார்) முகம்மது காசிம் உடையார் இங்குதான் வாழ்ந்தார்கள். இவரே முசலிப் பகுதியில் பல பள்ளிவாசல்களை நிருமாணித்தவராவார். இவருடைய கடைசி மகனான மீராசாகிபு (சமாதான நீதவான்) என்பவர் 15 வருட காலமாக முசலி வடக்கு கிராமசபைத் தலைவராக இருந்து வந்தார். இவர் தற்போது புளிச்சாக்குளம் அகதி முகாமில் வாழ்ந்து வருகிறார்

பிரதான வீதயின் இருமருங்கிலும் இருந்த பகுதி பெரிய புள்ளச்சி பொற்கேணி ஆகும். இங்கிருந்த வீடுகளுள் அதிகமானவை கல்வீடுகளாக இருந்தன. விவசாயமும், வாணிபமும் இங்கிருந்த மக்களின் பிரதான தொழிலாக இருந்து வந்தது. இக்குடியிருப்புக்குக் கிழக்காகச் சனச் செறிவையுடைய பகுதியிருந்தது. இங்குதான் ஜும்ஆப்பள்ளி அமைந்திருந்தது. இங்கிருந்த மக்கள் விவசாயத்தில் ஈடுபட்ட வந்தார்கள்.

இங்கிருந்து அகதிகளாகச் சென்ற மக்களுள் சிலர் புளிச்சாக்குள அகதி முகாமிலும், புத்தளம் நுரைச்சோலை, பள்ளிவாசல் குடா, ஆலங்குடா ஆகிய பகுதிகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். மீண்டும் தமது தாயக மண்ணில் குடியேற வேண்டும் என்ற ஆவலோடு அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

## அகத்தி முறிப்பு

முசலிப் பிரதேசத்தின் பிரதான நீர்த்தேக்கமாகிய அகத்திமுறிப்பு குளத்தின் தென்மேற்குக் கட்டு ஓரமாக அமைந்திருக்கும் பழமைவாய்ந்த ஒரு கிராமமே அகத்தி முறிப்பு கிராமம் ஆகும். இங்கு ஏறக்குறைய 230 குடும்பங்கள் வாழ்ந்து வந்தார்கள். ஏறக்குறைய 360 ஏக்கர் நிலம் அகத்திமுறிப்பு நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்டு வந்தது. கூளாங்குளம், மணற்குளம், முசலி, வாரிவெளி, சிறுக்குளம், தாண்டிக்குளம், கொண்டச்சி, கொக்குப்படையான், இலக்கிக்குளம், பாசித்தென்றல் ஆகிய குளங்களுக்கும் இக்குளத்தின் மூலமாக நீர்பெறப்பட்டு வந்தது.

நெற்செய்கை, காடுசார்ந்த தொழில், கால்நடை வளர்பு மீன்பிடி ஆகிய பொருளாதார நடவடிக்கைகளில் இக்கிராம மக்கள் ஈடுபட்டு வந்தார்கள்.

வாசிகசாலை. கிராம முன்னேற்றச்சங்கக் கட்டிடம், உரக் களஞ்சியச்சாலை, கூட்டுறவு விற்பனை நிலையம், கனிஷ்ட பாடசாலை என்பன இங்கு காணப்பட்டன.

இக்கிராமத்தின் ஒரு பகுதியில் கத்னா (சுன்னத்) நடத்தும் வைத்தியர்களின் பூர்வீகக் குடியிருப்பு ஒன்று இருந்தது. இப்பகுதி நாசுவ வளவு (நாவிதன் வளவு) என அழைக்கப்பட்டு வந்தது. இவ்வைத்தியர்கள் அனுராதபுரம், வவுனியா மாவட்டங்களில் கத்னா வைத்தியத்தை மேற்கொண்டு வந்தார்கள். அவர்கள் கோலாட்டம், கரப்பந்து போன்ற விளையாட்டுக்களில் ஆர்வமுடையோராய் இருந்தார்கள். இம்மக்களில் அனேகர் 90 ஏக்கர், ஆலங்குடா, பள்ளிவாசல் துறை, மதவாக்குளம் போன்ற இடங்களில் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள்.

## பூநொச்சிக்குளம்

புதுவெளி, சிறுக்குளம், கிராமங்களைச் சேர்ந்தவர்களும், கிழக்கு மாகாணத்திலிருந்து விவசாயத் தொழிலுக்காக வந்த முஸ்லிம்களும் அமைத்த குடியேற்றமே பூநொச்சிகுளம் ஆகும். பலவந்த வெளியேற்றத்தின் போது இக்கிராமத்தில் ஏறக்குறைய 230 குடும்பங்கள் வாழ்ந்தார்கள். மேட்டு நிலப்பயிர்ச்செய்கை, மந்தை வளர்த்தல், சேனைப்பயிர்ச் செய்கை ஆகிய தொழில்களை மேற்கொண்டு வந்தார்கள். செங்கல் உற்பத்தியும் சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இக்கிராம மக்கள் தற்போது கற்பிட்டிக் குடா நாட்டுப் பிரதேச அகதி முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள். சிலர் நுரைச்சோலையிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

## புது வெளி

இக்கிராமத்தின் நீர்ப்பாசனக்குளமும் புது வெளிக்குளம் என்று அழைக்கப்படுகிறது. முக்கியமான முஸ்லிம் கிராமங்களில் இதுவும் ஒன்றாகும். இங்கு ஏறக்குறைய 200 குடும்பங்கள் வாழ்ந்து வந்தார்கள். நெற்செய்கை, கால்நடை வளர்ப்பு, மேட்டு நிலப் பயிர்ச் செய்கை ஆகியன இங்கு மேற்கொள்ளப்பட்டு வந்தன. பலாத்கார வெளியேற்றத்தின் போது 1500 மாடுகளும் 500 ஆடுகளும் இக்கிராம மக்களின் பராமரிப்பின் கீழ் இருந்தன என அறிய முடிகிறது. இக்கிராம மக்கள் சிலாபத்துறையில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்ததோடு

சிலாவத்துறையில் அமைந்திருந்த வியாபார தாபனங்களில் பெரும்பகுதி புதுவெளி மக்களுடையதாக இருந்தது. புதுவெளிக்குத் தெற்காக அமைந்திருந்த பழைய குடியிருப்பில் ஒரு சியாரம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. இக்கிராம மக்கள் தற்போது அகதிகளாக குறிஞ்சிப்பிட்டிப் பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள்.

### கூளாங்குளம்

புதுவெளிக்குத் தெற்காகக் காணப்படும் இக்கிராமத்தில் ஏறக்குறைய 225 குடும்பங்கள் வாழ்ந்தார்கள். 225 ஏக்கர் காணியில் இக்கிராம மக்கள் நெற்செய்கையில் ஈடுபட்டு வந்தார்கள். இங்கு கிடைக்கக் கூடிய தரை நீரைப்பயன்படுத்தி மிளகாய், வெண்டி, கத்தரி போன்ற மேட்டுநிலப் பயிர் செய்கையையும் மேற்கொண்டு வந்தார்கள். மிருக வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. ஏறக்கறைய 1000 மாடுகள் இக்கிராம மக்களுக்கு உரிமையாக இருந்தன. கரையோர மீன் பிடித்தலிலும் இக்கிராம மக்கள் ஈடுபட்டு வந்தார்கள்.

கூளாங்குளத்தில் பிரபல்யம் வாய்ந்த புலவர்களும், வைத்தியர்களும் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களில் ஜமால்தீன் புலவர் குறிப்பிடத் தக்கவர். இவர் முசலிப் பகுதியை உள்ளடக்கிய ஊர்களை வைத்துப் பாடல்கள் இயற்றியுள்ளார். கிராமியப்பாடல், கும்மிப்பாடல் என்ற தலைப்புக்களில் இரு நூல்களை வெளியிட்டு இருக்கிறார். இவ்விரு நூல்களும் கிடைக்கக் கூடியதாக உள்ளன. மௌலானா என அழைக்கப்பட்ட முகம்மது சுல்த்தான் என்பவர் இங்கு வாழ்ந்து மார்க்க அறிவைப் புகட்டி வந்திருக்கிறார். இக்கிராம மக்கள் குறிஞ்சிப்பிட்டியில் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

### தம்பட்ட முசலி

சிலாவத்துறை - மறிச்சுக்கட்டி பிரதான வீதியில் சிலாவத்துறையில் இருந்து அரைமைல் தூரத்தில் கிழக்காக இக்கிராமம் அமைந் திருந்தது. இதன் நுளைவாயிலில் சிலாவத்துறை கமநல சேவை

நிலையமும், மீன்பிடி இலாகா காரியாலயமும் அமைந்திருந்தன. 150 குடும்பங்கள் இங்கு வாழ்த்து வந்தன. இக்கிராம மக்களுக்கு 260 ஏக்கர் நெற்காணி இருந்தது. இக்கிராம மக்கள் நெற்செய்கை, மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, காடு சார்ந்த தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டு வந்தார்கள். இடம்பெயர்ந்து சென்ற போது இக்கிராம மக்களிடம் 2000 ஆடு, மாடுகள் இருந்தன.

இக்கிராமத்தில் கட்புடையாரப்பா என்ற இஸ்லாமிய ஆத்ம ஞானியின் அடக்கஸ்தலம் அமைந்துள்ளது. இது சிலாவத்துறை, மறிச்சுக்கட்டி பிரதான பாதையருகில் உள்ளது. இக்கிராமத்தில் அசீஸ் அண்ணாவி என்பவரும், முகம்மது காசிம் என்னும் புலவரும் முகம்மது அலி சாஹிபு என்ற பிரபல பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகாரரும் பல தசாப்தங்களுக்கு முன்னர் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

இக்கிராமத்தில் 150 பேர் தொழக்கூடிய ஜூம்ஆப்பள்ளிவாசலும், குர்ஆன் மத்ரசாக் கட்டிடமும் காணப்பட்டன. இக்கிராம மக்கள் தற்போது அகதிகளாக ஆலங்குடா, பள்ளிவாசல்துறை, நுரைச்சோலை, கண்டக்குளி ஆகிய இடங்களில் முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள்.

### கொண்டச்சி

முசலி வடக்கு குடிச்செறிவின் தெற்கு எல்லைக் கிராமம் கொண்டச்சிக் கிராமமாகும். இங்கு ஏறக்குறைய 250 குடும்பங்கள் வாழ்ந்தன. இக்கிராமம் அகத்தி முறிப்பு நீர்ப்பாசன வசதியின் மூலம் போதிய நீர் கிடைக்காததன் காரணமாக காட்டு வளம் தேடல், சேனைப்பயிர்ச் செய்கை, மேட்டு நிலப் பயிர்ச்செய்கை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார்கள். மிருக வேட்டையாடுதல் ஒரு தொழிலாகவும், பொழுதுபோக்குத் தொழிலாகவும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வந்தது. அன்றியும் யானை பிடிக்கும் தொழிலிலும் இக்கிராம மக்கள் ஈடுபட்டு வந்தார்கள். கொண்டச்சி பணிக்கர் வழிவந்த குடும்பத்தினர் இதில் ஈடுபட்டு வந்தார்கள்.

கொண்டச்சிக் கிராம மக்கள் மீன்பிடித்தொழிலையும் மேற்கொண்டு

வந்தார்கள். இக்கிராமத்தின் கிழக்காக மரமுந்திரிகை சிங்களக் குடியேற்றம் அமைந்திருந்தது. அன்றியும் வடக்கே கொக்குப்படையான் என்ற சிறு தமிழ்க் கிராமமும் இருந்தது. எனினும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் மத்தியில் ஐக்கியமும், சௌஜன்யமும் நிலவி வந்தது. எனினும் காலகெதியில் கொண்டச்சி மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் அமைக்கப்பட்டு பெருமளவிலான சிங்கள மக்கள் இங்கு குடியமர்த்தப்பட்டதோடு அவர்களுக்குப் பாதுகாப்பாக சிங்கள இராணுவ முகாமொன்றும் அமைக்கப்பட்டது. இக்காரணங்கள் கொண்டச்சி முஸ்லிம்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருந்தன.

### சிலாவத்துறை

முத்துச் சிலாபம் என்று அழைக்கப்பட்டு வந்த சிலாவத்துறை ஒரு மீன்பிடித் துறைமுகமாகவும். பண்டைக்காலத்தில் முத்துக் குளிக்கும் தலமாகவும் இருந்து வந்தது.

இங்கு வர்த்தக நிலையங்களும், வாழ்விடக் குடியிருப்புக்களும். கடலோரங்களில் மீன்பிடி வாடிகளும் மறுபுறம் விவசாயக் குடியிருப்புக்களும் காணப்பட்டன. முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் இங்க வாழ்ந்து வந்தார்கள். தமிழ் மக்கள் கோவிலடியில் செறிந்து வாழ்ந்தார்கள். இவர்களில் பெரும்பாலோர் றோமன் கத்தோலிக்கர் களாவார்கள். சிங்கள மக்கள் சிலாபம், நீர்கொழும்பு போன்ற இடங்களிலிருந்து பருவகால மீன்பிடித்தலில் ஈடுபட இங்கு வருவார்கள். அவர்கள் கடற்கரையோரங்களில் தற்காலிக குடிசைகளில் வாழ்ந்து வந்தார்கள்.

சிலாவத்துறைக் கிராமத்தில் ஏறக்குறைய 180 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தன. அங்கு ஒரு ஜும்ஆப்பள்ளியும் அமைக்கப்பட்டிருந்தது. இங்கு அமைந்திருந்த வர்த்தக சேவை நிலையங்களில் பெரும்பான்மை யானவை முஸ்லிம்களுக்குச் சொந்தமானவையாக இருந்தன. பலர் மீன்பிடித் தொழில் வர்த்தகத்திலும் ஈடுபட்டு வந்தார்கள்.

சிலாவத்தறையில் அரசாங்க பாடசாலை, உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், நூல்நிலையம், வைத்திய சாலை, இராணுவ முகாம் என்பன காணப்பட்டன. முசலிப்பகுதி முஸ்லிம்களின் காதிக்கோடு ஆரம்பகாலந்தொட்டு சிலாவத்துறையிலேயே இயங்கிவந்தது. இக்காதிக்கோட்டின் காதி நீதவனாக புதுவெளியைச் சேர்ந்த சேகு ஜமாலுல்லா என்பவரும் அவருக்குப் பின்பு அவரது சகோதரர் என்.எம். ஹபீபு முகம்மது மரைக்கார் என்பவரும் சேவையாற்றி வந்தார்கள். 1990 ஆம் ஆண்டில் மக்கள் குடிபெயரும் வரை இவரே காதி நீதவானாக கடமையாற்றினார். அகதிகளாக இடம்பெயர்ந்த சிலாவத்துறை மக்கள் நுரைச் சோலை, குறிஞ்சிப்பிட்டி ஆகிய கிராமங்களில் வாழ்ந்து வருகிரார்கள்.

முஸ்லிம்களின் வெளியேற்றத்தின் பின்னரும் முசலிப்பகுதி முஸ்லிம்களின் காதிக் கோடு 1994 வரை புத்தள மாவட்டத்தில் நுரைச் சோலையில் இயங்கி வந்தது. இக்காதி நீதிமன்றத்தின் நீதவானாக கபீபு முகம்மது அவர்களே இருந்திருக்கிறார்.

பண்டாரவெளி

பண்டாரவெளி முசலிப்பிரதேசத்தில் மிகப் பழைய குடியிருப்பாகவும், மிகப் பெரிய கிராமமாகவும் இருந்து வந்திருக்கிறது. இங்கு ஏறக்குறைய 500 குடும்பங்கள் வாழ்ந்திருக்கிறார்கள். இங்கு அமைந்திருந்த ஜும்ஆப்பள்ளிவாசல் 200 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டது என்பதாக அறிய முடிகிறது. 300 பேர்வரை ஒரே நேரத்தில் தொழக் கூடிய வசதியுடையதாக இப்பள்ளிவாசல் விஸ்தரிக்கப்பட்டது. இங்கிருந்த பாடசாலையில் 300 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றார்கள்.

கல்வி, சமயம் ஆகிய வற்றில் முசலிப்பிரதேசத்தில் முக்கியத்துவம் பெற்றுவந்த பண்டாரவெளிக் கிராமத்தில் காட்டுபாவா அதிகாரம், காதர் சாகிபு, அசனா மரைக்கார், சாஹிபுத்தம்பி, மீராலெப்பை, சீட்டப்பா. இஸ்ஹாக் லெப்பை, சிக்கந்தர், பெரிய கலந்தர் ஆகிய பெரியார்கள் வாழ்ந்திருக்கிறார்கள். பலவந்த வெளியேற்றத்தினால்

வீடு வாசல், சொத்துக்களை இழந்து அகதிகளாகச் சென்ற மக்கள் புத்தளம் நுரைச்சோலையில் கொய்யாவாடி என்ற இடத்தில் ஒர் சொந்தக் குடியேற்றத்திட்டத்தை ஏற்படுத்தி வாழ்ந்து வருகிறார்கள். இக்கிராம மக்களின் விடிவுக்காக அயராது உழைத்து வந்த பளூலான் மரைக்கார் என்ற இக்கிராமப் பெரியார் இக்கிராம மக்களால் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டியவராவார்

மணற்குளம்

பண்டாரவெளிக் கிராமத்தில் ஒரு குறுகிய வயல்வெளியால் பிரிக்கப்பட்ட மணற்குளம் என்று அழைக்கப்பட்ட சிறிய கிராமத்தில் 88 குடும்பங்கள் வாழ்ந்தன. சிலம்படி, களிகம்பு, ஆசைக்கவி போன்ற கலாச்சாரப் பண்புகளைக் கொண்டதாக இக்கிராமம் இருந்துவந்தது. இக்கிராம மக்கள் விவசாயிகளாவார்கள். ஏறக்குறைய 200 ஏக்கர் நிலப்பரப்பு நெற்செய்கைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அன்றியும் கோணாங்குளம், கொக்கு மடுக்குளம், கள்ளிக்குளம் போன்ற குளங்களை அண்டிய நெற்செய்கை, மேட்டு நிலப்பயிர்ச்செய்கை என்பன இம்மக்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இக்கிராம மக்கள் தற்போது அகதிகளக நுரைச்சோலை கொய்யா வாடியில் வாழ்ந்து வருகிறார்கள்.

இலந்தைக் குளம்

இக்கிராமம் பண்டாரவெளி வழிவந்த கிராமமாகும். இக்கிராமத்தில் 45 குடும்பங்கள் வாழ்ந்தன. ஏறக்குறைய 150 ஏக்கர் நிலம் இக்கிராமச் சூழலில் விவசாயத்திற்குட்பட்டிருந்தது. கால்நடை வளர்ப்பு, மேட்டுநிலப் பயிர்ச்செய்கை என்பன இக்கிராமத்தில் நடைபெற்று வந்தன. கடலும், அருவியாறும் இக்கிராமத்திற்கு அண்மையில் காணப்பட்டமையால் மீன்பிடித் தொழிலையும் இக்கிராம மக்கள் மேற்கொண்டு வந்தார்கள். இக்கிராமத்தில் ஒர் தைக்காப்பள்ளி இருந்தது. இக்கிராம மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாக நுரைச்சோலை, கொய்யாவாடியில் குடியமர்ந்துள்ளார்கள்.

## மேத்தன்வெளி

மேத்தன்வெளிக் கிராமம் பண்டாரவெளிக் கிராமத்திற்குத் தெற்காக அமைந்திருந்தது. பழமை வாய்ந்த கிராமங்களுள் ஒன்றான மேத்தன் வெளிக் கிராமத்தில் 65 குடும்பங்கள் வாழ்ந்தார்கள். இங்குள்ள மக்களின் தொழில் விவசாயமும், வர்த்தகமுமாக இருந்தது. 160 ஏக்கர் நெற்காணியும் 110 ஏக்கர் மேட்டு நிலக்காணியும் இக் கிராமத்தில் இருந்தது.

1972 முதல் 1990 வரையும் அன்வர் ஹாஜியார் (நெய்னா முகம்மது ஹாஜியார்) இறப்பு, பிறப்பு பதிவாளராகக் கடமை புரிந்து வந்தார். இக்கிராம மக்கள் இடம்பெயர்ந்து நுரைச்சோலை கொய்யா வாடியில் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

## சிறுக்குளம்

இது அளவக்கை சிறுக்குளம் என்று பதியப்பட்டுள்ளது. மேத்தன் வெளிக்குத் தெற்காக இக்கிராமம் அமைந்திருந்தது. இங்கு 65 குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. நெல் விளைச்சல் இம்மக்களின் முக்கிய தொழிலாக இருந்து வந்தது.

இக்கிராமத்தில் அமைந்திருந்த ஜும்ஆப்பள்ளிவாசலை மேத்தன்வெளி, வாரிவெளி பிரதேச முஸ்லிம்களாலும் பாவிக்கப்பட்டு வந்தது. தற்போது முசலிப்பகுதியில் உயிரோடு இருக்கும் பிரபல புலவர் கபீப்புலவர் ஆவார். இவர் தற்போது வயது முதிர்ந்த நிலையில் பள்ளிவாசல் துறையில் வாழ்ந்து வருகிறார்.

## வாரிவெளி

வாரிவெளி ஏறக்குறைய 32 குடும்பங்களைக் கொண்டிருந்த ஓர் சிறிய கிராமமாகும். விவசாயப் பொருளாதாரத்தைக் கொண்டிருந்த இக்கிராமத்தின் கீழ் 180 ஏக்கர் நிலம் விவசாயத்திற்கு உட்படுத்தப்

பட்டு வந்தது. இங்கு மேட்டு நிலப்பயிர்ச் செய்கை, மந்தை வளர்த்தல், மீன்பிடித்தல் ஆகிய தொழில்களும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. முசலியின் மேற்குக் கரையோரமாகக் காணப்பட்ட தென்னந் தோட்டங்கள் பல இவர்களுக்கச் சொந்தமாக இருந்தன.

### முசலி

முசலிப் பிரதேசத்தின் பெயரால் அழைக்கப்பட்டு வந்த கிராமம் இதுவாகும். இது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு முஸ்லிம் கிராமமாகும். முசலிப்பிரதேச ஆரம்ப முஸ்லிம் குடியிருப்புக்களில் இதுவும் ஒன்றாகும். இக்கிராமத்திற்கும் அரேபிய தீபகற்பத்தோடு அண்மைக் காலம் வரை தொடர்பு இருந்ததாக நம்பப்படுகிறது. அரேபிய பரம்பரையில் வந்த ஒருவர் இப்பிரதேசக் கிராம விதானையாக இருந்திருக்கிறார்கள். மற்றொருவர் சட்டத்தரணியாக இருந்திருக்கிறார்.

இக்கிராமத்தில் உயர்வகுப்பு வரையிலான கல்வி வசதியைக் கொண்ட ஒரு மகா வித்தியாலயம் விடுதி வசதிகளோடு அமைந்திருந்தது. முசலிப்பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சியில் இப்பாடசாலையின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். இப்பகுதியில் ஆசிரியராக, அரசாங்க உத்தியோகத்தர்களாக சேவை செய்தவர்களும், தற்போது புத்தளம், கற்பிட்டி, நுரைச்சோலைப் பிரதேசங்களில் அரசாங்க உத்தியோகம் செய்துவருபவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்றவர்களேயாவார்கள். இடம் பெயர்ந்து அகதிகளாகச் சென்ற முசலிக்கிராம மக்கள் தற்போது கண்டக்குளிக் குடியேற்றத்தில் வாழ்ந்து வருகிறார்கள்.

### மறிச்சுக்கட்டி

முசலியின் வியாயடி நீர்ப்பாசனத் தொகுதியில் மறிச்சுக்கட்டி முக்கியமான முஸ்லிம் கிராமமாகும். இங்கு 200 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தன. இவர்களுள் 40 சதவீதமானவர்கள் விவசாய நடவடிக்கைகளிலும், மேட்டு நிலப்பயிர்ச்செய்கை, மந்தை வளர்ப்பு, போன்ற பொருளாதார நடவடிக்கைகைகளில் ஈடுபட்டு வந்தார்கள்.

ஏறக்குறைய 220 ஏக்கர் நிலம் இக்கிராமத்தில் விவசாயத்திற்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளது. யானை பிடித்தல், மிருக வேட்டையாடுதல், தேன் சேர்த்தல், மீன்பிடித்தல் ஆகிய தொழில்களையும் பகுதிநேரத் தொழிலாக இக்கிராம மக்கள் மேற்கொண்டு வந்தார்கள். 30 சத வீதமான மக்கள் மீன்பிடித்தலிலும் 10 சதவீதமான மக்கள் வியாபாரத்திலும் ஈடுபட்டு வந்தார்கள். இக்கிராமத்தில் ஒரு ஜும்ஆப்பள்ளிவாசலும், ஆரம்பப்பாடசாலை யொன்றும் அமைந்திருந்தது.

இக்கிராமம் வில்பத்து சரணாலயத்திற்கு மிக அருகாமையில் அமைந்திருந்தமையால் காட்டு மிருகங்களின் இறைச்சியை மிக இலகுவாகப் பெறக்கூடியதாக இருந்து வந்தது. சடங்கு வைபவங் களின் போது மான், மரை இறைச்சிகள் தான் இங்கு பரிமாறப்பட்டு வந்தது. தமது தேவைகளுக்குப் போக எஞ்சிய இறைச்சியை வத்தல் செய்து அவற்றை விற்பனைசெய்தும் வந்தார்கள்.

1988 ஆம் ஆண்டுக்குப் பின் புத்தளம் - மன்னார் பாதை திறக்கப்பட்ட பின்பு மன்னார் மாவட்ட மக்கள் இப்பாதையினூடாக புத்தளம் சென்று வந்தார்கள். இதன் காரணமாக மறிச்சுக்கட்டிக் கிராமம் பிரபல்ய மடைந்தது. புலிகளால் வெளியேற்றப்பட்ட மக்கள் இப்பாதையினூடாக புத்தளத்தையடைந்தனர். இவர்கள் தற்போது அகதிகளாக திகழி, ஏத்தாளை, பள்ளிவாசல்துறை, பூலாச்சேனை, கண்டக்குடா போன்ற இடங்களில் அமைந்துள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள்.

**பாலைக்குளி**

பாலைக்குளிக் கிராமம் மறிச்சுக்கட்டிக் கிராமத்திலிருந்து கிழக்காக முக்கால் மைல் தூரத்தில் அமைந்திருந்தது. பழைய முஸ்லிம் குடியிருப்புக்களில் இக்கிராமமும் ஒன்றாகும். வியாயடி நீர்ப்பாசனக் கால்வாய் மூலமாக இக்கிராமம் நீரைப் பெற்று வந்தது. 218 ஏக்கர் நிலம் நெல் விளைச்சலில் ஈடுபடுத்தப்பட்டு வந்தது. சேனைப் பயிர்ச்செய்கை, மந்தை வளர்த்தல், யானைபிடித்தல், காட்டு வளம் சேகரித்தல் ஆகிய தொழில்களையும் இக்கிராம மக்கள் மேற்

கொண்டு வந்தார்கள்.

145 குடும்பங்கள் வாழ்திருந்த இக்கிராமத்தில் ஓர் ஜும்ஆப்பள்ளி அமைந்திருந்தது. இக்கிராம மக்கள் தற்போது வட்டக்கண்டல் முஜாஹிதீன் புரம் அகதி முகாமில் வாழ்ந்து வருகிறார்கள்.

### கரடிக்குளி

வியாயடி நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் கரடிக்குளிக் கிராமம் அமைந்திருந்தது. இங்கு 190 குடும்பங்கள் வாழ்தார்கள். கரடிக்குளி, மறிச்சுக்கட்டிக் கிராமத்திலிருந்து 2 மைல் வடக்கே இக்கிராமம் அமைந்திருந்தது. இம்மக்களின் முக்கிய தொழில் விவசாயமாகும். 85 ஏக்கர் நெற்செய் நிலத்தோடு மோட்டய குளம், வண்ணாமோட்டை, சுண்டிக்குளி, பால் குளம் போன்ற குளங்களை அடுத்துள்ள காணிகளிலும் நெற்செய்கையை இக்கிராம மக்கள் மேற்கொண்டு வந்தார்கள். மேலும் சேனைப்பயிர்ச் செய்கை, மேட்டு நிலப்பயிர்ச் செய்கையையும் மேற்கொண்டு வந்ததோடு யானை பிடித்தல், மிருக வேட்டையாடுதல் போன்ற பகுதி நேரத் தொழில்களிலும் ஈடுபட்டு வந்தார்கள்.

வட மாகாணத்திலேயே தௌஹீத் ஜமாஅத் என்னும் இயக்கம் முதன் முதலில் இக்கிராமத்தில்தான் உருவானது. இவ் ஜமாஅத்தின் மூத்த தலைவர்களில் ஒருவராக அல்ஹாஜ் சாகுல் ஹமீது மௌலவி இருந்தார். இக்கிராம மக்கள் இந்த ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்து வந்தார்கள்.

இடம்பெயர்ந்து புத்தள மாவட்டத்திற்குச் சென்ற கரடிக்குளிக் கிராம மக்கள் கற்பிட்டி, வேப்பமடு, றஹ்மத் நகர் போன்ற இடங்களிலுள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வருகிறார்கள்.

# மாந்தை – நானாட்டான் பிரதேசம்

**– எம். கே. எச். முஹம்மது –**

***அறிமுகம்***

'மாந்தை'. 'நானாட்டான்' ஆகியவை மன்னார் மாவட்டத்தின் இரண்டு நிர்வாகப் பிரதேசங்களைக் குறித்துக் காட்டும் பெயர்களாகும். காலனித்துவக் காலத்திலிருந்து இவ்விரு பிரதேசங்களும் தனித்துவமான பிரதேசங்களாக நிருவகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. (Administrative Reports of various years)

இவ்விரு பிரதேசங்களும் நிர்வாக ரீதியாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் இவை ஒரே நிலத் தொடர்பை கொண்டவையாகும். மன்னார் மாவட்டத்தின் ஆகக் கூடுதலான நிலப்பரப்பைக் கொண்ட இவ்விரண்டு பிரதேசங்களும் இம்மாவட்டத்தின் பிரதான நிலத்திணிவின் கிழக்கு எல்லையாக அமைந்துள்ளன.

பரப்பளவில் நானாட்டான் பிரதேசத்தை விட மாந்தைப் பிரதேசம் பெரியது. இவ்விரு பிரதேசங்களும் கூட்டாக 1290 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டவை. மன்னார் மாவட்டத்தின் மொத்தப்பரப்பில் 65 சதவீத நிலப்பரப்பை இவை உள்ளடக்குகின்றன. தரைத் தோற்றம், காலநிலை, மண்வளம், பொருளாதார நடவடிக்கைகள், குடிசனப்பரம்பல் போன்ற அம்சங்களில் இவ்விரு பிரதேசங்களிலும் பொதுத் தன்மைகள் காணப்படுகின்றன. அன்றியும் இப்பிரதேசத்திற்குள் வாழ்ந்த முஸ்லிம்களின் பொருளாதார, கலாச்சார

அம்சங்களிலும் பல பொதுத் தன்மைகளை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக இப்பிரதேசத்தில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக இருந்து வந்ததோடு புவியியல் தொடர்பற்ற குடியிருப்புக்களிலும் இவர்கள் வாழ்ந்து வந்துள்ளமையுமாகும். முஸ்லிம்களின் இத்தகைய குடிப்பரம்பல் தன்மை சமய. இன, அபிவிருத்தி நோக்கில் சில சாதகமற்ற அம்சங்களையும், பல சிறப்புப் பண்புகளையும் கொண்டிருந்தமையை அவதானிக்க முடிகிறது.

## *புவியியலும் பொருளாதாரமும்.*

மாந்தை, நானாட்டான் ஆகிய பிரதேசங்கள் இலங்கையின் வடமேற் பகுதியில் அமைந்துள்ளன. வரண்ட வலயத்திற்குட்பட்ட இப்பிரதேசங்களின் மொத்த மழை வீழ்ச்சி >1250 m.m ஆகவும், சராசரி வெப்பம் <27.8 C ஆகவும் அதிகூடிய சரீரப்பதனை கொண்ட காநிலைத் தன்மையுடையதாகவும், ஒப்பமான சமதரையான நிலத்தோற்றத்தையுடையனவாகவும் இப்பிரதேசம் அமைந்துள்ளது. குறைவான வருடாந்த மழை வீழ்ச்சியும் உயர்வான வெப்ப நிலையும் கொண்ட இப்பிரதேசத்தின் நெற்செய்கை நடவடிக்கைகளுக்கு ஏற்ற காலநிலை அம்சங்கள் அல்ல, எனினும் மழை காலங்களில் கிடைக்கப்பெறும் நீரை, நீர்த்தேக்கங்களில் தேக்கி வைத்து நெற்செய்கையை மேற்கொள்ளும் வழக்கம் இப்பிரதேசத்தில் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது.

இன்நோக்கத்திற்காக நம் முன்னோர்களும் சிங்கள மன்னர்களும் சிறிய, பெரிய குளங்களை உருவாக்கி நெற்செய்கையை மேற்கொண்டார்கள். இப்பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் ஆறுகள் பலவற்றிலிருந்து நீர்ப்பாசனக் குளங்களுக்குத் தேவையான நீரைப் பெறுகின்ற வழமை இங்கு காணப்பட்டது. இம்முயற்சிகளில் முக்கியமானதொன்றாக கி.பி 4ம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக நம்பப்படும் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டுக்கரைக் குளத்தைக் குறிப்பிடலாம். (De Silva,1981) இக்குளம் 4550 ஏக்கர் மொத்த நீர்த்தாங்கு பரப்பைக் கொண்டது. இப்பிரதேசத்தில் கிடைக்கப்பெறும் பருவகால மழைநீரைச் சேகரித்து வைக்கக்கூடிய பெரிய குளமாகவும்

இது உள்ளது. அன்றியும் இலங்கையின் நீண்ட நதிகளில் ஒன்றான அருவியாற்றோடு இக்குளம் கால்வாய்கள் மூலமாக இணைக்கப் பட்டுள்ளது. கட்டுக்கரைக் குளத்தில் சேகரிக்கப்படும் நீர் திட்டமிட்ட பிரகாரம் கால்வாய்கள் மூலமாக அதன் கீழ் உள்ள சிறிய, சிறிய குளங்களுக்கு நீரை வழங்கி வருகின்றது. இந்நீரைப் பயன்படுத்தி காலபோகத்திலும் (ஜனவரி, பெப்ரவரி, மாதங்கள்) சிறு போகத்திலும் (ஏப்ரல், மே மாதங்கள்) நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பிரதேசத்தின் மற்றொரு பொருளாதார அம்சம் கடல்வளப் பொருளாதார நடவடிக்கையாகும். இப்பிரதேசத்தின் மேற்கு எல்லையாக அமைந்திருக்கும் கடல் ஏறக்குறைய 30 கிலோ மீற்றர் கடற்கரையை உடையது. அன்றியும் இப்பிரதேசம் சார்ந்த கடல் ஆளம் குறைந்ததாகவும் உள்ளது. அதனால் இப்பிரதேசத்தின் கரையோரத்தில் வாழ்ந்திருந்த மக்கள் கரையோர மீன்பிடியோடு, ஆழ்கடல் மீன்பிடியையும் முழு நேரத் தொழிலாக மேற்கொண்டு வந்தனர். நவம்பர், டிசம்பர் மாதங்களில் சங்கு குளித்தல், கடலட்டை எடுத்தல் (டிசம்பர், ஜனவரி மாதங்கள்) போன்ற கடல் பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தனர்.

எனினும் இப்பிரதேசத்தை ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடும்போது மன்னார் பெரும்பாக நிருவாக மாவட்டம் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாவட்டமாகவே இருந்து வந்திருக்கிறது. இதற்குக் காரணம் அரசியல் புறக்கணிப்பாகும். சிறுபான்மை மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இப்பிரதேசம் சுதந்திரத்துக்குப் பின்னரும் பொருளாதாரப் புறக்கணிப்புக்கு உட்பட்டே வந்திருக்கின்றது எனலாம்.

### குடிசனம்

1981ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பீட்டின்படி மன்னார் மாவட்டத்தின் மொத்தக் குடித்தொகையில் 41 சதவீதம் இப்பிரதேசத்தில் உள்ளது. 43,782 பேர் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்களாகும். இந்துக்கள், றோமன் கத்தோலிக்கர், முஸ்லிம்கள் ஆகியோர் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த மக்களாகும். இவர்களுள் 16 சதவீதத்தினர் முஸ்லிம்கள்.

எஞ்சியோர் ஏனையோர். இவர்கள் குடித்தொகையில் ஏறக்குறைய சமனாகும். இப்பிரதேசத்தின் வடபகுதியில் இந்துக்களும், தென்பகுதியில் கத்தோலிக்கர்களும் வாழ்ந்தார்கள்.

இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த முஸ்லிம்களின் குடியிருப்புக்கள் புவியியல் தொடர்பற்று தனித்தனி கிராமங்களில் அவர்கள் வாழ்ந்து வந்தனர். வடபகுதியில் வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் இந்துக்களோடும், தென்பகுதியில் வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் கிறீஸ்தவர்களுடனும் கலந்து வாழ்திருந்தார்கள். இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த இந்து, கிறீஸ்தவ மக்கள் பேசிய தமிழையே முஸ்லிம்களும் பேசி வந்திருந்தாலும் இன ரீதியாக தாம் தமிழில் பேசும் சமூகத்தவர்களை விட தனித்துவமானவர்கள் என்று தம்மை அடையாளப்படுத்தி வந்தார்கள். இம்முஸ்லிம்கள் தம்மைச் சோனகர் (Moors) என்ற இனப் பெயரைக் கொண்டு அழைத்து வந்தார்கள். முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்து வந்த பிரதேசங்கள் முஸ்லிம் கிராமங்கள் என அழைக்கப்படடன. இக்கிராமங்களில் இஸ்லாமிய சமயத்தோடு சம்பந்தப்பட்ட பள்ளிவாயில்கள், அரபு மத்ரசாக்கள், பாடசாலைகள் போன்ற பல சமய நிலையங்கள் காணப்பட்டன. இந்நிலையங்கள் அக்குடியிருப்பில் வாழ்ந்த இஸ்லாமியர்களின் சமய. கலாசார அபிவிருத்திக்குக் காரணமாய் அமைந்தன. திருமணங்கள், சமய விழாக்கள், சடங்குகள் போன்றன இஸ்லாத்தின் வட்டத்திற்குள் அமைந்தன. இதனால் ஒவ்வொரு கிராமிய சமுதாயமும் தம்மை இஸ்லாமிய தனித்துவத்தைப்பேணும் சமுதாயமாக ஆக்கிக் கொண்டது.

*வரலாறு*

வெளிநாடுகளில் முதன்முதலாக அறியப்பட்ட இலங்கைப் பிரதேசம் மன்னார் ஆகும். மாந்தைப் பிரதேசத்தில் அமைந்திருந்த மாந்தைத் துறைமுகம் பல்லாண்டு காலமாக முதன்மைபெற்று வந்ததே இதற்குக் காரணமாகும். அன்றியும் இப்பிரதேசம் வர்த்தக .மையமாகவும் காணப்பட்டது.

செனவிரட்ன என்ற வரலாற்று ஆசிரியர் மாந்தையின் முக்கியத் துவத்தை பற்றிக் குறிப்பிடும் போது "மாந்தை இன்று ஒரு கைவிடப் பட்ட நகரமாகக் காணப்படலாம். ஆனால் ஆயிரக்கணக்கான வருடங் களாக உலகின் பல்வேறு பிரதேச மக்கள் வந்து சென்ற பிரதேசமாக இது காணப்பட்டது. இப்பிரதேசம் வரலாற்றுக் காலத்தில் உலகின் வர்த்தக மையங்களுள் ஒன்றாகக் காணப்பட்டது என்பதற்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன" எனக் கூறியுள்ளார். (Senaviratna, 1979)

இந்நிலப்பரப்பின் மற்றொரு வரலாற்றுச் சிறப்பம்சம் இப்பிரதேசத்தின் பின்னணியில் அமைந்திருக்கும் கட்டுக்கரைக் குளமாகும். இக்குளம் தாதுசேன மன்னனால் கி.பி 457-477 காலத்தில் கட்டப்பட்டதென நம்பப்படுகிறது. (De Silva – 1981). இக்குளம் யோத வெவ (Giant's Tank) என்று சிங்கள நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்குளம் இப்பிரதேசத்தின் விவசாய நடவடிக்கைகளுக்குப் பேருதவி புரிந்து வருகிறது.

மாந்தைப் பிரதேசத்தின் வரலாற்றுச் சிறப்புக்களுள் மற்றொரு காரணம் திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள இந்துக் கோவிலாகும். இது வரலாற்றுக் காலத்திலிருந்தே இந்துக்களின் புனித தலமாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறது. (Sithambalam, 1992) அன்றியும் இக்கோவில் புகழ் பெற்ற தலங்களுள் ஒன்றாகும்.

*முஸ்லிம்களின் வரலாறு*

மாந்தையின் வரலாற்றுப் பெருமையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய மூவின மக்களுக்கும் பங்குண்டு. இப்பிரதேசத்தின் வர்த்தக, விவசாய, பொருளாதாரச் சிறப்புக்கள் தமிழ், சிங்கள மன்னர்களை இப்பிரதேசத்தின் ஆதிக்கத்தில் அக்கறை செலுத்த வைத்தது. தமிழ் பேசும் மக்கள் இப்பிரதேசத்தின் பாரம்பரிய குடிகளாகக் கொள்ளப்பட்டாலும், சிங்கள மொழியும், கலாச்சாரத் தொடர்புகளும் வரலாற்றுக் காலத்தில் இப்பிரதேசத்தில் இருந் திருக்கின்றன என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

இப்பிரதேசத்துடனான முஸ்லிம்களின் தொடர்பு நீண்ட வரலாற்றை யுடையது. சில சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் படையெடுப்பாளர்களாக அறியப்பட்டிருந்தாலும் (Mudaliyar, 1930) எஞ்சிய காலமெல்லாம் இவர்கள் வர்த்தகர்களாக, முத்து, சங்கு ஆகிய கடல் திரவியங் களோடு தொடர்புடைய தொழில்களில் ஈடுபட்டவர்களாக இப் பிரதேசத்தில் தம்மை இணைத்துக் கொண்டார்கள். அண்மைக்கால தொல்பொருள் ஆய்வுச் சான்றுகளின்படி மாந்தையின் வரலாற்றுக்கால மகாதிட்ட (மாதோட்டம்) துறை முகமானது பாரசீகக் குடா துறைமுகங்களுடன் வர்த்தக ரீதியாக மிகவும் சிறந்த முறையில் இணைக்கப்பட்டிருந்தது". (Kinibamune, 1986)

அராபிய முஸ்லிம்கள் வர்த்தகர்களாக மாந்தைத் துறைமுகத்துடன் மிக நீண்ட காலமாகத் தொடர்பு வைத்திருந்தார்கள் என்று வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. செனவிரட்ன என்ற வரலாற்று ஆசிரியர் மாந்தையுடனான முஸ்லிம்களின் வரலாற்றுக்கால வர்த்தகத் தொடர்புகளைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "மாதோட்ட துறைமுக நகரத்தில் இஸ்லாமிய சமயத்தைத் தழுவிய அராபிய முஸ்லிம்களின் சந்ததியினர் மிக நீண்ட காலமாக வாழ்ந்தார்கள். இவர்களின் வீடுகள் டமஸ்கஸ், பக்தாத் ஆகிய நகரங்களில் காணப்பட்ட வீடுகளுக்கு ஒப்பான கட்டிடக்கலையைக் கொண்டவையாகக் காணப்பட்டன. இவர்கள் மிகவும் வசதியான வர்த்தகர்களாக இருந்தார்கள். இவர்களின் வீடுகள் மாடி அமைப்பினையும், கூரைகள் தட்டையானதாகவும், காற்றோட்டம் கொண்ட உப்பரிக்கைகளைக் கொண்டவையாகவும் இருந்தன."
>
> (Seneviratne, 1979)

முஸ்லிம் வர்த்தகர்கள் மாதோட்டத் துறைமுகத்தினையும் (மாந்தை) அதன் சூழவுள்ள பிரதேசத்தையும் தமது உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைக்குப் பயன்படுத்தினார்கள். இந்து சமுத்திரத்தினூடாக வர்த்தகத்தில் அராபிய முஸ்லிம்கள் முன்னணி வகித்த 12 - 15 ஆம் நூற்றாண்டு காலத்தில் இப்பிரதேசத்துடனான முஸ்லிம்களின்

தொடர்பு பன்மடங்காகப் பெருகியது. சேர் அலக்சாந்தர் ஜோன்சனின் கருத்துப்படி இக்கால கட்ட மன்னார் பிரதேசம் முஸ்லிம்களின் வர்த்தக மையமாகவும் (Emporium of Trade) காணப்பட்டது. (John Ston, 1827). மாதோட்டத் துறைமுகம் இவர்களின் கப்பல் இறங்கு துறையாகவும், வர்த்தகப் பண்டகசாலையாகவும் காணப்பட்டது. முஸ்லிம்களால் இலங்கையின் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் ஓங்கி வளர்ந்தது. அதன் காரணமாக இலங்கையை ஆட்சி செய்த சிங்கள மன்னர்களும் அரேபிய முஸ்லிம்களைப் பெரிதும் விரும்பியதோடு, அவர்களை ஆதரித்தும் வந்தார்கள்.

முஸ்லிம்கள் வரலாற்றுக்காலந் தொடக்கம் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தோடு மட்டுமல்லாமல் முத்துக்குளித்தல், சங்கு எடுத்தல் போன்ற நடவடிக்கைகளுடன் தொடர்பு பட்டவர்களாகக் காணப் பட்டார்கள். முஸ்லிம்கள் மன்னாரின் தெற்குக் கரையோரமாக அமைந்திருந்த முத்துச் சிலாபப்பகுதியில் முத்துக்குளித்தல் நடவடிக்கைகளில் சுழியோடிகளாகவும், படகோட்டிகளாகவும், வர்த்தகர்களாகவும், தம்மை ஈடுபடுத்தியிருக்கிறார்கள். (Van, 1888 and Steuart, 1843). இதே போன்ற நடவடிக்கைகளில் மன்னார் வடபுறமான மாந்தைப் பிரதேசத்திலும் முஸ்லிம்கள் ஈடுபட்டார்கள். இப்பிரதேசக் கடல் வலயத்தில் முஸ்லிம்களின் வரலாற்றுக்கால ஈடுபாடு சங்கு குளித்தலாகக் காணப்பட்டது. உலகில் மிக முக்கியமான சங்கு, சிப்பிகளின் இருப்பிடமாக மாந்தைப் பிரதேசம் சார்ந்த கடல் வலயம் காணப்பட்டது. இப்பிரதேசத்தின் சங்கு தொழில் பற்றி துவினன் என்ற வரலாற்று ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"மன்னாரின் வட பிரதேசம் சங்கு குளிப்பதற்கு மிகவும் பிரபல்யமாகக் காணப்பட்டது. அராபியாவில் இருந்தும், கீழைக்கரையில் இருந்தும் வந்த முகம்மதிய சுழியோடிகள் இத்தொழிலில் மிகக் கூடுதலாக ஈடுபட்டனர். பின்னர் இப்பிரதேசத்தில் இவர்கள் குடியேறினார்கள்".
(Twynan, 1902)

மேற்கூறிய சில வரலாற்று ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது முஸ்லிம்கள் மாந்தைப் பிரதேசத்துடன் மிக நீண்ட காலத் தொடர்பு கொண்டவர்களாகவும், இப்பிரதேசத்தின் வரலாற்

றோடு பின்னிப் பிணைந்தவர்களாகவும் இருந்தார்கள் என்று அறியக்கூடியதாகவுள்ளது.

போத்துக்கேய, ஒல்லாந்து காலனித்துவ ஆட்சியாளர்களின் காலத்தில் இப்பிரதேசத்துடனான முஸ்லிம்களின் தொடர்பு வெகுவாகக் குறையத் தொடங்கியது. போத்துக்கேய, ஒல்லாந்த காலனித்துவ ஆட்சி யாளர்கள் முஸ்லிம்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை களை எடுத்தனர். அவர்களின் வர்த்தக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தினர். அவர்களின் சமய, கலாச்சார வளர்ச்சிக்குப் பாதகமாக இருந்தனர். காலனித்துவ ஆட்சியாளர்களினால் முஸ்லிம்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் முஸ்லிம்களை இப்பிரதேசத்தின். கரையோரங்களிலிருந்து உள்நாடு நோக்கி இடம் பெயரச் செய்தது.

எனினும் மன்னார் கரையோரம் சார்ந்த பிரதேசங்களில் முஸ்லிம்களின் வரலாற்றுத் தொடர்ச்சி எல்லாக் காலங்களிலும் காணப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. முஸ்லிம்களைத் தமது வர்த்தக எதிரியாகக் கொண்ட போத்துக்கேய, ஒல்லாந்த ஆட்சிக்காலத்திலும் கூட மன்னார் பிரதேச கரையோர வலயங்களில் முஸ்லிம்கள் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்தமைக்குப் போத்துக்கேய, ஒல்லாந்த அறிக்கைகளிலே சான்றுகளைப் பெறக் கூடியதாகவுள்ளது. ஒல்லாந்தர் கால அறிக்கையின் படி மன்னார் பிரதேச குடியிருப்புக் களில் வாழ்ந்த முஸ்லிம்கள் காலனித்துவ ஆட்சியாளரினால் முத்துக் குளித்தலிலும், சங்கு குளித்தலிலும் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்பதற்கான குறிப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. (The Duch Record of the Ceylon Government 1972)

1715 ஆம் ஆண்டின் ஒல்லாந்தர் ஆட்சிக்கால நிர்வாக அறிக்கையில் முஸ்லிம் முத்துக் குளிப்பாளர்களைத் தாங்கள் தவிர்க்க முடியாமல் தொழிலுக்கு வைத்திருக்க வேண்டிய நிலை இருப்பதாகவும், இவர்கள் முரண்பாடான சமய நம்பிக்கை உடையோராக இருந்தமையால் இவர்கள் மீது கடுமையான தலைவரிகளைத் தாம் விதித்திருப் பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மன்னார் முஸ்லிம்கள் அக்காலத்தில் முத்துக் குளித்தல், சங்கு குளித்தல் நடவடிக்கைகளில் தேர்ச்சி

உடையவர்களாக இருந்தமையும், காலனித்துவ ஆட்சியாளர்கள் முத்துக் குளிப்புக்குப் பிரபல்யமான மன்னார் குடாவின் பொருளாதாரத்தில் தங்கியிருந்தமையுமே அதற்குக் காரணமாகும்.

மேற்குறித்த ஆதாரங்கள் எமக்கு மன்னார் மாவட்டத்திலும், மாந்தைப் பிரதேசத்திலும் முஸ்லிம்களது வரலாற்றுத் தொடர்ச்சி தங்கு தடையற்றுக் காணப்பட்டது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

எனினும் 16ம், 17ம் நூற்றாண்டு கால இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை அறிய முடியாதுள்ளது. ஏனெனில் முஸ்லிம்களின் வரலாற்றைக் கூறும் நூல்கள் இல்லாமையும், முஸ்லிம்கள் பற்றிய விபரங்களை எல்லாம் போத்துக்கீச, ஒல்லாந்து ஆட்சியாளர்களினால் அழித்தொழிக்கப்பட்டமையும் ஆகும். (Abeyasinghe, 1986)

*அண்மைக் கால குடிசன மாற்றங்கள்*

பிரித்தானிய கால மாந்தை – நானாட்டான் பிரதேசக் குடிசன வரலாற்றை அறிந்துகொள்ளக்கூடிய ஒரு முக்கியமான ஆவணம் Denham என்பவரால் எழுதப்பட்ட Mannar Geseteer என்ற நூலாகும். அவர் கூறுகின்ற படி மன்னார் மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவு முஸ்லிம் செறிவைக் கொண்ட 29 குடியிருப்புக்கள் காணப்பட்டன. இதில் 11 செரிவுகள் மாந்தை – நானாட்டான் பிரதேசத்தில் காணப்பட்டன. அவற்றுள் மாந்தை – நானாட்டானின் முக்கியமாக முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்து வந்த விடத்தல்தீவு, விளாங்குளி, வட்டக்கண்டல் ஆகிய கிராமங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

காலனித்துவக் காலத்தில் கரையோரப் பிரதேசங்களில் இருந்த முஸ்லிம்கள் வேலையில்லாப் பிரச்சினை காரணமாக புதிய பொருளாதார வாய்ப்புக்காக உள்நாடு நோக்கி இடம் பெயர்ந்தனர். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் விவசாயத்தை முக்கிய தொழிலாக மேற்கொண்டார்கள். மேலும் இயற்கை அனர்த்தங்கள், காலநிலைப் பாதிப்பு ஆகிய காரணங்களாலும் முஸ்லிம்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். உதாரணமாக பெரும் புயலால் பாதிக்கப்பட்ட விளாங்குளி முஸ்லிம்கள் மினுக்கனில் குடியேறினார்கள்.

வேட்டைமுறிப்பு, பொக்கர் வன்னி, சிராட்டி குளம் போன்ற பழைய முஸ்லிம் குடியிருப்புக்களில் வாழ்ந்த மக்கள் காலநிலை சீர்கேட்டினால் அவ்விடங்களைக் கைவிட்டு வேறு இடங்களில் தமது வாழ்க்கையை புதிய குடியேற்றம் மூலம் ஆரம்பித்தார்கள். இவ்வாறு தனியான கிராமங்ளில் முஸ்லிம்கள் தமது குடியேற்றத்தை அமைத்துக் கொண்டாலும் சமய, சமூக, கலாச்சார வளர்ச்சிகள் தங்கு தடையின்றி நடைபெற்று வந்துள்ளமையைக் காணமுடிகிறது. இப்பிரதேச முஸ்லிம்களின் சமய, கலாசார வளர்ச்சிக்கு இப்பிரதேசத் திற்கு அப்பால் காணப்பட்ட மன்னார் தீவு, முசலி, யாழ்ப்பாணம், வவுனியா, பிரதேச முஸ்லிம் செறிவுடனான தொடர்புகளும் மேலும் வளமூட்டுபவையாக அமைந்திருந்தன.

இவ்வாறு முஸ்லிம்கள் தமது தனித்துவமான கலாச்சாரப் பண்பாடுகளைப் பேணி வாழ்ந்து வந்த போதிலும் அக்கிராமங்களின் அயலில் வாழ்ந்திருந்த இந்து, கிரீஸ்தவ சமய மக்களிடமும் இணக்கமாகவும், அன்னியோன்னியமாகவும் வாழ்ந்து வந்தார்கள். இம்மக்களின் பலதரப்பட்ட சமய சடங்குகளில் முஸ்லிம்கள் பங்குபற்றி வந்தார்கள். அதே போன்று முஸ்லிம்களின் சமய சடங்குகளிலும் இந்து, கிறீஸ்தவ சமய மக்கள் பங்கு கொண்டு ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள்.

மாந்தை - நானாட்டான் பிரதேசத்தில் முஸ்லிம்களின் வரலாற்றுத் தொடர்ச்சியை உறுதிப்படுத்தும் மற்றொரு புள்ளிவிபரத் தகவல் 1921ஆம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கெடுப்பாகும். அக்காலத்தில் இப்பிரதேசத்தில் 8 உடையார் பிரிவுகள் காணப்பட்டன. இவ் 8 உடையார் பிரிவுகளிலும் முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள். இப்பிரதேசத்தின் மொத்த சனத்தொகையின் 14 சதவீதம் முஸ்லிம்கள் ஆவர். அதிலும் குறிப்பாக பெருங்களிப்பற்று, மேற்கு முனை ஆகிய உடையார் பிரிவுகளில் முஸ்லிம்களின் விகிதாசாரம் 40 இற்கும் அதிகமாக உள்ளதை 1921ஆம் ஆண்டுப் புள்ளிவிபரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

கிராம மட்டத்திலான மேற்குறித்த 1921ஆம் ஆண்டு குடிசன விபரங்கள் 1980ஆம் ஆண்டு கால குடிசனப்பரம்பல் அமைப்புக்கு

ஒப்பாகக் காணப்படுகின்றன என்பதை அண்மைக் கால குடிசனப்புள்ளி விபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. (Department of Census and Statistic, 1986.)

அட்டவணை - 1

சமய ரீதியாக மாந்தை - நானாட்டான் பிரதேசக் குடிசனம் - 1981

| சமயம் | மொத்தம் | வீதம் |
|---|---|---|
| பௌத்தம் | 664 | 1 |
| இந்து | 16,877 | 39 |
| முஸ்லிம் | 6846 | 16 |
| கிறீஸ்தவம் | 601 | 1 |
| றோ.கத்தோலிக்கம் | 18,794 | 43 |
| *மொத்தம்* | 43,782 | 100 |

மூலம் : குடிசனக் கணிப்பீடு (1981)

அட்டவணை - 2

1921ஆம் ஆண்டு உடையார் பிரிவு மட்டத்தில் மாந்தை தொடக்கம் நானாட்டான் முஸ்லிம் சனத்தொகை

| உடையார் விரிவு | மொத்த சனத்தொகை | முஸ்லிம் சனத்தொகை | மொத்த சனத்தொகையில் முஸ்லிம்களின் வீதம் |
|---|---|---|---|
| மாந்தை வடக்கு | 2111 | 297 | 14% |
| மாந்தை தெற்கு | 2139 | 80 | 04% |
| பெருங்கள்ளிப்பற்று | 1444 | 670 | 46% |
| மேற்குமுனை | 381 | 154 | 40% |
| இலுப்பக்கடவை | 952 | 69 | 07% |
| பனங்காமம் | 375 | 02 | 01% |
| நானாட்டான் மேற்கு | 3019 | 319 | 11% |
| நானாட்டான் கிழக்கு | 1711 | 134 | 08% |
| *மொத்தம்* | 12,132 | 1725 | 14% |

மூலம் : 1921ஆம் ஆண்டு குடிசனக் கணிப்பீடு

மாந்தை தொடக்கம் நானாட்டான் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் 1990ஆம் ஆண்டு ஒக்கோபர் 25ம் திகதி தமது தாயக மண்ணில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்படுவதற்கு முன்னர் மாந்தைப் பிரதேசத்தில் விடத்தல் தீவு, பெரியமடு, விளாங்குளி, மினுக்கன், வட்டக்கண்டல், ஆண்டான் குளம், பள்ளிவாசல் பிட்டி, சொர்ணபுரி (பறைய குளம்) அடம்பன், இசங்கன் குளம், கட்டைக்காடு ஆகிய கிராமங்களில் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தார்கள்.

கட்டுக்கரைக்கு உட்பட்ட நானாட்டான் பிரதேசத்தில் புதுவெளி, இலந்தைமோட்டை, அளவக்கை, நொச்சிக்குளம் (ஹிஜ்ராபுரம்) பூவரசங் குளம் ஆகிய கிராமங்களில் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தார்கள்.

மேற்படி முஸ்லிம் கிராமங்களில் வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் பலவந்தமான வெளியேற்றத்தின் காரணமாக பரம்பரையாகத் தேடி வைத்திருந்த சொத்துக்கள், நிலபுலன்கள், ஆடு, மாடுகள், விவசாய இயந்திரங்கள் போன்ற அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை அப்படி அப்படியே விட்டு விட்டு வெறுங்கையோடு வடமாகாணத்திற்கு வெளியே அகதிகளாகத் தஞ்சமடைந்தார்கள்.

### கலையும் கலாச்சாரமும்

ஆரம்ப காலந்தொட்டு முஸ்லிம் கிராமங்களில் கலை நிகழ்ச்சிகள் வழக்கில் இருந்து வந்தன. கலை நிகழ்சிகளில் பாடல்களும், கைவினைப் பொருட்களும் முக்கியம் வாய்ந்தன. இப்பிரதேசத்தில் வழமையில் இருந்து வந்த கலை நிகழ்ச்சி கும்மி நடனம் ஆகும். இது கோலாட்டம் என்றும், கழிகம்பு என்றும் அழைக்கப்படும். இக்கும்மி நடனம் வட மாகாண முஸ்லிம்கள் மத்தியில் பரவலாக இருந்து வந்த ஒரு நடைமுறையாகும். ஆண்களினால் ஆடப்படும் களிகம்பு நடனம் மங்களகரமான நிகழ்ச்சிகளின் போதும், விழாக்களின் போதும் பிரமுகர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும் போதும் ஆடப்பட்டு வந்தது.

## கவிதைகள்

மாந்தை - நானாட்டான் முஸ்லிம்கள் கவிதைத் திறன் மிக்கவர்களாகக் காணப்பட்டார்கள்.

ஆசைக்கவி, ஊஞ்சலாட்டம், தாலாட்டு என்பன இம்மக்கள் மத்தியில் இருந்து வந்த கவிதைகளாகும். இப்பகுதியில் வழக்கத்தில் இருந்து வந்த ஆசைக்கவி என்னும் நாட்டார் பாடல்கள் சில வருமாறு :

ஆண், பெண் இணைந்து பாடியது.

ஆண்
நகமும் சதையும் போல
நாமிருந்த நேசத்திற்கு
நகத்திற்கும் சதைக்குமிப்ப
நஞ்சு கலந்ததென்ன

பெண்
மாமி மகளிருக்க
மாலையிடப் பெண் இருக்க
ஊரான் மகளுக்கு
ஓம்பட்டுப் போறியளே

ஆண்
மாமி மகளே
மாணமுள்ள மச்சியரே
கொஞ்சும் கிளியே-உன்னைக்
கொள்வது நிச்சயம் தான்

ஆண்
ஆத்தியடி வேளான்மை
அரையளவு நெற்பயிர்
கண்டுகிட்டேன் பொன் மயிலே
காவலுக்குப் போவேனோ

பெண்
கடலும் இரையாதோ
கானலும் பூக்காதோ
நிலமும் வீசாதோ
நீலவண்டு நிற்குமிடம்

ஆசைக்கவிகள் இம்மக்ளின் கவிநயத்தையும், கவிதை ரசனையையும் வெளிப்படுத்துகின்றன. பெருநாள் கொண்டாட்டங்களிலும், மங்கள கரமான நிகழ்வுகளின் போதும் பெண்கள் ஆசைக்கவிகள் பாடி இன்புறுவார்கள்.

ஆசைக்கவிகளைப் போன்று திருமணத்தின் போது மாப்பிள்ளையை பெண்வீட்டுக்கு அழைத்துச் செல்லும் போது பாடப்படும் கவியும் (கல்யாண விருத்தம்), தாலாட்டு, ஊஞ்சல்பாட்டு, கப்பல்பாட்டு என்பனவும் இம்மக்கள் மத்தியில் வழக்கில் இருந்தன.

அத்தகைய பாக்களுள் சில வருமாறு :

கல்யாண விருத்தம் :

தனியொருவர் — அண்ட கோடிகளும் ஓர்
பந்தெனக் கைக்குள் விளையாட வல்லீர்

எல்லோரும் — ஆமோம்!

தனியொருவர் — அகிலமோர் ஏழினையும்
ஆகும் கரங்கள் போல்
ஆக்கி விளையாட வல்லீர்

எல்லோரும் — ஆமோம்!

தாலாட்டுப்பாட்டு

சூச் சூச்சு ஆராரோ
ஆராரோ ஆரிவரோ
கண்ணே மணி உறங்கு
கற்பகத்து வண்டுறங்கு
செல்வ மகள் நித்திரை செய்
செடியில் புல்லுறங்கு

நித்திரைக்கோ நீ அழுதாய்
சித்திரப் பூந்தொட்டிலிலே
தொட்டிலுமோ பொன்னாலே
தொடு கயிறு முத்தாலே
முத்து முத்துச் செவ்விளநீர்
முத்த மெல்லாம் கொத்து மல்லி
கொத்து மல்லி பூ பூக்க
கொடி மிளகு பிஞ்சுவிட
வாடாமல் சோடாமல்
வளர்த்துத் தாங்க வல்லவரே
ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆரிவரோ

### ஊஞ்சல் பாட்டு

1. அல்லாஹ் உன் வாசம் ஆலமெங்கும்
அணுவுக்குள் அணுவாய் அமைந்தகோவே
எல்லா உயிருக்கும் உயர்தரமான கோனே
ஓஹொ யாரப்பில் ஆலமீனே - ஆடவாங்க!
பொன்னூஞ்சல் ஆடவாங்க

2. குன்றாத ஒரு நாளும் குறைவில்லாதவனே
குத்ரத்துல் யாரப்பில் ஆலமீனே
எண்ணால் எழுத்தால் வரிகளால்
ஏதாலும் காணவொண்ணா எம்பிரானே - ஆடவாங்க!
பொன்னூஞ்சல் ஆடவாங்க

3. அர்ரஹ்மானே அழிவில்லானே
அழகான ஜென்னத்து ஊஞ்சலாட
நிர்ரஹ்மானே நிறைந்த கோவே
நீயே என்நாவில் துதிசெய்பவனே - ஆடவாங்க!
பென்னூஞ்சல் ஆடவாங்க

### விளையாட்டுக்கள்

இப்பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் பலவகையான பாரம்பரிய விளையாட்டுகள் இருந்து வந்தன. களிகம்பு நடனம், சிலம்படி, வாரோட்டம், கோலாட்டம், புலிவேடம், கிளித்தட்டு, சித்தாடை, நொண்டியடித்தல் ஆகியவை குறிப்பிடத்தக்க பாரம்பரிய விளையாட்டுகளாகும்.

யாழ்ப்பாண முஸ்லிம்களால் இப்பிரதேசத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட மற்றுமொரு கிராமிய விளையாட்டு பந்தம் சுற்றி விளையாடுதல் ஆகும். இது ஏறக்குறைய சீனடி, சிலம்படி விளையாட்டைப் போன்றது. ஆனால் விளையாட்டுக்குப் பயன்படுத்தப்படும் கம்பின் நுனியில் நெருப்பினால் பந்தம் கட்டி சுற்றி விளையாடப்படுவதுண்டு.

### கலாச்சாரம்

கலாச்சாரம் ஒரு சமூகத்தின் தனித்துவமான வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்களைக் குறிக்கும். முஸ்லிம்கள் தமது சுற்றுச் சூழலில் வாழ்ந்திருந்த ஏனைய மக்கள் குழுக்களில் இருந்து தம்மைத் தனித்துவப் படுத்திக் காட்டக்கூடிய பலவகையான பழக்க வழக்கங் களையும், வாழ்க்கை முறைகளையும் கொண்டிருந்தார்கள். தனித்துவமான மொழிப்பிரயோகம், உடைகள், ஆபரணங்கள், உணவு வகைகள், பழக்கவழக்கங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மாந்தை - நானாட்டான் பிரதேச முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் அரபு மொழிப் பிரயோகம் அதிகம் காணப்பட்டது. ஆண்கள் தொப்பி அணிந்தும், பெண்கள் முக்காடு இட்டும் வாழ்ந்து தமது தனித்துவத்தை எடுத்துக்காட்டினார்கள். உணவு சமைப்பது, உணவு உண்ணல் போன்ற பழக்க வழக்கங்களிலும் தமது தனித்துவத்தை பேணி வந்தார்கள்.

## விழாக்களும் சடங்குகளும்

பலவகையான சடங்குகளும், விழாக்களும் இப்பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வந்திருக்கின்றன. இச்சடங்கு களுக்கும், விழாக்களுக்கும் ஒப்பான நிகழ்வுகள் அவ்வப்பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் மத்தியிலும் காணப்பட்டன. ஆனால் அவ்வாறான நிகழ்வுகள் இஸ்லாமிய முறைக்கு அமையப்பெற்று முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் மாற்றப்பட்டு முஸ்லிம்கள் மத்தியில் நடைமுறையில் இருந்தன.

திருமண வைபவத்தின் போது தலைவாயிலில் வாழை மரங்களை நாட்டுதல், பந்தலிடல், சோடனை செய்தல், மணமக்களை ஆராத்தி எடுத்தல், கூறை அணிவித்தல், தாலி கட்டுதல், சீதனம் பெறல் போன்ற நடைமுறைகள் முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வந்தன. இத்தகைய பழக்க வழக்கங்கள் தமிழர்களின் பண்பாடாகும்.

இஸ்லாமியப் புதுவருடமாகிய முகர்ரம் மாதத்தில் ஆசுரா தினத்தில் கர்பலா என்ற தைக்கால் நிகழ்ச்சி மாந்தைப் பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் நடைபெற்று வந்த ஒரு நிகழ்வாகும். இக்காலத்தில் முஸ்லிம்கள் தமது நோய்கள் குணமடையவும் இதர தேவைகளுக்கும் நேர்ச்சை வைப்பார்கள். நார்சா என்ற விசேடமாகத் தயாரிக்கப்படும் உணவு இந்நிகழ்ச்சியின் போது மக்களுக்கு வழங்கப்படும்.

முஸ்லிம்கள் மத்தியில் இருந்து வந்த மற்றொரு விழா நிகழ்ச்சி சீறாப்புராணப் பாராயணம் ஆகும். இஸ்லாமியப் பெரும் புலவரான உமருப்புலவரால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி எழுதப்பட்ட காவிய நூல் சீறாப்புராணமாகும். புராணங்களை விரிவுரை செய்யும் ஆற்றல் உள்ள புலவர்களால் சீறாப்புராணத்திற்கு விரிவுரை செய்யப்படும்.

மற்றொரு விழா நிகழ்வு கொடி யெடுத்தலாகும். நெய்னா முகம்மது ஒலியுல்லாஹ் என்ற மார்க்கப் பெரியாரின் இஸ்லாமியச் சிறப்பை கொடியெடுத்து ஊர்வலமாக வந்து பாடல் பாடி இப்பிரதேச மக்கள் கொண்டாடுவது வழமையில் இருந்து வந்தது.

**இஸ்லாமிய மறுமலர்ச்சியும்**
**மாந்தை - நானாட்டான் முஸ்லிம்களும்**

முஸ்லிம்களின் வாழ்வு, கலை, கலாச்சாரத்தை தன்னிச்சையாக மாற்றும் ஆற்றலை இஸ்லாம் கொண்டிருந்தது. இஸ்லாமிய வளரச்சி தளர்ச்சி பெற்ற காலத்தில் பிற கலாசார, கலை அம்சங்கள் இம்மக்கள் மத்தியில் மேலோங்கிக் காணப்பட்டன. எனினும் இஸ்லாமிய மறுமலர்ச்சியினூடாக அவை புனரமைக்கப்பட்டு புதுமைப் படுத்தப் பட்டன. இஸ்லாமிய சமய நம்பிக்கைகளுக்கு முரணான கலை, கலாச்சாரஅம்சங்கள் மக்களால் கைவிடப்பட்டன.

திருமண நிகழ்வின் போது நடைமுறையில் இருந்து வந்த இந்து மக்களின் பழக்க வழக்கங்கள், கத்னா, வைபவம் தொடர்பான சடங்குகள், பெண் பராயமடைதல் தொடர்பான சடங்குகள், சீறாப்புராணப் பாராயணம் என்பன படிப்படியாகக் கைவிடப்பட்ட நிலை காணப்பட்டது.

இஸ்லாம் பற்றிய புதிய சிந்தனையை இப்பிரதேசத்தில் உருவாக் கியதில் இலங்கை தப்லீக் ஜமாஅத்தினரின் பணி மிக முக்கியமானது. தப்லீக் ஜமாஅத் இப்பிரதேசத்தில் 1952 ஆம் ஆண்டில் அறிமுகமானது. விடத்தல் தீவைச் சேர்ந்த கச்சு முகம்மது, நெய்னா மீரா சாகிபு, காதர் முகைதீன், நூர் முகம்மது, அப்துல் கரீம், அப்துல் காதர், அமீர் ஆசிரியர் போன்றோர் இவ்வியக்கத்தில் ஈடுபட்டு உழைத்தனர். இதன் காரணமாக முஸ்லிம்கள் மத்தியில் இஸ்லாமிய நம்பிக்கை, நடைமுறைகள் பற்றிக் கொடுக்கப்பட்ட புதிய விளக்கங்கள் இம்மக்கள் மத்தியில் இஸ்லாமிய அடிப்படையிலான வாழ்க்கை முறையினை நெறிப்படுத்த உதவின எனலாம்.

***முஸ்லிம்களின் வெளியேற்றம்***

மாந்தை - நானாட்டான் பிரதேசத்தில் முஸ்லிம்கள் சிறுபான்மை யினராக வாழ்ந்திருந்த போதிலும் அவ்வப்பகுதிகளில் வாழ்ந்திருந்த பெரும்பான்மைச் சமூகமாகவிருந்த இந்து சமய மக்களோடும்,

கிறீஸ்த்து சமய மக்களோடும் இணக்கமாகவே வாழ்ந்து வந்தார்கள். முஸ்லிம் - தமிழ் உறவு பற்றி வட்டக்கண்டல் முஸ்லிம் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பிரமுகர் வறுமாறு குறிப்பிடுகிறார்.

"எமது பிரதேசத்தில் முஸ்லிம்களும் தழிழர்களும் மிக ஐக்கியமாக வாழ்ந்து சகோதரர்களைப் போன்று பழகிக்கொண்டோம். தமிழ் நண்பர்களும் எமது விருந்தோம்பலுக்கு அடிக்கடி வருவார்கள். அது போல் நாமும் செல்வோம். நாம் எமது கிராமத்தைவிட்டு பலவந்தமாக வெளியேற்றப்படும் வரை எமது உறவு மிகவும் இணக்கப்பாட்டுடன் காணப்பட்டது. கிழக்கு மாகாணத்திலிருந்து வேளாண்மை அறுவடைக்கு வந்த முஸ்லிம்கள் வட்டக் கண்டல் பிரதேச முஸ்லிம் - தமிழ் உறவினைக் கண்டு ஆச்சரியப்பட்டனர்". என்றும் குறிப்பிட்டார்.

24ம் திகதி காலை அனைத்து முஸ்லிம்களும் 48 மணித்தியால அவகாசத்தில் கிராமங்களை விட்டுச் சென்று விடுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்டது. விடத்தல்தீவு, பெரியமடு, மினுக்கன், வட்டக்கண்டல் ஆகிய முஸ்லிம் கிமாமங்களிலும் இக்காலப்பகுதியில் வெளியேற்ற அறிவித்தல்கள் புலிகளினால் வழங்கப்பட்டன.

இக் குறுகிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட வெளியேற்ற உத்தரவு இப்பிரதேச முஸ்லிம்களை அதிர்ச்சியடையச் செய்தது. வெளியேற்ற உத்தரவைக் கேட்ட தமிழ் மக்களும் ஆச்சரியப்பட்டார்கள். வெளியேற்ற உத்தரவில் முஸ்லிம்களுக்குச் சாதகமான பதிலை எடுக்க முஸ்லிம்கள் எல்லோரும் பல மட்டங்களில் முயற்சி எடுத்தும் அது எவ்வித பலனையும் அளிக்கவில்லை. விரக்தியுற்ற மாந்தை, நானாட்டான் முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேற முடிவெடுத்தார்கள்.

முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தின் போது இவ்வியக் கத்தினால் இன்னும் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. வெளியேறும் முஸ்லிம்கள் பணம், நகை போன்ற பெறுமதியான சொத்துக்களைக் கொண்டு செல்லக்கூடாது. முஸ்லிம்களுக்குச் சொந்தமான சொத்துக் களை தமிழ் மக்களுக்கு கைமாற்றவும் கூடாது. தமது பிரயாணச்

செலவுக்காக வெளியேறும் முஸ்லிம்கள் ஓர் சொற்பத் தொகைப் பணத்தையும் சில உடுதுணிகளையும் மாத்திரமே எடுத்துச் செல்ல முடியும் என்ற நிபந்தனைகளோடு, இயக்கத்தால் அடையாளப் படுத்தப்பட்ட பாதைகளால் மாத்திரமே வெளியேற வேண்டும் எனவும் முஸ்லிம்கள் வற்புறுத்தப்பட்டார்கள். வெளியேற வேண்டும் என்ற முடிவுக்குத் தள்ளப்பட்ட முஸ்லிம்கள் தமக்குக் கிடைத்த பாதைகளின் மூலம் தமது பிரதேசத்தைவிட்டு வெளியேறத் தொடங்கினார்கள்.

விடத்தல் தீவு முஸ்லிம்கள் ஒக்டோபர் 26ம் திகதியிலிருந்து கூட்டம் கூட்டமாக ஏறக்குறைய 18 மைல்கள் கால் நடையாக வந்து மடுவை அடைந்து, அடுத்த நாள் காலையில் கால் நடையாக பூந்தோட்டம் வழியாக வவுனியாவை அடைந்தார்கள். வவுனியாவிலிருந்து அனுராதபுரத்தில் நொச்சியாகமம் கிராமத்திற்கு வந்து அங்கிருந்து புத்தள மாவட்டத்திற்கும், பின் ஏனைய இடங்களுக்கும் அகதிகளாக அபயம் தேடிச் சென்றார்கள்.

பெரிய மடு முஸ்லிம்கள் பண்டிவிரிச்சான் வழியாக வவுனியாவை யடைந்து கெகிராவை, புத்தளப் பிரதேசங்களுக்கு அகதிகளாக தஞ்சம் அடைந்தனர். இவர்கள் பண்டிவிரிச்சானில் வைத்துப் அவ்வியக்கத்தினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். இதே போன்று மினுக்கன், ஆண்டான் குளம், விளாங்குளி பள்ளிவாசல் பிட்டி ஆகிய கிராமமக்களும் புத்தள மாவட்டத்தைச் சென்றடைந்தார்கள்.

மாந்தை - நானாட்டான் பிரதேசத்திலிருந்த அனைத்து முஸ்லிம்களும் "உணவு தருபவன் அல்லாஹ், பாதுகாப்பதும் அல்லாஹ்தான்" என்ற உணர்வோடு அல்லாஹ்வின் விதியின் மேல் முழு நம்பிக்கை வைத்தவர்களாக தமது தாயகத்தை விட்டு ஒக்டோபர் மாதம் முடிவடையமுன் சென்றுவிட்டார்கள்.

## பொருளாதார இழப்புக்கள்

சொந்த இடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை மாந்தை, நானாட்டான் முஸ்லிம்களைப் பல்வேறு வகையில் பாதித்தது. இப்பாதிப்புக்களை சமூக, சமய, பொருளாதார, உளவியல் என்ற அடிப்படையில் வகைப்படுத்தி நோக்க முடியும்.

பலவந்த வெளியேற்றத்தின் போது மாந்தை, நானாட்டான் பிரதேசத்தில் 2000 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தன. இவர்களின் வீடுகள், மேட்டு நிலக்காணிகள், விவசாயக் காணிகள், கால்நடைகள், வர்த்தக நிலையங்கள், கைத்தொழில் நிலையங்கள், போக்கு வரத்து வாகனங்கள், மீன்பிடி உபகரணங்கள், பணம், நகைகள், போன்ற உடமைகள் அனைத்தும் இழக்கப்பட்டன. 1991ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வெளிக்கழ ஆய்வு ஒன்றில் பெறப்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் இழப்புக்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை - 3

இழப்பு விபரம் பற்றிய சுருக்க அட்டவணை

| | மாந்தை | நானாட்டான் |
|---|---|---|
| குடும்ப அங்கத்தவர்கள் | 712 | 347 |
| மொத்த குடித்தொகை | 3306 | 1766 |
| ஆபரணம் (சராசரிபவுண்) | 4.7 | 7.6 |
| நிலம் (சராசரி ஏக்கரில்) | 5.5 | 5.4. |
| மொத்த மாடுகள் | 8445 | 4795 |
| மொத்த ஆடுகள் | 3533 | 2244 |
| மொத்த கோழிகள் | 6447 | 5944 |
| தளபாடப்பொறுமதி | 22,71,790 | 25,32,280 |
| வானொலி, தொலைகாட்சி | 300 | 200 |
| குளிர் சாதனப்பெட்டி | 25 | 10 |

மூலம் - அகதி வெளிக்கள ஆய்வு, 1991

மாந்தை - நானாட்டான் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த முஸ்லிம் குடித்தொகையில் 70 சதவீதமான மக்களின் இழப்பு விபரங்களே பெறப்பட்டன. எஞ்சியோர்களின் இழப்புக்கள் பற்றிய விபரம் பெறப்படவில்லை. பலவந்தமான வெளியேற்றத்தின் போது முஸ்லிம்களின் விவசாயக் காணிகளில் அறுவடைக்குத் தயாராக இருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல், காணிகள் பறிபோயின.

இப்பிரதேசத்தில் காணப்பட்ட முஸ்லிம் கிராமங்களின் பொதுச் சொத்துக்களான பள்ளிவாசல்கள், அரபு மத்ரசாக்கள், பள்ளிவாசலுக்குச் சொந்தமான கட்டிடங்கள், விவசாய நிலங்கள், வாகனங்கள், மற்றும் பொதுச் சொத்துக்களான சமூக, கலாச்சார ஸ்தாபனங்கள், பாடசாலை, தளபாடங்கள், நீர்ப்பாசனக் குளங்கள், கால்வாய்கள், கடல் வளங்கள், காட்டு வளங்கள் என்பவும் இழக்கப்பட் சொத்துக்களுள் அடங்கும்.

கல்வி தொடர்பான இழப்புக்களும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இப்பிரதேசத்தில் இரண்டு மகா வித்தியாலயங்களும் (விடத்தல் தீவு ம.வி, பெரிய மடு ம.வி) ஒவ்வொரு முஸ்லிம் கிராமங்களிலும் முஸ்லிம் வித்தியாலயங்களும் அமைந்திருந்தன. பாடசாலைக் கட்டிடங்கள், ஆசிரியர் விடுதிகள் போன்றவைகளும் இழக்கப்பட்டன. இப்பாடசாலையிலிருந்து வருடாவருடம் கல்வி கற்று வெளியேறும் க.பொ.த. (சா.த) உ.த. மாணவர்களின் கல்வி வாய்ப்புக்களும் இழக்கப்பட்ட செல்வங்களாகும்.

இவற்றிற்கு மேலாக தமது தாயக மண்ணிலிருந்து வெயேற்றப்பட்ட முஸ்லிம்களின் சமூக, உளவியல் தாக்கங்கள் அளவிடமுடியாத இழப்புகளாகக் கொள்ளப்படவேண்டியது அவசியமாகும்.

பெரிய மடு குடியேற்றக் காணிகளில் குடியேறிய முஸ்லிம்களுக்கு ஓர் குடியிருப்பாளருக்கு மூன்று ஏக்கர் நெற் காணியும், இரண்டு ஏக்கர் மேட்டு நிலக் காணியும், மேட்டு நிலத்தோடு இரு அறைகளையும் இரு சிறிய மண்டபங்களையும் உள்ளடக்கிய வீடுகளும் வழங்கப் பட்டிருந்தன. தமக்கு வழங்கப்பட்ட மேட்டு நிலக்காணிகளில் முஸ்லிம்கள் பெறுமதி மிக்க மா, பலா

மரங்களிலிருந்து வருமானத்தைப் பெற்று வந்தார்கள். மேலும் தேக்கு, வேம்பு, பாலை போன்ற மரங்களையும் நாட்டி வளர்த்தும் வந்தார்கள். பலவந்த வெளியேற்றத்தின் காரணமாக பெரிய மடு மக்கள் தமது சொத்துக்கள், வீடு வாசல், கால்நடைகள், அனைத்தையும் இழந்து வெறுங்கையோடு அனாதைகளாகப் புத்தளப் பிரதேசங்களில் குடிபெயர்ந்தார்கள்.

*முஸ்லிம்களின் வாழ்வும் வளமும்.*

மாந்தை - நானாட்டான் பிரதேசத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்திருந்த கிராமங்கள் பற்றிய விபரங்கள் சுருக்கமாக இப்பகுதியில் வழங்கப்படுகிறது.

**விடத்தல் தீவு**

விடத்தல் தீவு மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்திருந்த சனச்செறிவு மிக்க கிராமமாகும். முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் ஆகியோர் தனித்தனிப் பகுதிகளில் வாழ்ந்து வந்ததோடு ஒற்றுமையாகவும் அன்னியோனியமாகவும் வாழ்ந்து வந்தார்கள்.

மின்னியறிஞ்சான், முதலைக்கிடங்கு ஆகிய இரு ஆறுகளின் கழி முகத்தில் இக்கிராமம் அமைந்திருக்கிறது. ஏனைய எல்லைகள் நிலத்திணிவாக உள்ளது. ஏறக்குறைய 220 ஏக்கர் நிலப்பரப்பை இக்கிராமம் கொண்டுள்ளது. இங்கிருந்த கிறிஸ்தவ மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தலாகும். இந்துக்களும், முஸ்லிம்களும் விவசாயத்தையே தமது முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தார்கள். மேலும் முஸ்லிம்கள் வியாபாரம், ஆசிரியத் தொழில், அரச உத்தியோகங்களையும் மேற்கொண்டு வந்தனர்.

இந்தியா, அராபியா, யாழ்ப்பாண முஸ்லிம்களின் தொடர்பால் இக்கிராமம் உருவானது என நம்பப்படுகிறது. இக்கிராமம் சங்குப்பிட்டி மன்னார் பிரதான பாதையின் அருகே அமைந்திருக்கிறது.

## பெரியமடு

பெரியமடு என்பது குடியேற்றத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு குடியேற்றக் கிராமமாகும். விடத்தல் தீவிலிருந்து தென்கிழக்காக 8 மைல் தூரத்தில் இக்கிராமம் அமைந்துள்ளது. 850 ஏக்கர் பரப்பையும் 1127 பேரையும் கொண்டுள்ள இக்கிராமத்தில், முஸ்லிம்கள், இந்துக்கள், கிறீஸ்தவர்கள் வாழ்ந்தனர். 87 சதவீதம் முஸ்லிம்களாகும்.

ஏறக்குறைய 200 குடும்பங்கள் 1956 ஆம் ஆண்டு இங்கு குடியேற்றப்பட்டனர். ஓவ்வொரு குடியிருப்பாளருக்கும் மூன்று ஏக்கர் நெற்காணியும், இரண்டு ஏக்கர் மேட்டு நிலக்காணியும், மேட்டு நிலத்தில் இரு அறைகளையும் இரு மண்டபங்களையும் கொண்ட வீடும் வழங்கப்பட்டது. மேட்டு நிலத்தில் தென்னை, மா, பலா, வாழை போன்ற பயிர்களை செய்கை பண்ணி வந்தார்கள்.

1957ஆம் ஆண்டு கிராம அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட கிராம அபிவிருத்தி சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டதோடு ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றுவதற்கும், முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பேணுவதற்கும் ஒரு பள்ளிவாசல் அமைக்கப்பட்டது.

இக்குடியேற்றத்திற்கான போக்கு வரத்து சீராக அமைத்துக் கொடுக்கப்படவில்லை. அதனால் இக்கிராமத்தின் விளைபொருட் களைச் சந்தைப்படுத்த முடியாத சிரமம் இருந்து வந்தது. மன்னார் பட்டினத்துடனும் மன்னார் - வவுனியா பிரதான வீதியுடனும் இணைக்கும் வண்டிப்பாதைகளே ஆரம்ப முதல் இருந்து வந்தது. 1967ஆம் ஆண்டளவில்சிரமதான மூலமும் 50 % அரச உதவியுடனும் சீர் செய்யப்பட்ட பின்னரே போக்குவரத்துப் பிரச்சினை குறைந்து பஸ் போக்கு வரத்தும் ஏற்பட்டது.

இங்கு ஒரு மகாவித்தியாலயம் அமைக்கப்பட்டிருந்தும், கல்வியில் போதிய முன்னேற்றம் ஏற்படாமலிருந்து வந்தது. ஆர்வமுள்ளவர்கள் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியில் கல்வி பெறச் சென்றனர். அதன் காரணமாக பட்டயக்கணக்காளராகப் பணியாற்றும் ஜவாமில், பட்டதாரி M.M அமீன், செல்வி. ஜகுபன்னிசா (B.Sc) ஆகிய கல்விமான்கள்

உருவாக்கப்பட்டார்கள். விடத்தல்தீவு அலிகார் மகா வித்தியலயத்தில் கல்வியைப் பெற்ற P.M.A. முனாபு, அபுல் கைரி ஆகியோர்களும் பெரிய மடுவைச் சேர்ந்த ஆசிரியர்களாவார்கள்.

**விளாங்குளி**

விளாங்குளி பூனகரி - மன்னார் வீதியிலிருந்து ஒரு மைல் வடக்காக அமைந்திருக்கும் மிகப் பழைய கிராமமாகும். கடல் வளத்தோடு தொடர்புடைய படகோட்டமும், சங்கு குளித்தலும் இக்கிராம மக்களின் ஆரம்பப் பொருளாதார நடவடிக்கையாக இருந்தது. மாந்தைப் பிரதேச வரலாற்றுக் காலத்தில் முஸ்லிம்களின் வர்த்தக, கடல் தேட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக இக்கிராம குடியிருப்பு அமைந் திருக்கலாமென கருத இடமுண்டு. பிற்காலத்தில் கடல் பொருளாதாரம் மங்கிக் குறைந்து விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்ற விவசாய நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபட்டு வந்தார்கள். பிரித்தானிய காலணித்துவ ஆட்சியின் போது இக்கிராம மக்கள் புகையிலைச் செய்கையை மேற்கெண்டு வந்தார்கள்.

1931, 1964 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பெருவெள்ளம், புயல், காற்று போன்ற இயற்கை அனர்த்தங்களால் விளாங்குளிக் குடியேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டதன் காரணமாக, அக்கிராம மக்கள் குடிபெயர்ந்து பல கிராமங்களுக்கும் குடிபெயர்ந்தார்கள். இப் பிரதேசத்தின் தொடர்ச்சி மினுக்கன் கிராமத்தின் தோற்றமாக அமைந்தது.

இக்கிராமத்தில் ஓர் பள்ளிவாசலும், ஓர் ஆரம்பப் பாடசாலையும் காணப்பட்டது. இக்கிராம மக்கள் இலக்கிய நயம் படைத்தவர்களாக இருந்தமையால், வருடா வருடம் சீறாப்புராணப் பராயணம் நடாத்தப்பட்டு வந்தது, அன்றியும் நெய்னா முசா அப்பா யெரில் கொடியெடுத்து கந்தூரி கொடுக்கும் வழக்கமும் இங்கு இருந்து வந்தது. விளாங்குளி ஜும்ஆப்பள்ளி வளவில் மதுரையடி ஒலியுல்லாஹ் என்ற ஆத்ம ஞானியின் அடக்கஸ்தலம் (ஸியாரம்) ஒன்று காணப்படுகிறது.

**மினுக்கன்**

இயற்கை அனர்த்தங்களால் இடம் பெயர்ந்த விளாங்குளிக் கிராம மக்களுக்காக 1964 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது மினுக்கன் கிராமக் குடியேற்றமாகும். அக்காலத்தில் மன்னார் உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு. வாமதேவன் அவர்களின் முயற்சியால் உருவாக்கப் பட்டதே இக்குடியேற்றமாகும். ஒவ்வொரு வீடும் 21 X 21 அளவுள்ள 35 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இவ்வீடுகளை அமைக்க CARE அரசசார்பற்ற நிருவணம் உதவியது. அத்துடன் சிரமதானம் மூலம் இவ்வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. வீட்டுடன் சேர்ந்து அரை ஏக்கர் மேட்டு நிலமும் வழங்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டளவில் 150 குடும்பங்கள் அங்கு வாழ்ந்திருக்கிறார்கள். விளாங்குளி மக்களைத் தவிர விடத்தல் தீவு, மன்னார் மூர் வீதி, எருக்கலம்பிட்டி, வட்டக்கண்டல் போன்ற முஸ்லிம் கிராமங்களிலிருந்தும் மக்கள் வந்து இங்கு குடியேறி இருந்தனர். கட்டுக்கரையின் கீழ் கிடைக்கப்பெற்ற நீரைக்கொண்டு நெற்செய்கையையும், மேட்டு நிலப் பயிர்ச்செய்கை யையும், கால்நடை வளர்ப்பும் ஆகிய பொருளாதார நடவடிக்கையில் மினுக்கன் மக்கள் ஈடுபட்டு வந்தார்கள். அங்கு 5ஆம் வகுப்பு வரையிலான பாடசாலை ஒன்று இருந்தது. 200 மாணவர்கள் வரை கல்வி கற்றார்கள். ஐங்காலத் தொழுகைக்காக ஒரு ஜூம்ஆப் பள்ளிவாசலும் அங்கு அமைக்கப்பட்டிருந்தது. இக்கிராமத்திலிருந்து குடிபெயர்ந்து சென்றவர்கள் அனுராதபுர மாவட்ட நெல்வியாகமவில் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

**வட்டக்கண்டல்**

கட்டுக்கரை குளத்திலிருந்து நீர்பெற்ற இக்கிராமத்தில் ஏறக்குறைய 200 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன 1912, 1914 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்கம் காணிகளை ஏலத்தில் விற்ற போது மதார்சாகிபு செல்ல மரைக்கார் என்ற தனவந்தர் வட்டக்கண்டல், மணிப்புல் குளம், பரங்கிச் சாலம்பன், காயாமோட்டை, பாலையடிப்பிட்டி, புதுக்குளம் ஆகிய இடங்களில் நூற்றுக்கு மேற்பட்ட ஏக்கர் காணிகளை வாங்கி உடமையாக்கினார். இக்காணிகளில் யாழ்ப்பாண, இந்திய மக்கள் குடியேறி விவசாய நடவடிக்கைகளை

மேற்கொண்டு வந்தார்கள். இந்தியாவில் இருந்து வந்து குடியேறிய வர்களுள் முகம்மது அலியார் என்பவரும் ஒருவராகும். நீர்த்தடாகம் ஒன்றிற்கு அலியார் கேணி என்ற பெயரும் வழக்கத்தில் இருந்து வந்தது. பிற்காலத்தில் விடத்தல் தீவு, விளாங்குளி, புதுவெளி போன்ற கிராமங்களிலிருந்து மக்கள் இங்கு குடியேறினார்கள்.

பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமான நிலம், நீர்ப்பாசனம், கால்வாய் அமைப்புக்கள், போக்குவரத்து போன்ற எல்லா வசதிகளையும் கொண்டிருந்த இக்கிராமம் சமயம், கலாச்சார ரீதியாகவும் மேலோங்கிக் காணப்பட்டது. உப தபாற் கந்தோர், சனசமூக நிலையம், பாடசாலை, கூட்டுறவுச் சங்கம், 500 பேர் வரை தொழக்கூடிய ஜும்ஆப்பள்ளி வாசல் ஆகிய தாபனங்களைக் கொண்டு இக்கிராமம் விளங்கியது. இக்கிராம மக்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள். பட்டதாரிகள், ஆசிரியர்கள், தபாலதிபர், மௌலவிமார்கள் எனப்பல அரசாங்க உத்தியோகத்தர்களும் இக்கிராமத்தில் காணப்பட்டனர்.

இஸ்லாமிய கலாச்சாரத்தின் உறைவிடமாக இருந்து வந்த வட்டக்கண்டல் முஸ்லிம் கிராமத்தில் சீராப்புராண விரிவுரைகள், கந்தூரி வைபவங்கள், கொடியெடுத்தல், போன்ற கலாச்சார அம்சங்கள் சிறப்பாகக் காணப்பட்டன. அன்றியும் இப்பிரதேசத்தில் வாழ்ந்திருந்த ஏனைய இரு சமுதாயத்தவர்களுடன் முஸ்லிம்கள் அன்னியோன்யமாக வாழ்ந்து வந்தார்கள்.

### பள்ளிவாசல்பிட்டி

இக்கிராமம் மரதோன்றிவாள், நெடுவரம்பு ஆகிய முஸ்லிம் கிராமங்களுக்கிடையில் காணப்படுகிறது. 1984ஆம் ஆண்டு இக்கிராமம் முஸ்லிம் கிராமமாகத் தோற்றம் பெற்றது. விவசாயத் தொழில் வாய்ப்புக் காரணமாக நெடுவரம்பு என்ற பழைய கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் பள்ளிவாசல்பிட்டி என்ற பெயரை இக்கிராமத்திற்கு இட்டனர்.

சொர்ணபுரி (பறைய குளம்)

அடம்பனிலிருந்து தெற்காக உயிலங்குளம் பாதையில் அமைந் திருக்கும் இக்கிராமம், ஒரு குளத்தின் பெயரைக்கொண்டு பறைய குளம் என அழைக்கப்பட்டு வந்தது. 1962 இல் இக்கிராம மக்கள் இதன் பெயரை சொர்ணபுரி என்று மாற்றியமைத்தார்கள்.

1928 ஆம் ஆண்டு விளாங்குளியைச் சேர்ந்த சின்ன மரைக்கார், முகம்மது மீராசாகிபு ஆகிய இரு சகோதரர்கள் குடும்ப சகிதம் வந்து குடியேறி, ஆரோக்கியம் என்பவரிடம் விலைக்கு வாங்கிய '6 ஏக்கர் காணியில் விவசாயம் செய்து வந்தனரென்றும், 1953ஆம் ஆண்டு உயிலங்குளம் 11 ஆம் கட்டையைச் சேர்ந்த சகோதரர்களான நாகூர்ப்பிச்சை, இஸ்மாயில், சேகு தாவூது ஆகிய மூவரும் குடும்ப சகிதம் வந்து குடியேறினர் என்றும் இவ்விதமாகப் பல கிராமங்களி லிருந்தும் இங்கு வந்து குடியேறியதன் காரணமாகவே பறையகுளம் என்ற கிராமம் உருவாக்கப்பட்டது என அறிய முடிகிறது. இக்கிராம முஸ்லிம்களுக்கு ஏறக்குறைய 200 ஏக்கருக்கு அதிகமான நெற்காணிகள் சொந்தமாக இருந்தன.

ஒரு ஜும்ஆப்பள்ளிவாசலும் 1970 ஆம் ஆண்டிலிருந்து 8 ஆம் வகுப்பு வரையும் கொண்ட பாடசாலையும் இக்கிராமத்தில் அமைந்திருந்தது. 180 மாணவர்கள் அக்காலத்தில் கல்வி கற்று வந்தார்கள். இலிகிதர் சேவையில் இணைந்து தற்போது முஸ்லிம் சமய விவகார அமைச்சில் உதவி நிருவாக உத்தியோகத்தராகப் பணிபுரியும் அல்ஹாஜ் M.R.M. ஹஜ்ஜிக் (நபுஹான்), மல்வானையில் ஆசிரியராகப் பணிபுரியும் கபீர் ஆகியோர்கள் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்களாகும். இக்கிராமத்தி லிந்து இடம் பெயர்ந்து சென்றவர்கள் நெல்லியாகமம், புத்தளம் ஆகிய பிரதேசங்களில் குடியமர்ந்திருக்கிறார்கள்.

அடம்பன்

அடம்பனில் ஆரம்பத்தில் குடியேறியவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த முஸ்தபா ஹாஜியார், எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த காதர் சாகிபு, மன்னார் குடியிருப்பைச் சேர்ந்த சாகுல் கமீது அவர்களின் தம்பி

கஜுன் வட்டக்கண்டலிருந்து வந்த கரீம் பிச்சை ஆகியோர்களைக் குறிப்பிடலாம்.

அடம்பனில் 1945 ஆம் ஆண்டு பள்ளிவாசல் கட்டப்பட்டது. இதற்குரிய காணியை முஸ்தபா ஹாஜியார் அரசாங்கத்திடமிருந்து பெற்றுத் தந்தார். அடம்பன் ஒரு வியாபார ஸ்தலமாக இருந்தது. இப்பகுதியில் காணப்பட்ட 95வீதமான கடைகள் முஸ்லிம்களுக்குரியன. அயற் புறங்களில் ஏறத்தாள 50 ஏக்கர் நெல் வயல்கள் இவர்களின் உடைமையாக இருந்தது. முஸ்லிம்கள் 1990ல் இங்கிருந்து அகதியாக வெளியேறும் போது 20 முஸ்லிம் குடும்பங்கள் இருந்தன.

### இசங்கன் குளம்

இது ஏறக்குறை 15 முஸ்லிம் கிராம மக்களைக் கொண்ட முஸ்லிம் கிராமமாகும் இவர்களில் பெரும்பான்மையினர் விடத்தல்தீவிலிருந்து வந்து குடியேறியவர்களாகும். 1902 ல் சின்னமரைக்கார் குளத்தாரும் அவருடைய மனைவி நெய்னா உம்மாவும் ஆரம்பமாகக் குடியேறியவர் களாகும். இவர் பெரிய காணிச் சொந்தக்காரராக வாழ்ந்து வந்தார். கட்டுக்கரைக் குளத்திலிருந்து பெரிய உடைப்பு வாய்க்கால் மூலமாக இக்கிராமத்தின் குளம் நீரைப்பெற்றது.

### கட்டைக்காடு

இது மினுக்கனுக்கு வடக்கே 2 மைல் தூரத்தில் அமைந்திருந்தது. விடத்தல்தீவிலிருந்து முஸ்லிம்கள் இங்கு வந்து குடியேறினார்கள். 1928 ஆம் ஆண்டுக்கு முன்னர் கலிபா சாகிப் வந்து குடியேறினார். அவரின் மக்களான சேகுல் ஆப்தீன், முகம்மது நாகூர்ப்பிச்சை, உமர் ஆகியோரின் பரம்பரையில் வந்தவர்களே கட்டைக்காடு கிராமத்தில் குடியிருந்த முஸ்லிம்களாவார்கள். 1956 ஆம் ஆண்டு கட்டுக்கரை அணைக்கட்டு உடைந்த போது கட்டைக்காடு குடியிருப்பு பாதிக்கப் பட்டது. இங்கிருந்தவர்கள் கால் மைல் தூரத்திலுள்ள மேட்டு நிலத்தில் குடியேறினார்கள். இக்கிராமத்தில் ஜும்ஆப்பள்ளிசால் ஒன்று

அமைக்கப்பட்டிருந்தது. இக்கிராம மக்கள் விவசாயிகளாகவும், பெருமளவு மந்தைகளை உடையவர்களாகவும் இருந்தார்கள்.

## நானாட்டான் பிரதேசம்

கட்டுக்கரைக் குளத்திற்குட்பட்ட நானாட்டான் பிரதேச முஸ்லிம் கிராமங்கள் இப்பகுதியில் ஆராயப்படுகின்றன. இப்பிரதேசத்தில் முஸ்லிம் குடியிருப்புக்கள் பரவலாகக் காணப்பட்டாலும், சில குடியிருப்புக்களில் முஸ்லிம்கள் தமிழ் மக்களோடு கலந்தும் சில இடங்களில் தனியாவும் வாழ்ந்து வந்தார்கள்.

### புதுவெளி

றசூல் (ஸல்) அவர்களின் திருநாமத்தை ஞாபகமூட்டும் வகையில் இக்கிராமம் 'ரசூல் புது வெளி' என்று அழைக்கப்பட்டு வந்தது. இக்கிராமம் கட்டுக்கரைக் குளத்திற்குத் தெற்காக அமைந்திருந்த ஓர் விவசாயக் கிராமம். 150 முஸ்லிம் குடும்பங்கள் இங்கு வாழ்ந்தன. இக்கிராமத்தில் பெரும் போகம், சிறு போகம், நெற்செய்கையை மேற்கொள்ள நீரைக் கட்டுக்கரையிலிருந்து பெற்று வந்தார்கள். இக்கிராம மக்களுக்கு அதிகமான நெற்காணிகள் சொந்தமாக இருந்தன. அக்காணிகள் முஸ்லிம் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தன.

ரசூல் புதுவெளி சமய ரீதியாக முக்கியத்துவம் பெற்ற ஓர் கிராமமாகும். இங்கு ஒரு ஜும்ஆப்பள்ளிவாசலும், அரபு உயர் கல்வி கற்பிக்கப்படும் "றசூலிய்யா" அரபுக் கல்லூரியும் அமைந்திருந்தன. இதன் அதிபராக மிக நீண்ட காலமாக பணியாற்றி வந்த மௌலவி அப்துல் கரீம் மார்க்கத்தில் ஆழ்ந்த புலமையுடையவராக இருந்து வந்தமையால், மார்க்க விளக்கங்களையும், மார்க்கத் தீர்ப்புக்களையும் (பத்வா) கொடுக்கும் அளவு ஆற்றல் பெற்றிருந்தார்.

350 மாணவர்களையும், க.பொ.த (சா.த) வகுப்பு வரையும் கற்கக்கூடிய வசதியைக் கொண்ட முஸ்லிம் பாடசாலையொன்று அக்கிராமத்தில் அமைந்திருந்தது. மக்களின் வெளியேற்றத்தின் போது எருக்கலம்பிட்டி ம.ம. வித்தியாலயத்தில் கற்ற அவ்வூரைச் சேர்ந்த கலீல் றகுமான் அப்பாடசாலையின் அதிபராகவிருந்தார். 10 மௌலவிகளையும் 20 அரச ஊழியர்களையும் உள்ளடக்கியதாக அக்கிராமம் இருந்தது. மீலாத் விழாவுடன் தொடர்புடைய பல நிகழ்ச்சிகள் பிரதி வருடமும் அங்கு நடைபெற்றறு வந்தன.

களிகம்பு, தீப்பந்தமாடல் போன்ற கலை நிகழ்ச்சிகள் திருமண வைபவங்களின் போதும், பொது வைபவங்களின் போதும் நடைபெற்று வந்தன. தமிழ் - முஸ்லிம் உறவு இப்பிரதேசத்தில் மிகச் சிறப்பாகக் காணப்பட்டது. அகதிகளாக இடம் யெரந்து சென்ற புதுவெளி முஸ்லிம்கள் ஆரம்பத்தில் கல்கமுவ என்ற இடத்தில் குடியேறி, தற்போது பாலாவி எருக்கலம்பிட்டி மீள்குடியேற்றத்திட்டப் பிரதேசத்தில் பெறப்பட்ட சொந்தக் காணியில் குடியேறியுள்ளார்கள். இதற்கு "றசூல் நகர்" எனப் பெயர் சூட்டியுள்ளனர்.

## இலந்தை மோட்டை

இக்கிராமம் 1940 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம்கள் விவசாய நோக்கத்திற்காக இங்கு வந்து குடியேறினார்கள். இவர்களைத் தொடர்ந்து சாய்ந்தமருதுக் கிராமத்தைச் சேர்ந்த சிலரும் இங்கு வந்து குடியேறினார்கள். இக்கிராமம் சின்ன மட்டக்களப்பு என அழைக்கப்பட்டு வந்தது. ஏறக்குறைய 100 மாணவர்கள் கல்வி கற்கக்கூடிய ஒரு பாடசாலையையும், ஒரு பள்ளிவாசலும் அங்கிருந்தன.

## அளவக்கை

இப்பிரதேசத்தில் 1957 ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் காரணமாக 10 குடும்பங்கள் ரசூல் புது வெளியிலிருந்து சென்று அளவக்கையில் குடியேறின. அகதிகளாக வெளியேறிய போது

இக்கிராமத்தில் ஏறக்குறைய 35 குடும்பங்கள் வாழ்ந்திருந்தன. விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பன இக்கராமத்தின் முக்கிய தொழிலாக இருந்து வந்தன. அன்றியும் மிளகாய், வாழை போன்ற பயிர்களையும் வீட்டுத் தோட்டத்தில் பயிரிட்டு வந்தார்கள். கட்டுக்கரைக் குளத்திலிருந்து இணைக்கப்பட்ட கால்வாய் ஒன்றினால் இக்கிராமம் நீரைப் பெற்று வந்தது. இக்கிராமத்தில் தைக்காப் பள்ளியொன்று இருந்தது. இங்கிருந்த மாணவர்கள் அண்மையில் இருந்த கிறிஸ்தவ பாடசாலைக்குச் சென்று வந்தார்கள்.

சமய நிகழ்வாக மீலாதுன்நபி, ஹதீஸ் உபன்னியாசங்கள் என்பன நடைபெற்று வந்தன. அன்றியும் ஏனைய முஸ்லிம் பிரதேசங்களில் காணப்பட்ட கலை, சலாச்சார நிகழ்வுகளும் இங்கு நடைபெற்று வந்தன. தமிழ்-முஸ்லிம் உறவு சிறப்பாக இருந்து வந்தது. இப்பிரதேசத்தில் ஆயுதக் குழுக்களின் செல்வாக்கு ஓங்கியிருந்த காலத்தில் முஸ்லிம் இளைஞர்களும் அதில் சேர்ந்திருந்தார்கள். துரதிஸ்ட வசமாக அளவக்கைப் பள்ளிவாசலில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இக்கிராமத்தில் வாழ்ந்திருந்த அல்லாபிச்சை அப்துல் கரீம் (50 வயது), அல்லாபிச்சை செய்னுலாப்தீன் - தபாலதிபர் (50), நாகூர்ப்பிச்சை அப்துஸ்சலாம் என்பவர்கள் மரணமடைந்தார்கள். நாகூர்ப்பிச்சை அப்துஸ்ஸலாம் என்ற இறந்தவரின் மகன் அஜ்வது (24) என்பவரும் கே. அபுல்ஹுதா (45) என்பவரும் கடத்திச்செல்லப்பட்டு பின்னர் சுடப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் அஜ்வதின் உடல் கிடைத்தது.

### நொச்சிக்குளம் (ஹிஜ்ராபுரம்)

இங்கு ஏறக்கறைய 40 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தன. ஒரு ஜும்ஆப் பள்ளிவாசலும் இங்கிருந்தது. அயலிலிருந்த முஸ்லிம் மக்கள் ஜும்ஆத் தொழுகைக்காக இங்கு வந்து சென்றார்கள். இங்கிருந்த மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். கட்டுக்கரைக் குளத்திலிருந்து வரும் புத்திரகண்டான் கால்வாய் வழியாக இக்கிராமம் நீரைப் பெற்று வந்தது. ஏறக்குறைய 150 முஸ்லிகள் இங்கு வாழ்ந்து வந்தார்கள்.

அறுவடையின் பின்பு குளம் வற்றத் தொடங்கும் போது நன்னீர் மீன்பிடித்தலை இக்கிராம மக்கள் மேற்கொண்டு வந்தார்கள். சிலாவத்துறைக் கடலுக்கும் சென்று இம்மக்கள் மீன்பிடித்து வந்தார்கள்.

ஆடு, மாடு வளர்த்தல், வியாபாரம் என்பன இக்கமக்களின் இதர தொழிலாக இருந்தன. இக்கிராமத்தில் அமைந்திருந்த அல்-ஹிஜ்ரா மகா வித்தியாலயத்தில் 250 பிள்ளைகள் கல்வி கற்று வந்தார்கள். பல சமய விழாக்கள் இங்கு நடைபெற்று வந்தன. இனப்பிரச்சினையின் போது இக்கிராம மக்கள் புலிகளுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்ற காரணத்தினால் இலங்கை இராணுவத்தினராலும், இந்திய இராணுவத்தினராலும் இம்சைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். 1980 ஆம் ஆண்டு முதல் நொச்சிக்குளம் ஹிஜ்ராபுரம் என்று அழைக் கப்பட்டு வந்தது.

பூவரசன்குளம்

இங்கு 58 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்தன. ஜும்ஆப்பள்ளி ஒன்று அங்கிருந்தது. 400 ஏக்கர் காணிகளில் இங்கு விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இருபோக நெல் விளைச்சலுடன், மிளாகாய், மரக்கறிவகைகள் என்பன பயிரிடப்பட்டு வந்தன. கட்டுக்கரையின் நீரைப் பெற்று வளமான வாழ்வு வாழ்ந்தார்கள்.

சமய நிகழ்ச்சியாக மீலாதுன்நபி விழா, ஹதீஸ் உபன்னியாசங்கள், குர்ஆன் மனனப்போட்டிகள் என்பன பிரதி வருடமும் நடை பெற்று வந்தன. திருமண நிகழ்வின் போதும், கத்னா வைபவத்தின் போதும் களிகம்பு நடனம் ஆடப்பட்டு வந்தது. திருமண வைபவங்களிலும், மரணச்சடங்குகளிலும் இரு சாராரும் பங்குபற்றி வந்தார்கள். ஆயுதக் குழுக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை. இந்திய அமைதிகாக்கும் படையாலேயே முஸ்லிம்கள் விடுதலைப்புலிகளுக்கு உதவியளித்தனர் எனக்கூறி கைது செய்யப்பட்டு இம்சிக்கப்பட்டார்கள். நானாட்டான் பிரதேசத்தில் வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் பலவந்த வெளியேற்றத்தின் போது புத்தள மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து சென்று, அங்கு பல அகதிக் கிராமங்களில் வாழ்ந்து வருகின்றார்கள்.



பெருக்கு (Bio - Bub) மரக் கன்றுகள்

# இலங்கை வரலாற்றில் மன்னார் எனும் சாளரம

- எஸ். எம். எம். ஸவாஹிர், M.A.; SLOS
முன்னை நாள் வெளிநாட்டுத் தூதுவர்

ஒரு நாட்டின் அல்லது ஒரு பிராந்தியத்தின் வரலாற்றை எழுதுவதற்கு வரலாற்று ஆதாரங்கள் அல்லது சான்றுகள் தேவை. இந்த ஆதாரங்களையும் சான்றுகளையும் மனித சமுதாயம் அதனுடைய பரிணாம வளர்ச்சியின் பின்னால் விட்டுச்சென்ற தடயங்களிலிருந்து பெறமுடிகிறது. அப்படிப் பெறக்கூடியவற்றை ஞாபகச்சின்னங்கள் Relic என்று கொலிங்வூட் (Collingwood) என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார். ஆதே நேரத்தில் ரேனியர் (Renier) எனும் வரலாற்றாசிரியர் அத்தகைய தடயங்களை தேடிப் பெற்றவை (Traces) என்றும் அழைக்கின்றார்.

மனிதன் கடந்து சென்ற வரலாற்றுப் பாதையில் அவன் வாழ்ந்த நகரங்கள், அவன் உபயோகித்த பொருட்கள், பாவித்த ஆயுதங்கள், விட்டுச்சென்ற ஞாபகார்த்த சின்னங்கள், சிற்பங்கள், வெண்கலப் பொருட்கள், சுவர்களில், கற்பாறைகளில் கீறிவைத்த சித்திரங்கள் மற்றும் அவன் வாழ்ந்த காலத்தில் பிரயோகத்தில் இருந்த கலை களைக்கொண்டு மனிதனது சிந்தனைகளையும் சேர்த்து பதித்து வைத்திருக்கின்ற இலக்கிய வேலைப்பாடுகளிலிருந்து ஒரு வராற்றாசிரியர் வரலாறு என்னும் கம்பளத்தை பின்னியெடுக்கின்றான்.

ரேனியர் என்னும் வரலாற்றாசிரியர் இவ்வாதாரங்களை உலகாயத,உலகாயதமற்ற என்று இரு வகையாகப்பிரிக்கின்றார். தொல்பொருள் ஆராய்ச்சி மூலம் பெறப்படும் புதைபொருள் சின்னங்களை உலகாயதப் பொருட்கள் என்றும், மனிதனுடைய பாரம்பரியம், பழக்கவழக்கங்கள், அவனுடைய கலாச்சாரங்கள், அவனுடைய உரிமை (Heritage) செல்வங்கள் ஆகியவற்றை உலகாயதமற்ற பொருட்களில் சேர்க்கிறார்.

ஊலகாயத ஆதாரங்களை, எழுதப்பட்டவை, எழுதப்படாதவை என மேலும் இரு பிரிவாகப் பிரிக்கலாம். இவற்றில் கட்டிடங்கள், நாணயங்கள், சித்திரங்கள், தளபாடங்கள், பாத்திரங்கள், ஆபரணங்கள் முதலியன எழுதப்படாத ஆதாரங்களாகவும் சட்டரீதியான ஆவணங்கள், கட்டளைகள், கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் என்பனவற்றை எழுதப்பட்ட உலகாயத ஆதாரங்கள் என்றும் ஏற்றுக்கொள்ளலாம். மேலும் எழுதப்பட்ட உலகாயத ஆதாரங்களை சட்டரீதியான ஆதாரங்கள், சட்டரீதியற்ற ஆதாரங்கள் என்றும் வகைப்படுத்தலாம். இந்த சட்ட ரீதியற்ற எழுதப்பட்ட உலகாயத ஆதாரங்களை மேலும் பல உப பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது. இவற்றில் தினக்குறிப்புக்கள் என்றும் கடிதங்கள் என்றும், அன்பளிப்புக்கள் ஆவணங்கள் என்றும், பிரயாண இலக்கியக் குறிப்புகள் என்றும் வகைப்படுத்தப்படும். இவை தனிப்பட்ட சட்ட ரீதியான ஆதாரங்கள் என்று கூறலாம். வரலாற்றுப் பதிவேடுகள் (Annals) காலங்காலமாக (கர்ண பரம்பரை விடயங்கள் - Chronicles) மூதாதை மரபுவழி ஆய்வு ஆதாரங்கள் என்பன சட்டரீதியற்ற ஆனால் விரிவாக எழுதப்பட்ட உலகாயத ஆதாரங்களாகக் கணிப்பிடலாம்.

இத்தகைய அதாரங்களை வைத்துக் கொண்டு வரலாற்றுக் கண்ணோட்டத்தில் கடந்த 2500 வருட இலங்கை வரலாற்றை நாம் பார்க்க வெண்டியுள்ளது. அதிலும் குறிப்பாக இவ்வாதாரங்களைக் கொண்டு இலங்கை வரலாற்றில் மன்னார்ப் பிரதேசம் எவ்வாறு ஒரு சாளரமாக இருந்து வந்துள்ளது என்பதனை ஆராய்வோம்.

தற்போதைய மன்னார் பிதேசம் மன்னார் தீவையும், அதனை

அண்மித்துள்ள நிலப்பிரதேசத்தையும் கொண்டதாகும். மன்னார்த் தீவானது இலங்கையின் மிகப் பெரிய தீவாகும். இத் தீவானது 50 சதுர மைல் அல்லது 130 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டதாகும். இந்த மன்னார் தீவு துண்டிக்கப்பட்ட தொப்புள் கொடிபோன்று இந்திய கடற்கரையிலிருந்து 25 கிலோமீற்றர் தூரத்தில் பிரிந்து காணப்படுகின்றது. மேலும் மன்னார் தீவு ஏனைய நிலப்பிரதேசத்துடன் மோட்டார் பாதை, படகுப்பாதை, புகையிரதப்பாதை ஆகியவற்றின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த மன்னார் தீவிலிருந்து 6 கிலோமீற்றர் தூரத்தில் கிழக்கே 'மாந்தை' அல்லது மாதோட்டம் அல்லது மகாதித்த என்ற இலங்கையின் பழம்பெரும் துறைமுக நகரம் அமைந்துள்ளது. இங்கு கிடைத்திருக்கின்ற சான்றுகளை வைத்துப்பார்க்கும் போது இந்நகரம் ஒரு வளமிக்க வணிகப் பிரதேசமாகவும், பல வெளிநாட்டவர்கள் வியாபார நோக்கமாக வந்து போன இடமாகவும் காணப்படுகின்றது. அன்று அறியப்பட்ட உலக நாடுகளான கிரேக்கம், உரோமபுரி, பாரசீகம், அரேபியா, இந்தியா, சீனா போன்ற நாட்டு வர்த்தகர்கள் இந்த மாந்தை துறைமுகத்தினூடாக இலங்கை நாட்டுடன் வெற்றிகரமாக வியாபாரம் செய்துள்ளமையை நாம் அறிய முடிகிறது.

விஜயனுடைய வருகையுடன் இலங்கை நாட்டின் எழுதப்பட்ட வரலாறு ஆரம்பமாகிறது. அதுவும் விஜயனுடைய வருகையை கௌதம புத்தருடைய பரிநிர்வாணத்துடன் தொடர்பு படுத்திவைப்பதில் இலங்கையின் வரலாற்று நூலான மகாவம்சம் பெரும் ஆர்வம் காட்டுகின்றது. பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்களின் அபிப் பிராயப்படி விஜயனும் அவனுடைய கூட்டாளிகளும் இலங்கையில் வந்து இறங்கிய 'தம்பபன்னி' என்ற இடம் மன்னாரின் தென்பகுதியில் இருந்ததென்று அறிய முடிகிறது. இது மட்டுமன்றி விஜயனுடைய ஆட்சிக்காலம் கி.மு. 5ம் நூற்றாண்டில் துவங்கி அதைத் தொடர்ந்து கி.பி 1000 ஆண்டுகள் வரை இலங்கையில் ஆட்சி செய்த மன்னர்களுக்கு கி.பி 993 வரை இராஜதானியாக விளங்கியது அநுராதபுரமாகும்.

அநுராதபுர நகரம் ஒரு சமவெளிப் பிரதேசத்தில் அமைந்திருந்த

காரணத்தினால் வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் இலகுவாக தலைநகரைச் சென்றடைவதற்கும், அதே நேரத்தில் இலங்கையை அரசாண்ட மன்னர்கள் வெளிநாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் மூன்று முக்கிய துறைமுகங்களைப் பயன்படுத்தி இருக்கின்றனர். இலங்கை நாட்டின் இவ்வாணிபம் நாட்டின் வடக்கே இருந்த இம்மூன்று முக்கிய துறைமுகங்களினூடாகவே நடை பெற்றிருக்கின்றது. இந்த வெளிநாட்டுத் தொடர்புகளும், வெளிநாட்டு வாணிபங்களும் 'மகாதித்த அல்லது மாந்தை வழியாகவும் ஜம்புகொல' என்ற யாழ்ப்பணத்தில் தந்போதைய காங்கேசன் துறையை அண்மியிருந்த துறைமுகத்தையும் "கோகண்ணா" (திருகோணமலை) ஆகிய துறைமுகங்களினூடாக இடம்பெற்றிருக் கின்றது. இந்த மூன்று கடல்வழிகளையும் சற்று ஆராய்ந்தால் அநுராதபுரத்துக்கு வடமேற்கில் இருந்த மாந்தைத் துறைமுகமே ஆகக் கிட்டிய தூரத்தில் உள்ள இடமாகவும் வெளிநாட்டுத் தொடர்புகளும், வெளிநாட்டு வாணிபமும் அதிகமாக இடம் பெற்றிருந்த இடமாகவும் நாம் ஆதார பூர்வமாக ஆராய்ந்து அறியமுடிகிறது. மேலும் மல்வத்து ஓயா, அருவி ஆறு பேன்ற ஆற்றோரப் பாதைகள் மூலம் அப்போதைய அநுராதபுரத்தை இலகுவில் வந்து சேரக்குகூடியதாக இருந்திருக்கிறது.

ஆரம்பகால ஆங்கில வரலாற்று ஆசிரியர்களின் அபிப்பிராயப்படி ஆசியாக்கண்டத்தின் ஒரு பாகத்தில் இருந்து மற்றப் பாகத்திற்கான கடல் வழி வியாபாரம் மன்னார் நீரினை மூலமாக இடம்பெற்றிருந்ததாக கூறுகின்றார்கள். கிழக்கிற்கும், மேற்கிற்குமிடையிலான வியாபார கேந்திர நிலையமாக மன்னார் பிரதேசம் இருந்துள்ளது. இத்தகைய வியாபார செழிப்பினால் மன்னார் கடலில் இருமருங்கிலும் செழிப்பான வளமிக்க நகரங்கள் தோன்றின. இவ்வாறு தோன்றிய பெரு நகரங்களின் வளத்துக்கும், வசதிக்குமாக வடமேற்கு இலங்கையில் பெரும் நீர்ப்பாசன குளங்கள் ஏற்படுத்தப்பட்டன. இப்படியான நீர்ப்பாசன வசதிகள் மன்னார் பிரதேசத்தில் உள்ள மாந்தோட்டம், குதிரைமலை, அரிப்பு, கற்பிட்டி ஆகியவற்றுக்கு அண்மையில் ஏற்படுத்தப்பட்டன.

மேலும் சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மன்னார்

கடலின் மறுபக்கத்தில் இந்தியாவின் கடலோர பிரதேசமான அரிக்கமேடு (தற்போதைய பாண்டிச்சேரிக்கு அண்மையில் உள்ளது) இங்கு பெருந்தொகையான உரோம நாணயங்களும், பல்வேறுபட்ட பாவனையிலிருந்து சிதைந்து போன பண்டபாத்திரங்களும் வெளிக் கொணரப்பட்டன. அதே மாதிரியான புதைபொருட்கள் மாந்தைப் பிரதேசத்திலும் கண்டெடுக்கப்பட்டதாலும் தென்னிந்தியாவைப் பற்றியும் இலங்கையைப் பற்றியும் கிரேக்கர்களும், ரோமனியர்களும் மற்றும் வெளிநாட்டவர்களும் நன்கு அறிந்திருந்தார்கள் என்பது புலனாகிறது. மன்னாரில் குளொடியஸ் (Claudius) என்ற அரசன் காலத்து நாணயங்கள் 1524 ஆம் ஆண்டில் ஒரு கட்டிடத்தின் கீழிருந்து போர்த்துக்கேயர் கண்டெடுத்தனர்.

பிளினியின் வரலாற்றுக் குறிப்புகளின் படி அப்போது அறியப்பட்ட இலங்கையின் ஐந்நூறுக்கு மேற்பட்ட நகரங்கள் இரந்ததாகவும் பளசிமுண்டம் (Palasimundam) என்ற நகரம் அரசனது தலைநகரமாக இருந்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறார். மெகிஸ்பா (Megisba) எனும் ஏரி இருந்ததாகவும் மன்னார் வளைகுடாவில் ஏராளமான பவளப்பாறைகள் இருந்ததாகவும், இவற்றுடன் மன்னார் குடாவில் கிடைக்கும் முத்துக்களுடன் இரத்தினக்கற்களும் சீனாவுடனான வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகித்ததாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இலங்கைக்கு வந்த புகழ்பெற்ற பௌத்த சீன யாத்திரிகனான பாஹியான் - கி.பி 399ல் இருந்து கி.பி 414 வரையான காலத்தில் இலங்கைக்கு வந்திருக்கிறான். அவன் இலங்கையில் தங்கியிருந்த இரண்டு வருட காலத்தில் சீனர்கள் உட்பட பல வெளிநாட்டு வியாபாரிகள் அநுராதபுரத்திலும், அதற்கு அண்டியுள்ள பிரதேசத்திலும் குடியிருந்ததாகவும் அவர்களுடைய வியாபரத்தினுடைய பெரும் பகுதி வடமேற்கு துறைமுகமான மன்னார் பிரதேசத்தினூடாக இடம் பெற்றதுமாகக் கூறுகின்றார். பௌத்தர்களின் சின்னமான புத்தரின் தாது சின்னம் இலங்கைக்கு மஹிந்தனால் கொண்டுவரப்பட்டதும், மார்க்கோபோலோ என்ற இத்தாலியப் பயணியும் இந்த மன்னார் பிரதேசத்தினூடாக நாட்டிற்கு வந்துள்ளனர் என்று பெரும்பாலான வரலாற்றாசிரியர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

மன்னார் பிரதேசம் இலங்கை வரலாற்றில் முக்கியம் பெறுவதற்கு

அக்காலத்தில் காற்றை நம்பி கடற்கரையோரமாக கடலில் ஓடிய அன்றைய கப்பல்களுக்கும், அதிலும் தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றின் மூலம் மேற்கிலிருந்து கிழக்கே வந்து இந்தியா, மலாக்கா, சீனா, ஆகிய இடங்களில் வியாபாரம் செய்து கொண்டு வடகிழக்குப் பருவப்பெயர்ச்சிக் காற்றின் மூலம் தங்கள் சொந்த நாடு திரும்பும் வியாபாரிகளுக்கு மன்னார் பிரதேசம் ஒரு வாய்ப்பான வதிவிடப்பிரதேசமாக அமைந்திருக்கிறது. இத்தகைய வியாபார வர்த்தக செழிப்பினால் அதிகமான மக்கள் தொகையும் இப்பிரதேசத்தில் இருந்திருக்கின்றது. அதனால்தான் முதலாம் பராக்கிரமபாகு மன்னன் இலங்கையிலுள்ள பெரிய குளங்களில் ஒன்றான 4547 ஏக்கர் பரப்பளவுள்ள கட்டுக்கரைக் குளத்தை (Giant's Tank) 12ம் நூற்றாண்டில் கட்டினான். இன்று இந்த இடம் உல்லாசப் பயணிகள் வந்து போகும் இடமாகவும், இடம்பெயர் பறவைகள் (Migrant Birds) கூட்டம் கூட்டமாக வந்து போவதை அவதானிப்பதற்கு உகந்த இடமாகவும் கருதப்படுகின்றது.

அதே போன்று மாந்தை நகருக்கு அண்மையில் உள்ள திருக்கேதீஸ்வரம் என்ற இடத்திலுள்ள சைவ மக்களின் கோயில் மிகப்பழமை வாய்ந்ததும், புகழ்பெற்றதுமான ஒரு வணக்கஸ்தல மாகவும் இருக்கின்றது. இந்த இடத்தில் தொல்பொருள் ஆராய்ச்சிகளின் போது மிகவும் பழமைவாய்ந்த சைவசமய வழிபாட்டுச் சின்னங்களும் கி.முற்பட்ட காலத்து ரோமானிய நாணயங்களும் வெளிக்கொணரப்பட்டதின் மூலம் இவ்விடத்தின் பழமையையும், புகழையும் அறிந்து கொள்ள முடிகிறது.

இலங்கை முஸ்லிம்களின் அதிலும் அராபியர்களின் ஆரம்ப வருகை பற்றி பழமையான வரலாற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளிலொன்றாக இருப்பது மன்னார் பிரதேசத்தில் இருக்கும் பெருக்கு மரங்களாகும். (Bao Bab) மன்னார் நகரத்துக்கு அண்மையில் இரண்டு பாரிய பெருக்கு மரங்கள் இன்னும் நல்ல நிலையிலிருக்கின்றன. இம்மரங்களை சிலேடையாக 'போத்தல் மரங்கள்' (Bottle trees) அல்லது 'தண்டு மரங்கள்' (Trunk trees) என்றும் அழைக்கப் படுகின்றன. இந்த மரங்கள் இந்த நாட்டிற்கோ அல்லது ஆசிய கண்டத்திற்கோ சொந்தமானவை அல்ல. இம்மரங்கள் சகாராப்

பாலைவனத்துக்கு தெற்கே உள்ள செனகல் போன்ற மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்குச் சொந்தமானதொன்றாகும். இத்தகைய மரங்கள் பெருமளவில் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. இந்த மரத்தின் இலைகளை ஒட்டகங்கள் விரும்பி சாப்பிடுகின்றன. ஆகவே இலங்கைக்கு வியாபார நோக்கமாக வடமேற்கு இலங்கையில் மன்னார் ஊடாக வந்த அராபியர்கள் இந்த மரங்களின் இலைகளைத் தங்களது ஒட்டகங்களுக்கு உணவாக இலங்கையில் அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள்.

மிக விசாலமான இந்த மரங்கள் 9 மீற்றர் அல்லது 30 அடிகளுக்கு மேல் சுற்றளவுள்ளது. இவற்றின் பெரிய உருவ அமைப்பு இம்மரங்கள் 1000 வருடங்களுக்கு மேல் பழமையானது என்பதை உறுதிப்படுத்தி யுள்ளன. இம்மரங்கள் 18 மீற்றர் வரை உயரமாக வளரக் கூடியவை. இப்பாரிய மரங்களைக் குடைந்து தண்ணீர் சேகரிப்பதற்கும், தங்கியிருப்பதற்கும் ஆபிரிக்க மக்கள் பயன்படுத்தியிருக்கின்றனர். மிகப் பெரிய பெருக்க மரங்களில் ஆவிகள் தங்கி இருப்பதாக தன்சானியா போன்ற கிழக்காபிரிக்க நாட்டு மக்கள் நம்புகின்றனர். இந்த மரங்கள் இலங்கையில் அரிதாகவும், பெரிதாகவும் இருப்பதனால் இலங்கை மக்களும் இந்த மரங்களுக்கு தெய்வத் தன்மையைக் கொடுத்து விளக்குகளையும், மெழுகு திரிகளையும் ஏற்றிவைப்பதைக் காண முடிகிறது.. இலங்கையில் இந்த மரங்கள் மிக அரிதான இலைகளையும், கிளைகளையும் கொண்ட தண்டு மரமாக காணப் படுகின்றது. ஒட்டகங்கள் இம்மரங்களின் இலைகளை எட்டக் கூடிய அளவிற்கு சாப்பிடுகின்றன. அராபிய மரபுக் கதைகளின் படி இம்மரம் சபிக்கப்பட்ட சைத்தானால் தலைகீழாக வீசி எறியப்பட்டதாகவும், அதனால் கிளைகள் வேர்களைப் போலவும், வேர்கள் கிளைகளைப் போலவும் வளர்வதாகக் கூறப்படுகின்றது.

17ம் நூற்றாண்டில் வெள்ளவாய்க் கணவாயில் நடைபெற்ற போத்துக்கேயருக்கெதிரான போரில் கண்டி மன்னனின் சார்பில் ஒரு ஒட்டகைப் படையணியும் (ஓடுபந்தி) இடம்பெற்றிருப்பதாக சைரஸ் D.F. அபயகோன் என்பவர் 'இலங்கை சோனகர் தமது வரலாறு பற்றி பெருமையடைய முடியும்' என்ற கட்டுரையில் 1999ஆம் ஆண்டு 15ம் திகதி இலங்கை டெய்லி நிவுஸ் பத்திரிகையில் எழுதியிருந்தார்.

தான் வெள்ளவாய்க் கணவாய் போரில் வெற்றிபெற்றதை கௌரவிக்கும் முகமாக இரண்டாவது இராஜசிங்க மன்னன் (கி.பி. 1634 - கி.பி. 1684) அங்குறாங்கெத்த மகா தேவாலயத்திற்கு வழங்கிய காணிக்கைச் சீலையில் இந்தப்படையை சித்திரமாக வரைந்து சமர்ப்பித்திருக்கின்றான். இவ்வொட்டகைப் படையணி 17ம் நூற்றாண்டில் கண்டிய மன்னனின் படையின் ஒரு பகுதியாக இருந்ததால் அதற்கு முற்பட்ட காலத்திலேயே அரேபியர்கள் ஒட்டகங்களை இலங்கைக்கு கொண்டுவந்திருக்க முடியும். அவுஸ்திரேலியாவைக் கண்டு பிடித்தவரும், அமெரிக்காவைக் கண்டுபிடித்தவரும் ஒட்டகங்களையும், அவற்றினை ஓட்டுவதற்கு அப்கானிய நாட்டைச் சேர்ந்தவர்களையும் கொண்டு சென்றிருப்பதை அந்நாட்டு வரலாறுகள் மூலம் நாம் அறிகின்றோம். இதன் மூலம் அந்நாடுகளிலுள்ள பாலைவனங்களை கடந்து செல்வதற்காகவும் அவற்றின் வளங்களை ஆராய்ச்சி செய்ததாகவும் கூறப்படுகின்றது.

காலக்கிரமத்தில் அந்நியப்படையெடுப்புகளால் 1500 வருடங்கள் செழிப்பான தலைநகராய் இருந்த இலங்கையின் அநுராதபுர இராஜ்யம் வீழ்ச்சியடைந்து மன்னர்கள் நாட்டின் உட்பிரதேசத்திற்குச் சென்றதாலும் உரோம, கிரேக்க, பாரசீக நாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களாலும் மேலும் வளமான வியாபாரச் சாதனங்களும் துறைமுகங்களும் புதுப்புது இடங்களும் கண்டுபிடிக்கப்பட்டதாலும் இலங்கை அரசர்கள் வேறு துறைமுகப்பட்டினங்களை தங்களது வியாபாரத்திற்குப் பயன்படுத்திய காரணங்களாலும் பாய்மரக் கப்பலில் வியாபாரம் செய்தவர்கள் பெரிய துடுப்போடக் கப்பல்களில் கடல் பயணங்களை மேற்கொண்டதாலும் ' கடலினூடாக பட்டுப்பாதை' (Sea Silk Road) அதன் புகழையும் முதன்மையையும் இழந்து வளர்ந்து வந்த அறிவு சாதனங்களுக்கு வழி விட்டதன் காரணமாக அறிக்க மேடு, காவிரிப்பூம்பட்டினம், போன்ற இந்திய நகரங்களுக்கு ஈடாக இருந்த மாந்தை நகரமும், மன்னார் பிரதேசமும் தனது செல்வாக்கைக் காலக்கிரமத்தில் இழந்து விட்டது. இருந்தாலும் எந்தவொரு வரலாற்று ஆசிரியராலும் மன்னார் பிரதேசம் இலங்கை வரலாற்றில் ஏற்படுத்தி இருக்கும் இறுக்கமான உறவையும் தாக்கத்தையும் மறுக்கமுடியாதுள்ளது.

# மன்னார் மாநில பண்பாட்டுப் பாரம்பரியங்களில் கிராமியக் கலைகள்.

"கலை அமுதன்" டாக்டர்-அல்-ஹாஜ்.
எம்.ஸீ.எம். இக்பால்.

அறிமுகம்

சுமார் ஆயிரம் வருடங்களைக் கொண்ட வட புல இஸ்லாமியர்களின் வரலாற்றுச் சுவடுகளிலே கிராமியக்கலைகளின் தோற்றமும் வளர்ச்சியும், பண்பும், பயனும், மிக மகத்தானவை.

ஈழத்து முஸ்லிம்களின் தாய் மொழி தமிழ் என்பதும், தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியங்களினது கவர்ச்சியில் முஸ்லிம்கள் உள்வாங் கப்பட்டது, மற்றும் தென்னிந்திய மாநிலங்களினது கலாசாரத் தொடர்புகள் ஆகிய மும்முனைத்தாக்கம், வடமாநில முஸ்லிம்களின் கலைப் பாரம்பரியங் களை சோபை படுத்தின என்பது, தெளிவு படுத்தப்பட்ட தரவுகளாகும்.

வன்னிப் பெரும் புவியில் நதி மூலமான, மாதோட்டம் எனப் புகழ் பெற்ற மன்னார் மாநிலம், வடபிராந்தியத்தின் பெரும்பான்மை முஸ்லிம்களைக் கொண்ட, இறைமை மிக்கதொரு தொகுதியாகும். கலை, இலக்கியம், மரபுசார் பண்பாட்டுப் பாரம்பரியங்களின் விளை நிலமான, இப்பகுதியின் கிராமியக் கலைகள், எழுச்சியும், சிறப்பும் கொண்ட வரிசை மிகு பயன்பாடுகள் இதிலே விபரிக்கப்படுகின்றது.

### அசைவுறு கலைகள்:

பொழுது போக்கு அம்சங்களாகப் பின்பற்றப்படும் கிராமியக்கலைகள் ஜனரஞ்சகமானவை, மனதிலே மகிழ்வையும், தெம்பையும் ஊட்டக் கூடியவை. நாட்டுக்கு நாடு, பிரதேச, மொழி, மத, பால், பருவ வரம்புகளுக்கிசைந்தவாறு வெவ்வேறு வடிவங்களிலே வேறுபாடு கொண்டன. மன்னார் மானிலத்தைப் பொறுத்தவரை நூதனங்கள் நிறைந்த இத்தகைய கிராமியக் கலைகள் சிலாகிக்கத்தக்கவை.

### கும்மி:

கழிகம்பு, கோலாட்டம், என்றெல்லாம் சொல்லப்படும் இந்த ஆட்டம் ஒருவகைக் குழு நடனமாகும். மங்களகரமான நிகழ்வுகள், வரவேற்பு, பெருநாட்கள், கலை விழாக்கள், மாப்பிள்ளை அழைப்பு, கத்னா வைபவம் போன்றவற்றிலே கும்மியடித்து மகிழ்வர். ஆண்களுக்குரிய இந்த வேடிக்கை வினோதத்திலே இப்போது பெண்களும் பங்கேற் கின்றனர்.

பாடல்கள் பாடிய வண்ணம் ஆடுதல் மற்றும் தனியே பாடுவதைக் கேட்டு அதற்கேற்ப ஆடுதல், மௌனித்து ஆடுதல் என்று பலவகை உள்ளன. மல்லி, கிறுகு, தாளம், எட்டுவெட்டு, பதினாறுவெட்டு போன்ற அசைவுகள் கோலாட்டத்தின் பிரதான அம்சங்களாகும். சுமார் ஒன்று, ஒன்றரை அடி நீளமான கொட்டான்கள் கும்மியடிக்கப் பயன் படுகின்றன. இப்போது இத்தகைய கழிகம்புகளுக்குச் சோடனைக் கடதாசிகள்ஒட்டி அழகு படுத்தி உபயோகிக்கின்றனர்.

பொல்லடிக்கு ஏற்றவாறு பாடல்கள் அமைதல் முக்கியம். இல்லாவிடில் தப்புத்தாளமாய், அடிபிசகிச் சுருதிமாறி, ஆட்டம் குலைந்து போகும். ஆதலினால் கும்மிப்பாடல்கள் இயற்றுவதற் கென்றே சில சாணக்கியப் புலவர்கள் மன்னாரிலே வாழ்ந்து மறைந்து விட்டனர். அவர்களினதும் பாடல்களே இன்னும் பாடப்படுகின்றன.

சந்தம், இசை, தாளம், அபிநயம், உடல் அசைவு இவற்றுடன் கூடிய

கும்மிகளே சோபிக்கின்றன. இவ்வாறான சீரொழுங்குள்ள கும்மி இசைக்குத் தும்பிகள் மதிமயங்கி நடனமாடுவதாகச் சொல்லப் படுகிறது. கிராமப்புறங்களிலே நடைபெறும் தாளலயத்துடன் கூடிய கும்மியாட்டங்களுக்கு, தும்பிகளே படையெடுத்து வந்து அவ் விடத்தைச் சுற்றிச்சுழன்று பறந்து திரிவதை அவதானிக்கலாம்.

கோலாட்டத்துக்கு வயது வித்தியாசம் தேவையற்றதெனினும் ஆடுபவர்களின் உயரம் கணிக்கப்படுகின்றது. உயரத்திலே ஏற்ற இறக்கமிருப்பின் கையசைவு குழப்பமடையும். அடிகள் தடிகளிலே அச்சொட்டாகப் படாது. இதனால் சுருதி பிசகுறும் என்பதாலேயே கும்மி யடிக்கும் கோஷ்டி ஒரே உயரத்தினராக இருக்க வேண்டும் என்பது கவனிக்கப்படுகின்றது. ஒரு கும்மியாட்டத்திற்கு எட்டு நபர்கள் சேர்ந்து ஆடுதலே சிறப்பானது.

ஹஜ்ஜுப் பெருநாள், நோன்புப் பெருநாள், முஹர்ரம், மீலாது விழாக்களிலே கும்மியடித்து மகிழ்தல் இடம் பெறுகின்றது. கல்யாண வீட்டிலே மாப்பிள்ளையைப் பெண் வீட்டுக்கு அழைத்துப் போகும் போது, கும்மியடித்து அழைத்துப் போவார்கள். கிராமங்களுக்கு யாரும் முக்கியமான பிரமுகர்கள் வருகை தந்தால் அவர்களை வரவேற்று கும்மியடித்து அழைத்துப் போவார்கள். இன்னும் சுன்னத்து வீடு, பெண் ருதுவான தலைமுழுக்கு போன்ற நிகழ்வுகளிலும் கும்மியடித்து மகிழ்வார்கள்.

கும்மியடித்தலுடன் தொடர்புடைய மற்றொரு நடனமே சீனடி, சிலம்படி யாகும். இதுவொரு தற்காப்புக் கலையுடன் சார்புடையதெனினும் கும்மி அடிக்கும் இடங்களிலே இருவர் அல்லது நால்வர் சேர்ந்து நீளமான தடிகளைக் கைவிரல்களிலே இடுக்கிச் சுற்றிச் சுழன்று ஆடுவர். ஒருவர் சுழற்றும் தடி மற்றவரது தடியுடன் மோதினாலும் தனது மேனியில் அடுத்தவரின் தடியடி படாமற் தடுத்து ஆடுவதே இந்த வீர விளையாட்டின் நோக்கமாகும்.

வாள் வீச்சு விளையாட்டு என்பதும் இவற்றினோடு தொடர்பு பட்ட மற்றோர் அம்சமாகும். சில ஊர்களிலே சவுக்கடி விளையாட்டுகளும் இடம் பெறுகின்றன.

ஆராத்தி - குரவை : திருமண மரபுகள்

திருமண வீடுகளிலே பலவகைப் பழக்க வழக்கங்கள் நடைமுறை யிலுள்ளன. சீர் வரிசை, சீதனப் பணம் போன்றவற்றை மஞ்சள் துணியிலோ அல்லது வெள்ளைத் துணியிலோ சந்தனம் பூசி அதிலே மடித்துக் கொடுத்தல். திருமண இரவு மாப்பிள்ளை - பெண், முட்டெண்ணை வைத்துக் குளித்தல், (அதாவது மன்னார்ப்பகுதிகளில் திருமணங்கள் அதிகமாக இரவு வேளைகளிலேயே நடைபெறுவது வழக்கம்) போன்ற மங்கள வழக்கங்கள் நடைமுறையிலிருந்தன.

மாப்பிள்ளை மணக்கோலம் பூணுதற்கு முன் தலை முழுகுவார். கோழிமுட்டை, நல்லெண்ணை கலக்கித் தலையிலே பூசிக்கொண்டு அதிலே அரைப்பகுதியைப் பெண்வீட்டுக்கு அனுப்பிவிடுவர். அந்த முட்டெண்ணையைப் பெண் தலையிலே தேய்த்துக்குளிப்பாள். மாப்பிள்ளை பெண்வீடு புறப்பட்டதும் சலவாத்து, முனாஜாத்து, பைத் ஓதி பள்ளிக்கு அழைத்துப் போவார்கள். பிற்பாடு பெண்வீடு போவர். மாப்பிள்ளை பெண் வீட்டை நெருங்கியதும் வெள்ளைச் சீலை விரித்து அதிலேயே நடந்துவர, வரவேற்பளிக்கப்படும். பெண்வீட்டை அண்மித் ததும் பெண்ணின் சகோதரன் மாப்பிள்ளையை, விரல்கோர்த்து கூட்டிச்செல்வார். வாசலிலே குரவை போடப்படும். ஒருவர் கவிபாட மற்றவர்கள் அதற்கு ஆமா, போடுவர். கவி பாடியவர் வாய்க்குள் விரல்வைத்துச் சத்தமிடுவர்.

பிற்பாடு மாப்பிள்ளையின் கால்களை மச்சான் தண்ணீர் ஊற்றிக் கழுவுவார். அதற்கு அன்பளிப்பாக மாப்பிள்ளை, மச்சானுக்குப் பவுண் மோதிரமொன்றை மாட்டிவிடுவார். பிற்பாடு ஆராத்தி எடுக்கப்படும். தேங்காய்ப் பூவுக்கு பலவித நிறமூட்டி வெண்தட்டையிலே கோலமாக அலங்காரம் செய்து ஆராத்தப்படும். சுண்ணாம்பு கலந்த மஞ்சள் தண்ணீர்த் தட்டிலே கொட்டைப் பாக்கும், வெற்றிலையும் போட்டு மாப்பிள்ளையின் தலையை மூன்று முறை சுற்றுவர். ஒவ்வொரு முறையும் மாப்பிள்ளை, ஆராத்தித் தட்டிலிலே உமிழ்ந்து துப்புவார். பிற்பாடு அவை கடவல் வேலியடியிலே வீசப்படும். மாப்பிள்ளைக்குப் பால் பழம் பருக்கப்படும். அவர் பருகிய எச்சில், உடனடியாகவே பெண்ணுக்கும் மூன்று மிடறு பருக்கப்படும். இதனைக் 'காவின் பால்'

என்பர்.

மாப்பிள்ளை வீட்டுக்குப் பெண்கூட்டிச் செல்லும் ஏழாம் நாள், இதே நடைமுறைகள் அதாவது முழுவாட்டுதல், சீலை உடுத்தல், காசு, பூக்கள், திண்பண்டங்களை ஓலைப்பெட்டியிலே நிரப்பி மாப்பிள்ளை, பெண் தலையிலே கொட்டுதல், 'சீர்' என்ற பெயரில் ஏழு கடவாய்ப் பெட்டிகள் ஏழுவகைப்பலகாரம் செய்து எடுத்துச்செல்லுதல், மாப்பிள்ளையை வெளியே விட்டுக் கதவைச்சாத்துதல், போன்ற பல வேடிக்கை விநோதப் பழக்க வழக்கங்கள், தலைவாசலிலே உலக்கையைப் போட்டுக் கடத்தல் போன்ற நெறிமுறைகளும் வழக்கிலிருந்தன.

கத்னா வைபவம்

ஆண்பிள்ளைகளுக்கு 7 - 10 வயதுக்கிடையே விருத்தசேதனம் எனும் சுன்னத்து எடுத்தல் "சுன்னத்துக் கலியாணம்" என்ற பெயரிலே வைபவமாகக் கொண்டாடப்பட்டது. கலியாண வீடு போன்று பந்தல் கட்டிப் பாட்டுப் போட்டு ஊரவர்களை அழைத்து பனானா பிஸ்கத், பால் தேத்தண்ணி, பூ பிஸ்கட் உபசாரம் செய்வர். பன்னீர் தெளிப்பர்.

பிற்பாடு சுன்னத் எடுக்கும் சிறுவனுக்குப் புத்தாடை அணிவித்து, தங்கச்சங்கிலி, மாலை போட்டு 'பைத்' ஓதி பள்ளிக்குக் கூட்டிப் போய் 'துஆ' ஓதியபின் அதே ஊர்வலமாக வீட்டுக்கு அழைத்து வந்து, உடுப்பு மாற்றி, வெள்ளைத்துணி உடுத்தி, உரலின் மேலே உட்காரவைத்து நாலைந்து பேர் ஓலைப்பாய்களால் மறைத்துப்பிடிக்க, கூடியிருப்போர் தக்பீர் சொல்ல, கத்னா செய்பவர் பொடியன் தொடையிலே இருகக்கிள்ளியெடுக்க, அந்தக்கிள்ளல் நோவிலே, பையன் கதறி அழ, அதேவேகத்திலே கிட்டியால் கிட்டிப்பிடித்து, நறுக்கென வெட்டிவிடுவார்.

பிறகு பையனை சேர்வைக்கல்லிலே இருத்தி சுளகினால் காற்று விசுக்குவர். பிறகு மருந்துகட்டிக் கோழியிறகினால் எண்ணெய் தொட்டுப் போடக் கொடுப்பார். ஏழாம் நாள் கட்டவிழ்த்து, வெற்றிலையை வாட்டி ஒட்டிவிடுவார்கள். ஒவ்வொருநாளும் உற்றார்

உறவினர்கள் பையனை வந்து பார்த்துவிட்டு அன்பளிப்புக்கள், தின்பண்டங்களெல்லாம் கொடுத்து விட்டுப் போவார்கள்.

இதே போன்றே பெண்பிள்ளைகள் பராயப்பட்டால் அதை உற்றார் உறவினர்களுக்கு மட்டுமே தெரிவிப்பார்கள். ஊர்முழுதும் பிரபல்யப் படுத்த மாட்டார்கள். முட்டையை அவித்து நல்லெண்ணையில் தொட்டுக்கொடுத்தல், கத்தரிக்காய், ஓராமீன் போன்றவற்றை இலுப்பெண்ணையில் பொரித்துக்கொடுத்தல், எள்ளும் சக்கரையும் துவைத்துக் கொடுத்தல், வெளியே போகும் போது கையிலே ஏதாவது இரும்புப்பொருட்களை எடுத்துப்போகுதல், ருது அடங்கிய ஏழாம் நாள் சீயாக்காய், அரப்பு, பசும்பால் போன்றவற்றைத் தலைக்குத் தேய்துக் குளித்தல் போன்ற சம்பிரதாயங்கள் மாதோட்டப்பகுதியிலே வழக்கிலிருந்தன.

### கொடி எடுத்தல

மேற்கே விடத்தல் தீவு தொடக்கம் தலை மன்னார் பியர், தாராபுரம், எருக்கலம்பிட்டி, முசலி, நெடுங்குளம் ஈறாக, ஒவ்வொரு முஸ்லிம் கிராமங்கள் தோறும் நாதாக்கள், அவுலியாக்களின் ஸியாரங்கள் காணப்படுகின்றன. காடு, மேடு, கானகம் முழுவதிலும் கூட இத்தகைய நல்லடியார்களின் தர்ஹாக்கள் கண் முன்னே காட்சி தருவதாக உள்ளன.

ஊரிலே, பஞ்சம், பசி, பட்டினி, மழையில்லாத வரட்சி, மற்றும் தொற்று நோய்கள் ஏற்படும் போதெல்லாம் ஊரவர்கள், நேர்ச்சை செய்து பச்சை, வெள்ளைக்கொடிகள் பிடித்து முனாஜாத்து, பைத்துக்கள் ஓதி ஊரைச்சுற்றி வலம் வந்து, ஊரின் நான்கு மூலைகளிலும், முறாது செய்து கொடிகள் ஏற்றுவது, காவல் பாடு செய்வது வழக்கமாகும்.

மேற்படி தர்ஹாக்களுக்கு அவ்வவ் ஊரவர்கள் கால்நடையாகச் சென்று மரநிழலிலே வெள்ளைகட்டித் தொழுகை நடத்தி, கந்தூரி காய்ச்சிப் பகிர்ந்து, மழைபைத் ஓதியபடி வீடுவரும் போது, மேகம்

கறுத்து இடி மின்னலுடன் மழை கொட்டோ கொட்டென்று கொட்டுவதும், அதிலே மழை வேண்டி ஊர்வலம் போனவர்கள், நனைந்து கொடுகி வீடுவந்து சேருவதெல்லாம் நிதர்சனமான காட்சிகளாகும்.

நோய், நொடி, பஞ்சம் தீர்ந்து ஊர்செலிப்புற்றதும், ஊர்ப்பள்ளியிலே புர்தா ஓதி பெரிய அளவிலே கந்தூரி செய்து ஊர்முழுவதும் அன்னதானம் செய்யும் நிகழ்வும் பரவலான சம்பவங்களாகும்.

மாறாத நோய்களால் பீடித்தோர், பேய், பில்லி, சூனியம், கண்ணேறு, செய்வினை, மனநோய் மற்றும் திருமணத்திற்காக ஏங்கும் பெண்கள், பிள்ளைகள் இல்லாதோர் போன்றவர்கள் இவ்வாறான தர்ஹாக் களிலே போய், 'தர்ஹா காத்தல்' எனும் வேண்டுதல் விண்ணப்பம், அதற்காக முடிவளர்த்தல், பச்சை குத்துதல், ஊசி போடுதல், மௌனவிரதம் அனுஷ்டித்தல், தீ மிதித்தல் போன்றனவும் முன்னைய காலங்களிலே மக்கள் மத்தியிலே நடைமுறையிலிருந்தன.

இத்தகைய நாதாக்களின் பெயரால் நேர்ந்து கட்டுதல், களவுபிடித்தல், காணாமற்போன மாடு, ஆடு, மற்றும் பொருட்களைத் தேடுதல், அழும்பிள்ளைகளை ஓதி ஊதுதல், தண்ணீர் ஓதிக்கொடுத்தல், நூல், துஆ கூடு, இஸ்மு, அட்சரம் போன்றன கட்டுதல், மைவெளிச்சம், பால் பார்த்தல், குறிபார்த்தல், தொடுபால் போன்ற பல செயற்பாடு களை மக்கள் பக்தியுடனும், அச்சத்துடனும் அதே நேரம் பாரம்பரிய மிக்க தொன்று தொட்டு நடாத்திவரும் பண்பாட்டுப்பழக்க வழக்க மாகவும் செய்து வந்தனர். இவைகளிற் பல விடயங்களை நாம் ஏன் செய்கிறோம் என்ற விபரம் புரியா அளவுக்குக் கண்முடித்தனமான பழக்கவழக்கங்களும், 'மரபு'என்ற ரீதியிலே செய்யப்பட்டு வந்தன. அவற்றிலே மக்கள் மனநிறைவும், தன்னம்பிக்கையும் கொண் டிருந்தமையினாலே காலம் காலமாக, அவை தவிர்க்க முடியாத தாயிற்று.

பாட்டுப்படித்தல்

தப்லீக் ஜமாஅத்தின் த.'.வா என்னும் சன்மார்க்கத்தை எத்திவைத்தல் பணி தீவிரமடையு முன்பு இப்பாட்டுப்படித்தல் நிகழ்வு பிரபல்யம்

பெற்றிருந்தது. இதுவும் ஒருவகை மார்க்க விடயங்கள் மீதான விரிவுரை என்பதாலே, மக்கள் பக்தியுடன் பங்கேற்றனர். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார்ப் பகுதிகளிலே பாட்டுப்படித்தல் முறை பின்பற்றப்பட்டிருந்தாலும், மன்னார்ப் பகுதியே பிரசித்தம் பெற்றது.

சீறாப்புராணம், முகிதீன் புராணம் குதுபு நாயகம் போன்ற பிரபல்யம் மிக்க இஸ்லாமிய புராணங்களுக்குப் புலவர்கள் விரிவுரை பாராயணம் செய்தலே பாட்டுப்படித்தலின் முக்கிய அம்சமாகும். புர்தா, படைப் போர், முனாஜாத்து மாலை போன்ற இதிகாச உப கிரந்தங்களுக்கும் ஆங்காங்கே விரிவுரைகள் செய்யப்பட்டன. பிற்காலத்திலே பாட்டுப் படித்தலில், ஹதீஸ் மஜ்லிசுகளும் இடம்பெற்றன.

ஊரின் மத்தியிலே, பூ மேடைகட்டி, சோடனை, மின்விளக்கு அலங்காரம் செய்து, ஐந்து அல்லது ஏழு நாட்கள் இந்த வைபவம் நடை பெறும். இறுதி நாளன்று பாரிய அளவிலே கந்தூரி இடம் பெறும். ஒவ்வொருநாள் நிகழ்விலும் நோயாளர்களுக்கான விஷேட பிரார்த்தனை மற்றும் நேர்ச்சை செய்தல் போன்றன நிகழும்.

புலவர் நடுவிலே அமர்ந்திருக்க, அவருக்கு முன்னாலே, ஆமாப் புலவர் அமர்ந்திருப்பார். பாடல்களுக்குப் புலவர்கள் வியாக்கியானம் சொல்லும் போது அதைச் சரியென அங்கீகரிப்பதாக ஆமாப்புலவர் தலையசைத்து "ஆமா" ஆமா என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். விடுபடும் சொற்களை, கவிதை வரிகளை புலவர்கள் திருப்பிக்கேட்டால் ஆமாப்புலவர் அதனை உடனேயே எடுத்துச் சொல்ல வேண்டும். பாடல்களைப் பாடுவதற்கென புலவரின் இடது, வலது பக்கங்களிலே ஐவர் விகிதம் அமர்ந்திருப்பர். பாடுபவர்கள் தொண்டை கம்மி விடாமலிருக்க. கற்கண்டு, மிளகு, மாதுளம் பரல்கள், தண்ணீர் போன்றன வைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு மகிழ்ச்சிகரமாக இந்நிகழ்வு, பக்தி சிரத்தையுடன் கொண்டாடப் படுகின்றது.

### கிராமியக் கவிதைகள்

மன்னார் மா பூமி, நாட்டார் இலக்கியத்திலே பெயர் போன பிராந்திய

மாகும். நாட்டுப்பாடல்கள் , ஆசைக்கவி, போன்றன இனிமையும் கற்பனை வளங்களும் மிக்கவை. உள்ளத்திலே கிழர்ச்சி, நெகிழ்ச்சி, சாந்தம், அமைதி போன்றவற்றை ஏற்படுத்தவல்லன. சோடி சேர்ந்து பாடுதல், தனியே பாடுதல் குரல் மீட்டி இசை கோர்த்துப்பாடுதல் போன்றன நாட்டுப்பாடல்களுக்கு இனிமை சேர்க்கின்றன.

இதே போன்ற நொடிப்பாடல்கள், அரிவு வெட்டுப்பாடல்கள், சூடு மிதித்தல், பாரம் இழுத்தல், வயல் உழுதல், ஊஞ்சற்பாட்டு, வலை இழுத்தல், வள்ளம் வலித்தல், தாலாட்டு, குழந்தைகளைக் களிப் பூட்டும் விடுகதை, விளையாட்டு, குருவிப்பாட்டு, மிருகங்கள் விலங்குகள், பறவைகள், அம்புலிப்பாட்டுக்கள் போன்றன கிராமியக் கவிதைகளாக இனிமை சேர்க்கின்றன. அவைபற்றிய விரிவான விவரணம் எழுதினால் இக்கட்டுரை விரிவடையும் என்பதால் தவிர்க்கப்படுகின்றது

தூது சொல்லுதல், காதல் மொழி, காதல் கடிதங்கள், பெண் வர்ணனை, ஆணழகு போன்றனவும் கிராமியக் கவியமுதத்திலே மிக இனிமையானவை.

களைப்பு நீங்க, மனக்கவலை போக்க, கற்பனையில் மிதந்து மகிழ, துன்ப துயரங்களைப் பகிர்ந்து பங்கீடு செய்ய இத்தகைய கிராமியக் கவிதைகள் நெஞ்சகத்தின் சஞ்சீவியாகத் திகழ்கின்றன. அதே நோக்கிலும் போக்கிலும் உண்டான கிராமியக்கதைகள் விறுவிறுப்பும், இரசிப்புச் செழுமையும் நிறைந்தவைகளாகும். இயற்கையோடு வருடிச் செல்லும் சிறுவர்கதைகள், மற்றும் சம்பவங்கள், மனசுக்குச் சுகம்தர வல்லனவாகும். இத்தகைய இலக்கிய இன்பங்கள் எல்லாப் பிராந் தியங்களிலும் பரவலாகக் காணப்பட்டாலும் மன்னார் மண்வாசனை கலந்த கிராமிய இலக்கியங்கள் தனித்துவமானவை என்பதைத் துணிந்து கூறலாம். ஊர்ப்பாடல்கள், அறம்பாடுதல், பக்கீர் பைத் நாடகம், வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், நாட்டுக் கூத்து போன்றனவும் மன்னார்ப் பிராந்தியங்களிலே ஆங்காங்கு காணப்படுகின்றன.

**கிராமிய விளையாட்டுக்கள்**

கிராமிய இயல், இசை, இன்பத்திலே கிராமியக்கலைகளிலொன்றாக

விளையாட்டுக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இயற்கையோடு ஒன்றி வாழும் கிராமிய மக்கள் உடல், உள வலிமை மிக்கவர்கள். இதனாலே பொழுது போக்கு நிகழ்வுகளிலும் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். மாலை நேரங்கள், விடுமுறைநாட்கள், பெருநாட்கள் மற்றும் கலை, கலாசார நிகழ்வுகளிலே தமது விளையாட்டு வீர தீரத்தையும், திறமைகளையும் வெளிக்காட்டுவதிலே மிகுந்த ஆர்வம் கொண்டு திகழ்கின்றனர்.

கிராமிய விளையாட்டுகளிலே கிளித்தட்டு மறித்தல், கெந்தியடித்தல், கண்கட்டி விளையாட்டு, கிட்டி புள்ளு, பல்லாங்குழி, சித்தாடை, ஊஞ்சல், கால்கட்டி ஓட்டம், கயிறடித்தல், போன்றன மன்னார் மாநிலத்திலே கிராமங்கள் தோறும் பரவலான பொழுது போக்கு விளையாட்டுக்களாகும்.

இவ்விளையாட்டுக்களிலே அதிகமானவை கூட்டு அணிகள் சேர்ந்தே மேற்கொள்ளப்படுகின்றன. மரநிழல், வயல்வெளிகளே இவைகளுக் கேற்ற விளையாட்டுத் திடல்களாகும். சில சமயங்களிலே குதூகலம் கொண்ட வயதானவர்கள் கூட இவ்வாறான விளையாட்டுக்களிலே ஈடுபடுவதைக்காணலாம்.

சிலவகை வீரதீர விளையாட்டுக்கள், யானை, புலி, மலைப்பாம்பு, முதலை, வேட்டைகளிலும் கிராமத்தவர்கள் தமது திறமைகளைக் காட்டிய சம்பவங்களும் இப்பகுதிகளிலே நிகழ்ந்துள்ளன. கையிலே துணியைச் சுற்றிப் பாய்ந்து வரும் வேங்கையின் வாய்க்குள்ளே கையைத் திணித்து அதன் குரல்வளையைப் பிடித்து அமுக்கி புலியை வீழ்த்துதல், குழிபறித்து யானையை வீழ்த்தி கொம்பன் யானை வேட்டையாடல், மயில் பிடித்தல், குறிதவறாது சுட்டு மான், மரை வேட்டையாடுதல், கல்லெறிந்து பறவைகளை வேட்டையாடுதல் போன்ற பல சாகசங்களும் இப்பகுதிகளிலே கிராமத்தவர்களின் கை வந்த கலைகளாகும்.

இதே போன்றே கைப்பணிப்பொருட்கள், பனை ஓலையில் பாய் இளைத்தல், கடகபெட்டி. தட்டுப்பெட்டி, சுளகு, நீத்துப்பெட்டி பின்னுதல், பன் புல்லிலே பாய் பின்னுதல், தென்னை ஓலை, வாழைத்தண்டு

போன்றவற்றிலே கலியாணப்பந்தல் சோடனை செய்தல், அலங்காரம் செய்தல் போன்றவற்றிலும் இப்பகுதி மக்களின் கிராமியக் கலை நயம் மெச்சத்தக்கது.

முடிவுரை

இலக்கியம் என்பது மானிடப் பண்பியலின் ஒளித்தெறிப்பாகும். அதிலே வாழ்க்கையின் ரம்மியங்களும், ரசனைகளும் பரவி, விரவிக் கிடக்கின்றன. ஒரு தேசத்தின், நாட்டின், பிரதேசத்தின் எழுச்சிக்கும் புகழ்ச்சிக்கும், நாட்டின், பிரதேசத்தின் புகழ்ச்சிக்கும், ஊன்றுகோலாய், கால்கோளாய்த் திகழ்வது கிராமிய நாகரீகங்கள்தான். இத்தகைய இலக்கிலே, மன்னார்ப் பிரதேசத்திற்குப் 'பேரும் புகழும்' ஈட்டித் தந்ததிலே கிராமிய இலக்கியங்கள், கலைகள், மற்றும் பண்பாடுகளின் மகத்தான பணி மெச்சத்தக்கது என்பதை நிரூபிக்கலாம். விவசாயம் தொடக்கம் முத்துக்குளிப்பது வரை, காட்டிலே விறகு வெட்டுதல், வேட்டையாடுதல் தொடக்கம் கல்லூரிகளிலே உயர்கல்வி பெறும் வரை சகல துறைகளினதும் விளைநிலத்து உரமாகப் பயன்பட் டிருப்பது கிராமியக்கலைகளும், வளங்களும்தான் என்பது மிகை யானதல்ல.

கிராம மக்களின் மனோவலிமை, திடகாத்திரம், தெளிவான சிந்தனை, உண்மையான இயற்கையை, உள்ளபடி, உள்ளம் திறந்து நிறைந்து ரசிக்கும் தன்மை, பழைமை தழுவும் கொள்கை, அதிலே எழுகின்ற அதீத நம்பிக்கை, பரம்பரைப் பழக்க வழக்கங்கள் இவை அனைத் தினதும் ஒட்டு மொத்த வெளிப்பாடுகள்தான் கிராமியக்கலைகளாகும். இவை பிராந்திய ரீதியிலே வேறுபட்டாலும் கலையம்சத்துடன் ரசிக்கும் தன்மை கொண்டவைகளாகும்.

இந்த வகையிலே மன்னார் மாநிலக் கிராமியக்கலைகள் எழிலும் பொழிவும், இனிமையும், சுவையும் கொண்ட தனித்துவம் மிக்கவை என்பது வெள்ளிடை மலை.

**உசாத்துணை :**

*மன்னார் முஸ்லிம்கள் வரலாறு - கலாநிதி K.M.H. காலிதீன்*
*கட்டுரைகள் - 'கலாபூஷணம்' கலைவாதி கலீல்*
*தமிழ்முழக்கம் (கட்டுரைகள்) - காஸீம் ஆலீம் புலவர்*
*உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - வெளியீடுகள்*
*இனப்பிரச்சினையும் வட புல முஸ்லிம்களும் - கலாநிதி ஹஸ்புல்லா*

# மன்னார் மாவட்டத்தில் முத்தமிழ் வளர்த்த முஸ்லிம் புலவர்கள்

இலக்கியச்சுடர் : பாவலர் சாந்தி முஹியித்தீன்

தமிழ் இலக்கிய அரங்கில் தனியிடம் பெறும் மாவட்டங்களில் மன்னார் மாவட்டமும் ஒன்று. ஏறத்தாள இருநூற்றி ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்தே தமிழ் இலக்கியம் படைத்த வரலாற்று நாயகர்களை இங்கு இனம் காணக்கூடியதாகவுள்ளது. இவர்களோடு இரண்டறக் கலந்திருந்த முஸ்லிம் அறிஞர்களிலும் சிறந்த புலவர்கள் பாவலர்கள், புராணவிரிவுரையளர்கள் எனப்பலர் வாழ்ந்திருக் கின்றார்கள். இவர்கள் மன்னார் மாவட்ட தமிழ் கிறிஸ்தவப் புலவர்களுக்கு ஈடாக நின்று முத்தமிழை வளர்த்தவர்கள்.

இயல், இசை, நாடகம் என்ற முத்துறைகளிலும் மன்னார் மாவட்ட முஸ்லிம் புலவர்கள் வித்தகர்களாக விளங்கினார்கள். முத்தமிழ் வளர்க்க முன்னின்ற இவர்கள் மேலதிகமாக வைத்தியம், கணிதம், ஜோதிடம் போன்ற பல துறைகளிலும் சிறந்து விளங்கினார்கள் என்பது வரலாறு. இந்தவகையில் ஒரு சில புலவர்களின் எழுத் தாண்மையை எடுத்து நோக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் வாழ்ந்த லோறஞ்சு உபாத்தியார் எப்படி மன்னார் மாதோட்ட கிறிஸ்தவ மக்களின் முதல் ஆசானாக, முதலறிஞராகக் கருதப்படுகிறாரோ அதே போன்று

மன்னார் முசலி முஸ்லிம் பகுதிகளில் இற்றைக்கு 175 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த விதானைப்புலவர் அவர்களும் கணிக்கப்படுகிறார்.

விதானைப்புலவர் எருக்கம்பிட்டிப்பகுதியில் பொலிஸாராகவும் விதானையாளராகவும் அரச கடமையில் ஈடுபட்டார். தமிழ், அரபு, ஆங்கிலம் ஆகிய மொழிகள் தெரிந்தவர். கணிப்பீடு ஜோதிடம், வைத்தியம், பால்பார்த்தல், ராசி பார்த்தல் ஆகிய துறைகளில் நன்கு பரிச்சயமானவர். இவருடைய பெயர் முகையத்தீன் கப்புடையார் என்றிருந்தாலும் விதானைப்புலவர் என்ற பெயரில் பிரபலமானவர்.

கண்டி போப்பிட்டியில் பிறந்து 'அருள்வாக்கி" என்ற சிறப்புப் பெயரோடு ஈழத்து இலக்கிய வரலாற்றில் புகழ் மணம் பரப்பிக் கொண்டிருக்கும் அருள்வாக்கி அப்துல் காதிர் அவர்களது காலத்தில் வாழ்ந்தவர். அருள்வாக்கியை விட 35 வருடங்கள் மூத்தவர். கண்டி மாவட்டத்தில் சதாவதானம் செய்யக்கூடிய புலவராக அருள் வாக்கி அப்துல் காதிர் அவர்கள் துலங்கிய போது மன்னார் மாவட்டத்தில் அட்டவதானியாக நமது விதானைப்புலவர் விளங்கினார்.

விதானைப்புலவருடைய தமிழ் அறிவைத் தெரிந்து கொள்வதற்கு பின்வரும் சம்பவம் நல்லதொரு உதாரணமாகும். விதானைப்புலவர் அவதானம் செய்கின்ற போது அவருக்கு உதவியாளராக இருந்தவர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த முகம்மது காசிம் என்பவராவார். பூவோடு கூடிய நாரும் மணம் வீசும் என்பதற்கு ஏற்ப விதானைப்புலவரிடம் சேர்ந்திருந்ததால் முகம்மது காசிம் இடமும் ஓரளவு கவி பாடும் ஆற்றல் வெளிப்பட்டிருந்தது. விதானைப்புலவருடைய வியத்தகு ஆற்றல்கள் விண்தொட்டு நிற்பதனை பொறுக்க முடியாத முகம்மது காசிமுக்கு தானும் ஒரு புலவன் என்ற எண்ணமும், எப்படியாவது ஒரு முறை விதானைப்புலவருடைய அவதானத்தைச் சீர்குலைத்து அவரை மட்டம் தட்டிவிடவேண்டும் என்ற பொறாமை உணர்வும் தலை தூக்க ஆரம்பமாயிற்று. இதனை அவதானத்தின் போதே தெரிந்து கொண்ட விதானைப் புலவர் மிகவும் கோபம் கொண்டு முகம்மது காசிம் மீது ஒரு பாடலை எழுதி அதனைச் சீட்டுக்கவியாக சேர்ப்பித்தார். இப்பாடல் விதானைப்புலவர், முகம்மது காசிம் மீது பாடிய அறமாகவே அமைந்து விட்டது. இதன் பின் முகம்மது காசிமால்

இயங்கமுடியாமல் ஆகிவிட்டது எனத் தெரிய வருகின்றது. நேரிசை ஆசிரியப்பாவாக அமைந்த பின்வரும் சீட்டுக் கவிதையை உற்று நோக்குகின்றபோது விதானைப்புலவரிடமிருந்த தமிழ் அறிவும் அவருடைய வாய்மையும் அன்னாருடைய வார்த்தைகளுக்கு இருந்த வலிமையும் நன்கு தெளிவாகின்றது.

ஆவென்னு மச்சரத் தாதியீதறியாத
அற்ப நாயே உந்தனுக்
காவியுடலோடு குறில்நெடிலஃ.கும்மீயூவு
வாய்தமிகுவகையளபெடை
அறியமெலிவலியிடை யினங்களென்வேற்றுமை
அசைச் சொற்குதாரணங்கள்
ஆண்பெணலி யமுதொடு நச்செழுத்திணமிவை
அறிந்தோர்ந்திடாத நாயே!
மாவென்ற சொற்சீர்க்குறுந்தசைக ளடியெதுகை
பகுப்பகாப் பதமோனையும்
பன்னரிய சந்திசா ரிகைபகுதி விகுதியும்
படியாது முன்பல் நீண்ட
பன்றியே விதிவிலக்கறியாதுநீயுமொரு
பாவாணனென்று வெளியே
பகருவது சீச்சி நகைக்குமே பெண்கள்பிற்
பக்கத்தி னாலுமிழ்ந்தே
நாவினறிடாது சீர்நீட்டிடா தோய்ந்தொழிதல்
நற்குணமதாரு மன்றோனென நாணமில்லாது கவி
வாணனென வோதி வெளி
நண்ணிடா தாஞ்சலிய நேர்
நாற்றநாயே யுனக்கேற்றபடி கண்ணிலான்
நாடகம் பார்ப்பதொப்பாய்
நள்ளிரு ளகத்திலுற் றுழலுவதனாவென்ன
லாபம்நா யேயுனக்கு
சாவின்ற நாவோடு கோடென்றலைந்துவெகு
சனர்குடி யறக்கெடுத்த
சாபம் பலித்துமுகம் யாவுங்கறுத்தேயிறு
தானுந் திருத்தி யவர் வாய்

தலைபெருத்துத்தேய்ந்த தேயுடலிபோல்வந்த
சகுனியே மௌனமாகத்
தானடங்கு வதுகுணமாமம்மதுக் காசீ
னென்ற புண் தறுகண்ணனே!

விதானைப்புலவர் நிரம்பிய தமிழறிவு உடையவர் என்பதற்கு அவருடைய கவிதைகளும் அவர் எழுதிய சீட்டுக்கவிகளும் தகுந்த ஆதாரங்களாகும்.

ஒருமுறை விதானைப்புலவர் அவர்கள் தனக்காக ஒரு வீடு கட்டிக்கொண்டிருக்கும் பொழுது அந்த வீட்டின் மேல் வேலைகளை முடிப்பதற்கு கைமரம் குறைந்து விட்டது. தனக்கு 25 வைரம் பாய்ந்த பெண்பனைமரங்களை தந்துதவுமாறு தனது நெருக்கமான நண்பர் சவரிமுத்துக்கு எழுதிய சீட்டுக்கவி மிகவும் கருத்தாழம் மிக்கது.

திருமருவு மரபமல ரணிபுய வசீகரா
திவ்வியசம் பிரசாதனா
திகழமுத குணசம்ப னாசுந்தரானனா
ஜெகமேவு பரிபாலனா
சித்தபரிபூரணா நித்திய சுபசோபனா
திண்டிறற் பரிவாகனா
ஜெயதுங்க சவுசன்ய விதறண்ணியகுணசுகா
தனதீர கெம்பீரனா
மருமருவு மினியவைந் தருவுநிகராவண்கை
யாவன்ன தானந்தனா
மாமேர னமூர் யாமோக னாமேவு
வாசனா லோசனா மா
மதுர கவிவேகமுள பதிவிரதனந்தோனி
உதவு சுதனாவந்தனா
வணி மதுரகத்தான மணிசவுரிமுத்தான
வரதுங்க னெதிர் கண்டிடக்
குரைமருவு முவரிபுடை சூழதகமீது புகழ்
கூறுமரி யேறை நிகரான்
குலதிலக நிதியாதி பதிசின்ன இப்றாகீம்

கொற்றவரி பெற்றகுமரன்
கொங்குளவு கவிமாரி சிந்து முகிலாமின்ப
கோலாகலப் பிரசங்கம்
குலவு பல தமிழுணர் முஹியித்தீன் கற்புடையார்
குணரெத்ன மெழுது நிருபம்
பரி மருவு கோகனகை யாடங்கு மோர்வசதி
பண்ணவக மெண்ணி யினிதாய்ப்
பாரமதி ளானபல சேகரித்தாயபின்
பாதப மிலா தாகையால்
பரிவாயதற்காய முதுதிருணராசனிற்
பாவையா சினியுள்ளதாய்ப்
பத்துமுன்றைந்தொழிக வித்தகா வுன்னிதயப்
பட்சம் வைத்தருளுவாயே!

நாம் ஒருவரிடம் உதவி கோரும் பொழுது அவரது தன்மைகளை எடுத்தோதி உரியவருடைய மேலாண்மையை வெளிப்படுத்தி அவரது உள்ளத்தை மெள்ளக் கசியவைத்த பின்பே நமது நோக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற பக்குவத்தை நன்கு புலப்படுத்து கின்றது.

மிக ஆழமான சொற்களை இணைத்து இலக்கியச் சுவை நிறைந்ததாக எழுதப்பட்ட இக்கவிதையில் தனது நண்பன் சவரிமுத்துவின் குணாதிசயங்களைப் புகழ்ந்துரைப்பதோடு அவரது தந்தையை மதுரகவிவேகமுள்ள பதிவிரதன் அந்தோனி என்றும் தனது தந்தையை குலதிலக நிதியாதி-பதி சின்ன இப்ராகீம் கெற்றவரி என்றும் தன்னைப் பற்றிக் கூறும் பொழுது கொங்குலவு கவிமாரி, சிந்துமுகிலாம் இன்ப கோலாகலப் பிரசங்கம், குலவு பல தமிழுணர் குணரெத்தினன் முஹியத்தீன் கற்புடையார் என்றும் குறிப்பிடுகின்றார். இதில் இருந்து சவரிமுத்துவின் தந்தை அந்தோனி, விதானை புலவருடைய தந்தை சின்ன இப்ராகீம், விதானைப்புலவருடைய இயற்பெயர் முஹியத்தீன் கற்புடையார் என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது. இது தவிர தனது தேவையை கவிதையின் ஈற்றில் பத்துமுன்றைந்தொழிக என்ற

சொற்களூடாக தனக்கு இருபத்தைந்து கைமரங்கள் வேண்டும் என்று கேட்பது இலக்கியச்சுவைமிகுந்தது.
(பத்துமுன்று 10 X 3 = 30 முப்பது அதில் (ஐந்தொழிக) ஐந்தை கழித்தால் 30-5 = 25 என்பது தெளிவாகின்றது.)

மன்னார் எருக்கலம்பிட்டியில் 1838 இல் பிறந்த விதானைப்புலவர், பக்கீர்ப்புலவர் உட்பட பலவித்துவான்கள் உருவாக வழிகாட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கீர்ப் புலவர்

இவர் 1862 இல் மன்னார் எருக்கலம்பிட்டியில் பிறந்தவர். பக்கீர் புலவர் விதானைப்புலவருடைய மாணவன். இளமைக்காலத்தில் தமிழ் மொழிமீது ஏற்பட்ட பற்றால் அதனை வழுவறத்தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் மேலிட தமது ஊரில் வாழ்ந்த விதானைப் புலவரை குருவாக்கிக்கொண்டு தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகப்படித்து தமிழ்ப்பணிசெய்தவர். எதனையும் பாடலாகப் பாடும் திறன் இவருக்குரியது.

அன்று வாழ்ந்த தமிழ்ப்புலவர்கள் தமது வித்தக ஆற்றலை வெளிப்படுத்த பலவிநோதமான வகைக் கவிதைகளை யாத்தார்கள். குளகம், சதகம், திருக்கு மடக்கு, சிலேடை, நாகபந்தம், நான்காரை சகிகரம், முரசபந்தம், கோமூத்திரபந்தம் என்பன அவற்றுள் சிலவாகும். இத்துறையில் பக்கீர் புலவர் பிரசித்தமானவர்.

அக்காலப்புலவர்களில் பெரும்பாலானவர்கள் ஜோதிடம் தெரிந்தவர் களாக, வைத்தியம் செய்பவர்களாக இருந்துள்ளார்கள். இவர்கள் தங்களுக்குத் தெரிந்த கணித, வைத்திய விடயங்கள் மற்றவர் களுக்குத் தெரியாமல் இருப்பதற்காக அவர்களுக்குள்ளேயே குழுவுக்குறி மூலம் சில பாஷைகளை வைத்துக்கொண்டு அதனைப் பயன்படுத்தி வந்தார்கள் இதில் மன்னார் புலவர்கள் மிகவும் பிரசித்த மானவர்கள் பக்கீர்ப்புலவருக்கு இது கைவந்தகலை-

ஒரு நாள் பக்கீர்ப்புலவர் எருக்கலம்பிட்டியில் இருந்து புத்தளம் செல்லப்புறப்பட்ட ஒருவரிடம் சிறிய காகிதத் துண்டில் ஒரு கவிதை எழுதி இதை புத்தளத்தில் வசிக்கும் தனது நண்பரிடம் கொடுத்து விடுமாறு அனுப்பினார். கடிதத்தைக் கொண்டு சென்றவர் இதில் என்ன எழுதியிருக்கின்றது என்பதனை விரித்துப்படித்துப்பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது-

பனைபஞ்ச கரமைந்து ஆடவரிற்
பதின்மூன்று மூன்றுமதனுடன்
பனைபத்து முளரிபதின் மூன்று திரியுமேற்குப்
பார்த்தொன்று வாங்கி வருவீர்

படித்துப் பார்த்தவர் ஒரு தமிழ் படித்த ஆசானாகவிருந்தும் அவருக்கு அதில் ஒன்றுமே விளங்கவில்லை. அதில் என்ன எழுதியிருக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை அவருக்கு. உரியவரிடம் கொண்டு போய் கடிதத்தைக்கொடுத்தார். பெற்றுக்கொண்டவரோ பிரித்துப் பார்த்துவிட்டு மறுநாள் அவரிடமே ஒரு பொதியை கொண்டு வந்து கொடுத்து, இதனைப்புலவரிடம் கொடுத்துவிடுங்கள் என்று அனுப்பிவைத்தார். பொதியோடுவந்தவர் நேரே பக்கீர்புலவரிடம் சென்று அதனை ஒப்படைக்க, புலவர் பிரித்தார் அதற்குள் ஓர் அழகான துருக்கித் தொப்பியிருந்தது.

வைத்தியர்களும் புலவர்களும் தங்களுடைய வித்தகத்தை வெளிப்படுத்தவும் தாம் குறிப்பிடுவதை மற்றவர்கள் தெரிந்து கொள்ளாமல் இருக்கவும் குழுவுக்குறிபோன்று, தங்களுக்குள்ளே மட்டும் தெரிந்து கொள்ள ஒருவகையான முறையைப் பயன்படுத்துகின்றார்கள் என்பது அப்பொழுதுதான் அதனைக் கொண்டுவந்தவருக்கு தெரியவந்தது.

ஆம், அன்றைய மன்னார்ப் புலவர்கள் இது போன்ற மறைமுகமான முறைகளை பெரிதும் கையாண்டிருக்கிறார்கள் பக்கீர்புலவர் அவர்கள் எழுதியனுப்பிய சீட்டுக்கவியும் அந்த வகையைச் சார்ந்ததே. இதனை அப்பாஷைமுறை தெரியாதவர்கள் படித்தால் புரிந்து கொள்ள

முடியாது. அந்தச்சொற்களுக்கு எந்த அகராதியிலும் பொருள் கண்டு கொள்ள இயலாது.

அன்றைய புலவர்கள் கமழ், யூகி, இறை, அலங்காரம் என நான்கு வகைப் பாஷை முறைகளைப் பயன்படுத்தியுள்ளார்கள். இந்த பாஷை முறைக்கு வாய்ப்பாடும் இருந்திருக்கின்றது. உ+ம் கடுகு என்பதை மவுமு என்று குறிப்பிடுவர். கனாவுக்கு(க) மூனாவும்(மு), டுனாவுக்கு(டு) வுனாவும்(வு), கூனாவுக்கு(கு) என முறைபிரித்திருப்பர்.

இது எழுதுபவர்களுக்கும் அவர்களுடன் நெருக்கமாகப் பழகுபவர் களுக்குமே புரியும். கடுகு என்பதை கமழ் பாஷையில் மவுமு என்று தான் குறிப்பிடப்படுகிறது. இப்படி எழுதினால் அதனை கமழ் பாஷை தெறிந்தவர் புரிந்து கொள்வார்கள் அல்லது எழுதியவரே இன்னது என்று கூற வேண்டும். இதைத்தான் அன்று தெத்துப் பாஷை என்று குறிப்பிட்டார்களோ என்பது ஆராயப்பட வேண்டியது.

கும, ஙய, சர, ஞல, டவ, ணழ, தள, நற, பன என்பது கமழ் பாஷையின் வாய்ப்பாடு-

உ + ம் கானாவுக்கு மானா ஙனாவுக்கு யானா சனாவுக்க ரன

கடுகு ககர வரிசை எழுத்துக்களில் கானாமுதல் எழுத்து கமழ் பாஷையின் படி இதற்கு மகரவரிசையின் முதல் எழுத்து மானா வரவேண்டும். அதே போல் டகர வரிசையில் டுனா ஐந்தாம் எழுத்து. கமழ் பாஷையில் ட்னாவுக்கு வானா. அப்படியாயின் வகரவரிசையில் வுனா ஐந்தாம் எழுத்து ஆனதால் டுனாவுக்கு பதிலாக வுனா, அடுத்தது ககரவரிசையில் ஐந்தாம் எழுத்து குனா. கானாவுக்கு பதிலாக கமழ் பாஷையில் பயன்படுத்தப்படும் மானாவின் ஐந்தாம் எழுத்து முனா. ஆகவே கமழ் பாஷை வாய்ப்பாட்டின் படி கடுகு, மவுமு என்றாகும் இப்படி பல வைத்திய ஏடுகளிலும் குறிப்பிடப்பட்டிருப்பது அறியக்கிடக்கிறது.

நமது பக்கீர்ப்புலவர் துருக்கித் தொப்பிக்கு எழுதிய சீட்டுக்கவி

பனைபஞ்ச கரமைந்து ஆடவரிற்

பதின் மூன்று மூன்று மதனுடன்
பனை பத்து முளரி பதின் மூன்று திரியும் மேற்கு..
பார்த்தொன்று வாங்கி வருவீர்
என்பது நாம் மேற்காட்டிய நான்கு பாஷைகளில் யூகி பாஷை பொருள்வைப்பு முறைக்குள் அடங்கும். யூகி பாஷை வாய்ப்பாடு பின்வருமாறு அப்பார்ப்பன், கப்புருடன், ஙப்பரிமா, சவ்வாடு, ஞஞ்ஞாயிறு, டப்பிறை, ணக்கூற்று, தப்பனை, நன்நாகம், பத்தாமரை, மந்நெல்லு, யவ்வாறு, ரவ்வரசு, லப்பேய், வம்மரம், ழவ்வியானை, ளக்கன்னி, றக்கழுதை, னவ்வெருது என்பனவாகும்.

பார்ப்பார் புரடர் பரியா டிரவி பிறை
யாப்பார் மறலி பனை யாடரவம்-சீர்பார்வை
கோயில் சொல் வாறிறை பேய் கோடலர் தார்காளை கன்னி
ஆய கழுதையெருதாம், யூகி பாஷை வாய்ப்
பாட்டிற்கான வெண்பா இது.

பனைவாய்ப்பாட்டின்படி தப்பனை பஞ்சம் ஐந்து தகரவருக்கத்தில் ஐந்தாம் எழுத்து. து-கரம் - கரத்தில் பற்றி செங்கோலினால் நாட்டை ஆள்பவன் அரசன். வாய்ப்பாட்டின் ரவ்வரசு ஐந்து. ரகரத்தின் ஐந்தாம் எழுத்து ரு-ஆடவர்புருடன் வாய்ப்பாட்டின்படி கப்ருடன் பதின் மூன்று ககரத்தில் பதின்மூன்றாம் எழுத்து க் அதேகரத்தில் மூன்றாம் எழுத்து கி வாய்ப்பாட்டின் படிதப் பனைபத்து தகரத்தில் பத்தாம் எழுத்து தொ - முளரி தாமரை வாய்ப்பாட்டின்படி பத்தாமரை பதின்மூன்றாம். பகரத்தில் பதின்மூன்றாம் எழுத்தும் அதே முறையில் மூன்றாம் எழுத்து பி. இந்த எழுத்துக்களை நிரைப்படுத்தினால் "துருக்கித் தொப்பி" எற்கு — எனக்கு ஒன்று பார்த்து வாங்கி வருவீர் என்பது புலவரின் மறைபொருளான யூகிபாஷையின் சீட்டுக்கவி.

இக்கவிதையை வைத்தே பக்கீர்ப் புலவரின் ஆழ்ந்த அறிவை மட்டிடலாம்.

17ம் 18ம் கடந்த காலத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தோடு இணைந்து தன்னைப் பதிவு செய்து கொண்ட புலவர்கள், பண்டிதர்கள், பாவலர்களுக்கு சிறப்பு அதிகம். தமிழ்சங்கம் சாதாரணமாக ஒருவர்

விண்ணப்பித்தவுடன் அவரை உறுப்பினராக ஏற்றுக் கொள்வதில்லை. விண்ணப்பிப்பவர் சங்கத்தில் உறுப்பினராக இருப்பதற்கு தகுதியுடையவரா என்றறியும் ஓரு பரீட்சை வைத்து தமிழ் இலக்கண இலக்கியம் சம்பந்தமான பல்பொருள் வினாக்களை கொடுத்து அவைகளுக்கு சரியான விடையளித்து சித்திபெறுபவர்களையே உறுப்பினராக ஏற்றுக்கொள்ளும்.

நமது பக்கீர் புலவர் அவர்களுக்கு தானும் மதுரை தமிழ் சங்கத்தில் ஓர் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தனது 54வது வயதில் ஏற்பட்டது. உடன் உரியவர்களுக்கு விண்ணப்பித்தார். மன்னாரில் இருந்து மதுரை தமிழ் சங்கத்துக்கு ஒருவரா? அற்பத்தனமான ஆசை ஒரு பக்கீருக்கு ஏற்பட்டிருக்கிறது என நினைத்து நிறுவனத்தினர் பக்கீர் புலவருடைய விண்ணப்பத்தினை நிராகரித்துவிட்டனர்.

சீற்றம் கொண்ட புலவர் தமது திறமையை வெளிப்படுத்தி ஒரு பா எழுதி தமிழ் சங்கத்துக்கு அனுப்பி விட்டு தாமே நேரில் சென்று உரியவர்களைப் பார்த்து, எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கு காரணம் என்ன? நான் ஒரு புலவனா? இல்லையா? என்பதில் உங்களுக்கு ஐயமிருந்தால் பரீட்சித்துப் பாருங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

இலங்கையில் இருந்து வந்திருக்கும் ஓர் இஸ்லாமியரை உதாசீனம் செய்வது அழகல்ல என உணர்ந்த நிர்வாகம் அவை கூட்டி அவரை நேரடியாகவே பரீட்சித்தது. தொடுத்த கேள்விகளுக்கெல்லாம் பக்கீர் புலவர் கொடுத்த விளக்கமும் விரிவுரையும் அந்தச் சபையையே அதிர வைத்தது. இறுதியில் மதுரைத் தமிழ் சங்கத்தில் மாத்திரமல்ல சர்வகலைகளையும் தெரிந்தோர் அரியாசனம் பெறும் சர்வேஸ்வரச் சங்க உறுப்பினராகவும் 1917 ஆம் ஆண்டு 55 வது வயதில் ஏற்றுக்கொள்ளப்பட்டார்

மன்னார் மாவட்ட நிர்வாகம் 1909 ஆம் ஆண்டு கச்சேரி முன்னால் ஒரு கைப்பொருள் காட்சியை ஏற்பாடு செய்திருந்தது. அப்பொருட் காட்சியைப் பார்க்க ஊரே திரண்டிருந்த வேளை அது, பார்க்கச்

சென்றவர்களில் நமது புலவரும் ஒருவர். பொருட்காட்சியைப் பார்த்த புலவர் அதுசம்பந்தமாக ஒரு பாடல் இயற்றினார்.

அற்புதக் காட்சி - ஆட்டசுவைநந்
தயவுதக் காட்சி
அணிசேர்மன் மாதோட்ட
அற்புதக் கைப்பொருள்
ஆவிதோ காட்சி
ஆவிதக் காட்சியாயிரத்தொள்
ளாயிரத் தொன்பதாம்
மாண்டு சித்திரை மாதம் தோன்றுமுப்
பதாந்தேதி அதன் பின் முல்திகதி
இனிது நடாத்தும்படி அரசமாஸ்திரி வின்ஸன்
அரசாங்க ஏஜண்டர்
அமைத்து நடாத்திவரும் அற்புதக்காட்சி
ஆவிதோ காட்சி ..........

இப்பாடல் மூலம் பொருட்காட்சி 1909ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஆரம்பிக்கப்பட்டது என்பதும் அன்றைய அரச அதிபராக வின்ஸன் என்பவர் மன்னாரில் கடமைபுரிந்தார் என்பதும் தெரியவருகிறது.

மன்னார்ப் பகுதிகளில் இன்றளவும் பேசப்படுகின்ற புலவர்களுள் கொண்டச்சி முஹம்மது சரீபுப் புலவர் முக்கியமானவர். வலதுகுறைந்த இவரை நொண்டிப் புலவர் என்றே மக்கள் அழைத்தார்கள். ஆரம்பக் கல்வி அறிவு அதிகமில்லாத இவர் ஒரு வரகவியாவார். காட்டில் அலைந்து கொண்டிருந்த போது இவர் முன் திடீரெனத்தோன்றிய ஒருவர் இவரை அணைத்து அருளாசி வழங்கி வழிகாட்டியதாக ஒருகதை உண்டு. இவர் பார்த்ததை உடன் பாவாக்கும் பாக்கியம் பெற்றவர். சாதாரணமாக காட்சிதரும் சரீபுப் புலவர் பாடுவதற்காக அல்லது புராணப் பாராயணம் செய்வதற்காக மேடை ஏறிவிட்டால் இவரது குரலில் ஒரு கம்பீரமும் புது உத்வேகமும் பார்பவர்கள் பிரமிக்கத்தக்கதான கவர்ச்சியும் ஏற்பட்டுவிடும் என இவருடைய நிகழ்வுகளில் கலந்து கொண்டோர்

கூறுவர். இவருடைய ஆக்கப்பாடாக அச்சுவாகனமேறிய நூற்கள் மூன்று. இதில் முத்திச் சுடர் என்பதும் ஒன்று.

முத்திச்சுடர் ஒரு பிரார்த்தனைப் பேழைபோல் தென்படுகின்றது. தாம் பெற்றுக் கொண்ட தமிழ் அறிவையும் சன்மார்க்கத் தெளிவையும் முத்திச் சுடர்கோடிட்டுக் காட்டுகின்றது. தமிழ் நெடுங்கணக்கில் மொழிக்கு முதலாக வரும் 155 எழுத்துக்களை தனியாகவும் முதலாவதாகவும் கொண்டு 155 பாடல்களை இதில் விருத்தப்பாவாக புலவர் அமைத்துள்ளார். இதன் காப்பு வெண்பாவை அவதானிக்கும் போது புலவர் தமிழ் அறிஞர்களைப் பணிந்து அவர்களிடம் பெற்றுக் கொண்ட நற்றமிழ் அறிவு தெளிவாகின்றது.

யாப்பெருங்கலக் காரிகை மங்கலச் சொற்களாக 22 சொற்களைக் குறிப்பிடும். புலவர்கள் பாடும் போது அதில் பலதை உள்ளடக்குவர். ஆனால் நமது முஹம்மது சரிவுப்புலவரோ தன்னுடைய முத்திச்சுடர் காப்பு வெண்பாவில் காரிகை காட்டும் இருபத்திரண்டு பொருள் நிறைந்த சொற்களையும் உள்ளடக்கியுள்ளார்.

பூவாரி பொன் மதிதேர் பூட்கை சீ மணிஎல்
கோமாரி நீரமுதம் கூவெழுத்து- மாஏரி
ஆரணம் சொல் பார்த்திருவோ டானவையெல்
லாமமைத்தேன்
காரணமின் நூலுரைக்கக் காப்பு

மேற்படி வெண்பாவில் அமிழ்தம், ஆபரணம், உலகம், எழுத்து, கங்கை, கடல், சீர், சொல், திரு, தேர், நிலம், நீர் ,பரி, பரிதி, புகழ், புயல், பூ, பொன்மணி, மதி, மலை, யானை ஆகிய அனைத்தும் அமைந்திருப்பதைக்காணலாம். முத்திச்சுடரின் முதற்பாடல்

அவ்வல் நடுவோ பீறில்லா
வஹதேயாதி யஹமியவே
குவ்வோடமரர் வாழுலகுங்
குவைசேடுருவோ டருக்கன்மதி
சேவ்வி யறுஸ குறுஸசமுதல்
சிறந்த துறக்க மழல்பூதி
பௌவம் பொருப்போ டெவ்வல்லாம்

படைத்தோ னெனையாள் றஹ்மானே! என்பதாகும். இப்பாடலில் ஈறு, ஆதி, அமரர், குவை, அழல், பூதி, பௌவம், பொருப்பு என்ற தமிழ் சொற்களோடு அவ்வல், அஹது, அறுஸ" குறுஸ" லவ்ஹு" ஆகிய அறபுச் சொற்களையும் இணைத்து இறைவனைத் துதிக்கின்ற முறையினைப் படிக்கும் போது முத்திச் சுடர் முழுவதையும் படித்துவிடவேண்டும் என்ற எண்ணம் தோன்றிவிடும்.

நொண்டிப் புலவர் வரகவியா? இறைவனுடைய அருள்வாக்கு இவருக்கா? தமது எண்ணத்தை உடன் பாடலாக்கும் வல்லமை உண்டா? பார்த்து விடவேண்டும் என்று நினைத்த ஒரு குழுவினர் புலவரை சந்தித்தார்கள்.

குழந்தை இல்லாது வாடும் ஒரு குடும்பப் பெண் தனக்கு ஒரு குழந்தை தருமாறு கேட்டு பிரார்த்தனை புரிவது போன்றதொரு பாடலை கந்தப்புகமலாசனமதில் என்று ஆரம்பிக்கும் தமிழ் பாடல் இசை வடிவத்தில் (சந்தம்) உடன் தர முடியுமா? இது அக்குழுவினருடைய வினா? வந்தவர்களுடைய நோக்கத்தை புலவர் புரிந்து கொண்டார். தன்னை உரைத்துப்பார்க்க வந்திருக்கின்றார்கள் என்பது தெரிந்து விட்டது. வினாத்தொடுத்தவர்கள் வாய் மூடுவதற்கு முன்னதாகவே அவர்கள் விரும்பிய சந்தத்தில் பின்வரும் பாடல் வெளியாயிற்று

வந்திப்பூ வினில்மக வீந்திட
வரமருள் திருநபி மஹ்மூதா!
அம்தங்கும் தும்வந்தும்
அங்கந்தங் கின்பங்குறுநபி
வந்திப்பூவினில் மக வீந்திட
வரமரு ளிடுநபி மஹ்மூதா
இந்தத்தா ரகிற்புகழ் வள
டோங்கறு டாங்கு மகானேரா
இலகிய நவநித திருமணியெனவுயர்
வேதா கருணா மாசீல
அம்தங்கும் தும்வந்தும்
அங்கந்தங் கின்பங்குறு நபி

வந்திப்பூ வினில் மகவீந்திட
வரமருளிடுநபி மஹ்மூதா

பாடல் முடிந்ததுதான் தாமதம் கேள்வி கேட்டவர்கள் வாயடைத்துப் போனார்கள். பாட்டுத் திறத்தால் மன்னார் மக்களை தன்வயப்படுத்திக் கொண்டவர் கொண்டச்சி முகம்மது சரீபுப்புலவர்.

நமது முகம்மது சரீபுப் புலவரைத் தொடர்ந்து அவ்விடத்தை நிரப்பியவர் தமிழ் முழக்கம் முகம்மது காசீம் ஆலிம் புலவர் அவர்கள். மார்க்க நெறியினை நன்குணர்ந்த நல்லறிஞரான முகம்மது காசீம் புலவர் அவர்கள் சமயத்தில் எவ்வளவு தூரம் ஆழமான அறிவு பெற்றிருந்தாரோ அதே அளவு தமிழ் அறிவும் பெற்று விளங்கினார். தமிழறிஞராகவும் மார்க்க விற்பன்னராகவும் நடைபயின்ற காரணத்தால் சன்மார்க்க இஸ்லாமிய சரிஅத் முறைகளை மீறாமல் அதன் வரம்புக்குள் நின்று தமிழ் வளர்த்த பெருமை முகம்மது காசீம் ஆலிம் புலவரை சாரும்.

மார்க்க அறிஞர்கள் சன்மார்க்கப் பணிகளையே உயிராக மதித்து அதனை மட்டும் செய்வதே தமது கடன் என நினைத்துப் பணியாற்றி வந்த காலகட்டத்தில் தமிழ் மீதுள்ள பற்றாலும் பாசத்தாலும், இஸ்லாம் எங்கள் வழி, இன்பத்தமிழ் எங்கள் மொழி என்பதனை மனப்பூர்வமாக உள்வாங்கி அவை இரண்டையும் தமது இரு கண்களாக போற்றிப் பாதுகாத்தவர் நமது புலவர்.

பேசும் மொழியால் பிணைந்து சகோதரர்களாக இணைந்து வாழும் தமிழ், முஸ்லிம் மக்களிடையிலான உறவு என்றும் நிரந்தரமாக நிலைபெற வேண்டும் என்பதற்கு தம்மால் முடிந்தவற்றையெல்லாம் காலமுணர்ந்து செயற்படுத்திக்காட்டியவர். தமிழ் முழக்கம் முகம்மது காசீம் ஆலிம் புலவர் அவர்கள் தமிழ், கிறிஸ்தவ மக்களுடன் மிக நெருக்கமாகப் பழகி அவர்களது கலை, கலாச்சாரப் பழக்கவழக்கங்களையும் சமய நெறியையும் தெளிவாகத் தெரிந்து கொண்டதால் தமிழ் இலக்கியப் பாராயணங்களிலும் விரிவுரைகளிலும் கலந்து கொண்டு தமக்கே உரிய நடையில் உரை கண்டவர் புலவர்.

திருக்குறள், திருப்புகழ், நாலடியார், கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற இலக்கியங்களில் தனிப்பெரும் ஆற்றல் பெற்றிருந்ததால் இந்து சமய வைபவங்கள், புனித இடங்களில் நடைபெறுகின்ற பாராயணங்கள் போன்ற இலக்கிய நிகழ்வுகளுக்கு தமிழ் சகோதரர்களால் முகம்மது காசிம் ஆலிம் புலவர் அவர்கள் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

புலவர் அவர்கள் மன்னார் திருக்கேதீஸ்வர மண்டபத்தில் தொடர்ந்து இருவாரங்கள் திருவாசக விரிவுரையாற்றியபோது தமிழ் சகோதரர்கள் புலவருடைய தமிழ் அறிவைப்பாராட்டி "செந்தமிழ் புரவலர்" என்னும் பட்டம் வழங்கி கௌரவித்தது என்றும் மறக்கமுடியாதது.

இதனைத் தொடர்ந்து புலவரின் ஆற்றலினை அறிந்துகொண்ட திருகோணமலை இந்து இளைஞர் மன்றத்தினர் காசீம் புலவர் அவர்களை திருமலைக்கு அழைத்துச் சென்று கோணேஸ்வர ஆலய முன்றலில் ஒரு பாராயணவைபவம் நடத்தினர். அங்குதான் புலவருக்கு "செந்தமிழ் வாருதி" என்னும் பட்டம் வழங்கப்பட்டது. மன்னார், திருகோணமலை ஆகிய இடங்களில் புலவருடைய ஆற்றல் வெளிப்படவே இதனைத்தெரிந்துகொண்ட யாழ்ப்பாணத்து தமிழ் அறிஞர்கள் ஒன்று சேர்ந்து யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமிக் கோயிலில் ஒரு திருவாசகப்பாராயண நிகழ்வை ஏற்பாடு செய்தனர். அழைப்பை ஏற்றுக் கொண்ட புலவர் அங்கு சென்று திருவாசகப் பாராயணம் செய்தபோது அவருடைய விரிவுரையில் மெய் மறந்த தமிழ் சகோதரர்கள் "சிவநெறி அன்பர்" முகம்மது காசீம் ஆலிம் புலவர் எனப் பாராட்டி கௌரவித்தனர்.

எந்த இனத்தவர்களுடைய அழைப்பை ஏற்றுச் சென்றாலும் இஸ்லாமிய நெறிபிறளாது ஏகன் ஒருவன் என்ற தத்துவம் அணுவளவும் மாசுபடாது மிக நிதானமாகத் தமிழ் வளர்த்தவர் காசிம் புலவர்

நமது முன்னோர்கள் படைத்த இலக்கியங்களான சீறாப்புராணம், முஹியத்தீன் புராணம், திருப்புகழ், ஞானக்கோவை வேத புராணம் போன்ற நூற்களைப் பாராயணம் செய்வதிலும் அதற்கான விளக்க

உரையாற்றுவதிலும் முகம்மதுக்காசீம் ஆலிம் புலவருக்கு நிகர் அவரேதான். தாம் இந்தியாவில் ஆலிமாகப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் பாராயணம் செய்வது எப்படி என்பதை அத்துறை சார்ந்த அறிஞர்களிடம் சென்று முறையாகக் கற்றுக் கொண்ட காரணத்தினால் புலவருடைய விரிவுரை கேட்கக் கூடும் மக்கள் மிக அதிகம்.

1980 களில் காத்தான் குடி பாவலர் பண்ணை 'பா" என்ற பெயரில் ஒரு கவிதைச் சஞ்சிகையை வெளியிட்டது. புலவர் அவர்களிடம் மஸ்தான் சாகிபும் அவர்தம் பாடல்களும் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை தருமாறு கேட்டிருந்தேன். எனது வேண்டுகோளை ஏற்று மஸ்தான்சாகிபுப் பாடல்கள் சிலவற்றுக்கு விளக்கம் எழுதியிருந்தார் புலவர், அதில் ஒரு பாடல்

பழகப் பழகிவரும் பாக்கியத்துப்பைமுதலை
களவு கொடுக்கேன் என் கண்ணே றகுமானே

என்பது ஆனால் புலவரே களவு கொடுக்கேன். என்பதற்குப் பதிலாக களவு கொடுத்தேன் என்று குறிப்பிட்டிருந்தார். இது தவறு என்று நான் சுட்டிக்காட்டிய போது,

தம்பி சாந்திமுகைதீன்! நீங்கள் படித்த மஸ்தான் சாகிபு பாடலில் களவு கொடுக்கேன் என் கண்ணே றகுமானே!

என்று தான் இருக்கிறது. உண்மைதான் ஆனால் நான் பாராயணத்தை இந்தியாவில் இருக்கும் போது தெரிந்து கொண்டவன். பல அனுபவங்கள் எனக்கு உண்டு. மஸ்தான் சாகிபு அப்பா அவர்களுடைய வரலாறு, பாடல் ஆகியவைகளின் விளக்கங்களை அவர்களது குடும்ப உறவுச் சந்ததிகளிடம் இருந்து கேட்டறிந்து கொண்டதால் அவற்றைத் தான் நான் நம்ப வேண்டி இருக்கிறது.

ஒரு நாள் மஸ்தான் சாகிபு அப்பா அவர்கள் தன்னை அழித்துக் கொண்ட நிலையில் (பனா) நிஸ்டையில் இருந்தார்கள். மிக நீண்ட நேரம் தன்னை மறந்து இருந்ததால் நேரம் போனது அவர்களுக்குத் தெரியவில்லை. கண்ணைத்திறந்து பார்த்த போது அது மாலை நேரமாயிருந்தது. அதனால் அவர்களுக்கு அன்று அஸர் தொழுகை களாவாகிவிட்டது. இதனை கருவாகக்கொண்டுதான்
பழகப்பழகிவரும் பாக்கியத்துப் பைமுதலை

களவு கொடுத்தேன் என் கண்ணே றகுமானே!
என்று பாடினார்கள். என்று அவர்கள் குடும்பத்தார் கூற நான் கேட்டிருக்கிறேன். இதனை நான் உண்மையாக நடந்திருக்கும் என்று நம்புவதால் அன்று தொட்டு இப்பாடலுக்கு நான் உங்களுக்கு எழுதியவாறு தான் விரிவுரையாற்றுகிறேன். இதனை நீங்கள் நம்பலாம் அல்லது நம்பாமலும் விடலாம் அது உங்கள் விருப்பம் என்று எழுதியிருந்தார்.

இதில் இருந்து புலவர் அவர்கள் புராண்விரிவுரைகளை ஆற்றுவதற்கு முன்பாக அது சம்பந்தமான விளக்கங்களை உரிய இடங்களுக்குச் சென்று சம்பந்தப்பட்டவர்களோடு உறவாடி அவற்றில் ஆழமான அறிவைப் பெற்றிருந்தார்கள் என்பது நன்கு புலனாகின்றது. முகம்மது காசிம் ஆலிம் புலவர் அவர்கள் தன்னிடம் இருந்த கபுகாபு நாடகத்தை அச்சிட்டு வெளியிடவேண்டும் என்று பெரிதும் விரும்பினார். ஆனால் அது நிறைவேறவில்லை. அந்தப்பிரதிகூட யாரிடம் இருக்கின்றது என்பதும் தெரியாமல் உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இருந்து உதயமாகி தமிழ் வளர்த்த முஸ்லிம் புலவர்கள் பட்டியலோ மிகவும் விசாலமானது. அவர்கள் அனைவரும் தனித்தனியாக ஆராயப்படவேண்டியவர்கள். அவர்களுடைய தமிழ்ப் பணி எடுத்துச் சொல்லப்படாத காரணத்தால் அதிகமான புலவர்களின் வரலாறு குடத்து விளக்காகக் காணப்படுகின்றது. அவர்களை யெல்லாம் இனங்கண்டு மன்னார் மாவட்ட முஸ்லிம் புலவர்கள் தமிழ் வளர்த்த வரலாறு ஒன்று கோர்க்கப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

***– இலக்கியச் சுடர் –***
பாவலர் சாந்தி முஹியித்தீன்

# மன்னார் பிரதேச குதிரை வளர்ப்பும், யானை பிடித்தலும்

- கலாபூஷணம் அல்ஹாஜ் M.I.M. அப்துல் லத்தீப் -

மன்னார், புராதன காலமுதல் பல வெளிநாடுகளின் தொடர்புடைய பூமி என்பது வரலாற்று உண்மை. மாந்தைத் துறைமுகம் பண்டைக்காலத்தின் நூற்றுக் கணக்கான நாவாய்கள் வந்து வணிகம் செய்து, பொருள் கொண்டு செல்லும் துறையாகவும், அண்டை நாடான இந்தியாவின் அரசர்கள், பிரதாணிகள், மற்றும் படைபட்டாளங்கள், தவிர சமய சேவைகள் புரியும் பெரியார்களும் இலங்கைக்கு வந்து செல்லும் ஊடு துறையாகவும் புகழ்பெறுகின்றது. மாந்தை தவிர மன்னாரின் சுற்றாடலில் உள்ள குரைமலை, சிலாவத்துறை, அரிப்பு முதலான துறைகளும் கூட இத்தகைய பண்டைய புகழுக்குரிய துறைகளே. மரக்கலங்களையும், நாவாய்களையும் பாதுகாப்பாக இங்கு நிறுத்திவைக்க முடியும்.

'கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் வரும் பொருட்களைப் பண்டமாற்று செய்யும் மத்திய நிலையமாக இப்பிரதேசத் துறைகள் செயலாற்றின. ஒரு பக்கம் எகிப்து, அறேபியா, பாரசீகம், ஆபிரிக்கா, மலபார், கரைகளிலிருந்தும், மறுபக்கம் 'கோரமண்டல்' எனப்படும் சோழ மண்டலக்கரை, வங்கால விரிகுடாவின் கீழ்த்திசைக்கரைகள், மலாக்கா, சுமாத்திரா, ஜாவா, மொலுக்காஸ், சீனா போன்ற நாடுகளிலிருந்தும் கப்பல்கள் இத்துறைகளை அடைந்து தங்களது பொருட்களைப் பரிமாரிக்கொண்டன.[2]

அரிசி, மிளகு, சாயமூட்டும் மரவகைகள், பாக்கு, சங்கு, கறுவா, தந்தம், யானை, தேங்காயெண்ணெய், தும்பு மற்றும் விலையுயர்ந்த கருங்காலி போன்ற மரங்களையும் இலகுவாகப் பெறக்கூடிய நிலையங்களாக வடமேற்குத்துறைகள் விளங்கின. அதற்கு பகரமாக புடவை, நெல், அரிசி, பீங்கான் வகைகள், சணல் நூல், வாசனைச் சரக்குகள், கனியப்பொருட்கள், மருந்து வகைகள், குதிரைகள் என்பனவும் இறக்குமதியாகின.[1]

இங்கு எமது கவனத்தை ஈர்த்த விடயம் குதிரைகளும் யானைகளுமாகும். அக்காலத்தில் அரசர்களுக்கு இன்றியமையாத துணைகளாக இரு பிராணிகள் இருந்தன. அவை குதிரைகளும், யானைகளுமாகும். அவை இரண்டுமே குறைந்த அளவில் தற்போது மன்னார் பிரதேசத்தில் காணக்கூடியதாக இருக்கின்றன. வளர்சி குறைந்த 'போனி' என அழைக்கப்படும் குதிரைகள் மன்னார் தீவில் மிகச் சொற்ப அளவே தற்போது இருந்தபோதிலும், ஐம்பது ஆண்டுகளின் முன்னர் அவை அங்கு நிறைந்து காணப்பட்டன. இவற்றின் சந்ததியே தற்போது புத்தளத்தில் பரவலாகக் காணப்படுகின்றன என்பதும் மற்றுமொரு விடயமாகும்.



மன்னார் குதிரைகளின் சந்ததிகள்
புத்தளம் பிரதேச தரவையில் மேய்ச்சலில் ஈடுபட்டுள்ளன.

இலங்கையிலேயே மன்னார் தீவுதான் 'போனி' குதிரைகளுக்கு முதலிடம் பெற்ற பூமியாக அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் வரை இருந்து வந்தது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயம், மன்னாருக்கு குதிரைகள் எப்படி வந்தன, எத்தகைய குதிரைகள் வந்திருக்கும், புத்தளத்தில் அவற்றின் பெருக்கம் பற்றி சற்று கவனிப்போம்.

'குதிரை வணிகம் அறபிகளின் ஒரு பாரிய தொழில்' என்பது யாத்ரீகர் மார்க்கோ போலோவின் பதிவு.[2] கி.பி. 7ம் நூற்றாண்டுக்குப் பின்னர், இந்து சமுத்திரத்து வர்த்தகம் அறாபியர் வசமானது. அன்று தொட்டு அறாபிய வர்த்தகர்கள் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்ததாகத் தோன்றுகிறது. பல்வேறு நாடுகளிலிருந்து வந்த பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த வர்த்தகக் குழுவினர் அனுராதபுரத்தில் இருந்தனர் என்பதற்கு ஆதாரங்களுள, இவர்களுள் அறாபிய, பாரசீக வர்த்தகர்களும் இருந்தனர் எனக் கூறப்படுகின்றது. 'தமிழகத்தையும், இலங்கை அனுராதபுரத்தையும் ஆண்ட சோழ அரசுக்கு மட்டுமல்ல, அதன் பின் வந்த ஆட்சியாளர் களுக்கும் குதிரைகள் தேவைப்பட்டன. குதிரை வியாபாரிகள் இன்றியமையாதவர்களானார்கள்.'[2]

'ஹுர்முஸ் துறைமுகத்திலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியானவை குதிரைகளே! என்ற ஒரு தகவலைப் பார்க்கும் போது அங்கிருந்து தான் இலங்கைக்கும் வந்திறங்கியிருக்க வேண்டுமேயல்லாது அறபு நாடுகளிலிருந்து நேரடியாக அல்ல!'[2]

'அக்கால முஸ்லிம்களின் முக்கிய வியாபாரம் உயர்சாதி அறாபியக் குதிரைகளை இலங்கைக்கு கொணர்தலும், அவற்றைப் பராமரித் தலும், பாதுகாத்தலுமாகும். ரத, கஜ, துரக, பதாதி என்ற நாற் படைகளுள் குதிரைப்படை முக்கிய பங்கு வகித்தது. அறாபியக் குதிரைகளை இலங்கையில் இனவிருத்தி செய்வது இயலாத காரியம், என்றொரு முக்கிய குறிப்பை லேடி ஆன் ப்ளன்ட் என்பார் தந்துள்ளார்.'[2]

'எம்.எம்.எம். மஹ்ரூப் என்ற இலங்கை ஆய்வு எழுத்தாளர், குதிரைகள் இருக்கும் வரையில் குதிரை வியாபாரிகளும் இருப்பார்கள்

என்ற ஹோராவில், அனுராதபுரத்தில் முஸ்லிம்கள் சிறப்புடன் வாழ்ந்தார்கள் போலும்'[2] எனக் குறிப்பிட்டுள்ளார்.
'அனுராதபுரத்தில் காயல்பட்டினத்திலிருந்து வந்த முஸ்லிம்களும் கணிசமான அளவு முக்கியத்துவம் பெற்றிருந்தனர். அவர்கள் வியாபாரிகளாவே இருந்தனர்' என ஏ.பி.எம். ஹுசைனும் குறிப்பிடு கின்றார்.[2]

மேல் சொல்லப்பட்ட குதிரைகள் பற்றியதும், அறாபிய குதிரை வியாபாரிகள் பற்றியதுமான குறிப்புக்கள் கலாபூஷணம் மானா மக்கீன் அவர்களின் 'வரலாற்றில் இலங்கையும் காயல்பட்டினமும்' என்னும் ஆய்வு நூலிலிருந்து பெறப்பட்டவையாகும்.

இப்படியாக அறாபிய வியாபாரிகளால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட உயர்சாதிக் குதிரைகள் யாவும் பெரும்பாலும் மன்னார் துறை வழியாகவே கொண்டு வரப்பட்டிருக்கலாம். நாவாய்களிலிருந்து இறக்கப்பட்ட குதிரைகள் முதலில் மன்னார் தீவில் வைத்துப்பல நாள் பராமரிக்கப்பட்டபின்பே அவை அரசர்களுக்குக் கொண்டு போய் ஒப்படைக்கப்பட்டிருக்கலாம், ஏனையவர்களுக்கும் விற்கப்பட் டிருக்கும். இந்த அடிப்படையிலேயே மன்னார் தீவில் குதிரைகள் பெருக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். லேடி ஆன் ப்ளன்ட் அவர்களின் கூற்றுப்படி போதிய பராமரிப்பின்மையால் காலப்போக்கில் இக்குதிரை களின் வளர்ச்சியிலும், உயரத்திலும் குறைவு ஏற்பட்டு போனி குதிரைகளாக மாறியிருக்க வேண்டும்.

இக்குதிரைகள் மன்னார் தீவின் தாராபுரம், எருக்கலம்பிட்டி முதல் தலைமன்னார் வரை பரவலாகக் காணப்பட்டன. சொந்தக்காரர்கள் ஆடு, மாடுகளைக் கண்காணித்து வளர்ப்பது போல இவற்றின் பராமரிப்பில் கவனஞ் செலுத்துவதில்லை. எனினும் மாடுகளைத் துரத்திப்பிடிப்பதற்கும், வண்டிகளில் பூட்டிப்பயணஞ் செய்வதற்கும் குதிரையை சொந்தக்காரர்கள் பயன்படுத்தினர். கொழும்பு, நுவரஎலிய முதலான இடங்களில் நடைபெறும் குதிரை ஓட்டப்போட்டிகளுக்கு இவை வாங்கிச் செல்லப்படுவதுமுண்டு. கலியாண மாப்பிள்ளைகளை மணமகள் வீட்டுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்வதற்கும் 'மாப்பிள்ளைக் குதிரைகள்' புறம்பாக இருந்துள்ளன. தாராபுரம்

பட்டுவெளித் தரவையில் இக்குதிரைகள் பரவலாக மேய்ச்சலில் ஈடுபட்டிருப்பதை முன்னர் காணக்கூடியதாக இருந்தன என்பதாகவும், தாராபுரம் மர்ஹூம்களான அ.நெ.பக்கீர் மீரா, இஸ்மாயீல், எஸ். அப்துல் கையூம் முதலானோரிடம் நிறைய குதிரைகள் இருந்த தாகவும், சேகு மொகிதீன் அவர்களிடம் 'மாப்பிள்ளைக் குதிரை' இருந்ததாகவும், இஸ்மாயீல் அவர்களிடம் குதிரை வண்டி இருந்ததாகவும் தாராபுரம் ஜனாப் கே.எம். கபீர் மேற்படிதகவல்களை இக்கட்டுரைக்காகத் தந்தார். 1974ம் ஆண்டில் மன்னாருக்கு வருகைதந்த காலஞ்சென்ற செல்வந்தர் திரு உபாலி விஜயவர்தன அவர்களுக்கு தாராபுரத்தில் வைத்து இரண்டு குதிரைகள் வாங்க உதவியதோடு அவற்றை பாதுகாப்பாக லொறி வண்டியில் ஏற்றி கொழும்புக்கு கொண்டு செல்லவும் உதவியதாகக் கூறிய ஜனாப் கபீர், ஒரு வருடம் கழித்து கொழும்புக்குச் சென்று பார்த்தபோது அவற்றுக்கு வெளிநாட்டு உணவுகள் வழங்கியும் விசேட பராமரிப்பின் காரணமாகவும் நன்கு வளர்ச்சியடைந்திருப்பதைக் கண்டு தான் ஆச்சரியப்பட்டதாகவும் கூறிய அவர் அவ்வருடம் நுவரஎலியவில் நடைபெற்ற குதிரைப்பந்தயத்தில் திரு உபாலி விஜயவர்தன அவர்களின் மன்னார் குதிரையே முதலிடம் பெற்றதாகவும் கூறினார்.

1950களில் புத்தளம் மதுரங்குளி விருதோடையைச் சேர்ந்த தனவந்தரும், கிராமசபைத் தலைவரும், பள்ளிவாசல் தலைவருமான மா.செ. என அழைக்கப்பட்ட மர்ஹூம் மாப்பிள்ளைத்தம்பி சேகு அப்துல் காதர் அவர்கள் மன்னாருக்குச் சென்று ஐம்பது வரையிலான குதிரைகளைக் கொள்வனவு செய்தார். இவற்றை வில்பத்து வனத்து மறிச்சிக்கட்டிப்பாதையூடாக புத்தளம் இலவன்குளத்துக்கு கையாட்கள் மூலம் நடைபாதையாக பட்டிசாய்த்து வந்து அங்கிருந்து புத்தளம் வழியாக மதுரங்குளிக்கு குதிரைகள் ஐம்பதும் கால்நடையாகவே கொண்டு சேர்க்கப்பட்டன. பிறகு அவரால் விளம்பரங்கள் பல செய்யப்பட்டு, மதுரங்குளி சந்தைக்கு அருகாமையில் அவரால் குதிரை வியாபரம் நடத்தப்பட்டது. அயல் பகுதிகளிலிருந்தும் பலரும் வந்து மன்னார் குதிரைகளை வாங்கிச் சென்றனர். அக்குதிரை வியாபரத்தை பார்க்க நானும் எனது மாமனாருடன் போயிருந்தேன். அப்போது நான் மாணவப் பருவம், மாமனாரும் ஒரு குதிரை வாங்கினார். ஒரு குதிரை 200/- ரூபாய் முதல் 300/- வரை விலை

போனது. குதிரை வியாபாரம் நன்கு நடைபெற்றதால் மா.செ. அவர்கள் மன்னார் சென்று மீண்டும் ஐம்பது குதிரைகளைக் கொணர்ந்து மதுரங்குளி சந்தையில் விற்றார். 'மாவன்னா சேனா' அவர்களைத் தொடர்ந்து புத்தளம் நகரைச் சேர்ந்த எனது மாமனார் மர்ஹூம் ஐ.எல். ஹபீபு முஹம்மது அவர்களும் மன்னாருக்கு இரு தடவைகள் சென்று ஐம்பது, ஐம்பது குதிரைகளாக நூறு குதிரைகளைக் கொண்டு வந்து விற்பனை செய்தார். ஆக இரண்டு பேர்களும் மன்னாரிலிருந்து இரு நூறு குதிரைகளை கொண்டு வந்து புத்தளம் பிரதேசத்தில் விற்பனை செய்ததன் மூலம் குதிரை இனப்பெருக்கம் ஒன்றை இங்கு ஏற்படுத்தியதுடன், குதிரைக் கலாசாரம் ஒன்றையும் இங்கு அறிமுகப்படுத்தினர்.

முஸ்லிம்களின் பெருநாட்கள் இரண்டு. ஒன்று நோன்புப் பெருநாள், மற்றது ஹஜ்ஜுப் பெருநாள். முஸ்லிம்கள் நிறைந்து வாழும் புத்தளத்தில் பெருநாள் காலம் களைகட்டிவிடும். நகரத்தில் 'பெரிய தரவை' 'சின்ன தரவை' (கங்கானிக்குளத் தரவை) என இரண்டு மைதானங்கள் இருந்தன. பெருநாள் தினம் பெரிய தரவையிலும், மறுநாள் சின்ன தரவையிலும் சிறுவர், வளர்ந்தோர், முதியோருக்கான பல்வேறு விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறும். கவர்ச்சியான பரிசில்களும் வழங்கப்படும். இது நூறு ஆண்டுகள் வரை நடைபெற்று வந்த நிகழ்ச்சி இவை. மன்னாரிலிருந்து அதிகமான குதிரைகள் தருவிக்கப்பட்ட பின்னர் குதிரை ஓட்டப்போட்டியும் பந்தயத்தில் இடம்பிடித்தது. காலக்கிரமத்தில் 'பெருநாள் ரேஸ்' வைபவத்தில் குதிரை ஓட்டமே அதிகமானோரைக் கவர்ந்த ஜனரஞ்சக நிகழ்ச்சியாகி பின்பு கூட்டம் கலையாதிருக்க கடைசி நிகழ்ச்சியாகவும் ஆக்கப்பட்டது. இப்போட்டிகளில் இருபது வரையான குதிரைகள் கலந்து கொள்ளும், இந்நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க சிலாபம், குருநாகல் பகுதிகளிலிருந்தும் ரசிகர்கள் வருகை தந்தனர்.

'ஜொக்கி' என அழைக்கப்படும் குதிரை ஓட்டுனர்களாக, குதிரை வியாபாரி ஐ.எல். ஹபீபு முஹம்மது, இரட்டையர்களான எனது சகோதரர்கள் எம்.ஐ. அப்துல் வாஹித், எம்.ஐ. அப்துல் வஹாப், எஸ்.ஏ.சி செய்னுல் ஆப்தீன், எம்.ஐ. தாஹிர், எஸ்.ஏ.சி. யாக்கூப், எம்.எச்.எம். ஹனிபா, டிரோன், ஹிலரி, எம்.ஐ. அப்துல் காதர், ஜோன்

அப்பு, என்.எம்.எல்.எம். சரிப், எச். ரிபான், ஏ.டபிள்யு. வாரிஸ், பர்சான், அபுல் கலாம் முதலானோர் விளங்கினர். புத்தளம் நகரில் நீண்ட காலமாக நடைபெற்று வந்த இந்த ஜனரஞ்சக பெருநாள் விளையாட்டுப் போட்டிகள் அண்மித்தகாலத்தில் குடியிருப்புப் பெருக்கம், கலாசார பாதிப்பு முதலான காரணிகளால் நிறுத்தப்பட்ட போதிலும், சூழ உள்ள கிராமங்களில் இன்றும் நடாத்தப்பட்டு வருகின்றன.

மன்னார் குதிரைகளும், அவற்றின் சந்ததிகளும் புத்தளம், நுவரஎலிய முதலான இடங்களில் பல்வேறு ஜனரஞ்சக ஓட்டப்போட்டி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி அங்குள்ள மக்களை அவை மகிழ்வித்த போதிலும், அதன் தாயகப் பூமியான மன்னாரில் குதிரையோட்டப் போட்டிகள் நடைபெறாதிருந்தமை ஆச்சரியமான விடயமே!

மன்னாரில் தற்போது குதிரைகளின் தொகையானது முஸ்லிம்களின் இடப்பெயர்வு, பராமரிப்பின்மை, திருட்டு முதலான காரணங்களால் மிகவும் குறைந்து விட்ட போதிலும் மன்னார் குதிரைகளின் சந்ததிப் பெருக்கம் புத்தளம் நகரிலும், சூழ உள்ள கிராமங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றன. தற்போது ஒரு போனிக் குதிரையின் விலை இங்கு 15,000/- ரூபாய் முதல் 20,000/- ரூபாய் வரையுள்ளது. எருக்கலம்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் அல்ஹாஜ் எம்.எஸ். நூஹ் அவர்களின் குதிரைகள் தற்போது நுவரஎலிய குதிரைப்பந்தயப் போட்டியை அலங்கரிக்கின்றன என்ற தகவலும் எமக்கு கிடைத்துள்ளது.

***யானைகள் பிடித்தல் :***

பெரிய வனத்துக்குள் சென்று காத்திருந்து யானைகளைப் பிடிப்பது ஆபத்தான ஒரு தொழில் மட்டுமன்றி, பயங்கரமான கலையும் கூட. இதற்கு அதீதமான துணிச்சல், திறமை, உடற்பலம், நிதானம், நுணுக்கம் முதலானவை தேவை.

ஊலகின் பல பாகங்களிலும் யானை பிடிக்கும் தொழில் பல வழிமுறைகளின் மூலம் நடைபெறுகின்றன. இலங்கையில் 'யானை கட்டுதல்' தொழிலானது காடுகளின் மத்தியில் சுமாரான பரப்பில் பலமான சுற்று வேலி அமைத்து, பலமான கதவொன்றையும் அமைத்துப் பிடித்தல். மற்றது யானைகள் செல்லும் வழியில் கண்ணிகள், படு குழிகள் அமைத்துப் பிடித்தல், பழக்கப்பட்ட யானைகளின் உதவியுடன் காட்டு யானையைப் பிடிக்கும் வழக்கமுமுண்டு.[1]

இலங்கை மன்னார் பிரதேசத்தின் முசலிப் பகுதியில் மறிச்சிக்கட்டி, கரடிக்குளி, பொற்கேனி, கொண்டச்சி, பாலைக்குழி, மற்றும் மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதிகளிலும் யானை பிடித்தல் தொழில் அதிகமாக நடைபெற்றுள்ளது. புத்தளத்திலும் யானை கட்டுவோர் பலர் இருந்துள்ளனர்.

கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லா அவர்களின் 'முசலி முஸ்லிம்கள்' பற்றிய நூலில் 'தென்னாசியாவில் யானையைப் பிடித்து மனித நடவடிக்கைக்கு பயன்படுத்தும் வழமை கடந்த 5000 ஆண்டுகளாக காணப்படுகின்றது. (Lahiri-Choudhry – 1995) ஆனால் இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி காலங்களில் (துருக்கி, ஆப்கானிஸ்தான், மொகலாய) யானை பிடித்தல் பிரபல்யமாக இருந்தது. யானை வீட்டுத் தேவைகளுக்கும், யுத்த நடவடிக்கைகளுக்கும் பயன் படுத்துவது வழக்கமாகக் காணப்பட்டது. யானைகள், தொழில் தேர்ச்சி பெற்ற யானைப்பிடிக்காரர்களால் பிடிக்கப்படும். யானை பிடித்தலில் முஸ்லிம்களே இந்தியாவிலும், இலங்கையிலும் தேர்ச்சி பெற்று விளங்கினர். இவ்வாறு தேர்ச்சி பெற்ற முஸ்லிம்கள் பணிக்கர்கள் என அழைக்கப்பட்டனர். (Jeyewardene – 1994)'[3]

யானை வீட்டு தேவைகளுக்கும் யுத்த நடவடிக்கைகளுக்கும் மட்டுமன்றி, காட்டுத் தொழிலுக்கும், தோட்ட வேலைகளுக்கும், கோயில் தேவைகளுக்கும், ஓட்டப் பந்தயங்களுக்கம் பயன் படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் எல்லாளன் - துட்டகமுனு போரில் யானைகளிலிருந்தே

யுத்தம் செய்துள்ளனர். புத்தளத்திலிருந்து மன்னாருக்கான தேங்காய்கள் வில்பத்து வனத்தினூடாக மர்ஹூம் இ.செ.மு. (பெரிய முதலாளி) குடும்பத்துக்கு சொந்தமான யானை வண்டிகளிலேயே எடுத்துச் செல்லப்பட்டன. அவர்களின் பெரிய சீமான்வெளி (சீமாவெளி) தோட்டத்தில் தேங்காய்கள் இழுக்கவும், பெருநாள் கால விளையாட்டு நிகழ்ச்சியின் போது 'யானை ஓட்டப் போட்டி" களுக்கும் இந்த யானைகள் பயன்படுத்தப்பட்டன. (சுயகருத்து)

'பணிக்கர் எனப்பட்ட யானை பிடிக்கும் முஸ்லிம்களின் வரலாறு மிகத் தனித்துவமானது. இலங்கையில் பணிக்கர் முஸ்லிம்களின் ஆரம்பம் மன்னாரின் முசலிப் பற்றுப் பிரதேசமாகும். மிக நீண்ட காலத்திற்கு முன்னர் இம் முஸ்லிம்கள் இந்தியாவிலிருந்து முசலிக்கு வந்தார்கள். போத்துக்கேய, ஒல்லாந்தர் காலங்களில் இம்முஸ்லிம்கள் பலவிதமான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் யானை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். பிரித்தானியர் காலத்தில் இக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருந்தன. (Cannon and Davis – 1995)' [3]

'பிரித்தானிய அறிக்கைகளின்படி முசலிப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் யானை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தார்கள். Boake (1888) என்பவரின் படி, 1800ம் ஆண்டுகளில் 200க்கு மேற்பட்ட யானை பிடிக்கும் வல்லமை கொண்ட முஸ்லிம்கள் முசலிப் பிரதேசத்தில் வழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றார். யானை பிடித்தலுக்கான அனுமதி அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. 1851ல் முதன்முதலாக பிரித்தானிய அரசாங்கம் பணிக்கர் முஸ்லிம்களுக்கு யானை பிடிக்கும் அதிகாரத்தைக் கொடுத்தது. 1816, 1817, 1818, 1819 ஆகிய நான்கு ஆண்டுகளில் மொத்தமாக 49 பயனுள்ள யானைகளை முஸ்லிம்கள் பிடித்தனர். இவை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. 1816ம் ஆண்டு யானை பிடித்தலுக்கான ஒரு முதலியாரை அரசாங்கம் நியமித்தது. அவரின் பெயர் மதுரசாயிப் மாக்கார் என்பதாகும். 1867ம் ஆண்டு மாத்திரம் யானை எற்றுமதி மூலம் 23,286 ஸ்ரேலின் பவுனை அரசாங்கம் பெற்றது. (Administrative Report 1868)'[3] எனவும் கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லா குறிப்பிட்டுள்ளார்.

முசலிப்பிரதேசத்து விசேடமாக மறிச்சிக்கட்டி, கொண்டச்சி, பொற்கேனி,

பாலைக்குளி, கரடிக்குளி முதலான கிராம மக்கள் வில்பத்து சரணாலயத்தின் வடபுற சூழலில் வசித்து வருவதாலேயே யானை பிடிக்கும் தொழிலை அவர்கள் மேற்கொண்டனர். அரச சட்டங்கள், வாழ்வாதார பிரச்சினைகள், கொடுப்பனவு பிரச்சினைகள், இடம்பெயர்வு பிரச்சினைகள் முதலானவை காரணமாக முசலிப்பிரதேச யானை பிடிக்கும் தொழில் அரிகிவிட்டது.

இத்தகைய தொழிலில் ஈடுபட்ட கடைசித் தலைமுறையின் கடைசி மனிதர் எனக்கருதக்கூடிய ஒரு முதியவரை புத்தளம் இஸ்மாயில் புரம் நிவ் சிட்னி முகாமில் அண்மையில் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. என்னுடன் சிலாவத்துறையைச் சேர்ந்தவரும் முசலிப் பிராந்திய பட்டதாரிகள் ஒன்றிய செயலாளருமான ஜனாப் ஏ.டி. சமீம் ஆசிரியரும் இணைந்து கொண்டார்.




மறிச்சிக்கட்டியைச் சேர்ந்த 90 வயதுடைய ஜனாப் கச்சி மரைக்கார் சாகுல் ஹமீத் அவர்கள் மறிச்சிக்கட்டியிலிருந்து தீவிரவாத பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்து கடந்த பதினைந்து வருடங்களாக குடும்பத்தவர்களுடன் இஸ்மாயில் புரத்தில் வசித்து வருகின்றார்கள். 90 வயதைத் தாண்டி விட்டாலும் இறைவன் அருளால் பார்வை, கேள்வி, பேச்சு, நடை முதலான சக்திகளையுடையவராக இருப்பதைக் கொண்டு இளம் வயதில் யானை பிடிக்கும் திடகாத்திர நிலையில் இருந்திருப்பார் என்பதை இலகுவாக ஊகிக்க முடிகின்றது. முதியவர் அஸர் தொழுகையை ஜமாஅத்தாக தொழுத பின்பே அவரைப் பேட்டி கண்டோம்.

இம்முதியவர் யானை பிடிக்கும் பணிக்கரின் உதவியாளர்களில் ஒருவராக செயல்பட்டுள்ளார். அவர்களின் அனுபவங்களையும், அறிந்தவைகளையும் அலசிக்கொண்டோம். அவர்களின் கூற்றுப்படி

1980ம் ஆண்டுக்கு முன்னர் உள்ள காலங்களில் யானை பிடித்தல் முசலிப் பிரதேசத்தில் நடைபெற்றதாகவும், தான் ஐந்து யானைகளைப் பிடிக்கும் குழுவில் உதவியாளராகச் செயல்பட்டதாகவும் குறிப்பிட்டார். யானை பிடிப்பது மிகவும் பயங்கரமான தொழில் எனவும் இதற்கு நிறைய அனுபவமும், ஆற்றலும், துணிச்சலும் தேவை.

யானை இரண்டு வழிகளில் பிடிக்கப்படும். கண்ணி வைத்துப் பிடித்தல் ஒரு முறை, துரத்திப் பிடித்தல் இன்னொரு முறை. யானையைப் பிடிக்கும் குழுவின் தலைவர் பணிக்கர் என அழைக்கப்படுவார். இவர்கள் அனைவரும் முஸ்லிம்களே. மறிச்சிக்கட்டி பகுதியில் மர்ஹூம்களான ஹமீத் மரைக்கர், ஆதம்பாவா, சின்னத்தம்பி, சாகுல் ஹமீத், பக்கீர் என ஐந்து பணிக்கர்கள் இருந்தனர். இவர்களுள் பக்கீர் மறிச்சிக்கட்டியின் புகழ்பெற்ற பணிக்கராக விளங்கினார். அவர் துணிச்சலுடன் யானையின் வாலையும் வெட்டிக்கொண்டு வருவாராம். ஒரு முறை யானைகள் கூட்டமாகச் சென்றபொழுது அவர் குட்டி யானை ஒன்றின் முகத்தில் ஓங்கிக் கயிற்றுப்பட்டால் அடித்தபோது அது தடுமாறிக் கீழே விழுந்ததாம். விழுந்த சிறு யானை எழும்ப முன்னரே தாய் யானை வீறு கொண்டு வந்ததாம். எப்படியோ அதன் தாக்குதலிலிருந்து பக்கீர் பணிக்கர் சமயோசிதமாகத் தப்பிக்கொண்டாராம். அப்போது தனக்கு 25 வயதிருக்கும் என்றார்.

இச்சம்பவத்தைத் தாம் நேரில் கண்டு அதிர்ச்சியடைந்ததாகவும், பக்கீர் அவர்களின் திறமையை அனைவரும் மெச்சியதாகவும், இது போல வேறொரு சந்தர்ப்பத்தில் நேர்மாறாக அனைவரும் யானை பிடிக்கும் ஆயத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது முசாபர் என அழைக்கப்பட்ட எஸ். சாகுல் ஹமீத் அவர்கள் யானை கண்ணியில் இறுகியிருந்த வேளை அதன் அருகில் அவர் செல்லவே அந்த யானையால் தாக்கப்பட்டு அவ்விடத்திலேயே மரணித்த துயர சம்பவத்தையும் தான் நேரில் கண்டதாகவும் முதியவர் குறிப்பிட்டு இத்தகைய ஆபத்துக்களையும் எதிர்கொண்டுதான் நாங்கள் யானை பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டோம் எனக் குறிப்பிட்டார்.

யானைகளை கோடை காலத்தில் குருநாகல் பிரதேச காடுகளிலும், மாரி காலத்தில் மன்னார் பிரதேசக் காடுகளிலும் பிடிக்கலாம்.

யானை பிடிக்க வனத்துக்குள் செல்லுமுன்னர் சில வன பாதுகாப்பு நடவடிக்கைகளும் அண்ணாவியர் மூலம் மேற்கொள்ளப்படும் என்றார். யானை வியாபாரிகளின் வேண்டுதலின் பேரிலேயே பணிக்கர்மார் 10 அல்லது 12 உதவியாளர்களுடன் வனத்துக்குச் சென்று பல நாள் காத்திருந்து யானையை பிடித்து கொணர்ந்து முதலாளிமார்களுக்கு ஒப்படைப்பர். யானை வாங்கும் முதலாளிகளாக மன்னாரைச் சேர்ந்த 'காவன்னா மானா' என அழைக்கப்படும் அ. கச்சு முஹம்மது, (இவர் லைசன்ஸ் பெற்றவர்) இந்தியாவின் கீழக்கரையைச் சேர்ந்தவர்களான ஜனாப் முஸ்தபா, ஜனாப் சுல்தான் அப்துல் காதர், குருநாகலை ஜனாப் சாலிபு, அமுனுகமவைச் சேர்ந்த திரு கிரிபண்டா, நிக்கவெரட்டியைச் சேர்ந்த ஜனாப் சாலி முதலானோரைக் குறிப்பிடலாம் என நினைவில் வந்த முதலாளிமார்களின் பெயர்களை எம்மிடம் ஒப்புவித்தார். வனத்தில் பல நாள் காத்திருந்து கட்டிய யானையை 15 தினங்கள் வரை தீனி போட்டு பழக்கிய பின்னரே ஒப்படைக்க வேண்டிய இடத்துக்கு அதனை நடத்திச் சென்று ஒப்புவிப்பார்களாம்.

உதாரணத்துக்கு குருநாகலையில் ஒப்புவிக்க வேண்டிய யானையை பழக்கி பின்னர் பழக்கப்பட்ட யானை ஒன்றுடன் பிணைத்து, மறிச்சிக்கட்டியிலிருந்து முருங்கன் வழியாக அனுராதபுரம் சென்று அங்கிருந்து குருணாகல் அல்லது நிக்கவெரட்டி முதலான இடங்களில் ஒப்படைப்பர். இப்படியாக யானையை நடாத்திச்சென்று ஒப்படைக்க பதினைந்து தினங்கள் வரை எடுக்கும் எனவும், பாதையோரங் களிலேயே இரவுக் காலங்களை யானைகளுடன் கழிப்போம் என்று அம்முதியவர் குறிப்பிட்டார்.

அக்காலத்தில் பிரதேசங்கள் கோரளைகளாக வகுக்கப்பட்டிருந்தன. கோரளை ரீதியாக யானை பிடிப்பதற்கான அனுமதிப்பத்திரங்களை ஆங்கிலேயே ஆட்சியினர் வழங்கியிருந்தனர். இப்படியாக அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த ஜனாப் சாலி முதலாளிக்குத் தாங்கள் ஒப்படைத்த யானைக்கு அவர் இரண்டாயிரம் ரூபாய் தந்ததாகக் குறிப்பிட்டார். முதியவர் யானையின் பெறுமதியைக் குறிப்பிட்டதும், பேட்டி காணலின் போது எம்முடன் இருந்த இளைஞர் சிலர் ஆச்சரியத்துடன் 'என்ன, மாதக்கணக்கில் கஷ்டப்பட்டு, இவ்வளவு பெரிய யானையைப் பிடித்து, 15 நாள் பழக்கி, 15 நாட்கள்

சிரமங்களுடன் 200 அல்லது 300 கி.மீ. நடாத்திச் சென்று விற்கப்பட்ட யானைக்கு ஆக 2000/- ரூபாய்தானா தருவார்கள்? இதில் எத்தனை பேருக்கு பங்கு சேரவேண்டியுள்ளது?' என்று முதியவரிடம் வினவிய போது, 'தம்பிகளா அப்போது உள்ள 2000/- ரூபா என்பது இப்போது இரண்டு இலட்சம் ரூபாவுக்கு தேறும்' என்றார். இந்த பேட்டி அந்த இளைஞர்களுக்குச் செய்தியாக இருந்தது. முதியவருடன் அவரது மூத்த மகனான ஜனாப் எஸ்.எச். கச்சி முஹம்மது உட்பட குடும்பத்தவர்களும் இருந்தனர். அத்துடன் முதியவருக்கு நன்றி கூறி விடைபெற்றோம்.

புத்தளத்தில் வதியும் முசலி புதுவெளியைச் சேர்ந்த 65 வயதுடைய ஓய்வுபெற்ற ஆசிரியர் ஜனாப் எம்.என். அப்துல் றஹீம் அவர்கள் யானை வியாபாரம் பற்றிக் குறிப்பிடும் போது, 1950ல் தான் பத்து வயதுடைய மாணவனாக இருந்தபோது, தனது மாமனாரான சேனா சேனா என அழைக்கப்படும் மர்ஹூம் சேகு தாவூத் அவர்கள் பணிக்கர்களிடமிருந்து குட்டிகளும் பெரியனவையுமான ஏழு யானைகளைப் பெற்று அவரது புதுவெளி வளவில் கட்டி வைத்திருந்ததைத் தான் கண்டதாகவும், பின்னர் குருநாகலைப் பகுதியிலிருந்து லொறி வண்டிகளுடன் வந்த சிங்கள முதலாளிமார் அவற்றை மாமாவிடம் கொள்முதல் செய்து லொறி வண்டிகளில் ஒவ்வொன்றாக ஏற்றிச் சென்றதைக் கண்டதாகவும் கூறினார். மாமனார் தற்போது இருந்திருந்தால் அவருக்கு 105 வயது இருக்கும் என்ற தகவலையும் கூறினார்.

மேற்சொல்லப்பட்ட இரண்டு மூத்தோர்களும் தந்த தகவல்களின்படி வில்பத்து காட்டில் பிடிக்கப்பட்ட யானை ஏனைய பிரதேசங்களுக்கு பெரிய பழக்கப்பட்ட யானையுடன் பிணைத்துக் கால்நடையாகவும், லொறி வண்டிகள் மூலமாகவும் கொண்டு செல்லப்பட்டதை அறிகிறோம்.

அபாயகரமான யானைப் பிடிக்கும் தொழிலின் நுணுக்கங்கள், நடைமுறைகள் பற்றி 'யானை பிடித்தல்' என்ற உப தலைப்பில் கலாபூஷணம் மர்ஹூம் ஏ.என்.எம். ஷாஜஹான் அவர்கள் தனது 'புத்தளம் வரலாறும் மரபுகளும்' என்ற ஆய்வு நூலில் விபரிக்கையில் '......அபாயமும், துணிகரமும் நிறைந்த இத்தொழிலுக்குச்

செல்வதற்கு முன்பு திருக்குர்ஆனிலுள்ள வசனங்கள் பாராயணம் செய்யப்படும். வன தேவதைகளைத் திருப்திப்படுத்துவதற்காக அண்ணாவியார் மூலம் காட்டின் தொடக்கத்தில் தேங்காய்கள் உடைத்து சில கிரியைகளைச் செய்வது வழக்கத்திலிருந்து. வேறு பிரார்த்தனைகளும் நடைபெறும்.' எனவும்

'எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த பக்கீர் புலவர் பாடியுள்ளதாகக் கூறப்படும், 'யானைக்காதல்' என்ற தலைப்பிலான கவிதையிலிருந்து இரு செய்யுளை கீழே தந்துள்ளார். காட்டுக்கதிபதியாக மக்கள் கருதியுள்ள நபி ஹிழ்ரு (அலை) அவர்களிடம் காத்தருளும்படி வேண்டும் பிரார்த்தனையே இது:-

1.

கோட்டானையைப் பிடிக்க
கொள்கையுடனே மகிழ்ந்து
வீட்டாளிடத்தில் விடை
பெற்றகலும் வேளையிலே
காட்டேறி காளியினால்
கட்டுந்தடை வராமல்
காட்டாமரைத் துணையைத்
தந்துதவும் நாயகமே
(கால் + தாமரை —
காட்டாமரை)

2.

நெஞ்சம் மிகத் துணிவாய்
நீண்ட தடக் கோட்டுடைய
குஞ்சரத்தின் காலில்
குணிந்து கயிறேந்துகையில்
வெஞ்சினத்தினாலுதறி
வீசியடியாதிருக்க
தஞ்சம் வைத்துக் காத்தருள்வீர்
தக்க ஹிழ்றுல்லாஹ்வே.

----- * ------

*உசாத்துணை நூல்கள் :*


1. 'புத்தளம் வரலாறும், மரபுகளும்'
   — கலாபூஷணம் ஏ.என்.எம். ஷாஜஹான்
2. 'வரலாற்றில் இலங்கையும் காயல்பட்டினமும்'
   — கலாபூஷணம் மானா மக்கீன்
3. 'இலங்கையின் இனப்பிரச்சினையும், பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களும்' தொகுதி 5
   — முசலி முஸ்லிம்கள் - கலாநிதி எஸ்.எச். ஹஸ்புல்லாஹ்
4. 'புத்தளம் - மன்னார் பாதையும், வரலாற்றுப் பயணங்களும்'
   — கலாபூஷணம் அல்ஹாஜ் எம்.ஐ.எம். அப்துல் லத்தீப்.

# மன்னார் முஸ்லிம்களின் கலை இலக்கியப் பயணங்கள்

- முஹம்மது இமாம் ஹன்பல் -

வடபுலத்தில் முஸ்லிம்கள் அதிகளவு வாழ்ந்த இயற்கை அழகும் சகல வளங்களும் ஒருங்கே அமைந்த மன்னார் மாவட்ட முஸ்லிம் களுக்கு பல்லாண்டுப் பாரம்பரிய வரலாறு உண்டு.

தென்கிழக்கு ஆசியாவில் புகழ்பெற்ற துறைமுகத்தை தன்னகத்தே கொண்ட மாதோட்டம் அல்லது மாந்தை - இந்திய, அரேபிய, சீன கடலோடிகளை கவர்ந்து வர்த்தகங்களுக்கும், யாத்திரைகளுக்கும் கேந்திர நிலையமாகக் காணப்பட்டது.

யவனர்கள் என்று அழைக்கப்பட்ட அரேபியர்கள் மன்னார் பகுதிக்கு வர்த்தகப் பயணங்கள் மேற்கொண்டபோது விட்டுச் சென்ற நினைவுச் சின்னமே 'பயா-பப்' எனப்படும் பெருக்கு மரம் - இந்தப் பிரமாண்டமான அரிய மரம் மன்னார் பகுதிகளில் காணப்படுகிறது.

மதுரையில் இருந்த மாங்குடி மருதனாரும் மாந்தையில் இருந்த ஈழத்து பூதந்தேவனாரும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இலக்கியப் பாலம் அமைத்த வரலாறும் இருக்கிறது.

ஈழத்தில் தமிழை வளர்த்த பெருமையில் முஸ்லிம்களுக்கும் சமபங்கு

இருக்கிறது. மன்னார் முஸ்லிம்கள், கலை இலக்கியப் பங்களிப்பு கணிசமான அளவு புரிந்திருப்பது மட்டுமன்றி கிராமியக் கலைத்துறை யிலும் அதிக ஈடுபாடு மிக்கவர்களாகவே காணப்பட்டிருப்பதுடன் தமது கலை கலாசாரங்களை பேணிக்காத்தும் வந்திருக்கின்றனர்.

கல்விமான்களையும், ஞானமேதைகளையும் தந்தது மட்டுமின்றி புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் அசைவுறு கலை வல்லுனர்கள், வித்தகர்களையும் தந்த மன்னார் மண்ணில் 90களுக்கு முற்பட்ட காலப் பகுதியில் கலைத்துறையை வளர்த்தவர்கள் இடம் பெயர்வுக்குப் பின்னரும் அதே நிலையில் இருப்பதும் இளைய தலைமுறையினர் இலக்கியமுயற்சிகளில் ஈடுபடுவதும் மகிழ்வுக்குரிய விடயமாக இருப்பினும் கிராமிய கலைத்துறைகள் மன்னார் முஸ்லிம்களிடத்தில் அருகிவருவது வருத்தத்திற்குரியது.

**கலைக்குடும்பம்**

மன்னாரைப் பொறுத்தவரையில் இரண்டு கலைக்குடும்பங்கள் மாத்திரமே இருக்கின்றன. ஒன்று இலக்கிய ஆர்வலர் மதார் முகையத்தீன் அவர்களுடையது. மற்றையது விடத்தல் தீவு 'தமிழ் முழக்கம்' புலவர் முகம்மது காசிம் ஆலிம் அவர்களின் குடும்பம்.

மன்னார்ப் பட்டினத்தில் மதார் முகையத்தீன் என்ற இலக்கிய ஆர்வலர் - அவரின் மூத்த மகன் அப்துல் றஹ்மான் இலங்கையில் உள்ள ஒரே ஒரு முஸ்லிம் வித்துவான், பண்டிதர், சிறந்த கவிஞர், இவர் தந்த 'குர்ஆன்குறல்' நூல் பிரசித்தமானது. தற்போது "நவமணி" தேசிய பத்திரிகையில் வித்துவான்பகுதித் தயாரிப்பாளராக இருந்து தரமான ஆக்கங்களைத் தந்து கொண்டு இருக்கின்றார். மற்றொரு புத்திரன் அப்துல் கபூர் இலங்கையின் புகழ்பெற்ற முன்னணி ஒளிப்பதிவு கலைஞராவார் சிங்கள திரையுலகில் கபூரை அறியாதோர் இரார் (பலமுறை சரசவிய விருது பெற்றவர்.)

மற்றொரு மகன் நாடறிந்த எழுத்தாளர், நல்ல கவிஞர், ஓவியர், 'கருவரையில் இருந்து கல்லறைக்கு' "ஒரு வெள்ளி ரூபாய்" "நஜ்ஜி அல் அலியும், ஹன்ஸல்லாவும்," போன்ற நூற்களைத்தந்தவர்,

சுதந்திர ஊடகவியலாளர், பல விருதுகளைப்பெற்றவர் அவர்தான் கலைவாதி கலீல் - மற்ற புத்திரன் மக்கள்காதர் நீண்டகாலமாக இலக்கியத்துறையில் ஈடுபட்டவர் தற்போது இலக்கியத்துறையில் அவ்வளவு பெரிதான ஈடுபாடு இல்லை, மன்னாரில் மக்கள் எனும் பத்திரிகையை வெளியிட்டவர். சாஹுல்ஹமீது என்பவர் சிறந்த மேடை நடிகர், கவிஞர். வித்துவான் றஹுமானின் மகள் வஹீதாவும், கலைவாதி கலீலின் மகள் பாத்திமா நஸ்வாவும் சிறுகதை, கவிதை, நாடகம், இசைப்பாடல் போன்றவற்றை எழுதிவருகின்றனர் - இவர்கள் வானொலிக்கலைஞர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மற்றையகலைக்குடும்பம்தான் விடத்தல் தீவு தமிழ் முழக்கம் மர்ஹும் புலவர் முஹம்மது காசீம் ஆலீம் அவர்களின் குடும்பம் இவர் எழுத்தாளர், கவிஞர், புராண விரிவுரையாளர். கள்ளத் தோனிக்குத் தீர்ப்பு (நாவல்), பத்வா (மார்க்கத் தீர்ப்பு) மாநபியே (கவிதை), இஸ்லாமிய தத்துவார்த்தம் போன்ற நூல்களைத் தந்தவர். சண்டமாருதப் பிரசங்கியும் ஆவார். புலவரின் சிரேஷ்ட புத்திரன் இளஞ்சிலதன் மர்ஹும் அஹமது அன்ஸாரி, ஏராளமான கவிதை களைத் தந்த நல்ல கவிஞன். மற்றைய மகன் எம்.சீ.எம். இமாம் இவர் இலக்கிய ஆர்வலர் புலவரின் கனிஷ்ட புத்திரன் கலையமுதன் இக்பால் நாடறிந்த நல்ல எழுத்தாளர். கவிஞர் பன்னூலாசிரியர். ஏராளமான மருத்துவக் கட்டுரைகளைத் தந்தவர். ஏழை எழுத்தாளன் (சிறுகதை), ஒரு கருவண்டு பறக்கிறது (சிறுகதை), கண்ணில் நிறைந்த க.்.பா (ஆராய்ச்சிக் கட்டுரை) மருத்துவன் போன்ற நூல்களையும் தந்தவர். புலவரின் மருமகன் அப்துல் ராசிக் இலக்கிய ஆர்வலர். புலவரின் பேரப் பிள்ளைகளான முஹைஸ், உவைஸ்கனி, முனாஸ்கனி, மஸாஹிரா ஆகியோர் எழுத்துத் துறையில் ஈடுபாடு கொண்டவர்கள். உவைஸ்கனி மனிதனோடு நடந்தபடி, கல்லுயிர் ஆகிய கவிதை நூல்களைத் தந்தவர். விடத்தல் தீவுச் செல்வன் இமாம் மொகமட் இன்ஹாம் கலைசுதன் இமாம் ஹன்பல் (ஊடகவியலாளர்) திருமதி இரிபா ஜம்சித், திருமதி சம்சி சஜாத் ஆகியோரும் எழுத்தாளர்களாகவும் கவிஞர்களாகவும் தடம் பதித்துள்ளனர். றும்ஸானி இக்பால், மொகமட் முசர்ரிப் ஆகியோரின் ஆக்கங்கள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்து கொண்டு இருக்கின்றன.

### விதானைப் புலவர்

மன்னார் எருக்கலம்பட்டியில் வாழ்ந்த வரகவி சின்ன இப்றாஹிம் முகம்மது கப்புடையார் என்பவரே விதானைப் புலவராவார். யானைக் காதல் எனும் நூலினை யாத்தவர். விதானையப்பா என்றும் இவரை அழைப்பதுண்டு.

### பக்கீர் புலவர்

எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த மீராசாகிபு பக்கீர் முகைதீன் என்பவர் எடுத்த எடுப்பில் பாடும் திறமை மிக்கவராகத் திகழ்ந்தார். இவரை மக்கள் சரஸ்வதிப் புலவர் என்றும் அழைத்தனர். பல்வேறு ஆக்கங்கள் மூலம் கவியுலகில் நிலைத்து நின்றார்.

### நொண்டிப் புலவர

சிலாபத்துறைக்கு அண்மையில் இருக்கும் கொண்டச்சி, எனும் கிராமத்தில் சரீபுப் புலவர் வாழ்ந்து வந்தார். சிறு வயதில் இவருக்கு முடக்குவாதம் நோய் ஏற்பட்டதால் இவரை மக்கள் நொண்டிப் புலவர் என்று அழைத்தனர். முத்துச் சுடர் எனும் நூலை யாத்தவர்.

### காசிம் ஆலிம் புலவர்

விடத்தல் தீவில் வாழ்ந்த முஹம்மது காசிம் ஆலிம் அவர்கள் புராண விரிவுரை நிகழ்த்துவதில் சமர்த்தர். கள்ளத் தோணிக்குத் தீர்ப்பு, பத்வா, மாநபியே, இஸ்லாமிய தத்தவார்த்தம் எனும் நூல்களை யாத்தவர். கபுகா எனும் வரலாற்றுப் புகழ் பெற்ற நாடகத்தையும்முத்து நப என்ற காவியத்தையும், அழுக்கோசு நாச்சியார் மான்மியம் போன்றவற்றையும் எழுதியவர் (1990களில் ஏற்பட்ட புலம்பெயர்வினால் இவை கைநழுவிப் போயின)

### எச்.எம்.சரீப்

மன்னார் சரீப் என்று எல்லோராலும் அழைக்கப்படும் எச்.எம்.சரீப்

சகலகலா வல்லவராகவே திகழ்ந்தார். பேச்சாளர், எழுத்தாளர், பத்திரிகையாளர், பாராளுமன்ற சமநேர மொழிபெயர்ப்பாளராகவும் இருந்தார். "ஹிஜ்ரி 1500" என்ற இவரது நாடக நூல் பிரசித்தமானது. மர்ஹூமாகிவிட்டார்.

*றிஷாட் பதியுதீன்*

தாராபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வன்னிப் புனர்வாழ்வளிப்பு மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் அல்ஹாஜ் ரிசாட் பதியுதீன் சிறந்த பேச்சாளர், நாடகக் கலைஞர், இடம்பெயர்வுக்கு முன் தாராபுரத்தில் பலமுறை மேடை ஏற்றப்பட்டு புகழ்பெற்ற தியாக தீபங்கள் எனும் நாடகத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்து பலரது பாராட்டைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தாராபுரம் அப்துல் கபூர் புலவரும், சிலாபத்துறை கபீபு முகம்மதுப் புலவரும் கவியாப்பதில் சிறந்தவர்களாகவும் புராண விரிவுரை நிகழ்த்துவதில் சமர்த்தர்களாகவும் காணப்பட்டனர்.

இடம்பெயர்வுக்குப் பின் இன்றும் எழுத்துத் துறையில் அதிக ஈடுபாடு கொண்ட எஸ்.எச். நி'.மத் வா ஊருக்குப் போவோம், எரிகொள்ளி போன்ற நூல்களை யாத்தவர்.

தாராபுரம் ஏ.ஹாஜா அலாவுதீன் அவர்கள் சிறந்த நாடக எழுத்தாளரும் அறிவிப்பாளருமாக தடம்பதித்து இருக்கின்றார். தாராபுரத்தின் வரலாறும் வழக்காறும் எனும் ஆய்வு நூல் அச்சு வாகனம் ஏறிவிட்டது.

பண்டாரவெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி அலிகான் சரீப் அமுதன் மாஸ்டர் எனும் புனைப் பெயரில் இலக்கிய வானில் உலா வருபவர். சிறந்த பேச்சாளருமாவார்.

முன்னாள் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி என்.எம்.ஐயூப் அவர்கள் சிறந்த பேச்சாளரும் எழுத்தாளரும் ஆவார்.

சிலாபத்துறையை பிறப்பிடமாகக்கொண்ட சமுகஜோதி ரபீக் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர் அடுக்குமொழியில் பேசி மக்கள் மனதை வென்றவர்.

அகத்திமுறிப்பை பிறப்பிடமாகக் கொண்ட செய்னுதீன் பரீத் நல்ல எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர், பன்னூல் ஆசிரியருமாவார். அகத்திமுறிப்பான் எனும் புனைப்பெயரில் ஆக்கங்களை எழுதிவருகிறார்.

சிலாபத்துறையை பிறப்பிடமாக கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர் ஹாமித் ஒரு கவிஞர் அவரின் குறிப்பிடத்தக்க நூல்தான் விடியாத இரவில்லை என்பதாகும். சிலாபத்துறை மர்ஹூம் M.M இப்றாகீம் பாவலர் அற்புதமான கற்பனைக் கவி வடிப்பதில் சமர்த்தர். H .M பைறூஸ் என்பவரும் பல்கலைகழகக் காலத்தில் அதிகமான கவிதைகளை எழுதியுள்ளார்.

***ஊடகத்துறையில் மன்னார் முஸ்லிம்கள்:***

மன்னார் பகுதியில் முஸ்லம்கள் எழுத்துத்துறையில் ஈடுபாடு மிக்கவர்களாக காணப்பட்டமையினால் அச்சு, இலத்திரனியல் ஊடகங்களில் செய்தியாளர்களாக பணியாற்றி இருக்கின்றனர் அவர்கள் பற்றிய விபரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| கலைவாதிக் கலீல் | - | சுதந்திர ஊடகவியலாளர். |
| வித்துவான் றஹூமான் | - | வித்துவான் பகுதி தயாரிப்பாளர் |
| மக்கள் காதர் | - | பத்திரிகையாளர் |
| மர்ஹூம் H .M. சரீப் | - | பத்திரிகையாளர் |
| எம் . ஜமால்தீன் | - | ஹிந்தி சேவைப் பணிப்பாளர் (DHS) |
| சுஐப் எம். காசீம் | - | பத்திரிகையாளர் (தினகரன்) |
| எஸ்.ஏ. ஜாவித் | - | நிருபர் (சுடர் ஒளி) |
| எம். ஐ . ஹன்பல் | - | நிருபர் (முஸ்லிம் குரல்) |
| மூஸீன் றைசுதீன் | - | நிருபர் (தினகரன்) |
| நபுஹான் | - | நிருபர் (தினகரன்) |
| எ. தஸ்லீம் | - | நிருபர் (தினகரன்) |

| | | |
|---|---|---|
| எ. ஹாஜா அலாவுதீன் | - | ஒலிபரப்பாளர் இ.ஒ.கூட் |
| பரீன் அப்துல் காதர் | - | ஒலிபரப்பாளர் இ.ஒ.கூட் |
| எஸ்.எச். நி.்.மத் | - | செய்தியாளர், பத்திராதிபர் |
| எச்.ஏ. அப்துல்லா | - | ஒலிபரப்பாளர் இ.ஒ.கூட் |

**பெண் இலக்கியவாதிகள் :-**

மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களும் ஊடகங்களுக்கு படைப்புக்களை எழுதிப் பிரகாசித்திருக்கின்றனர். மன்னார் உப்புக்குளம் பகுதியை சேர்ந்த றாஹில் ஏ.ஹாசீம் பத்திரிகைகளுக்கு எழுதி வருபவர். மன்னார் பட்டினத்தை சேர்ந்த திருமதி மும்தாஜ் என்பவரும் பத்திரிகை, வானொலி போன்ற வற்றில் எழுதிவந்துள்ளார். விடத்தல் தீவு மர்ஹுமா ஸரீபா ஸரீப் ஆசிரியை வானொலிக்கு அதிகமாக எழுதிவந்துள்ளார், விடத்தல் தீவில் கவிதாயினி திருமதி இரிபா ஜம்சித், கவிதாயினி திருமதி ஸன்ஸி ஸஜாத், திருமதி மஸாஹிரா எகியா செல்வி றஸ்மானி இக்பால் ஆகியோரும் எழுத்துத்துறையில் தடம் பதித்துள்ளனர். நஸ்வா கலீல் வஹீதா றஹ்மான் ஆகியோரும் பத்திரிகை, வானொலிக்கு எழுதியிருக்கின்றனர்.

**பத்திரிகைகள் சஞ்சிகைகள் :-**

மன்னாரில் இருந்து ஒருசில பத்திரிகைகள் வெளிவந்திருக்கின்றன எருக்கலம் பிட்டியைச்சேர்ந்த நி.்.மதுல்லா எழுதிய பிஞ்சுமனம் (சிறுவர் இதழ்) ஓரிரண்டுடன் நின்றுவிட்டது. தாராபுரம் சாஜஹான் இன்பப் பூக்கள் (றோனியோ) சஞ்சிகையையும் ஏ. ஹாஜா அலாவுத்தீன் என்பவர் பாலம் கை எழுத்து சஞ்சிகையையும், எம்.எம் கலீல் என்பவர் கலைக்கடல் என்ற மாசிகையையும் வெளியிட்டனர். மக்கள் காதர் சகோதரர்கள் மக்கள் என்ற பத்திரிகையை நீண்ட காலம் மன்னாரில்வெளியிட்டனர். (கையூம்கான்) அறிவுக்கரசன் என்பவர் கடமை என்ற சஞ்சிகையை வெளியிட்டார். தாராபுரம் அல்-மினா மு.ம. வித்தியாலயத்திலிருந்து மினா என்ற இதழும் வெளிவந்தது.

பாட்டுப்பாடுதல்

மன்னார் பகுதிகளில் அநேக முஸ்லிம் பிரதேசங்களில் பாட்டுப்பாடுதல் என்ற விழா நிகழ்வு நடக்கும் மேடை அமைத்து புகழ்பெற்ற புலவர்கள் அறிஞர்கள் வீற்றிருந்து இஸ்லாமிய இலக்கியச் செல்வங்களான சீறாப்புராணம், இராஜநாயகம், முகைதீன் புராணம், குத்புநாயகம் போன்ற காப்பியங்களுக்குப் பாராயண விரிவுரை நிகழ்துவதாகும். இதில் முஹம்மது காஸிம் ஆலிம் புலவர், சரீபுப்புலவர், கபூர் புலவர், ஹபீபு முஹம்மதுப்புலவர் சிறந்து விழங்கினர்- புலவர்கள் சுவாரஸ்யமாக புராணவிரிவரை நிகழ்த்தம் போது அவரை சூழ உள்ள ஆமாப்புலவர்கர்கள் ஆமாம் ...ஆமாம்... என்று சொல்லிக் கொள்வார்கள்.

தொடர்ந்து ஏழு தினங்கள் நடைபெறும் இந்நிகழ்வுக்கு அனைத்து மக்களும் வருகை தருவார்கள்- ஏழாவது நாள் இரவு மக்களுக்கு நார்ஸா சோறு(நெய்ச்சோறு) வழங்கப்படும்.

## கிராமியக் கலைகள்

கோலாட்டம்:-

மன்னார் பகுதியில் திருமண வைபவங்களின்போது - பொது நிகழ்வுகள், பெருநாள் தினங்கள், மங்களகரமான வேளைகளில் கோலாட்டம் அல்லது கழிகம்பு ஆடுவதுவழக்காக இருந்துவந்துள்ளது.

கழிகம்புக்காகப் பாடல் இயற்றுவது கடினம் ஏனெனில் ஒவ்வொரு பிரதேசத்திலும் கழிகம்பு ஆடும் முறைகளில் நிலைகள் வேறுபடும் மல்லி, கிறுகு, தாளம், வெட்டு போன்ற நிலைகளுக்கேற்றதுபோல் பாடல் அமைக்கவேண்டும். மாறாக பாடலுக்கேற்றது போல் கழிகம்பை அமைத்தால் கழிகம்பாட்டம் ஒரு புறம் போக பாடல் மறுபுறம் போகும்.

அந்தவகையில் முஹம்மது காஸீம் புலவரால் சன்னார் இளைஞர் விவசாயத்திட்டம் (ஜெகநாதன் பண்ணை) ஆரம்பநிகழ்ச்சிக்கு

இயற்றப்பட்டபாடல், நபிபுகழ்பாடல், மற்றும் தாராபுரம் கபூர்புலவரின் கழிகம்புப் பாடல்கள் போன்றவை போற்றத்தக்கவை.

கொழும்புக்கு போறமச்சான்
கொள்ளநாளா நிக்காதேங்க
ஹஜ்ஜூப்பெருநாள் மாதம்
கழிகம்படிக்க வந்திடுங்க.

என்ற மன்னார் கிராமியப்பாடல் கழிகம்பு அடித்தல் வழக்கை நியாயப் படுத்துகின்றது ஆயினும் 1990ம் ஆண்டுக்குப்பின்னர் முகாமுக்குள் முடங்கிக்கிடக்கின்றபோது இதில் அவ்வலவு பெரிதான நாட்டம் செலுத்தவில்லை. அத்திபூத்தாற் போல் இடைக்கிடை சில நிகழ்வு களில் நடைபெற்றுவருகின்றன.

**வில்லிசை:-**

பொதுவாக மீலாத் மேடைகள், கலை இலக்கிய மேடைகளில் இவ்வில்லிசை நடைபெறும் ஏழு அல்லது ஒன்பது பேர் இதனை நிகழ்த்துவர்.

இடம் பெயர்வுக்கு பின்னரும் வில்லிசை நிகழ்வுகள் தொடர்ந்து கொன்டிருப்பது மகிழ்வுக்குரிய விடயம் 1999 ல் புத்தளதத்தில் நடைபெற்றதேசிய மீலாத் விழாவில் மன்னாரிலிருந்து இடம் பெயர்ந்த மாணவர்களால் மேடையேற்றப்பட்ட வந்தாரை வாழவைத்த புத்தளம் பூமி எனும் தலைப்பிலான வில்லுப்பாட்டு அனைவராலும் புகழப் பட்டது (அதற்கு தலைமைப்புலவர் பொறுப்பேற்று நிகழ்தியவன் நானே)- அதேகாலப்பகுதியில் மலர் மகிமை கலாசார விழாவிலும் இதே வில்லிசை அரங்கேற்றப்பட்டது.

**பௌர்ணமி கலைவிழா**

பயங்கரவாதப் பிரச்சினைக்கு முன்பு மன்னார் திறந்த வெளி அரங்கில் பௌர்ணமி கலை விழா கோலாகலமாக நடைபெற்றுவந்தது -

பௌர்ணமி தினங்களில் இரவு 8 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வு நள்ளிரவு 12 மணியையும் தாண்டிச் செல்லும். மன்னார் மக்களின் கலை கலாசார நிகழ்ச்சிகளோடு நடைபெறும் இந்நிகழ்வு வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்து இலைமறை காயாக விளங்கிய கலைஞர்களைத் துலாமரமாக்கியது. நாட்டுக் கூத்து, நாடகங்கள், புதிய பாடகர் அறிமுகம், கவிதை, அறிவிப்பு, பாடல் மற்றும் பல போட்டி நிகழ்ச்சிகளும் நடை பெற்று வந்தன.

கலைவாதி கலீல், மக்கள் காதர் ஆகியோரின் இடைவிடாத முயற்சியால் தொடர்ந்து நடைபெற்று வந்த பௌர்ணமி கலைவிழா 90 களில் ஏற்பட்ட புலம்பெயர்வினால் பௌர்ணமி அமாவாசையானது.

## அற்புதம் கலை இலக்கிய வட்டம்

புலம் பெயர்வுக்கு பின்பு மன்னார் பகுதியை சேர்ந்த இளம் கலைஞர்களை ஒன்றினைத்து 2000ம் ஆண்டில் புத்தளம் பகுதியில் உருவாக்கப் பட்டதே இவ்விலக்கிய அமைப்பு.

கவியரங்கம், நாடகம், கும்மி, வில்லிசை, கவிதை போன்ற நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்து முக்கிய நிகழ்வுகளும்- முழு நிலா நிகழ்வையும் நடத்தி வருகிறது.

# மன்னார் முஸ்லிம்களும் - பத்திரிகைத் துறையும்

(எழுத்தியல் நாயகன் - மக்கள் காதர்)

*செந் நெல் வயலும் - நன்னீர்த்தடமும்*
*தேனாறு பாயும் பூ நறு சோலையும் பூத்துக்குலுங்கிய*
*மன்னார் மாதலம் - இது*
*வந்தாரை வாழவைக்கும் வளமான பூமி*
*சொந்த நாட்டானின் சுதந்திர பூமி!*
*என்று பாடினான்*
*ஈழத்தின் ஒரே முஸ்லிம் பண்டிதன் வித்துவான் றகுமான்.*

மண்வளம், கடல்வளம், தென்னைவளம், பனைவளம், மீன்வளம், நெல்வளம் இப்படிப்பல வளம் கண்ட மாதலம் மன்னார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப்படாத எம் மாதலத்தை ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வந்த போத்துக்கேயன் அடிமைப்படுத்தினான். அதற்கு முன்னால் இங்கு வந்த அரேபியர்கள் தான் உண்டு தன் வேலையுண்டு என்று தங்கள் வியபாரத்திலேயே கவனமாக இருந்தார்கள். இங்கு வந்த அரேபியர்கள் பல்வேறு பகுதிகளிலும் குடியேறி மினாராக்களைம், மசூதிகளையும் அமைத்தனர். அவர்கள் கொண்டுவந்த ஒட்டகங்கள் காலநிலை காரணமாக அழிந்தன. அவைகளுக்கு உணவாகப் பெருக்கு மரங்களை நட்டார்கள். அவைகள் இன்றும் வாழ்கின்றன.

ஆனால் போத்துகேயரோ வந்த முதல் வேலையாக அனைவரையும் மதம் மாற்றுவதிலேயே கவனமாக இருந்தார்கள். வேலை வாய்ப்பு, பணத்தாசை, ஆசை வார்த்தை, பயமுறுத்தல், கொடூரத் தண்டனை எனப் பல்வேறு ஆசை வார்த்தைகளாலும், அச்சுறுத்தல்களாலும் மதம் மாற்றினர். அக்காலத்தில் மன்னாரில் ஹிந்துக்களும், முஸ்லிம்களும் பெருரும்பான்மையாக வாழ்ந்து வந்தனர். இவர்களின் அச்சுறுத்தலுக்குப் பயந்து அதிகமதிகம் ஹிந்துக்கள் மதம் மாறினர். இது கண்டு பொறுக்கமாட்டாமல் யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலிய மன்னன் மன்னார் வந்து தோட்டவெளி என்ற இடத்தில் ஆராதனையி லீடுபட்டிருந்த கிறீஸ்தவ மதமாறிகளை வெட்டிச் சாய்த்து கிணற்றில் போட்டதாக வரலாறு. அந்த இடத்தில் உருவானது தான், வேத சாட்சிக் கோயில்.

போத்துக்கீசரின் எந்தப் பயமுறுத்தலாலும் முஸ்லிம்களை மதம் மாற்ற முடியவில்லை. அதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஜிஹாதாகினர். இதன் ஓர் உச்சகட்ட சம்பவமாக மன்னார், தலைமன்னார் வீதியிலுள்ள கடற்கரையையொட்டிய புதுக்குடியிருப்பு என்ற கிராமத்தில் அப்போது மினாரா நகர் என்ற செழிப்பான பகுதியில் பல முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இது கண்டு பொறுக்கமுடியாத அவர்களது மனைவிகளும் குழந்தைகளும் அங்கிருந்த குளத்தில் வீழ்ந்து தங்களை மாய்த்துக்கொண்டனர். அந்த வரலாற்றின் விளைவாகத் தாலி அறுத்தகுளம் என்ற பெயரும் உருவானது. இன்று அந்த மினாராவும் குளமும் வரலாற்றுச் சின்னங்களாகி விட்டன. முந்நூறு வருட போத்தக்கீசரின் அடாவடித்தனங்கள் முடிவுற்று அடுத்து ஒல்லாந்தர் இங்கு வந்து கடைசியில் பிரித்தானியர்கள் இலங்கையைச் சுரண்டினர். 1948 ல் சுதந்திரம் கிடைக்கும் வரையில் பிரித்தானியர்களும் மத வெறியர்களாகவும் ஆங்கில மொழி மோகிகளாகவும் .செயல்பட்டனர். அதன் விளைவாக முஸ்லிம்களுக்கு வேலை வாய்ப்புகள் மறுக்கப்பட்டன. மத சுதந்திரம் ஒடுக்கப்பட்டது. அரச உதவிகள் நிறுத்தப்பட்டன. அக்காலகட்டத்திலும் நிறையவே இந்துக்கள் மதம் மாறியதோடு ஆங்கிலத்தையும் கற்று உயர்பதவிகளைப் பெற்றனர். மன்னாரில் வாழ்ந்த முஸ்லிம்கள் அனைவரும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டார்கள். அதிகமானோர் வியாபாரிகள்; அடுத்து

வருவோர் விவசாயிகள். மிகச்சிலரே அரச ஊழியர்கள். ஆயினும் அவர்கள் தமிழை நன்கு வளர்த்தனர். தமிழ்ப்பத்திரிகைகளை வாங்கி வாசித்தனர். வீட்டிலும், ரோட்டிலும் பொது இடங்களிலும் தமிழைச் சத்தமாகப் பேசினர். அக்காலங்களில் தமிழ் வளர்த்த முஸ்லிம்கள் அதிமதிகம் வாழ்ந்து வந்தனர். கவிஞர்கள், கலைஞர்கள் நாடக நெறியாளர்கள், நடிகர்கள், எழுத்தளர்களென்று பலர் வாழ்ந்து வந்தனர். ஆனால் மற்றைய சமூகத்தவரோ பிரித்தானியர்களுக்கு அடிமையாகி ஆங்கில மோகம் கொண்டு தமிழைமுற்றாகவே மறந்து வாழ்ந்தனர்.

1948 ல் பிரித்தானியரின் சுரண்டல் ஓய்ந்தது. இலங்கைக்கு சுதந்திரம் என்ற பெயரில் அழிந்த தேசத்தையும் தேசியக் கொடியையும் இனமுரண்பாட்டையும் வறுமைக் கோட்டையும் மொத்தமாக அளித்து விட்டு வெளியேறினர்.

1957 ல் ஏற்பட்ட பெரு வெள்ளம், அதில் மாவட்டத்தின் கிராமங்கள் அனைத்தும் அழிந்தன. மன்னாப் பட்டினம் மட்டுமே தப்பியது. கட்டுக் கரைக் குளம் உடைந்து வயல் வெளிகள் அனைத்தும் நீரில் மூழ்கின. பெரும் இராட்சத மரங்கள் அனேகமானவை வேருடன் சாய்ந்தன. சகல விவசாய வளங்களும் முற்றாக அழிந்தன. அன்றைய பிரமதர் பண்டாரநாயக்கா அவர்கள் உடனடியாக மன்னாரை வந்து பார்வையிட்டார். இந்தியாவிலிருந்து உடனடியாக நிவாரண உதவியைப் பெற்று எமக்கு வழங்கினார்.

அதன்பின்னர் 1964ல் கொடிய சூறாவளி மன்னாரை மீண்டும் நிர்மூலமாக்கியது. மன்னார் தாம்போதி உடைந்து வீழ்ந்து மன்னார் தீவைக் துண்டித்தது. கட்டிடங்கள் அனைத்தும் இடிந்து வீழ்ந்தன. மின்சாரம் முற்றாகத் துண்டிக்கப்பட்டது. மன்னார் தீவும் பெருநிலப்பகுதியம் முற்றாகத் தொடர்பு அற்றுப் போயின. மன்னார் நகரம் பல மாதங்கள் இருளில் மூழ்கியது. போக்கு வரத்து ஸ்தம்பிதம் அடைந்தது. மக்கள் தங்கள் பிரயாணத்தை நடந்து, கடலைக்கடந்தே மேற்கொண்டனர். இந்த நிலைமை சுமார் ஆறு மாதங்கள் வரை நீடித்தது. அவ்வேளையில் உருவானதுதான் 'மக்கள்' மாசிகை. ஆம் அது மன்னாரின் முதல் முஸ்லிம் தமிழ் ஏடு. கோரப்புயலின்

விளைவாகக் கொள்ளை இலாபமடித்த பதுக்கல் பெருச்சாளிகளையும் சமூக விரோதிகளையும், பகல்வேடக்காரர்களையும், அரச உயர் அதிகாரிகளையும், இடைத்தரகர்களையும் இனங்காட்டி எச்சரித்தது இவ்வேடு. புரட்சிப்புயலாய் அநீதியை அழிக்கவந்த அரசனாய் அழகுத் தமிழ் நடையில் அடுக்கு மொழியில் மாதம் தவறாது வருகை தந்தது மக்கள் மாசிகை. நல்லோரைப் பாடியும் தீயோரைச் சாடியும் புரட்சிகர ஆக்கங்கள், கவிதைகள், உண்மைச் சம்பவங்களை உள்ளதை உள்ளபடி வெளிக் கொணர்ந்தது அது. அதன் கௌரவ ஆசிரியராக எனது மூத்த சகோதரர் வித்துவான் றகுமானவர்கள், அதன் பிரதம ஆசிரியராக எனது இளைய சகோதரர் கலைவாதி கலீல் அவர்கள், அதன் அதிபராகவும் நிருவாக ஆசிரியராகவும் நான், என முச்சகோதரர்களின் வழிநடத்தலில் மூன்று வருடங்கள் தொடர்ந்து வந்தது. அடிக்கடி நீதிமன்றம் செல்ல வேண்டி ஏற்பட்டதாலும் விற்பனை முகவர்களிடம் ஒருங்காகப் பணம் கிடைக்காமையினாலும் சுமார் 35 பிரதிகளோடு மக்கள் மாசிகை மாய்ந்தது; ஓய்ந்தது. அதன் பின்னர் 1975ல் கடமை என்ற பெயரில் ஒரு மாசிகை வெளியானது. அப்துல் கையூம் என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. சுமார் ஆறு மாதங்கள் மட்டுமே கடமை தன் கடமையைச் செய்தது. கடமை ஏடுதான் மன்னாரில் முஸ்லிம்களால் வெளியிடப்பட்ட இரண்டாவது தமிழ் வெளியீடு எனக் கருதப்பட்டது. பின்னர் சில அன்பர்களாலும் இரண்டொரு புதிய இதழ்கள் வெளிவந்தன. மறைந்தன. கலைக்கடல் முஸ்லிம் அமைப்பொன்றினால் வெளியிடப்பட்டது.

நீண்ட இடைவேலைக்குப் பின்னர் தற்போது காலநதி என்ற பெயரில் மாசிகை ஒன்று பேசாலையிலிருந்து வெளிவருகின்றது.

மன்னாரில் தமிழ் வளர்த்த பெருமையில் முஸ்லிம்களுக்கு அதிகம் பங்கு உண்டு. மாதம் தோறும் மன்னார் திறந்த வெளியரங்கில் கலை விழாக்களை பௌணமிக் கலைவிழா என்ற பெயரில் நானும் எனது சகோதரர் கலீலும் நடத்தி வந்தோம். பல தமிழ்ச் சகோதரர் களின் உதவியுடன், அவர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர் எனது நண்பர் கீதபொன்கலன் (கை) ஆவார். 1990ல் விடுதலைப் புலிகளால் மன்னார் மாவட்ட முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டதன் பின்னர் அனைத்தும் செத்தொழிந்தன. தமிழ் தாய் தலை குனிந்தாள்.

அன்று முஸ்லிம்களுடன் வெளியேறிய தமிழ் அன்னை இன்ற வரை மன்னார் திரும்பவே இல்லை.

1990ன் பின் மன்னாரில் முஸ்லிம்களின் கலாசாரமே அழிந்து போனது. முஸ்லிம்களின் பெருந்தொகையான விவசாய நிலங்கள் பயனற்றுப் போயின. முஸ்லிம்களின் வீடுகள் பாழடைந்தன. முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்கள் அனேகமானவை பிறர் கைகளைச் சென்றடைந்தன. தீவகப் பகுதிகளில் முஸ்லிம்களின் வீடுகள் அனேகமானவை அதிக விலைக்கு வாங்கப்பட்டன. அதன் விளைவாக மன்னார் நகரத்தில் தனித்துவமாக வாழ்ந்த மூர்வீதிக் கிராமம் இன்று பிறமதக் குடியிருப்பாக மாறிவிட்டது. அங்குள்ள முஸ்லிம்களின் வீடுகளில் 75% வீடுகள் அவர்கள் வசம் போய்விட்டன. இதன் விளைவாக முஸ்லிம்கள் மிகவும் நலிந்த நிலையில் வந்தேறு குடிகளைவிடவும் மோசமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர். 1990ல் சுமார் 10000 குடும்பமாக வெளியேறிய இவர்கள் இன்று சுமார் 20000 குடும்பமாகிவிட்ட போதும் மன்னாரில் மிக சொற்ப தொகையினரே மீள் குடியேறியுள்ளனர். அவர்களும் தீவுப் பகுதியிலேயே வாழ்கின்றனர். பலர் அசர அதிகாரிகளாகவும், சிலர் வர்த்தகர்களாகவும், மிகச் சிலர் விவசாயிகளாகவும், பலர் எவ்வித வேலையுமின்றி வெறும் உலர் உணவை மட்டமே நம்பி வாழ்கின்றனர்.

ஒரு காலத்தில் மன்னாரில் சுமார் 30 கிராமங்களில் கல்வியறிவோடும், செல்வச் சிறப்போடும், இறைபக்தியோடும் பெரும் வீடுகளில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் இன்று சுமார் 10 கிராமங்களில் 1500 குடும்பங்களாக குறுகி தான் உண்டு தன் வேலையுண்டு என்ற நிலையில் வாழ்ந்து வருகின்றனர். 20 ஆண்டுப் போரும், இனமோதல்களும் எமக்குத் தந்த பாடம் இதுவென்று சொல்வதைத் தவிர நாம் வேறு என்ன சொல்வது.

ஆயினும் இன்று மன்னார் முஸ்லிம்கள் வேறு இடங்களில் வாழ்ந்துகொண்டு பத்திரிகை சஞ்சிகைகளில் எழுதியும், புத்திரிகைக் காரியாலயங்களில் பணியாற்றிக்கொண்டும் இருக்கின்றார்கள். இதனால் தமிழன்னைக்ககுப் பெருமை தான். மன்னாரில் வாழ்கின்ற

முஸ்லிம்கள் சிலர் மன்னார்ப் பிரதேச செய்தியாளர்களாக வனொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகளில் பணியற்றிக் கொண்டிருப்பதையும் குறிப்பிடத்தான் வேண்டியுள்ளது.

சிரேஷ்ட பத்திரிகையாளரான கலைவாதி கலீல் மற்றும் S.H. நிஃமத், சுகைப் M. காசிம் போன்றோர் பிரபல பத்திரிகைகளில் ஆசிரிய பீடங்களில் பணியாற்றிவந்தனர். சிலர் தனித்துவமாக பத்திரிகை, சஞ்சிகைகளை நடாத்தியும் வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று புதிய செய்தியாளர்களும், பத்திரிகை எழுத்தாளர்களும், விமர்சகர்களும், ஆய்வாளர்களும் உருவாகியிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

மன்னாரின் செய்தித் துறை வளர்ச்சிக்கு மன்னார் முஸ்லிம்களின் பங்களிப்பு மகத்தானது.

# மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் விழிப்புணர்ச்சி

அல்ஹாஜ் பீ. எம். எம். முனாஸ்

## அறிமுகம்

கீழைத்தேச நாடுகளில் கிடைக்கப்பெற்ற ஏலம், மிளகு, கறுவா போன்ற வாசனைத் திரவியங்களையும், முத்து, இரத்தினக்கல், யானைத்தந்தம் போன்ற செல்வங்களையும் பெறுவதற்கும், கிறீஸ்து சமயத்தை அந்நாட்களில் பரப்புவதற்கும் ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்கள் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளை நோக்கிப் படையெடுத்து வந்தார்கள்.

1505 ஆம் ஆண்டு போத்துக்கேயர் இலங்கையையடைந்து, அதன் கரை யோரப் பிரதேசங்களைப் பரிபாலித்து வந்தனர். அவர்களைத் தொடர்ந்து 1658ல் இலங்கையையடைந்த ஒல்லாந்தர் போத்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங் களைப் பரிபாலித்து வந்தார்கள். ஒல்லாந்தர்களைத் தொடர்ந்து இலங்கையையடைந்த ஆங்கிலேய ஏகாதிபத்திய ஆட்சி யாளர்கள் 1796ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை ஒல்லாந்தர்களிட மிருந்து சட்ட பூர்வமாகக் கைப்பற்றி ஆட்சி செய்தார்கள்.

1815ல் கண்டி இராச்சியமும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு இலங்கையில் கால் பதிக்கப்பட்ட ஆங்கிலேயர் ஆட்சி, நூற்றைம்பது ஆண்டுகள் வரை (1796 - 1948) நீடித்தது. இக்காலத்தில் இலங்கையில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மலை நாட்டுப் பிரதேசங்களில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால் போக்குவரத்துப் பாதைகள் திறக்கப்பட்டன. ஆங்கிலக் கல்வியின் அபிவிருத்தியால் அரச உத்தியோக வாய்ப்புக்கள் பெருகின. நிர்வாகம் சீரடைந்த மையால் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. அதனால் அரசியலில் முதிர்ச்சியடைந்த இலங்கை மக்கள் சுதந்திரத்தைப் போராடிப் பெற்றுத் தம்மைத் தாமே ஆளக்கூடிய நிலையை அடையப் பெற்றார்கள்.

## இலங்கையின் அரசியல் வளர்ச்சி

ஆங்கிலேய ஆட்சியின் ஆரம்பத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றின. கண்டிப் பிரதானிகளுக்கும் ஆங்கிலேயருக்கு மிடையில் ஏற்பட்ட உடன்படிக்கை நிபந்தனைகள் செயற்பட வில்லை பிரபுக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் நீக்கப்பட்டன. பௌத்த பிக்குகள் புறக்கணிக்கப்பட்டார்கள். வெல்லஸ்ஸப் பகுதியில் வசித்து வந்த முஸ்லிம்களோடு முரண்பாடு ஏற்பட்டது. இத்தகைய காரணங்களை முன்னிட்டு இலங்கை மக்கள் அரசியல் அதிகாரம் கோரி கிளர்ச்சி செய்தனர். இதன் காரணமாக 1833ல் கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம் ஏற்பட்டது. இதன்படி சில அரசியல் அதிகாரங்கள் குறிப்பிட்ட மக்களுக்கு வழங்கப்பட்டதன் மூலம் இலங்கை மக்கள் அரசியல் பாதையில் அடி எடுத்து வைத்தனர் என்று கூறலாம். எனினும் இச்சீர் திருத்தத்தில் பல குறைபாடுகள் இருந்தமையால் டொனமூர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

1931 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட டொனமூர் ஆட்சியின் கீழ் இலங்கை மக்களின் அரசியல் அதிகாரம் அதிகரித்துச் சென்ற நிலையை வரலாற்றில் காண முடிகிறது. சட்ட சபைக்குப் பிரதேச வாரியாக அங்கத்தவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டமையும், 21 வயதுக்கு மேற்பட்டோருக்கு சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமையும் அதற்குரிய காரணங்களகக் கொள்ளப்படலாம்.

## மன்னார் பிரதேச அரசியல் முறைமை

பிரதேசவாரியான தேர்தல் முறையின் கீழ் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களும் இணைக்கப்பட்டு ஒரே ஒரு பிரதிநிதித் தேர்தல் மாவட்டமாக ஆக்கப்பட்டது. இத்தேர்தல்களில் யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த திரு G.G. பொன்னம்பலம், திரு. C. சுந்தரலிங்கம், திரு மகாதேவா, திரு தியாகராசா போன்றோர் போட்டியிட்டு வந்தமையால், இப்பிரதேசங்களில் சிறுபான்மைச் சமூகமாக இருந்த முஸ்லிம்கள் நேரடியாக அரசியலில் ஈடுபடவில்லை.

1947 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட சோல்பரி ஆட்சி முறையின் கீழ் கட்சி அடிப்படையில் பாராளுமன்றத்திற்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அன்றியும் மன்னார் மாவட்டம் தனி அங்கத்துவத் தேர்தல் தொகுதியாகவும் ஆக்கப்பட்டது. மன்னார் அரசாங்க அதிபராகவிருந்து நற்சேவை செய்த திரு ஊ. சிற்றம்பலம் ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சக ராகப் போட்டியிட்டமையால், முஸ்லிம்கள் ஒன்றிணைந்து திரு. சிற்றம்பலத்தை மன்னார் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். தேசபிதா டி.எஸ். சேனநயகா அவர்களின் அமைச்சரவையில் திரு ஊ. சிற்றம்பலம் தபால், தந்தி அமைச்சராகவிருந்து அரும்பணியாற்றினார்கள். அவரைத்

தொடர்ந்து ஐ.தே. கட்சியில் போட்டியிட்ட சேர். கந்தையா வைத்தியநாதனை முஸ்லிம்கள் ஆதரித்த போதிலும் அவர் தேர்தலில் வெற்றி பெறவில்லை. எனினும் அவர் செனற்சபை உறுப்பினராக ஆக்கப்பட்டார்.

**மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் அரசியல் பிரவேசம்.**

1947ஆம் ஆண்டின் பின்னர் கிராம மட்டத்திலான அரசியலில் மன்னார் முஸ்லிம்கள் நேரடியாகப் பங்கு பற்றக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. சுகாதார, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிபார்சுக்கமைய நகர சபைகள், பட்டின சபைகள், கிராம சபைகள் நிறுவப்பட்டன. மன்னார் பட்டினத்திற்கு ஒரு பட்டின சபையும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பல கிராமங்களுக்குக் கிராம சபைகளும் சிபார்சு செய்யப்பட்டன. மன்னார் தீவில் முஸ்லிம் கிராமங்களாகவிருந்த தாராக்குண்டு, எருக்கலம்பிட்டி ஆகிய கிராமங்களில் கிராமசபைகள் அமைக்கப்பட்டமையால் முஸ்லிம்கள் கிராம மட்ட அரசியலில் பங்கு கொண்டார்கள். அக்கிராமச் சபைகளின் தலைவர்கள் முஸ்லிம்களாகவேயிருந்து பணியாற்றியதோடு, அக்கிராமங்களுக்கு நற்சேவையாற்றி வந்தார்கள். தாராக்குண்டு கிராமச்சபையின் தலைவராக H.S. தாவூத், O.K. செய்னுலாப்தீன் ஆகியோர் மாறி மாறிப் பணியாற்றிவந்தார்கள்.

எருக்கலம்பிட்டி கிராமச் சபையின் தலைவர்களாக அல்-ஹாஜ் முகைதீன் அப்துல் காதர், அல்-ஹாஜ் எம்.கே.என்.எம். சாலிகு, கே.கே.எஸ். கபீபு முகம்மது, ஓ.எம். கப்பப்பிச்சை, எஸ்.எம். நூறு முகம்மது, அல்ஹாஜ் கே.எம்.ஏ. றகீம் ஆகியோர் பணியாற்றியுள்ளார்கள்.

விடத்தல்தீவுப் பிரதேசங்களுக்கு வழங்கப்பட்ட மாந்தை தெற்கு கிராமச் சபையின் தலைவராக கே.மீரா முஹைதீன் பல்லாண்டுகள் சேவையாற்றியுள்ளார். முஸ்லிம் கிராமங்களை

உள்ளடக்கிய முசலி வடக்குக் கிராம சபையின் தலைவராக ஆ.மு. மீராசாகிபு என்பவர் தொடர்ந்து பணியாற்றிவந்தார். அதே போன்று முசலி தெற்குக் கிராமசபையின் தலைவர்களாக ஜனாப் அக்பர், ஜனாப் கபூர் அகியோர் மாறி மாறி சேவையாற்றி வந்தார்கள்.

மன்னார் பட்டினத்திற்கு வழங்கப்பட்ட பட்டின சபையின் உறுப்பினராகவும், அதன் முதல் முஸ்லிம் தலைவராகவும் பதவி வகித்தவர் கேட் முதலியார் அபுல்காசிம் மரைக்கார். அவருக்குப் பின்னர் தொடர்ந்து பதினைந்து ஆண்டுகள் எம்.எஸ்.ஏ. றகீம் அங்கத்தவராகவும் தலைவராகவும் பணியாற்றி வந்தார். கிறீஸ்தவர்கள், முஸ்லிம்கள், இந்துக்கள் ஆகிய மூவின மக்களும் வாழ்ந்து வந்த மன்னார் பட்டினத்தின் தலைவராக ஒரு முஸ்லிம் இருந்து வந்தமை, அங்கு நிலவிவந்த இன ஒற்றுமைக்கு ஒரு சான்றாகும். அறுபது ஆண்டுகள் கழிந்தும் மன்னார் இன்னும் பட்டின சபையாகவே இருந்துவருவது பரிதாபத்திற்குரிய ஒரு சாதனையேயாகும்.

**மன்னார் முஸ்லிம்களின் பாராளுமன்றப் பிரவேசம்**

1947 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சோல்பரி ஆட்சியின் கீழ் கட்சி முறையிலான தேர்தல் முறை முக்கியத்துவம் பெற்றது. பெரும்பான்மையான மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் ஐக்கிய தேசிய கட்சியை ஆதரிப்பவர்களாக இருந்து வந்தார்கள். முக்கியமான முஸ்லிம் தலைவர்களும் அக்கட்சியைச் சார்ந்த வர்களாகவே இருந்து வந்தமையே அதற்குரிய காரணமாகும்.

வட இலங்கைத் தமிழர்கள் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, அடங்காத் தமிழர் முன்னணி, சமசமாஜக்கட்சி போன்ற கட்சிகளை ஆரம்பித்தார்கள். 1960 ஆம் ஆண்டளவில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தைத் தலைவராகக் கொண்டு இயங்கிய தமிழரசுக்கட்சி தமிழ் பிரதேசங்களில் செல்வாக்குப்

பெற்று வந்தது. மன்னார் பிரதேசத்திலும் இக்கட்சி செல்வாக்குப் பெற்றது. இக்காலகட்டத்தில் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த K.S.A. கபூர் இக்கட்சி அங்கத்தவராகவும், மேடைப்பேச்சாள ராகவுமிருந்து அக்கட்சியால் நடாத்தப்பட்ட அனைத்துப் போராட்டங்களிலும் பங்குபற்றி, சிறைக்கும் சென்று வந்தார். பேரினவாத அரசாங்கங்களுக்கு எதிராகப் பின்வரும் நூற்களை எழுதி அச்சிட்டும் வெளியிட்டுள்ளார்.

1. சிங்களமே சீறிப்பாய் (1960)
2. ஒழிக ஒற்றையாட்சி (1962)
3. இரத்தச் சுவடு
4. தமிழினத்தின் விடுதலைக்குரல் (1973)
5. இலங்கையின் இன முழக்கம்
6. அபாயச் சங்கு
7. துப்பாக்கி முனையில் தமிழினம் (1972)

எனினும் மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் மத்தியில் தமிழ் அரசுக்கட்சி செல்வாக்குப் பெறவில்லை. மன்னாரைச் சேர்ந்த புரக்டர் V.A. அழகக்கோன் இக்கட்சி அபேட்சகராகத் தேர்தலில் போட்டியிட்டபோது கொழும்பைச் சேர்ந்த ஜனாப் எம். எஸ். முஹம்மது முஸ்லிம்கள் சார்பாகப் போட்டியிட்டும் தேர்தலில் வெற்றி பெறவில்லை. தொடர்ந்து வந்த தேர்தலில் திரு. அழகக்கோனுடன் மன்னார் பட்டின சபைத்தலைவராகவிருந்த M.S.A. றகீம் போட்டியிட்டும் தோல்வியைத் தழுவினார்.

1952 ஆம் ஆண்டளவில் S.W.R.D. பண்டாரநாயக்கா அவர்களால் ஆரம்பிக்கப்பட் இடதுசாரிப் போக்குடைய சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை மன்னார் மாவட்ட முஸ்லிம்களிற் சிலர் ஆதரித்தனர். 1972ஆம் ஆண்டு நடைபெற்றப் பாராளுமன்ற இடைத்தேர்தலின் போது திரு. ஜோன்மார்க் தமிழ் அரசுக் கட்சியின் சார்பாகவும், மன்னார் N.S.A காதர் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பாகவும், M.S.A. றஹீம் ஐ.தே.க.

சார்பாகவும் போட்டியிட்டார்கள். மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் ஒன்றிணைந்து ஜனாப் றஹீம் அவர்களை மன்னார் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தார்கள். வங்காலை, பேசாலை பள்ளிமுனை போன்ற பிரபல கிறீஸ்தவ கிராமங்ளைச் சேர்ந்தோரின் ஆதரவிலே இவ்வெற்றி கிடைத்தது. முஸ்லிம் ஒருவர் மன்னார் பிரதிநிதியாகப் பாராளுமன்றம் செல்ல வேண்டும்" என்ற முஸ்லிம்களின் நீண்டகால அபிலாசை இத்தேர்தலின் மூலம் நிறைவேற்றப்பட்டது என்று கூறலாம். அடுத்து வந்த பொதுத்தேர்தலில் ஜனாப் றஹீம் தமிழ் அரசுக் கட்சி அபேட்சகர் வங்காலை P. சூசைதாசன் என்பவருடன் போட்டியிட்டுத் தோல்வியைத்தழுவினர். எனினும் ஜனாப் றஹீம் உயர் ஸ்தானிகராகப் பதவி பெற்றுச் கென்யா நாட்டிற்குச் சென்றார்.

## சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு

இலங்கை முஸ்லிம்களுக்கென தனியொரு அரசியல் கட்சி இல்லாத நீண்ட நாட்டுகுறை 1981 ஆம் ஆண்டு அல்ஹாஜ் M.H.M. அஷ்ரப் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கட்சியின் மூலம் நிறைவேற்றப் பட்டது. 1988ஆம் ஆண்டு நடைபெற்ற மகாண சபைத் தேர்தலின் போது மொத்தமாக 29 அங்கத்தவர்களைப் பெற்று இக்கட்சி தனது செல்வாக்கை வெளியுலகுக்குக் காட்டியது. 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் பல அங்கத்துவத்தைக் கொண்ட வன்னித் தேர்தல் தொகுதியில் தனது அபேட்சகரை இக்கட்சி நிறுத்தியது.

மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்ட அல்ஹாஜ் சுந்தர மூர்த்தி அபூபக்கர் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுப் பாராளுமன்றம் சென்றார். இவர் மீண்டும் 1994ல் நடை பெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் அதே கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றதோடு,

சமூக சேவைகள் பிரதி அமைச்சர் பதவியையும் பெற்றார். சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரி அதிபர் அல்ஹாஜ் M.K. ஹபீபு முகம்மது என்பவரை வட-கிழக்கு மாகாண சபை உறுப்பினராக 1990ல் நியமித்து மன்னார் முஸ்லிம்களுக்குக் கட்சி விசுவாசத்தைத் தெரியப்படுத்தியது.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது வன்னித் தேர்தல் தொகுதியில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி போட்டியிட்டது. அதன் அபேட்சகர்களாக எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களான அலஹாஜ் நூர்தீன் மசூர் (எருக்கலம்பிட்டி), ஜனாப் றிசாத் பதியுதீன் (தாராபுரம்) ஆகியோர் வன்னி முஸ்லிம்கள் தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஜனாப் நூர்தீன் மசூர் வன்னிப்புனர்வாழ்வுக்குத்துணை போகும் அமைச்சரானார்.

2004ஆம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது வன்னித் தொகுதியில் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அபேட்சகர்களாக அல்ஹாஜ் நூர்தீன் மசூர், அல்-ஹாஜ் றிசாத் பதியுதீன் ஆகியோர் போட்டியிட்ட போதும், ஜனாப் றிசாத் பதியுதீன் மாத்திரமே பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தற்போது வன்னிப்புனர்வாழ்வளிப்பு, மாவட்ட அபிவிருத்தி அமைச்சராகப் பணியாற்றி வருகிறார்.

1994 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெற்ற பாராளுமன்றப பொதுத் தேர்தல்களில் எருக்கலம்பிட்டி அல்-ஹாஜ் A.C. நூன், சிறீ லங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வந்துள்ளார்.

அரசாங்கத்தோடு இணைந்து செயலாற்றிவரும் அமைச்சர் அல்ஹாஜ் றிசாத் பதியுத்தீன் அவர்களால் வன்னி மக்களுக்கான

அகதி நிவாரணப் பணிகள், மீள்குடியேற்றம், அபிவிருத்திப் பணிகள் என்பன துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவரது காலப்பிரிவில் வடக்கில் இருந்து இடம் ெயர்ந்த அகதிகள் விடயமாகவும் அவர்களது மீள் குடியேற்றம் தொடர்பாகவும் துரித நடவடிக்கை எடுத்து வருவது ஈன்டு குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மாவட்ட முஸ்லிம்களும், நாடகத்துறையும்

A. ஹாஜா அலாவுதீன் - ஆசிரியர் (தாராபுரம்)

நாடகம் என்பது நிகழ்வுகளை எடுத்துக் காட்டும் அற்புதக் கலையாகும். ஒரு சமூகத்தின் கலை சலாசாரப் பண்பாடுகளை வெளிக்கொணரும் சாதனமாகும். இதன் அடிப்படையில் உலகிலுள்ள அனைத்து சமூகத்திலும் நாடக மரபுகள் வளர்ந்துள்ளன.

நாடகம் நாட்டிற்கு அணிகலன், நாகரீகத்தின் அளவுகோள், பாமரர்களின் பல்களைக் கழகம், சமுதாயத்தின் சீர்கேடுகளை தகர்க்கும் வாள் வீச்சு - இதய நாதத்தின் எழுச்சி காலத்தின் கண்ணாடி வரலாற்றின் பொன்னேடு உண்மையின் ஒளிப்பிழம்பு உணர்ச்சியின் உயிர்த்துடிப்பு என இன்னும் எத்தனையோ! வர்ணனைகளை அடுக்கிக் கொண்டு போகலாம் என கலைமாமணி அ.கா. கிருஷ்ண மூர்த்தி என்பவர் தமிழ் நாடக வரலாறு எனும் நூலில் குறிப்பிடுகிறார்.

அரங்கக் கலைகள் என்னும் ஊடகங்கள் வாயிலாக நிகழ்த்துவோர் (Ferformers) தங்கள் பார்வையாளர்களுக்கு கதை சொல்கிறார்கள். கதை சொல்லும் போதோ, கருத்துரைக்கும் போதோ, நிகழ்த்தப்படும் போதோ அது எப்படி நிகழ்த்தப்படுகின்றது என்னும் படி முறையின் வாயிலாகத்தான் அது பார்வையாளரைச் சென்றடைய முடியும். பார்வையாளரும் நிகழ்த்துவோரும் சமவிகிதத்தில் பொறுப்பேற்றுக் கொண்டு பங்கேற்கும் போதுதான் ஒருநிகழ்த்துதல் வெற்றி

பெறுகின்றது என்பது நிகழ்த்துதல் பற்றிய கோட்பாடு கூறும் உண்மையாகும்.

நாடகம் என்றால் அதில் நடிப்பு என்பது முக்கியம் நடிப்புக்கு வார்த்தைகள் அவசியம். என்றல்ல .. .. .. அபிநயமே நடிப்பு.

மன்னார் மாவட்ட முஸ்லிம்களும் நாடகத்துறையும் எனும் மகுடத்தில் ஆய்வு செய்யும் போது மேடை நாடகம் இங்கு முக்கியமாக விளங்குவதை அறிந்து சொள்ளக்கூடியதாக உள்ளது. இப்பகுதி முஸ்லிம்கள் தமிழ்ச் சகோதரர்களுடன் இரண்டறக் கலந்து சுமுகமாக வாழ்ந்து வந்ததன் பயனாக தமிழ் மரபிலான நாடகப்பான்மையைக் கொண்டிருந்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. நாடக ஆக்கத் திறனும், ஆற்றலும் உள்ளகத்தே கொண்டிருந்த முஸ்லிம் கலைஞர்கள் தமிழ் நாடகங்களைப் பார்த்து இரசிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர்.

இதன் பின்னணியாக தாங்கள் மேடைகளில் பாத்திரம் எற்று நடிக்க விழைந்தனர். சகோதர மனப்பான்மையுடன் பழகி அவர்களின் கலாசாரப் பண்பாட்டினை மதித்த நிலையில் நாடக இலக்கியத்திற்கு அதிக பங்களிப்புச் செய்து வந்துள்ளனர்.

விதானைப்புலவர், பக்கீர் புலவர் போன்றோர் அண்ணாவியாக இருந்து காந்தரூபி, கபுகாபு போன்ற சரித்திர நாடகங்களை ஆக்கியுள்ளனர். அலிபாதுஷா நாடகமும் அரங்கேற்றப்பட்ட வரலாற்றை காண் கின்றோம். முஸ்லிம்கள் பெண்வேடம் போடுவது கூடாது என்ற போதிலும் அக்காலத்தில் பெண் வேடங்களை எவ்வித தயக்கமும் இன்றி பூண்டு கொண்டதை அறிய முடிகின்றது. கலையின் மீதுள்ள ஆசை மார்க்க முறையினை பாரதூரமாகக் கொள்ள முடியாமல் செய்துள்ளது என உணரலாம்.

இலக்கிய நயத்துடன் இலக்கண மரபு மாறாத இசை நாடகங்களை அக்கால முஸ்லிம் நாடக இயக்குநர்கள் படைத்துள்ளனர். மன்னா! நீர் எங்குள்ளீர்? என மந்திரி கேட்க, நான் நாட்டு மக்களின் நலன்

விசாரிக்க சென்று வந்தேன்.. . என மன்னன் உரைப்பதாக நாடகத்தமிழ் அமைந்திருந்தது.

இசை நாடக வடிவத்தில் தான் அக்கால அரங்கக்கலை (நாடகம்) அமைந்திருந்தது. இசையுடன் கூடிய வசனத்தை ஒருவர் கூறிக் கொண்டே நிற்க இறுத்தி வசனம் பின்னனியாக பாடும் முறையில் அமைந்திருந்தது.

நாடக மேடையில் பேசுவதை விட செயலில் ஈடுபடுதல் அல்லது காட்சிப் படுத்தல் போன்றவை பார்வையாளருக்கு எளிதில் சென்றடை கின்றது என்ற தத்துவத்தில் மேடையமைப்பு அலங்காரம் சிறப்பாக அமைக்கப்படும் மரபு பேனப்பட்டது. மேடை நாடகத்தை நிகழ்த்த இடம், பார்வையாளரகள் ஆகிய கூறுகள் முக்கியம் என்ற அடிப் படையில் அமையப்பெற்றிருக்கும். இவற்றுள் ஒன்று இல்லையாயின் நாடகம் நிகழ்த்த இயலாது என்று குறிப்பிடத்தக்கது.

அக்கால நாடக மேடையில் பந்தலிட்டு நாலா பக்கமும் திறந்திருந் தாலும் நடிகர்களை வெளிப்படுத்தும் போது இருவர் திரைச்சீலை விரித்து பிடித்து மேடை வந்ததும் நீங்கிச் கொள்வர். காட்சிக்குக் காட்சி திரை நீக்கப்பட்டு நாடகத்தை நடித்துள்ளனர்.

ஆடைகளில் முத்து வெள்ளை உடை அலங்காரப்பொருட்கள், மணியால் அலங்கரிக்கப்பட்ட உடைகள் பட்டுத்துணிகளில் வேட்டி கட்டி ஆண்கள் பெண்கள் வேடம் பூண்டு நடித்துள்ளனர்.

இடையிடையே பாடல்களும் மிதந்தன மிக சுறுசுறுப்பாகவும் விறுவிறுப் பாகவும் ஒளி, ஒலி அமையுடன் நாடகம் அரங்கேறியது.

அக்கால நாடகங்கள் இலக்கியச் சுவை நிறைந்த வசனங்களும் அரச முறையிலான கதை அம்சங்களும் நிறைந்தவையாக அமைக்கப்பட்டிருந்தன.

நாட்டுப்புற கலைகளை நிகழ்த்தும் கலைஞர்கள் தமது பார்வை யாளரின் ஆர்வமுடைய பங்கேற்பைத் தொடர்ந்து தக்க வைத்துக்

கொள்வதன் நிமித்தம் பல உத்திகளை பிரக்ஞை பூர்வமாக கையாண்டனர்.

முஸ்லிம்களின் நாடக அரங்கேற்றம் பெருநாட்காலங்களிலும் கலை விழாக் காலங்களிலும் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன.

நீண்ட கதை வடிவங்களையும் காட்சிவடிவமைப்பும் கொண்ட நாடகங்கள் ஒரு வார காலத்துக்கு நடை பெற்றுள்ளன. ஒவ்வொரு இரவும் 11.00 முதல் விடியும் வரையும் நிகழ்த்தப்பட்டன.

மன்னாரின் பல பகுதிகளிருந்தும் மாட்டு வண்டிகள் மூலம் வந்து தங்கி நாடகங்களை பார்த்து ரசித்துச் சென்றனர்.

இத் தகவல் மர்ஹூம் ஏ.கே. அபூபக்கர் அவர்கள் மூலம் பெறப்பட்டது. தாராபுரத்தில் (தரவை) முற்றவெளியில் பல நாடகங்கள் நடிக்கப் பட்டதாக அறியக்கிடைக்கின்றது.

எருக்கலம்பிட்டிப் புலவர்களின் காந்தரூபி நாடகம் மற்றும் கபுகாபு நாடகம் அரங்கேற்றப்பட்டதுடன் பக்கத்தில் வாழ்ந்த கண்ணப்பன் கந்தசாமி குழவினரும் இப் பகுதியையே தங்களது நாடக அரங்கேற றத்துக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

இப் பகுதியில் வாழ்ந்த அராபியர்களோ தென்னிந்திய முஸ்லிம்களோ அரங்கியல் கலைகளோ ஏற்படுத்தியதாக தெரியவில்லை. ஆனால் நல்ல பண்பாடு, கலாசாரம், மார்க்க அனுஷ்டானங்களை உருவாக்கிய பெருமை அவர்களுக்கு உண்டு.

60க்குப் பிற்பட்ட காலங்களில் அதிகமான சமூக நாடகங்கள் அரங்கேற்றப்பட்டதாக அறிய முடிகின்றது. இந்திய சினிமாக்களின் சாயல் இலங்கையிலும் அதிக ஊடுருவல் கொள்ள ஏதுவாகவே உள்ளதனாலும் இக் காலப் பகுதிகளில் சினிமா தழுவிய நாடகங் களைக் கல்விமான்கள் உருவாக்கலாயினர்.

80க்குப் பிற்பட்ட நாடக வரலாற்றை நோக்குகின்றபோது ஆசிரியர்

களாகச் சேவை செய்தவர்களே அதிக பங்களிப்புச் செய்துள்ளமையை அறிய முடிகின்றது.

அவர்களால் தயாரிக்கப்பட்டு மேடை ஏற்றப்பட்ட பாடசாலை நாடகங்கள் முதல் முற்றவெளி நாடகங்கள் வரையில் மாணவர்களே நடிகர்களாக பயன்படுத்தப்பட்டுள்ளனர். ஒரு சில பாத்திரங்களுக்கே ஏனைய கிராமவாசிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

மன்னார் கிராமப் பகுதிகளில் பல திரைப்படம் தழுவிய நாடகங்கள் உருவாக்கப்பட்டு அரங்கேற்றப்பட்டுள்ளன. தாராபுரம் ஜனாப் எம்.ஸீ. லத்தீப் ஆசிரியர் 'மலர்ந்த வாழ்வு' எனும் நாடகத்தை திரைப்படப் பாணியில் தயாரித்து மேடையேற்றியுள்ளார். இவர் தயாரித்த பல நாடகங்களில் இது சிறந்த கதை அம்சம் கொண்டதாக விளங்கியதுடன் மக்கள் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றிருந்தது. காதல் காவியமான இந் நாடகத்தில் செய்யத் அஹமது, மர்ஹூம் தாவூத் ஆகிய இருவரும் முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளனர். இடையிடையே பாடல்கள் இடம்பெறச் செய்ததுடன் பின்னனி இசையாக வழங்கப்பட அதற்கு நடிகர்கள் வாயசைத்து நடித்த பாணி நாடகத்தை சிறப்பாக்கியது. ஒளி, ஒலி அமைப்பு சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தது. பார்த்தவர்களை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் அம்சங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

இந் நாடகம் மன்னார் மாவட்டத்தில் பல இடங்களில் அரங்கேற்றப்பட்டு மக்களின் பாராட்டைப் பெற்றது.

இவ்வாறே சுண்ணாம்பு என்ற நாடகமும் அமைந்திருந்தது. அதில் மர்ஹூம் ரஹ்மத்துல்லாஹ், ஜனாப் கே.எம். இப்றாஹீம் அவர்களும் மர்ஹூம் மா.சாகுல் ஹமீது ஆகியோரும் நடித்துள்ளார்கள்.

தம்மட்டமுசலி எனும் கிராமத்தில் சிலாபத்துறை மர்ஹூம் செய்னுலாப்தீன் நெறியாள்கை செய்த 'தருமம் தலை காக்கும் கருமம் காலைக் கேட்கும்' என்ற நாடகம் சினிமா தழுவிய நாடகமாக அரங்கேற்றப்பட்டது. இந் நாடகத்தின் கதை வடிவத்தை நெய்னா மாஸ்டர் அமைத்துள்ளார். சிலாபத்துறை சஹீர் என்பவர் முக்கிய

பாத்திரம் ஏற்று நடித்து புகழ் பெற்றார். மற்றும் ஹுனைஸ், றிபாஸ், நஜீம் ஆகியோர் அதில் நடித்துள்ளனர். வட்டிப் பணத்தில் வயிறு வளர்த்து வாழ்க்கையைக் கொண்டு போன ஒருவர் பின்னர் நோய் வாய்ப்பட்டு இறந்து போவதாக இக் கதை அமைந்து மக்கள் பாராட்டைப் பெற்றது.

ஹிஜ்ரி 1500 எனும் நாடகம் மர்ஹூம் எச்.எம். சரீபு ஆசிரியர் எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தில் பணிபுரியும் போது அரங்கேற்றப்பட்டது. 1961ம் ஆண்டு காலப் பகுதியில் அரங்கேறிய இந் நாடகத்தில் அமானுல்லாஹ் எம்.எம்.ஏ. நஸீத் ஆகியோர் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அனார்கலி எனும் சரித்திர நாடகம் எருக்கலம்பிட்டிப் பொது மேடையில் அரங்கேறி புகழ் பெற்றது. இதில் ராஜா மான்சிங்காக மர்ஹூம் ஏ. அமானுல்லாஹ் ஆசிரியர் நடித்த பாத்திரம் இன்று வரை மக்கள் மனதில் நிற்கின்றது.

இளஞ்சிலதன் எனும் புனைப் பெயர் கொண்ட மர்ஹூம் அஹமது அன்ஸாரினால் இவர்களும் மனிதர்களே எனும் நாடகம் தயாரிக் கப்பட்டு அரங்கேறிப் புகழ் பெற்றது.

ஹாஜா முகைதீன் தவ்தீர் என்பவர் பாடசாலை நாடகங்கள் தயாரித்துள்ளார். முறைஸ்கனி, முனாஸ்கனி ஆகியோர்கள் நாடகங்களை அரங்கேற்றியுள்ளனர்.

விடத்தல் தீவில் 1982ம் ஆண்டளவில் ஜே. மறுசலீன் என்பவரின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட எதிர்பார்ப்புகள் என்ற நாடகமும் தாழ்ந்த நிலையில் உள்ள சமூகத்துக்கு விடிவினை ஏற்படுத்தும் கரு கொண்ட நாடகமாக விளங்கியது.

ஏழைகளும் மனிதர்களே என்ற நாடகத்தில் ஆசிரியர் ஜே. முபீன் கதாநாயகனாக நடிக்க எஸ். கமலினி கதாநாயகியாக பாத்திரம் ஏற்று நடித்தார். ஜே. முஸாதிக், ஏ.எஸ். பாயிஸ், ஏ.ஆர். தமீம், அஸீஸா கியோமர் - பயாஸ் போன்றோர் பாத்திரங்களை ஏற்று நடித்தனர்.

பட்டிக்காட்டான் பார்த்த பட்டணம் என்ற நாடகம் மறுசலீனால் தயாரிக் கப்பட்டது. இந் நாடகத்தை எம்.எம். மாஹிர், ஏ.சீ. அஸ்லம், சாஜித் ஜே. முபீன், மர்ஹூம், எஸ். முஸாதிக், ஏ.தரீப்தீன், வய். மிஸ்காத் ஆகியோர் நடித்து மக்கள் மனதில் நீங்காத இடத்தை பெற்றனர்.

இடம்பெயர்வுக்குப் பின் சில மாணவ கலைஞர்கள் உருவாகினர். சாஹிப் மும்தாஸ் சிறந்த நடிகராக விளங்கி ஏ.ஹாஜா அலாவுதீன் ஆசிரியர் தயாரித்தளித்த நீதியா பாசமா (தேசிய மீலாத் விழா மேடை, புத்தளம்) பாவையரும் பயணிகளே, தூரத்து விடிவெள்ளி போன்ற நாடகத்தில் நடித்து புகழ் பெற்றுள்ளார்.

இமாம் ஹனபல், சுலைமான் மனாஸிர், ஆப்தீன் ஆஸ்கின், கௌது ஜுகைஸ், முனாப் முனாஸ் போன்றோரும் இடம்பெயர்வுக்குப் பின் நாடகங்களில் நடித்துள்ளனர்.

முசலி பகுதிகளில் நாடகங்களைவிட கோலாட்டம், கும்மி போன்ற கலைகளே மேலோங்கியிருந்தன.

இருந்த போதிலும் மர்ஹூம் எச்.எம்.ஷரீப் ஆசிரியர் கொண்டச்சியில் அரங்கேற்றிய ஆண்டு விழா நாடகத்தை இன்றும் போற்றிப் பேசுபவராக பலர் உள்ளனர்.

மற்றும் மாவட்ட ரீதியில் நடைபெறும் போட்டி அடிப்படையிலான நாடகங்கள் பலவற்றிற்கும் பாடசாலை ஆசிரியர்களின் பங்களிப்பு அதிகமாக இருந்து மன்/அல்மினா மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமை புரிந்த ஏ. அமானுல்லாஹ், எச்.எம். ஷரீப் ஆசிரியர், எம்.எம். ஷகீது, ஆசிரியர் எஸ்.எச். நிஹ்மத், கலைவாதி கலீல் ஆசிரியர், பண்டாரவெளி அலிகான் ஷரிபு ஆசிரியர், மர்ஹூம் எம்.எம். றஹ்மத்துல்லாஹ் ஆசிரியர், தாராபுரம் ஏ.ஹாஜா அலாவுதீன் ஆசிரியர் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஏ.அமானுல்லா ஆசிரியரின் மறுமலர்ச்சி என்ற நாடகம் மாவட்ட ரீதியாக 1ஆம் இடத்தைப் பெற்றது.

கலாநிதி வை.கே. மரிக்கார், சவூதியில் வாழும் சூரித்தம்பி, பதுர்தீன், சாஹுல் ஹமீது, சிவபாலன், எஹியா மற்றும் பலர் நடித்தனர்.

மர்ஹூம் எம்.றஹ்மத்துல்லாஹ் அவர்கள் எருக்கலம்பிட்டியில் கடமை புரியும் போது மத்திய மகா வித்தியாலயப் பட்டிமன்றத்தின் பொறுப்பாளராக இருந்து பல நாடகங்களைத் தயாரித்துள்ளார். நல்ல குரல் வளம் கொண்ட இவரிடம் கலையாற்றலும் கலையார்வமும் இருந்தது. இவரது 'மானங்காத்த மனிதன்' புகழ் பெற்று விளங்கிய நாடகமாகும்.

தொழிலதிபர் Y.K. மரைக்கார் தயாரித்த நெப்போலியன் பொனபாட் என்ற மேடை நாடகம் இன்றும் பெருமையாகப் பேசப்படுகிறது. இதில் தயாரிப்பாளரே முக்கிய பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். தாராபுரம் A.M. மன்சூர் நகைச்சுவை நடிகராக விளங்கி பல நகைச்சுவை நாடகங்களையும் எழுதித் தயாரித்து மேடையேற்றி யுள்ளார். கவிக் குரல் மன்சூர் என்ற புனைப் பெயரும் இவருக்குண்டு.

ஓய்வு பெற்ற அதிபர் M.M. சஹீது தாராபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். வரவேற்பு கீதம் இயற்றுவது மற்றும் நாடகம் தயாரித்தல் பணிகளில் பாடசாலை மட்டத்தில் ஈடுபட்டுள்ளார். பண்டாரவெளி, மாங்குளம், வேப்பங்குளம் பகுதிகளில் பாடசாலை மாணவர்களைக் கொண்டு நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. இவரது படைப்புகள் யாவும் நகைச்சுவை நிறைந்தவை. இவரது போலி டாக்டர் எனும் நாடகம் பல மேடைகளைக் கண்டது.

M.M. சியான், A.M. மன்சூர், மாங்குளம் சலீம் M. சாஜஹான், அபூபக்கர் போன்றோர் மாணவப் பருவத்தில் நாடகம் நடித்துள்ளனர்.

Y.K. மரைக்காருடைய கள்ளக்கட்டிய கந்தசாமி என்ற நாடகமும் நகைச்சுவை உடையது. இதில் A.M. சஹீது சாஜஹான், பசீர், ஜிப்ரி போன்றோர் நடித்தனர்.

தாராபுரம் அல் மினா மஹாவித்தியலயத்தில் கற்பித்த வெளியூர் ஆசிரியர்களினதும் நல்ல கருவுள்ள நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் S.M.A. சலாம் ஆசிரியரின் ராஜா ஒரு கூஜா என்ற நாடகம் காய கல்பம் என்ற ஒரு மாத்திரையை மையமாகக் கொண்டு ஒரு வித்தியாசமான கருக் கொண்ட நாடகத்தை மேடையேற்றினார். இதில் றியாழ்தீன், M.M. றஜ்மி, அப்துல் வதூத், சுபைர், ஒபான், A.C. சியான், A.C. அஜ்வாத், M. மஸாஹிர், S.M. யாசீன் ஆகியோர்கள் நடித்துள்ளனர். S.M.A. சலாம் பணியாற்றும் காலத்தில் பல நாடகங்கள் மாணவர் மன்றங்களில் அரங்கேறின. கலைவாதி கலீல் அவர்கள் இப்பாடசாலையில் விசேட சித்திரப்பாட வகுப்புக்களை நடாத்தியதுடன் நல்ல படிப்பினையூட்டும் நாடகங்களையும் எழுதினார்.

வித்துவான் றஹ்மான் ஆசிரியர் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரி மாணவர் மன்றத்தில் இலக்கிய நாடகம் ஒன்றை அரங்கேற்றி பலரது பாராட்டையும் பெற்றார். **சீறாவின் வழி** என்ற இந்த நாடகதில் R. ஜலீஸ், முகைதீன், முஹைறஸ் போன்றோர் நடித்தனர். M.M. சியான் (கல்விப்பணிப்பாளர்) சிறந்த கலைஞர். நாடகம் தயாரித்தல், நடித்தல், வில்லுப்பாட்டிசைத்தல் என்பவற்றில் திறமை பெற்று விளங்கினார். நகைச்சுவை நாடகங்கள் மூலம் மக்களை மகிழ்வடையச் செய்வதே தற்காலத்தேவை எனக் கூறும் இவர் பல மேடை நாடகங்களில் நடித்துள்ளார். '**மனித கோலங்கள்**' எனும் நாடகம் இவரது சிறந்த படைப்பாகும். பல இரவுகள் ஒத்திகை பார்க்கப்பட்டு மேடை யேற்றப்பட்டது. ஆசிரியர்களான A. அப்துல் வதூத், முகம்மது றஜ்மி, அபூபக்கர், ஹாஜா அலாவுதீன் நடத்துனர் மஸாஹிர் ஆகியோர் நடித்தனர். சிலாபத் துறையில் 1983ம் ஆண்டு நடை பெற்ற மாபெரும் கலை விழாவில் இந்நாடகம் அரங்கேற்றப்பட்டு புகழ் ஈட்டியது.

தாராபுரம் M.M. நஜ்மி ஆசிரியர், A. ஹாஜா அலாவுதீன் ஆசிரியர் இருவரும் இரட்டையராக மேடையில் தோன்றி காஸிய நாடகங்கள் பல நடித்துள்ளனர். யாழ்ப்பாணத்து டிங்கிரி சிவகுரு மற்றும் திரைப்படத்தில் கவுண்டமணி-செந்தில் போன்று அவர்கள் இருவரும் பாத்திரம் ஏற்று நடித்துள்ளனர். தலைமன்னார், சிலாபத்துறை போன்ற பகுதிகளில் நடைபெற்ற கலை விழாக்களில் நடித்துப் பிரபல்யம் பெற்றதுடன் பரிசும், பாராட்டும் பெற்றனர்.

இவ்வாறு அபூபக்கர் (நீதி மன்ற ஊழியன்) சாஜஹான் G.S., அலிகான்

G.S. போன்றோர் மேடையில் நகைச்சுவை நாடகங்களை நிகழ்த்தி யுள்ளனர். எவரெடி என்னும் மன்றம் அமைத்து இசைக்குழுவை நெறிப்படுத்தியதுடன் நாடகத் துறையிலும் அக்கறை கொண்டிருந்தனர்.

பௌர்ணமி தினங்களின் போது கலைவாதி கலீல் அவர்களினால் மன்னார் விளையாட்டரங்கத்திலே பல கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப் பட்டு வந்தன. அலாவுதீன் அவர்களினால் அரங்கேற்றப்பட்ட வெளிநாட்டுப் பைத்தியம் என்ற நகைச்சுவை நாடகம் மக்களை வயிறுகுலுங்கச் செய்தது எனலாம். பைத்தியம் பிடித்துவிட்டதாக பல மருத்துவர்கள், அண்ணாவிமார்கள், பரிகாரிகளிடமும் வைத்தியம் பார்த்து வீணாகச் செலவு செய்தபின் மனோதத்துவ டாக்டரின் மூலம் சுகம் பெற்ற கதையை மையமாக வைத்து படைக்கபட்ட இந்நாடகத்தில் சபூர், ஜபீர், ஜெமீல், சாஜஹான், உசைர், சம்சுதீன், றஸீன், பாரி, மஹ்ரூப், கைபுல்லா, சைபுல்லாஹ் ஆகியோர் நடித்தனர்.

தியாக தீபம, ஓசையில் ஓர் ஆசை, செதுக்காத சிலைகள போன்றவை மிகவும் புகழ் பெற்ற மேடை நாடகங்களாகும்.

இவரது தியாகதீபம் என்ற நாடகத்தில் கௌரவ அமைச்சர் றிஷாட் பதியுதீன் அவர்களும் முக்கிய பாத்திரம் ஒன்றை ஏற்று நடித்துள்ளார். S. சாஜஹான், கிபாரி, ஜெமீல், அப்துல் ஹையூம், பாரி, சமீம் போன்றோரும் நடித்தனர்.

அவரது பாடசாலை நாடகங்கள் மாவட்டரீதியிலான போட்டிகளிலும் பரிசுகள் பெற்றுள்ளன. உடைந்த உறவுகள, அவன் சாகவில்லை என்பன இவரது மாணவர் மன்ற தொடர் நாடகங்களாகும்.

எருக்கலம்பிட்டி S.H. நிஃமத், தாராபுர அல்மினா ம.வித்தியாலய மேடையில் சக்கரங்கள் சுழல்கின்றன என்ற நாடகத்தை சிறப்பாக தயாரித்தளித்தார்.

விவசாய திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நாடகப் போட்டியில் யாசீர், மூஸீன் போன்றோர் பங்குபற்றி 2ஆவது இடத்தைப்

பெற்றனர். இந்த நாடகம் தொண்டர் ஆசிரியராகவிருந்த A.A. அலாவுதீன் என்பவரால் தயாரிக்கப்பட்டது. முஸீன் நாடங்களை எழுதி தயாரிக்கும் திறைமையை பின்னர் வளர்த்துக் கொண்டார். அத்துடன் இவர் இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான நாடகப் பிரதி எழுதல் போட்டியிலும் பரிசு பெற்றார்.

மன்னார் பட்டினத்திலுள்ள குடியிருப்பு வட்டாரத்தை சேர்ந்த பதுறுதீன் (மக்கள் வங்கி) நாடகத் திறமை கொண்டவராக விளங்கினார். இக்காலகட்டத்தில் ஆசிரியரான சாஹுல் ஹமீது, வங்கி ஊழியரான சாஹுல் (சாவன்னா) முஹம்மது நிஸார், முஹம்மது அன்ஸார், ஏ.ஜே.எம் சித்தீக் போன்றோர் குடியிருப்பில் வாழ்ந்த சிறந்த நடிகர்களாவர். முஸ்லிம் விவாகப் பதிவாளரான செய்யது மஸ்தான் என்பவர் நல்ல கலைஞராவார். பல நாடகங்களில் நடித்துள்ளார். மன்னார் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற பௌர்ணமி கலைவிழாவில் சதாவதானி செய்ஹுத் தம்பிப் பாவலருடைய வரலாற்றை நாடகமாக நடித்துக் காண்பித்துள்ளார்.

இப்பௌர்ணமிக் கலைவிழாவில்தான் டிரகுலா வின் கதையும் நாடகமாக நடிக்கப்பட்டது. நள்ளிரவு இரத்தக் காட்டேரி என்ற தலைப்பில் நடித்துக்காட்டப்பட்ட இந்நாடகம் பார்வையாளர்களைப் பீதி கொள்ள வைத்தது. டிராகுலா வாக நாசர் நடித்திருந்தார். நள்ளிரவு 12 மணிக்கு சவப்பெட்டியைத் திறந்து கொண்டு அவர் வரும் காட்சி மயிர் கூச்செறிய வைத்தது.

மேலும் தேசிய ரீதியில் புகழ்பெற்ற நாடகத்துறை சார்ந்தோர் இம்மண்ணில் பலபேரைக் கூறலாம். கலைவாதி கலீல், மன்னார் சரிபு, ஆசிரியர் S.H. நிஃமத், ஏ. ஹாஜா அலாவுதீன் ஆகியோரை குறிப்பிடலாம். மற்றும் சிலாபத்துறை M. மன்சூர், சமூக ஜோதி றபீக் என்பவர்களும் தேசிய ரீதியில் அறிமுகமானவர்களே.

**வானொலி நாடகங்களைப் படைத்தவர்கள்.**

H.M. ஷரீப், யூ.எஸ். ஹமீது (கவிஞர் சாது), கலைவாதி கலீல், S.H. நிஃமத், A. ஹாஜா அலாவுதீன் ஆகியோர்.

**மர்ஹூம் H.M. ஷரீப்**

மன்னார் ஷரீப் என்று அழைக்கப்படும் இவர் ஆசிரியராக, மொழிபெயர்ப்பாளராக, பாராளுமன்ற சமநேர மொழிபெயர்ப்பாளராக விளங்கினார். பாடசாலை நாடகங்கள் பல உருவாக்கியவர். இலக்கியத் துறையில் ஆர்வம் கொண்டவர். இலங்கை வானெலி முஸ்லிம் சேவையில் நாடகங்கள் பல எழுதியுள்ளார். இவரது தலைப்பிறை எனும் வானொலி நாடகம் நேயர்களின் மிகுந்த பாராட்டைப் பெற்ற நாடகமாகும். சிறந்த பேச்சாற்றலைக் கொண்ட இவரது பேச்சும் எழுத்தும் அலாதியானவை. பற்பல சமூகப் பிரச்சினைகளை ஊடுருவி நாடகப் பிரதியாக்கிப் படிப்பினையூட்டிய பெருமை இவருக்குண்டு.

**கலைவாதி கலீல்**

இவர் தேசிய ரீதியில் புகழ்பெற்ற எழுத்தாளர். சித்திரம், கவிதை, கதை, நாவல், கட்டுரை, சிறுகதை, நாடகம் போன்ற கலைகளில் தேர்ச்சி பெற்ற முதுபெரும் கலைஞர். சிறந்த பல நாடகப் படைப்புகளை வானொலிக்குத் தந்துள்ளார். இலக்கிய விருதுகளையும் சான்றிதல்களையும் பெற்ற கலைஞன். எந்தவொரு விடயத்தையும் சமூக நலன்கருதி எழுதுவதுடன் அவை அழியா ஓவியங்களாகவும் வாழ வழி செய்துள்ளார்.

**S.H. நி∴மத்**

சிறந்த சிறுகதை எழுத்தாளர், நாடக ஆசிரியர், வானொலி முஸ்லிம் சேவையில் பல நாடகங்களை எழுதியுள்ளார். சமுகப் படிப்பினை களை தரக்கூடிய பல ஆக்கங்கள் இவரால் படைக்கப்பட்டன. பாடசாலைகளில் பல நாடகங்களைத் தயாரித்துள்ளார். இந்திய சஞ்சிகையினால் ஏற்பாடு செய்ப்பட்ட சிறுகதைப்போட்டியிலும் பரிசைப் பெற்றார்.

### ñ. ஹாஜா அலாவுதீன்

தாராபுரம் ñ. ஹாஜா அலாவுதீன் எனும் பெயரில் இலக்கிய உலகில் துலங்கும் இவர் சிறந்த நாடக நடிகரும் எழுத்தாளரும் ஆவார். 1983லிருந்து வானொலிக்கு நாடகங்கள், ஊடுருவல், சமூக சித்திரங்கள் எழுதிவருகின்றார். 'கனவு' இவரது முதல் வானொலி நாடகமாகும். 6ம் தரம் படிக்கும் மாணவப் பருவத்திலே "சுவப் டிக்கட்" எனும் நகைச்சுவை நாடகத்தை தயாரித்து சக மாணவர்களுடன் நடித்ததின் பின் நாடக ஆற்றலை வளர்ததுக்கொண்டார். 2001 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டத்தாபன முஸ்லிம் சேவையும், இஸ்லாமிய கலாச்சார அமைச்சும் இணைந்து நடாத்திய நாடகப் பிரதி எழுதும் போட்டியில் பங்குபற்றி பரிசில் பெற்றார்.

### யூ.எஸ். ஹமீது (கவிஞர் சாது)

மன்னார் குடியிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட சாஹுல் ஹமீது தனது முதலெழுத்தையும் கடைசி எழுத்தையும் இணைத்து சாது என்று வைத்துக்கொண்டார். நல்ல கவிஞர், பாடலாசிரியர். இலங்கைத் தமிழ்த்திரைப்படங்களுக்குப் பாடல்கள் யாத்திருக்கிறார். வானொலிக்கு ஏராளமான மெல்லிசைப்பாடல்கள் வடித்திருக்கிறார். படிப்பினையூட்டும் பல வானொலி நாடகங்களை எழுதியிருக்கிறார். இவரது நாடகங்கள் புதிய பாணியில் அமைந்திருக்கும். சினிமாத்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். தற்போது எழுதுவதில்லை.

# உயிராபத்தும் சாமர்த்தியமும் மிக்க யானை பிடித்தல் தொழில்

- மதாறு முஹைதீன் முஹம்மது கலீல் -

மாவட்ட ஆய்வு நூலுக்கான தகவல்களைத் திரட்டும் பொருட்டு முஸ்லிம் குக்கிராமந்தோறும் சென்றபோது, கரடிக்குளியின் யானைப் பாரம்பரியம் பற்றிய பல சுவையான தகவல்களப் பெற முடிந்தது.

கரடிக்குளியைச் சேர்ந்த பிரபல யானைப் பணிக்கர் மர்ஹூம் கீனா முஹம்மது யூசுப் அவர்களின் பேரன், முஸ்லிம் சமய பண்பாட் டலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தரும் சட்டபீட மாணவருமான அல்ஹாஜ் பாறூக் ஹுசைனஸ் என்பவரை நேரடியாகச் சந்தித்து உரையாடியதில் அந்த சுவையான விபரங்களைப் பெற முடிந்தது.




கீனா முகம்மது யூசுப் 1924.02.18ம் திகதி மன்னார் கரடிக்குளியில் பிறந்தவர். தனது அறுபத்து மூன்றாவது வயதில் அவரது இல்லத்தில் வைத்து இறையடி சேர்ந்தார்.

இவர் கல்வி அறிவில் குறைந்தவராக இருப்பினும் வேகமும் விவேகமும் மிக்கவராகவும் விகடமாக பேசி அனைவரையும் சந்தோஷப்படுத்துவதைப் பொழுது போக்காகவும் கொண்டவர்.

இவரது திறமையைப் பற்றி அந்த ஊர் நண்பர்கள் கூறும்போது ஒரு நாள் கரடிக்குளியில் கும்ளா வில்லு என்று கூறப்படும் இடத்துக்கு நண்பர்கள் சகிதம் சுப்ஹுத் தொழுகை முடித்துவிட்டு வேட்டைக்குச் சென்றிருந்தார். இந்த வேளை அவர்களுக்குள் ஒருவருக்கொருவர், "மான் ஐத் துரத்தி அதன் குதியை வெட்டி பகல் சாப்பாட்டுக்கு கொண்டுவருபவர் யார்" என சவால் விட்டுக் கொண்டனர். ஆனால், லுஹர் தொழுகைக்கு முன்னதாகவே, மான் ஒன்றைத் துரத்தி அதன் குதியை வெட்டி தோளில் வைத்துக் கொண்டு வந்த வீரன் தான் கீனா முஹம்மது யூசுப் என்றனர்.

மேலும் இலங்கை மிருகக் காட்சி சாலையில் 1957 அக்டோபர் 6ம் திகதியிடப்பட்டு இவருக்கு ஒரு நற்சான்றிதழ் பத்திரம் அதன் பணிப்பாளர் மேஜர் ஏ.என். வீன்மன் என்பவரினால் வழங்கப் பட்டுள்ளது.

அதில் மிருகக்காட்சி சாலைக்கான யானைகளை பிடித்துத் தரும் ஊழியர் என்றும் இவர் கண்ணிவைத்து யானைகளைப் பிடிப்பதில் முதல் தரமானவரும் தேர்ச்சி பெற்றவரும் ஆவார் என்றும் அத்துடன் காட்டில் பயமில்லாதவரும், நிகரற்ற திறமை வாய்ந்தவரும் ஆவார். எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பணிக்கர்கள் என்றால் யானை பிடிப்பதில் விசித்திரமானவர்கள். ஆனால், அதிலும் கீனா முஹம்மது யூசுப் என்பவரோ மேலும் விசித்திரமானவர் என்பதனாலேதான் இலங்கை மிருகக் காட்சி சாலையில் யானை பிடிக்கும் ஊழியராக (Employee) இருந்து வந்துள்ளார்.

இவரின் யானைபிடிக்கும் தொழில் தந்திரோபாயத்துக்கு மற்றுமொரு சான்று, புத்துளம், மதவாக்குளத்தில் கிணறு ஒன்றினுள் பெண் யானை ஒன்று விழுந்தவிட்டதாம். (பிடி) அதனுடன் வந்த ஆண் யானையின் தொல்லையும் கிணற்றினுள் உள்ள யானையின் பிளிரலும் ஊர் மக்களைப் பெரிதும் சங்கடத்துக்குள்ளாக்கிய வேளையில் அதனை கிணற்றிலிருந்து மீட்டெடுக்க எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் ஊரவர்களால் முடியாமல் போய்விட்டது. அதன் பிறகு மன்னார்



# THE ZOOLOGICAL GARDENS OF CEYLON

ALLAN AVENUE, DEHIWELA, COLOMBO, CEYLON

Director:
MAJOR A. N. WEINMAN, O.B.E., C.M.Z.S.
Telegrams: "ZOOLOGY"
Telephone: MOUNT LAVINIA, 373

Dehiwela, 6th October, 1957.

TO WHOM IT MAY CONCERN:

This is to certify that Kima [illegible], Ponniken of Koradikulli, Karachchikudi has been employed by me to capture elephants for the Zoo. He is a first class trapper and an expert at his job. His knowledge of the jungle is unique and he is a fearless elephant noozer.

Aubrey N. Weinman,
DIRECTOR.

மாவட்டம் மட்டுமல்ல, புத்தளத்திலும் கூட யானைப் பணிக்கர் யூசுப் என்றால் அனைவரும் அறிந்த ஒருவரே, எனவே அவரின் உதவியை நாடுவதாக பள்ளிவாசல் மத்திசமார் முடிவெடுத்து இவரை அழைத்து ஆலோசனை கேட்டனர். இதற்கு, அவர் பெருமளவு உரித்த தேங்காய் மட்டைகளை கிணற்றில் போடுமாறு சொன்னார். ஊரவர்கள் அவ்வாறே போட்டனர். யானை மட்டைகளை மிதித்து மிதித்து மேலே வந்தவுடன் அதனை பிடித்து பின்னர் காட்டில் விட்டதாகவும் கூறப்படுகிறது. இதிலிருந்து குறித்த யானைபிடிக்கும் தொழிலில் எவ்வளவு அனுபவம் இருந்துள்ளது என்பதை அறியமுடிகறது.

இவர் யானை பிடித்தல் மட்டுமின்றி குதிரைச் சவாரியிலும் திறமை சாலியாக இருந்துள்ளார். அவர் கரடிக்குளியிலிருந்து கரத்தீவு, இலவன் குளம், புத்தளம் பகுதிகளுக்கு குதிரையிலேயே பயணம் செய்து இருக்கிறார். மேலும் அவரின் புகழ் இலங்கையில் மாத்திரமின்றி இங்கிலாந்திலும் பரவியிருந்துள்ளது. இலங்கையின் யானைபிடித்தல் தொடர்பான இங்கிலாந்தில் வெளியிடப்பட்ட புத்தகம் ஒன்றில் யானைப் பணிக்கர்களின் முதல் தர வரிசையில் இவரின் பெயர் வெளியிடப்பட்டிருக்கின்றது. இதனைப் படித்துவிட்டு, கடந்த 1991ம் ஆண்டு காலப்பகுதியில் இங்கிலாந்து அரசின் முக்கிய நபர் ஒரவர் ஒரு யானைக் குட்டியை இலங்கையிலிருந்து எடுத்துச் செல்வதற்கு வந்துள்ளார். வந்த நபர், யானையினை யூசுப் அவர்களின் துணைகொண்டே பிடிப்பதாகவும் முடிவும் செய்து வந்திருக்கிறார். இவர் இலங்கை வந்து நேரடியாக மன்னார் சென்றிருக்கின்றார். அங்கு தள்ளாடி இராணுவ முகாமுக்குச் சென்று கரடிக்குளி செல்வதற்கு இராணுவத்தின் உதவியைக் கோரிய வேளையில்தான் மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் அனைவரும் புலிகளால் வெளியேற் றப்பட்டு புத்தளம் பகுதியில் வசிப்பதாக அறிந்து கொண்டார். அதன்பின் தள்ளாடியிலுள்ள இராணுவத் தளபதியுடன் ஹெலிகொப்டர் மூலம் இலவன்குளம் இராணுவ முகாமுக்கு வந்து, அங்கிருந்து ஜீப் வண்டியில் ரெட்பானா அகதிமுகாமுக்கு வருகைதந்தார். அவ்வேளை நானும் அங்கிருந்தேன் என்பது குறிப்பிடத்தக்கது. வருகை தந்தவர்கள் இங்கு "யூசுப் யார்?" என்று கேட்டனர். அப்போது அவர்கள் வந்த நோக்கம் அறியாத நாங்கள் அப்படி யாரும் இல்லை என்று கூறினோம்.

அதன் பின்னர் இராணுவ முகாமுக்கு சென்று விசாரித்த போது இங்கிலாந்திலிருந்து முக்கிய நபர் ஒருவர் வந்ததாகவும் அவருக்கு யானைக் குட்டி ஒன்று தேவையென்றும் கூறினார். அப்போது நாம் எனது அப்பா காலமாகிவிட்ட செய்தியை அவர்களுக்கு கூறினோம். அத்துடன் அப்பொறுப்பை யூசுப் அவர்களின் மூத்த மகன் நூர் முஹம்மது அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

அது ரமழான் நோன்பு காலம், யூசுப் அவர்களின் மூத்த புதல்வன் நூர்முஹம்மது தலைமையில் அவரின் இளைய மகன் சைபுள்ளா உட்பட 11 நபர்களைக் கொண்ட குழு அனுராதபுரம் காட்டிற்குச் சென்று யானை பிடிப்பதற்குரிய ஆயத்தங்களைச் செய்து மூன்று நாட்களுக்குள் யானையைப் பிடித்து குறித்த இங்கிலாந்து நபரிடம் ஒப்படைத்தனர். இது இலங்கை ரூபவாஹினியில் ஒளிபரப்புச் செய்யப்பட்ட ஒரு விடயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, பணிக்கன் யூசுப் மரணித்துவிட்டாலும் அவரது யானை பிடிக்கும் தொழிலை அவரது பிள்ளைகளாலும் செய்யமுடியும் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளனர் என்பதும் தெளிவாகிறது.

# முஸ்லிம் மாதர்களும் அவர்களது சமூகப் பணிகளும்

- M.S. சித்தி சலிமா -

தலைவி, றஹ்மத் மாதர் அபிவிருத்திச் சங்கம்

வடமாகாணத்தின் மன்னார் மாவட்டப் பட்டினவாழ் முஸ்லிம் பெண்கள் விழிப்புணர்வின்றி வாழ்ந்த காலகட்டம். அவர்கள் கல்வி, கலாசாரம், சமூக, சமய, பண்பாடுகளில் மேம்பட்டு வாழ்ந்த போதிலும் ஒரு கூட்டமைப்பாக இயங்கி பல சாதனைகள் படைப்பதற்கான வலு விருந்தும் சமூக பணிகள் பற்றி சிந்திக்க முயலவில்லை. அறிவூட்டல்களோ, ஊக்கங்களோ வழங்கப்படவுமில்லை. காலம் வெறுமனே கடந்து சென்று கொண்டிருந்த வேளையில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட, சமூகப் பணியில் ஆர்வம் கொண்ட பெண் ஒருவரின் அயராத முயற்சியின் காரணமாக 1985ஆம் ஆண்டு றஹ்மத் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் உதயமாகியது. இதற்கு காரணமானவர் திருமதி பாத்திமா அபூபக்கர் என்பதை குறிப்பிடுவது முக்கியமானதாகும். இவரையே தலைவராகத் தேர்ந்தெடுத்த பெருந்தன்மை மன்னார் மூர்வீதி, பரம்பரை வழி மாதர்களுக்கே உரித்தாகும்.

றஹ்மத் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆரம்பத் தலைவி தனது ஒருவருட கால பதவியில் பல சேவைகள் ஆற்றியுள்ளார். சங்கத்தின் பணிமனைக்காகவும், ஏனைய செயற்திட்டங்களுக்காகவும் அவரது சகோதரி ஒருவரின் காணித் துண்டு ஒன்றை தற்காலிகமாக

வழங்கியதுடன் தற்காலிக சங்கக் காரியாலயம் அமைப்பதற்காக இஸ்லாமிய வர்த்தகர்களின் உதவிகளைப் பெற்று பணியை பூர்த்தி செய்தார். மன்னார், தாராபுரத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஜனாப் கே.எம். றத்னம் அவர்கள் அதிகளவு பங்களிப்புச் செய்துள்ளார்.

திருமதி அபூபக்கர் அவர்கள் பாலர் பாடசாலையையும் குர்ஆன் மத்ரஸாவையும் சிறார்களுக்காக ஆரம்பித்துக் கொடுத்ததுடன் உலக உணவுத் திட்டத்தினால் செயற்படுத்தப்பட்ட சத்துணவுத் திட்டத்தின் மூலம் தாய், சேய் பராமரிப்பு சேவையையும் பெற்றுக் கொடுத்தார்.

1986ஆம் ஆண்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்ட போது அங்கத்தவர்களின் ஏகமனதான தலைவியாகத் தெரிவு செய்யப் பட்டேன். 1990ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு புதிய நிர்வாக தெரிவின் போதும் ஏகமனதாக, தலைவியாக தெரிவு செய்யப்பட்டபின் சங்கம் நான்கு வருடங்கள் குறிப்பிடத்தக்களவுக்கு பாரிய முன்னேற்றம் அடைந்தது. உறுப்பினர்களின் உழைப்பு, ஒற்றுமை, புரிந்துணர்வு ஜனநாயக வழித் தீர்மானங்கள் யாவுமே இத்தகைய வளர்ச்சிக்கு காரணங்களாகும். அரச உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பும், அனுசரணைகளும் பக்கபலமாக அமைந்திருந்தன. அக்காலப்பகுதியில் ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் கிராம அபிவிருத்தி அமைச்சராக விருந்த கௌரவ அமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா அவர்கள் பாலர் பாடசாலைக்கு (Pre-School) 50 மாணவர்கள் கல்வி கற்பதற்கான தளபாடங்களையும், கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு போன்ற சுயதொழில் வாய்ப்புகளுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்து உதவியதை நினைவு கூருகின்றோம். இதற்கான ஏற்பாடுகளைச் செய்தவராகிய அன்றைய மன்னார் பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும், தற்போது அம்பாறை மாவட்டத்தில் கடமைபுரியும் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருமாகிய ஜனாப் S. அபூசாலி அவர்களை மறந்துவிடவும் முடியாது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் (SCF) சுயதொழில் வாய்ப்புக்காக வறிய இளம் யுவதிகளுக்கு தையல் இயந்திரங்கள் சங்க நிர்வாகத்தினூடாக வழங்கப்பட்டன. இந் நிறுவனம் மூர் வீதியிலுள்ள

மக்கள் குளிப்பதற்காக நெடுங்குளத்திற்கு குளிக்கும் படிக்கட்டுகளும், ஆடை மாற்றும் அறையையும் மன்னார் மாவட்ட சமநல சேவைகள் திணைக்களத்தினூடாக பூர்த்தி செய்து தந்தனர். அபிவிருத்திச் சங்கமே பொறுப்பேற்று செய்து முடித்ததுடன் குளம் சிரமதான வேலைத் திட்டத்தினால் ஆழமாக்கப்பட்டதுடன், சுத்தமும் செய்யப்பட்டது.

ஆரம்பகால பாலர்பாடசாலை ஆசிரியர்கள் தொண்டர் ஆசிரியர் களாகவே கடமையாற்றியிருப்பினும் பின்னர் அவர்களுக்கு சிறு ஊதியம் வழங்கப்பட்டது. இப்பாடசாலைக்கு சர்வோதய அமைப்பின் உதவியும் கிடைக்கப்பெற்றது. வருட இறுதியில் ஆக்கமும், ஊக்கமும், மகிழ்ச்சியும் ஏற்படுத்தும் வகையில் கலை நிகழ்ச்சியுடனான பரிசளிப்பு வைபவமும் பிரமுகர்களைக் கொண்டு சிறப்புற நடாத்தப்பட்டது.

மன்னார் உதவி அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களைக் கொண்டு யுவதிகளுக்கு தையல் பயிற்சியும், பனம் பொருள் அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையால் பனம் பொருள்




**மாதர் சங்கக் கூட்டமொன்றின்போது**

உற்பத்திப் பயிற்சியும் வழங்கப்பட்டது. பல ஒப்பந்த வேலைகள் பொறுப்பேற்று திருப்திகரமாக முடித்துக் கொடுத்ததால் பெறப்பட்ட வருமானத்தைக் கொண்டு அங்கத்தவர்களின் பொருளா தார, சமூக, சமய, கலாசார பணிகளை செயற்படுத்தி வந்துள்ளோம். றஹ்மத் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான மன்னார் இலங்கை வங்கிக் கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் 3495 இல் மீதியாகவுள்ள தொகைப் பணம் எவ்வித பலனும் இன்றி 15 வருடகாலமாக இருந்து வருகின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

றஹ்மத் மாதர் அபிவிருத்திச் சங்கத்தினது சமூக தேவைகளுக்காக நிரந்தர பலநோக்கு கட்டிடம் அமைப்பதற்காக சங்கத்தின் சொந்த நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் கட்டிடம் அமைப் பதற்காக, முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் U.S.S.M. அபூபக்கர் அவர்கள் தனது வரவு செலவுத்திட்ட ஒதுக்கு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து தந்தார். முதற்கட்ட நிர்மாணப்பணிவேலையும் நிறைவு செய்யப்பட்டது.

அங்கத்தவர்களுக்கு வீடு திருத்தம், மலசலகூட கட்டுமாண தேவை களுக்கு வட்டியில்லாத இலகு தவணைக்கடன்கள் வழங்கப்பட்டன. பொது மக்களுக்காக குடி நீர், பவுசர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டது. மன்னார் அல்-அஸ்ஹர் மகாவித்தியாலயத்திற்கு மாணவர்களின் குடிநீர் சேகரிப்புக்காக நீர்த்தாங்கியொன்று வாங்குவதற்கு நிதி உதவி செய்தோம். இவ்வாறாக சமூகப்பணிகளில் முன்னேற்றம் கண்டிருந்த வேளையில் தான் வட பகுதி முஸ்லிம் மக்கள் அவர்களது வாழ்விடங்களை விட்டு பலவந்தமாக வெறும் மனிதர்களாக விரட்டப்பட்டபோது றஹ்மத் மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் காணாமல் போய்விட்டது. சமூகப்பணிகளும் அத்தோடு தொலைந்து விட்டன.

1990ஆம் ஆண்டிற்கும் 2000ஆம் ஆண்டிற்கும் இடையில் மிக நீண்ட இடைவெளி எமது மக்கள் சிதறி சீர்குலைந்து விட்டார்கள்.பொதுப்பணி பற்றிச் சிந்திப்பதற்கு வாய்ப்பே இல்லை. சங்கமும் அதன் பணிகளும் காணாமல் போனதே ஒழிய அழிந்துவிடவில்லை. மீண்டும் எங்கிருந்தோ துளிர்விட ஆரம்பித்தது. களுத்துறை மாவட்டத்தில்

பாணந்துறை பிரதேசத்தில் வாழ்ந்து வரும் மன்னார் மூர்வீதி மக்களின் ஒன்றிணைப்பால் மீளமைப்பு செய்யப்பட்டது. றஹ்மத் மாதர் அபிவிருத்தி சங்கம் மீண்டும் அதன் சமூகப்பணிகளில் அதிக முன்னேற்றங்கள் அடைந்து வருகின்றது. வாழ்வுக்கு ஒரு ஒளிவிளக்காக, வழிகாட்டி நிற்கின்றது.

மூர் வீதியில் சகலருக்கும் சொந்த இருப்பிடங்கள் இருந்ததால் அந்த சிந்தனைக்கு அவசியம் இருந்ததில்லை. சமூகப் பணி மாத்திரமே இலக்காக இருந்தது. ஆனால் இன்றைய சந்தர்ப்பத்தில் சொந்த இல்லம் ஒன்று அமைப்பதே முக்கிய குறிக்கோளாகக் காணப்படுகின்றது. முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும், அமைச்சர்களையும் பல முறை சந்தித்து உதவி கோரினோம். சுனாமி பேரலையைவிட மாபெரும் கோரச் செயலால் நிர்கதியாகிய எம்மை 15 வருடங்களாக கவனிப்பதற்கு மறந்துவிட்டார்கள். வடபகுதி முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட சோகத்தையும் ஒரு தேசிய அனர்த்தமாகக் கருதி, பயங்கரவாத பேராபத்திலிருந்து காக்க பாதுகாப்பான பகுதிகளில் குடியமர்த்துவதற்கு இதுவரையில் ஆட்சியிலிருந்த எந்த அரசாங்கமாவது உண்மையான அக்கறை செலுத்தி செயற்பட்டிருக்குமாயின் அதனால் ஏற்பட்ட பயிற்சி, சுனாமி அனர்த்த பாதிப்புக்குள்ளான மக்களை மீண்டும் கட்டியெழுப்பும் பணிக்கு முன் அநுபவமாக இருந்து வினைத் திறமையான செயற்திட்டத்திற்கு வழி காட்டியிருக்கும். 1990 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கான புனர்வாழ்வுப் பணிகளுக்கு பல்வேறு உள் நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களும், வெளிநாட்டு இஸ்லாமிய அமைப்புகளும் வருடம் தோறும் நன்கொடைகள் வழங்கியிருந்தமையை ஊடகங்கள் வாயிலாக அறியக் கூடியதாக உள்ளது.

பயங்கரவாத அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னரும் வடபகுதி முஸ்லிம்கள் பாதுகாக்கப்படவில்லை. வருகின்ற போதும் தடுக்கப்பட வில்லை, வந்தபின்னரும் கவனிக்கப்படவில்லை என்பதே உண்மை. இதுவரை விளம்பரங்களுக்காக உதவுபவர்களும் உதவ முன்வர வில்லை, சேவைப்பணியினரும் அரவணைக்கவில்லை. 2004 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 28ஆம் திகதியன்று றஹ்மத் மாதர்

அபிவிருத்திச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் முஸ்லிம் சேவையினூடாக திருமதி புர்கான் பீ இப்திகார் அவர்களால் நடாத்தப்பட்ட நேரடி மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சியின் போது வானொலியினூடாக எமது முஸ்லிம் தனவந்த சகோதர சகோதரிகளிடம் எமது தேவைபற்றி விளக்கினோம். ஆனால் அல்லாஹ்வின் றஹ்மத்தால் பாணந்துறை பிரதேசத்தில் மூர்வீதி மக்களுக்கான மீள்குடியமர்வுக்கான வேலைத்திட்டத்திற்கு சொந்தமாக காணியொன்றைக் கொள்வனவு செய்துள்ளமை எமது முயற்சியின் முதற் படிக்கல்லாகும்.

வருடம் தோறும் றமழான் மாதத்தில் றஹ்மத் மாதர் அபிவிருத்திச் சங்கத்தால் எமது சக்திக்குட்பட்டளவில் சகாத் வழங்குவது வழக்கமான விடயம். இம்முறை விசேடமாக அல்-முஸ்லிமாத் இஸ்லாமிய இயக்கத்தின் அனுசரணையால் சகாத் வழங்கியதுடன் இவர்களது உதவியினால் ஹஜ்ஜுப் பெருநாள் அன்று மூன்று மாடுகள் குர்பான் இறைச்சி 150 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளோம். அல்லாஹ்வுக்கும், அனுசரணை வழங்கிய அல்-முஸ்லிமாத் அமைப்பின் தலைவி Dr. மரீனா றிபாய் தாஹா அவர்களுக்கும் இவ்வுதவிக்கு வழியமைத்துத் தந்த திருமதி P. அபூபக்கர் அவர்களுக்கும் நன்றிகள் கூறிக்கொள்கின்றோம். அங்கத்தவர்களுக்கு மையத்துக் குளிப்பாட்டும் பயிற்சி, தையல் பயிற்சி, சமையற்கலைப் பயிற்சி போன்ற பயிற்சி நெறிகளையும் ஏற்பாடு செய்து கொடுத்திருக்கின்றோம்.

ஒவ்வொரு பெண்களினதும் குடும்பப் பொறுப்புகளுக்கும், பணி களுக்கும் மேலதிகமாகவே அவர்களது சமூகப்பணி ஆற்றப்பட வேண்டிய கடமைப்பாடு உண்டு. இப்பெண்களின் சமூகப்பணியின் வெற்றிக்கு அவர்களின் பின்னணியில் ஆண்களின் பங்களிப்பும், விட்டுக்கொடுப்பும் தன்னம்பிக்கை ஊட்டல், அறிவுரைகள் வழங்கல் என்பவை முக்கிய இடத்தை வகிக்கின்றன. றஹ்மத் மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் வளர்ச்சிப்பாதைக்கு விசேடமாக ஆண்கள் உபகுழுவொன்றும் இயங்குகின்றது என்பது முக்கிய அம்சமாகும்.

இலங்கைத் தீவின் பல பாகங்களிலும் முஸ்லிம் மாதர்களின் சமூக

சேவைகள் சங்கங்களாகவும் குழுக்களாகவும் அல்லது தனிப்பட்ட அமைப்புகளாகவும் மிகப் பெரியளவில் வளர்ந்து வியாபித்து நிற்கின்றன. அல்-முஸ்லிமாத் அமைப்பு அகில இலங்கை ரீதியாக த.்.வாப் பணியிலும், ஏனைய சமூக சேவைகளிலும் சிறப்பான இடத்தை வகிக்கின்றது. இதே போன்று அகில இலங்கை முஸ்லிம்




மாதரா சங்க அங்கத்தவர்களை பேட்டி காணும் புர்கான் பீ. இப்திகார் (மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சிக்காக)

மாதர்களின் அமைப்பு (All Ceylon Muslim Ladies Conference) பேருவளையில் சபா வீடமைப்புத் திட்டத்தினால் வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுத்து சமூக சேவைக்கு முத்திரை பதித்துள்ளார்கள். இஸ்லாமிய இயக்கங்கள், அமைப்புகள், சங்கங்கள் யாவும் ஒன்றுபட்டு, ஒரு சமமாக அகில இலங்கை ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் தமது சமூகப்பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்களாயின் அவர்களின் சமூகப் பணியின் சாதனைகள் உத்தமமானதாகும், யதார்த்தமானதாகும். தேவையான பணிகள் அவசியமான இடங்களை உரிய சந்தர்ப் பங்களில் சென்றடையும் இஸ்லாமிய சமூகப்பணிகளில் ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ள புத்திஜீவிகள், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள சேவை அதிகாரிகள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை அதிகாரிகள், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், இதுபற்றி சிறிது தங்களின் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டியது அவசிய மாகும். இஸ்லாமிய மாதர்களையும், அவர்களின் சமூக சேவை களையும் ஓரணியின் கீழ் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு முன்வாருங்கள்.

# வடமாகாண அபிவிருத்தியில் முஸ்லிம்களின் பங்கு

எம்.எஸ்.எம். நஃமத்
ஏ.ஸீ.ஏ. ஸருக்

இலங்கையின் வட மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் முஸ்லிம்கள் கணிசமான அளவு வசித்து வருகின்றனர். அதிலும் குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் பெருமளவான முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தாலும் 1990ம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் காரணமாக இவ்வைந்து மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் மக்கள் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை வரலாற்றில் தடம் பதித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் காணப்படுகின்ற 05 பிரதேச செயலாளர் பிரிவுகளில் முசலி பிரதேச செயலாளர் பிரிவானது 95%க்குமதிகமான முஸ்லிம்களை கொண்ட பிரதேச செயலாளர் பிரிவாக காணப் படுகின்றது. ஆயினும் மன்னார், மாந்தை மேற்கு போன்ற பிரதேச செயலாளர் பிரிவுகளும் கணிசமான அளவு முஸ்லிம்களைக் கொண்ட பிரிவுகளாகவே கணிக்கப்படுகின்றன.

இலங்கையில் வரலாற்றுத் தரவுகளின் அடிப்படையில் முஸ்லிம்கள் அரேபியாவிலிருந்து வந்தவர்களாயினும் பரம்பரை, பரம்பரையாக இலங்கையில் மக்களின் வசிப்பிட நாகரீகத்தில் தோன்றிய குடியிருப் புகள் என்ற வகையில் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார்,

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் வசித்து வந்த முஸ்லிம்கள் காலகாலமாகவும் பரம்பரையாகவும் இம் மாவட்டங்களில் குடியேறி வாழ்ந்து வந்தவர்களாகவே வரலாறு கூறினாலும் ஏனைய இனத்தவர்களின் வரலாற்று பதிவுகளிலும் இடம் பிடித்துள்ளது.

வடமாகாணத்தில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் இனங்களுக் கிடையேயான நல்லுறவை வளர்ப்பதில் பல்வேறு சந்தர்ப்பங்களில் உதவியாக இருந்துள்ளதை அறியலாம். ஆங்காங்கே சிறு சச்சரவுகள் ஏற்பட்டாலும் முழுமையாக நோக்கின் இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வை மதித்து செயற்பட்டு வந்ததை அறியக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் வட மாகாணத்தின் பங்களிப்பானது முக்கிய இடத்தை வகிக்கின்றது. இலங்கையின் பெயரும் புகழும் உலகில் சிறப்புற காரணமாக இருந்தது மன்னார் மாவட்டத்தின் முத்துக்குளித்தல் செயற்பாடும், யானை பிடித்தல் செயற்பாடுமாகும். அந்நியரின் ஆட்சிக் காலங்களில் இப்பிரதேசமானது அடிக்கடி முற்றுகைக்கு இடப்பட்ட வரலாற்று விடயத்தைக் கொண்டே இம்முடிவுக்கு வரலாம்.

தென்னிந்திய வர்த்தகர்களும் முத்துக்குளித்தலில் ஈடுபடுவோரும் மன்னார் மாவட்டத்தின் இப்பகுதியில் தங்கியிருந்தமையும் சர்வதேச வர்த்தக உலகில் இலங்கை முத்து பெயர் பெற்றிருந்தமையும் எகிப்திய இளவரசி தனது பட்டாடையில் பதிப்பதற்காக முத்துக்களை இலங்கையில் இருந்தே கொள்வனவு செய்தமை வரலாற்று உண்மைகளாயினும் இம்மாவட்ட மக்கள் சரித்திர காலம் தொட்டு நாட்டின் இறைமைக்கும் அபிவிருத்திக்கும் உதவியாக இருந்தமை புலப்பட வாய்ப்பாக இருக்கும்.

இவை மட்டுமல்ல யானைத்தந்தத்திற்கு இலங்கை பெயர் போன நாடு என வரலாற்று ஆசிரியர்கள் செப்பிய விடயங்கள் வட மாகாணத்தின் மன்னார் பகுதி முஸ்லிம்களுக்குரிய சிறப்பாகும். வரலாற்று காலம் தொட்டு இலங்கையின் பொருளாதார அபிவிருத்

திக்கு பல வழிகளில் வடமாகாண முஸ்லிம்கள் பங்காற்றி வருகின் றமையை அவதானிக்கக் கூயதாக உள்ளது.

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார் பகுதியானது மீன் பிடித்தொழிலுக்கு பிரசித்தி பெற்றதாகும். குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் எருக்கலம்பிட்டி, தலைமன்னார், பேசாலை, சிலாவத் துறை போன்ற முஸ்லிம் பிரதேசங்கள் மீன் பிடித்தொழிலுடனும் அதனோடு தொடர்பான மீன்பிடி கைத்தொழிலிலும் பிரசித்தப்படுத் தப்பட்டுள்ளன. குறிப்பாக சிலாவத்துறை பகுதியானது வாடைக்காற்று காலப்பகுதியான 06 மாதங்கள் மீன்பிடித்தொழிலில் களைகட்டி யிருக்கம். இக்காலப்பகுதியில் நீர்கொழும்பு, மாத்தறை, சிலாபம் பகுதி சிங்கள மீனவர்கள் கடற்கரையோரங்களில் "வாடி" எனும் சிறு குடில் அமைத்து மீன் வியாபாரங்களில் ஈடுபடுவார். இத்தொழிலுடன் கணிசமான முஸ்லிம்களும் ஈடுபடுவர். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததாக இப்பகுதி காணப்படுகின்றது.

மேலும் வடமாகாணத்தில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் முஸ்லிம்கள் வாழும் பெரும்பான்மை பகுதிகளில் விவசாயமானது மிக முக்கியமான இடத்தை வகித்த வருகின்றது. குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் சிலாவத்துறை, மாந்தோட்டம், மடு பிரதேச செயலாளர் காரியாலயங்களில் அமைந்துள்ள முஸ்லிம் கிராமங்களான சிலாவத்துறை, முசலி, பண்டாரவெளி, கொண்டச்சி, கூளாங்குளம், புதுவெளி, அகத்தி முறிப்பு, பொற்கேணி, வேப்பங்குளம், பிச்சைவாணியில் குளம், பாலைக்குழி, மறிச்சுக்கட்டி, கரடிக்குழி, வாலிவெலி பேன்ற கிராமங்களும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள விழாங்குளி, விடத்தல்தீவு, பெரியமடு, வட்டக்கண்டல், மினுக்கன் போன்ற கிராமங்களிலும் மடு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காக்கையன்குளம் போன்ற கிராமங்களிலுள்ள முஸ்லிம்கள் பெரும்பாலும் விவசாயத்தை தமது ஜீவனோபாயத் தொழிலாகக் கொள்வதுடன் முக்கிய வருமானம் தரக்கூடிய தொழிலாகவும் கொண்டு செயல்படுகின்றனர். பொதுவாக இங்கு உற்பத்தி செய்யப்படும் நெல், மிளகாய், தானியங்கள், மரக்கறி, மந்தை வளர்ப்பு தங்களது சொந்தத் தேவைக்கு ஒதுக்குவதுடன் மீதியை குறிப்பாக பெரும்பாலானவர்கள் தங்களது தொழில்

முயற்சிக்கான முதலவீடாகவும் கொண்டு செயற்பட்ட வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வடமாகாண முஸ்லிம்களைப் பொறுத்தவரை வியாபாரம் மிகவும் விரும்பிச் செய்கின்ற ஒரு தொழிலாக கொண்டு செயற்பட்டு வந்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளமையைக் குறிப்பிடலாம். குறிப்பாக வடமாகாணத்தின் முக்கிய நகரங்களான யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் போன்ற நகரங்களின் வியாபார நடவடிக்கைகள் முஸ்லிம்களின் கைவசமே இருந்து வருகின்றது. வியாபாரத்தை நேர்மையாகவும், சிறப்பாகவும் செய்து இலங்கையில் பொருளாதார விருத்திக்கு கணிசமான பங்காற்றியுள்ளமையை குறிப்பிடலாம். இலங்கையில் பொருளாதார விருத்திக்கு கணிசமான பங்காற்றியுள்ளமையை குறிப்பிடலாம். இலங்கையின் சகல விபார ஸ்தாபனங்களும் பொது போக்குவரத்துடனும் இரவு 10.00 மணிவரை செயல்படும் இடமாக மன்னார் இருப்பதற்கு முஸ்லிம்களே காரணமாகும்.

மேலும் இலங்கையில் குறிப்பாக வடமாகாணத்தில் அடிக்கடி ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளின் போது இம்மாகாணத்தின் மக்களின் அடிப்படைத் தேவைகள் இனங்கண்டு பூர்த்தி செய்வதில் முஸ்லிம்கள் பெரும் பங்காற்றியுள்ளார்கள். குறப்பாக தமிழ் சகோதரர்கள், சிங்கள பிரதேசங்களுக்கு சென்று வர முடியாமை இம்மாகாண முஸ்லிம்களே உதவினர். அதனை விடவும் மன்னார் மாவட்டத்திற்கும் ஏனைய மாவட்டத்திற்கும் இடையிலான தரைவழி தொடர்பு அற்றிருந்த போதிலும் கடல் வழியாக உரிய வேளையில் பொருட்களைக் கொண்டு வந்து விற்பனை செய்தமையை இங்கு குறிப்பிட்டாக வேண்டிய நிலையுள்ளது.

வடமாகாணத்தின் கல்வி அபிவிருத்தியில் யாழ்ப்பாணம், மன்னார், மாவட்டங்களின் முஸ்லிம்கள் கணிசமான அளவு பங்காற்றி யுள்ளார்கள். யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியும், மன்னார் மாவட்டத்தில் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரி, எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி, விடத்தல் தீவு முஸ்லிம் வித்தியாலயம், மன்னார் அல்-அஸ்ஹர் மகளிர் வித்தியாலயம், முசலி மகளிர்

வித்தியாலயம் போன்ற பிரதான பாடசாலைகள் முக்கியம் வாய்ந்தவையாகும். ஆயினும் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியானது வைத்தியம், பொறியியல், முகாமைத்துவம், வணிகம், கலை போன்ற பல துறைகளிலும் பல்வேறு அறிஞர்களையும், விற்பனர்களையும் உருவாக்கிய பெருமையை தன்னகத்தே கொண்டுள்ளது. இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் இக்கல்லூரியில் தேறி இன்றும் பல்வேறு உயர் பதவிகளில் வகிக்கின்றமையை குறிப்பிடலாம்.

1990க்கு முற்பட்ட காலப் பகுதியானது கல்வி அபிவிருத்தி ஒரு தனியிடத்தைப் பெற்றாலும் முஸ்லிம்களில் தனித்துவ வரலாற்றில் இடம்பெற்ற 1990ம் ஆண்டு இடம் பெயர்வானது பல்வேறு தாக்கங்களைக் கொண்டதாக அமைந்தாலும் முஸ்லிம்கள் இடம் பெயர்ந்த மாவட்டங்களில் தமது தனித்துவ தன்மையை காப்பாற்றி வடமாகாண முஸ்லிம்களின் கல்வியை அழியாச் செல்வமாக மாற்றி வருகின்றமையையும் குறிப்பிடலாம். குறிப்பாக இடம்பெயர்வுக்கு பின்னர் மன்னார் அல்-அஸ்ஹர் மத்திய வித்தியாலயமானது முஸ்லிம் மாணவர்கட்கான உயர்கல்வியை வழங்குவதில் சிறப்பான இடத்தை வகித்த வருகின்றமை முஸ்லிம் கல்வி அபிவிருத்தியானது உயிரூட்டமாக உள்ளதை உணர்த்தி நிற்கின்றது. அத்தோடு யாழ்ப்பாணத்தின் பிரதான பாடசாலையான யாழ் / ஒஸ்மானிய கல்லூரியானது தனது வரலாற்று கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து செயற்படுவதற்கான ஆரம்ப ஏற்பாடு மேற்கொண்டு செயற்படுவதற்கான நடவடிக்கைகளையும் மன்னார் மாவட்டத்தின் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியும் பல ஆக்கபூர்வ நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றமை வடமாகாண முஸ்லிம்களின் கல்வி அபிவிருத்தியானது மெல்ல மெல்ல உயிரூட்டமானதாக மாறி வருகின்றமையை உணர்த்துகின்றது.

வடமாகான கல்வி அபிவிருத்தியில் குறிப்பாக கல்வி திணைக் களத்தினூடாக ஜனாப்களான Z.A. றஹீம், M.S.A. றஹீம், M.S.A. சரூர், A. சகாப்தீன், M.M. அபூபக்கர், K.M.வசீர், A.C. ஹக், N.M. ஜிப்ரி மன்னார் மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டு செயலாற்றிய வர்களின் முக்கியமானவர்களாவர். யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த

ஜனாப்களான M.M. மன்சூர், M.M. குத்தூஸ் ஆகியோர் முக்கியமானவர்களாவர். குறிப்பாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முது நிலை விரிவுரையாளர் M.M. ஹஸ்புல்லாஹ் அவர்களும் கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஜனாப் எம்.எம். அனீஸ் அவர்களும் கல்வித்துறையில் ஆற்றிய பங்களிப்பானது மிக முக்கியமானாகக் கருதப்படுகின்றது.

வமாகாண முஸ்லிம்களின் அரசியல் வரலாறானது ஒரு தனித்துவ தன்மையை புலப்படுத்துவதாக அமைந்து காணப்படுகின்றது. குறிப்பாக கடந்த பல தசாப்தங்களாக இலங்கையின் இரு பெரும் கட்சிகளை அடிப்படையாகக் கொண்டே செயற்பட்டு வந்ததை காணலாம். குறிப்பாக ஐ.தே. கட்சி, சீ.ல.சு. கட்சி ஆகியவற்றின் பிரதான அமைப்பாளர்களாக மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம்களே இருந்துள்ளனர். இத்தகைய தலைமைத்துவ செயற்பாடுகளினால் குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் அரசியல் சக்திகளாக முஸ்லிம்களே காணப்பட்டனர். அரசின் நிர்வாகச் சக்கரத்தை செயற்படுத்துவதில் குறிப்பாக முஸ்லிம்கள் பல்வேறு வகையில் ஈடுபட்டதை காணலாம். மன்னார் மாவட்ட மந்திரி அலுவலகத்தின் ஊடாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக விசேட சேவை உத்தியோகத் தர்களின் நியமனம், ஆசிரியர் நியமனங்கள் இத்தகைய அரசியல் நடவடிக்கைகளின் ஊடாக பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மன்னார் மாவட்டத்தின் அரசியல் வரலாறானது இரு பெரும் கட்சிகளை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டாலும் பல்வேறு தரப்பினர் அத்தகைய அரசியல் நடவடிக்கைகளை முன்கொண்டு சென்றமையை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக காலஞ்சென்ற ஜனாப் M.S.A. றகீம் ஐ.தே.கட்சியின் பிரதான அமைப்பாளராக இருந்ததுடன் மன்னார் மாவட்டத்தின் பிரதிநிதியாகவும் கடமையாற்றி பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து சென்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு ஜனாப்களான அக்பர், M.A. காதர், கபூர், ஐயூப், சமது போன்றோரைக் குறிப்பிடலாம். குறிப்பாக இடம் பெயர்வுக்குப் பின் ஜனாப் நூர்தீன் மசூர், ஜனாப் B.A. றிஷாட் ஆகியோர் ஆற்றிய பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். குறிப்பாக தமிழ், முஸ்லிம் உறவினை வளர்ப்பதில்

இவ்விருவரினதும் பங்களிப்பானது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மன்னார் மாவட்டத்தின் நிருவாக செயற்பாடுகளில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜனாப் M. மக்பூல் அவர்களின் காலப்பகுதியானது பல்வேறு பிரச்சினைகளை கொண்டதாக காணப்பட்டாலும் தமிழ், முஸ்லிம் உறவினை ஒரு முறைமைப்படுத்திய முறையில் ஒழுங்கமைத்து செயற்படுத்திய பெருமை அவரைச் சாரும். இக்காலப்பகுதியானது பல்வேறு ஆயுதக்குழுக்களின் ஆக்கிரமிப்புக்குட்பட்டிருந்த போதிலும் எல்லோரையும் ஒரே நோக்கில் கருதி அதனூடாக சமாதான செயற்பாடுகளை முன்னிறுத்தி இலங்கை இராணுவத்தினரையும் ஏனைய படையினரையும் ஒருங்கிணைத்து செயலாற்றியதுடன் அக்காலப்பகுதியில் மக்களின் அடிப்படைத் தேவைகளை ஒழுங்கமைத்து அவற்றை சீரான முறையில் வழங்கவும், மக்களின் நாளாந்த நிருவாக செயற்பாடுகள் ஒழுங்குற நடைமுறைப்படுத்தவும் பல நிருவாக அமைப்புகளினூடாக கொண்டு செல்வதில் அரும்பணியாற்றியவராவர்.

மன்னார் மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட பலர் இன்று இலங்கையின் நிருவாக சேவையில் பல்வேறு பவிகளில் பணியாற்றி வருகின்றனர். குறிப்பாக ஜனாப்களான மரிக்கார், தாஜிதீன், மொஹினிதீன், அல்லாம், முகைஸ், ஜனாபாக்களான உளிதாபேகம், ஹினாயா போன்றோரும் பெரும் பணியாற்றியதோடு வடமாகாணத்தின் அபிவிருத்திப் பணியில் தங்களையும் இணைத்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

1990ம் ஆண்டு இடப்பெயர்வுக்கு பின்னரும் கூட அரசியல் வரலாறு பல்வேறு விதமாக மாற்றமடைந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக முஸ்லிம்களின் அரசியல் பிரவேசத்தின் ஊடாக பல தமிழ் கிராமங்கள் கூட அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. வடமாகாணத்தில் அரசியல் வரலாற்றில் தேசிய மீலாத் விழா நடைபெற ஏற்பாடாகி யுள்ளமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக குறிப்பிட வேண்டியுள்ளது. அதாவது முஸ்லிம்களின் அரசியல் நடவடிக்கைகள் வடமாகாண பொருளாதார அபிவிருத்தியில் பல்வேறு முத்திரைகளைப் பதித்துள்ளது.

வடமாகாணத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடு களில் 1990 க்கு முன்னும் பின்னரும் பெரியமடு கிராமத்தில் உருவாக் கப்பட்ட கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் செயற்பாடானது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நிறுவனமானது இன, மத, அரசியல் வேறுபாடின்றி போரினால் பாதிக்கபட்ட சகலருக்கும் ஆற்றிய சேவையானது வரலாற்று தடயங்களில் பதிக்கப்பட வேண்டியவையாகும். பல்வேறு சிரமங்களுக்கும் உயிர்களை விலை கொடுத்தும் 1990ம் ஆண்டு காலப்பகுதியில் வடமாகாணத்திற்கும் இலங்கையின் மற்றைய மாகாணங்களுக்குமிடையிலான தொடர்புகள் அறுந்திருந்த காலப் பகுதியில் மக்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும்பங்காற்றியுள்ளமை இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய அம்சமாகும். 1990ம் ஆண்டுக்கு பின்னரும் கூட இந்நிறுவனமும் இடம்பெயர்ந்து போரினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம், தமிழ், சிங்கள மக்களுக்கு பல்வேறு வகையான இருப்பிட, சுகாதார, கல்வி, வேலைவாய்ப்பு, பயிற்சி போன்ற விடயங்களில் கவனம் செலுத்தியமை முக்கிய அம்சமாக குறிப்பிட வேண்டியுள்ளது. மேலும் இடம்பெயர்வுக்கு பின்னர் மீளக்குடியேறிய முஸ்லிம்களுக்கு வேண்டிய பல அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதிலும் கிராம அபிவிருத்தி நிறுவனமானது முன்னின்று உழைத்து வருகின்றமை முக்கிய மானதாகும்.

இந்நிறுவனங்களோடு CTF, ICRC, ISC போன்ற நிறுவனங்களும் இடம் பெயர்ந்த, அல்லலுற்ற மக்களின் தேவைகளை நிறைவு செய்வதில் முக்கிய பங்காற்றி வருகின்றன. வடமாகாணத்தின் பல்வேற பிரதேசங்களிலும் மக்களின் தேவைகள் இனங்காணப்பட்டு பல்வேறு வகையான திட்ட அமுலாக்க முறைகள் செயற்பட்டு வருகின்றன.

போக்குவரத்து துறையை பொறுத்தவரை இடம்பெயர்வுக்கு முன்னர் வடபிராந்திய போக்குவரத்து சபையின் இயக்குநர் சபையில் மன்னார் மவட்டத்தைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் அவற்றில் அங்கம் வகித்ததோடு வடமாகாணத்தின் போக்குவரத்து பாதைகளில் பஸ் பிரயாணங்களை ஒழுங்குபடுத்தவும் சீராண வகையில் அவற்றை செயற்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. குறிப்பாக மன்னார் பெரியமடு பஸ் சேவையும், வவுனியா பெரியமடு சேவையும், மன்னார் கொண்டச்சி பஸ் சேவையும் நீடிப்புச் செய்யப்பட்டதொரு

அவற்றினை முறைப்படுத்தவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

வடமாகாண போக்குவரத்து சபையின் நடவடிக்கையினை ஒழுக்கமைக்கவும் சீராக்கவும் அமைக்கப்பட்ட வடபிராந்திய போக்கு வரத்து இயக்குனர் சபையில் ஜனாப்களான எம்.எம். நிஹ்மத், என்.எம். சரூர், எம்.எம். கபூர் போன்றோர் பல்வேறு சந்தர்ப்பங்களில் கலந்து பல்வேறு துரித நடவடிக்கைகளை போக்குவரத்து சம்பந்தமான விடயங்ளில் பங்களிப்பு செய்துள்ளனர்.

மருத்துவ துறையைப்பொறுத்த வரையில் ஜனாப்களான ஜவ்பர், அக்பர், பரீத், சாஜஹான், தஸ்கீர், றஹீம் போன்றவர்கள் இடம்பெயர்வுக்கு முன்னிருந்தே வடமாகாண, குறிப்பாக மன்னார் மாவட்டத்தின் மருத்துவத்துறைக்கு பெரும் பங்காற்றியவர்களாவர். அதன் பின்னர் மன்னார் மாவட்டத்திலிருந்து பல மருத்துவர்கள் வெளியேறி இலங்கையின் பல பாகங்களில் சேவையாற்றி வருகின்றனர். முஸ்லிம்களைப் பொறுத்தவரை இடம்பெயர்வு ஒரு தடைக்கல்லாக இருந்த போதிலும் மருத்துவத்துறையில் பிரவேசித்த மாணவர்களின் எண்ணிக்கையானது குறைவாக இருந்த போதிலும் அத்துறையில் இன்று பல்வேறு உயர் பதவிகளில் பலர் காணப்படுவது ஒரு முக்கிய வரலாற்று அம்சமாகும்.

அரச நிதி, கணக்காய்வு போன்ற விடயங்களில் மன்னார் மாவட்டத்தைசச் சேர்ந்த ஏ.எம். ஜவாமில், வி.எம். அமீன், எஸ். சதகத்துல்லாஹ் போன்றோர் இன்றும் இத்துறையில் உயர் நிலையில் காணப்படுகின்றனர்.

நீதி சம்பந்தமான விடயங்களிலும் மன்னார் மாவட்டத்தில் பல கிராமங்களிலுள்ள பல முஸ்லிம்கள் கவனஞ் செலுத்தியுள்ளனர். குறிப்பாக ஜனாப்களான சபூர்தீன், அபூதாகிர், தாகிர், ஏ.எம். பாயிஸ், சப்ரி போன்றோர் முக்கியமானவர்களாவர்.

அத்தியாவசியச் சேவைகள், மனிதாபிமான உதவிகள் போன்ற விடயங்களில் குறிப்பாக இடம்பெயர்வுக்கு முன்னரும் பின்னரும் பலர் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக சர்வதேச

நிதி நிறுவனங்களில் கடமையாற்றும் ஜனாப். M.M. நிஹ்மத், எஸ்.ஸ்.எம். ஹக்கீம் போன்றோருடன் ஜனாப்களான ஏ.எம். ஜவாமில், எஸ்.எம். சபூர்தீன், என்.எம். சபூர், எம்.எம். நிஸார், எஸ். நௌசாத், ஏ.சி.எம். மஹ்ரூப், ஏ.எல். பரீட், எஸ்.எம். பிர்தௌஸ், எம். றபீக், ஏ. செய்யது முகம்மது, எம்.எம். மர்சூக், பி.எம். றாசீக், ஏ.எம். பாயிஸ், எம்.எம் . மிஹ்லார், ஏ. றாபி ஆகியோரையும் குறிப்பிடலாம்.

கிராம மட்ட அபிவிருத்தி பணியில் ஜனாப்களான அக்பர், அபூபக்கர், எம்.எம். நிஹ்மத், கே.எம். பாயிஸ் சகாப்தீன் போன்றோரை மிக எளிதில் மறந்து விட முடியாது.

பல பிரதேசங்களில் மாவட்டங்களுக்கிடையிலான சேவைகளை துரிதப்படுத்தவும் அவ்வமையம் போர்க்குவரத்து அமைச்சராக இருந்த கௌரவ எம்.எச். முகம்மது அவர்களுடான பல கலந்துரையாடல்களை மேற்கொள்ள காலஞ்சென்ற ஜனாப். ஏ. கபூர் அவர்களின் உதவியோடு போக்குவரத்து சேவைகள் சரியான முறையில் அமைக்கப் பட்டமையால் மக்கள் பல அனுகூலங்களை பெறக்கூடியதாக இருந்தது. அத்தோடு இடம்பெயர்வுக்கு பின்னரும் குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் அரச போக்குரத்து முறையினை ஒழுங்குபடுத்துவதில் முஸ்லிம்களின் பங்களிப்பு திருப்திகரமானதாக காணப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக வடமாகாணத்தின் அபிவிருத்திக்கு முஸ்லிம்களின் பங்களிப்பானது கீழ்வரும் விகிதாசாரத்தில் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மொத்தத்தில் வடமாகாண முஸ்லிம்கள் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றியுள்ளமையை எளிதில் மறந்து விட முடியாதளவுக்கு உள்ளது வெள்ளிடை மலையாகும்.

எதிர்காலத்திலும் வடமாகாணத்தின் அபிவிருத்தியில் முஸ்லிம்களின் பங்களிப்பானது சிறப்பானதாக அமைய இறையை வேண்டுவதோடு எல்லோரினதும் பங்களிப்பை பெற்று அபிவிருத்திக்கு இட்டுச் செல்ல நமது தலைமைகள் முன்வர வேண்டும்.

# மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியும் பண்பாடும். முஸ்லிம்களின் தாய்மொழி தமிழாக இருப்பதற்கான காரணங்கள்

- மஹ்மூதா ஹபீபு முஹம்மது -

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மன்னார் மிக முக்கியமான தோர் இடத்தை வகித்துவருகிறது. ஏனெனில் வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையில் நோக்கும்போது மன்னார் தீவில் குடியமர்ந்த ஆதிக்குடிவாசிகளுடனான வரலாற்றையுடையவர்களே முஸ்லிம்களாவர். இத்தீவில் முஸ்லிம்கள் 13 நூற்றாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதற்கு உறுதியான சான்றுகள் உள்ளன என வரலாற்று ஆசிரியரான ஜோன்சன் கூறுகிறார் (Johnson 1827)

முஸ்லிம்களின் முன்னோர்களான அரேபியர்கள் சங்க காலத்தி லிருந்தே தென்னிந்தியத் துறைமுகப் பட்டினங்களுக்கு வந்து வாணிபத்தில் ஈடுபட்டார்கள். இவர்கள் இராமநாதபுர மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளில் முதலில் குடியமர்ந்த இடங்கள் குறிப்பாக கீழைக்கரை, தேவிபட்டினம், மண்டபம், பாம்பன் உள்ளிட்ட சில இடங்களாகும். இவர்கள் வசிப்பதற்குத் தேர்ந்தெடுத்துக் கொண்ட இவ்விடங்கள் இலங்கையுடனான வர்த்தகத் தொடர்பு வசதியைக் கருத்தில் கொண்டதாக அமைந்தன. (ஆதாரம் : இராசநாதபுர கெஸட்டீர், முன்னுரை பக் - 7)

மேற்கூறிய இராமநாதபுர மாவட்டம் சோழர் மன்னர்களின் ஆட்சிக் குட்பட்ட பிரதேசமாகும். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் சங்கம் அமைந்துத் தமிழை வளத்தவர்களாகும். அவர்களின் அரசமொழி தமிழாகவிருந்தது, வணிக மொழியும் தமிழாகவேயிருந்தது. தமிழ் மொழியைப் பேசிவந்த தென்னிந்தியத் துறைமுகப்பட்டினங்களில் வணிகத்தின் பொருட்டுக் குடியமர்ந்த அரேபிய வழித் தோன்றல்களும் தமிழைப் பேசக்கற்றுக் கொண்டார்கள்.

அரேபிய, இந்திய வம்சாவழியினர் கி.மு. 300 ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையின் வடமேற்குக் கரையிலுள்ள துறைமுகப் பட்டினங்களில் வணிகத்தில் ஈடுபாடுடையவர்களாகவிருந்து, இவ்விடங்களில் தமது குடியிருப்புக்களையும் ஆக்கிக் கொண்டார்கள் என்ற தகவலை முகம்மது சமீம் எழுதியுள்ள 'ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சினைகள்' என்ற நூலிலிருந்து அறிய முடிகிறது. இது அரேபியாவில் இஸ்லாமிய எழுற்சி தோன்றுவதற்கு நீண்ட காலத்திற்கு முற்பட்ட நிகழ்வாகும்.

இவ்வாறு இலங்கையின் வடமேற்குக் கரையிலுள்ள யாழ்ப்பாணம், மன்னார் (எருக்கலம்பிட்டி, மினாரா), மாந்தை, மாந்தோட்டம், குதிரைமலை, புத்தளம் ஆகிய இடங்களில் குடியேறிய அரேபிய - இந்திய வம்சாவழியினர் இப்பிரதேசங்களிலும் தமிழையே தமது தாய்மொழியாகக் கொண்டு வாழ்ந்தனர். இஸ்லாத்தின் எழுற்சியின் பின்னரும் முஸ்லிம்களின் தாய்மொழி தமிழாகவே இருந்து வந்தது.

கி.பி. 643ஆம். ஆண்டு (ஹிஜ்ரி 21ல்) இஸ்லாத்தின் இரண்டாவது கலீபாவாகிய உமர் (றழி) அவர்கள் காலத்தில் மாலிக் இப்னு தீனார் (ரஹ்) அவர்கள் தலைமையில் இஸ்லாமிய பிரச்சாரத்திற்கென ஒரு குழு கப்பல் மார்க்கமாக கேரளம் வந்தது. இக்குழு காயல் பட்டினத்திலும் கடலோரமாக ஒரு பள்ளிவாசலைக் கட்டி இஸ்லாத்தைப் பரப்பியது என்ற தகவலை கலாநிதி அல்-ஹாஜ் ஆர்.எஸ். அப்துல் லதீபு தந்துள்ள குறிப்பில் பெற முடிகிறது. டாக்டர் தைக்கா சாகிப் ஆலிம் தந்துள்ள குறிப்பின்படி 9ஆம் நூற்றாண்டில் (கி.பி 843 – 854) முகம்மது கில்ஜி தலைமையில் வந்த முதல் அறபு முஸ்லிம்களின் குடியேற்றம் காயல் பட்டினப்பகுதியில் நிகழ்ந்தது.

என்றும் இவர்கள் கீழைக்கரையையும் தமது வதிவிடமாக ஆக்கிக் கொண்டனர் என்றும், தமிழகத்திலும் இலங்கையிலும் தனித்துவமிக்க முஸ்லிம் சமுதாயமொன்றினை (Arwil) உருவாக்கிட அடிகோலினர் என்றும் குறிப்பிட்டுள்ளார் (Mohamed 2004:28)

கீழைக்கரை, காயல்பட்டினம் என்பன தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பிரதேசங்களாகும். இங்கு குடியேறிய அரேபிய முஸ்லிம்கள் தமிழைப் பேசக்கற்றுக் கொண்டனர். இவர்கள் இலங்கையின் வடமேற்குப் பிரதேசங்களில் இஸ்லாத்தையும், தமிழையும் கொண்டு சென்றார்கள் என்று கூறின் அது தவறன்று.

ஜோன்ஸ்டன் என்பவரின் கூற்றுப்படி, 8ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அப்துல் மலிக் பின் மர்வான் கலீபாவாகப் பதவியேற்ற காலத்தில் ஹாஸிம் கிளையைச் சேர்ந்த (றசூல் (ஸல்) அவர்களின் வம்சத்தினர்) அரேபியர்கள் நாடுகடத்தப்பட்டு இலங்கையையடைந்து, திருகோண மலை, யாழ்ப்பாணம், மாந்தோட்டம், மன்னார், குதிரைமலை, புத்தளம், கொழும்பு, பேருவளை, காலிமுகம் ஆகிய இடங்களில் குடியேற் றத்தை அமைத்துக்கொண்டார்கள் எனக்குறிப்பிடுகிறார். (Jonson - 1827). ஆரம்பகாலங்களில் அரேபியாவிலிருந்து வந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கிலேயே இருந்ததென்றும், அவ்வாறு வந்தவர்கள் பெரும்பாலும் ஆண்கள்தான் என்றும், அவர்கள் எங்கெங்கே குடியமர்ந்தார்களோ அப்பிரதேசங்களில் வாழ்ந்திருந்த பெண்மணிகளைத் துணைவியர்களாகக் கொண்டனர் என்றும், தமிழ்ப் பெண்களை மணந்தமையால் முஸ்லிம்களின் தாய்மொழி தமிழாக இருந்து வருகிறது என்று அரசரெத்தினம் குறிப்பிடுகிறார் (Arasaratnam 1964:119)

12ஆம் - 14ஆம் நூற்றாண்டில் தென்கிழக்கு ஆசிய கடல் வணிக வர்த்தகம் முஸ்லிம்களின் கையில் இருந்த போது தமிழே வணிக மொழியாக இருந்தது. ஆகவேதான் முஸ்லிம்களின் தாய் மொழி தொடர்ந்தும் தமிழாக இருந்து வந்திருக்கிறது என அரசரெத்தினம் மேலும் குறிப்பிடுகிறார் (Arasaratnam 164:120)

இத்தகைய ஆதாரங்களின் மூலம் நாம் விளங்குவது யாதெனின்

8ஆம் நூற்றாண்டில் அரேபியாவில் தோன்றிய இஸ்லாமிய எழுற்சிக்கு முன்னர் மன்னார் பிரதேசத்தில் வணிகர்களாக, முத்து, சங்கு குளிப் பவர்களாக, ஏற்றுமதி, இறக்குமதிச் சேவையில் படகோட்டிகளாகத் தொடர்புபட்டிருந்த அரேபிய - இந்திய வழித்தோன்றல்களும், அரேபியாவிலிருந்து இலங்கைக்கு வந்து குடியமர்ந்த ஹாஸிம் குல முஸ்லிம்களும் தமிழையே தாய்மொழியாகக் கொண்டனர் என்பதாகும்.

சிங்களப் பிரதேசங்களில் குடியமர்ந்த ஹாஸிம் குல அராபிய முஸ்லிம்கள், அப்பிரதேசங்களில் வாழ்ந்திருந்த சிங்களப் பெண்மணி களைத் துணைவியர்களாகக் கொண்டனர். எனினும் அவர்களின் தாய்மொழியும் தொடர்ந்து தமிழாகவே இருந்து வருகிறது. அரபு – தமிழ் மொழி நடையே இதற்குக் காரணமாகும் என்பது குறிப்பிட வேண்டிய முக்கிய அம்சமாகும். இது பின்வரும் தொடர்பில் விரிவாக விளக்கப்படும்.

## *மன்னார் பிரதேச முஸ்லிம்களின்*<br>*கல்வி வளர்ச்சியும் பண்பாடும்*

**அறிமுகம்:**

இலங்கையில் வாழ்ந்துவரும் முஸ்லிம் சமுதாயத்தின் தாய்மொழி தொடர்ந்து தமிழாக இருந்து வந்ததற்கான காரணங்கள் முன்னர் கூறப்பட்டன.

அத்தமிழ் மொழிக் கல்வி மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் மத்தியில் எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்பது பற்றி இவ்வத்தியாயத்தில் விரிவாக ஆராயப்படுகிறது.

மானியமுறைச் சமுதாயத்தில் நிலவி வந்த கல்வி முறை மன்னார் மாவட்டத்திலும் பின்பற்றப்பட்டது பல மார்க்க அறிஞர்களால் திண்ணைப் பள்ளிக்கூட முறைகள் பின்பற்றப்பட்டு வந்தன. அல்-குர்ஆனை வாசிக்கக்கூடிய அரபு மொழியின் ஆரம்ப அறிவைப் போதிப்பதே இத்திண்ணைப் பள்ளிகளின் நோக்கமாகவிருந்தது.

இத்துடன் இஸ்லாமிய அனுட்டானங்களுக்குத் தேவையான அறிவை அரபு – தமிழ் மொழியிலான நூல்கள் வாயிலாகக் கற்றுக் கொடுக்கப்பட்டது. ஐங்காலத் தொழுகைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு முஸ்லிம் கிராமங்களிலும் பள்ளிவாசல்கள் அமைக்கப்பட்டு வந்ததால், திண்ணைப் பள்ளிக்கூடங்களாக இயங்கி வந்த நிலை மாறி, பள்ளிவாசல்களோடு அரபு மத்ரஸாக்கள் இணைக்கப்பட்டன. பள்ளிவாசல்களில் தொழுகை நடாத்தும் பேஷ் இமாம்களாலேயே இவ் அரபு மத்ரஸாக்களும் நடாத்தப்பட்டு வந்தன.

மன்னார் மாவட்டத்தில் குடியேற்றத்தை அமைத்துக் கொண்ட தென்னிந்திய வழித்தோன்றல்களான முஸ்லிம்களில் பலர் தமிழில் பாண்டித்தியம் உடையவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இத்தகைய வர்கள் திண்ணைப் பள்ளிக்கூடங்களை அமைத்துத் தமிழ் மொழியைக் கற்பித்து வந்திருக்கிறார்கள். இத்தகைய கல்வி முறை இலக்கிய செய்யுள் நூல்களுக்கு விரிவுரை வழங்க வல்ல அறிஞர்களையும், சந்தம் நிறைந்ததும் இலக்கணப் பிழைகள் அற்றதுமான பாக்களை இயற்றவல்ல புலவர்களையும் உருவாக்கித் தந்தது. இத்தகைய அறிஞர் பெருமக்கள் மன்னார் மாவட்டத்திலுள்ள ஏனைய முஸ்லிம் கிராமங்களிலும் வாழ்ந்திருக்கிறார்கள்.

எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் வாழ்ந்திருந்த, மதுரைத் தமிழ் சங்கத்தினரால் புகழப்பட்டிருந்த பக்கீர் புலவர், விதானைப் புலவர் ஆகியோர்கள் இவ்வாறு திண்ணைப் பள்ளிக்கூடத்திலிருந்து உருவாக்கப்பட்ட புலவர்காளாவார்கள். பக்கீர் புலவர் காந்தரூபி நாடகம், கபுகாபு நாடகம் போன்ற செய்யுள் காவியங்களை இயற்றி யிருக்கிறார். விதானைப்புலவாரால் 'யானைக்காதல்', "சந்தைப்பாட்டு ஆகிய நூல்கள் இயற்றப்பட்டன.

முசலிப் பிரதேசங்களிலும் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் உருவான பல புலவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அதில் கொண்டச்சி சீரீபுப் புலவர் மிகப் பிரபலமானவர். இவர் நொண்டிப்புலவர் என்றும் அழைக்கப்பட்டார். புராண விரிவுரைகள் நிகழ்த்துவதில் வல்லவர். நினைத்த மாத்திரத்தில் பாடும் 'வரகவி' யாவார். நெய்னா முகம்மது மரைக்காயர் புலவர் பண்டார வெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

சீட்டுக்கவி, வழிநடைச்சிந்து, பிரார்த்தனைப் பாடல்கள் போன்றவற்றை இயற்றியுள்ளார். பண்டாரவெளியைச் சேர்ந்த கிதுரு முஹம்மது மரைக்காயர் என்பவரும் இயற்கைக் கவிப் புலமைமிக்க ஒரு புலவராக வாழ்ந்திருக்கிறார். கூளாங்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜமால்தீன் புலவர் மக்களின் வறுமை நிலை, சமூக விரோதச் செயல்கள், ஏக இறைவனின் வல்லமைகள் என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட பல பாடல்களைப் பாடியிருக்கிறார்.

புது வெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரசித்த நொத்தாரிசான முகிதீன் சாகிபு மரைக்காயர் புலவர் சிறுவயதினராக இருக்கும் போதே கவிபாடும் திறமை பெற்றிருந்தார். இவர் கொடுக்கல், வாங்கல், மக்களின் நாளாந்த நடவடிக்கைகள், உளப்பாங்கு போன்றவைபற்றிய பல சிறந்த பாடல்களைப் பாடியுள்ளார். இறைபக்திமிக்க இவரின் பாடல்களில் அநேகமானவை இஸ்லாமிய நம்பிக்கையோடு இணைந்த அம்சங்களைப் பின்பற்றிப் பாடப் பட்டவையாகும். இதே போன்ற புலவர்கள் மாந்தைப் பிரதேசங்களிலும், மன்னார் தாராக்குண்டு, புதுக்குடியிருப்பு, கரிசல் ஆகிய இடங்களிலும் வாழ்ந்திருக்கிறார்கள்.

## கல்வி வளர்ச்சி

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முறையான கல்விப் போதனை முறைகள் ஆரம்பிக்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தில் கத்தோலிக்க பிரச்சாரச் சபையினால் பல ஆரம்பப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. மன்னார் பட்டினத்தில் 'நல்லாயன்' என்ற பெயரில் ஒரு கிறீத்தவ ஆரம்பப் பாடசாலை உதயமானது. 5ஆம் வகுப்புவரையும் கல்வி போதித்து வந்த இப்பாடசாலையில் 1930 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 8ஆம் வகுப்புவரையும் கல்வி போதிக்கப்பட்டு வந்தது. அதே போன்றதொரு கத்தோலிக்க ஆரம்பப்பாடசாலை கரிசலிலும் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் விடத்தல்தீவில் றோமன் கத்தோலிக்க ஆரம்பப் பாடசாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. கத்தோலிக்க பாடசாலையில் கல்வி கற்கச் சென்றால் மதம் மாற்றம் செய்யப்படுவார்கள் என்ற கருத்து முஸ்லிம் பெற்றார்கள் மத்தியில்

நிலவியதால், கத்தோலிக்க பாடசாலைகளுக்கு முஸ்லிம் பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்புவதில்லை. கல்வியின் காரணமாவும், உத்தியோகம் காரணமாகவும் யாழ்ப்பாணத்தில் இந்துக்கள் பலர் கிறீஸ்தவர்களாக மதமாற்றம் செய்யப்பட்ட சம்பவங்கள் போத்துக்கேய, ஒல்லாந்து, ஆங்கில காலனித்துவ ஆட்சிகாலத்தில் நடைபெற்று வந்தன என்பது பகிரங்க உண்மைகளாகும்.

மன்னார் நல்லாயன் பாடசாலையில் கல்வி கற்ற பல முஸ்லிம் மாணவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆனார்கள். மர்ஹூம்களான ஹாஜா முகைதீன், அப்துல் ஹமீது, முகம்மது சுல்தான், ஹுசைன், அப்துல் சலாம், காதர் ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்களாகும். இக்காலப் பகுதியில் எருக்கலம்பிட்டியிலும் மீராசாகிபு நபிஸா (முதலாவது முஸ்லிம் பெண்), மர்ஹூம் K.M. சரீபு ஆகியோர் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆனார்கள். விடத்தல்தீவிலும் பலர் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆனார்கள். மர்ஹூம்களான எம்.எம்.எல் மரைக்கார், எம். முகம்மதலி ஆகியோர்களைக் குறிப்பிடலாம்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலங்களில் யாழ்ப்பாணத்தில் ஆங்கில மொழி மூலப்பாடசாலைகள் தனியார் பாடசாலைகளாக இயங்கி வந்தன. அவற்றுள் மத்திய கல்லூரியும் ஒன்றாகும். அதே போன்று கொழும்பு ஸாஹிராக் கல்லூரியும் இயங்கி வந்தது. மன்னார் மாவட்டத்திலிருந்த கல்வியில் ஆர்வமிக்க முஸ்லிம்கள் பலர் இக்கால்லூரிகளுக்குச் சென்று கற்றார்கள். அதன் பேறாகப் பலர் அரச உத்தியோகத்தர்களாகவும், வைத்தியர்களாகவும், சட்டத் துறையைச் சார்ந்தவர்களாகவும் ஆனார்கள். மர்ஹூம் அபூதாகிர் புரக்டராக ஆனார். அதே போன்று ஹமீது, சாகுல் ஹமீது ஆகியோர் வைத்தியர்கள் ஆனார்கள். மீன்பிடி இலாகா, விவசாய இலாகா, தபால் தந்தி இலாகா, போன்ற அரச தாபனங்களில் கடமையாற்றிய பலர் உயர் பதவிகளைப் பெற்றார்கள். மீன்பிடி இலாகாப் பரிசோதகர் கௌத், குள உடையார் மரைக்கார், தபால் தந்திப் பரிசோதகர் மரைக்கார் ஆகியோர்கள் குறிப்பிட வேண்டியவர்களாவார்கள். யாழ் மத்திய ககல்லூரியில் கல்வியைப் பெற்ற அபுல் காசிம் மரைக்கார் கேட் முதலியார் (Adigar) பதவியைப் பெற்று மன்னாருக்குப் புகழை ஈட்டித்தந்தார்.

இதே போன்று இக்கல்லூரியில் கல்வியைப் பெற்ற எம்.எஸ்.ஏ.றகீம் அரசியலில் ஈடுபட்டு, தொடர்ந்து பதினைந்து ஆண்டுகள் மன்னார் பட்டினசபையின் அங்கத்தவராகவும், அச்சபையின் தலைவராகவும் செயலாற்றி வந்தார். அதனைத் தொடர்ந்து 1970 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றுப் பாராளுமன்றத்திற்குச் சென்ற முதல் மன்னார் மாவட்ட முஸ்லிம் ஆனார். அதன் பின்னர் உயர் ஸ்தானிகர் பதவிபெற்று ஸம்பியா சென்றார். தனது பதவிக்காலம் முடிந்தபின் தாயகம் மீண்டு சில காலம் வாழ்ந்து இறையடி சேர்ந்தார். அவருடைய சகோதரர் அல்ஹாஜ் கே.எம். அக்பர் முஸ்லிம் கலாசார அமைச்சின் வக்புச் சபையின் அங்கத்தவராகப் பணியாற்றிய சமூக சேவையாளர் ஆவார்.

எருக்கலம்பிட்டி பெரிய ஹாஜியாரின் ஏக புதல்வன் அப்துல் காதர், யாழ் மத்திய கல்லூயில் கற்று இலிகிதர் சேவையில் இணைந்து புகையிரத இலாகாவில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது இறையடி சேர்ந்தார். மத்திய கல்லூரியில் கல்வி கற்ற சின்ன ஹாஜியாரின் மகன் றகுமத்துல்லா புகையிரத உதவியாளராக நேரிய குளத்தில் கடமையாற்றிய போது அகால மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

20ஆம் நூற்றாண்டில் மன்னார் பட்டினத்தில் கிறீஸ்தவ பிரச்சாரச் சபையாரால் ஸ்தாபிக்கபட்ட நல்லாயன் பாடசாலை சில ஆண்டுகளின் பின்னர் அர்ச்-சவேரியார் ஆண்கள் பாடசாலை, அர்ச்-சவேரியார் பெண்கள் கல்லூரி என இரு பாடசாலைகளாக உருப்பெற்றது.

இதேகாலப் பகுதியிலும் மன்னாரில் முஸ்லிம்கள் குடியேறியிருந்த பகுதியில் Father School என்ற ஆங்கில மொழி மூலப் பாடசாலை யொன்று அரசினரால் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தலையாசிரியராக திரு எட்வெட் பணியாற்றினார். சில ஆண்டுகளின் பின் இப்பாடசாலை கனிஸ்ட ஆங்கிலப் பாடசாலையாக (Junior School) தரமுயர்த்தப்பட்டு 1953 ஆம் ஆண்டளவில் அதே தரத்தில் இயங்கியது. இவ்வாண்டில் ஆங்கில மொழி மூல சிரேஷ்ட பாடசாலையாகத் (Senior English School) தரமுயர்த்தப்பட்டது. திரு ஜோசப் இதன் தலைமை ஆசிரிய ராகப் பணியாற்றினார். அவரைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தைச்

சேர்ந்த M.Y.M. யூசுப் என்பவர் இப்பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டார். இவருடைய காலத்தில் இப்பாடசாலை மகா வித்தியாலமாக தரமுயர்த்தப்பட்டது. 01.01.1959 ஆம். ஆண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியரான எம்.எம். மன்சூர் இப்பாடசாலையின் பதில் அதிபராக நியமிக்கப்பட்டு 1965ஆம் ஆண்டுவரை நற்சேவை செய்து வந்தார். இவர் செயற்திறனும், நிருவாகத்திறனும் அமையப் பெற்றவராக இருந்தமையால் இக்காலப் பகுதியில் பல கல்விமான்கள் இப்பாடசாலையிலிருந்து உருவாக்கப் பட்டார்கள். அன்றியும் அக்கால கல்வியமைச்சராகவிருந்த கலாநிதி W. தஹநாயக்கா அவர்களால் 1958 ஆம் ஆண்டு முதல் க.பொ.த (சா.த) பரீட்சையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்த முஸ்லிம் பெண்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. அன்றியும் பெண்களுக்கான அளுத்கமை ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியிலும் கணிசமான மாணவிகள் கல்விகற்கச் சென்றனர். இதன் காரணமாக இப்பாடசாலையில் கற்ற பலர் ஆசிரியர்கள் ஆனார்கள். சுல்தான், எச்.எம். நிஸாம், எச்.எம். றபீக், பாறூக் அனீஸ், அல்லாபிச்சை, கலைவாதி கலீல், செய்யது அப்துர் றகுமான், பிச்சை, ஏ.ஏ. சபீக், எம்.எம். ஜாபிர், அபூபக்கர், எச்.எம். சரீபு, உசன்சாகிபு, கபீர், அப்துல்காதர், எம்.எஸ்.ஏ. றகீம், மக்கீனா, குறைசா, சுபைதா, பாணு, செய்னுல் அரபு, ஹாஜரா, செய்னுபா, ஆர்.யு.எஸ். மரைக்கார், சித்தி நாச்சியா பீவி, கைறுன்னிஸா, ஆலம், தௌபீக் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

1972/73 ஆம் ஆண்டுகளில் பலாலி அரசினர் பயிற்சிக்கல்லூரியில் சித்திரத்துறையில் விசேட பயிற்சியைப் பெற்ற கலைவாதி கலீல் கல்வி ஆர்வத்தாலும், இலக்கியச் செயற்பாடுகளினாலும் முதன்மை வகித்தமையால் 1990 ஆம் ஆண்டு அளுத்கமை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். அன்றியும் இக்கலாசாலை 2001 ஆம் ஆண்டு கல்வியியல் கல்லூரியாக ஆக்கப் பட்டபோது இவர் உப பீடாதிபதியாக நியமனம் பெற்ற முதலாவது மன்னாரைச் சேர்ந்தவர் என்ற புகளுக்கு உரியவரானார். கவிதை உலகில் தனக்கொரு இடத்தைப் பிடித்துக்கொண்ட கலைவாதி கலீல் தாஜுல் உலூம் (பல்கலைவேந்தர்), கலாபூஷணம் ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டும், பொன்னாடை போத்தப்பட்டும், பொற்கிழி வழங்கப்

பட்டும் கௌரவிக்கப்பட்டார். அவருடைய மூத்த சகோதரரான எம்.ஏ. றகுமான் எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று ஆசிரியரானபின் சுய முயற்சியால் கல்வியைத் தொடர்ந்து வித்துவான் பட்டத்தைப் பெற்று, முஸ்லிம் சமுதாயத்தின் தனியொரு வித்துவானாகத் திகழ்ந்து எழுத்துலகில் பல கைங்கரியங்களை ஆற்றிவருகிறார்.

1965 ஆம். ஆண்டின் பின்னர் இக்கல்லூரியின் அதிபராகப் பதவியேற்ற எம்.எம்.ஏ. காதர் அவர்களின் முயற்சியினால் இப்பாடசாலை அல்-அஸ்ஹர் மகாவித்தியாலயம் என பெயர் சூட்டப்பட்டதோடு க.பொ.த (உ.த) விஞ்ஞான வகுப்புக்களையும் தொடங்கிக் கல்விச் சேவையைத் தொடர்ந்தார். தற்போது கொழும்புப் பல்கலைக்கழக வளாகத்தின் அரசியல் துறைப் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றும் வவுனியா பாவற்குளத்தைச் சேர்ந்த கலாநிதி M. அனீஸ் B.A. (Hon) Ph.D இப்பாடசாலை உருவாக்கிய கல்விமானாகும்.

திருமதி அஸீஸா சகாப்தீன் என்பவர் தொடர்ந்து இப்பாடசாலையின் அதிபராகவிருந்து பணியாற்றிய போது வன்செயல் காரணமாக 1990-10-20 ல் முஸ்லிம்கள் மன்னார் மாவட்டத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டதும், இப்பாடசாலை மூடப்பட்டது.

மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் அளப்பரிய பங்கினை அளித்திருக்கிறது என்று கூறின் அது மிகையாகாது.

1903 ஆம் ஆண்டு இக்கிராமத்தில் 1-3 வகுப்புகளுடனான அரசினர் கலவன் பாடசாலையொன்று திரு மாட்டீன் மாஸ்டரை அதிபராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1941ஆம் ஆண்டு கனிஷ்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு 1-8 வகுப்புகள் நடாத்தப்பட்டு வந்தன. அக்காலப் பெற்றார்கள் பெண் கல்வியில் ஆர்வம் காட்ட வில்லை. இதனால் பெரும்பான்மையான பெண்கள் 1ம், 2ம், 3ம், வகுப்புகளோடு கல்வியை முடித்துக் கொண்டார்கள். சில பெண்கள் 5ம் வகுப்புவரையும் கல்வியைத் தொடர்ந்தாலும் அவ்வகுப்புகளோடு கல்வியை முடித்துக்கொண்டார்கள். வயது வந்த பெண்கள்

ஆண்களோடு கல்வி கற்பதை அக்காலப் பெறறோர்கள் விரும்ப வில்லை.

1944 ஆம். ஆண்டில் அரசினால் கொண்டுவரப்பட்ட இலவசக் கல்வியின் பயனாக எருக்கலம்பிட்டி முஸ்லிம் கிராமத்திற்கு 6ஆம் வகுப்பிலிருந்து கற்பித்தல் ஆரம்பமாகும் ஆங்கில மொழி மூல மத்திய கல்லூரியொன்று சிபார்சு செய்யப்பட்டு, அப்பாடசாலை 01.09.1944ல் ஸ்தாபிக்கப்பட்டது. கனிஷ்ட பாடசாலையின் அதிபராக விருந்த திரு A.J. கணபதிப்பிள்ளை அதன் பதில் அதிபராக ஆக்கப்பட்டார். அதன்பின் 1959ஆம் ஆண்டு வரை தொடர்ந்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் ஆசான்கள் அதிபர் களாகக் கடமையாற்றி வந்தார்கள். 01.01.1946ல் நிரந்தர அதிபராகப் பதவியேற்ற திரு K. நவரெத்தினராசாவின் முயற்சியால் மத்திய கல்லூரி வளர்ச்சியடையத் தொடங்கியது. 5ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மன்னார் மாவட்ட மாணவர்களுடன், வவுனியா, முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களும் இப்பாடசாலையில் அனுமதிக்கப்பட்டதனால், வங்காலை, விடத்தல் தீவு, தாராக்குண்டு, புதுக்குடியிருப்பு போன்ற கிராமங்களிலிருந்தும் வந்த முஸ்லிம் மாணவர்களோடு இந்து, கிறீஸ்தவ மாணவர்களும் இணைந்து கல்விபெற்ற ஒரு சூழ்நிலை உருவானது. ஆரம்பப் பாடசாலைக் கட்டிடத்தின் ஒரு பகுதி வகுப்பறையாகவும், விடுதியாகவும் பாவிக் கப்பட்டு வந்தது. இக்காலத்தில் பெண்கல்வியும் ஊக்குவிக்கப்பட்டது. பெற்றார்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் 8 ஆம் வகுப்புவரை கல்வி கற்று வந்த செல்வி மீரா சாகிபு நபிசா, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்குச் சென்று இம்மாவட்டத்தில் ஆசிரியரான முதலாவது பெண்மணியானார். 1949 ஆம். ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற SSC தமிழ் மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றி, இக்கல்லூரியிலிருந்து சித்திபெற்ற எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஆப்தீன், அபூபக்கர், கையூம் றகுமத்துல்லா தாராக்குண்டைச் சேர்ந்த சித்தீக், சகீது ஆகியோர்கள் அளுத்கமை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவாகி பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆனார்கள். எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த தனவந்தர் O.M. கப்பப்பிச்சை தனது புதல்வியர்களான சரீபா, கரீமா ஆகியோரை கொழும்பு மகளிர் கல்லூரியில் மேற்படிப்புக்காச் சேர்த்தார். இத்தகைய செயல் பெண்கள்

மத்தியில் கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதால் கணிசமான பெண்கள் மத்திய கல்லூரியில் தொடர்ந்து கல்வி கற்க முன்வந் தார்கள். அம் மத்திய கல்லூரி புதிய கட்டிடத்திற்கு 1952 ஆம் ஆண்டு மாற்றப்பட்டது. இவ்வாண்டில் நடைபெற்ற ஆங்கில மொழிமூல SSC பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றிய பல மாணவர்கள் சித்தியடைந்தார்கள். இவ்வாறு சித்தியடைந்த மாணவர்களுள் கிறீஸ்தவ மாணவர்களும் இருந்தனர். வங்காலையைச் சேர்ந்த சூசைதாசன், விடேல், மொரைஸ், சவேரியான்லம்பேட், ஜேசுதாசன், சூசையப்புப் பீரிஸ், திருச்செல்வம் மொரைஸ், சோஷை ஆகியோர் அடங்குவர். திரு பி. சூசைதாசன் கல்வியைத் தொடர்ந்து பட்டயக் கணக்காளராக ஆகியதோடு மன்னார் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார். திருச்செல்வம் மொரைஸ், சூசையப்புப் பீரிஸ் ஆகியோர்கள் திருத்தந்தையர்கள் ஆனார்கள். பின்வரும் முஸ்லிம் மாணவர்களும் ஆங்கில மொழியில் SSC பரீட்சையில் சித்தியடைந்தார்கள். K.M. அபூபக்கர், S.A. கபூர், M.K. ஹபீபு முகம்மது, M.K. ஜமால்தீன், S.K. நூர்தீன், A.A. மஜீத், I. அப்துல்லாஹ், N.A. சுல்தான் ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். விடத்தல்தீவைச் சேர்ந்த I. அப்துல்லாஹ் உதவிவைத்தியரானார். K.M. அபூபக்கர் கல்வியைத் தொடர்து பட்டதாரியாகி கல்வியதிகாரி யானர். M.K. ஜமாலுத்தீன் லக்நோவுக்குச் சென்று பட்டதாரியாகி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் இருபத்தைந்து வருடகாலம் பணியாற்றி பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்று ஓய்வு பெற்றார். S.K. நூறுத்தீன் சட்ட வல்லுனரானார். M.K. ஹபீபு முகம்மது ஆசிரியராகி பட்டதாரியாகி இலங்கைக் கல்வி நிருவாக சேவையில் உள்வாங்கப்பட்டு அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். மற்றையோர்கள் இலிகிதர் சேவையிலும், ஆசிரிய சேவையிலும் இணைந்து பணியாற்றினார்கள்.

1957 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த பல பெண்கள் அளுத்கமை ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவானார்கள். செல்விகளான அஸீஸா, நபீஸா, ஜெமீலா, வாகிதா, ரசீனா ஆகியோர்கள் இவ்வாறு ஆசிரியர் பயிற்சிக்குச் சென்றவர்களாகும். கல்வியமைச்சர் கலாநிதி W. தகநாயக்க அவர்களின் சிபாரிசுக்கமைய க.பொ.த (சா/த) பரீட்சையில்

ஐந்து பாடங்களில் சித்தியடைந்த செல்விகளான ஹம்சா, மகுமூதா, ஆயிஷா, கசீனா போன்றோர் ஆசிரிய நியமனங்களைப் பெற்றார்கள். இவ்வாறு எருக்கலம்பிட்டி பெண் மக்கள் கல்வியில் ஆர்வம் காட்டியதன் காரணமாக பெண்களில் கணிசமான தொகையினர் கல்வி கற்க முனைந்தார்கள். பெற்றோர்களின் முயற்சியின் பயனாக 01.01.1961 தொடக்கம் பிரதம பாடசாலை ஒரு பெண் பாடசாலையாகவும் மத்திய கல்லூரி ஒரு ஆண் பாடசாலையாகவும் மாற்றியமைக்கப்பட்டது. இக்காலத்தில் திரு K. நவரத்தினராசா அதிபராகவிருந்தார்.

முஸ்லிம் பாடசாலைகள், முஸ்லிம் அதிபர்களால் நிருவகிக்கப்பட வேண்டுமென்ற 1958ஆம். ஆண்டின் கல்வியமைச்சின் சுற்று நிருபத்திற்கமைய 01.05.1959 தொடக்கம் 31.09.1964 வரை மன்னாரைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியரான Z.A. றகீம் பதில் அதிபராக கடமையாற்றினார். இக்காலப்பகுதியில் ஆர்வமுள்ள, பொறுப்புள்ள பல உள்ளூர் ஆசிரியர்கள் இப்பாடசாலையில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டார்கள். இதன் காரணமாக இக்கல்லூரியில் கல்வி வளர்ச்சி பெற ஆரம்பித்தது. முசலிப் பிரதேசத்திலிருந்தும், மாந்தைப் பிரதேசத்திலிருந்தும் மாணவர் குழாம் கல்வித் தாகத்தால் இப்பாடசாலையை நோக்கி வந்தது. இரு பெரும் அறைகள் விடுதியறைகளாக ஆக்கப்பட்டு, நிலையான உணவு வசதிகளும் அளிக்கப்பட்டன. விஞ்ஞானக் கல்வி அபிவிருத்யடைந்தது. க.பொ.த (உ/த) வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. 1964ஆம் ஆண்டு இம்மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து இலங்கைப் பல்கலைக்கழகம் சென்ற முதல் மாணவன் முன்னைய மன்னார் மாவட்ட அரச அதிபராக இருந்த S. மாரியதாசன் குரூஸ் ஆவார். K. ஹாஜா முகைதீன், M.M. மன்சூர், M.L.M. சாகுல் ஹமீத் ஆகியோர்கள் தொடர்ந்து அதிபராக கடமையாற்றினார்கள். 20.07.1970 – 04.03.1972 வரை எருக்கலம்பிட்டியின் மகனான M.K. ஹபீப் முகம்மது இப்பாடசாலை யின் பதில் அதிபராக பொறுப்பேற்றார். இக்காலத்தில் பாடசாலை கல்வி, விளையாட்டு, சாரணீயம், கடெட் போன்ற பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்தது. இக்காலத்தில் க.பொ.த (உ/த) கணித விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவரைத் தொடர்ந்து K.M. அபூபக்கர் 05.03.1972 – 30.04.1977 வரையும் மத்திய கல்லூரியில் அதிபராக இருந்தார். இக்காலத்தில் இக்கல்லூரி பலவகையிலும் வளர்ச்சி

பெற்றது. தனியான விடுதி, சமையலறைகளும், தொழிற்கூடங்கள், பற்சிகிற்சை நிலையம் என்பனவும் தொடங்கப்பட்டன. இக்காலத்தில் கல்வியமைச்சினால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த தரப்படுத்தல் முறையின் காரணமாக மாணவர் பலரை பல துறைகளுக்கும் பல்கலைக்கழகம் அனுப்பக் கூடிய வாய்புக் கிட்டியது. அபூபக்கர் அவர்களைத் தொடர்ந்து M.K. ஹபீப் முகம்மது 01.05.1977 தொடக்கம் 22.02.1989 வரையும் நீண்ட காலம் அதிபராகக் கடமையாற்றினார். இக்காலத்தில் சராசரி 10 இற்கும் அதிகமான மாணவர்கள் பிரதி வருடமும் பல்கலைக்கழகத்திற்குப் பலதுறைகளுக்கும் தெரிவானார்கள். இதன் காரணமாக பல அறிஞர்களையும், கல்விமான்களையும் இம்முஸ்லிம் மத்திய கல்லூரி உருவாக்கி சாதனை படைத்தது என்று கூறின் அது தவரன்று.

மன்னார் உப்புக் குளத்தைச் சேர்ந்த N.M. சிக்கந்தர் B.A. (Hon) SLOAS, எருக்கலம்பிட்டியைச் சேர்த I.S. அன்சார் L.L.B. (SLOAS) ஆகியோர்கள் உயர் ஸ்தானிகராகப் பணிபுரியச் சென்றனர். K.P. நூன் உயர் ஸ்தானிகர் காரியாலய செயலாளராகப் பணியாற்றச் சென்றார். கலாநிதி I.S. ஜவாகிர் இயந்திரப் பொறியியலில் பல்வேறு பட்டங்களைப் பெற்று தற்போது ஐக்கிய அமெரிக்காவில் உள்ள Kentucky பல்கலைக்கழகத்தில் முழு நேரப் பொறியியல் பேராசிரிய ராகப் பணியாற்றி வருகிறார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தற்போது புவியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி S.H. ஹஸ்புல்லா, பொறியியல் பீட விரிவுரையாளர் முகம்மதலி அஸ்லம் M.A. (Eng), பேராதனை மருத்துவ பீடத்தில் பணியாற்றும் கலாநிதி செல்வி பஸீஹா நூறுதீன் B.Vsc (SL) Mphil (SL) Medical Virology, London, பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் கணிதவியல் விரிவுரையாளராகப் பணியாற்றும் செல்வி பஸ்மியா நூறுதீன் B.Sc (SL), MSc (SL) ஆகியோர்களை இக்கல்லூரி உருவாக்கியது.

வட-கிழக்கு மாகாண சபையின் நியமன உறுப்பினராகச் பணியாற்றிய M.K. ஹபீபு முகம்மது, வன்னிப் பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் பணியாற்றிய S.M. அபூபக்கர், நூர்தீன் மசூது, றிஸாத் பதியுதீன் (தற்போதைய வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர்)

ஆகியோர்களையும் இக்கல்லூரி உருவாக்கியது. மகப்பேற்று வைத்திய கலாநிதி S.F.L. அக்பர் MBBS (Hons) SL) FCOG (SL), FRCOG (GB) இறைவரித்திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி P.P.A. ஹமீது B.A. (Hon), கொழும்பு நகராட்சி மதிப்பீட்டாளர் P.P.T. முகைதீன், கல்விப் பணிப்பாளர்களாக இருந்து இளைப்பாறிய K.M. வசீர், A.C.A. ஹக் இதர கல்வியதிகாரிகளான K.M. அபூபக்கர் (SLES) M.K.H. முகம்மது (SLEAS), A. சகாபுதீன் (SLES-ADE) ஆசிரியர்களையும், தற்போது கல்விச்சேவையிலுள்ள இபுறாகீம் நஸீர் (SLES), முகம்மது இபுறாகீம் அஸதுல்லா (SLES-ADE) ஆகியோர்களையும் உருவாக்கிய பெருமை இம்மத்திய கல்லூரிக்கு உண்டு. முதலாம் தர அதிபராகவிருந்து கொழும்பு பெண்கள் கல்லூரி அதிபராகவிருந்து இளைப்பாறிய திருமதி கரீமா அப்துல் கபூர் B.Sc (SLES) அளுத்கமை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையின் அதிபராகவிருந்து மஹரகமை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் செயற்திட்ட அதிகாரியாகவும் பணியாற்றிவரும் செல்வி சுபைதா முகம்மது காசீம் B.A. (Hon) அதிபராகவிருந்து பணியாற்றிய திருமதி அஸீஸா சகாபுத்தீன் திருமதி மகுமூதா அப்துல் ஹக் ஆகியோர்களும் பட்டயக் கணக்காளர்களாகப் பணியாற்றும் விடத்தல்தீவு அமீன், பெரியமடு ஜவாமில் ஆகியோர்களும் S. அக்பர், செல்வி J. சகூபா, A.H. ஜாசித் ஆகியோர்களும் இம்மத்திய கல்லூரியால் உருவாக்கப்பட்ட கல்விமான்களாவார்கள்.

இதுதவிர 50க்கு அதிகமான வைத்திய கலாநிதிகள், 35க்கு அதிகமான பெறியியலாளர்கள் 100 க்கு அதிகமான கலை, வணிக, விஞ்ஞான பட்டதாரிகள் 200 க்கும் அதிகமான பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், மற்றும் இலிகிதர் சேவை, வங்கிக் சேவை, சுங்கத் திணைக்களம், தபால் திணைக்களம், பொலீஸ் சேவை போன்ற சேவைகளிலும் கணிசமான இம்மத்திய கல்லூரி உருவாக்கிய அறிஞர்கள் சேவையாற்றி வருகின்றனர். குறிப்பாக முஸ்லிம் பெண்களில் கனிசமானவர்கள் வைத்தியர்களாகவும், பட்டதாரி களாகவும் உள்ளனர். இத்தகையவர்களை உருவாக்குவதில் எருக்கலம்பிட்டி மகளிர் மகா வித்தியாலயத்திற்கும் அதிக பங்குண்டு. குறிப்பாக முஸ்லிம் பெண் வைத்தியர்களான Dr. A.G. இஸ்ஸத் (MBBS) Dr. Miss. முஸம்மிலா (MBBS), Dr. Miss. P. நூர்டீன்,

Dr. Miss. தஸ்லிமா அமானுல்லாஹ் (MBBS) Dr. Miss A. ஹலீமா (MBBS) Dr. A. முஸ்தனீரா (MBBS) Dr. Miss சனூரி, Dr. A.G. நதீஜா (MBBS) Dr. S.L. நசீபா (MBBS) Dr. Miss. R.M. அலி (BDS), Dr. Miss. Z.H. றகீம், Dr. Miss ஜவ்ஹரா லத்தீப், Dr. Miss செய்யது அஹ்மது, Dr. P. ரவ்பியா ஆகியோர்களைக் குறிப்பிடலாம்.

சுங்க அதிகாரியாகக் கடமையாற்றும் ஆப்தீன் அமீன் (BA), M. முபீன் (B.A), S. லுக்மான் (B.Sc (Hon), MSc.) ஆகியோர்களும் சட்டத்தரணிகளாகப் பணியாற்றும் M. சதகத்துல்லா (B.A) , M. சபுறுத்தீன், A.W. றம்சீன் (LLB) S.A. ஜபருல்லா, A. பாயிஸ் N.M. சகீது, M.B. பாரூக், ஹில்மி, மர்ஹூம் S.K. நூறுத்தீன் ஆகியோர்களும் மத்திய கல்லூயின் அறிஞர்களே. A.G. இர்ஸாத் A.G. சல்மான், S.H. றபியுதீன் M. ஜலீஸ், A.G. முனாஸ், A.G. பௌஸீன், M.S. அமினுத்தீன், S. புர்ஹானுத்தீன், A.M. சிஜ்ஜின், I.M. ஜவ்ஸி, போன்ற பொறியியலாளர்களும் மத்திய கல்லூரியின் புதல்வர்களே ஆவார்கள்.

இவ்வாறு எண்ணிறைந்த முஸ்லிம், கிறீஸ்தவ, இந்து அறிஞர் பெருமக்களை உருவாக்குவதில் அளப்பரிய கல்விச் சேவையாற்றிய எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய கல்லூரியின் சேவை, முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தின் காரணமாக அஸ்தமித்துவிட்டது எனலாம்.

1.1.1961 ஆம் ஆண்டு பிரதம பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட எருக்கலம்பிட்டி மகளிர் மகா வித்தியலயத்தின் பதில் அதிபராகப் பிரதம பாடசாலையின் அதிபர் M.S.M. மெய்யதீன் பொறுப்பேற்றார்.

பம்பலப்பிட்டி மகளிர் கல்லூரியில் கல்வி கற்ற செல்வி கரீமா கப்பப்பிச்சை இந்தியாசென்று விஞ்ஞானப்பட்டதாரியாகி நாடு திரும்பியதும் 21.08.1961 முதல் பெண்பாடசாலை அதிபராகப் பணியாற்றிவந்தார். 401 மாணவிகளோடும் 17 ஆசிரியர்களுடனும் பெண்கள் கல்லூரி இயங்க ஆரம்பித்தது. இளமையும் துடிப்பும் பாடசாலை வளர்ச்சியில் அக்கறையும் கொண்டிருந்த அதிபருடன் தியாக மனப்பான்மை கொண்ட பெண் ஆசிரியர்களும் இணைந்து

அப்பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை காட்டி வந்தமையால் குறுகிய காலத்தில் அக்கல்லூரி பல முன்னேற்றங்களைக் கண்டது. ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரீட்சை, க.பொ.த (சா.த) பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். 1976 ஆம் ஆண்டு க.பொ.த (உ.த) கலை, வணிக, மனைப்பொருளியல் ஆகிய துறைகளில் மாணவியர்கள் பலர் பல்கலைக்கழகம் செல்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. க.பொ.த (சா.த) பரீட்சையில் விஞ்ஞான, கணித பாடங்களில் சிறப்புத் தகுதி பெற்ற மாணவிகள் மத்திய கல்லூரியில் உயர்தர விஞ்ஞான வகுப்பில் கற்பதற்கு மகளிர் கல்லூரி வழி செய்தது. அதன் காரணமாக பெண் வைத்தியர்களும், விஞ்ஞானப் பட்டதாரிகளும் உருவாகினார்கள். அதன் பெருமை மகளிர் கல்லூரியையே சாரும். அதிபரின் முயற்சியால் 6.6.1979 ல் இப்பாடசாலையில் ஒரு விடுதி நடாத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதன் காரணமாக வவுனியா, அனுராதபுரம், முசலி ஆகிய பிரதேசங்களிலிருந்து மாணவிகள் இப்பாடசாலையில் கல்வி கற்பதற்காக வந்ததனால் பாடசாலையில் மாணவர்களின் தொகை அதிகரித்தது. அதனால் கடற்கரை யோரத்திலிருந்த காணி சுவீகரிக்கப்பட்டுப் பாடசாலைக் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன.

இலங்கையில் தரமான ஒரு பெண்பாடசாலையாகக் கணிக்கப்பட்டு வந்த அப்பாடசாலையின் அதிபர் திருமதி கரீமா அப்துல் கபூர் தரமான அதிபராகவும் ஆக்கப்பட்டார். மன்னார் மக்களின் பலவந்த வெளியேற்றத்தின் போது 1990.10.20 ல் இப்பாடசாலை மூடப்பட்டது. அப்போது அக்கல்விக் கூடத்தில் 1013 மாணவிகளும் 29 ஆசிரியர்களும் இருந்தனர். பின்வரும் பெண் பட்டதாரிகளையும் ஆசிரியர்களையும் உருவாக்கிய பெருமை எருக்கலம்பிட்டி மகளிர் மகா வித்தியாலயத்திற்கும் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரிக்கும் உண்டு. திருமதி ஹசீனா ஸரூக் (BA), திருமதி ஹமீதா ஹமீது, திருமதி தாஹிரா முஸ்தபா (BA) திருமதி N. சமூனா (B.Sc) செல்வி M.S. சமீமா (B.Sc), திருமதி T. முபீதா (BA) திருமதி A. சியானா (B. com) திருமதி A. ஆரிப் (BA) திருமதி லரீபா (B.A), திருமதி I. வாபிக் (B.A) திருமதி B. சாஜிதா (B.A), திருமதி றைஹானா (B.Com), திருமதி R. ஜுனைத் (B.A) திருமதி H. மசூர் (B.A.) செல்வி J. ஜுனைத் (B.A) செல்வி சுபைதா காசிம் B.A. (Hon),

திருமதி J. அஜ்மல் (B.Com), திருமதி R. ஹபீபா (B.A) , செல்வி A.R. ஜுமானா (B.A.), திருமதி நதீஜா நவ்சாத் (B.A) செல்வி A.J. றிஸானா (B.A) செல்வி H.M. நுஸ்ஹா (B.Com) செல்வி S. பஸீஹா (B.A.) செல்வி A. றைசா (B.A.) செல்வி N. பஸ்மியா (B.A) செல்வி A.G. இர்பானா (B.Sc) செல்வி S.A. றகீம் (B.A.) செல்வி N. றிஸ்வானா (B.Com) செல்வி சரீனா றகுமான் (B.A) செல்வி ந. பஸ்மியா (B.A) மற்றும் நூற்றுக்கு அதிகமான பயிற்றப்பட்ட பெண் ஆசிரியர்கள் உள்ளனர். பட்டியல் நீளும் என்பதால் தவிர்க்கப்படுகிறது. மேற்கூறிய ஆசிரியைகளுள் பெரும் பகுதியினர் எருக்கலம்பிட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தாராக்குண்டிலும் ஆரம்பப் பாடசாலையொன்று தாபிக்கப்பட்டு 1941 வரை 1-5 வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக இயங்கிவந்தது. 1950 ஆம் ஆண்டளவில் இப்பாடசாலையின் அதிபராகப் பணியாற்றிய மூதூரைச் சேர்ந்த முகம்மது மாஸ்டர் இதனை சிரேஷ்ட பாடசாலையாக ஆக்கி க.பொ.த (சா.த) வகுப்புக்கள் நடாத்த வழி செய்தார். 1960 ஆம் ஆண்டில் இது ஒரு மகா வித்தியாலயமாக ஆக்கப்பட்ட போது M.N. ஐயூப் அதன் பதில் அதிபராகப் பதவியேற்றார். இக்காலத்தில் இப்பாடசாலை தாராபுரம் அலிகார் மகா வித்தியாலயமாக ஆக்கப்பட்டது. அக்காலத்தில் கல்வியிலும், விளையாட்டிலும் இப்பாடசாலை முன்னேறியது. ஆசிரிய பதவியைத் துறந்த M.N. ஐயூப், சட்டத்தரணியாகி 1989 - 94 ஆண்டு காலப்பகுதியில் வன்னிப் பாராளுமன்றப் பிரதிநிதியாகப் பணியாற்றி வந்தார். 1975 – 30.4.1977 வரை M.K.H. முகம்மது அதன் அதிபராகவிருந்தார். அவரைத் தொடர்ந்து வன்செயல்களால் பாடசாலை மூடப்படும் வரை H. சித்தீக் அதன் அதிபராகவிருந்து கடமையாற்றினார். இக்காலப்பகுதியில் கணிசமான மாணவர்கள் சித்தியடைந்து பல அரசாங்கத் துறைகளிலும் பதவி வகிக்கலானார்கள். அக்காலப்பகுதியில் பணிபுரிந்த தாராபுர ஆசிரியர்கள் வருமாறு : றைஹானா, செளதா, கதீஜா, றசீதா, யூனுஸ், லத்தீபா, செய்யதகமது, அப்துல் லத்தீபு, மெ:.றூன், K.M.A. காதர், நூர்முகம்மது, சுபைதா, சகீது, M.M. சகீது, M. றகுமதுல்லா, A. அமானுல்லா, நூர்தீன். இது தவிர H.S. தாவூத், O.K. செய்னுலாப்தீன், நெய்னா முகம்மது, கப்பமரைக்கார், மாக்கான்

மரைக்கார், மௌலானான, கபூர் (PM) ஆப்தீன் போன்ற கல்விமான்கள் தாராபுரத்தை அலங்கரித்தார்கள். அண்மைக்காலத்தில் வதூது, நவ்பர் (PM) பாறூக் போன்ற அரச ஊழியர்களும் அங்கு வாழ்ந்து வருகின்றனர். வன்னி அபிவிருத்தி அமைச்சர், றிஸாத் பதியுதீன், கலாநிதி Y.K. மரைக்கார் ஆகியோர்களும் தாராபுரப்புதல்வர்களே ஆவார்கள்.

1940 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதுக்குடியிருப்பிலும் ஒரு முஸ்லிம் ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1987 ஆம் ஆண்டளவில் க.பொ.த (சா.த) வகுப்புக்களை நடாத்தக் கூடிய நிலையை அப்பாடசாலை அடைந்திருந்தது. M.M. அபூபக்கர் முஸ்லிம்கள் வெளியேறும்வரை அப்பாடசாலையின் அதிபராக விருந்தார்.

கரிசல் முஸ்லிம்கள் கரிசல் றோமன், கத்தோலிக்க பாடசாலையில் கல்வி பெற்று வந்தனர். தலைமன்னார் பியரிலும் ஒரு முஸ்லிம் பாடசாலை அமைந்திருந்தது. 1980 ஆம் ஆண்டளவில் S. அலாவுத்தீன் அதிபராகவிருந்தார். மக்கள் வெளியேறும் கால கட்டத்தில் சுல்தான் மௌலவி அப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றி வந்தார்.

மேலே குறிப்பிட்டவாறு இருந்து வந்த மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் கல்வி நிலை, அவர்கள் அம்மாவட்டத்திலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டதன் காரணமாக, அம்மாவட்டத்தில் வாழ்ந்துவரும் இதர சமூகத்தவர்களைவிட ஐம்பது ஆண்டுகள் பின் நிலையை யடைந்து விட்டது என்பதை வேதனையோடு குறிப்பிட வேண்டியுள்ளது.

### *மாந்தை மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி*

மாந்தை மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் விடத்தல் தீவு கிராமத்தில் கிறிஸ்தவ ஆரம்பப் பாடசாலை யொன்று நிறுவப்பட்டது. முஸ்லிம்களும் இப்பாடசாலையிலேயே கல்வி கற்று வந்தார்கள். 1930 ஆம் ஆண்டளவில் அரசினர் பாடசாலையொன்று முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதியில் நிறுவப்பட்டது. இப்பாடசாலையில்

நீண்டகாலமாக ஐந்தாம் வகுப்பு வரையுமே கல்வி போதிக்கப்பட்டு வந்தது. அடம்பனைச் சேர்ந்த செபமாலை அதிபராகக் கடமையாற்றிய போது 8ஆம் ஆண்டு வரை தரமுயர்த்தப்பட்டது. விடத்தல்தீவு முஸ்லிம்கள் கல்வி கற்பதில் ஆரவமுள்ளவர்களாக இருந்தமையால் ஆண்களும் பெண்களும் கல்வி கற்று வந்தார்கள். 1944 ஆம் ஆண்டில் இலங்கையில் பரவலாக நடைமுறைப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறையின் காரணமாக பல மத்திய கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. அத்தகைய ஒரு மத்திய கல்லூரி எருக்கலம்பிட்டியிலும் ஸ்தாபிக் கப்பட்டது. இக்காலத்தில் நடைபெற்ற ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஐ. அப்துல்லா, M.I. முனாபு, N.M. சுல்தான் ஆகியோர் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரிக்குக் கல்வி கற்கச் சென்றார்கள். இங்கு தொடர்ந்து கல்வியைப் பெற்ற ஐ. அப்துல்லா உதவி வைத்தியராகவும் முனாபு, சுல்தான் ஆகியோர் பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் ஆனார்கள்.

1950 ஆம் ஆண்டளவில் இப்பாடசாலையில் 10 ஆம் வகுப்புவரை கல்வியைப் பெறக் கூடிய வசதிகள் ஏற்பட்டன. இதன் காரணமாக இக்கிராமத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் 10ஆம் வகுப்பு வரை கல்வியைப்பெற்று ஆசிரியர் ஆனார்கள். M.A.C. மரைக்கார், M.I. அமீர், றகுமா உம்மா, லைலா அப்துல்காதர், றகுமா சித்தீக், பாரூக், ம:.றூபு, அன்சாரி, அப்துல் சலாம், இமாம், றகீம் ஆகியோர்களும் இன்னும் பலரும் ஆசிரியரானார்கள். 1958 ஆம் ஆண்டு கல்வி அமைச்சராகவிருந்த கலாநிதிறு W. தஹநாயக்கா அவர்களின் சிபார்சினால் க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்த முஸ்லிம் பெண்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக விடத்தல்தீவு பாடசாலையில் கற்றுத்தேறிய பல முஸ்லிம் பெண்கள் ஆசிரிய நியமனங்களைப் பெற்றார்கள்.

சேர். ராசிக் பரீத் அவர்களின் உதவியால் 1956 ஆம் ஆண்டு முஸ்லிம் மகா வித்தியாலயமாக விடத்தல் தீவு பாடசாலை தரம் உயர்த்தப்பட்டது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த M.M.A. காதர் இப்பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டார். இவருடைய

காலத்திலேயே இப்பாடசாலை "அலிகார் மகா வித்தியாலயம்" என பெயர் சூட்டப்பட்டது. இவருடைய காலத்தில் கணிசமான பாடங்களில் மாணவர்கள் சித்தியடைந்து க.பொ.த (உ.த) வகுப்புக்களுக்குத் தகுதி பெற்றார்கள். இத்தகைய மாணவர்களுள் பலர் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியில் க.பொ.த (உ.த) வகுப்புக்களில் அனுமதிக்கப் பட்டு வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், சட்ட வல்லுனராகவும், பட்டதாரிகளாகவும் ஆனார்கள். மகப்பேற்று வைத்திய கலாநிதி S.F.L. அக்பர், வைத்திய கலாநிதிகளான A.L. தஸ்தகீர், I சர்வர், A.L. சாஜகான், N. பரீது ஆகியோரையும், பொறியியலாளர்களான A.M. சிஜ்ஜீன், A.R. அரபாத், சிராஜ் ஆகியோரையும் குறிப்பிடலாம். செல்வி ஜகுபர்நிசா, நி.்.மத் ஆகியோரும், கணக்காளராகப் பதவிவகிக்கும் விடத்தல்தீவு M.C. அமீனும் ஆகியோர்கள் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியில் கற்றவர்களாவர்.

விடத்தல்தீவு அலிகார் மகா வித்தியலயம் 1980 ஆம் ஆண்டளவில் M.L.M. சரீபு அதிபர் அவர்களின் பயனாக உயர்தர விஞ்ஞான கற்கை நெறியும் இப்பாடசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டது. M.I. அமீர், M.K.H. முகம்மது, A.C.A. அப்துல் ஹக், M.N. ஐயூப் ஆகியோர் இப்பாடசாலையின் அதிபர்களாகக் கடமையாற்றியவர்களாகும். முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்கு முன்னர் M.A. அன்சாரி அவர்களும் இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றினார்.

கல்வியின் ஆர்வத்தால் முன்னேறிய பலர் விடத்தல்தீவில் இருந்திருக்கிறனர். M.A.C. மரைக்கார் பயிற்றப்பட்ட ஆசிரியராக இக்கிராமப் பாடசாலையில் பணிபுரிந்தார். கல்வியின் ஆர்வத்தால் அவர் பட்டதாரியாகி, முஸ்லிம் வக்பு சபைப் பணிப்பாளராகவும், ஓய்வூதிய திணைக்களப் பணிப்பாளராகவும் கடமைபுரிந்து ஓய்வு பெற்றார். M.S.A. றகீம் கொழும்பு ஸாகிராவில் கற்று ஆசிரியராகவும், அதிபராகவும், ஆசிரிய கலாசாலை ஆங்கில விரிவுரையாளராகவும் பணிபுரிந்து, மன்னார் கல்வியதிகாரியாகப் பதவியுயர்வு பெற்று ஓய்வு பெற்றார். அதேபோன்று அவரின் தம்பி M.S. ஸரூர் ஆசிரியராகவும், அதிபராகவும் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விளையாட்டுத் துறை விரிவுரையாளராகவும், அதே துறை கல்வியதிகாரியாக மன்னார்

கல்விக் காரியாலயத்தில் பணிபுரிந்தார்.

எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியில் உயர் வகுப்பில் கற்று தன் முயற்சியால் முன்னேறிய விடத்தல் தீவைச் சேர்ந்த மற்றொருவர் A. முகம்மது பாயிஸ் ஆகும். ஆங்கில ஆசிரியராகப் பதவியேற்ற அவர் தனது முயற்சியால் சட்டத்தரணியாகி தற்போது அகதிகள் மீள் குடியமர்த்தப் பணியகத்தில் உதவிப் பணிப்பாளராகக் கடமை புரிந்து வருகிறார். கணித ஆசிரியர் பயிற்சியைப் பெற்ற அப்துல் வாகிது ஆசிரியராகப் பணியாற்றி, ஆசிரிய ஆலோசகராகவும், கணித பாடவிதான அமைப்பாளராகவுமிருந்து ஓய்வு பெற்றார்.

மாந்தை பிரதேசத்தில் அமைந்திருந்த மற்றொரு முஸ்லிம் மகா வித்தியாலயம் பெரியமடு குடியேற்றத்தில் ஸ்தாபிக்கப்படதாகும். பெரியமடு குடியேற்றம் 1956ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. முஸ்லிம், இந்து, கிறீஸ்தவ இனங்களைச் சேர்ந்த 200 குடியிருப் பாளர்கள் இக்கிராமத்தில் குடியேற்றப்பட்டார்கள்.

இக்குடியேற்றத்திற்குப் போதிய போக்குவரத்து வசதி இன்மையால் வெளியிடங்களிலிருந்து இப்பாடசாலைக்குச் சேவை செய்யச் செல்ல ஆசிரியர்கள் தயங்கினர். இதன் காரணமாக க.பொ.த (சா.த) வகுப்புக்களை நடாத்தி வந்த அப்பாடசாலையில் விடத்தல்த்வைச் சேர்ந்த ஆசிரியர்களே பணிபுரிந்து வந்தார்கள். போதிய வளமற்ற அப்பாடசாலையின் கல்வித்தரமும் குன்றியதாகக் காணப்பட்டது. எனினும் கல்வியில் ஆர்வமுள்ள ஒரு சிலர் க.பொ.த பத்திரப் பரீட்சை யில் சிதித்தியடைந்து, கல்வியைத் தொடர்வதற்காக எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரிக்கு உயர்வகுப்புக்கு அனுமதி பெற்றனர். கணக்காளராகப் பதவிவகிக்கும் ஜவாமில், பட்டதாரியான M.M. அமீன், செல்வி ஜகுபன்னிசா (B.Sc) ஆகியோர்கள் எருக்கலம்பிட்டியில் கற்றுத்தேறியவர்களாகும். அபுல் கைரி, அப்துல் முனாபு ஆகியோர் பெரிய மடுவில் கற்பித்த உள்ளூர் ஆசிரியரகளாவார்கள்.

இதுதவிர ஏனைய முஸ்லிம் கிராமங்களில் 5 ஆம் வகுப்பு வரையும் கற்பிக்கப்பட்டு வந்தன. எனினும் கல்வியில் நாட்டமற்ற அக்கிராம மாணவர்கள் விவசாயத்திலும், மீன்பிடித்தொழிலிலும் நாட்ட

முள்ளவர்களாக இருந்து வந்தார்கள். கல்வியில் நாட்டமுடைய சில முஸ்லிம் மாணவர்கள் அடம்பன் மகா வித்தியாலயத்திற்கு கல்விகற்கச் சென்றார்கள். எனினும் அக்கிராம முஸ்லிம்கள் கல்வியில் முன்னேற வில்லையென்றே கூறலாம். அடம்பன் பறைய குளத்திலிருந்து (சொர்ணபுரி) எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரிக்குக் கல்வி கற்கச் சென்ற M.R.M.. ஹஜ்ஜிக் இலிகிதர் சேவையில் இணைந்து 1990 ஆம் ஆண்டின்பின் முஸ்லிம் கலாசார அமைச்சில் சேவையாற்றி தற்போது அவ்வமைச்சின் நிருவாக உத்தியோகத்தராகப் பணியாற்றி வருகிறார். இக்கராமத்தைச் சேர்ந்த கபீர் என்பவர் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

நானாட்டான் மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி

நானாட்டான் மாவட்டத்தில் சிறு சிறு விவசாயக் கிராமங்களில்தான் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தனர். அன்றியும் இக்கிராமங்கள் எவ்வித புவியியல் தொடர்பும் அற்றதாகக் காணப்பட்டன.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மற்றைய மாவட்டங்களைப் போன்று இம்மாவட்டத்திலும் றோமன் கத்தோலிக்க பாடசாலைகளே தாபிக்கப்பட்டன. புது வெளி, அளவக்கை, நொச்சிக்குளம், (ஹிஜ்ராபுரம்), பூவரசன்குளம் போன்ற கிராம மக்கள் கல்வி கற்பதற்கு முருங்கன் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கே செல்ல வேண்டியிருந்தது. இப்பாடசாலையிலும் 5ஆம் வகுப்பு வரையுமே கல்வி போதிக்கப்பட்டு வந்தது. கத்தோலிக்க பாடசாலைக்குச் சென்றால் முஸ்லிம்களை மதமாற்றம் செய்வார்கள் என்ற பயம் முஸ்லிம் மக்களிடையே நிலவியதால், அதிகமான முஸ்லிம் மாணவர்கள் முருங்கன் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்குச் செல்லவில்லை. 1960 ஆம் ஆண்டளவில் புதுவெளி, அளவக்கை, நொச்சிக்குளம், பூவரசன்குளம் ஆகிய கிராமங்களில் அரசினரால் ஆரம்பப் பாடசாலைகள் தாபிக்கப்பட்டன. எனினும் இக்கிராமங்கள் அனைத்தும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பிரதேசங்களில் அமைந்திருந்ததனால் அக்கிராமக் குழந்தைகள் விவசாயத்திலேயே நாட்டமுடையவர்களாக விருந்தனர். இப்பாடசாலைகளில் மன்னார் தீவைச் சேர்ந்த ஆசிரியர்களே கல்வி

கற்பித்து வந்தனர். புதுவெளிக் கிராம மக்கள் கல்வியில் சற்று ஆர்மமுடையவர்களாகவிருந்தனர். அத்தகைய பெற்றோர்கள் 6 ஆம் வகுப்புக்கு மேல் படிப்பதற்காக எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரிக்குத் தம் பிள்ளகளை அனுப்பினார்கள். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களுள் சித்தியடைந்தவர்கள்தான் 1984ஆம் ஆண்டு பயங்கரவாதிகளால் றகூல் புதுவெளிப் பள்ளிவாசலில் வைத்துச் சுடப்பட்ட தபால் அதிபர் செய்னுலாப்தீன், அதிபராகக்கடமை புரிந்துவரும் கலீல் றகுமான், ஆசிரியராகவிருந்து இளைப்பாரிய ஆதம் பாவா ஆகியோரைக் குறிப்பிடலாம். அல்-அஸ்கர் மகா வித்தியாலயத்தில் கற்று தற்போது பாலாவி மு.ம.வி பதில் அதிபராகக் கடமையாற்றிவரும் அமானுல்லா புதுவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டவரேயாம்.

### *முசலி மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி*

முசலி மாவட்டத்தில் குடியமர்ந்திருந்த மக்கள் தொகையில் 65% சதவீதத்தினர் முஸ்லிம்களாவார்கள். அவர்கள் வாழ்ந்திருந்த சில கிராமங்கள் அருகருகாக அமைந்திருந்தன. வரலாற்றுக்கால முதல் முத்துக்குளித்தல், அம்பர் எடுத்தல், சங்கு எடுத்தல் போன்ற தொழில்களோடு தொடர்பு கொண்டிருந்த இப்பிரதேச மக்கள் கீழைக்கரையின் வம்சாவளியினராகத் கருதப்பட்டார்கள். அன்றியும் இம்மக்கள் கல்வியிலும் சிறந்து விளங்கினார்கள்.

ஆரம்ப காலங்களில் திண்ணைப்பள்ளிக்கூடங்களில் குர்ஆன் மத்ரசாக்கள் நடாத்தப்பட்டன. கிராமங்களில் பள்ளிவாசல்கள் அமைக் கப்பட்டபோது, குர்ஆன் மத்ரசாக்கள் பள்ளிவாசல்களோடு இணைக் கப்பட்டன. பள்ளிவாசல்களில் பேஸ் இமாமாகக் கடமைபுரிந்தவர் களாலேயே இக்குர்ஆன் மதரசாக்களும் நடாத்தப்பட்டு வந்தன.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலங்களில் பொற்கேணியில் ஆரம்ப பாடசாலையொன்று தாபிக்கப்பட்டது. 3 ஆம் வகுப்புவரையும் இப்பாடசாலையில் கல்வி போதிக்கப்பட்டு வந்தது. வேப்பங்குளம் முதல் சிலாபத்துறை ஈறாகவும், பண்டாரவெழியைச் சேர்ந்தவர்களும் கல்வி கற்கும் பாடசாலையாக இது திகழ்ந்து வந்தது. இக்காலத்தில்

இப்பாடசாலையில் கல்விகற்ற பலர் கிராம விதானைகளாகவும், உடையார்களாகவும் கிராமச்சபைத் தலைவர்களாகவும் பணிபுரியக் கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தார்கள். பொற்கேணியைச் சேர்ந்த முகம்மது காசீம் என்பவர் உடையாராகப் பணிபுரிந்தார். அவரின் மகன் முகம்மது சரீபு கிராம விதானையாகவும், மற்றொரு மகன் மீராசாகிபு கிராமச் சபைத் தலைவராகவும் அதன்பின் கிராமோதையச் சபைத் தலைவராகவும் இருந்து பணியாற்றிவந்துள்ளார். 1960ஆம் ஆண்டளவில் இப்பாடசாலையில் 8 ஆம் வகுப்பு வரை கற்கக்கூடிய நிலை உருவானது.

இப்பாடசாலையில் கற்ற பலர் நொத்தாரிசுகளாகவும், புலவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். புதுவெளியைச் சேர்ந்த நே. முகிதீன் சாகிபு மரைக்கார் பிரசித்த நொத்தாரிசாகவும், புலவராகவும் திகழ்ந் திருக்கிறார். மறுச்சுக்கட்டியைச் சேர்ந்த முகம்மது பஸ்ல் என்பவரும் பிரசித்த நொத்தாரிசாகக் கடமை புரிந்திருக்கிறார். சிலாவத்துறையைச் சேர்ந்த ஹபீபு முகம்மது என்பவர் காதி நீதிபதியாகப் பணியாற்றி யிருக்கிறார். கபூர், அக்பர் போன்றோர் முசலி தெற்கு கிராம சபைத் தலைவர்களாகப் பணியாற்றியிருக்கிறார்கள்.

காலகெதியில் பண்டாரவெளி, வேப்பங்குளம், முசலி ஆகிய இடங் களில் ஆரம்ப தமிழ் பாடசாலைகள் தாபிக்கப்பட்டன. இப்பாடசாலை களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களே கல்வி போதித்து வந்தார்கள். திரு. சின்னத்தம்பி தலைமையாசிரியராகப் பணியாற்றிய காலத்தில் முசலிப் பாடசாலை 8ஆம் வகுப்புவரை தரமுயர்த்தப்பட்டது. அரிப்புத்துறை, சிலாபத்துறை போன்ற கிராமங்களிலிருந்து மாணவர்கள் இப்பாடசாலைக்குக் கல்விகற்க வந்தார்கள். எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த K.M. சரீபு என்பவரும் மன்னாரைச் சேர்ந்த ஹுசைன் என்பவரும் இப்பாடசாலையின் அதிபராகப் பணியாற்றினார்கள். அதிபர் ஹுசைன் காலத்தில் இப்பாடசாலை மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. எனினும் இப்பாடசாலை பின் தங்கிய கிராமத்தில் அமைந்திருந்தமையாலும், பல வசதியீனங்களைக் கொண்டிருந்தமையாலும் யாழ்ப்பாண ஆசிரியர்கள் இப்பாடசாலைக்குச் சேவை செய்ய வர விரும்பவில்லை. அதன் காரணமாக எருக்கலம்பிட்டி, தாராபுரம், மன்னார் ஆகிய கிராமங்களி

லிருந்து ஆசிரியர்கள் இங்கு வந்து கற்பித்தார்கள். 1957 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கல்வியில் ஆர்வமுள்ள மாணவர்கள் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரிக்குக் கல்வி கற்கச் சென்றார்கள். இக்காலத்தில் மத்திய கல்லூரியில் மாணவர்கள் தங்கக் கூடியதான விடுதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன. அதன்காரணமாக பல முசலிப்பிரதேச மாணவர்கள் கல்வி கற்கக் கூடிய வாய்ப்பினைப் பெற்றார்கள். அதனால் முசலிப் பாடசாலைகளில் கற்பிக்கக்கூடிய, அப்பாடசாலையை நிருவகிக்கக் கூடிய ஆசிரியர்கள் உருவாகக் காரணமாக அமைந்தது. எருக்கலம்பிட்டியில் மகளிர் மகா வித்தியாலயம் ஒன்று அமைந்ததன் காரணமாக கணிசமான பெண்களும் ஆசிரியரானார்கள். தற்போது புத்தளம், கற்பிட்டி மாவட்டப் பாடசாலைகளில் கற்பித்துவரும் பல ஆசிரியர்கள் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய கல்லூரியிலும், மகளிர் மகா வித்தியாலயத்திலும் கற்றவர்கள் என்று குறிப்பிடின் அது தவறன்று.

மத்திய கல்லூரியில் கற்று அரச திணைக்களங்களில் பணியாற்றும் கொண்டச்சி கபூர், சிலாவத்துறை ஹபீபு முகம்மது நஸீர், அலிகான், ஹபீல், தாஜ் முகம்மது ஆகியோர்களைக் குறிப்பிடலாம். தையூப், ஹமீது, ஜுனைத், சகர்வான் போன்றோர் ஆசிரியர்களானார்கள்.

முசலி மகாவித்தியாலயத்தில் M.K.H. முகம்மது, P.T. செய்னுலாப்தீன், அப்துல் சலாம் போன்றோர் அதிபராகக் கடமையாற்றினார்கள். 1970 ஆம் ஆண்டின் பின்னர் இப்பாடசாலையில் கல்வி வளர்ச்சியடைந்ததன் காரணமாக பல ஆண்களும் பெண்களும் உள்ளூரிலேயே கல்விகற்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது எனலாம். மேலும் இக்காலப்பகுதியில் சிலாவத்துறை, மறிச்சுக்கட்டி, கரடிக்குளி, கொண்டச்சி ஆகிய கிராமங்களில் ஆரம்பப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இப்பாடசாலைகளில் உள்ளூர் ஆசிரியர்கள் சேவையாற்றக் கூடிய வாய்புக் கிடைத்தது.

இம்மாவட்டத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது, முஸ்லிம் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன. அதனால் இம்மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி சூனியமானது என்று கூறின் அது பிழையன்று.

## ஈடு செய்யப்பட முடியாத கல்வி இழப்பு

இவ்வித்தியாலயத்தில் மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி பற்றி எடுத்துக்கூறப்பட்டது. எருக்கலம்பிட்டியில் ஒரு முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயமாக ஸ்தாபிக்கப்பட்டுச் செயலாற்றி வந்திருந்த போதிலும், அக்கல்லூரியில் அனுமதி கோரியிருந்த முஸ்லிம், கிறீஸ்தவ, இந்து மாணவ, மாணவியர்களுக்கும் கற்க வசதியளிக்கப்பட்டே வந்தது. அதன் காரணமாக பல்வேறு துறைகளில் உருவாக்கப்பட்ட இலங்கையிலும், பிறநாடுகளிலும் பணியாற்றி வரும் அறிஞர் பெருமக்களை நாமறிவோம்.

எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியின் வீழ்ச்சி முஸ்லிம் மாணவர்களுக்கு மாத்திரமன்றி இதர சமூகத்தவர்களுக்கும் அது ஒரு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களும், பேச்சு வார்த்தைகளும் மேற்கொள்ளப்பட்டு, வட பகுதியில் குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம்கள் மீண்டும் குடியேற வாய்ப்புக் கிடைக்கும் என ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

முஸ்லிம்களின் வெளியேற்றத்திற்கு முன்னைய காலங்களில் மன்னார் மாவட்டத்தில் வாழ்ந்திருந்த அனைத்து சமூகத்தவர்களும் ஐக்கியமாகவும், அன்புடனும், பண்புடனும் வாழ்ந்து வந்தார்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அத்தகைய சூழ்நிலை மீண்டும் வருவதற்கு நாம் இறைவனை வேண்டுவதுடன், இது தொடர்பான அனைத்து தாபனங்களும் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு முன்னுரிமை வழங்கி ஆவனசெய்யவேண்டுமென விநயமாகக் கேட்டு இவ்வத்தியாயம் நிறைவு செய்யப்படுகிறது.

# எருக்கலம்பிட்டி

- எச். எம். எம். நியாஸ் -

**அதன் அமைவிடம் :**

எருக்கலம்பிட்டி மன்னார்த் தீவின் வட புறத்தில் அமைந்துள்ள ஓர் அழகான முஸ்லிம் கிராமமாகும். சனத்தொகை ரீதியாகப் பார்க்கும் போது இப்பிரதேசத்தில் இதுவே பெரிய கிராமமாகும். பல்லாண்டு காலமாக இக்கிராமம் இதே இடத்தில் நிலைத்து வந்துள்ளதால், நீண்ட வரலாற்றையும், கலை, கலாசார, பண்பாட்டுப் பாரம்பரியங் களையும் இது கொண்டுள்ளது.

எருக்கலம்பிட்டி ஒரு குடாநாடு போன்ற அமைப்பைக் கொண்டுள்ளது. வடபுறம் பாக்கு நீரிணையையும், கிழக்குப் புறம் மன்னார் குடாக்கடலையும், தென்புறம் உள்ளாற்றையும், மேற்குப்புறம் மன்னார் தீவின் எஞ்சிய நிலப்பரப்புடன் தொடர்புபட்டு அமைந்துள்ளது. இதன் எல்லைகளாக வடக்கே ஆமைப்படுக்கைக் கடலையும், கிழக்கே தலை முந்தலுக்கு (ஊசிமுக்கன் துறை) அப்பாலுள்ள கடலையும், தெற்கே உள்ளாற்றையும் அதனோடு இணைந்த பாதையுடன் மன்னார் தலை மன்னார் பிரதான வீதியையும், மேற்குப்புறம் மினாரா வீதியையும் உள்ளடக்கியிருக்கும் இக்கிராமத்தின் நிலப்பரப்பு எருக்கலம்பிட்டி கிராம விதானையின் நிருவாகத்தின் கீழிருந்து வந்த பிதேசமாகும். இப்பிரதேசம் ஒரு கிராம சபையின் தனி நிருவாகத்தின் கீழ் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

கடல் வளமும், நிலவளமும் நிரம்பப்பெற்ற இக்கிராமத்தில் முத்துக் குளித்தல், சங்கு குளித்தல், அட்டை குளித்தல் தொழில்களோடு, மீன்பிடித்தல் தொடர்பான பல முயற்சிகளிலும் மக்கள் ஈடுபட்டு வந்தனர். மேலும் தென்னை, பனை, மர முந்திரி வளங்களை மையமாகக் கொண்ட பல தொழில்களையும் இக்கிராமம் கொண்டிருந்தது.

பெயர் வரக்காரணம்:

எருக்கலம்பிட்டிக் கிராமம் ஆரம்ப கால முதல் கடலோடும், மரக்கலங்களோடும் இணைந்த செல்வம் கொழித்த வணிகத்தைக் கொண்டிருந்தமையால் எரி + கலம் + பிட்டி என்ற சொல் பின்னர் எருக்கலம்பிட்டி என உருப்பெற்றது என சிலர் கூறுவர். இக்கிராமம் சற்று உயரமான பிட்டியில் அமைந்திருந்ததோடு, அப்பிரதேசத்தில் 'எருக்கலை' என்னும் மருத்துவச் செடி அதிகமாகக் காணப் பட்டமையால் எருக்கலை + புட்டி என்ற பதம் எருக்கலைப்புட்டியாகி, பின்னர் எருக்கலம்பிட்டி என்ற காரணப் பெயரைப் பெற்றது எனவும் கூறுவர். இக்கிராமத்தில் ஏறக்குறைய 1500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்திருக்கின்றன.

வரலாறு :

எருக்கலம்பிட்டிக் கிராமம் 1400 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு முஸ்லிம் கிராமமாக இருந்து வந்திருக்கிறது என்றும், அக்கிராமம் அதே இடத்தில் நிலைத்து வந்திருக்கிறது என்றும் அறிய முடிகிறது. தென்னிந்தியக் கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்திருந்த திராவிடச் சமூகத்தின் வழித்தோன்றல்களான பரவர், கடயர், வலயர், நளவர், போன்றோர் மன்னார் தீவையடைந்து தமது குடியேற்றங்களை அமைத்த காலகட்டத்தில், தென்னிந்தியக் கரையோரப்பிரதேசங்களில் வாழ்ந்திருந்த அராபிய - இந்திய வழித்தோன்றல்கள் படகோட்டி களாகவும், வணிகர்களாகவும், சுழியோடிகளாகவும் இருந்து மாந்தை, எருக்கலம்பிட்டி, மன்னார், மினாரா ஆகிய இடங்களில் தமது குடியிருப்புக்களையும் அமைத்துக்கொண்டார்கள். இவ்வாறுதான் எருக்கலம்பிட்டிப் பகுதியில் ஆரம்பக் குடியிருப்பு உண்டானது.

7 ஆம் நூற்றாண்டளவில் இஸ்லாம் மதம் கீழக்கரை, காயல் பட்டினம் ஆகிய இடங்களில் பரவிய போது அக்கிராமங்களிலிருந்து இம்மதம் மன்னார் பிரதேசங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது.

ஹிஜ்ரி 22ல் (கிபி 643 - 644ல்) யமன் தேசத்திலிருந்து கப்பல் மூலமாகக் கீழை நாடுகளுக்கு வந்த அரச வம்சத்தைச் சேர்ந்த சலாஹுத்தீன் என்பவரின் மகனார் சம்சுதீன் மன்னாரில் இறங்கி இஸ்லாமிய த.்.வாப்பணியை மேற்கொண்டிருக்கிறார்.

8ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கலீபாவாக இருந்த அப்துல் மலிக் பின் மர்வான் காலத்தில் ஹாஸிம் வம்சத்தைச் சேர்ந்த (றசூல் (ஸல்) அவர்களின் வழித்தோன்றல்கள்) அராபிய தீபகற்பத்திலிருந்து வந்து இலங்கையில் குடியமர்ந்தனர். அவ்வாறு குடியமர்ந்த இடங்களுள் மாதோட்டம், மன்னார், புத்தளம், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

15ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் முதலாவது கலீபாவாக இருந்த அபூபக்கர் ஸித்தீக் (ரழி) அவர்களின் வழித்தோன்றல்களில் ஒருவரான மகான் லெவ்வை அப்பா ஆலிம் அவர்களும், அவர்களின் பிள்ளைகள், வழித்தோன்றல்கள் ஆகியோர்களும் மன்னார் பிரதேசங்களில் த.்.வாப்பணியை மேற் கொண்டு வந்தார்கள் என்றும், எங்கெங்கே அவர்கள் வாழ்ந்தார்களோ ஆங்காங்கே மரணமடைந்து அடக்கஞ் செய்யப்பட்டுள்ளார்கள் எனவும் அறிய முடிகிறது.

கி.பி 8ஆம் நூற்றாண்டு தொடக்கம் 14ஆம் நூற்றாண்டுவரை தென்கிழக்கு ஆசிய கடல் வணிகத்தில் அராபிய - இந்திய வழித் தோன்றல்களான முஸ்லிம்கள் முதன்மை பெற்றிருந்த காலத்தில் மாந்தை, மினாரா, ஆமைப்படுக்கைத் துறைமுகப் பிரதேசங்களிலும், எருக்கலம்பிட்டி, மன்னார் ஆகிய இடங்களிலும் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்ததோடு, மன்னார் தீவு முஸ்லிம் வணிகர்களின் வியாபார தளமாகவும், எருக்கலம்பிட்டி, மினாரா ஆகிய இடங்கள் அவர்களின் களஞ்சியச் சாலைகளாகவும் இருந்திருக்கின்றன.

அராபிய முஸ்லிம்களின் தென்கிழக்கு ஆசிய வணிகத்தைக் கைப்பற்றும் நோக்கமாக போத்துக்கீசர் இலங்கையை அடைந்த போது, இலங்கையின் வடமேற்குக்கரையில் குடியமர்ந்திருந்த முஸ்லிம் வணிகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதனால் அம்முஸ்லிம்களின் பொருளாதாரம் சீர் குலைந்து, கரையோரத்தில் வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் உள்நாடு நோக்கி இடம் பெயர்ந்தனர்.

எனினும் மன்னார் கரையோரப்பிரதேசங்களில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் அதே இடத்தில் தொடர்ந்தும் வாழ்ந்து வந்தார்கள். போத்துக்கீச, ஒல்லாந்த ஆங்கிலேய ஆட்சியாளர்களின் பொருளா தாரத்தை முத்துக்குளித்தல், சங்கு குளித்தல் மூலம் வளப்படுத் தினார்கள். உதாரணமாக :

பேராசிரியர் கலாநிதி ஏ.சீ.எல். அமீரலி அவர்களின் "இலங்கை முஸ்லிம்களின் ஏற்றுமதித் தொழில் 1800 - 1915" என்ற கட்டுரையில், எருக்கலம்பிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த 300க்கு அதிகமான முஸ்லிம்கள் 1860 ஆம் ஆண்டு நடந்த முத்துக்குளிப்பில் பங்கு பற்றினர் என்றும், 1908 ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை மிகவாகப் பெருகிப் போயிற்று எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

பொருளாதார வளம் :

வளமான கடலால் சூழப்பட்ட எருக்கலம்பிட்டிக் கிராமத்தின் பிரதான தொழில் கடலோடு தொடர்புடையதாக அமைந்திருந்தது. முத்துக் குளித்தல், சங்கு குளித்தல், கடலட்டை எடுத்தல் படகோட்டுதல் போன்ற தொழில்களோடு, ஆள்கடல் மீன்பிடி, பரவைக்கடல் மீன்பிடித் தொழிலையும், அத்தொழிலோடு தொடர்புடைய ஐஸ் மீன், கருவாடு, வலைபின்னுதல், மால் முடித்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தார்கள். அன்றியும் பருத்திச் செய்கை, நூல் நூற்றல், ஆடை நெய்தல், சாயமிடுதல், ஆகிய தொழில்களிலும் ஈடுபட்டு வந்தார்கள்.

தென்னையிலிருந்து பெறப்பட்ட தேங்காயைக் கொப்பரா போடுவது, தென்னம் ஓலையால் கிடுகு பின்னுதல் போன்ற முயற்சிகளில் பெண்கள் ஈடுபட்டு வந்தார்கள்.

பனையோலையால் பாய், பெட்டி இளைத்தல், பனம்பழத்திலிருந்து பனாட்டுச் செய்தல், பதநீரிலிருந்து கருப்பட்டி செய்தல், பனங்கிழங்கை ஓடியல் செய்தல் போன்ற தொழில்களிலும், மர முந்திரி தொடர்பான பல்வேறு தொழில்களிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டு வந்திருந்தார்கள். மாதோட்டப் பிரதேசங்களில் தமக்குச் சொந்தமான, குத்தகைக்குப் பெறப்பட்ட விவசாயக் காணிகளில் நெற்செய்கையை மேற்கொண்டும் வந்தனர். கிராமத்திற்கு உள்ளேயும், கிராமத்திற்கு வெளியேயும் வியாபார சேவை நிலயங்களை அமைத்து வணிகத்தில் ஈடுபட்டும் வந்தார்கள்.

## நிருவாக அமைப்பு முறை :

இங்கு வாழ்ந்த முஸ்லிம்கள் மார்க்கப்பற்றும், கலாச்சாரத்தைப் பேணும் பண்புடையவர்களாகவும், பெரியோர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் தன்மையுள்ளவர்களாகவும் இருந்தார்கள். இக்கிராமத்தில் நான்கு பள்ளிவாசல்களும், அதனோடு இணைந்த அரபு மத்ரசாக்களும் இருந்தன. பள்ளிவாசல்களுள் இரண்டு ஜூம்ஆப் பள்ளிவாசல்கள். ஒரே நேரத்தில் 1000 பேர்வரை தொழக்கூடிய வசதியை இப்பள்ளிவாசல்கள் கொண்டிருந்தன.

கிராமத்தை கிழக்கு, மேற்கு என வகுத்து அவ்வவ் பள்ளிவாசல் நிருவாகத்தின் கீழ் அவை பரிபாலிக்கப்பட்டு வந்தன. பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் நிருவாகத்தை நடாத்தி வந்தார்கள். உள்ளூராட்சி நிருவாகத்தின் கீழ் இக்கிராமத்திற்கு ஒன்பது வட்டாரங்களைக் கொண்ட ஒரு கிராம சபை செயற்பட்டு வந்தது. இவையன்றி இணக்க சபை ஒன்றும் இக்கராமத்தில் செயலாற்றி வந்தது.

எருக்கலம்பிட்டி முஸ்லிம் கிராமத்தை வழிநடாத்த வல்ல பெரியோர்கள் பலர் வாழ்ந்தர்கள். நூறு N.M. சாலிகு, K.K.S. ஹபீபு முகம்மது, சதக்கு மரைக்கார் பெரிய ஹாஜியார், சின்ன ஹாஜியார், செவத்த ஆலிம், கப்பலார் ஹாஜியார், மயினத்தார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். அன்றியும், ஓ.எம்.

கப்பப்பிச்சை, எஸ்.ஓ. நாகூர்ப்பிச்சை, எஸ்.எம். நூறு முகம்மது, கே.எம். அப்துல் றகீம் போன்ற கிராமச் சபையின் தலைவராகப் பணியாற்றியோர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். தபாலதிபர் M.M. சரீபு, மாவட்ட சபை அங்கத்தவராகவும் பணியாற்றிய S.K.S. ஹமீது என்போரும் நினைவு கூரப்படத்தக்கவர்களாவார்கள்.

**இலக்கியம், கலை, கலாசாரம்**

எருக்கலம்பிட்டியில் வாழ்ந்திருந்த முஸ்லிம் மக்கள் இலக்கியத் துறையில் ஈடுபாடு உடையவர்களாகவும் கலை, கலாசாரச் செயற் பாடுகளில் அதிகம் நாட்டமுடையவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். மதுரைத் தமிழ் சங்கத்தால் புகழப்பட்ட விதானைப்புலவர், பக்கீர் புலவர் ஆகியோர்கள் இக்கிராமத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். விதானைப் புலவரால் காந்தருபி நாடகம், கபுகாபு நாடகம் போன்ற பாவாலான நூல்கள் இயற்றப்பட்டும், நடிக்கப்பட்டும் வந்தன. இவர்களைத் தவிர கன்னத்தாப்புலவர், அபூபக்கர் புலவர், மீரா முகைதீன் ஆலிம் புலவர் ஆகியோர்களும் வாழ்ந்திருக்கிறார்கள். பிற்காலத்தில் கல்வி கற்ற பலரும் கவிதை புனையக் கூடிய ஆற்றல் பெற்றிருந்தார்கள்.

இத்தகைய புலவர்களின், அறிஞர்களின் ஆக்கங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

"யானைக்காதல்" நூலிலிருந்து சில கவிதைகள்

1. சங்கீன்ற முத்தை அன்னம்
தன்முட்டை யென்றெண்ணி
அஞ்சிறகால் மூடிநிற்கும்
அழகான மறிச்சுக் கட்டியிலும்

2. பாவிற்கு நெல் விளையும்
பழன மிகச் சூழ்ந்திலங்கும்
ஏராளர் நெற் குவிக்கும்
எழில் கரடிக் குளிதனிலும்

"காந்தரூபி" நாடகத்திலிருந்து சில பாடல்கள்

மதன சிங்கன் அரசன் தேர்மேல் ஊர்ந்து செல்கிறான்.

1. தேர்மேல் எழுந்திட்டானே - மதன சிங்கன்
தேர்மேல் எழுந்திட்டானே
தேர் மேல் எழுந்திட்டானே
பூரிய குழல் முழங்க
தத்தி திமித் தாழ மோசை
தித்தி திமித் திமிதி யென முழங்க (தேர்மேல்)

2. சங்கிர்த ராகங்கள் பாடவே - பதும மலர்
மங்கையர் நடன மாடவே
எங்கினும் கொடி பிடிக்க
தங்கு பீரங்கி வெடிக்க
இங்கிதப் பல மணிகள்
தங்கு பொன் குடை கவிக்க - (தேர்மேல்)

3. ஓடி நின்று பார்ப்பார் கோடி
ஓடி ஒளிப்பார் கோடி
எட்டி நின்று பார்பார் கோடி
எத்தனை கோடான கோடி - (தேர் மேல்)

காந்தரூபி கணவன் அறியாமல் கற்பமுற்றாள்

1. மகுடமுனை புனைந்த
மன்னவனே உம்மிடத்தில்
வார்த்தை யொன்று சொல்ல
வந்தோம் - மகாராஜனே!

2. தங்கள் மருமகளார்
சற்குண காந்த ரூபி
கற்ப முற்றாள் என்ற சேதி

கேளும் மகாராஜனே!

3. வாசல் மனைகள் எங்கும்
மணலைப் பரப்பி வைத்தோம்
துப்பு ஒன்றும் காணவில்லை
தூய மகாராஜனே!

அல்ஹாஜ் மீரா முகைதீன் ஆலிம் புலவரின் சில கவிதைகள் வருமாறு

1. மக்கா நகரில் பிறந்த
மன்னர் மஃமுதர்
மாநிலம் போற்றும் உயர்
மகிமை தங்கும் வேதர்
ஹக்கன் திருத்தூதரான
ஹாஸிம் குல ராஜர்

2. அப்துல்லாவின் மகனாக
அவதரித்த சீலர்
அன்னையர் ஆமினாவின்
அன்புக் கினிய பாலர்
மங்கை கதீஜா மணந்த
மகிமை பிரதாபர்
மாரு கீர்த்தியுள்ள
மாமதினா வாசர்

3. தண்மை நாயகி பாத்திமா
தந்தையான குருவே
அன்பு கொண்டே என்னுயிரை
ஆதரிக்கும் திருவே
விண்ணுலகம் மண்ணுலகம்
வியக்கும் எங்கள் நபியே
அண்ணலார் அஹமதென்னும்

***கலாசாரம்***

எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் மத்தியில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், பாரம்பரிய விளையாட்டுக்களும் நடைபெற்று வந்தன. சிலம்படித்தல், களிகம்பு நடனம், கிளித்தட்டு மறித்தல், குஞ்சு ஒழித்தல், குஞ்சு வைத்தல், கீச்சுக் கீச்சுத் தம்பளம் வைத்தல், சில்லுத்தட்டுப் பாய்தல், கிட்டியடித்தல், போளை சுண்டுதல், குதிரைப்பந்து, கவ்வாப் பந்து, றவுண்பந்து போன்ற விளையாட்டுக்களை ஆடி வந்திருக்கிறார்கள். இவ்விளையாட்டுக்களுள் சில பெண்களாலும் ஆடப்பட்டன. பாண்டி விளையாடும் பழக்கம் பெண்கள் மத்தியில் இருந்து வந்த மற்றொரு விளையாட்டாகும்.

தாயம் விளையாடுதல், தாயக்கட்டை உருட்டுதல், புலி ஆடு மறித்தல் போன்ற விளையாட்டுக்கள் முதியோர்களால் ஆடப்பட்டவையாகும். றாட்டின ஊஞ்சல், மஉளி வைத்தல் போன்ற விளையாட்டுக்களும் ஆடப்பட்டன.

**விழாக்களும் சடங்குகளும்**

திருமணம், கத்னா எனப்படும் சிறுவர்களுக்கு மேற்கொள்ளப்படும் சமய சடங்கான சுன்னத் வைபவம் போன்ற நிகழ்வின் போது பந்தல் போட்டு வீடு நிறக்கடதாசியால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். தலை வாயிலில் வாழைமரம் நடப்படும். வீதிகள் தோரணங்களால் அலங்கரிக்கப்படட்டிருக்கும். பள்ளிக்கு அழைத்துச் சென்று துஆப் பிரார்த்தனை செய்தபின் ஊர் வலமாக அழைத்துச் செல்லப் படுவார்கள். இனபந்துக்களால் வரவேற்கப்பட்டு சன்மானங்கள் வழங்கப்படும். பெண்பிள்ளைகள் பருவ மடைந்தால் அதனையும் விழாவாகக் கொண்டாடும் வழக்கம் இருந்து வந்தது. பிற்காலத்தில் இச்சம்பிரதாய முறைகள் இல்லாதொழிந்தன.

வருடா வருடம் ஊர்ப்பாட்டு நிகழ்வு நடைபெற்று வந்தது. உமறுப் புலவரால் றசூல் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை பாவடிவில் இயற்றப்பட்ட சீறா என்னும் புராணப் பாராயணம் தொடர்ந்து பல இரவுகள் மேற்கொள்ளப்பட்டு ஈற்றில் விசேடமாகத் தயாரித்த நார்சா

எனப்படும் சோறு வழங்கப்பட்டு வந்தது. கொடி எடுத்தல் வைபவம், பூக்குளித்தல் நிகழ்ச்சி, மௌலூது ஓதும் நிகழ்ச்சி என்பன மேற்கொள்ளப்பட்டன. பெருநாள் தினங்களை கூட்டாஞ் சோறு சமைத்து உண்டு மகிழல், பெண்கள் ஊஞ்சலாடி மகிழ்தல், இரட்டினக் கால் கட்டி விருந்தளித்தல் போன்ற நிகழ்வுகளும் நடைபெற்று வந்தன.

## இஸ்லாமிய மறுமலர்ச்சி

இஸ்லாம் தனித்துவமான கலை, கலாசார, பண்புகளைக் கொண்டுள்ளதோடு ஒரு முஸ்லிமின் வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் வரையறுத்துக் காட்டியுள்ளது. எனினும் முஸ்லிம்கள் பிற இன மக்களோடு வாழ்ந்து வந்ததன் காரணத்தால் அவர்களின் சில பழக்க வழக்கங்கள் இஸ்லாமியர்களின் வாழ்கையோடு இணைந்திருந்தன.

1965 ஆம் ஆண்டளவில் எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட "தப்லீக்" என்ற இஸ்லாமிய மறுமலர்ச்சியின் காரணமாக இஸ்லாத்தின் கோட்பாட்டுக்கு முரணான பல பழக்க வழக்கங்கள் மறைந்தன.

திருமணத்தின் போது பின்பற்றப்பட்டு வந்த மாப்பிள்ளை ஊர்வலம், வெள்ளை விரித்தல், ஆராத்தி எடுத்தல், போன்ற சம்பிரதாயங்களும் கத்னா வைபவம், பெண் பிள்ளை பருவ வயதையடையும் போது மேற்கொள்ளப்பட்டு வந்த சடங்குகள், பூக்குளித்தல், இரட்டினக்கால் கட்டுதல், அவுலியாக்கள் பேரால் நேர்ச்சை செய்தல் போன்ற மார்க்கத்திற்கு முரணான செயல்கள் மறைந்தன.

S.K. கப்பமரைக்கார் ஆலிம், K.K.S. ஹபீபு முகம்மது போன்றோரால் ஆரம்பித்து வைக்கபட்ட தப்லீக் இயக்கம் சங்குளுவை முகம்மது சுல்தான், M.P.A. ஜப்பார், M.K.M. இபுறாஹிம், S. ஜபறுல்லா, கபூர் மௌலவி, M.K. ஹபீபு முகம்மது, M.M. அபூபக்கர், A. சாகுல் கமீது, S. தாஜுதீன் போன்றோரால் வளர்சியடைந்து, தற்போது அல்ஹாஜ் அன்சார், அல்ஹாஜ் முகம்மது ஹுசைன், அசீம் ஹாஜியார், ஜெமீன், துவான், அப்துல் வாஹிது, அஸ்ரப், நவாஹிர், யூசுப், ஜமுன் G.S. சதகத்துல்லா, சியான், அர்சத், செய்னுலாப்தீன், பாஸிம் ஆகியோர்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது.



ஓலைப் பெட்டி இழைத்தல்



கிடுகு பின்னுதல்

## கல்வி வளர்ச்சி

இலங்கை ஆட்சியாளரினால் 1944 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறையின் பயனாக எருக்கலம்பிட்டி முஸ்லிம் கிராமத்தில் அவ்வாண்டு மத்திய கல்லூரியொன்று ஸ்தாபிக்கப்பட்டு அது சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து வந்தது. பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த பெற்றோர்களின் முயற்சியின் காரணமாக 1961 ஆம் ஆண்டில் முஸ்லிம் பெண்கள் மகா வித்தியாலயம் ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது. அத்துடன் கிழக்கில் பிரதம பாடசாலையொன்றும் ஆரம்பிக்கப்பட்டது. 1964 - 1972 ஆம் ஆண்டளவில் மேற்கூறிய கல்லூரிகளில் க.பொ.த (உ/த) விஞ்ஞான, கணித, மனைப்பொருளியல், கலை, வணிக வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. அதன் பேறாக இக்கிராமத்தில் பல பட்டதாரிகள் உருவானார்கள். அரசியல் வாதிகள், அறிஞர் பெருமக்கள், கல்விமான்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அரச நிருவாகிகள் போன்றோர் உருவாக்கப்பட்டார்கள். அத்தகையோர்கள் வருமாறு அட்டவணைப் படுத்தப்படுகிறார்கள். (குறிப்பு : அட்டவணை நீண்டு விட்டது என்ற காரணத்தினால் அதிபர்களாகக் கடமையாற்றியவர் (25), பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் (10) ஆகியோர்களின் பெயர்கள் சேர்க்கப்படவில்லை.)

**Political Sector**

1. Alhaj Noorudeen Mashoor, MSC (Sp. Bu. Adm) Ex-M.P. & Hon Minister
2. Alhaj M.K.H. Mohamed , BA, Dip. Ed, Member N.E.P.C
3. Late Mr. S.K.S. Hameed, Ex-Member Mannar, DC
4. Late Mr. S.A. Gaffoor, Ex-Chairman, Gramodaya Mandalaya, Erukkalampiddy
5. Mr. M.M. Ibrahim, JP, (Tr) - do -
6. Mr. Mr. P.M.S. Ibrahim, JP, (PR) - do –
7. Late Mr. S.A. Gaffoor, (Sp. Com)

**Chairman V.C.**

1. Late Alhaj S.A. Mohideen Abdul Cader,
2. Late Mr. K.K.S. Habeebu Mohamed, JP (Coroner)
3. Late Alhaj M.K.N.M. Salihu, JP
4. Late Mr. O.M. Kappapichchai, JP
5. Late S.O. Nagoor Pichchai
6. Late Alhaj S.M. Noor Mohamed, JP
7. Late Alhaj K.M.A. Raheem, JP

**High Commissioner**

1. Mr. I.S. Ansar, LLB (SLOS)

**Foreign High Commissioner**

1. Mr. K.P. Noon (B.com) 1st Secretary, Moldives
2. Alhaj I.S. Niyas, (B.Sc), Burunai, H.C., UK
3. Alhaj A.H. Zibly, (B.A.) SLHC / Saudi

**University Career**

1. Prof. Dr. I.S. Jawahir, Kentucky, USA
2. Dr. S.H. Hasbulla, M.A. Phd. Peradeniya Campus (Geography Fac)
3. Dr. Miss. Faseeha Noordeen (B.Vsc – Madical Fac – PC)
4. Mr. M.A. Aslam, M.A (Engi.) Engi. Fac, PC
5. Miss. Fahmiya Noordeen M. Sc. Nawala O.U.

**Head of Department**

1. Alhaj M.K.M. Jamaldeen, (BA) D/CBC (Rtd)
2. Mr. M.S. Allam (SLAS) – Com / NIC
3. Mr. M.C.M. Junaid (BA) Sp. Com
4. Mr. M.S. Nasar (SLAS) Hospital, Mannar
5. Mr. M.S.M. Iqbal – B.Sc (Engi) – RC & DC

**Sri Lanka Customs**

1. Mr. M. Mubeen (B.A.)
2. Mr. S. Lukman (B.Sc Hon. Msc)
3. Mr. A. Ameen (B.A.)

**Lawyers**

1. Late Mr. S.K. Noordeen
2. Mr. M. Sathakathulla (B.A.)JP
3. Alhaj M. Saburdeen, BA
4. Alhaj A.W. Ramseen (L.L.B)
5. Mr. S. Jabarulla (M.A.) L.C.O. for IDP

**Education Sector**

1. Late Mr. K.M. Aboobukar (SLEAS) E.O
2. Late Mr. A. Sahabdeen (SLEAS) – ADE
3. Mr. Alhaj A.C.A. Haq (SLEAS) – DE, SS/ME (Retd)
4. Alhaj M.K.H. Mohamed – (SLEAS) Retd.
5. Mr. I. Naseer – BA (SLEAS) DDE
6. Mr. M.I. Asaathulla – BA (SLEAS) ADE
7. Miss. Subaidha Cassim (D/Com)
8. Mr. M. Najeebullah (SLEAS) ADE
9. Mrs. H. Zarook (B.A. Dip. Ed) Master Tr – Tamil

**Doctors**

1. Dr. Alhaj M.I. Jahufar (MBBS)
2. Dr. Alhaj S. Zahir (Ayur)
3. Dr. Alhaj S. Fauzi (MBBS)
4. Dr. A.W. Jeeseem (MBBS)
5. Dr. Miss. A.G. Izzath (MBBS)

6. Dr. Miss M.s. Musammila (MBBS)
7. Dr. Miss Faisy Noordeen (MBBS)
8. Dr. Miss Thasleema Amanulla (MBBS)
9. Dr. Miss Haleema Amanullah (MBBS)
10. Dr. Miss Musthaneera Amanullah (MBBS)
11. Dr. Miss A. Waseem (MBBS)
12. Dr. Miss A.G. Natheeja (MBBS)
13. Dr. Miss S.L. Naseeba (MBBS)
14. Dr. M. Asik (BDS)
15. Dr. Miss R.M. Ali (BDS)

**Accountant**

1. Mr. S. Akram
2. Miss J. Sakura
3. Miss. A.H. Jasitha (B.A. HNDA)

**Surveyer**

1. Mr. S. Sathakathullah

**Bankers**

1. Alhaj P.M. Munas – A.M. / PB – Rtd.
2. Mr. M. Zubair – M/PB
3. Mr. M.S. Ajmal – AM/PB
4. Alhaj I.S. Wasook, PB
5. Mr. A.H. Aruz – P.B.
6. Mr. S. Wafeek – System Operator – P.B
7. Alhaj M. Sahulthulla (Rtd.) – B.C
8. Mr. M.S. Jasmin S.M. / BC
9. Alhaj S. Mulaffar (Rtd.) B.C.
10. Mr. S.H. Raukunudeen (Rtd) B.C.
11. Alhaj A.C. Rauff (Rtd) – B.C.
12. Mr. M.S. Samanudeen, M/NSB
13. Mr. A.H. Murshid, NSB
14. Mr. J.Sajath – C.B
15. Miss. A.H. Bajeela, HNB

**Engineers**

1. Mr. A.G. Irshad
2. Mr. A.C. Salma
3. Mr. S.H. Rafiudeen (Rtd)
4. Mr. M. Jalees (Rtd)
5. Mr. A.G. Munas
6. Mr. A.G. Fauseen
7. Mr. M.S. Ameenudeen

**Police Department**

1. Late Mr. Mohideen
2. Late Mr. Ibrahim
3. Mr. K. Thasim
4. Mr. A.J. Ramseen (Rtd)

**Writers**

1. Mr. S.H. Nihmathullah
2. Late Mr. M.P.A. Jabbar (Coroner)
3. Mr. M. Nihumathullah (Pr.)
4. Alhaj M.K.H. Mohamed (Pr. )
5. Late Mr. K.S.A. Gaffoor

**Technicians**

1. Mr. S. Nowshad
2. Mr. M.M. Sufiyan
3. Mr. M.S. Iqbal
4. Mr. A. Ameen

**Principals / Special Post Holders**

1. Hajiyani Mrs. K.A. Gaffoor B.Sc. (SLEAS)
2. Al-Haj M.K.H. Mohamed B.A. (SLEAS) (Rtd)
3. Late Mr. M.M.A. Gaffoor (Gr. III)
4. Late M.M. Aboobakar
5. Hajiyani Mrs. A. Sahabdeen
6. Late Mr. A.S. Cassim (Pr.)
7. Al-Haj M.S. Alawudeen (Pr.Rtd)
8. Mr. M.K.M. Musthapha
9. Late Mrs. M.K.M. Wahida Waseer (Pr.)
10. Mr. Alhaj M. Nihmathulla (Pr. Rtd)
11. Al-Haj M.S. Amanullah (Pr. Rtd)
12. Al-Haj S.K.K. Barakathulla (Pr. Rtd)
13. Mr. M.M. Mohamed Ali (Pr. Rtd)
14. Mr. M.C.M. Amanullah (Pr. Rtd)
15. Late Mr. S. Abul Hudha (Pr.)
16. Mr. P.M.S. Ibrahim (Pr. Rtd)
17. Mr. N. Sulaiman (Pr. Rtd)
18. Mr. A.M. Saheed (Pr.)
19. Mr. K.M.S. Akbar (Pr.I)
20. Mr. M.C.M. Junaid (Pr.I.Rtd)
21. Mr. M.M. Razick (Pr. I. Rtd)
22. Mr. M.K. Nageebullah (G.v. I)
23. Hajiyani Mrs. Mahumootha A. Haq (Pr. I)
24. Al-Haj K. Majid (Pr. Rtd)
25. Late Mr. S.M. Musthafa (Pr.)

# சிலாவத்துறை – ஓர் அறிமுகம்

எச்.எம். றஸீன், பீ.எட். (கல்விமாணி)

**அறிமுகம்**

வன்னி தேர்தல் மாவட்டத்தில் முஸ்லிம் அரசியல் பிரதிநிதித்துவத்தை நிர்ணயம் செய்கின்ற பலம் பொருந்திய முசலிப்பிரதேசத்தின் வளம்மிக்க தளம் சிலாவத்துறையாகும்.

வெண் சங்கும், நன்முத்தும், கடலட்டையும் தந்து வாழ்வை வளப்படுத்தும் இந்து மகா சமுத்திரம் மேற்கேயும் தன் தேவைக்காய் மட்டும் நெல்லை உற்பத்தி செய்யும் அளவு மருத நிலத்தை கிழக்காகவும், வடக்கேயும், தெற்கேயும் இன உறவை என்றும் கடைபிடித்த இரண்டு தமிழ்க் கிராமங்களையும் எல்லைகளாகக் கொண்டமைந்ததே சிலாவத்துறையாகும்.

இதன் வட எல்லையில் அமைந்த நீரோடை அருகே புராதன வரலாற்றுச் சின்னம் ஒன்று காணப்படுகிறது. அதுதான் அன்றைய அறேபியர்களின் வருகையை சுட்டி நிற்கும் மிகப் பருமன் வாய்ந்த பெருக்கு மரம். ஆதுமட்டுமல்லாமல் தன் இறுதி நிலையை அண்மித்து கடலோடு சங்கமமாகிக் கொண்டிருக்கும் மிகப்பழமையான அரண்மனை ஒன்றும் இவ்வடக்கு எல்லைக்கு சற்று அப்பால் காணப்படுகிறது. இதன் பூர்வீகம் சரியாக அறியப்படாவிட்டாலும் இது பல்கீஸ் மகாராணியின் மாளிகை என்றும், அல்லிராணியின் அரண்மனை என்றும் பேசப்படுகிறது.

இவ்வாறு பழம் பெரும் வரலாற்றுச் சின்னங்களை தன்னகத்தே கொண்டிருந்த போதும் இக்கிராமம் மிகத் துரித வளர்ச்சி கண்டு ஒரு நவீன நகராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு வளர்ச்சி அடைந்து வந்ததற்கு சான்றாக அதன் உட்கட்டமைப்புகளான வீதிகளையும குடியிருப்பு ஒழுங்குகளையும், அரச மனைகளையும், வர்த்தக நிலையங்களையும், கல்வி, சுகாதார மேம்பாடுகளையும் குறிப்பிடலாம்.

இவற்றிலிருந்து நோக்கும் போது சிலாவத்துறை கிராமம் என்ற நிலையிலிருந்து விடுபட்டு ஒரு நகரத்திற்குரிய பண்புகளையும், தோற்றத்தையும் கொண்டிருந்ததை அறியலாம்.

வரலாறு

அறேபியர்களின் இலங்கை வருகையுடன் இக்கிராமத்தின் வரலாறு ஆரம்பமாவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இக் கிராமத்தின் கடல் பிரதேசத்தை தளமாகக் கொண்டே அறேபியர்கள் முத்துக் குளிப்பு நடவடிக்கைகளையும் மற்றும் இதனுடன் தொடர்புபட்ட வணிக நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாகவும் வரலாற்றாய்வாளரான 'வான்' என்பவர் குறிப்பிடுகிறார்.

இதனால் இக்கிராமத்தின் தொடக்கம் பற்றிய காலத்தை சரியாக வரையறையிட்டு கூறமுடியாதுள்ளது. எவ்வாறாக இருந்த போதும் இக்கிராமம் பழமை மிக்க வரலாற்று புகழ்வாய்ந்தது என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

அயல் நாடான இந்தியாவின் தென் பகுதி மக்களும் தொழில் தேடி கடல் மார்க்கமாக இக்கிராமத்திற்கு வருகை தந்ததையும் அவர்கள் சட்ட விரோதமாக இக்கிராமத்துக்குள் பிரவேசித்ததால் அவர்களை 'கள்ளத்தோணி' என்று குறிப்பிட்டு அக்கால கிராம அதிகாரிகள் (Village Head Man) அவர்களை கைது செய்ததையும் அறிய முடிகிறது. இதிலிருந்து இக்கிராமம் அக்காலத்திலேயே தொழில் வளமிக்க பிரதேசமாக காணப்பட்டதையும் அறிய முடிவதுடன் இக்கிராமத்தின் மூதாதையர் அறேபிய, தென்னிந்திய வம்சாவளியினர் என்பதையும் உறுதிப்படுத்தக் கூடிய ஆதாரங்கள் உண்டு.

## பொருளாதாரம்

முசலிப் பிரதேசத்தின் பொருளாதாரம் 73% விவசாயத்திலும், 9% மீன்பிடித்தலிலும், 5% வியாபாரத்திலும், 3% அரசதொழிலிலும் ஏனைய 10% வேறு தொழில்களிலும் தங்கி இருந்த போதும் சிலாவத்துறையின் பொருளாதாரம் இதற்கு முற்றிலும் மாறுபட்டு 63% மீன்பிடியிலும், 12% வர்த்தகத்திலும், 10% விவசாயத்திலும், 9% அரச தொழிலிலும் ஏனைய 6% வேறு தொழில்களிலும் தங்கி இருந்ததை அறிய முடிகிறது.

## கடற் றொழில்

முசலிப் பிரதேசத்தில் கடலன்னை தன் அலைக்கரங்களால் தழுவித் தாலாட்டும் ஒரே ஒரு முஸ்லிம் கிராமம் சிலாவத்துறையாகும். இங்கு மிகப்பழமைவாய்ந்ததும், முக்கியமானதுமான தொழில் கடற்றொழிலாகும். இங்குள்ள மக்களின் பிரதான ஜீவனாம்ச தொழிலாக இத்தொழில் இருந்த போதும் வெவ்வேறு வகையான தொழில்களிலும் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். கடல் தொழிலிலும் இவர்கள் பல்வெறு வகையான தொழில்களில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

## முத்துக் குளிப்பு

இத் தொழில் புராதன கால கைத்தொழிலாக இருந்தபோதும் இக்கிராமத்திற்கு ஒரு நீண்ட வரலாற்றையும் பெரும் புகழையும் தேடித்தந்த தொழில் துறையாகும். அக்காலத்தில் சிலாவத்துறை முத்துக்குளிப்பாளர்களாலும், முத்து வாங்கும் வணிகர்களாலும் நிரம்பி வழிந்ததாகவும் இதனால் இக்கிராமம் செல்வம் கொழித்ததாகவும் வரலாற்று நூல்களில் இருந்து அறிய முடிகிறது.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் தொடக்கம் பிரித்தானியர் ஆட்சிக்காலம் வரை மிகப் பெருமளவில் இங்கு முத்துக்குளிப்பு நடைபெற்றதாக வரலாற்றாய்வாளரான போக் (BOAKE) என்பவர் குறிப்பிடுகிறார்.

இங்கு எடுக்கப்பட்ட முத்துக்களை தன் கிரீடத்தில் அணிந்து எகிப்திய இளவரசி கிளியோப்பட்ரா அழகு பார்த்ததாகவும் வாய் வழியாக பேசப்படும் கதைகளும் உண்டு.



முத்துக் குளித்தலை பார்வையிடும் அரசி

இறுதியாக 1960 ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை அரசு மீண்டும் இத்தொழிலுக்கு புத்துயிர் அளித்து முத்துக்குளிப்பில் ஈடுபட "நோர்த்ஸ்டார்', 'கனேடியன்' என்ற இரண்டு படகுகளைப் பயன்படுத்தியது. இதுவே இறுதி முத்துக்குளிப்பாகும்.

இவ்வாறெல்லாம் இங்கு முத்துக்குளிப்பு நடைபெற்றதற்கு பலமான ஆதாரமாக, இன்றும் இப்பிரதேச மண்ணை அகழும் போது முத்து அகற்றப்பட்ட சிப்பிகளை பல அடி ஆலத்திற்கு காணமுடிகிறது.

19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியுடன் இத்தொழில் வலுவிழந்துவிட்ட போதும் இக்கிராம மக்கள் தங்கள் வாழ்வை வளப்படுத்த இன்னும் கடலன்னை தன் மடியில் இப்பொற்சுரங்கத்தைப் பாதுகாப்பாக வைத்திருப்பதாகவும், தாங்கள் விரும்பியபோது இத்தொழிலை உயிர்ப்பித்து தங்கள் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளலாம் என்ற நினைவுகளோடும் வாழ்ந்து வருகின்றனர்.

### மீன்பிடி

இங்கு இரண்டு பிரதானவகை மீன்பிடித்தல் இடம்பெற்றிருக்கின்றது. அவர்களின் பொருளாதார நிலைக்கும் பருவகாலத்திற்கும் ஏற்றவாறு இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

### ஆழ்கடல் மீன்பிடி

இத்தொழிலில் ஈடுபட்ட கிராம மக்களைவிட வெண்ணப்புவ, மாரவில, நீர்கொழும்பு போன்ற பிரதேசங்களிலிருந்து இங்கு வந்து தற்காலிக தங்குமிடங்களை அமைத்து பருவகால மீன்பிடிப்பில் ஈடுபட்ட வேற்று மத மீனவர்களே எண்ணிக்கையில் அதிகம் என்பது ஆச்சரியமாக இருந்த போதும் உண்மையாகும். அவ்வாறு மீன்பிடிக்கப்படும் பருவ காலத்தை 'சீசன்' என அழைப்பர். அக்காலத்தில் சிலாவத்துறை மிகவும் சுறுசுறுப்பான ஒரு மீன்பிடி விற்பனைச் சந்தையாக மாறிவிடும்.

இக்கிராமத்தவர்களைப் பொறுத்த மட்டில் ஆழ்கடல் மீன்பிடிப்பில் பலவித முறைகளைக் கையாண்டு வெவ்வேறு வகையான மீன்களைப் பெருமளவில் பிடித்து பணமீட்டினர். இதற்கு சாதகமாக அமைந்தது சிலாவத்துறை கடற்பிரதேசம் மீனினம் வாழ்வதற்கான கண்டமேடு களைக் கொண்டிருப்பதாகும். இவ்வாறு நேரடியாக மீன்பிடிப்பவர்களாக மற்றுமன்றி மீன்களை மொத்தமாக கொள்வனவு செய்து விற்பனை செய்யும் முதலாளிகளாகவும் இக்கிராம மக்கள் காணப்பட்டதுடன், இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் மீன்களை உள்ளூரிலும், கொழும்புக்கும் லொரிகளில் எடுத்துச் சென்று மொத்தமாக விற்பனை செய்யும் சிக்கலான பாரிய வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

### கரையோர மீன்பிடி

இந்தவகை மீன்பிடியை உள்ளூரவர்களுள் குறிப்பிட்வர்களே செய்து வந்தனர். இதுவும் பலவகை முறைகளில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதில் கைவிடப்பட்ட பிரதான கரையோர மீன்பிடிமுறை 'கரைவலை' மீன் பிடி முறையாகும். இது பெருமளவு வருமானத்தை தருவதுடன் ஒரு சுவாரஷ்யமான தொழிலாகவும் காணப்பட்டது. இவ்வகை தொழிலை செய்வதற்காக சிலாவத்துறை கடற்கரைப் பிரதேசம் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டு அவை "பாடு" என அழைக்கப்பட்டது. குறிப்பிட்ட பாட்டில் அதற்குரியவர்கள் மட்டுமே மீன்பிடிக்க அனுமதிக் கப்பட்டனர். இவ்வகை மீன்பிடிப்புக்காக வித்தியாசமான வலைகளும், பெருமளவு மீன்பிடி உபகரணங்களும் அதிகளவு ஆட்களும் பயன் படுத்தப்பட்டனர். இவ்வகைத் தொழிலை முன்னின்று இயக்குப வர்களை 'சம்மாட்டிகள்' என அழைத்தனர். இவ்வகை தொழில்

விஞ்ஞான முன்னேற்றங்கள் காரணமாகவும், தொழிலாளர்கள் பற்றாக்குறை, இடநெருக்கடி காரணமாகவும் கைவிடப்பட்டது. கரையோர மீன்பிடிப்பில் மற்றுமொரு வகை 'பட்டிவலை' மீன்பிடிப்பாகும். இது கரையிலிருந்து சுமார் 100 தொடக்கம் 200 மீற்றருக்கு அப்பால் கம்பினால் கடலில் வேலியமைக்கப்பட்டு அதில் வளையைக் கட்டி மீன்களை அதில் சிக்கவைத்து பெருமளவு பலவகையான மீன்களைப் பிடித்தனர்.

இதைப் போன்றே கடலில் சிறிது தூரத்தில் தாவரக்கிளைகளைப் போட்டு அதில் கணவாய்களை முட்டையிட வாய்ப்பை ஏற்படுத்தி அங்கு வந்து நிற்கும் கணவாய்களைப் பிடிப்பர். இது பெரும்பாலும் நிலவு காலங்களில் மேற்கொள்ளப்படும் ஒரு வகையான கரையோர மீன்பிடிப்பு முறையாகும்.

கரையோர மீன்பிடிப்பில் மிகவும் செல்வாக்குச் செலுத்தும் இன்னுமொரு வகைத்தொழிலான 'வீச்சுவலை மீன்பிடித்தல்' இங்கு மிகவும் பிரபல்யம் வாய்ந்ததாகும். நினைத்த மாத்திரத்திலே உயிர் மீன்களை உடனே பிடித்து விற்பனை செய்யும் இம்முறையால் இக்கிராம மக்கள் விரும்பிய நேரங்களிலெல்லாம் தமது உணவுக்காக மீனைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. செலவு குறைந்த மீன்பிடி முறையால் கடலில் மட்டுமன்றி அருவிகளிலும் ஓடைகளி லிருந்தும் பல்வேறு வகையான சுவையான மீன்களும் இறால்களும் பிடிக்கப்பட்டன.

### சிங்கி பிடித்தல்

இவ்வகைத் தொழில் மூலம் பெருமளவு பணம் கிடைக்கப்பெற்றது. இத்தொழிலை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு மூல காரணமாக அமைந்தது சிலாவத்துறைக் கடற்பரப்பின் உட்கட்டமைப்பே ஆகும். பெருமளவு பார்களை இக்கடலின் கரையோரப் பகுதிகள் கொண்டிருந்தன. இதில் பிரதானமாக 'மரைக்கா பார்' என அழைக்கப்பட்ட பாறைத்தொடரைக் குறிப்பிடலாம். இதில் பெருமளவு சிங்கிகள் தங்கி தங்கள் வாழ்க்கை வட்டத்தை நடத்தி வந்திருக் கின்றன. இதில் குறிப்பிட்ட உரிய அளவுடைய சிங்கிகளை மட்டுமே பிடிப்பர். அதனால் அந்த இனம் அழிந்துவிடாமல் பாதுகாக்கப்பட்டது.

தொடராக சிங்கிகளை பிடிக்க வாய்ப்பேற்பட்டது. இவ்வகை தொழிலை சுழியோடிகளே பெருமளவில் செய்து வந்தனர்.

**அட்டை சங்கு, நாகவணம் எடுத்தல்.**

இன்றும் இவ்வகைத் தொழில்கள் இக்கிராமத்தவர்களால் நவீன முறைகளைப் பயன்படுத்தி வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப் படுகின்றன. மிகப் பாரிய அளவில் பெருமளவு மூலதனத்துடன் இவ்வகைத் தொழில்களை மேற்கொள்ளும் இக்கிராம கோடீஸ்வர வர்த்தகர்களும் உள்ளனர்.

சிலாவத்துறை கடற்பிரதேசத்தில் எடுக்கப்படும் சங்குகளுக்கு உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் நல்ல கிராக்கி இருந்து வந்துள்ளது. அதற்குக் காரணம் நல்லரக சங்கினமான 'ஜாதிச் சங்குகள் ' இங்குதான் கிடைத்திருக்கின்றன. சங்குத் தொழிலுக்கும் சிலாவத் துறைக்கும் மிக நீண்ட பழமையான வரலாறு உண்டு. தென்னிந்திய சங்கு குளிப்பாளர்கள் அன்று தொடக்கம் இன்றுவரை சங்கு குளிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இங்குதான் சாதாரண பல்லாயிரம் சங்குகளுக்கு இடையே வாழும் பெறுமதிமிக்க 'வலம்புரி' சங்குகளும் வாழுகின்றன. இவ்வாறு அரிதாய்க் கிடைக்கும் வலம்புரிகள் ஆயிரம் சூழ வாழும் கிடைத்தற் கரிய கடல்படு திரவியமான 'சலஞ்சலம்' சங்குகளும் கிடைக்கின்றன.

உள்நாட்டுக்காரர்களால் உண்ண முடியாத அளவு விலை போகும் கடல் அட்டைகளும் மிகப் பெரும் அளவில் இங்கு குளிக்கப்பட்டன. இத்தொழிலால் இக்கிராம சுழி யோடிகள் மிகவும் பயனடைந்தனர். இவர்களின் பொருளாதார முன்னேற்றத்தின் மற்றுமொரு மைற்கள் இந்த கடலட்டை கண்டுபிடிக்கப்பட்டதாகும். இதனை உரிய முறையில் பதனிட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் மொத்த வியாபார ஏற்றுமதியாளர்களும் இக்கிராமத்தில் உள்ளனர்.

நாகவணம் என்னும் சங்கின் உயிருள்ள உடற்பகுதியில் காணப்படும் ஒரு வகை தடிப்பான கவசம் பெருமளவு பெறப்பட்டது. இன்றுவரை இதனை எதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பது தெளிவாக அறியமுடியாவிட்டாலும் இதனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள் என்பதையும் இதுவும் மிகப் பெறுமதியான ஒரு கடல்படு

பொருள் என்பதையும் அறிய முடிகிறது. அத்துடன் இதில் கறுப்பு, வெள்ளை என இருவகைகளும் உண்டு.

### வர்ண மீன் பிடித்தல்

சிலாவத்துறையை அண்டிய கடற்பிரதேசம் பெருமளவு பவளப் பாறைகளைக் கொண்டிருப்பதால் இதில் பல வகையான, பல நிறங்களைக் கொண்ட மீனினங்கள் வாழ்ந்து வருகின்றன. இவை உரிய உபகரணங்களைப் பயன்படுத்தி உயிருடன் பிடித்து நீர் நிரம்பிய பொலித்தீன் பைகளில் இட்டு பிராணவாயு வழங்கப்பட்டு உயிருடன் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இதனை தொழிலாக பிற இடங்களைச் சேர்ந்த சிங்கள சகோதரர்களும், வெளிநாட் டவர்களும் செய்து வந்த போதும் இவர்களுக்கான வழிகாட்டிகளாக உள்ளூரவர்களே ஈடுபட்டு வந்தனர்.

### விவசாயம்

சிலாவத்துறை மக்கள் பெருமளவு தமது பொருளாதார நடவடிக்கைகளை கடலை நோக்கி அசைத்திருந்த போதும் ஒரு சிறு தொகையினரான விவசாய நிலச் சொந்தக்காரர்கள் உள்ளூரிலும், அயற்கிராமங்களிலும் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண் டிருந்தனர். பெரும் பாலும் தமது உணவுத் தேவைக்கான நெல்லையே இவர்கள் உற்பத்தி செய்து வந்தனர்.

இப்பிரதேசத்தின் மற்றுமொரு விவசாய நடவடிக்கையான தென்னைப் பயிர்ச் செய்கை மிகவும் வெற்றிகரமாக அக்காலத்தில் மேற் கொள்ளப்பட்டது. பல ஏக்கர் தென்னந்தோட்டங்கள் இக்கிராமத்து தனி நபர்களுக்கு சொந்தமாக இருந்து வந்தது. இதனால் இத் தோட்ட உரிமையாளர்களும், அதனுடன் சம்பந்தப்பட்ட தொழிலாளி களும், வியாபாரிகளும் பொருளாதார ரீதியாக நன்மை அடைந்தனர்.

வீட்டுத் தோட்டங்களில் பழ மரங்களும், மரக்கறிவகைகளும், முருங்கை போன்றனவும் பயிரிடப்பட்டன. எந்த வித உரப்பாவனையும் இன்றி நல்ல விளைச்சலைப் பெற்றனர், இதற்குக் காரணம் இப்பிரதேச வளமிக்க மண்ணே.

வர்த்தகம்

சிலாவத்துறை முசலிப் பிரதேசத்தின் தலை நகரம் எனக் கருதப்பட்டதற்கு பிரதான காரணம் அங்கு எல்லா வகையான வர்த்தக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டமையே. சிலாவத் துறையின் கடற்கரைப் பிரதேசம் முழுமையான கடல்படு பொருட்களின் மிகச் சுறுசுறுப்பான வர்த்தக மையமாக காணப்பட்டது. அத்துடன் எல்லாவிதமான சேவைகளையும் வழங்கும் சுமார் 65க்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களும் அழகுற அமையப் பெற்றிருந்தன. இவ்வகை வர்த்தக நடவடிக்கைகளில் உள்ளூர்க்காரர்கள் மட்டுமன்றி அயல் கிராமத்தவர்களும் பெருமளவில் ஈடுபட்டிருந்தனர்.

அரச தொழில்

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் இக்கிராமத்தில் ஐந்து அரச ஊழியர்களே இருந்ததாக அறிய முடிகிறது. ஆனால் இன்று முற்றிலும் இந்த நிலை மாறி பிரதான தொழில்களில் ஒன்றாக அரச தொழில் இடம்பிடித்து வருகிறது. எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட பலதரப்பட்ட அரச ஊழியர்கள் உள்ளனர். இதில் அதி உயர் கல்வித்தகைமை, தொழிற்றகைமை கொண்ட நிர்வாக சேவை அதிகாரிகளும், 'அப்பலோ' போன்ற பிரபல்யமான மருத்துவ மனைகளில் கடமையாற்றிய வைத்தியர்களும் அடங்குவர். எதிர்காலத்தில் அரச தொழில் புரிபவர்களின் வீதம் மிகப் பெரிய அளவில் அதிகரிக்கும் ஆயத்தங்களுடன் இன்று இக்கிராமம் காணப்படுகிறது.

சிலாபத்துறையில் முஸ்லிம்கள் தற்போது மீள் குடியேறி உள்ளதால் எதிர்காலம் சிறப்பாய் அமையும் என்று எதிர்பார்க்கலாம்.



அழிந்து கொண்டு போகும் அல்லி ராணிக் கோட்டை (அல்லது பல்கீஸ் ராணி கோட்டை)

சிலாத்துறை - அரிப்புத்துறை

# சிலாவத்துறையின் கலைகளும், கலாசார பண்பாட்டு விழுமியங்களும்

- எச்.எம். றஸீன். B. Ed -

சிலாவத்துறை மக்கள் கடின உழைப்பாளர்களாக இருந்தபோதும் மாற்று மதத்தவர்களுடன் இரண்டறக்கலந்து வாழ்ந்த போதும் தமது கலை, கலாச்சாரங்கள், பாரம்பரியங்களைப் பேணி கடைபிடித்து பாதுகாத்து வந்திருக்கின்றனர். பரம ஏழைகளும் பரம்பரைப் பணக்காரர்களும் இக்கிராமத்தில் வாழ்ந்த போதும் ஒருவரைவிட மற்றவர் உயர்வாகவோ அன்றி தாழ்வாகவோ என்றும் கருதப்படாத பண்பாடு இன்றும் நிலைத்திருக்கிறது.

## புலவர்கள், கவிஞர்கள்

முசலிப் பிரதேசத்தின் புகழ்மிகு புலவர்கள் இங்கு வாழ்ந்து தன் ஆற்றலையும், புலமையையும் வெளிக்காட்டி இருக்கிறார்கள். இவர்களது இரசனை சொட்டும் கவிகள், கற்பனை வளமும், கவிதாஞானமும் கொண்டவையாகும். பெயர் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு புகழ் பெற்ற புராண விரிவுரையாளர் மர்ஹூம் அல்ஹாஜ் N.M. ஹபீபு முகம்மது மரைக்காயர் அவர்கள் பல புராண விரிவுரைகளை நிகழ்த்தி புகழ்பெற்றதுடன் இப்பிரதேசத்தின் காதி நீதிமன்றத்தின் நீதவானாகவும் நீண்டகாலம் கடமையாற்றியுள்ளார்.

மற்றொரு புலவரான மர்ஹூம் S. செய்குதாவூதுப் புலவர். இவர் மிக அற்புதமான கவிகளைத் தந்தவர். இன்றும் கூட இவரது பாடல்கள்

வாய்மொழி வழியாக பாடப்பட்டு, பேணப்பட்டு வருகின்றன. இன்றும் இப்புலமை மிகுந்த மனிதர் 'சோனாச்சேனா" என்று நினைவு கூரப்படுகின்றார்.

இன்னுமொரு புலவரான, மார்க்க அறிஞர்களை தன் மைந்தர்களாக இம்மண்ணுக்கு விட்டுச் சென்ற மர்ஹூம் M.M. இபுறாகீம் பாவலர் அவர்கள். மிகுந்த கற்பனை வளம் கொண்ட இப்பாவலர் விட்டுச் சென்ற கவிகள் ஏராளம். இவை இன்றும் பலரையும் வியப்புக் குள்ளாக்கும் சீரிய தன்மை வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. அன்று எமது முன்னோர் தொடங்கிய இப்பணியை இன்றும் வாழும் இளந் தலைமுறைக் கவிஞரான H.M. பைரூஸ் போன்ற புதுக்கவிதை படைப்போரால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இவரது கவிதை கள் பல தினசரிப்பத்திரிகைகளில் பல தடவைகள் இடம் பெற்றுள்ள துடன் இலக்கியவாதிகள் பலரின் வரவேற்பையும் பெற்றிருந்தது.

**கூடெடுத்தல்**

தென்னிந்திய நகரமான காயல் பட்டணத்திலிருந்து இலங்கை வந்து சிலாவத்துறையில் வாழ்ந்த மர்ஹூம் லேனாகானா ஹமீது என்ற கலைஞனின் கைவினையாலும், கற்பனைத்திறனாலும், சிந்தனா சக்தியாலும் உருவாக்கப்பட்டு மின்சாரமின்றி சுழலச் செய்யப்பட்ட 'சந்தனக் கூடு' அக்காலத்தில் காலத்தை வென்று நின்ற விந்தை மிகு நிகழ்வாக அமைந்திருந்தது. வருடாந்தம் இந்நிகழ்வை, இவ்வற்புதத்தை அவர் நிகழ்த்திக்காட்டுவதுண்டு. அந்நிகழ்வு நடைபெறும் காலங்களில் சிலாவத்துறை பெருவிழாக் கோலம் பூண்டு காட்சி தரும். அலங்கரிக்கப்பட்ட அச்சந்தனக் கூடு சுழலச் செய்யப் படும் போது வர்ண சரிகைகள் ஒளி வீசி ஜாலம் புரியும், சின்ன மணிகள் ஒலி எழுப்பி தாளம் தரும். இதனைக் காணக் கோடிக் கண் வேண்டும் என்று புலவர்கள் பலர் வியந்து பாராட்டியுள்ளனர். இவ்வகை அரிய நிகழ்வானது இன்று மறைந்துவிட்டதுமன்றி இதனை அறிந்து வைத்திருந்தவர்களும் மறைந்து விட்டதால் இவை பற்றிய தகவல்கள் ஆவணப்படுத்தப்படுவது அவசியமாகின்றது.

**சிலம்படி**

இக்கலைக்கு அக்காலம் நல்ல வரவேற்பு இருந்தது. இதனை அறிந்து வைத்திருந்தவர்கள் வீரம் மிக்கவர்களாகக் கருதப்பட்டனர்.

இக்கலைக்கு பெயர்போன இருவர் இக்கிராமத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். 'வேங்கைகள்' எனப் பெயர் வாங்கிய மர்ஹூம் றாவன்னா மூனா அமீர் முகைதீன் அவர்கள். இவர் மிகக் கம்பீரமான தோற்றம் கொண்டவர். இவருடன் மர்ஹூம் பீ.எம். முகம்மது ஹனீபா அவர்களும் இக்கலையை அறிந்து வைத்துமிருந்தனர். பல பொது நிகழ்வுகள், கலைநிகழ்ச்சிகளின் போது இவர்கள் நெற்றிமுட்டுக் கோலெடுத்து, நாலு வீடு, எட்டு வீடு கட்டி கால்மானம், கால்தாளம் போட்டு நேர்த்தியாக சிலம்பம் விளையாடியதை இரண்டு போர்ச் சேவல்கள் போல இவர்கள் மோதிக் கொள்வர்' என 'விடியாத இரவில்லை' என்ற நூலில் அதன் ஆசிரியர் M.G. ஹாமித் குறிப்பிடுகிறார்.

## கோலாட்டம்

அன்று தொட்டு இன்று வரை வயது வேறுபாடின்றி பின்பற்றப்படும் ஒரு கலைதான் கோலாட்டமாகும். இதனைக் கழிகம்படித்தல் எனவும் அழைப்பர். இக்கிராமத்தில் நடைபெறும் எல்லா விழாக்களின் போதும் குறிப்பாக வரவேற்பு வைபவங்களின் போதும் இது ஒரு சிறப்பம்சமாக இடம்பெறும். இக்கலையின் வித்தகராக அக்காலத்தில் சீயன்னா ஹாஜாமுகைதீன் பாஸ் அவர்கள் திகழ்ந்திருக்கின்றார்கள். அவர் வெள்ளை உடை தரித்து, குஞ்சத்தலைப்பாகை கண்டு, தன் குழுவினரோடு ஆடிய கோலாட்டங்கள் இன்றும் பிரபல்யமாகப் பேசப்படுகிறன. இவர் இக்கலையில் மான்வெட்டு, மரைவெட்டு என்றெல்லாம் புதுமைகளை புகுத்தி இக்கலைக்கு மேலும் மெருகூட்டி வளர்த்து வந்த போதும் இக்கலை இன்று மறைந்து கொண்டிருப்பது வேதனை தருகிறது.

## நூல் வெளியீடு :

ஆற்றல் மிக்க கல்விமான்களை தன்னகத்தே கொண்டுள்ள முசலிப்பிரதேசம் பெருமளவில் நூல்களை புத்தக வடிவில் வெளியிட்டு வைக்காத பெருங்குறையைக் கொண்டிருந்தது. சிலாவத்துறையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் M.G. ஹாமிட் அவர்கள் எழுதிய கல்வி ஆய்வு நூலான 'விடியாத இரவில்லை' நூல் அண்மையில் வெளியிட்டுவைக்கப்பட்டதன் மூலம் சிலாவத்துறைக் கிராமம்

தன்னகத்தே எழுத்தாளர்களைக் கொண்ட புகழையும் ஈட்டிக் கொண்டது. இந்நூல் ஆங்கிலக் கல்வியின் அவசியம் பற்றி தமிழில் வெளிவந்த காத்திரமான படைப்பாகும். இந்நூல் இப்பிரதேசத்தின் கல்விப்புரட்சி ஒன்றுக்கு வழிகோலுகிறது.

## சினிமா:

சிலாவத்துறைக் கிராமம் இக்கலை பற்றியும் பேசப்படும் தகைமையை மிக அண்மைக் காலத்திலேயே பெற்றுக்கொண்டது. இப்புகழை தன் சொந்த மண்ணுக்கு பெற்றுக் கொடுத்தவர் நடிகர் A.A. மன்சூர் அவர்கள். வடபுல முஸ்லிம்களின் இடப்பெயர்ப்பு அவலத்தை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட சிங்கள தமிழ் இரு மொழி மூல திரைப்படமான 'இர மதியம' (உச்சிப்பொழுது) என்ற திரைப்படத்தில் முக்கிய வேடமேற்று நடித்து தனது நடிப்பாற்றலை வெளிக்காட்டியுள்ளார். இத்திரைப்படம் 5 சர்வதேச விருதுகள் உட்பட 7 விருதுகளைப் பெற்றுள்ளது. இத்திரைப்படம் தலைநகரில் உள்ள முன்னணி திரையரங்குகளில் நீண்ட நாட்களாக காண்பிக்கப்பட்டு வசூலில் சாதனை படைத்ததும் குறிப்பிடத்தக்கதாகும். இத்திரைப் படத்தின் மூலம் இடம் பெயர்ந்த வடமாகாண முஸ்லிம்களின் அவலவாழ்க்கை உலகறியச் செய்யப்பட்டதுடன் நம் நாட்டிலும் புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளது.

## மதக்கிரியைகள்

இக்கிராமத்தில் மிகுந்த மத ஈடுபாடுடைய பெரியோர்கள் வாழ்ந் திருக்கிறார்கள். இதில் குறிப்பாக அக்கால கிராம தலைமைக் காரரான மர்ஹூம் M.U.M. மீராசாகிபு அவர்களைக் குறிப்பிடலாம். இவர் தனது அரச கடமைகளில் இருந்து ஓய்வு பெற்ற பின்னரும் உத்வேகமாக சமயக் கடமைகளில் ஈடுபட்டு வந்தார். ஊதியம் பெறாது தன் வாழ்வின் இறுதி மூச்சுவரை ஜும்ஆப் பேருரை நிகழ்த்தி மக்களை மதக்கிரியைகளின் பால் அழைத்ததுடன் ஐவேளைத் தொழுகையும் நடத்தி வந்துள்ளார்.

## வழிபாட்டுத்தலங்கள்

மூவின மக்களும் இங்கு ஒற்றுமையாக வாழ்ந்து வந்ததால் அவரவர் சமய நம்பிக்கைகளைப் பின்பற்ற எந்தத் தடைகளும் காணப் படவில்லை.

சிலாவத்துறைக் கடலோரமாக முஸ்லிம்களின் வணக்கஸ்தலமான ஜும்ஆப்பள்ளிவாசல் அமைந்திருந்தது. மிகப்பழமைவாய்ந்த இப்பள்ளிவாசலில் 350 பேர் நின்று தொழக்கூடிய இடவசதி காணப்பட்டது. அத்துடன் இதனுடன் இணைந்து குர்ஆன் மத்ரசாவும் காணப்பட்டது. அக்கிராமத்தின் தெற்கே இந்துக்களின் அம்மன் கோயில் ஒன்றும் வடக்கே சவேரியார் புரத்தில் கிறிஸ்தவக் கோயில் ஒன்றும் காணப்பட்டது. இவ்விரு கோயில்களினதும் தர்ம கர்த்தாக்களாக இக்கிராமத்தின் நிரந்தரக் குடியிருப்பாளர்களான தமிழ் சகோதரர்களே இருந்திருக்கிறார்கள்.

## கல்வி

சிலாவத்துறையின் கல்வி வரலாற்றை ஆராயும் போது அதனை இரண்டு அத்தியாயங்களாகப் பிரிக்கலாம். ஒன்று 1971 க்கு முற்பட்ட காலம். மற்றையது 1971 தொடக்கம் ஆரம்பமான புதிய மறுமலர்ச்சிக் காலம்.

1971.10.01ம் திகதி பல போராட்டங்களுக்கு மத்தியில் விஸ்தரிக்கப்பட்ட சிலாவத்துறைப் பாடசாலையின் ஆரம்பத்துடன் இக்கிராமத்தின் கல்வி வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம் உருவாக்கப்பட்டது.

29 மாணவர்களுடனும் 1 ஆசிரியருடனும் தற்காலிககொட்டில் ஒன்றில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை அதன் பதில் அதிபராகக் கடமை யாற்றியவரும் ஸ்தாபகருமான ஓய்வு பெற்ற ஆசிரியர் M.G. ஹாமித் அவர்களின் இடையறாத முயற்சியின் பயனாகவும், இக்கிராம புத்திஜீவிகள் மிகக் குறுகிய காலத்தில் பாரிய வளர்ச்சி அடைந்து பல வெற்றிகளை அள்ளிக் குவித்தது. அயல் கிராமத்தில் அமைந்திருந்த பாடசாலை ஒன்றுக்கு சவால் விடுவது போல் இதன் வளர்ச்சி அமைந்திருந்ததால் பல தடைகளையும் இடையூறுகளையும் தனது வளர்ச்சிப் பாதையில் இப்பாடசாலை சந்திக்க நேர்ந்தது.

இப்பாடசாலையின் துரித வளர்சிக்குக் காரணம் மிகத் திட்டமிடப்பட்ட முறையில் இதன் நிர்வாக முகாமைத்துவம் அமைந்திருந்ததே ஆகும். இப்பாடசாலையில் நேர முகாமைத்துவம் மிகக் கடுமையாகக் கடைபிடிக்கப்பட்டது. இப்பாடசாலையின் சகல நிர்வாக முறைமைகளும் மிக இறுக்கமாகக் காணப்பட்டன. அக்காலகட்டத்தில் இப்பாடசாலையின் நிர்வாக இயந்திரத்தின் வேகமான சுழற்சிக்கு ஈடு கொடுத்து தன்னை அர்ப்பணம் செய்து சேவையாற்றிய ஆசிரியப் பெருந்தகைகளுள் தற்போதைய கற்பிட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளரான M.M. சியான் அவர்களையும், மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது முருங்கன் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அதிபர் திருமதி சுகந்தி செபஸ்தியன் அவர்களையும் கூளாங்குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பட்டதாரி ஆசிரியர் A.S. மாஹிர் அவர்களையும் இக்கிராம மக்கள் நன்றியுடன் இன்றும் நினைவு கூர்ந்து வருகின்றனர்.

அத்துடன் இப்பாடசாலையின் அதிபர்களாக சிறப்பாக சேவையாற்றிய M.M. தையூப், SFLMA காதர், A.M. சஹீட் ஆகியோரும் இம்மக்களின் மனங்களில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பாடசாலை மிகத் துரித வளர்ச்சி கண்ட 1990ம் ஆண்டு காலப்பகுதியில் 750 மாணவர்களையும் 20 ஆசிரியர்களையும் கொண்டியங்குகிறது. சுமார் 19 ஆண்டுகள் கல்விச் சேவை வழங்கியதன் மூலம் முசலிப் பிரதேசத்தின் பெரிய பாடசாலைகள் கண்டிராத சாதனைகளைப் புரிந்து வரலாறு படைத்தது.

அன்று பாடசாலை இட்ட கல்வி வித்துக்களால் இன்று இக்கிராமம் 8 வைத்தியர்களையும் 25 க்கு மேற்பட்ட பட்டதாரிகளையும் 75க்கு மேற்பட்ட அரச தொழில் புரிபவர்களையும் பெற்றிருப்பது ஈடு இணையற்ற சாதனையாகும்.

அதுமட்டுமன்றி ஒரே குடும்பத்தில் இரண்டு வைத்தியர்களும் இவர்களின் துணைவிமாரும் வைத்தியர்களாகவும், அவர்களது சகோதரர் ஒரு நிருவாக சேவை அதிகாரியாகவும் அவரது துணைவியாரும் ஒரு வைத்தியராகவும் எல்லாமாக ஒரு குடும்பம் 5 வைதியர்களாகவும் (M.B.B.S.) கொண்டிருப்பதும் இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட சாதனையாகும்.

முழுமையாக இப்பாடசாலை திட்டமிட்டு வளர்த்த மற்றுமொரு வைத்தியர் H.M. பைரூஸ் அவர்கள் சர்வதேச ரீதியில் நடத்தப்படும் மருத்துவ பரீட்சையில் (PLAP) சித்தியடைந்து இங்கிலாந்தில் தனது மருத்துவ மேற்படிப்பை (MRCAP) தொடர்கிறார். இது இக் கிராமத்துக்கு கிடைத்த மற்றுமொரு வெற்றியாகும்.

அத்துடன் மேற்கத்தேய நாடுகளில் வைத்தியர்களாகத் தொழில் புரியும் இரண்டு சகோதரர்களும், மற்றும் இரண்டு பட்டதாரி சகோதரர்களும் ஒரே குடும்பத்தில் காணப்படுவது ஒரு கல்விச் சாதனையாகும். இச்சாதனைகளை சிகழ்த்திய புதல்வர்கள் அண்மையில் சஞ்சீதாவத்தையில் அமைந்துள்ள கல்வி அபிவிருத்தி நிறுவனத்தால் (EDF) கௌரவிக்கப்பட்டனர்.

மிக அண்மையில் இக்கிராமத்துக்கு கிடைத்த கல்வி சார்ந்த மற்றுமொரு வெற்றி 2004 டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் A தரத்திலான சித்திகளை S. ரொஸ்னி குறைஸ் என்ற இக்கிராம மாணவன் பெற்றிருப்பதாகும். இக்கிராமம் பெற்றிருக்கும் கல்வி சார்ந்த இலக்கை இப்பிரதேசத்தின் வேறு கிராமங்கள் அடைய இன்னும் பல ஆண்டு காலம் காத்திருக்க வேண்டும்.

# வற்றாத நீரூற்றும் வளமிக்க நிலமும் கொண்ட பொற்பதியாம் நற்பதி நம் தாராபுரம்

– ஏ.என். அமானுல்லா, பீ.ஏ. –

பாரதத்தின் படித்துறையில் பாக்கு நீரிணைத் திரைகளால் தாலாட்டப்படும் முகில்கள் நீந்தும் நீர் நிலைகளைக் கொண்ட மன்னார் தீவில் அமைந்துள்ள அழகிய ஒரு கிராமம் தாராபுரமாகும்.

இக்கிராமம் மன்னார், தலைமன்னார் நெடுஞ்சாலையில் 4ஆவது மைல்கல்லில் அமைந்துள்ளது. இந்த அழகிய கிராமம் வடக்கே பரவைக் கடலையும், தெற்கே தாழ்வுபாட்டையும், தென்கிழக்கே கீரியையும், மேற்கே ஓலைத்தொடுவாயையும் எல்லைகளாகக் கொண்ட பெருநிலபரப்பாகும். தாராபுரத்துக்கு முன்பு தாராக்குண்டு என்று பெயர் வழங்கப்பட்டது. நீர்வளம், நில வளமிக்க இக் கிராமத்திற்கு. “தாராக்குண்டு” என்று பெயர் வரக்காரணம், கிராமத்தின் நுழைவாயிலில் அழகிய சிறுகுளம் அமைந்துள்ளத னாலாகும். குண்டு என்பது சிறுகுளம். தாராபுரம் என்ற கிராமம் மாலையாகவும், அக்குளம் அந்த மாலையில் அமைந்துள்ள பதக்கம் போன்றும் காட்சி தருகின்றது.

பன்னெடுங் காலமாக வருடா வருடம் நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் சைபீரிய நாட்டுத்தாராக்கள் வருவதும் இந்த குளத்தில் அவை குவிந்து காணப்பட்டதனாலும் தாராபுரம் என பெயர் வரக்காரணமாயிற்று என்பது சான்றோரின் விளக்கமாகும்.

அதுபோக கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி சுமாத்திராவில் ஏற்பட்ட நில அதிர்வு காரணமாக "சுனாமி" என்ற பேரலைகளால் பல நாடுகள் அழிந்து புவியியல் மாற்றம் ஏற்பட்டது போல முற்காலத்தில் பூமியில் ஏற்பட்ட பயங்கர அதிர்வுகளால் முன்னைய பிரதேசங்கள் மாற்றமடைந்துள்ளன. அதாவது இவ்வதிர்வுக்கு முன் இருந்த இடங்கள், நாடுகள், பூர்வீக நிலையங்களை விட்டு நகர்ந்துள்ளன என்று விஞ்ஞான ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இவ்வாய்வாளர்களின் கூற்றிற்கேற்ப குறித்த பறவைகள் வாழ்ந்த பூர்வீக இடமாக இப்பிரதேசம் இருந்திருக்கலாம் என்று கருதவும் இடமுண்டு. அது உண்மை என்பதற்கு இக்காலத்திலும்கூட மேற்கூறப்பட்ட தாரர்க்கள் கூட்டங்கூட்டமாக தாராபுர நீர்ச்சுனைகளில் காணப்படுவதும் அதனை வேட்டையாடுவதும் வழக்கமாக இருந்து வருகின்றது.

இக்குளம் அ. உ. குளமென்று இக்கிராம மக்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. அதாவது இக்குளம் ஜனாப் அ. உதுமான் நைனா என்ற செல்வந்தரது காணியில் வெட்டி பொதுமக்களின் பாவனைக்காக உருவாக்கப்பட்டது. இக்கிராமத்தில் கருணை உள்ளம் கொண்ட செல்வந்தர்கள் பலர் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்குச் சான்றாக, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட சுலைமான் லெப்பைப் புலவர் தான் இயற்றிய குதுபுநாயக வனுசாசனம் என்ற நூலை அரங்கேற்றம் செய்வதற்காக இக்கிராமத்திற்கு வந்துள்ளார். அவரை இக்கிராம மக்கள் பெருவரவேற்பு கொடுத்து, அரவணைத்து, ஆதரித்து, உண்டிகொடுத்து, உறைவிடம்கொடுத்து தான் இயற்றிய புராணத்தை தொடர்ந்து பராயணம் செய்வதற்கு அழகிய பந்தலிட்டு அதனை மகர தோரணங்களால் அலங்கரித்து உதவியுள்ளனர். தொடர்ந்து 40 நாட்களாக தனது நூலை பாராயணம் செய்வதற்கு இக்கிராமத்தை சேர்ந்த பெரும் செல்வந்தரும் பெரியாருமாகிய மர்ஹூம் நைனா முஹம்மது என்பவர் செய்த உதவிக்கு பிரதியுபகாரமாக அவரை தனது நூலில் வியந்து பாடியுள்ளார். அது பின்வருமாறு

அறுபதமிழற்றும் பொங்கர்

தாரையம்பதி வந்தென்கோன்

முறையடி பரவு நெய்னா முஹம்மது

களிப்பினின்நூல் பெறுபொருட்டளித்த

செம்பொன் பெருகிய மகிழ்வினேற்ற

லுருபொருட் கவிஞருள்ளம் குளிர்ந்தென

லுரிமை பூண்டார்.

என்று பாடியுள்ளார். இப்பாடலின் விளக்கமானது

ஆறு கால்களைக் கொண்ட வண்டினங்கள் மலர்களிலுள்ள மதுவினைப்பருகி மயங்கி வாழும். மலர்கள் நிறைந்த அழகிய குளத்தினையுடைய தாராக்குண்டு என்ற ஊரில் இறைவனையும் இறையடியார்களையும் நேசிக்கும் நெய்னா முஹம்மது என்ற செல்வந்தர் வழங்கிய பண உதவியால் தனது புராணத்தை பாடி அரங்கேற்றம் செய்த தன் உள்ளம் உவகை கொண்டதாக பாடியுள்ளார்.

புலவர்களையும் ஆதரித்த புரவலர்களும் இக்கிராமத்தில் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு இதுவும் சான்றாக அமைந்துள்ளதல்லவா. வந்தவர்களை வரவேற்கும் பண்புள்ளம் கொண்ட மக்கள் வாழ்ந்த தாராக்குண்டு என்ற கிராமத்தின் பெயரை 1975 ஆம் ஆண்டு மன்னார் கிழக்கு கிராம சபைத் தலைவராக இருந்த மர்ஹூம் எச்.எஸ்.தாவூத் அவர்கள் இருந்த காலத்தில் மேற்படி கிராம சபை தீர்மானத்தின்படி தாராபுரம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

வரலாற்றுச் சுவடு

முற்றிலும் முஸ்லிம்களைக் கொண்ட இக்கிராமத்தின் பூர்வீக வரலாற்றை ஆராயும் போது ஏறத்தாழ 300 ஆண்டுகள் வராலாற்றைக் கொண்ட சுவடுகளும் பதிவுகளும் காணப்படுகின்றன. இக்கிராமம் தோன்றிய காலத்தில், தென்னிந்தியாவில் இருந்து வந்த மக்கள்

என்பதற்கு சான்றாக இக்கிராமத்து மக்களின் கலைகலாச்சார வர்த்தக விழுமியங்கள் பாரம்பரியமாக பேணப்பட்டு வருகின்ற உண்மையை இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இந்தியாவில் முஸ்லிம்கள் என்ற நூலில் பேராசிரியர் சுகுமார் தென்னிந்தியாவில் முதன் முதலில் இஸ்லாத்தை தழுவியவர்கள் பெயர் வரிசையை தனது நூலில் தருகின்ற போது ராவுத்தர் சேகு, மரைக்கார், நெயினா சாஹிபு, லெப்பை போன்ற குடும்பங்களை சார்ந்தவர்கள் என்றே குறிப்பிட்டுள்ளார். இப்பெயர் வரிகள் தாராபுர வரலாற்றில் மரபுரீதியான குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்துள்ளமைக்கு இன்று கூட இக்கிராமத்தவர்களுக்கு அகமது நெயினா, கச்சு மரைக்கார், சேகு முஹம்மது, இப்ராஹிம் சாயிபு, மீரா ஸாகிபு, அசனா லெப்பை, அலித் தம்பி ராவுத்தர் போன்ற பரம்பரை நாமம் சூட்டப்பட்டு வருகின்றதை அவதானிக்கலாம்.

தென்னிந்தியாவில் திருச்சி கீழக்கரை, காயல் பட்டினம் போன்ற இடங்களில் வாழ்ந்தவர்களே முதலில் இஸ்லாத்தை ஏற்று கொண்டனர் என்று பேராசிரியர் சுகுமார் குறிப்பிட்டதை நோக்கும் போது அவர்கள் வாரிசுகளே ஆதியில் இங்கு குடியேறியிருப்பர் என்பது புலனாகிறது. மேற்கூறப்பட்ட இந்திய நகரங்களிலே தான் பெயர்களுக்குரியவர்களை முதலெழுத்துக்களால் அழைக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது. உதாரணமாக அகமது உதுமா நெயினா என்பவரை (அ.உ.நெ) என்று அழைப்பது குறிப்பிட்ட இந்திய கிராமங்களில் வழக்கமாகும். இக்கிராமத்திலும் அவ்வாறே (அ.உ.க), (அ.நெ), (க.ம), (அ.லெ), (லெ.மு) என்றும் பெரும்பான்மை யானவர்களுக்கு பெயர் வழங்கப்பட்டு வருவதையும் காணலாம். தற்காலத்திலும் இவ்வாறு அழைக்கப்பட்டு வருவதைக் காணலாம். அதுபோன்று ராவுத்தர், சாஹிபு, செய்யது என்ற பெயர்களும் தந்தை வழியாக பிள்ளைகளுக்கு நாமம் சூட்டுவதையும் மரபுரீதியாக அறியக்கூடியதாக உள்ளது தொழில்ரீதியாகவும் அம்மக்கள் செய்யும் வர்த்தகங்களை ஆரம்ப காலத்திலிருந்து இக்கிராமத்து மக்கள் பின்பற்றி வந்துள்ளனர். இன்றும்கூட சான்றாக நகைத்தொழில் செய்வது யாவரும் அறிந்த உண்மையாகும். முற்காலத்தில் இக்கிராமத்தவர் சங்கு வியாபாரம் செய்ததாகவும் மரணமடைந் தவர்களை அடக்கம் செய்யும் போது

கிடங்குகளில் அடையாளமாக சங்கொன்று போடுவதும் வழக்கமாக இருந்துள்ளது என்பதனை தற்காலத்தில் மையவாடியில் குழிதோண்டும் போது (கப்று) சங்குகள் காணப்படுகின்றமை சான்றாகின்றன. அதேநேரம் வர்த்தகத்தில் ஈடுபட்ட அரேபியர்களும் இக்கிராமத்துக்கு வந்துள்ளார்கள் என்பதற்கு சான்றாக "பே-ஓப்" என்ற பெருக்கு மரங்களும் காணப்படுகின்றன. இக்கிராமத்தில் இரண்டு தெருக்கள் அமைந்துள்ளனன.

1. ஹுசைன் வீதி
2. லெப்பை வீதி

என அழைக்கப்பட்டு வந்துள்ளன. அதற்கான காரணங்களை ஆராயும் போது தென்னிந்தியாவில் இருந்து வந்த ஒலிமார்கள் அல்லது சமயச் சான்றோர்களின் அடக்கஸ்தலங்கள் (ஸியாரங்கள்) அமைந் துள்ளன. ஹுசைன் நெய்னா ஒலியின் ஸ்யாரம் அமைந்துள்ள பிரதேசத்தை ஹுசைன் வீதி என்றும், மீராலெப்பை ஒலியின் ஸியாரம் அமைந்துள்ள பிரதேசத்தை லெப்பை வீதியென்றும் பெயர் வழங்கலாயிற்று. அது மாத்திரமின்றி இக்கிராம எல்லைக்குள் வேறு இரண்டு நல்லடியாரின் அடக்கஸ்தலங்கள் அமைந்துள்ளன. ஒரு காலத்தில் நோய் நிவாரணிகள், பேய், பிசாசு பிடித்தவர்களை இவர்களின் அனுக்கிரகத்தால் இறைவன் குணப்படுத்தியுள்ளான். இவர்கள் அற்புதங்களும், புதுமைகளும், காரணங்களும் நிகழ்த்தி சமயப்பற்றினை அதிகரிக்கக் காரணமாய் இருந்துள்ளனர். சமீபகாலம்வரை இவர்களின் ஸியாரங்கள் அமைந்துள்ள பகுதியில் மாறாத நோயுள்ள மக்கள் 3 நாள்கள் தங்கியிருந்து சுகம் பெற்றுச் சென்றுள்ளனர் என்று அறியக்கூடியதாகவுள்ளது. இந்தக் ஒலிமார்களின் ஸியாரங்கள் அமைந்துள்ள பள்ளிவாசல்களில் வருடா வருடம் முஸ்லிம் பெருமக்கள் ஒன்று கூடி பாரிய கந்தூரிகள் நடத்தி சாதி, மத பேதமற்றமுறையில் சகல இன மக்களுக்கும் (நேர்ச்சை) கிடுகுச்சோறு பங்கீடு செய்யப்படும். இக்கந்தூரி ஒலிமார்களின் பெயரால் நடைபெற்று வந்ததை 1990ஆம் ஆண்டு இடம்பெயரும் காலத்தில் வாழ்ந்த கிராம மக்கள் நன்கு நிறைவேற்றி வந்தனர். இந்திய சமூகவியல் பேராசிரியர் ஒருவர் ஒரு ஊர் பழமை மிக்கது என்பதை அறிவதற்கான காரணங்களை அக்கிராமங்களில்

நடைபெறும் இப்படியான கந்தூரிகளும் சான்றாகுமென்று கூறியுள்ளார். இந்த ஒலிமார்கள் யாவரும் தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்பதற்கு வரலாற்றுக் சான்றுகள் உள்ளன. புதிதாக குடியேறுவதற்கு தெரிவு செய்யுமிடம் வளமிக்கதாக உள்ளது என்பதைக் கொண்டு தெரிவு செய்வது வளமையே.

இயற்கை எழில் கொஞ்சும் இக்கிராமம் நீர் வளம் நிலவளமிக்கதாக இருந்தமை பூர்வீக மக்கள் குடியேறுவதற்கு காரணமாய் அமைந் திருக்கலாம். இக்கிராமத்தில் பூர்வீகமாக வாழ்ந்த குடும்பங்களை குடும்பரீதியாக பின்வரும் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள் ளமைக்கு இன்றும் வாரிசுகளுக்கு குடும்பப் பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

| குடும்பப் பெயர் | இன்றைய வாரிசுகளில் மூத்தோர் பெயர் |
|---|---|
| 1. வெள்ளைக்குட்டிபுரம் | - எம். யூனுஸ்,<br>எஸ்.எம். பாரூக் |
| 2. மரைக்கார்புரம் | - ஏ.என்.ஏ. ஹக்கீம்,<br>எம்.எஸ்.ஏ. றஹுமான். |
| 3. பக்கீர்புரம் | - எம்.எம். கௌது,<br>ஏ.எம். முஹம்மதலி. |
| 4. கட்டையர்புரம் | - கே.எம். ரெட்னம்,<br>ஏ.கே. சகாப்தீன். |
| 5. சவட்டையர்புரம் | - எம்.எம். ராசிக்,<br>ஏ.எம். சகாப்தீன். |
| 6. லெப்பைபுரம் | - எம்.என். ஐயூப்,<br>கே.எம். சகாப்தீன். |
| 7. கருத்தார்புரம் | - எம்.சி.ஏ. லத்தீப்,<br>எம். சுபைர். |
| 8. பட்டாணிபுரம் | - எம்.எஸ். ஐயூப்,<br>எம்.எம். காசிம். |
| 9. அ.உ. புரம் | - எச்.எம். கௌது,<br>எம்.ஐ.எம். கலீல். |

இந்த அடிப்படையில் தான் பள்ளிவாசல் பரிபாலன சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டும் வருகின்றனர். இவர்களை ஆரம்பத்தில் மரைக்காயர்மார்கள் என்றும் அழைத்தனர் தற்போது தர்மகர்த்தாக்கள் என்றும் அழைக்கின்றனர்.

1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தபோது இக்கிராமத்தில் வாழ்ந்த குடும்பங்கள் 850 ஆகும். இக்கிராமத்தில் ஒவ்வொரு குடும்பத் தவர்களும் 1 ஏக்கருக்கு குறையாத காணியில் வீடு வளவு அமைத்து வாழ்ந்தனர். இங்குள்ள வளவுகள் சுற்றிலும் வேலி அல்லது மதில் அமைக்கப்பட்டு தனித்தனியாக காணப்படும். அந்த வளவுக்குள், வீடு சமயலறை, கிணறு, மல, சலகூடம் முதலியன வேறுவேறாக அமைந்திருக்கும். கிணற்றில் இருந்து மலகூடம் 35, 40 அடி தூரத்தில் அமைந்திருக்கும். கிணற்றைச் சுற்றி தென்னை, வாழை, பப்பாளி, கொய்யா, மாதுளை, எலுமிச்சை, கறிவேப்பிலை போன்ற பயன்தரும் மரங்கள் நடப்பட்டிருக்கும். மேலும் வளவின் எல்லைகளில் முருங்கை, வேம்பு நடப்பட்டிருக்கும் பெரும்பான்மையான வளவுகளில் வீட்டுப் பயிர்களான தக்காளி, பசளி, மிளகாய், கத்தரி, வெண்டி போன்றவை செய்கை பண்ணப்படும். இதனை வீட்டுத் தோட்டமென்றும் அழைப்பர். ஒவ்வொரு வீட்டிலும் நல்ல தண்ணீர் கிணறு இருந்தாலும் அதனை குளிப்பதற்கும், வீட்டுப் பாவனைக்கும் மாத்திரம் உபயோகப் படுத்துவர். பருகுவதற்கென்றே ஒவ்வொரு தெருவிலும் தலா ஒரு கிணறு அமைந்திருக்கும். ஹுசைன் வீதியில் அமைந்துள்ள கிணற்றை புலவர் கிணறு என்றும் அழைப்பர். அக்கிணறுகள் மிகவும் சுத்தமாக வேறு பாவனைகளுக்கு உபயோகிக்காது அருந்துவதற்கு மாத்திரமே உபயோகித்து வந்தனர். தினமும் மாலை நேரங்களில் இக்கிராமத்து மகளிர் தலையிலும் இடையிலும் குடங்களை சுமந்த வண்ணம் தண்ணீர் கொண்டுவரும் காட்சி தனி அழகுமிக்கதாக காணப்படும். தினமும் கன்னிப் பெண்கள் தம்தோழிகளுடன் சென்று தண்ணீர் கொண்டுவருவர் அதேபோன்று மகளிர் குழுக் குழுவாக மாலை நேரங்களில் கிராமத்துக்கு அருகாமையில் உள்ள மரமுந்திரிகைத் தோட்டத்திற்குச் சென்று தம் வீட்டுப்பாவனைக்கான விறகுகளை சேகரித்து ஒவ்வொன்றாக அடுக்கி கட்டுக் கட்டாக கட்டி தம் தலை யில் சுமந்து வருவர். ஒவ்வொரு குடும்பத்துக்கும் தேவையான உப உணவுப் பயிர்களை தங்கள் வளவுகளில் உற்பத்தி செய்து கொள்வர்.

எல்லைக் கிராமங்களான தாழ்வுபாடு, தோட்டவெளி, ஒலைத் தொடுவாய். கொன்னையன்குடியிருப்பில் வாழுகின்ற மக்கள் கத்தோலிக்க சமயத்தவர்கள். எல்லைக்கிராம மக்களும் உறவினர்கள் போன்று அதாவது நகமும் சதையும் போல ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். எல்லைக் கிராமங்களில் வசித்த மக்கள் எமது கிராமத்துடன் கொடுக்கல் வாங்கல் வர்த்தகத் தொடர்புகள் கொண்டிருந்தனர். எமது கிராமத்து பாடசாலைகளில் அக்கிராம பிள்ளைகள் நீண்ட காலமாக கல்வி கற்று வந்தனர். தங்களுக்குத் தேவையான பொருட்களை கிராமத்து கடைகளிலேயே கொள்வனவு செய்வர். தோட்டவெளி, கொன்னையன்குடியிருப்பு, ஒலைத்தொடுவாய் மக்களில் பெரும்பான்மையானவர் தச்சுவேலைகள் செய்பவர்கள், சிறுபான்மையானவர் கருப்பட்டி தயாரித்தல், கள்ளுக்கட்டுதல் மற்றும் மீன்பிடிக்கும் தொழில்களிலும் ஈடுபடுவர். இவர்கள் எமது கிராம மக்களின் தென்னந் தோட்டங்களிலேயே ஆரம்பத்தில் வாழ்ந்து வந்தனர்.

பின்னைய காலத்தில் அவர்கள் காணிகள் வாங்கி தனியாக வாழத்தொடங்கினர். தற்போது அம்மக்களில் சிலர் எமது கிராமத் தவர்களது தென்னந்தோட்டங்களிலேயே வாழ்ந்து அத்தோட்டங்களை பாதுகாத்து வருகின்றனர். சிலர் குத்தகைக்கு எடுத்து அதன் வருமானத்தை பெற்று வாழ்பவர்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை எமது கிராமத்து கடைகளுக்கு கொடுத்து தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வர். 1970,1980ஆம் ஆண்டுக் காலங்களில்கூட அவ்வாறு பண்டமாற்று முறையிலே கொள்வனவு செய்து வாழ்ந்து வந்தனர். இக்கிராமத்தில் புகையிரத கடவைகளில் வேலைசெய்பவர்களில் சிறுபான்மையாக இந்து சமயத்தவர்களும் வாழ்ந்து வந்தனர்.

இக்கிராமத்தைச் சேர்ந்த சில குடும்பத்தவர்கள் வர்த்தக நோக்கோடு கீரி என்ற இடத்தில் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு தென்னந் தோட்டங்களும் அங்கு அமைந்திருந்தன. அதுமாத்திரமல்லாமல் மரவியாபாரமும் செய்துவந்தனர். மேற்கூறிய எல்லைக்கிராமத்தவர்கள் பரம்பரையாக எமது கிராமத்து மக்களுடன் இணைந்து வாழ்ந்தனர். அதிகமானோர் இக்கிராம மக்களின்

தென்னை பனை முந்திரிகை தோட்டங்களை குத்தகைக்கு பெற்று தொழில் செய்து வந்தனர். இவ்வாறு இணைந்து வாழ்ந்த எல்லைக்கிராம மக்கள் எமது கிராம மக்களை உறவுமுறை கொண்டு மாமா, மாமி, மச்சான், என்று அழைத்து நெருக்கமான உறவு கொண்டாடி வந்தனர். தமிழர்களும் முஸ்லிம்களும் உறவுமுறை சொல்லி அழைக்கும் வழக்கம் தமிழ் நாட்டிலும் உண்டு. அதேபோன்று இக்கிராமத்தில் நடைபெறும் கலை கலாசார நிகழ்வுகளில் கலந்து கொள்வர். திருமண சடங்குகளுக்குச் செல்பவர்கள் மொய் எழுதும் பழக்கத்தைக் கொண்டவர்கள். அதுபோன்று இக்கிராமத்தவர்களின் வைபவங்களில் கலந்து சன்மானம் வழங்குவர். இவ்வாறு எல்லைக்கிராமத்தவர்களும் இக்கிராமத்தவர்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். இக்கிராமத்துக்கு வருகைதரும் விருந்தினர்களையும் இன்முகத்துடன் வரவேற்று விருந்து கொடுத்து உபசரிக்கும் உயர்ந்த பண்புகொண்ட எமது கிராமம் மன்னார் மாவட்டத்தில் ஒரு மாதிரிக் கிராமமாக கணிக்கப்பட்டு வந்தது ஆச்சரியத்துக்குரியதல்ல. புகையிரத கடவையில் வேலை செய்யும் யாழ்ப்பாணத்தை பிறப் பிடமாகக் கொண்டவர்களும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர் களும் புகையிரத விடுதிகளில் வாழ்ந்து வந்தனர். அவ்விடத்தை "காங்கி" என்று இக்கிராமத்தவர் அழைப்பர். தொழில் புரிய வந்தவர்கள் என்றாலும் எமது கிராமத்து மக்களின் நல்லொழுக்க பண்பிலும் அன்பிலும் ஈர்க்கப்பட்டு ஓய்வுபெற்ற பின்னரும் குடும்பங் களுடன் இக்கிராம மக்களின் காணிகளில் வாழத் தொடங்கினர். தொழிலில் இருந்து ஓய்வுபெற்றாலும் பனை ஓலை, ஈர்க்கிள் முதலியவற்றைக் கொண்டு கூடை (சுளகு) முறம் பின்னும் தொழிலை குடிசைக் கைத்தொழிலாக செய்து வந்தனர். இவர்களின் பிள்ளைகள் இக்கிராமப் பாடசாலையில் கல்வி கற்று உயர்ந்த பதவிகளை வகித்து வருகின்றனர். 1990ஆம் ஆண்டு எமக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தால் கிராமத்தைவிட்டு இடம்பெயர்ந்து சென்றபோது இவர்கள் எம்மவர்பட்ட துன்பத்தை கண்டு கதறி அழுதபோதும், எதிர்த்து போராட சக்தியற்றவர்களாயிருந்தனர்.

இவர்கள் தங்களுக்கு உற்றதுணையாகவும் உறவுக்காரர்களாகவும் வாழ்ந்த இக்கிராமத்து முஸ்லிம்கள் வெளியேறியதை சகிக்க முடியாது இக்கிராம மக்கள் வெளியேறியபின் தாங்களும் இக்கிராமத்தில்

வாழவிரும்பாது தாழ்வுபாட்டுக்கு அருகாமையில் சன்னி-விலேஜ் என்ற இடத்தில் குடியேறியுள்ளனர். தற்போதும் இக்கிராம மக்கள் வாழ்கின்ற புத்தளம், கொழும்பு போன்ற இடங்களுக்கு அவர்கள் வந்து குசலம் விசாரித்து மங்கல, அமங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்வதும் சில நாட்கள் தங்கிச்செல்வதும் வழக்கமாக உள்ளது. இம்மக்கள் இந்து மதத்தை சேர்ந்தவர்கள். இவர்கள் வாழ்ந்த காங்கியின் அருகாமையில் இருந்த கிராமத்தவரின் காணியில் கோயில் கட்டி சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வசதி செய்து கொடுத்து தங்களையும் சகோதரர்களாக மதித்து வாழ்ந்த வாழ்க்கை முறையைக் கூறி கண்ணீர் சிந்தி அழுவதைக்கண்டு எம்மவர் அடையும் துன்பவேதனை சொல்லுந்தரமன்று.

உள்ளூராட்சி அமைப்பு

இன்று மன்னார் பிரதேச சபையின் உப அலுவலகமாக இயங்கும் தாராபுரத்தின் உள்ளூராட்சி நிர்வாகம் பற்றி ஆராயும்போது அந்நியர் ஆட்சி காலத்தில் மன்னார் கிழக்கு கிராம சபை என்ற அமைப்பில் தாராபுரம் தாழ்வுபாடு, எருக்கலம்பிட்டி, எழுத்தூர், தோட்டவெளி, கொன்னையன்குடியிருப்பு, கோணார்பண்ணை, புதுக்குடியிருப்பு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக உள்ளூராட்சி அமைப்பு ஒன்று தாராபுரத்தில் இயங்கி வந்ததுள்ளது. ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி நிர்வாகம் இயங்கி வந்தது. உள்ளூர் நிர்வாகம் வரி அறவிடல் போன்ற கடமைகளை இச்சபை நடவடிக்கையாக கொண்டு இயங்கியது. பின்னைய காலத்தில் 1944ஆம் ஆண்டு அமைச்சின் சீர்திருத்தச் சட்டத்தின்படி உள்ளூராட்சி மன்றங்கள், மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, கிராமசபை முறை அறிமுகமாகி அமுலாக்கம் செய்யப்பட்டபோது, எருக்கலம்பிட்டி தனியாகப் பிரிக்கப்பட்டு அதற்கென தனியான நிர்வாகமுறை வழங்கப்பட்டது. எருக்கலம்பிட்டி கிராமசபை எனப்பிரிந்தது. அதேபோல் மன்னார், பட்டினசபையாக இயங்கிய போது எழுத்தூர் அப்பட்டினசபையின்கீழ் கொண்டு வரப்பட்டது. இவைபோக ஏனைய கிராமங்களை உள்ளடக்கிய மன்னார் கிழக்கு கிராமசபை என தாராபுரத்தில் இயங்கத் தொடங்கியது. இக்கிராம சபையின்கீழ் தாராபுரம், தாழ்வுபாடு, தோட்டவெளி,

கொன்னையன்குடியிருப்பு, கோணார்பண்ணை, புதுக்குடியிருப்பு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக இயங்கத் தொடங்கியது. இதற்கான சபையின் கட்டிடம் வரலாற்றுக்காலம் தொடக்கம் தாராபுரத்தில் இயங்கி வந்துள்ளது.

மன்னார் கிழக்கு கிராம சபையின் 11 உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். மேலே கூறப்பட்ட கிராமங்களிலிருந்து உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். முறையே தாராபுரம் 4 வட்டாரங்களாகவும், புதுக்குடியிருப்பு 2 வட்டாரங்களாகவும், தாழ்வுபாடு 2 வட்டாரங்களாகவும், தோட்டவெளி, கொன்னையன் குடியிருப்பு ஆகிய கிராமங்கள் தலா ஒருவட்டாரமாகவும் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தலா ஒருவர் வீதம் 11 பேரைக்கொண்ட சபையாக இயங்கிவந்தது. இக்கிராம சபையின் மூலம் இக்கிராமங்களுக்கான நெருக்கமான உறவுகள் விரிவடைந்து வந்தன. நுழைவாயிலில் குளம் அமைந்துள்ளது, இடதுபக்கமாக லெப்பை வீதியும் அதனூடாக தாழ்வுபாட்டுக்கான வீதியும் அமைந்துள்ளது. அக்குளத்தின் வலதுபக்கம் ஹுசைன் வீதி அமைந்துள்ளது. அப்பாதையில் முதலில் கிராம சபைக்கட்டிடம் அடுத்து அல்-மினா மகா வித்தியாலயும் என்பவற்றுடன் முறையே முன்பள்ளிக்கூடம், பழைய மாணவர் கழக நூல்நிலையம், வாசிகசாலை, சனசமூக நிலையம், கிராமிய மருத்துவ மாதுவின் காரியாலயம் அதன் அருகில் சிறிய மருந்துசாலை, தபால் காரியாலயம் ஐக்கிய நாணய சங்கக் கட்டிடம் அடுத்து ஹுசைனியா ஜும்ஆப் பள்ளி அதனருகில் குர்ஆன் மத்ரஸா ஜும்ஆப் பள்ளியின் அருகாமையில் ஜனாஸா நல்லடக்க மையவாடி இவ்வாறு மகா வித்தியாலயத்துக்கு வடக்கே பிரபல விஷக்கடி வைத்தியர் அப்துல் கையூம் மௌலானாவின் வீடும் அடுத்து மீரா லெப்பை ஜும்ஆப் பள்ளி குர்ஆன் மத்ரஸாவும் அருகில் அதன் மையவாடியும் அமைந்துள்ளன. மாவட்ட தப்லீக் மர்கஸாக ஹுசைனியா ஜும்ஆப் பள்ளி விளங்கியது. அதற்குக் காரணம் கிராம மக்கள் நல்லொழுக்க நற்பண்புகளை உடையவர்களாக இருந் தமையும் வற்றாத நீருற்றும் வளமான நிலமும் பள்ளியில் ஜில்லென்று மதுரமான குளிர்காற்றும் வீசுவதற்கேற்றவகையில் பள்ளியைச் சுற்றி மரச்சோலைகளும் காணப்படுகின்றன. இக்கிராமத்தின் இயற்கை வளமும் வாழ்க்கைச் செலவுக் குறைவும் கிராம மக்களின்

வரவேற்கும் பண்பும் இங்கு வருகை தரும் அரசாங்க ஊழியர்களும் மன்னார் காரியாலயங்களில் பணிபுரியும் உத்தியோகத்தரும் தாம் வசிப்பதற்கு இக்கிராமத்தை தெரிவு செய்வது மட்டுமல்ல 1980-1990ஆம் ஆண்டுகளில் மன்னார் அரச அதிபர் திரு. கே. கணேஷ் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. கந்தசாமி **V.C.I.O.** மாவட்ட போக்குவரத்துச் சபை அதிகாரி திரு. ஜெயநாதன் போன்றோர்களும் வேறுபல அதிகாரிகளும் காரியாலய இலிகிதர்களும் இங்கு வாழ்ந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மன்னார், எருக்கலம்பிட்டி போன்ற இடங்களுக்கும் இக்கிராமத்திலிருந்தே குளாய்மூலம் நல்ல தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. மழையின்றி வரட்சி ஏற்படும் காலங்களில் பட்டினத்து மக்களும் ஏனைய கிராமத்தவர்களும் இக்கிராமத்துக்கு வந்து உடைகளை தோய்த்தும், தோய்ந்தும் செல்வர். மேலும் சந்திக்கு சந்தி பொதுக் கிணறுகளும் தாராபுரக் கிராமசபையால் உருவாக்கி கொடுக்கப்பட்டுள்ளது. காட்டுப் புறங்களிலும் தோட்டப்புறங்களிலும் மந்தைகள் நீரருந்த கேணிகளும் வெட்டப்பட்டுள்ளன.

கிராம சேவையாளர் பிரிவும் எல்லைகளும்

ஆரம்ப காலத்தில் தோட்டவெளி, தாராபுரம், கொன்னையன்குடியிருப்பு ஆகிய மூன்று கிராமங்களும் ஒரே கிராம தலைமைக்காரர் பிரிவின் கீழ் இயங்கியது. தோட்டவெளி கிராமத் தலைமைக்காரர் பிரிவு என அழைக்கப்பட்டது. இந்நியமனம் பரம்பரையாக தந்தைவழியாக நியமிக்கப்பட்டு வந்தமை ஆங்கிலேயர் ஆட்சியில் சிறப்பம்சமாகும். ஆரம்ப காலத்தில் அப்துர் றஹ்மான் என்பவரும் அதன் பிறகு அவரின் மகன் கச்சு மொஹிதீனும் கிராமத் தலைமைக்காராக கடமையாற்றினர். கிராமத் தலைமைக்கார் என்ற பெயர் நீக்கப்பட்டு கிராம சேவையாளர் பிரிவுகளாக 3 கிராமங்களும் தனித்தனிப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனங்கள் வழங்கப்பட்டன. இதே நிலையில் தற்போது சனத்தொகையின் அடிப்படையில் தாராபுரம் கிழக்கு, மேற்கு என கிராம சேவகர் பிரிவாக பிரிக்கப்பட்டு இரு கிராம சேவகர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நீர்வளம், நிலவளமிக்க இக்கிராமத்தில் சுழற்சி முறையில் தொழில் வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. ஏற்கனவே விபரிக்கப்பட்ட இக்கிராம மக்கள் ஒவ்வொருவரும் காணியும் வீட்டு வசதியும் உள்ளவர்களாவர். கிராம மக்கள் முற்காலத்தில் தென்னை உற்பத்தியில் ஈடுபட்டதால் பின்னைய காலத்திலும் பெரும்பான்மையானவர்கள் தென்னந் தோட்டங்களுக்கு உரிமையாளர்களாக இருந்தனர். முற்காலத் திலிருந்து தேங்காய், கொப்பரா வர்த்தகமே முக்கிய தொழிலாகியது. அக்காலத்தில் பாரியளவில் தேங்காய், கொப்பரா கொழும்பு யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதோடு இந்தியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்துள்ளது. இக்கிராமத்துக்கு உட்பட்ட தோட்டவெளியில் புகையிரத நிலையம் அமைந்திருந்தது. ஒரு காலத்தில் புகையிரத நிலையத்தின் வருமானக் குறைவு காரணமாக வேறொரு இடத்திற்கு மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது தோட்டச் சொந்தக்காரர் பலரும் தமது உற்பத்தியிலான கொப்பராக்களை தொன் கணக்கில் ஏற்றுமதி செய்து வருமானத்தை அதிகரித்துக் காட்டியதால் புகையிரத நிலையத்தை மாற்ற முடியாதவாறு செய்தனர். குறிப்பாக பாரியளவு கொப்பராக்களை ஹபீப் முஹம்மது, அசன் நைனா யூசுப், அ.சு.மு. அப்துல்கனி, பக்கீர் மீரா, அகமது நைனா அப்துல் கபூர் ஆகியோர் ஏற்றுமதியாளர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இக்கிராமத்தவருக்கு எழுத்தூருக்கு அருகாமையில் வலையக்காடு என்ற கிராமத்திலிருந்து தலைமன்னார் வரையுமான இடங்களில் தென்னந்தோட்டங்கள் அமைந்திருந்தன. செங்கனிஓடை, மஞ்சப்பாஞ்சான், தண்ணித்தாளை கூள இலந்தை, ஓலைத்தொடுவாய் போன்ற தோட்டங்களாகும். தற்காலத்திலும் அசன் நைனா யூசுப் என்பருக்கு 22 தென்னந்தோட்டங்கள் உள்ளன. அவற்றுள் ஏறத்தாள 300 ஏக்கரில் ஓலைத்தொடுவாய் அல்லது பங்களாத் தோட்டம் பாரிய தென்னந்தோட்டமாகும். பின்னைய காலத்தில் பலர் கொன்னையன் குடியிருப்பிலும் ஓலைத்தொடுவா யிலும் உள்ளூர் குடியிருப்புப் பகுதியிலும் தென்னை உற்பத்தியில் ஈடுபட்டனர். தென்னையின் வருமானம் வருடம் முழுவதும் கிடைக்கக் கூடியதாக இருக்கும். 1985-1990ஆம் ஆண்டுகளில் தேங்காயின் விலை அதிகரிக்க கொப்பரா உற்பத்தியில் நாட்டங்குறையத்

தொடங்கியது 1½, 2 மாதங்களுக்கு ஒரு முறை தேங்காய் பறிக்கப்படும். வியாபாரிகள் தேங்காய்களை கொள்வனவு செய்து லொறிகளில் கொழும்பு யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்வர். சிலர் சந்தைகளுக்கு கொண்டு சென்று சந்தைப்படுத்துவர். வெளியூர் வியாபாரிகளும் இங்கு வந்து தேங்காயை கொள்வனவு செய்து லொறிகளில் ஏற்றிச் செல்வர். தேங்காய் மாத்திரமல்ல, தென்னை ஓலையும் வருமானத்தைத் தரும் தொழிலாகும். பெரிய தென்னந்தோட்டங்களின் உரிமையாளர்கள் கேணிகளை வெட்டி மழை நீரை சேகரித்து வைப்பர். அதுமாத்திரமல்ல தென்னை, பனை மரக்கொட்டுகளாலான சிறிய கிணறுகளும் தோண்டி வைப்பர். புதிதாய் உற்பத்தி செய்யும் தென்னங்கன்றுகளுக்கு தண்ணீர் வார்ப்பதற்கும் பயன்படுத்தினர். காய்ந்த ஓலையை கேணியில் ஊறவைத்து கூலியாட்களைக் கொண்டு கிடுகு பின்னி விற்பனை செய்வர். ஓய்வு நேரங்களில் வீடுகளில் உள்ள பெண்களும் கிடுகு பின்னி விற்பர். தற்போது 100 கிடுகுகளின் விலை ரூபா 550, ரூபா 600ஆக விற்பனையாகின்றது. மரத்திலிருந்து காய்ந்து விழும் சருகுகளை சில்லைடை என்பர். சில்லடைகள், கோம்பைகள், தேங்காய்மட்டைகள் யாவும் விறகுக்காக பயன்படுத்துவர்.

பனை வளம்

கேட்டதை தரும் கற்பகதருவை கதைகளிலே படிக்கின்றோம். கருணை பொழியும் காமதேனுவை காவியங்களிலே படிக்கின்றோம். தற்காலத்தில் "கற்பகதரு" என வர்ணிக்கப்படும் பனை, பயன்தரும் பொருளாகும். வருமானத்தை ஈட்டித்தருவதில் முக்கியமான பங்கை வகிக்கின்றது. இக்கிராம மக்களில் பலருக்கு பெரிய பனைத் தோட்டங்களும் ஏனையவருக்கு சிறிய தோட்டங்களும் உள்ளன. பனையில் கிடைக்கும் வருமானம் ஏராளம், ஏராளம். பனை மரத்தின் காய்களை நுங்கு என்பர். பழத்தைப் பனம்பழம் என்பர். பழத்தை பிழிந்து சாறெடுத்து பந்தரிட்டு பாய்களை அதன்மேல் விரித்து பிழிந்தெடுத்த சாற்றை பாயின் மேலே ஊற்றி கைகளால் பரவிவிடுவர். இவ்வாறு தினமும் பிழியும் சாற்றை பாயின் மேல் பரத்துவர். 10 நாட்கள் ஊற்றிய சாறு நன்றாக காய்ந்தவுடன் சட்டுவம் என்ற சிறு ஆயுதத்தினால் இரண்டாக பிரித்து வைப்பர் அதுவே பனாட்டு என்று

சொல்லப்படும். அவற்றை கூடைகளில் அடைத்து விற்பனை செய்வர், சாறெடுத்த பனை விதையை, நிலத்தை கின்றி விதைப்பர். பின்பு பாத்திகட்டி நீர்வார்த்து வருவர். 3 மாதங்களில் அவை கிழங்காகி பருத்துவிடும் மண்வெட்டி அலவாங்கு போன்ற ஆயுதங்களை கொண்டு பாத்தியை தோண்டி கிழங்கை பிடுங்கி விற்பனை செய்வர். சிலர் கிழங்குகளை பாரிய பாத்திரத்திலிட்டு நெருப்பில் அவித்துக் கிழங்கை கீறி கீத்து கீத்தாக வெட்டி வெயிலில் காயவைத்து ஒடியலாக விற்பர். ஒடியலைக் கொண்டு கூழாக்கி உணவாக அருந்துவர். கிழங்கை வெட்டியபின் அவை உண்டாக்கின விதைகளை கத்தியால் பிளந்து அதனுள் இருக்கும் சதைகளை அவித்து உண்பர். அதனை கறியாக சமைப்பர். பிழிந்த விதைகளை காயவிட்டு விறகாக்குவர். பனையின் மட்டைகளைக் கொண்டு விளையும் தோட்டங்களை அடைக்கப் பயன்படுத்துவர். தற்போது மட்டைகளுக்கு கடுமையான கிராக்கி உள்ளது. தற்காலத்தில் 100 மட்டையின் விலை ரூபா 300, ரூபா 350ஆக விற்பனையாகிறது. காய்ந்த ஓலைகளை வேலிகளை மறைத்துக்கட்டுவதற்கு பயன்படுத்துவர். பச்சையாக பனை ஓலைகளை வெயிலிலிட்டு அறைவேக்காடாக காயவைத்து பக்குவம்பண்ணி பனை ஈர்க்கினால் அச்சுகள் செய்து அழகாகவும் அளவாகவும் கிழித்து வீடுகளின் பாய், பெட்டி, கடகம், தட்டு பால்வடிகள் போன்ற பொருள்கள் செய்து விற்பனை செய்வர். வேறுசிலர் நிறச்சாயங்களை அடுப்பில் இட்டு அதனுள் சிறிய ஓலைகளை அவித்து எடுத்து ஓலைகளை காயவைத்து பல வர்ணங்களிலும் பாய், பெட்டி செய்வர். தென்னோலையில் கிடுகு பின்னலையும், பனை ஓலையில் பாய், பெட்டி, கடகம், வடி போன்ற பொருட்களைச் செய்தலையும் பெண்கள் குடிசைக் கைத்தொழிலாக செய்து வீட்டுவருமானத்தைப் பெற்றுக்கொள்வர். சில வியாபாரிகள் பனை உற்பத்தி பொருட்களான பனாட்டு, பாய், பெட்டி போன்ற பொருட்கள் திருக்கேதீஸ்வர திருவிழாக் காலங்களிலும், மடு திருவிழாக் காலங்களிலும் கடைகள் வைத்து விற்பனை செய்வர்.

பனையின் பயன்கள் இவை மாத்திரமல்ல. ஆண்பனை பெண் பனை என்று இரண்டு வகைகள் உள்ளன. அவற்றில் பயன் கூடத்தருவது பெண்பனையாகும். முற்றியஆண் பனைகளை அரிந்து வீடுகளுக்கு கூரைகளாகவும், கைமரங்களாகவும் பயன்படுத்துவர்.

சில பகுதிகளில் சிலாகைகளாக வேலைகளுக்கு உபயோகிப்பர். கட்டுமரங்களாகவும் உபயோகிப்பர். இந்த மரங்கள் தென்னையை விடவைரம் கூடியவை இந்த மர வகைகளுக்குக் கிராக்கி அதிகமாகும் அதனால் வேறிடங்களிலிருந்து மரம் அரிபவர்களைக் கொண்டு மரங்களை அரிந்து தேவையான அளவுகளில் அரிந்து சீவி விற்பனை செய்வர். மர வியாபாரம் என்றால் சாகுல் ஹமீது அசன், முஹிதீன் ஹமீது பாச்சா என்று கூறுமளவுக்கு பெயர் பெற்ற வணிகர்கள் இருந்தனர். இன்னும் வெட்டு மரங்களுக்கு உதவியாக வேரடிப் பகுதியை குத்திகளாக அரிந்து அதன் உட்பகுதியை தோண்டி சக்கைகளை அகற்றியபின் அதனை உறைகளாக நிலத்தில் புதைத்து தோட்டங்களில் கிணறுகளாக பாவித்தனர். இவற்றிலிருந்து தென்னை பனைமரங்களுக்கு நீர் இறைக்கப் பயன்படுத்துவர். இவ்வாறு பனை மரங்களின் பயன் அளவற்றது அதனால்தான் இதனைக் கற்பகதரு வென்றனர் போலும். இக்கிராமத்தில் யாவருக்கும் பனைத் தோட்டஙகள் உள்ளன. பெரிய தோட்டங்களுக்கு உரிமையான வர்களும் வாழ்ந்தனர்.

மரமுந்திரிகை

இக்கிராமத்தின் பொருளாதாரத்தில் இதுவும் முக்கியமான இடத்தை வகிக்கின்றது எனலாம். இது எல்லாக் காலங்களிலும் பயன்தருவனவல்ல. மழைக்காலம் ஓய்ந்த பின் முந்திரிகள் பூக்கத் தொடங்கும். அப்பூக்கள் முற்றிக் காயாகி, பழமாகி பயன்தருவன வாகும். இம்முந்திரிகைத் தோட்டங்கள் கிராமத்திற்கு அருகாமையில் 200, 300 மீட்டர் தூரங்களுக்குள் அமைந்திருக்கும். பெரும்பாலான வர்களுக்கு சொந்தமாக முந்திரிகைத் தோட்டங்கள் உள்ளன. பறிக்கப்படும் பழங்களை விற்பனை செய்தும் சிலர் முந்திரிப்பழப் பாணி செய்தும் விற்பனை செய்வர். ஒரு போத்தல் பாணியின் விலை 200 ரூபாவாகும். தற்போது ஒருபழம் ரூபா 3 தொடக்கம் 5 ரூபாவரை விற்பனையாகிறது.

தம் வீட்டுக்குத் தேவையான முந்திரி விறகுகளையும் சேகரித்து வருவர். இத்தோட்டங்களில் பழம்பறிப்பதற்கு கிராமப்பெண்கள் தமது பிள்ளைகளையும் அழைத்துச் செல்வது வழக்கம். பழத்தை மாத்திர

மல்ல அதன்விதைகளை வெயிலில் நன்றாக காயவிட்டு அதனைச் சுட்டு பருப்பாக்கியும் விற்பனை செய்வர். சிலர் விதையாகவும் விற்பனை செய்வர். தற்போது முந்திரிப்பருப்பை சூடாக்கி வறுத்து பொலித்தீன் பைக்கற்றுக்களில் அடைத்து வெளியூர்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்துவகின்றனர். தற்காலத்தில் அநேகம்பேர் தமது தோட்டங்களை பிறருக்கு விற்பனை செய்துள்ளனர். வேறு சிலர் தூரஇடங்களில் அமைந்துள்ள தமது தோட்டங்களை வேறு கிராமத்தவர்கட்கு குத்தகைக்குவிட்டு வருமானமீட்டுகின்றனர். இவ்வாறு முந்திரிகையினாலும் இக்கிராமத்தவர்கள் வருமானத்தை பெற்றுவருகின்றனர் எனாலம்.

முருங்கை உற்பத்தி

சாதாரணமாக ஒவ்வொருவர் வீடுகளிலும் முருங்கை மரங்கள் காணப்படும். சிலர் பெரிய முருங்கைத் தோட்டங்களையும் வைத்து வருமானத்தைப் பெற்றுவந்தனர். முருங்கை கீரை, முருங்கைகாய், முருங்கைப்பட்டை ஆகியன மக்களுக்கு பிரயோசனம் தருவனவாகும். முருங்கைக் கீரையை தமது வீட்டுத் தேவைகட்கு பயன்படுத்துவர். முருங்கைக்காய் இக்கிராமத்தினருக்கு வருமானத்தைத்தரும் பொருளாகும். இம் முருங்கைக்காய்களை உள்ளூர் வியாபாரிகள் வாங்கி மன்னார் போன்ற இடங்களுக்கு கொண்டுசென்று அங்கு சந்தையில் விற்பனை செய்வர். அயல்கிராமங்களான எருக்கலம் பிட்டி, கோணார் பண்ணை, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களைச் சேர்ந்த பல வியாபரிகளும் கிராமத்துக்குச் வந்து கூடுதலாக முருங்கைக்காய்களை கொள்வனவு செய்து கொழும்பு, கண்டி போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்வர். இக்கிராமத்து வியாபாரிகளான ஹமிதார் என்று செல்லமாக அழைக்கப்படும் அப்துல் ஹமீது, டாங்காயர் என அழைக்கப்படும் சாஹுல் ஹமீது என்பவர்களும் குறிப்பாக புதுக்குடியிருப்பைச் சேர்ந்த முகம்மது சரிபு என்பவரும் பெருவாரியாக முருங்கைக் காய்களை கொள்வனவு செய்து வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்துள்ளனர். இடம் பெயரும் காலம்வரையும் எண்ணிக்கையாக கொள்வனவு செய்து வந்தனர். தற்போது கிலோ கணக்கில் விலைகூறி விற்பனை செய்கின்றனர். இது மட்டுமல்ல முருங்கைப் பட்டைகளை நாட்டு வைத்தியர்கள்

உபயோகத்திற்கு பயன்படுத்துவர்.

மாமரம்

இக்கிராமத்தில் சிலர் இதனை வீட்டு வளவுகளில் உற்பத்தி செய்து பக்குவமாக நீர்ஊற்றி வளர்த்து வருகின்றனர். சிலர் தோட்டங்களில் உற்பத்தி செய்துள்ளனர். இது நெல் அறுவடை முடிந்த காலத்தில் உற்பத்தியாகும் இத் தோட்டங்கள் ஜும்ஆப் பள்ளிகளிலும் வளர்த்து வருகின்றனர். இது குறுகிய காலத்துப் பயிரினமாகும் ஜூன், ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் காய்க்கும் இதுவும் விற்பனைப் பொருளாக இருக்கின்றது.

புளி உற்பத்தி

இது தோட்டங்களிலும் வளவுகளிலும் வளர்க்கப்படும். புளிய மரங்களில் புளி பழுத்ததும் கூலியாட்களைக் கொண்டு பறிப்பர். சிலர் விழுகின்ற பழங்களைப் பொறுக்கி வீடுகளுக்கு கொண்டு சென்று ஓடுகளை அகற்றிய பின் வட்டமாக தட்டித் தட்டுத் தட்டாகக் கட்டி வெயிலில் வைத்து சற்று இறுகியதும் அதனை வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்துவதுடன் மேலதிகமானவற்றை விற்பனை செய்வர். பெரிய புளிய மரத்தோட்டங்களில் புளியம்பழங்களைப் பறித்து அதன் ஓட்டைக் கழற்றி பொலித்தீன் சாக்குகளில் அடைத்து வெளியூர் வியாபாரி களுக்கு விற்று வந்தனர். புளிஉற்பத்தி டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் வரையான உற்பத்தி பொருளாகும். புளி உற்பத்திக் காலத்தைப் பொங்கும் காலம் என்றும் மா பழுக்கும் காலத்தை மங்கும் காலம் என்றும் இக்கிராம மக்கள் அழைப்பது உண்டு. காரணம் விவசாயம் விளைந்து அறுவடை செய்யும் காலத்தில் வறுமை நீங்கி எல்லாவிடத்திலும் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டு செல்வமாக இருக்கும் காலத்தில் புளி உற்பத்தியும் சேகரிக்கப்பட்டு நெல் மூடைகள் முடிந்து புதிய விளைச்சலுக்காக எதிர்பார்த்து வறுமை யுற்றிருக்கும் காலத்தில் மா காய்க்கின்ற காலமாக இருப்பதால் அதனை மங்கும் காலம் என்றும் சொல்வர். இது எமது கிராமத்தினரின் வாய்மூல முதுமொழியாகும்.

வாழை, பப்பாசி, மாதுளை, எலுமிச்சை, கொய்யா உற்பத்தி

இவ்வகை மரங்கள் ஒவ்வொருவர் வளவுகளிலும் கிணற்றுக் கருகாமையில் வளர்க்கும் பயிரினமாகும். இவை அதிகமாக உற்பத்தியாகும் போது அவைகளை உள்ளூர் வியாபாரிகளுக்கு விற்பனை செய்வர். உள்ளூர் வியாபாரிகள் ஒவ்வொருவர் வீடுகளுக்கும் சென்று மேற்கூறப்பட்ட மரங்களில் முற்றிய காய்களை பறித்து அவற்றை நிறுத்தும் எண்ணிக்கையாகவும் பெற்று சந்தைகளில் விற்பர். வாழை, பப்பாசி, மாதுளை, கொய்யா, எலுமிச்சை கிணற்றுக்கருகாமையில் நடுவது அவற்றுக்கு இலகுவாக நீர் வார்க்க முடியும்.

கால்நடை வளர்ப்பு

இக்கிராமத்தில் 1 ஏக்கர் நிலமும் ஒரு மாடும் உள்ளவர்களே குடியானவர்களென முற்காலத்தவர் கருதிவந்துள்ளனர். பெரும்பான் மையானவர்களுக்கு மாடுகள் சொந்தமாக இருந்தன. இம் மாடுகளை பட்டிகளில் வளர்ப்பது கிடையாது கிராமத்தில் புற்றரைகளும், காடுகளும் நிறைய காணப்படுவதால் கால்நடைகளின் உணவுத் தேவை நிறைவேறிவிடும். ஒவ்வொருமாட்டுக்கும் உரிமையாளர்களின் பெயர் குறியீடுகள் உடம்பில் குறிக்கப்பட்டிருக்கும் பசுக்கள் ஈன்ற கன்றுகளை வீட்டில் சில மாதங்கள் கட்டி வைத்து பசுவில் பால்கறந்து வீட்டுத் தேவைகளுக்கு பயன்படுத்துவர். சிலவாரங்கள் சென்றதும் கன்றுகளின் முதுகில் குறியீடுகள் இட்டு கன்றுகளை அவிழ்த்துவிடுவர். அவை எப்போதும்போல மேய்ந்துதிரியும். தேவையான போது தமக்குரிய மாடுகளை பிடித்து விற்பனை செய்வர். முற்காலத்திலிருந்து யாழ்ப்பாணம், சாவகச்சேரியைச் சேர்ந்த வியாபாரிகள் வந்து இங்கு காளை மாடுகளை விலைக்கு வாங்கி செல்வர். வண்டில் ரேசுக்காகவும் கூடுதல் விலைகொடுத்து நல்ல இனக் காளைகளை வாங்கிச் செல்வர். இந்த வியாபாரிகளுக்கு உள்ளூர் வியாபாரிகள் மாடுகளை சேகரித்து கொடுப்பர். கசாப்புக்கடைகாரர்களும் மாடுகளை வாங்கிச் செல்வர். இக் கிராமத்தவர்கள் இறைச்சிக்காக மாடுகளை அறுத்து பல பங்குகளாக பிரித்து விலைக்கேற்ப பங்குகளை விற்பனை செய்வர். இதுபோல் அல்லாது ஆடுவளர்க்கும் முறை

வேறுபட்டது. ஆடுகளை பட்டிகளில் அடைக்கும் முறை இங்கு பின்பற்றப்பட்டது. கூலியாட்களைக் கொண்டும் அல்லது உரிமை யாளர்களே பகலில் காடுகளுக்கு கொண்டு சென்று இலை குலைகளை அவற்றின் உணவுக்காக வெட்டி விடுவர். மாலை நேரத்தில் தோட்டங்களில் உள்ள கேணிகளில் நீர் பருகச் செய்து பட்டிகளில் அடைத்து வைப்பர். உள்ளூர் வியாபாரிகள் ஆடுகளை கொள்வனவு செய்து வெளியூர் வியாபாரிகளுக்கு விற்பனை செய்வர். கடந்த பல தசாப்த காலங்களாக கொழும்பைச் சேர்ந்த நௌபர் என்ற முதலாளி இக்கிராமத்தில் தங்கியிருந்து சூழ உள்ள கிராமங்களிலும் ஆடுகளைக் கொள்வனவு செய்து லொறிகளிலும், புகையிரதங்களிலும் கொழும்புக்கு ஏற்றுமதி செய்து வந்தார். 1990ல் கிராம மக்கள் வெளியேற்றப்பட்டதனால் இவையாவும் கவனிப்பாரற்று போயின. சமீப காலத்தில் இடம்பெயர்ந்து வாழ்ந்த இக்கிராம மக்களில் சிறுபான்மையோர் மீளக் குடியேறிய போது ஆடுமாடுகள் இங்கு மிகவும் குறைவாகவே காணப்பட்டன. முன்னைய காலத்தைப் போன்றல்லாது சிறியளவில் கால்நடை வளர்ப்பிலீடுபடுகின்றனர்.

கோழி, வாத்து வளர்த்தல்

கோழி, வாத்து வளர்ப்பது இக் கிராமத்து பெண்களின் பொழுது போக்காகும். இங்கு முன்னைய காலந்தொட்டு ஒவ்வொரு வீடுகளிலும் நாட்டுக் கோழிகளை வளர்த்து வந்தனர். பின்னைய காலத்தில் இறைச்சிக் கோழிகளையும் வளர்க்கத் தொடங்கினர் நாட்டுக் கோழி முட்டைகளை வீட்டுத்தேவைக்குப்போக மேலதிக மானவற்றை விற்பனை செய்வர். முட்டைகளைக் கொண்டு கேக், வட்டிலப்பம் போன்ற பலவிதமான பலகாரம் செய்வர். இவ்வாறே வாத்துக்களையும் வளர்த்து விற்பனை செய்வர். கோழிகளையும் வாத்துக்களையும் சிறு கொட்டில்களில் வளர்ப்பர். இவையும் வருமானம் தருவனவாகும்.

விவசாயம்

மன்னார், தலைமன்னார் வீதியில் 2வது மைல்கல் அமைந்துள்ள பிரதேசத்தில் 1950, 1960ஆம் ஆண்டுகளில் நெல் உற்பத்தியும்

செய்தனர். அக்காணியின் மையத்தில் கோரைக்குளம் என்ற ஒரு குளம் உள்ளது. அக்குளத்தை அண்டிய பகுதியில் விவசாயம் செய்தனர். 1952ஆம் வருடம் காணி, விவசாய அமைச்சராக இருந்த காலஞ்சென்ற தேசபிதா டி.எஸ் சேனாநாயக்கவின் மகன் திரு. டட்லி சேனநாயக்க அவர்கள் விவசாயக் காணியைப் பார்வையிட வந்தபோது எமது கிராமத்தில் சேகுமுஹம்மது என்பவரால் வளர்க் கப்பட்ட குதிரையில் ஏறி விவசாயக் காணிகளை சுற்றிப்பார்வையிட்டு அரச காணியான அக்காணியை மக்களுக்கு பகிர்ந்து பேமிட் வழங்குவதற்கு ஒழுங்கு செய்து சென்றுள்ளார். அதன் பிறகு பலவருடங்கள் விவசாயம் செய்து வந்துள்ளனர்.

அக்காலங்களில் குரக்கன் போன்ற தானியப்பயிர்களும் செய்கை பண்ணியுள்ளனர். பல வருடங்கள் மழையின்றி பயிர்கள் அழிவுற்ற தால் ஏனைய தொழில்களில் ஈடுபட்ட மக்கள் விவசாயத்தைக் கைவிட்டனர். இருந்தாலும் ஆரம்பத்தில் அரச காணியாக இருந்த காணிக்கு பெமிட் வழங்கப்பட்டிருந்தது. தற்போது அதற்கான உறுதிகள் பின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

கல்வி வளர்ச்சி

ஆரம்ப காலத்தில் திண்ணைப்பள்ளிக் கூட முறையிலேயே கல்வி கற்பிக்கப்பட்டு வந்தது. இந்தியாவிலிருந்து குடியேறிய மக்கள் ஆகையால் இந்தியாவிலிருந்து இங்கு வந்த ஆலிம்களே பள்ளிவாசல்களில் ஆலிம்களாக கடமையாற்றினர். இது மத்ரஸாக் கல்வியுடன் இணைந்ததாக வீடுகளில் உள்ள விறாந்தைகளிலும் திண்ணைகளிலும் குர்ஆன் ஓதிக் கொடுப்பதுடன் வாசிப்பு எழுத்துப் பாடங்கள் நடைபெற்று வந்துள்ளது. குர்ஆனைப் போலவே மனன முறையிலே வாசிப்புப் பாடமும் நடைபெற்று வந்துள்ளது. எழுதுவ தற்கு பனைஓலைகளை வாட்டி அதில் எழுத்தாணி கொண்டு எழுதக்கற்பிக்கப்பட்டுள்ளது. அந்த ஏடுகளில் குத்தற்ற எழுத்துக்களே கற்பிக்கப்பட்டுவந்துள்ளன. இங்கு குடியேறிய மக்கள் வர்த்தகர்களான படியால் இந்திய கணக்குப்பிள்ளைமார்களும் இங்கு வந்தனர். அவர்களின் வருகையால் நிலத்தில் கணக்குகளை எழுதி கற்கும் முறையும் அறிமுகமாகியுள்ளது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மனனமுறையில் எண்வாசிப்பு பாடங்களும் பனை ஓலைகளில் எழுதும்

பழக்கமும் அதிகரிக்கவே ஏடுகளாகக் கட்டிவைத்து வாசிக்கும் முறையும் அறிமுகமானது. இவ்வாறு ஏட்டுக்கல்வி முறை வளர்ச்சியடைந்து வந்தபோது பாதிரி பாடசாலை அல்லது கத்தோலிக்க பாடசாலைகள் தம் மதத்தைப் பரப்பும் நோக்குடன் உருவாகி வந்த காலத்தில் இக்கிராமத்திலும் கத்தோலிக்கப் பாடசாலை ஆரம்பிக்கப் பட்டுள்ளது. மதமாறி விடுவர் என்ற பயத்தை ஆலிம்கள் மக்களுக்கு எடுத்துக் கூறவே அவர்களின் உபதேசங்களைக்கேட்ட பெற்றோர் தம் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பத்தயங்கியதாகவும், ஒருசிலர் மட்டுமே பாடசாலை சென்று கற்றுள்ளனர். ஆலிம்கள் தம் சுய நலத்திற்காகவே பாடசாலைக் கல்வியை எதிர்த்தனர் என்ற உண்மையைத் தெரிந்து கொண்ட பெற்றோர் கல்வியில் ஆர்வம் கொண்டனர். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரசாங்கப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இக் கிராமத்திலும் அரசாங்கப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் அப்பாடசாலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்ற பெயருடன் இயங்கியுள்ளது. முதலில் கிராமசபைக் கட்டிடத்தில் இப்பாடசாலை நடைபெற்றுவந்துள்ளது. முதன்முதலில் மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த ஆரோக்கியம் என்ற ஆசிரியருடன் தொடங்கிய போதும் உதவி ஆசிரியையாக சிசிலியா என்ற பெண் ஆசிரியை நியமனம் செய்யப்பட்டார். இரண்டு ஆசிரியர்களுடனே இப்பாடசாலை நடைபெற்றுள்ளது. அயல் கிராமமான தோட்டவெளி கொன்னையன் குடியிருப்பு சாயக்காரத் தெருவைச் சேர்ந்த மாணவர்களும் இங்கு கல்வி கற்றனர். பலவருடங்கள் சேவையாற்றிய ஆரோக்கியம் தலைமை ஆசிரியர் இங்கு இருந்து மாற்றப்படவே திரு. கணபதிப்பிள்ளை என்ற தலைமை ஆசிரியர் நியமிக்கப்பட்டார். மட்டக்களப்பு காரைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. கணபதி பிள்ளையின் வருகையால் இக்கிராமத்தவர்களின் அறிவுக்கண்கள் திறக்கப்பட்டனவென்றால் மிகையாகாது. பாடசாலைக்குச் செல்லாது வீட்டினில் காலம் கழித்த மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று பெற்றோருக்குப் புத்திமதிகள் கூறி அவர்களின் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பச் செய்தார். ஆரம்பத்தில் சிறு தொகையினரே பாடசாலைக் கல்வியை மேற்கொண்டாலும் திரு. கணபதிப்பிள்ளையின் முயற்சியினாலும் சிறந்த கற்பித்தல் முறையினாலும் மாணவர் அதிகரிக்கத் தொடங்கினர். மாணவர் தொகை அதிகரிக்க யாழ்ப்பாண

ஆசிரியர் ஒருவரும் உதவி ஆசிரியராக கடமையேற்றுள்ளார். ஐந்தாம் வகுப்பு வரை வகுப்புக்களைக் கொண்ட இப்பாடசாலையை திரு. கணபதிப்பிள்ளை தலைமையாசிரியரின் முயற்சியால் எட்டாம் வகுப்புக்கு உயர்த்தப்பட்டது. அவரிடம் கல்வி பயின்ற இவ்வூர் மாணவர்களான எச்.எஸ்.தாவூத், ஏ.என்.ஏ. கபூர் செயினுலாபுதின், கே. கந்தையா என்பவரும் முதலில் எட்டாம் வகுப்புவரை கல்வி கற்றுள்ளனர். பின்னைய காலத்தில் இந்நால்வரும் நான்கு துறைகளில் தேர்ச்சியும் திறமையும் உடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர். இவர்களில் எச்.எஸ். தாவூத் தலைசிறந்த அரசியல் வாதியாகவும், செயினுலாபுதின் சிறந்த வர்த்தகராகவும், ஏ.என்.ஏ.கபூர் தொடர்ந்து படித்து மேல்படிப்பை மன்னாரில் கற்று ஆசிரியராக நியமனம் பெற்று வரவு அதிகாரியாகி பின் தபாலதிபராக கடமையாற்றியுள்ளார். சிறந்த புலவராகவும் விளங்கியுள்ளார். இவரே இக்கிராமத்தின் முதலாவது அரசாங்க ஊழியராவார். கே. கந்தையா யாழ்ப்பாணத்தில் கல்வி கற்று உயர்பதவி வகித்துள்ளார். இவர்கள் பிற்காலத்தில் இப்படிச் சிறப்புறுவார்கள் என்று எட்டாம் வகுப்பு மாணவர்களாக இருந்த போதே திரு. கணபதிப்பிள்ளை தீர்க்கதரிசனமாகக் கூறினார் எனக் கூறி தலைமையாசிரியரின் திறமையை பெருமையாகக் கூறிக் கொள்வர்.

பாடசாலையில் “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற இலட்சியத்துடன் கடமையாற்றிய கணபதிப்பிள்ளை அவர்கள் இக்கிராமப் பாடசாலையை அரசினர் மத்திய கல்லூரியாகத் தரம் உயர்த்த முயற்சி எடுத்தகாலத்தில் பிற்போக்குவாதிகள் இவருக்கு எதிராக எடுத்த முயற்சியினால் எருக்கலம்பிட்டி பாடசாலைக்கு இவர் மாற்றப்பட்டார். அவரது முயற்சியால் அக்கிராமத்தின் பாடசாலை மத்திய கல்லுரியாக தரம் உயர்த்தப்பட்டது. அவரின் கனவும் நனவாகியது எனலாம்.

கணபதிப்பிள்ளையவர்களின் பின்புதான் மன்னார் அர்ச்சவேரியார் கல்லுரி பின்பு மத்தியகல்லூரி,கொழும்பு ஸாகிராக் கல்லூரி போன்ற பாடசாலைகளில் இக்கிராமப் பிள்ளைகள் கல்விகற்கத் தொடங்கினர்.

குடியேறியுள்ளனர். குறிப்பாக இங்கு வந்து குடியேறிய மக்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த கீழக்கரை, காயல்பட்டினம், தொண்டி, நம்புதாளை, போன்ற இடங்களிலிருந்து குடியேறியுள்ளார்கள்

திரு.கணபதிப்பிள்ளை தலைமையாசிரியரின் பின்பு மன்னார் மூர்வீதியைச் சேர்ந்த பிச்சைத்தம்பி என அழைக்கப்படும் ஜனாப்றசீது ஆசிரியர் தலைமையாசிரியராக தாராபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் மன்னார் சின்னக்கடையைச் சேர்ந்த செல்வி மொனிக்கா ஆங்கில ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவர்தான் முதலில் நியமிக்கப்பட்ட ஆங்கில ஆசிரியராவார். இவர் திரு. ஜெகஜோதி கிராம தலைமைக்காரரை திருமணம் செய்து திருமதி மொனிக்கா ஜெகஜோதி என அழைக்கப்பட்டார். இவர்கள் இப்பாடசாலையில் 15 வருடங்களாகப் பணியாற்றியுள்ளனர்.

ஜனாப் ரசீது ஆசிரியரின் காலத்தில் இப்பாடசாலையிலிருந்து ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் ஜனாப் ஏ.என்.ஏ. ஹக்கீம், ஜனாப் கே.எம். அக்பர் ஜஹான் இருவரும் சித்தியடைந்து எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியில் கற்றுள்ளனர். இவர்களைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு ஏ.சி. நூர் முஹம்மது என்பவரும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியில் கல்வி கற்கலானார். அடுத்து மூதூரைச் சேர்ந்த ஜனாப் எம்.எம்.கே. முகம்மது ஆசிரியர் தலைமையாசிரியராக கடமையேற்று மாணவரின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு பல வகையான முயற்சிகளை மேற்கொண்டார். இப்பாடசாலையை சி.பா.தராதர வகுப்பு வரை தரம் உயர்த்த முயற்சிகளை மேற்கொண்டார். அம்முயற்சியில் வெற்றியும் கண்டு சி.பா.த பத்திரவகுப்புவரை தரம் உயர்த்தி சிறந்த ஆசிரியர்களையும் பெற்று பண்பு ரீதியான வளர்ச்சிக்கு வித்திட்டார். இவரது காலத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னையா மாணிக்கம் போன்ற ஆசிரியர்கள் சிறப்பாகப் பணியாற்றினர். இவ்வாறு வளர்ச்சி கண்டு வரும் வேளையில் பழைமைவாதிகள் சிலர் சில உலமாக்களின் துணை கொண்டு மீண்டும் ஐந்தாம் தரம் வரை தரம் குறைக்க வழிவகுத்தனர். பெண்கள் கற்கக் கூடாது என்றும் பாடசாலை சென்றவர்களை நிறுத்தும்படியும் பெற்றோரை வற்புறுத்தினார். வகுப்பு குறைந்ததால் பெண்கள் வெளியூருக்குச் சென்று கல்வியைத் தொடர அனுப்பாது பெற்றார் பாடசாலையிலிருந்தும் நிறுத்தினர். படித்த மாணவர்கள் யாழ்ப்பாணம் கொழும்பு போன்ற நகரங்களுக்குத் தொழில்தேடிச் சென்றனர்.

எடுத்த கருமத்தை எவ்விலை கொடுத்தேனும் சாதிக்க வேண்டும் என்ற சபதத்துடன் ஜனாப் எம்.எம்.கே முகம்மது ஆரம்பக் கல்வியை இப்பாடசாலையில் கற்று வெளியூர்ப் பாடசாலைகளில் உயர்கல்வி கற்றுக் கொண்டிருந்தவர்களையும் பழைய மாணவர் சிலரையும் கொண்டு 1952ஆம் ஆண்டு பழைய மாணவர் கழகத்தை ஸ்தாபித்தார். இப்பழைய மாணவர் கழகத்தை துணையாகக் கொண்டு கிராமத்தின் முன்னேற்றத்திற்கு தன்னை அர்ப்பணித்து சேவையாற்றிய கிராமசபைத் தலைவர் மர்ஹூம் ஜனாப் எச்.எஸ். தாவுத் அவர்கள் கல்விப் பணிப்பாளர்களையும் உயர் அதிகாரிகளையும் சந்தித்து வேண்டிக் கொண்டதற்கிணங்க மீண்டும் இப்பாடசாலை சி.பா. தராதரப்பத்திர வகுப்புவரை தரம் உயர்த்தப்பட்டது. இதன் காரணமாக தலைமையாசிரியர் ஜனாப் எம்.எம்.கே. முகம்மது அவர்கள் வீடுவீடாகச் சென்று பெற்றாரைச் சந்தித்தும் பழைய மாணவர்களின் உதவியாலும் பாடசாலையைவிட்டு வெளியேறி கொழும்பு யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் கடைகளிலும் மில்களிலும் வேலை செய்த மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்து கல்வி கற்க வழி அமைத்தார். அது மாத்திரமல்ல படிப்பை நிறுத்தி வீடுகளிலிருந்த மாணவிகளையம் பாடசாலையில் சேர்ந்து தொடர்ந்து கற்கவும் மேலதிக வகுப்புக்களை நடாத்தியும் வசதி குறைந்த மாணவருக்கு புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை பழைய மாணவர் கழகத்தவரால் நிறைவேற்றி வைத்தார்.

ஜனாப் எம்.எம்.கே. முகம்மது அவர்களின் அயராத முயற்சியாலும் பழைய மாணவர் கழகத்தினரின் உதவியாலும் பாடசாலை ஆசிரியர்களின் திறமையாலும் முதன்முதலில் பரீட்சை எழுதிய மாணவர்யாவரும் சி.பா.தராதரப் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்தனர். குறிப்பாக இக்கிராமத்தில் கற்றுத்தேறிய மாணவிகள்தான் முதல் ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். திருமதி கதிஜா றகீம், றசிதா யூனுாஸ், சவுதா நூர்தீன், சுபைதா நூறு முகம்மது ஆகியோர்கள் இப்பாடசாலையில் உதவி ஆசிரியைகளாக கடமையாற்றி சிறப்பான பணியை மாணவர்கட்கும் ஏன் கிராமத்தில் பெண்கள் கல்வியைத் தொடர வேண்டும் என்று ஆர்வத்துடன்

சேவையாற்றினர். இவர்கள் தங்களை அர்ப்பணித்துச் சேவைசெய்த படியால் இவர்களது பிள்ளைகளும் ஏனைய கிராமப் பிள்ளைகளும் வைத்தியர்களாக, பெறியியலாளர்களாக, விரிவுரையாளர்களாகவும், பட்டயக் கணக்காளர்களாகவும் இன்று உயர்ந்து நிற்கின்றனர்.

ஜனாப் எம்.எம்.கே. முஹம்மது அவர்கள் கல்வியிலும் சமூக கலாச்சார நிகழ்வுகளிலும் திறமைமிக்கவர்களாகச் செயல்பட்டார். சகலகலா வல்லவராக இருந்த இவர் இக்கிராமத்து மக்களின் சகல நிகழ்வுகளிலும் கலந்துகொண்டது மட்டுமல்லாது இக்கிராமத்து மனிதனாக இணைந்து செயற்பட்டார் எனலாம். இவருக்கும் இக்கிராமத்திற்கும் உள்ள தொடர்பு பாடசாலையை விட்டு விலகிச் சென்றபின்பும் நீடித்து வந்துள்ளது. இன்று இவருடைய மகன் டாக்டர். இக்கிராமத்தில் திருமணம் செய்து உறவை மீட்டுள்ளார். ஜனாப் எம்.எம்.கே. முஹம்மது மாற்றலாகி தன் ஊருக்கே சென்றார்.

அவருக்குப்பின் தலைமை ஆசிரியராக மன்னார் மூர் வீதியைச் சேர்ந்த ஜனாப் எம்.ஏ. சலாம் அவர்கள் கடமையேற்று ஜனாப் எம்.எம்.கே. விட்டுச் சென்ற பணியை சிறப்பாகச் செய்தார். இவருக்குப் பின் யாழ் நகரைச் சேர்ந்த திரு. கே. கந்தையா அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். இவரே முதல் அதிபராகக் கடமையேற்று சிறந்த முறையில் சேவையாற்றினார். இவரது காலத்தில் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்டையில் கச்சு முகைதீன் அபூகாசிம், அகமது நெய்னா லத்தீபா, ஆகியோர் சித்தியடைந்தனர். ஆரம்பத்தில் இருவரும் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியில் கற்றனர். ஜனாப் அபுல் காசிம் யாழ் ஸ்டான்லி கல்லூரியில் கல்வி கற்று இன்று சிறந்த வைத்திய நிபுணராக லண்டனில் வாழ்ந்து வருகின்றார். இவரே இக்கிராமத்தின் முதல் வைத்தியராவார். மற்றவர் ஆசிரியையாக கடமையாற்றி ஓய்வு பெற்ற லத்தீபா செய்யது அஹ்மது ஆகும். அவர்களில் பலர் கடமையாற்றினாலும் ஜனாப் எம்.என். ஐயூப் அதிபராக இருந்த காலம் தாராபுரம் பாடசாலையின் பொற்காலம் எனலாம். அதிபர் இவ்வூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் ஆனதாலும் மாணவனாக யாழ் மத்திய கல்லூரியில் கல்வி கற்றபோது பாடசாலையின் தரம் குறைக்கப்பட்டதைக் கண்டித்து பழைய மாணவர் கழக உறுப்பினர்களாக இருந்து இவர் பிற்போக்கு சக்திகளுக்கு

எதிராக பல மேடைப் பேச்சுக்களை எழுதி அக்கால மேல்வகுப்புப் படித்த மாணவரான என்.எம். நூர்டீன் போன்றவர்களின் மூலம் மேடைகளில் முழங்கச் செய்தார். சிறந்த பேச்சாளரான இவரும் பல மேடைகளில் பெண்கள் கல்வியை ஊக்குவிக்கும் பாணியில் பேசி பெண்கள் கல்வி கற்க ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தவர் என்றவகையில் வீடு வீடாகச் சென்று பாடசாலைக்கு வராத மாணவர்களின் வீட்டுக்குச் சென்று அவர்களைப் பாடசாலைக்கு அழைத்து வருவார். வீட்டில் கல்வி கற்க வசதியற்ற மாணவர்களுக்கு பாடசாலையில் கல்வி கற்பதற்கு இரவு வேளைகளில் பெற்றோ-மெக்ஸ் வெளிச்சத்தில் படிக்க வசதி செய்து கொடுத்தார். நிர்வாகத்திலும் அதேபோல் கற்பித்தலிலும் சிறப்பான சேவையைச் செய்தார். தமிழ் இலக்கியம் கற்பிப்பதில் தலை சிறந்த ஆசிரியராக விளங்கினார். கம்பராமாயாணத்தில் துறை போந்தவராக விளங்கினார். கம்பராமாயாணத்தை பேச்சாகவும், கவியரசன் பாரதியை மூச்சாகவும் கொண்டவர் அதிபர் ஐயூப் என்று பிற்காலத்தில் இவ்வூர் ஆசிரியர்களால் பாராட்டப்பட்டார். இவரது காலத்தில் உயர் வகுப்புக் கற்றவர்கள் யாவரும் பிற்காலத்தில் அரச ஊழியர்களாக விளங்கினர். அவரது காலத்தில் பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளிலும் மாவட்ட ரீதியில் முதலாமிடம் பெற்றனர். இவரது காலத்தில் சிறந்த பல ஆசிரியர்கள் கடமையாற்றினர். இவரின் பின் மன்னார் மூர் வீதியைச் சேர்ந்த இஸட்.ஏ. றஹீம் அவர்களும் அதே ஊரைச் சேர்ந்த ஹாஜா முகைடீனும் தாராபுரத்தைச் சேர்ந்த எச். சித்தீக் அவர்களும் சிறந்த சேவையாற்றினர். இவருக்குப் பின் எருக்கலம் பிட்டியைச் சேர்ந்த எம்.ஏ. கபூர் அவர்களும் ருவான்வெல்லையைச் சேர்ந்த ஜனாப் ஐ.எம். தாஹா அவர்களும் அதிபராகக் கடமையேற்று திறம்பட சேவையாற்றினர். அடுத்து வந்த எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஜனாப் கே.எம். அபூபக்கர் அவர்கள் காலத்தில் க.பொ.த. உயர்தர வகுப்புவரை வகுப்புக்கள் உயர்த்தப்பட்டது. 1C. பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. இவரது இச்சேவை மக்களால் நினைவு கூறத்தக்கது. அவரின் பின்பு மீண்டும் எஸ். சித்தீக் அதிபராகக் கடமையேற்று சிறந்த சேவையாற்றி கல்வியில் க.பொ.த சாதாரண தர, க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளை முன்னரைப்போன்று ஏற்படுத்தினார். வட மாகாண முஸ்லிம்கள் விரட்டப்பட்ட 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் வரை அதிபராக

பாடசாலையைக் கொண்டு நடாத்தினார். இவரது காலத்தில் ஆங்கில, தமிழ் பேச்சுப் போட்டிகளில் தாராபுர அல்-மினா மகா வித்தியாலய மாணவர்கள் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்றுத் திகழ்ந்தனர். மீளக்குடியேறிய 92-94 காலப்பகுதியில் அரச உத்தரவுக்கிணங்க ஆசிரியர்கள் மாத்திரமே வந்து போயினர். 1995ஆம் ஆண்டில் சிறுகச் சிறுக இக்கிராம மக்கள் குடியேறத் தொடங்கினர். தற்காலிக அதிபராக ஜனாப் கே.எம். சேகு அலாவுதீனும் பின்பு ஜனாப் கே.எம். மரைக்காரும் அதிபராகக் கடமையாற்றினர். அதன் பிறகு தற்காலிக அதிபராக ஜனாப் உவைஸ் அவர்களும் கடமையாற்றினார். இவரது காலத்தில் கிராம மாணவர்களைவிட எல்லைக் கிராம மாணவர்களே கூடுதலாகக் கல்வி கற்றனர். காலப்போக்கில் அகதி முகாம்களிலும், வாடகை வீடுகளிலும் வாழ்ந்த மக்கள் சிறிது சிறிதாக இக்கிராமத்தில் குடியேறத் தொடங்கினர். இன்று ஏறத்தாள 140 குடும்பங்கள் மீளக்குடியேறி வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் பிள்ளைகளும் அயல் கிராமத்தில் வாழ்ந்துவரும் பிள்ளைகளும் இக்கிராமத்தில் தற்காலிகமாக வசித்துவரும் பெற்றோர்களின் பிள்ளைகளுமாக மொத்தம் 450 மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்கின்றனர். 1995ஆம் ஆண்டு தொடக்கம் முறையே 6, 7, 8, 9, 10, 11ஆம் வகுப்புவரையும் வகுப்புக்கள் உயர்ந்து 1999ஆம் ஆண்டு தொடக்கம் விடத்தல் தீவைச் சேர்ந்த தர்மதாஸ் அதிபராகக் கடமையேற்று க.பொ.த. பரீட்சைக்குத் தோற்றும் அளவுக்கு பாடசாலையை வளர்த்தார். இவர் இடமாற்றம் பெற்ற பின்பு 2003ஆம் ஆண்டில் வங்காலையைச் சேர்ந்த ஸ்டான்லி டிமெல் அவர்களின் முயற்சியால் க.பொ.த. உயர்தர வகுப்புவரை உயர்ந்து 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதப் பரீட்சைக்குத் தோற்றி கணிசமான அளவு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவ்வதிபரின் அயராத முயற்சியினாலும் சிறந்த கட்டுப்பாட்டாலும் ஒழுக்கமான மாணவர்களாகவும், கல்வியில் சிறந்த மாணவர்களாகவும் மட்டுமல்லாது மன்னார் மாவட்டத்தில் குறிப்பிடத் தக்க பாடசாலைகளில் ஒன்றாக மிளிரச் செய்துள்ள இவரது முயற்சியி னால் இப்பாடசாலைக்குத் தேவையான பௌதீக வளங்களும் கிடைத்து படிப்படியாக வளர்ச்சியடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

2002ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ றிஸாட்

பதியுத்தீன் அவர்களும் இப்பாடசாலையின் பழைய மாணவராவார். இக்கிராமத்தின் தவப் புதல்வரான இவர் சொல்லாமலே செய்வார் பெரியார் என்ற பொன்மொழிக்கொப்ப மகா வித்தியாலயத்திற்குப் அளப்பரிய உதவிகளைச் செய்துள்ளார். மீள் குடியேற்றச் செயலணியின் தலைவராக பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களால் 2003ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். இவரது அயராத முயற்சியினால் 2003ஆம் ஆண்டு கட்டிட வசதிகளையும் தளபாட வசதிகளையும் மைதான திருத்த வேலைகளையும் பிரதான மண்டபமான தாவூத் மண்டபத்தைப் புதுப்பித்து அதற்குத் தேவையான மின்சார வசதிகளையும் செய்து கொடுத்துள்ளதுடன் பிரதான மண்டபத்திற்குரிய கதிரைகளையும் வழங்கியுள்ளார். அதிபர் காரியாலயத்தை அமைத்துக் கொடுத்ததுடன் புதிய இரண்டு மாடிக் கட்டிடத்திற்கான பணத்தையும் ஒதுக்கியுள்ளார். அதற்கான வேலைகளும் ஆரம்பமாகியுள்ளன. இப்பாடசாலைக்கு பேண்ட் வாத்தியக் கருவிகளும் வழங்கியுள்ளார்.

"இதனை இதனால் இவன் செய்வான் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விடல்" என்ற வள்ளுவன் குறளுக்கேற்ப அதிபர் அவர்கள், ஆசிரியர்களின் திறனை ஆராய்ந்து அறிந்து அதற்கேற்ப பாடங்களைக் கொடுத்து மாணவர்கள் கல்வியில் சிறந்த பயனடைவைப் பெறுவதற்கு வழிவகுத்துள்ளார். மாவட்டத்தில் சிறந்த தொரு பேண்ட் வாத்தியக் குழுவையும் உருவாக்கியுள்ளார்.

இவ்வாறு கற்றலுக்கான பல்வேறு வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி நல்லொழுக்கமுள்ள மாணவர்களையும் உருவாக்கியுள்ளார். தொழிலதிபர் கலாநிதி. வை.கே. மரைக்கார் 1990ஆம் ஆண்டுக்கு முன்பு தனது தந்தையாரின் ஞாபகார்த்தமாக சிறந்ததொரு (மேடை) அரங்கினை அமைப்பதற்கான நிதியுதவிகளையும் அளித்து அந்த அரங்கிற்கு தனது தந்தையாரின் பெயரில் "யூசுப் அரங்கு" என நாமம் சூட்டி பாடசாலை நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகள் யாவும் அந்த மேடையில் நடைபெறுவதற்கான வசதிகளையும் செய்து கொடுத்துள்ளார். இடப்பெயர்வினால் அவ்வரங்கு சிதைவுற் றிருந்தபோது கலாநிதி மரைக்கார் அதனை பல இலட்சங்களைச் செலவு செய்து புதுப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்தின் தவப் புதல்வரான றிஸாட் பதியுத்தீன் அவர்கள் 2004ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வன்னித் தொகுதியின் ஒரே பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார். 2004ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி புனர்வாழ்வளிப்பு, வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சராக நியமனம் செய்யப்பட்டார். சிறந்த பொறியியலாளரான அமைச்சர் றிஸாட் பதியுத்தீன் தனது தொகுதியிலுள்ள சகல கிராமத்திற்கும் சேவை செய்வதை இலக்காகக் கொண்டு பிறர் பிள்ளைகயைப் பேணி வளர்த்தால் தன் பிள்ளை தானாய் வளரும் என்ற நம்பிக்கையுடன் வன்னி மாவட்டத்திற்கும், இக்கிராமத்திற்கும் பல் தரப்பட்ட சேவைகளையும் செய்து வருகின்றார்.

கைத்தொழில் முயற்சிகள்

இங்கு கைத்தொழில் முயற்சிகளும், குடிசைக் கைத்தொழில்களும் நீண்டகாலத்திற்கு முன்பு நடைபெற்றுவந்துள்ளன. அதாவது 1950/ 60ஆம் ஆண்டுகளில் செங்கல் உற்பத்தி நிலையம் ஒன்று இயங்கி வந்துள்ளது. அதன் உரிமையாளரான அந்தோனி என்பவர் இக்கிராமத்துத் தொழிலாளர்களையும் இணைத்து மேற்படி தொழிலில் ஈடுபட்டுள்ளார். அவரது மரணத்தின் பின் அத்தொழிற்சாலை கைவிடப்பட்டுள்ளது.

குடிசைக் கைத்தொழிலாக பல கைத்தொழில்கள் நடைபெற்று வந்துள்ளன. ஜனாப் இப்ராஹிம் என்பவர் உதயா பற்பொடி, உதயா கோப்பி, உதயா நீலம், உதயா கடலை, போன்ற பொருட்களை குடிசைக் கைத்தொழிலாக செய்து வந்துள்ளார். அதுபோல் முசாதிக் என்பவர் மிளகாய்த் தூள், மிளகுத் தூள், கோப்பி, முருக்கு போன்ற உணவுப் பொருட்களை பொதிசெய்து விற்பனை செய்துள்ளார். தற்காலத்தில் இதுபோன்ற தொழிலை முஸாதிக் முஹம்மது ஸஹீத் போன்றவர்கள் குடிசைக் கைத்தொழிலாக செய்து வருகின்றனர்.

வர்த்தகம்

இக்கிராமத்தில் முற்காலத்திலிருந்து பலர் வர்த்தகத்தில் ஈடுபட்டு

வந்துள்ளனர். ஆரம்பகாலத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தவர்களை வரலாற்று ரீதியாக ஆராயும்போது நாகூரான் அவர்களின் நாகூரான் அண்ட் சன்ஸ் அ.நெ. மதாறு சாகிப் புலவரும் மன்னார் பட்டினத்தில் வர்த்தகம் செய்து வந்துள்ளனர். அவர்களைத் தொடர்ந்து ஜனாப் பக்கீர் முஹம்மது ஜனாப் ம.அ. கப்ப மரைக்கார் ஜனாப் ஓ.கே. செயினுல் ஆப்தீன் போன்றவர்கள் நகைக்கடைகளையும் ஜனாப் அப்துல் சலாமும், ஜனாப் சேகு தாவூதும் இணைந்து ரூபி ஸ்டோர்ஸ். ஜனாப் ம.மு. யூசுப் என்பவரின் பென்சி ஹவுஸ், என்ற பென்ஸி கடையும் கிராமத்தைச் சேர்ந்த சிலர் ஒன்று சேர்ந்து ராசி ஜூவல்லர்ஸ், ஜனாப் சு. நெயினா முஹம்மது சிகரட் ஏஜென்சியும், இயங்கி வந்துள்ளன. அதேபோன்று உள்ளூரிலும் ஜனாப் அ.உ. ஹபீபு முஹம்மது, ஜனாப் க.அ. கச்சு மரைக்கார், ஜனாப் அ. அசனா லெப்பை, ஜனாப் உ. அல்லாப்பிச்சை, ஜனாப் நூ. கப்ப மரைக்கார், மீரா சாகிபு ஜனாப் எம்.எம். சேகு முஹம்மது மீரா ஷா மரைக்கார், ஜனாப் கே.எம். இப்ராஹிம் அவர்களின் சிட்டி நகைமாளிகையும் ஜனாப் சு. அசன் என்பவரின் மூலைக் கடையும் இயங்கிவந்த வேளையில் இடப்பெயர்வினால் மன்னாரில் இயங்கிய முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் யாவும் கைவிடப்பட்டது. பிடவை, அலுமினியம் போன்ற வியாபார ஸ்தாபனங்களையும் நடாத்தி வந்துள்ளனர்.

பின்னைய காலத்தில் ஜனாப் மு.க.மு. ராசிக், ஜனாப் க. மஹ்மூத், ஜனாப் மா. சம்சுதீன், ஜனாப் எம். சாஹுல் ஹமீட், ஜனாப் தாவூத், ஜனாப் சுலைமான் சமூக சேவையாளர், ஜனாப் சேகு முஹைதீன், ஜனாப் அ. முஹம்மது காசிம், ஜனாப் அஸீஸ், சகோதரர்கள் முறையே ஆட்காட்டிவழி, வண்ணாகுளம், அளவக்கை, அடம்பன், செம்மண் தீவு, ஆகிய இடங்களிலும் ஜனாப் நெயினா முஹம்மது அப்துல் கபூர், ஜனாப் எம். மஹ்ரூ∴ப், ஜனாப் எம்.எம். சம்சுதீன், ஆகியோர் முறையே சூரியகட்டைக்காடு, நானாட்டான், மோட்டைக் கடை போன்ற இடங்களிலும் கொள்முதல் கடைகளையும், சில்லறைக் கடைகளையும், நடாத்தியுள்ளனர். ஜனாப் நூறு முஹம்மது, ஜனாப் நாகூர் பிச்சை, ஆகியோர் முறையே வவுனியா, மதவாச்சி போன்ற இடங்களிலும் புடவை, பென்சி பொருட்கள் வர்த்தகத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பு, யாழ்ப்பாணம், போன்ற மாநகரங்களிலும், எமது கிராமத்தவர்கள் நீண்டகாலமாக பெரிய வர்த்தக நிலையங்களை நடாத்தி வந்துள்ளனர். 1952ஆம் ஆண்டு கொழும்பு 14 கிராண்பாஸ், சென் ஜோசப் வீதியில் ஜனாப் எஸ்.ஏ.என். அப்துல் கபூர் அவர்கள் அசோசியேடட் கொபரா ஸ்டோர்ஸ், என்ற ஸ்தாபனத்தை நடத்தியதாகவும் ஜனாப் எம்.எம். உஸ்மான் ஜனாப் யாகூப் சகோதரர்களின் கொழும்பு டாம் வீதி இலக்கம் 16, ஓ. மீரா சாகிபு அன்-சன்ஸ் மொத்த வியாபார ஸ்தாபனமும் பழைய சோனகத் தெரு இலக்கம் 98இல் ஜனாப் ஹக்கீம் அவர்களின் ஹக்கீம் ஸ்டோர்ஸ் போன்ற வர்த்தக ஸ்தாபனங்களும் நீண்டகாலமாக இயங்கி வருபவையாகும். பின்னைய காலத்தில் அல்-ஹாஜ் உஸ்மான் அவர்கள் டாம் வீதி, இலக்கம் 16ஏ யில் உஸ்மான் அன்-சன்ஸ் இலக்கம் 16இல் அல்-ஹாஜ் யாகூப் அவர்களின் ஓ. மீரா சாகிபு அன்-சன்ஸ், டாம் வீதி 25 எம்.ஓ.எம். மீரா சாகிப் அன்-சன்ஸ் ஆகியவை பிரபல்யமிக்க அலுமினிய பிளாஸ்டிக் நூல், கயிறு, மொத்த வியாபார ஸ்தாபனங்களாகவும் இயங்கி வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் கே.கே.எஸ். வீதியில் இலக்கம் 222, 232, ஜனாப் எம்.எம். யூசுப், ஜனாப் கவுது சகோதரர்களின் ஜெஸீமா பிக்ஸர்ஸ் பலஸ் என்ற வர்த்தக ஸ்தாபனங்கள் பிரபல்யம் மிக்கவையாக விளங்கின.

1990ஆம் ஆண்டுக்குப் பின் கொழும்பு மாநகரில் தெஹிவளையில் கொழும்பு ஸ்டோர்ஸ் என்ற கண்ணாடி ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் எம்.எம். கவுது அவர்களின் புதல்வர்களும் தெகிவளையிலும், புறக்கோட்டையிலும் வர்த்தக நிலையங்களை நடாத்தி வருகின்றனர்.

வட மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் தாயகத்தை விட்டு விரட்டப்பட்டு புத்தளத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் வாழ்ந்து வருவதுபோல் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்களும் புத்தளம், தில்லையடி, கரம்பை, உலுக்காப்பள்ளம், கொத்தாந்தீவு போன்ற இடங்களில் பெரும்பான்மை யாகவும், குருநாகல், கொழும்பு வத்தளை, தெகிவளை போன்ற பிரதேசங்களில் சிறுபான்மையினராகவும், ஏனைய பிரதேசங்களில் சிதறி வாழ்கின்ற நிலையில் தமது அயராத முயற்சியினால் வெளி

நாடுகளுக்கும் சென்று உள்நாட்டிலும் முன்னேறி தலை நகரிலும் ஏனைய மாவட்டங்களிலும் வர்த்தக ஸ்தாபனங்களை நிறுவியுள்ளனர். அந்தவகையில் கொழும்பு வெள்ளவத்தையில் 55, மெனிங் பிளேஸில் கலாநிதி வை.கே. மரைக்கார் ரொசான் ஸ்ட்ரேடிங் கம்பனி பிரைவேட் லிமிட்டட் என்ற ஸ்தாபனத்தையும் பொட்டலெக் என்ற ஸ்தாபனத்தை யும் நடாத்தி வருகின்றனர். வெள்ளவதத்தை இலக்கம் 32இல் ஜனாப் ஏ.எல். முஸம்மில் ஜனாப் கே.எம். சஹறாப்தீன் ஜெஸீமா ட்ரேட் சென்றர் கொழும்பு செட்டித் தெரு 139/9இல் கே.எம்.ஆர். ஜுவல்லர்ஸ் 177/7, இல் ஜனாப் என்.எம். ஜலால்தீன், என்பவரின் சர்மிலா ஜுவல்லர்ஸும் ஜனாப் எஸ். ஹுசைர் என்பவரின் நகைக்கடையும் புறக்கோட்டை மெனின் சந்தையில் ஜனாப் அஸன் நெய்னா என்பவரின் சில்லறை வியாபாரமும் பொறல்லையில் ஜனாப் எஸ். நெய்னா முஹம்மது என்பவரின் கண்ணாடி பிரேம் வர்த்தக நிலையமும் இயங்கி வருகின்றன. புத்தளத்தில் அல்-ஹாஜ் கே.எம். இரத்தினம் அவர்களின் ஜனாப் கப்பமரைக்கார் ஜுவல்லர்ஸும் ஜனாப் எம்.கே.எம். ஹுஸைன் அவர்களின் ஹுசைன் இரும்புக் கடையும் ஜனாப் கே.எம். இப்ராஹிம் அவர்களின் நகை மாளிகையும், அனுராதபுரத்தில் ஜனாப் எம்.கே.எம். ராசிக் அவர்களின் இரும்புக் கடையும், மதவாச்சியில் ஜனாப் எஸ். இல்முத்தீன், ஜனாப் ஏ. அலிகான் ஆகியோர் முறையே சிட்டி ஹார்ட்வெயார், நியூ சிட்டி ஹார்ட்வெயார், வவுனியா நகரில் ஜனாப் ஏ.எல். பவுஸின் என்பவரின் பென்சிக் கடையும் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இக்கிராம மக்கள் ஆரம்பகாலந் தொட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளதை வரலாறுகள் மூலம் அறியக் கூடியதாயுள்ளது.

ஜும்ஆப் பள்ளியும் மத்ரஸாக் கல்வியும்

இக்கிராமத்தில் இரண்டு பள்ளிவாசல்கள் உள்ளன.

01. ஹுசைனிய்யா ஜும்ஆப் பள்ளியும்
02. மீரானிய்யா ஜும்ஆப் பள்ளியும்

குறித்த மகல்லா வாசிகளால் இவற்றின் பரிபாலனம் நடைபெற்று

வந்தது குத்பா பிரசங்கங்கள் முறையே ஒவ்வொரு பள்ளிகளிலும் மாறி, மாறி ஜும்ஆ நடைபெற்று வருவது வழக்கம். இரண்டு பள்ளியின் நிர்வாகமும் மரைக்காயர் மார்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. நிர்வாகம் செய்பவர்களை மரைக்காயர் என்று அழைத்தனர். தலா ஒரு பள்ளியை 5 மரைக்காயர் மார்கள் நிர்வகித்து வந்தனர்.

பள்ளிப் பரிபாலனம்

இப்பள்ளிவாசல் குறித்த வீதியில் வசிப்பவர்களின் மார்க்கக் கடமை களையும், தொழுகையையும் நடாத்துவதற்கு ஆலிம் ஒருவரும் நியமிக்கப்பட்டு வந்தார். இப்பள்ளிவாசலின் பரிபாலனத்துக்கும், மரைக்காயர், ஆலிம்களுக்கான சம்பளத்தை ஊர் வாசிகளிடமிருந்தும் அறவிட்டு வந்தார். ஒவ்வொரு ஜும்ஆ நாளிலும் மகல்லா வாசிகள் இருக்க பள்ளிப் பரிபாலனம் செய்யும் மரைக்காயர்மார்கள் மத்தியில் ஊர் பிரச்சினைகள், பள்ளிவாசல் வரவு, செலவுத் திட்டக் கணக்குகள் பற்றி ஆலோசனை செய்து தீர்க்கமான முடிவு செய்வர். ஆரம்ப காலத்தில் வாரிசு இல்லாதவர்களும், வசதியில்லாதவர்களும், தமது அசையாத சொத்துக்களில் சிலவற்றை பள்ளிவாசலுக்கு எழுதி வைப்பர். இதனால் கிடைக்கும் வருமானமும் மகல்லா வாசிகளின் குடும்பத் தலைவருக்கு மாதாந்த வரியும் அறவிட்டு அதன் வரவுகளும், செலவுகளும் வாசித்துக் காட்டப்படும். அதுமாத்திரமல்ல ஊரவர்களின் திருமணம், இறப்பு, மார்க்கவிடயங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளும் பள்ளிவாசல் அனுமதியுடனே நடைபெறும். மேற்படி ஹுசைனியா ஜும்ஆப் பள்ளிவாசல் ஆரம்பகாலத்தில் ஓலைக் கட்டிடமாகவே இருந்து வந்துள்ளது. அதன் அருகாமையில் புதிய கட்டிடம் அமைப்பதற்கு தீர்மானித்து அதன் கட்டுமானப் பொறுப்பை அக்கால மரைக்காயர் சபைத் தலைவராக இருந்த ஜனாப் மதாறு சாயிப் புலவர் அவர்களால் அத்திவாரமிடப்பட்டது. சிறிது காலத்தில் அவர் இறையடி எய்தினார். கட்டிட வேலை தொடர்ந்து வந்த மரைக்காயர் களின் தீர்மானப்படி ஊர் மக்களின் பண உதவியானலும் மானிய முறையில் வேலைகளைச் சிறிது சிறிதாகச் செய்து 1954ஆம் ஆண்டு மேற்படி பள்ளிக் கட்டிடம் வக்பு செய்யப்பட்டது. பள்ளிப் பரிபாலனத்தில் இறுதியாக ஐந்து மரைக்காயர்மார்கள் இடம்பெற்றிருந்தனர். அவர்கள் பெயர் விபரம் மர்ஹூம்களான ஜனாப் க.அ. யூசுப், ஜனாப் செ.அ.

அஹமது நெய்னா புலவர், ஜனாப் ம.அ. பக்கீர் மீரா, ஜனாப் ம.அ.மு. அப்துல் கனி, ஓ.கே. செய்னுல் ஆப்தீன் ஆகியோர் இடம்பெற்றனர். இவர்கள் காலத்திலேயே பள்ளி வக்புசபையில் பதிவு செய்யப்பட்டது. குடித்தொகை அதிகரிக்கவே குடும்ப ரீதியாக வேறு ஆறுபேரைக் கொண்ட நிருவாகக் குழுவும் இணைந்து மொத்தமாக 11 பேரைக் கொண்ட பரிபாலன சபை அமைக்கப்பட்டது. இக்குழு அமைப்பதில் சமூக சேவையாளர் மர்ஹூம். என்.எம். அஹ்மது கனி அவர்கள் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளார். மரைக்காயர்மார் மறைவுக்குப் பின்னர் அவர்களின் குடும்பத்தில் ஒருவர் குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை 3 வருடங்களுக்கு ஒருமுறை குழு உறுப்பினர்கள் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டு வந்தனர். 1990 நவம்பர் மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே ஏற்பட்ட மோதலின்போது குண்டுத்ததாக்குதலுக்கு இலக்காகி ஹுஸைனியா பள்ளிவாசல் தரை மட்டமாக்கப்பட்டது. மீளக் குடியேறிய கிராமத்தைச் சேர்ந்த மக்களால் புதிய பள்ளி ஒன்றை நிர்மாணித்து தெரிவு செய்யப்பட்ட 11 நம்பிக்கை யாளர் சபையினால் பரிபாலனம் செய்யப்பட்டு வருகிறது. பிரதான தர்ம கர்தாவாக ஜனாப் என்.எம். முனவ்வர் கடமையாற்றி வருகிறார்.

மீரானியா ஜும்ஆப் பள்ளி

இப்பள்ளி லெப்பை வீதியில் அமைந்துள்ளது. நீண்டகாலத்திற்கு முன் சுண்ணாம்புக் கற்களாலான ஓடு போடப்பட்ட கட்டிடமாக இது அமைக்கப்பட்டது. லைப்பைக் குடும்பத்தவர்களதும் அ.உ. நெயினா குடும்பத்தவர்களதும் முயற்சியால் மரைக்காயர் சபையின் ஆலோசனையின்படி கட்டப்பட்டது என மூதாதையர் கூறக்கேட் டுள்ளோம். இதுவும் மரைக்காயர்களால் பரம்பரையாக பரிபாலனம் செய்யப்பட்டது. ஹுஸைனியா பள்ளியைப் போன்று பள்ளியின் வருமானங்கள் ஜும்ஆவுக்குப் பின் வாசிக்கப்பட்டு வந்துள்ளது. தெருவின் நன்மை, தீமைகள், மார்க்க விடயங்கள், திருமண, மரண விடயங்கள் பள்ளியின் பரிபாலன சபையின் அங்கீகாரத்தின் பெயரில் இடம்பெற்று வந்துள்ளது. இறுதியாக இருந்த மரைக்காயர்களின் பெயர்கள் வருமாறு:

ஜனாப் எச்.எஸ். தாவூத் தலைவர், ஜனாப் ஐ. முகைதீன்கனி, ஜனாப் என். நூறு முஹம்மது, ஜனாப் ஏ.சி. முஹம்மது அப்துல் காதர், ஜனாப் அப்துல் கையூம் மௌலானா, ஜனாப் ஏ. சுலைமான் ஆகியோர். இப்பள்ளியில் முதன் முதலாக இருந்த மரைக்காயர்கள் நீக்கப்பட்டு நிருவாகக் குழுவினரால் பரிபாலனம் செய்யும் முறை இடம்பெற்றது. 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக இக்கிராம மக்கள் புத்தளத்தில் பெரும்பான்மையாகவும் ஏனைய பிரதேசத்தில் சிதறியும் வாழ்ந்து வந்தனர்.

2000ஆம் ஆண்டில் மக்கள் படிப்படியாக இக்கிராமத்தில் குடியேறத் தொடங்கியது. பள்ளியின் நிருவாகம் ஒரே குழுவினரால் பரிபாலிக் கப்பட்டு வந்தது. 2004ஆம் ஆண்டு குறித்த பள்ளிகளின் மகல்லா வாசிகளால் தனித்தனி நிருாவகக் குழு தெரிவு செய்யப்பட்டு பிரிபாலனம் நடைபெற்று வருகிறது. ஜனாப் எஸ். தாவூத் அவர்கள் பிரதான தர்ம கர்த்தாவாக கடமையாற்றி வருகிறார்.

இரண்டு பள்ளிவாசல்களின் அருகாமையில் அமைக்கப்பட்ட கட்டிடங்களில் மத்ரஸாக் கல்வி போதிக்கப்பட்டு குர்ஆன் மத்ரஸாக் களாக இயங்கி வந்துள்ளன. ஆலிம்கள் குர்ஆன் பாடங்களைக் கற்பித்துக் கொடுப்பர். இக்கிராமம் தோன்றிய காலத்தில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட இம் மத்ரஸாக்களிலே இந்திய ஆலிம்களாலேயே ஆரம்ப காலத்திலிருந்து குர்ஆன் ஓதிக்கொடுக்கப்பட்டதோடு, அரபுக் கல்வியிலும், பொதுக் கல்வியிலும் மாணவர்களை ஈடுபடுத்தி கற்பித்து கொடுத்துள்ளனர். மனன முறையிலேயே இக்கல்வி கற்பிக்கப்பட் டுவரும் இந்த மத்ரஸாவில் கற்பிக்கும் ஆலிம்களுக்கு ஊதியமாக சிறு தொகைப் பணமே வழங்கப்பட்டுள்ளது. இவர்களே பள்ளியில் தொழுகை, ஜும்ஆ, மத்ரஸாவில் கல்வி கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த மத்ரஸாவில் வருடாந்தம் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் பிறந்த நாளை ரபீஉல் அவ்வல் பிறை 12லும், பாசிப்பட்டண நெயினா முஹம்மது (ரழி) அவர்களின் கொடியேற்றும் தினத்திலும் ஆலிம்கள் தலைமையில் கொடி பிடித்து வீடு, வீடாகச் சென்று ஒவ்வொரு வீடுகளிலும் வழங்கும் நார்ஸா எனக் கூறப்படும் மஞ்சச் சோறு, சில வீடுகளில் மஞ்சட் சோறுடன், பாற்சோறு மற்றும் நேர்ச்சைப் பொருட்கள் என்பவற்றைப் பெற்று

இறுதியாக வழங்கப்பட்ட நேர்ச்சைப் பொருட்களையும் மஞ்சட் சோறுகளையும் பள்ளியில் கூடி அவர்களுக்குப் பங்கீடு செய்வர். இதனைக் கொடியெடுத்தல் என்பர். ஹுசைனியா ஜும்ஆப் பள்ளியில் ஜனாப் முஹைதீன் தம்பி ஆலிம் அவர்கள் ஏறத்தாள 40 வருடங்களாக ஆலிமாகவும் அதிபராகவும் கடமையாற்றி வந்துள்ளார். இதேபோல் மீரானியா ஜும்ஆப் பள்ளியில் ஸம்சுதீன் ஆலிம் அவர்கள் ஏறத்தாள 30 வருடங்களாக கடமையாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்று விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாரம்பரியங்கள்

கிராமம் தோன்றிய காலம் தொடக்கம் பாராம்பரியமாக சில நிகழ்வுகள் நடைபெற்று வந்துள்ளன. அந்த வகையில் பள்ளிக் கந்தூரிகள், கொடியெடுத்துப் பாட்டுப் படித்தல், மௌலூது ஓதுதல், முனாஜாத்துப் பாடுதல் போன்ற நிகழ்வுகள் வருடாந்தம் நடைபெற்று வந்துள்ளன. இவ்வகை நிகழ்வுகள் ஒரு கிராமத்தின் முதிர்ச்சியைக் காட்டி நிற்பதாக இந்திய அறிஞர் சுகுமார் எம்.ஏ. அவர்கள் தனது ஆய்வில் கூறி நிற்கின்றார். இந்தவகையில் இக்கிராமம் நீண்டகால வரலாற்றைக் கொண்டது என்பதற்கு இவ்வைபவங்கள் சான்றாகி வருகின்றது.

பள்ளிக் கந்தூரி, வருடாவருடம் இரு பள்ளியிலும் நடைபெற்று வந்துள்ளது. ஊர் மக்கள் அரிசி, இறைச்சி, மரக்கறி, ஏனைய பொருட்களையும் இனாமாக வழங்குவர். இக்கந்தூரி நாளில் பெருநாள் போன்று ஊர் மக்கள் யாவரும் ஒன்று கூடி சமைத்து, ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள தொகைக்கேற்ப உணவுப் பங்கீடு செய்வர். ஒரு நாள் ஹுசைனியாப் பள்ளியிலும் வேறொரு தினம் மீரானியாப் பள்ளியிலும் இக்கந்தூரிகள் நடைபெற்று வருவது வழக்கம். இக்கந்தூரி தினத்தில் எல்லைக் கிராமத்தாரும், ஏனைய கிராமத்தாரும் இன, மத, பேதமின்றி இந்தக் கந்தூரியில் கலந்து உணவுப் பொதிகள் பெற்றுச் செல்வர்.

இது போன்று ஒவ்வொரு தெருவிலும் வருடம் ஒருமுறை சீறாப் புராணம், மொஹிதீன் புராணம், இராஜ நாயகம், குத்துபு நாயக

அனுசாசனம் போன்ற புராணங்கள் பாடப்பட்டு புலவர் ஒருவரால் விளக்கவுரை வழங்கப்பட்டு பொதுத் தெருவில் பந்தலிட்டு வாழைத் தோரணங்கள் கட்டி மேடையிட்டு புலவரும், பாடுபவர்களும், அவற்றைக் கேட்பதற்கு வந்தவர்களும், அமர்ந்திருந்து இரவு 9 மணி தொடக்கம் அதிகாலை 1 மணிவரையும் இந்நிகழ்வு இடம்பெறும். மேடையில் இருக்கும் பாடுபவர்கள், சோடி, சோடியாக மேற்கூறப்பட்ட புராணங்களையும், படலங்களை இனிமையாகப் பாட புலவர் விரிவுரையும், விளக்கவுரையும் கூற முன்னே இருந்து ஒருவர் "ஆமாம், ஆமாம்" என்று கூறுவார் இந்த நிகழ்வு காலத்தில் இதனை அமர்ந்து கேட்பதற்கு பெண்களுக்கென பிரத்தியேகமாக பந்தலின் ஒரு பகுதியில் மறைவு கட்டப்படும். புராண விரிவுரை நடைபெறும் காலத்தை பாட்டுக் காலமென கிராமத்தவர்கள் அழைப்பர். இவ்வைபவத்தில் கலந்துகொள்ளும் சகலருக்கும், இக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் நான், நீ என போட்டி போட்டுக் கொண்டு குடிபானம், தேநீர், சிற்றுண்டி வழங்குவர். இப்புராண விரிவுரைகள் 9 இரவுகளில் நடைபெறும். ஒன்பதாவது இரவு அதிகாலை 5, 6 மணிவரை நடைபெறும் இந்த வைபவம் முடிவடைந்ததும் அன்று காணிக்கையாக அசிரி, சீனி, தேங்காய், கோழி, ஆடு என்பன ஏராளமாக வந்து சேரும். அவற்றைச் சமைத்து ஊர்மக்களுக்கும், ஏனைய மக்களுக்கும் போதுமான அளவு பங்கீடு செய்வர். இக்காலத்தில் வெளியூர்களில் இருந்தும் பலர் கலந்துகொள்வர். இப்புராணங்களைக் கேட்பதற்கு, இன, மத வேறுபாடின்றி சகலரும் கலந்து கொள்வர். இக்கிராமத் தவர்களுக்கு பெருநாள் காலங்களைப் போல காட்சி தருவது இந்த பாட்டுக்காலமாகும். இந்தப் புராணங்கள் பராயணம் செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட வரலாற்றைப் பார்த்திடும்போது முன்னோர் காலத்தில் காலரா நோயினால் சிலர் இறந்தனர், சிலர் பயத்தால் கிராமத்தை விட்டு வெளியேறிச் சென்று குடியேறினர். இந்நிலையில் இக்கிராம மக்கள் பிற மத, கோவில்களுக்குச் சென்று நேர்த்திகளை வைப்பதையும், பூசாரி, கட்டாடிமார்களிடத்தில் காவல் வேலை செய்வதையும், திரு விழாக்களில் பங்குபற்றுவதையும் கண்ட இக்கிராமத்தின் தலைவர்களில் ஒருவராகிய ஜனாப் மதார் சாகிபு புலவராலும் அவரது சகோதரர் முஹைதீன் கப்புடையார் (கறுத்தக் குட்டிப் புலவர்) இறைவனிடத்திலும், இறை நேசர்களிடத்திலும் இக்கிராமத்து மக்கள் தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பதற்காக

வேண்டுதலிட்டு நேர்ச்சையாக 1911ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது. அன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் இந்நிகழ்வு இடம்பெற்று வருவது வழக்கமாகும். நெ. மதார் சாகிபு புலவரே பல வருடங்களாக நிகழ்த்தியுள்ளார்.

மர்ஹூம். மதார் சாகிபு புலவர் வாழ்ந்த காலத்தில் மக்களின் மதிப்புக்கும், மரியாதைக்கும் உரியவராக மட்டுமல்லாது, மார்க்க ரீதியாகவும், சிறந்த வழிகாட்டியாகவும், விளங்கியுள்ளார். புலமைமிக்க இவர் அறம் பாடுவதிலும் வல்லவராகத் திகழ்ந்துள்ளார். வெளியூர் களிலுள்ள புலவர்கள் தாம் பாடியவற்றையும், இவரிடமே சரிபார்த்துச் செல்வார்களாம். இப்பெரியாரே ஹுசைனியா ஜும்ஆப் பள்ளி கட்டுவதற்கு ஆரம்பகர்த்தாவாக இருந்து வந்துள்ளார் என கூறக் கேட்டிருக்கின்றோம். இவருக்குப் பின் புராண விரிவுரையாளராக அவரது சகோதரர் மகன், அகமது நெய்னாப் புலவரும் தொடர்ந்து அவரது மகன்களான அப்துல் கபூர் புலவர், அமானுல்லா ஆசிரியரும், புராண விளக்கவுரை நிகழ்த்தி வந்துள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் இறை தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பிறந்த மாதமான ரபீஉல் அவ்வல் மாதத்தில் ஒவ்வொரு வீடுகளிலும் மௌலீது ஓதுவது வழக்கம். தினமும் ஒரு வீட்டில் மௌலீது ஓதி கந்தூரி கொடுக்கப்பட்டு வருவது வழக்கமாகவுள்ளது. மாதம் முழுவதும் இந்நிகழ்வு நடந்து வந்துள்ளது. தென்னிந்தியாவில் காயல் பட்டினத்தைச் சேர்ந்த சதகத்துல்லா ஆலிம் அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் முஹைதீன் அப்துல் காதர் ஜீலானி அவர்களையும், புகழ்ந்து பாடிய அரபு மொழிப் பாடல்களே இந்த மௌலீதுகளாகும். நபிகள் நாயகத்தை புகழ்ந்து பாடியதை சுபுகான மௌலீது என்றும், முகைதீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் பற்றிப் பாடியதை முகைதீன் மௌலீது என்றும் கூறுவர். இது முறையே ரபீயுல் அவ்வல், ரபீயுல் ஆகிர் மாதங்களில் ஓதப்படும்.

இது மாத்திரமன்றி தொற்று நோய்களிலிருந்து மக்களை காப்பாற்றுவதற்காக முனாஜாத் ஓதுவது வழக்கம். அல்லாஹ்வின் பெயராலும், பாசிப்பட்டின நெய்னா முஹம்மது வலியுல்லாஹ் பெயராலும் இம்முனாஜாத்து ஓதப்படும். தொற்று நோய் ஏற்பட்டவர்கள்

வாழுகின்ற வீடுகளில் பல இரவுகள் பாடப்பட்டு வருவது வழக்கமாகும். இதனை 90க்கு முந்திய தசாப்தங்களிலேயே சிறப்பாக பின்பற்றி வந்துள்ளனர். தொற்று நோயிலிருந்து சுகம் பெற்றவர் வீட்டில் பாற்சோறு சமைத்து பாலும், பழமும் கொடுப்பர். இப்பாடல்களைப் பாடுவதில் இக்கிராமத்தவர் பலர் முக்கியத்துவம் பெற்று விளங்கினர். ஜனாப் அப்துல் ஹமீது, ஜனாப் கட்ட மரைக்காயர் மீராமுகைதீன், ஜனாப் மாப்பிள்ளைத் தம்பி, ஜனாப் அப்துல் கபூர். ஜனாப் உ.மு. சரீபு, ஜனாப் மதார் முகைதீன், ஜனாப் சேகு முஹம்மது ஆசிரியர்கள் ஜனாப் அப்துல் ரஹீம், ஜனாப் ரஹ்மதுல்லா போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இது போன்று முற்காலத்தில் பூக்குழியிறங்குதல், முத்து மாரியம்மா தாலாட்டு போன்ற வைபவங்களும் நடைபெற்று வந்துள்ளன. பூக்குழி வைபவத்தை 1960, 70 களில் நூறு முஹம்மது, செல்ல வாப்பு, சேகு முஹம்மது, போன்றவர்கள் முன்னின்று நடாத்தி வந்துள்ளனர். பூலாக்கொடி கட்டுவதிலிருந்து பூக்குழி இறங்கும் வரையுமான தினங்களில் தினமும் பலவிதமான வைபவங்களும் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெறுவது வழக்கமாய் வந்துள்ளது.

அதுபோலவே முத்துமாரியம்மா தாலாட்டும், கண்ணோய், கூகைக்கட்டு, சின்னம்மை, பொக்களிப்பான், பெரியம்மை போன்ற நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக இவ்வைபவம் நடைபெற்று வந்துள்ளது. இது 1950ஆம் ஆண்டுகளில் கீரியில் வசித்த நெய்னா முஹம்மது என்பவரால் இறுதியாக நடைபெற்று வந்துள்ளதாக இக்கிராம மக்கள் கூறக் கேட்டுள்ளோம். காலப் போக்கில் இவ்வழக்கும் வழக்கிழந்துள்ளது.

கலை, கலாசாரப் பாரம்பரியங்கள்

எழுத, வாசிக்கத் தெரியாது இனிமையாகப் பாடக்கூடியவர் பலர் இக்காலத்தில் வாழ்ந்துள்ளனர். செவி வழியாகப் பாடல்களைக்கேட்டு பாடக்கூடியவர்கள். இந்நிலையிலேயே நாட்டார் பாடல்களும் பிரபல்யமாயிற்று. இக்கிராமத்தில் பல தசாப்தங்களுக்கு முன் எழுத, வாசிக்கத் தெரியாத பலர், இனிமையாகப் பாடுவதில் வல்லவர்களாக விளங்கியுள்ளனர். அந்த வரிசையில் முஹம்மது கப்புடையார் என்பவர்

சிறந்த பாடகராக விளங்கியதுடன் மாவட்ட ரீதியில் பல பாடல் போட்டிகளில் பங்குபற்றி பல பரிசில்களைப் பெற்றுள்ளதற்கு அவர்களுடைய பரிசுப் பொருட்கள் இன்றும் ஆதாரமாக உள்ளன. இவரது இத்திறமையை இன்றும் இக்கிராமத்தவர் கூறக்கேட்டுள்ளோம். பின்னைய காலத்தில் ஜனாப் அ.நெ. மதார் சாகிபு புலவரின் சீடனாக இருந்த மாப்பிள்ளைத் தம்பி (கிறுக்கர்) சிறந்த கவி படைக்கும் ஆற்றலுள்ளவராகத் திகழ்ந்துள்ளார். இவரது பாடல்கள் எளிமையும், இனிமையும், உடையதாக அமைந்தது. அவரின் பாடல்களில் சில வரிகள் :

மீரா லெப்பை ஒலி பாதமே – கனம்
மெல்லிய வாடி இந்நேரமே
ஆதி, அந்தம் இல்லாதவனைத் துதி கூறியே
அவன் நபி சலவாத்தினை ஓதியே
தாரணியும் புகழ் மாப்பிள்ளைத் தம்பி
சொல்லும் பாவினை நம்பி நலம் பெறவே

இவரைப்போன்று ஜனாப் மதார் மொகிதீன், ஜனாப் கட்ட மரைக்கார், போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். நாட்டார் பாடல் பாடுவதில் கப்ப முத்து என்ற பெண் கவிஞரும் இக்கிராமத்தில் வாழ்ந்து மறைந்துள்ளார். இவரின் பாடல்களைப் பெருநாள் காலங்களில் பெண்கள் ஊஞ்சல் பாடல்களாகப் பாடி மகிழ்வர்.

கொண்டை அழகும்
கூர்விழுந்த முக்காடும்
நெற்றி இளம் பிறையும் - என்
நித்திரையில் தோணுறதே

மன்னார் மயிலழகே
மாந்தோப்புக் குயிலழகே
மாரி பொழியும் முன்னே – நான்
மாப்பிள்ளையாய் வந்துடட்டோ

பாங்கு பறியுமுன்னே

வாசலிலே காத்திருப்பேன் - நீங்க
தொழுது முடிந்ததுமே.
தோட்டப் பக்கம் வந்திடுங்கோ

வாப்பாவும் திண்ணையிலே
வளர்த்த நாயும் வாசலிலே
இலுப்பப் பூ மச்சானாரே
எங்கால வருவீகளோ

திருமண சம்பிரதாயங்கள்

முதிய மனிதர்களைக் கொண்டு மாப்பிள்ளை கேட்டு வர அனுப்புவதும், மாப்பிள்ளை வீட்டார் சம்மதம் தெரிவித்தவுடன் நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளைக்கு அடையாளமாக மோதிரம் போடுவதும், அதற்காக விருந்து வைப்பதும் மறுநாள் பெண் வீட்டார் உறவுக்காரப் பெண்களை அழைத்து அரிசி ஊறவைத்து இடித்து மாவாக்கி வறுத்து பலகாரம் பல செய்து மாப்பிள்ளை விட்டுக்கு சீர் கொண்டு செல்லுவதும், திருமணத்திற்கு முதல் நாள் பந்தல் காலிடுதல், மரம் நாட்டுதல் வழக்கமாகும். திருமணத்திற்கு சீதனமாக வீடு, வளவு, பெண்ணுக்கு நகை கொடுத்தல் போன்ற வழக்கங்களும், திருமணத்தன்று மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுக்கும், மருதோன்றி பூசும் வழக்கமும் மாப்பிள்ளைக்குச் சவடி போடும் வழக்கமும் மாப்பிள்ளைக்குக் கால் கழுவுவதற்காக பெண்ணின் சகோதரனுக்கு மோதிரம் அணிவதும் திருமணத்தன்று பகல் பெண் வீட்டில் தாலிச் சாப்பாடும் அன்றிரவு பெண்ணை மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து பெண்அழைப்பு விருந்தும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளமை குறிப்படத்தக்கது. திருமணத்தின் ஏழாம் நாள் திருமணத் தம்பதிகளைத் நீராட்டல் நிகழ்வும் பட்டினம் போகின்ற வழக்கமும் பிலால் உணவு பரிமாறலும் மாப்பிள்ளை பட்டினம் சென்று மீளும்போது, மனைவி, மாமா, மாமி, தாய், தந்தை, உறவினர், வயோதிபர் போன்றவர்களுக்கு புத்தாடைகள், பலகாரங்கள் வாங்கிவருவதும், வரும் வழியில் ஆராத்தி எடுத்து வெள்ளை பூசிய உலக்கைகளை கடந்து வரும் வழக்கமும் திருமணத்தின் சம்பிதராயங் களாகும். இவை யாவும் இந்திய முஸ்லிம்களின் பழக்கங்களாகவே இருந்தன. இக்கிராம

மக்கள் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் என்பதற்கு இவ்வாறான மரபு ரீதியான சம்பிரதாயங்கள் சான்றாக விளங்குகின்றன.

விளையாட்டு

கோடுபாய்தல், கிட்டிப்புல், வாரோடுதல், தட்டிமறித்தல், கபடியாடல், சிலம்பம், சீனடி, கோலாட்டம், போன்ற மரபு ரீதியான விளையாட்டுக்களில் ஈடுபடுவர். விஷேட காலங்களில் (கழிகம்பு) நல்ல இனிமையான பாடல்களைப் பாடி விளையாடுவது கண்ணுக்கும் காதுக்கும் இனிமை பயப்பதாக அமைவன. கரப்பந்தாட்டம் என்றால் தாராபுரம் எனும் அளவுக்கு மாவட்ட ரீதியில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் விளையாட்டாக அமைந்துள்ளது. நீண்டகாலம் தொட்டு கரப்பந்தாட்டம் இக்கிராமத்தில் பிரதான விளயாட்டாக இருந்து வருகிறது. என்றாலும் 1950ஆம் ஆண்டுகளில் ஜின்னா கரப்பந்தாட்டக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு மேற்படி விளையாட்டில் கிராமத்து இளைஞர்களை சிறந்த முறையில் பயிற்றுவித்து வந்துள்ளது. இதன் காரணமாக மன்னார் மாவட்டத்தில் அறிமுகமாகி தொடர்ந்து பல வெற்றிகளை ஈட்டிவந்துள்ளது. கழகம் ஆரம்பிக்கப்பட்ட பின் உருவாக்கிய ஆரம்ப வீரரான ஜனாப் காசு முஹம்மது என்பவரின் தலைமையில் ஒன்பது பேர்கொண்ட கோஷ்டியினர் ஓவர்கேம் விளையாட்டில் மாவட்டத்தில் சாதனைகளைப் புரிந்துள்ளனர். அக்காலத்தில் ஜனாப் காசு முஹம்மது, ஜனாப் அகமது சுல்தான், ஜனாப் அக்பர் ஜஹான், ஜனாப் எம். முஹம்மது அப்துல் காதர், ஜனாப் எம். அகமது, ஜனாப் உ.மு. சரிபு, ஜனாப் ஏ. அப்துல் கபூர், ஜனாப் ஏ. மீரா மொஹிதீன் (நூறு), ஜனாப் எம். அசனா மரைக்கார் ஆகிய ஒன்பது பேர் கொண்ட கோஷ்டியினரே 1950-1960ஆம் ஆண்டுகளில் பிரபல்யம் வாய்ந்த கோஷ்டியாக வெற்றிக்கு மேல் வெற்றி பெற்று சாதனை ஈட்டி கிராமத்திற்கு பெருமையைத் தேடிக்கொடுத்தனர். ஒரு காலத்தில் மாவட்ட வெற்றியாளர்களைத் தெரிவு செய்வதற்கான இறுதிப்போட்டியில் மன்னார் பள்ளிமுனை விளையாட்டுக் கோஷ்டியுடன் பல தினங்கள் வெற்றி தோல்வியின்றி விளையாடி வெற்றி பெற்ற சாதனை பின்னைய காலத்திலும் பேசப்பட்டு வந்துள்ளது.

கரப்பந்தாட்டத்தில் "செட்-அப்" முறை அறிமுகமான காலத்தில் சிறந்த பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்காக தோட்டவெளியில் முகாமிட்டிருந்த இராணுவக் கரப்பந்தாட்டக் கோஷ்டியுடன் விளையாடும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. "செட்-அப்" விளையாட்டில் ஆரம்பக் கோஷ்டி பல போட்டிகளில் பங்குபற்றி வந்தது. அவர்களின் வழிகாட்டலில் வந்த இளம் வீரர்களைக் கொண்ட சிறந்த பல வீரர்கள் உருவாகினர். ஜின்னா விளையாட்டுக் கழகத்தின் தலைவராக சட்டத்தரணி ஜனாப் எம்.என். ஐயூப், செயலாளராக ஜனாப் ஏ.என். அமானுல்லா ஆசிரியரும் பொறுப்பேற்றதும் கரப்பந்தாட்ட வீரர்களுக்கு சிறந்த விளையாட்டு வீரர்களைக் கொண்டும் துரைராசா என்ற மாவட்ட விளையாட்டு அதிகாரியைக் கொண்டும் சிறந்த பயிற்சியை வளங்கி மாவட்டத்திலேயே ஒரு தலைசிறந்த அணியாக மாற்றி அமைத்தனர். ஜின்னா கரப்பந்தாட்டக் கோஷ்டியின் முகாமையாளராக ஜனாப் எம்.என். ஐயூப் பதவி வகித்து ஜனாப் ஏ.என். அமானுல்லா அவர்களின் தலைமையில் ஜனாப் ஏ.எம். அப்துல் லத்தீப், ஜனாப் எம். அக்பர் ஜஹான், ஜனாப் எம்.எஸ்.எம். சாலிஹ், ஜனாப் எம்.ஏ.சி. றஹ்மான், ஜனாப் எம். அக்பர், ஜனாப் ஏ.எம். அபுல் காசிம், ஜனாப் எம். காசிம் சாகிபு, ஜனாப் ஏ.எம். சுல்தான், ஜனாப் ஏ.ஜே. அமீர், ஜனாப் ஆர். கபீர், ஜனாப் ஏ.எல்.ஏ. அனீஸ் போன்றவர்களைக் கொண்ட குழுவினர் அடுத்தடுத்துப் பல வெற்றிகளைப் பெற்று பல வருடங்கள் மாவட்டச் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டதுடன் தொடர்ந்து 1964, 1965, 1966, காலங்களில் மன்னார் மாவட்டச் சம்பியனாக தெரிவாகி கிராமத்திற்கு பெரும் மதிப்பை ஈட்டிக்கொடுத்தனர். 1966ஆம் ஆண்டுகளில் மாவட்டத்தில் தெரிவாகி மாகாணப் போட்டியில் யாழ் மாவட்டச் சம்பியனான யாழ் பொலிஸ் கோஷ்டியை யாழ் சிங்கள மகா வித்தியாலயத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் அதிர்ச்சி யூட்டும் வகையில் தோல்வியுறச் செய்து மாகாணச் சம்பியனாக தெரிவாகினர். மாகாணத்தில் வெற்றி பெற்றமைக்காக யாழ் மக்களின் அமோக வரவேற்பையும், பாராட்டையும், பெற்றுக்கொண்டனர். இச்செய்தியை யாழ்நகரில் வெளியான "ஈழநாடு" பத்திரிகை பக்கம் பக்கமாக எழுதியது இன்றும் ஞாபகத்திற்கு வருகிறது. தொடர்ந்து அவ்வாண்டு அகில இலங்கை போட்டியில் கலந்துகொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது. மாகாணச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதை அறிந்த கிராமத்து மக்கள்

பாரிய வரவேற்பையும் வழங்கியது மட்டுமல்லாது மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொள்வதற்கான முழு ஏற்பாட்டையும் கிராமத்தவர்கள் செய்து கொடுத்தனர். மேற்படி போட்டிகள் யாவும் கொழும்பு மாநகரில் பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றது. வடமத்திய மாகாணக் கோஷ்டியை வெற்றியீட்டிய ஜின்னா கோஷ்டியினர் இலங்கை இராணுவத்துடன் காலிறுதிப் போட்டியில் விளையாடித் தோல்வியைத் தழுவிய போதும் சிறந்த கரப்பந்தாட்ட வீரர்களுடன் விளையாடும் வாய்ப்பு கிடைத்தது பெரிய அதிஷ்டம் என்றே கூறமுடியும். மாறாக அவ்வருட அகில இலங்கைச் சம்பியனாக இராணுவக் கோஷ்டியினரே தெரிவாகினர்.

தாராபுர ஜின்னா கரப்பந்தாட்டக் கோஷ்டியினர் கலந்துகொள்ளும் போட்டிகள் என்றாலே ஏராளமான சனங்கள் குவிந்துவிடுமளவுக்கு வீரர்களின் விளையாட்டுத் திறமை இருந்ததென்றால் அது பொய்யாகாது. அக்காலத்திலிருந்து சிறந்த வீரர்களைக் கொண்டு இயங்கிய விளையாட்டுக் கழகம், 1990இல் ஏற்பட்ட துரதிர்ஷ்ட சம்பவத்தால் இக்கிராமத்தவர்கள் இடம்பெயர்ந்து புத்தளத்திலும் வேறு இடங்களிலும் வாழ்ந்த படியால் கரப்பந்தாட்டம் கைவிடப் பட்டிருந்தது. 1995ஆம் ஆண்டிலிருந்து சிறுதொகையினர் தாராபுரத்தில் மீளக்குடியேறி வாழ்கின்றனர். அவர்களிலிருந்து புதிய இளம் வீரர்கள் உருவாகியமை பெருமையைத் தரும் நிகழ்வாகும். 2004ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழீழ விளையாட்டு விழாவில் தளபதி விக்டர் கிண்ண கரப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றி சம்பியனாகத் தெரிவாகி விக்டர் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டதன்மூலம் இழந்த பெருமையை மீண்டும் நிலைநாட்டிக் கொண்டனர். ஜனாப் எஸ்.எம். ஸகாப்தீனின் தலைமையில் இக் கோஷ்டி பல போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளை ஈட்டி வருகின்றனர்.

இக்கிராமத்தில் கரப்பந்தாட்டத்தில் **A.B.C.** என மூன்று குழுவினர் பயிற்சிபெற்று சிறந்த பயிற்சியுடையவர்களாகத் திகழ்கின்றனர். இக்கிராமத்தவர்கள் கரப்பந்தாட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத் தாலும் கால்பந்தாட்டம், கிறிக்கட் போன்ற விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். சிலம்படி, கராட்டி போன்ற விளையாட்டுக் களிலும் கிராமத்தவர்கள் சிலர் பயிற்சி உள்ளவர்களாக விளங்கினர்.

குறிப்பாக "கராட்டி மாஸ்டர்" என்று அழைக்கப்பட்ட மர்ஹூம் எம்.எஸ். பரீட் அவர்கள் கண்டி வை.எம்.சி.ஏ.யில் பயிற்சி பெற்று அங்கு போதனாசிரியராக கடமையாற்றினார்.

## அமைப்புக்கள் அல்லாத சங்கங்கள்

ஐக்கிய நாணய சங்கம் :

நீண்டகாலம் தொட்டு சிறப்பாக இயங்கிவந்தமைக்கு இச்சங்கத்தின் பேரில் எழுதப்பட்ட காணி உறுதிகள், கட்டிடங்கள் என்பன சான்றாகின்றன. உறுப்பினர்களுக்கு குறுகிய கால நீண்டகால கடன்களைக் கொடுத்து மாதாந்தம் சிறுதொகையாக கடனைக் கட்டும் முறையைப் பின்பற்றி நடைமுறைப்படுத்தி வந்தது. இது உறுப்பினர்களின் தொழில் முயற்சிக்கு உதவியாக அமைந்தது இச்சங்கத்தின் வருமானத்தில் சங்கக் கட்டிடம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. பல வருடங்களாக இக்கட்டிடத்திலேயேதான் கூட்டுறவுக் கடை, தனியார் மருந்தகம், தபால் நிலையம் ஆகியவை இயங்கி வருகின்றன. 1990ஆம் ஆண்டுகளில் கிராம மக்கள் இடம்பெயர்வதற்கு முன்பு அல்-ஹாஜ். கே.எம். இரத்தினம் அவர்கள் தலைவராக கடமையாற்றி கொண்டிருந்தார் என்பது குறிப்படத்தக்கது.

பழைய மாணவர் கழகம்

அல்-மினா மகா வித்தியாலயம், அரசினர் தமிழ்க் கலவன் பாட சாலையாக இயங்கிய காலத்தில் கடமையாற்றிய தலைமை ஆசிரியர் சேவைச் செம்மல் மூதூரைச் சேர்ந்த மர்ஹூம். ஜனாப் எம்.எம்.கே. முஹம்மது அமைத்ததே தாராபுரம் பழைய மாணவர் கழகமாகும்.

பழைய மாணவர் கழகத்தில் ஆரம்பகால ஸ்தாபக உறுப்பினர்களின் பங்களிப்பு பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது. அவர்களின் பெயர்கள் இன்று மீட்டுப் பார்க்கும்போது ஜனாப் எச். சித்திக், ஜனாப் எம்.எம். சகீது, ஜனாப் எம்.ஏ. சலாம், ஜனாப் ஏ.என்.ஏ. ஹக்கீம், ஜனாப் எம்.என். ஐயூப், ஜனாப் அக்பர் ஜஹான், ஜனாப் ஏ.என்,ஏ. கபூர், ஜனாப் ஏ. தாவூத், எம்.எம். கௌது, ஜனாப் எம்.சி.

லத்தீப், ஜனாப் எம்.எம். இப்ராஹிம், ஜனாப் என்.எம், நூர்டீன், ஜனாப் கே.எம். சாபி, ஜனாப் எம்.எஸ். பரீட் போன்றோர்களாகும். பாடசாலையின் தரம் குறைக்கப்பட்டபோது அங்கு உயர் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவிகள் கல்வியைத் தொடர முடியாது வீடுகளில் முடங்கி விட்டனர். மாணவர் பலர் கொழும்பு. யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் தொழில் தேடிச்சென்று அங்குள்ள வர்த்தக நிலையங்களில் தொழிலாளிகளாய் வேலை செய்தனர். தலைமை ஆசிரியரும், பழைய மாணவர்களும் இணைந்து இடைவிலகிய மாணவர்களின் பெற்றோர்களைச் சந்தித்து மீண்டும் தமது பிள்ளைகளை பாடசாலையில் இணைத்து கல்வியைத் தொடர வழிவகுத்தனர்.

பழைய மாணவர் கழகத்தினர் பாடசாலையின் வளர்ச்சிக்காக 1964ஆம் ஆண்டு மன்னார் முற்றவெளியில் சிறந்ததொரு களியாட்ட விழாவினை நடத்தி அதனால் கிடைத்த பணத்தைக் கொண்டு அன்றைய கழகச் செயலாளர் மர்ஹூம் அஸனா லெப்பை தாவூத் ஆசிரியருக்குச் சொந்தமான பாடசாலைக்கு அருகாமையில் அமைந்த காணியைக் குறைந்த விலைக்குப் பெற்று அக்காணியில் கழகத்திற்கான கட்டிடம் ஒன்று அமைத்தனர். அக்காலத்தில் அக்கழகத்திற்கு ஜனாப் எம்.எம். சகீத் அதிபர் தலைவராகவும், மர்ஹூம். ஏ. தாவூத் அதிபர் செயலாளராகவும் இருந்து கழகத்தைச் சிறந்த முறையில் வழி நடத்தினர்.

மேற்படி கட்டிடத்தை பழைய மாணவர் கழக நூலகம் என்று பெயரிட்டனர். இக்கழகத்தை ஸ்தாபித்த தலைமை ஆசிரியர் ஓய்வு பெற்று தனது ஊரான மூதூரில் வாழ்ந்தபோது அவரைக் கொண்டே அக்கட்டிடத்தை திறக்க வைத்ததன் மூலம் கிராமத்தவரின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை ஞாபகப்படுத்தி அவரை கௌரவப்படுத்தினர்.

1968ஆம் ஆண்டில் ஓ.பீ.ஏ. தலைவராக இருந்த மர்ஹூம் ஏ. தாவூத் அதிபரின் முயற்சியால் தமிழ் சினிமா நட்சத்திரங்களில் ஹாஸ்ய நடிகராகத் திகழ்ந்த தங்கவேலு எம். சரோஜா குழுவினரை அழைத்து வந்து மன்னார் பட்டின சபை முன்றலில் நாடகங்களை நடத்தி கிடைத்த வருமானத்தை மாணவரின் கல்வி வளர்ச்சிக்கும், கழக வளர்ச்சிக்கும் செலவு செய்தனர்.

1980ம் ஆண்டு துரதிஷ்டவசமாக ஓ.பீ.ஏ. கட்டிடத்தை விற்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது பழைய மாணவர் சங்க மூத்த உறுப்பினர் சிலரின் சில நடவடிக்கைகளினால் அம்முயற்சி தடுக்கப்பட்டது. இது தங்களை அர்ப்பணித்து இக்கட்டிடத்தை அமைப்பதற்கு பங்களிப்புச் செய்த கழக மூத்த உறுப்பினர்களுக்கும், இக்கிராமத்தவர்களுக்கும் திருப்தியைக் கொடுத்தது மட்டுமல்லாமல் இன்று ஓ.பீ.ஏ. கட்டிடம் நிலைத்து, நிமிர்ந்து பொதுக்கட்டிடமாக விளங்கி வருவதற்கு வழி சமைத் தவர்களுக்கு கிராம மக்கள் என்றும் நன்றியுடையவர்களாவர். 1990ஆம் ஆண்டு கிராமத்தவர் இடம்பெயர்ந்ததன் மூலம் கைவிடப்பட்டிருந்த இக்கட்டிடம் 1992ஆம் ஆண்டு சிறு தொகுதியினர் மீளக் குடியேறிய காலத்தில் கவனிப்பாரற்று, உடைந்தும், சிதறியும், காணப்பட்டது. இக்கட்டிடத்தை 2001ஆம் ஆண்டு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மீள்குடியேற்றச் செயலணித் தலைவருமாக இருந்த கௌரவ றிஸாட் பதியுத்தீன் அவர்களின் நிதியுதவியால் புனரமைக்கப்பட்டு பொது மக்களின் பாவனைக்கு உகந்ததாக மாற்றப்பட்டது. 2004ஆம் ஆண்டு இக்கட்டிடம் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர் உதவியால் இக்கிராம யுவதிகளுக்கு தையல் பயிற்சியை வழங்கும் நிலையமாக இது விளங்கியது. தற்போது சிறுவர்களுக்கான முன்பள்ளி நிலையமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கிராம முன்னேற்றச் சங்கம்

1956ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம், நீண்ட காலமாக கிராம முன்னேற்றத்திற்கு பல விதமான உதவிகளை ஆற்றி வருகின்றது. சிரமதானம், வீதிகள் புனரமைப்பு, பாடசாலைக் கட்டிடங்கள் அமைக்கும் பணிகளில் அரசாங்கத்திலிருந்து கொந்தராத்துப் பெற்று நடாத்தி வருகின்றது. அரசாங்க அதிபர் காரியாலயம், பிரதேச செயலாளர் காரியாலயம், அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் நிவாரணங்கள், உதவிகள் மானியங்கள், கிராம மக்களுக்கு கிடைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. கிராமத்தில் தேவைகளை இனம் கண்டு நிவர்த்தி செய்ய முயன்றும் வருகிறது. இக்கிராமத்தில் ஹுசைன் வீதியிலும், லெப்பை வீதியிலும்,

தாராபுரம் மேற்கு, தாராபுரம் கிழக்கு என இரு கிராம முன்னேற்றச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. பல வருடங்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருபவர்களில் மீள்குடியேற வரும் கிராமத்தவருக்கு பலவிதமான நன்மைகளையும், உதவிகளையும், இச்சங்கம் ஆற்றி வருவது குறிப்படத்தக்கது.

மாதர் முன்னேற்றச் சங்கம்

இடப்பெயர்வுக்கு முன் மாதர் முன்னேற்றச் சங்கங்கம் ஸ்தாபிக்கப்பட்டு மாதர்களின் குடிசைக் கைத்தொழிலுக்கு உதவி வந்துள்ளது. கிராமத்தின் மாதர்கள், பாய், பெட்டி, கூடை, சுளகு போன்ற உற்பத்திக்கு, பலவித உதவிகளை வழங்கி கிராம அபிவிருத்தி அதிகாரிகளின் மூலம் அரசாங்க உதவிகளைப் பெற்று அக் கைத்தொழில்களை ஊக்குவித்து, கற்பகம் மூலம் விற்பனை செய்வதற்கு சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்து வந்துள்ளது. தற்போதும் இச்சங்கம் வெற்றிகரமாகச் செயற்பட்டு சுழற்சி முறைக் கடன் மூலம் சுயதொழில் வாய்ப்பிற்கு ஊக்கமளித்து வருகிறது. சங்கத்தின் தற்போதைய தலைவியாக ஜனாபா ஜெளகராவும், செயலாளராக ஜனாபா ஹசீனா அவர்களும், பொருளாளராக ஜனாபா அஸ்மா அவர்களும் கடமையாற்றி வருவது குறிப்படத்தக்கது.

இளைஞர் சேவைகள் மன்றம் :

இச்சங்கம் இளைஞர்களின் இயல்பூக்கங்களை வளர்ப்பதிலும், தொழில் பயிற்சிகளை வழங்குவதிலும், பெரிதும் பங்களிப்பாற்றி வருகிறது. மாவட்ட இளைஞர் சேவை அதிகாரிகளின் மூலம் வழிநடத்தப்படும் இம்மன்றம் இளைஞர்களினதும், யுவதிகளினதும், திறமைகளை வளர்ப்பதிலும் தலைமைத்துவப் பண்புகளை, பயிற்சிகளை வழங்கி தொழிலுக்கு வழிகாட்டி வருகிறது. விளையாட்டுத் துறையிலும், இக்கிராமத்தவருக்கு சிறந்த பயிற்சியைக் கொடுத்து வீரர்களையும், வீராங்கணைகளையும் உருவாக்கி வருகிறது. மன்னார் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஜனாப் என்.எம். முனவ்வர் அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

மீனவர் சங்கம் :

மீளக்குடியேறிய பின்பு மீன்பிடித்துறையில் ஆர்வமுள்ளவர்கள் இச்சங்கத்தை ஸ்தாபித்து அதன் உதவியால் மீன்பிடித் தொழிலில் கிராமத்தவர்களை ஈடுபடுத்தி வருகின்றனர். இடப்பெயர்வுக்கு முன்பு இத்தொழிலில் ஈடுபட்டவர்கள் மிகச் சிலரே. ஆரம்ப காலத்தில் இத்தொழிலில் மக்கள் ஈடுபடாத போதிலும் தற்போது பலர் இத்தொழிலில் ஈடுபட்டு பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டு வருகின்றனர். 2004ஆம் ஆண்டு வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ றிஸாட் பதியுத்தீன் அவர்கள் இச்சங்கத்திற்கு மீன்பிடி உபகரணங்களை வழங்கியதன் மூலம் கிராமத்தவரை மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தி மீன்பிடித் துறையில் பாரிய பங்காற்ற வழிவகுத்துள்ளார். தற்போதைய மீனவர் சங்கத்தின் தலைவரான ஜனாப் ஏ.எஸ். நஜிமுத்தீன் கடமையாற்றி வருகின்றார்.

இணக்க சபை :

கிராம மக்களிடம் ஏற்படும் காணி பற்றிய பிரச்சினைகளையும், குடும்பங்களுக்கு இடையேயான பிரிக்கப்படாத காணிகளை சமாதானமான முறையில் தீர்த்து வைக்கவும், சமூகத்தில் காணப்படும் சிறு, சிறு குற்றச்செயல்களுக்குத் தீர்வுகாணும் நோக்கில் அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட சபையாகும். இச்சபை இக்கிராமத்தில் மிகவும் பயனுள்ள பல சேவைகளையும் செய்ததோடு நீண்டகாலமாக தீர்க்கப்படாத சொத்து, காணிப் பிரச்சினைகள் பலவற்றிற்கு தீர்வு கண்டு கிராமத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தி வந்துள்ளது. இச்சபையின் தலைவராக முறையே, மர்ஹூம். பீ.எம்.என். முஹம்மட், ஜனாப் ஏ.என். அப்துல் கபூர், தபால் அதிபர், ஆகியோர் திறம்பட இச்சேவையினை ஆற்றி வந்தது குறிப்பிடத்தக்கது.

சாதனையாளர் வரிசையில்

தோன்றில் புகழொடு தோன்றுக – அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று

என்ற வள்ளுவர் கூற்றுக் கேற்ப இக்கிராமத்துப் புதல்வர்களும், கிராமத்திற்குப் புகழையும், கீர்த்தியையும் ஈட்டித் தந்துள்ளனர். அந்த

வகையில் முன்னோர் பலர் கிராமத்தை அமைப்பதிலும், வழி நடத்துவதிலும், பாடசாலை, பள்ளிவாசல்கள் அமைப்பதிலும் ஈடுபட்டுள்ளனர். இக்கிராமத்திற்கு நிலைத்ததொரு புகழையும், கீர்த்தியையும் ஈட்டித் தந்த முன்னோர்கள் வரிசை தெரியாதவிடத்தும், கடந்த சகாப்த காலத்தில் ஜனாப் நெயினா முஹம்மது, ஜனாப் அ.உ. ஹபீப் முஹம்மது, ஜனாப் அ.நெ. மதார் சாகிபுப் புலவர் போன்றவர்கள் மக்களால் இன்றும் ஞாபகப்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

ஜனாப் என்.எஸ்.ஏ. காதர் :

பின்னைய காலத்திலும் பலர் இக்கிராமத்திற்கு எண்ணிப் பார்க்கத்தக்க சேவைகளை ஆற்றியுள்ளனர். என்றாலும் அரசியலில் இக்கிராமத் தவர்கள் பல முக்கிய சாதனைகளைப் புரிந்துள்ளனர். அவர்களில் ஜனாப் என்.எஸ்.ஏ. காதர், இவருடைய தந்தையார் மர்ஹூம் நெய்னா முசாகிபு அவர்கள் தொழில் காரணமாக கீரியில் வசித்து வந்தார். இவரது சிரேஷ்ட புதல்வரே ஜனாப் என்.எஸ்.ஏ. காதர். இவர் தனது கல்வியை மன்/அர்ச்-சவேரியார் கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ்ப்பாண மத்திய கல்லூரியிலும் கற்றார். பாடசாலையில் கல்விகற்ற காலத்தில் சிறந்த கால்பந்தாட்ட வீரராகவும், குத்துச்சண்டை மற்றும் மல்யுத்த வீரராகவும், ஈட்டி எறிதலிலும் சிறப்புற்று திகழ்ந்தார். இவர் பல குத்துச்சண்டைப் போட்டிகளில் பங்கேற்று யாழ் மத்திய கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். படித்து முடிந்ததும் கராட்டி, ஜூடோ போன்ற விளையாட்டுக்களிலும் மிளிர்ந்தார். ஸ்னூக்கர், பிலியட், கரம் போன்ற உள்ளக விளையாட்டுக்களிலும் சூரராக திகழ்ந்தார். இவர் பாடசாலைக்குச் செல்லும் காலத்தில் சைக்கிலோட் டத்திலும் கடின பயிற்சி கிடைத்தது. இப்பயிற்சி கிடைத்ததற்குக் காரணம் அவர் வசித்த கீரியில் பேரூந்துப் போக்குவரத்து நடைபெறவில்லை. இவ்வாறாக சிறு வயதில் பல பயிற்சிகளைப் பெற்றதே, பிற்காலத்தில் பல சாதனைகளை ஏற்படுத்த ஏதுவாய் அமைந்தது. 1954ஆம் ஆண்டு நிறுத்தாமல் தொடர்ச்சியாக 600 மைல் தூரத்தை சைக்கிளில் 54 மணித்தியாலங்களில் ஓடிமுடித்து பாரிய சாதனை ஒன்றைப் படைத்தார். இவரின் இச்சாதனைக்கு

மன்னார் வை.எம்.சி.ஏ. உதவியும் ஒத்தாசையும் அளித்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இவர் 1970ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராக மன்னார் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி கண்டபோதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சி அமைத்தது. கட்சியின் பிரதான அமைப்பாளராகவும் உத்தியோகப்பற்றற்ற எம்.பியாகவும் நியமிக்கப்பட்டு பல சேவைகளை மன்னார் மாவட்டத்திற்கு ஆற்றினார். முருங்கன் சிலாவத்துறைக்குச் செல்வதற்குத் தடையாக இருந்த அருவியாற்றுக்குப் பாலம் அமைக்க பாரிய முயற்சிகளை மேற்கொண்டார். இவரது முயற்சிக்கு அப்போதைய பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. வீ.ஏ. அழகக்கோன் அவர்களின் பங்களிப்பும் கிடைக்கவே அருவியாற்றுப் பாலம் அமைக்கப்பட்டது. ஆரம்ப காலந்தொட்டுப் போக்குவரத்துச் செய்ய முடியாது கட்டுமரங்களில் ஏறி ஆற்றைக் கடந்தும், நீர் வற்றிய காலத்தில் நடந்தும் சிரமப்பட்ட மக்களுக்கு விமோசனம் கிடைக்க பெரும் பங்காற்றியுள்ளார். இவரது உதவியால் பல தனிப்பட்டவர்களும் நன்மையடைந்தனர். மீண்டும் 1977ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்ட முடியாது போயிற்று.

முதன் முதலாக் தாராபுரத்து மகனொருவன் 600 மைல் தூரத்தை 54 மணித்திலயங்களில் ஓடிமுடித்த அகில இலங்கை ரீதியான சாதனையைப் புகழ்ந்து இக்கிராமத்தைச் சேர்ந்த மீரா முஹைதீன் ஒரு பாடலைப் பாடியுள்ளார். அதன் வரிகள் இரண்டு பின்வருமாறு.

மாவீரன் காதர் எங்கே – மன்னார் நகர்
மங்காத தங்கம் எங்கே
காரிலே சென்றாரென்றார்
சிலபேர் வேனிலே சென்றாரென்றார்
சைக்கிளில் சென்ற மகன்
வாடி மெலிந்தபோது – மன்னார்
வை.எம்.சி.ஏ.ஆர்
வாடாதே காதர் என்றார்.

இவ்வாறு நமது ஊருக்குப் புகழை ஈட்டித் தந்த ஜனாப் என்.எஸ்.ஏ. காதர் இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழ்ந்த காலத்தில் 2000ஆம் ஆண்டு காலமானார். அவருக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் சுவனபதியை அளிப்பானாக.

ஜனாப் எச்.எஸ். தாவூத் :

ஜனாப் எச்.எஸ். தாவூத் அவர்கள் அ.உ. ஹபீப் முஹம்மது அவர்களின் புதல்வரான இவர் மிக நீண்ட காலமாக மன்னார் கிழக்கு கிராம சபைத் தலைவராகவும் மன்னார் மாவட்ட கிராம சபைகளின் தலைவராகவும், அகில இலங்கை கிராம சபைகளின் தலைவர்களின் உப தலைவராகவும் விளங்கினார். மன்னார் மாவட்டத்திற்கும், குறிப்பாக இக்கிராமத்திற்கும் தேச பிதாக்களான டட்லி சேனாநாயக, சந்திரிகா பண்டாரநாகய குமாரதுங்க, அவர்களின் தந்தையான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாநாயக, உட்பட பல அமைச்சர்களையும் அழைத்து வந்து இக்கிராமத்தின் அபிவிருத்திக்காக பல பணிகளையும் ஆற்றியுள்ளார். இக்கிரமத்தில் இன்று இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு அளப்பெரிய சேவைகளாற்றியதை இக்கிராம மக்கள் ஞாபகப்படுத்தும் முகமாக அல்-மினா மாகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள பிரதான மண்டபத்திற்கு எச்.எஸ். தாவூத் மண்டபம் எனப் பெயரிட்டுள்ளனர். அரசியலில் சிறந்த அனுபவம் வாய்ந்த இவர் 1977ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளராக விளங்கினார். இவர் 1977அம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு தோல்வியடைந்தபோதும் தனது இறுதிக் காலம்வரை துவழாது தொடர்ந்து இக்கிராமத்தின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றினார். இவர் மீரா பள்ளியின் தலைவராக நீண்டகாலம் கடமையாற்றினார்.

ஜனாப் எம்.என். ஐயூப் :

ஜனாப் எம்.என். ஐயூப் அவர்கள் நாகூரான் என்பவரின் கனிஷ்ட புதல்வரான இவர் ஆரம்பக் கல்வியை தாராபுரத்திலும், உயர் கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும் பயின்றார். மத்திய கல்லூரியில்

கல்வி பயின்ற காலத்தில் சிறந்த பேச்சாளராக விளங்கினார். பல பேச்சுப் போட்டிகளில் தனது கல்லூரியின் சார்பாகப் பங்கேற்று பல வெற்றிகளையும் ஈட்டி தனது கல்லூரிக்குக் பெருமையை சேர்த்ததுடன் கல்லூரியின் மாணவத் தலைவராகவும் போட்டியிட்டு வெற்றியீட்டிய பெருமையும் இவரையே சாரும். இவரது பேச்சு வன்மையை இவருடன் கல்வி கற்ற மாணவர்கள் இன்றும்கூடப் புகழ்வர். பட்டப் படிப்பை சென்னை நியூ கொலிஜில் (New College) பெற்றுக் கொண்ட இவர் 1958-1960ஆம் ஆண்டுக் காலத்தில் அக்கல்லூரியின் மாணவத் தலைவராக் போட்டியிட்டு வெற்றியீட்டியதோடு அங்கும் சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்தார். கல்லூரியின் சார்பாக இந்தியாவின் பல இடங்களிலும் நடந்த பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி கல்லூரிக்கும் பெருமை சேர்த்த இவர் இயற்கையிலேயே இடதுசாரிக் கொள்கையில் புகுந்துகொண்டவராக விளங்கினார். இதன் காரணமாக தலைசிறந்த இடதுசாரி அரசியல்வாதியான லுவும்பா அமெரிக்காவில் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் வெளிநாட்டு மாணவர் சார்பாகக் கலந்துகொண்டதுடன் சென்னையில் நடைபெற்ற மாபெரும் எதிர்ப்புக் கூட்டத்திலும் பங்குபற்றி மேலைத்தேய ஜனநாயக நாடுகளைக் கண்டித்துப்பேசி மக்களின் பாராட்டைப் பெற்றதுடன் மாணவராக இவர் தொடர்ந்து இந்தியாவில் கல்வி கற்பதற்குத் தடைகளையும் சந்திக்க நேரிட்டது. வெளிநாட்டு மாணவ சம்மேளனத் தலைவரான இவரின் பேச்சு வன்மை திருச்சி வானொலியிலும் பல கலந்துரையாடல்களில் கலந்து சிறப்பித்துள்ளார். இப்படியாக தனது நாட்டுக்குப் பெருமை சேர்த்த இவர் பட்டப் படிப்பை முடித்து தாராபுர அரசினர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்றார். பின்பு அம் மகா வித்தியாலயத்தில் அதிபராக சேவையாற்றிய காலத்தை கல்லூரியின் பொற்காலம் எனலாம். சிறந்த பல ஆசிரியர்கள் உதவி ஆசிரியர்களாக இப்பாடசாலையில் கடமையாற்றினர். "இதனை இதனால் இவன் முடிப்பான் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்" என்ற குறளுக்கேற்ப ஆசிரியரின் பங்களிப்பைப் பெற்று மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு சிறந்த சேவையாற்றிய இவரது காலத்தில் ஜனாபா. சுபைதா ஆசிரியையால் பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகளின் கும்மி, கோலாட்டம், நடனம், போன்ற நிகழ்வுகளுக்கும், ஜனாப் எச்.எம். சரீப் அவர்களின் பல போட்டி நிகழ்வுகளுக்கும், ஜனாப் ஏ.என். அமானுல்லா அவர்களின் மறுமர்ச்சி என்ற நாடகமும் மாவட்டப்

போட்டிகளில் பங்குபற்றி முதல் பரிசினைப் பெற்றுக் கொண்டது. இந்நாடகத்தின் மூலம் அறிமுகமான கலாநிதி. வை.கே. மரைக்கார், சூரித் தம்பி போன்றவர்கள் கல்வியிலும் நாடக ஆக்கத்திலும் சிறந்தவர்களாக விளங்கினர். கலாநிதி. வை.கே. மரைக்கார் வர்த்தகத் துறையில் கௌரவப் பட்டம் பெற்று, உயர் பதவிகளை வகித்து இப்போது கொழும்பில் பிரபல தொழிலதிபராக விளங்குகின்றார். திரு, சூரித்தம்பி ஜேர்மனியில் ஒரு கம்பனியில் பொறியியல் நிபுணராவும் விளங்குகின்றார். அவர்கள் இன்னும் பல மாணவர்களின் வளர்ச்சிக்கும், உயர் பதவிகளைப் பெறுவதற்கும் வழிகாட்டியாக விளங்கிய சிறந்த அதிபராக ஐயூப் அவர்கள் சட்டக் கல்லூரியில் கல்வி கற்று மாவட்டத்தில் சிறந்த சட்டத்தரணியாக விளங்கினார். 1989அம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு 1991ஆம் ஆண்டு முதல் 1994ஆம் ஆண்டுவரை பாராளுமன்ற உறுப்பினராக விளங்கினார். இக்கிராம மண்ணின் மகனான இவர் இடம்பெயர்ந்தபின் ஸ்தாபிக்கப்பட்ட தாராபுர அபிவிருத்தி சபையின் போசகராகவும், விளங்குகினார். வக்பு சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், புனர் வாழ்வவு வன்னி மாவட்ட அமைச்சர் கௌரவ றிஸாட் பதியுத்தீன் அவர்களின் ஆலோசகராகவும் பங்காற்றினார். அரசியல் வாதியான இவர் இலக்கியத் துறையிலும் சிறந்து விளங்கினார்.

**கௌரவ றிஸாட் பதியுத்தீன் பா.உ. :**

தாராபுரம் மண்ணின் மைந்தனான றிஸாட் பதியுத்தீன் வாழ்க்கையில் படிப்படியாக உயர்ந்து இன்று புனர்வாழ்வளிப்பு வன்னி மாவட்ட அமைச்சராக உயர்ந்த அந்தஸ்த்துடன் மிளிர்கின்றார் என்றால் அவரைப் பெற்றெடுத்தவர்கட்கும் அடுத்து இக்கிராமத்திற்கும் கிடைத்த அரும் பேறென்றே கூற வேண்டும்.

27-11-1972ஆம் திகதி அழகொளிரும் தாராபுரத்தில் பதுறுத்தீன் ஹலிமத்துன்னிஸா தம்பதியினரின் புதல்வனாகப் பிறந்த றிஸாட் பதியுத்தீன் தனது ஆரம்பக் கல்வியை தாராபுரம் அல்-மினா மகா வித்தியாலயத்தில் பயின்று 1988ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அம் மகா வித்தியாலயத்தின் முதல்தர மாணவ

னாகச் சித்தியடைந்து எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தில் கணிதத்துறையில் உயர் கல்வியைத் தொடர்ந்தபோது 1990ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளினால் வடக்கு முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதில் இவரும் குடும்பத்தாரும் இடம்பெயர்ந்து கொத்தாந்தீவில் வசித்து வந்தனர்.

கொழும்பு ஸாகிராக் கல்லூரியின் புலமைப் பரிசில் மூலம் மீண்டும் அக்கல்லூரியிலேயே கணிதத்துறையில் உயர்கல்வியைத் தொடர்ந்து 1992ஆம் ஆண்டு சிறந்த பெறுபேற்றைப் பெற்று சித்தியடைந்து பின்னர் அக்கல்லூரியின் ஆசிரியராக குறுகிய காலம் கடமைபுரிந்தார்.

1994ஆம் ஆண்டு மொறட்டுவைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டு பட்டப்படிப்பை முடித்தும், 1999ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையில் இணைந்து அநுராதபுரம் மாவட்டத்தில் பணியாற்றினார். இதே காலப்பகுதியில் மதவாச்சியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் அல்-ஹாஜ் சஹாப்தீன் அவர்களின் புதல்வி ஆயிஷா சஹாப்தீனை திருமணம் முடித்து இல்லற வாழ்க்கையில் இணைந்துகொண்டார். அக்காலத்தில் வடபுல முஸ்லிம்களின் அவலங் களின் விடிவுக்காக அன்றைய வன்னி மாவட்ட அரசியல்வாதிகளுடன் இணைந்து வன்னி மக்களுக்கு சேவை செய்ய முயன்றார்.

மக்களின் தேவை குறித்த தன் எண்ணம் நிறைவேறாத காரணத் தினால் தளர்ந்திருந்த வேளையில் முகாம் பள்ளிவாசல் தலைவர்கள், புத்திஜீவிகள், கல்விமான்களின் ஆலோசனையின்பேரில் தீவிர அரசியலில் இறங்கினார். இவரது அரசியல் பிரவேசத்திற்கு ஆயிரக் கணக்கான இளைஞர்கள் அணிதிரண்டு துணை நின்றனர். இவர்களின் தூண்டலினால் 2000ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் பொ.ஐ. முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட்டு தான் வெற்றி பெறாத போதும் பொ.ஐ. முன்னணிக்கு ஒரு பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு இவர் பெற்ற வாக்குகள் காரணமாயின.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் முஸ்லிம் சமூகத்தின் நலனை முன்னிட்டு முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்டு இரண்டு முஸ்லிம் பிரதிநிதித்துவம் கிடைக்கக் காரணகர்த்தாவாக விளங்கினார்.

தான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இடம்பெயர்ந்த வடபுல முஸ்லிம்களுக்கு தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றினார். அதன் பின்பு 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டபோது தான் வாழ்ந்த சமூகத்திற்கு ஆற்றிய அளப்பரிய சேவையினால் கடுமையான போட்டிகளுக்கு மத்தியில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் இவர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் 2004ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி மக்கள் கூட்டமைப்பு அரசாங்கத்தில் பங்காளியாக இணைந்து புனர் வாழ்வளிப்பு, வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சராகப் பதவியேற்றார். அன்றிலிருந்து இன்றுவரை வன்னி மண் காணாத அளப்பரிய சேவைகளை ஆற்றிவருகின்றார். இவ்வருடம் வன்னியில் தேசிய மீலாத் விழாவை நடாத்துவதன் மூலம் வன்னியும் வடபுல முஸ்லிம்கள் வாழ் பிரதேசங்களும் அபிவிருத்தியும் வளர்ச்சியுமடைந்து வருகின்றன.

கம்பீரத் தோற்றமும் புன்முறுவல் பூத்த முகமும் கொண்ட அமைச்சர் கௌரவ றிஸாட் பதியுத்தீன் ஆளுமையும், ஆற்றலும் மிக்கவர். கலை இலக்கிய முயற்சியில் அதீத ஈடுபாடு கொண்டவர். சிறந்த மேடைப் பேச்சாளர், புரட்சிகரமான கருத்துக்களை உணர்ச்சிகரமாக முன்வைப்பதில் சமர்த்தர். சமூகத்தின் முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்ட இவரை இவரது தாயகமான தாராபுர மக்கள், நீடு வாழ வாழ்த்துகின்றனர்.

**நீதி சேவை**

1. எம்.வை. இர்ஸாதீன் - நீதவான்.

**இலங்கை நிர்வாக சேவை**

1. ஜனாப் எம்.வை. பஸ்லுதீன் (SLAS)

**கல்வி நிர்வாக சேவை**

1. ஜனாப் எம்.எம். சியான் (SLEAS)

பட்டைய கணக்காளர்

1. ஜனாப் ஏ.ஜி. ஹைருதீன்

இலங்கை கணக்காளர் சேவை

1. ஜனாப் எஸ். பதுர்தீன்

பல்கலைக்கழக நிரந்தர விரிவுரையாளர்

1. செல்வி. என். பஸீஹா -
   வைத்தியத்துறை - பேராதனைப் பல்கலைக் கழகம்
2. செல்வி. என். பஹ்மியா
   பொறியியல் துறை - தென் கிழக்குப் பல்கலைக் கழகம்

சட்டத்தரணிகள்

1. ஜனாப் எம்.என். ஐயூப்
2. ஜனாப் எம்.வை.எம். சதுர்தீன்

நீதிமன்ற பதிவாளர்கள்

1. ஜனாப் ஏ.எம். அபூபக்கர்
2. ஜனாப் எம்.ஐ. ஜரினா பேகம்

நீதிமன்ற ஊழியர்கள்

1. ஜனாப் எஸ்.எம். றாபி
2. ஜனாப் எம். மனாஸ்

விவாகப் பதிவாளர்

1. மர்ஹூம் ஒ.கே.செயினுல் ஆப்தீன்
2. ஜனாப் கே.எம்.முகமட் ரட்ணம்

### தொலைத் தொடர்பு ஊழியர்கள்

1. ஜனாப் ஐ.எம். ஜெளசி (Eng)
2. ஜனாப் ஏ.ஆர்.ஏ. சிப்லி (NTT)
3. ஜனாப் கே. நெய்னா முஹமட்

### வீதி அபிவிருத்தி அதிகார சபை

1. ஜனாப் எஸ்.எம். யாஸீன் (Executive Eng.)
2. ஜனாப் ஏ.எல்.ஏ. நிகார் (Civil Eng.)
3. ஜனாப் ஏ. றிஸாட் பதியுத்தீன் ((Eng.)
4. ஜனாப் என். யாஸீர் (NTT Civil)
5. ஜனாப் என்.எம். முபீன் (Jermen Tech)
6. ஜனாப் என்.எம். ஹிஸாம் (Mechanical End.)
7. ஜனாப் எஸ்.பீ. அஹமட்கான் (NTT)
8. ஜனாப் எச்.எம்.எம். அஸீம் (NTT)
9. ஜனாப் எம். கரிமா றிபால்

### மருத்துவத் துறை

1. ஜனாப் கே.எம்.அபூல் காசீம் (MBBS)
2. ஜனாப் ஏ.எச்.எம். ஹபீல் (B. Vat)
3. ஜனாபா. எஸ்.எம்.ஜெஸ்மி (RMB)
4. ஜனாபா. ஏ.தஸ்லீமா (MBBS)
5. ஜனாபா. ஏ.எல்.ஜெளஹரா (DS)
6. ஜனாபா. எஸ்.தஸ்மியா (MBBS)
7. ஜனாபா. ஏ.ஹலீமா (DS)
8. ஜனாபா. ஏ.முஸ்தனீரா (DS)
9. ஜனாபா. என்.பஸீஹா (B. Vat)
10. ஜனாபா. என்.பைஸியா ((MBBS)

### அதிபர்கள்

1. ஏ.என். கபூர்
2. எம்.என். ஐயூப் (BA)

3. எச். சித்திக் (அதிபர் தரம் I)
4. எம்.எம். ஸஹீட் (அதிபர் தரம் II)
5. எம்.சீ.ஏ. லத்தீப் (அதிபர் தரம் II)
6. எம்.ஏ. நூர்முகம்மது (அதிபர் தரம் I)
7. எம்.எம். யூனுஸ். (அதிபர் தரம் I)
8. ஏ.எல். தாவூத் (அதிபர் தரம் II)
9. ஏ.எம். ஸஹீட் (அதிபர் தரம் I)
10. ஏ.எல். முஹமட் அலி (அதிபர் தரம் I)
11. கே.கே. எஸ். ஆப்தீன் (அதிபர் தரம் I)
12. ஏ.என். அமானுல்லா (அதிபர் தரம் I)
13. ஏ.எம். சுல்தான் (அதிபர் தரம் II)
14. எம்.எம். றஹ்மதுல்லா (அதிபர் தரம் II)
15. ஏ.எல். ஜபருத் (அதிபர் தரம் II)
16. ஏ.எச்.ஏ. றஹீம் (அதிபர் தரம் II)

**அரச எழுதுவினைஞர்கள்**

1. எம்.என். செயினுல் ஆப்தீன் (CC)
2. எஸ்.ஏ. றிஸ்மி (மீன்படி கூட்டுதாபனம்)
3. எஸ்.எம். நஜ்மி (பிரதேச செயலகம்)
4. ஏ.எம். ஜுவைரியா (பிரதேச செயலகம்)
5. ஏம்.எம். இல்யாஸ். (பிரதேச செயலகம்)
6. ஐ.எம். ஸஹீர் (EPF)
7. ஏ. மர்ஜுனா (பிரதேச செயலகம்)
8. ஏ.எல்.எம். நியாஸ்
9. பெனாஸிரா றிஸ்வி
10. எம்.ஆர். இர்பான்
11. என்.எம். ஹலீஸ்.

**வங்கி அலுவலர்கள்**

1. கலாநிதி. வை.கே. மரிக்கார்
2. எஸ். அஸ்ஹர்

இளைஞர் சேவை மன்றம

1. ஏ.சி. அனிஸா
2. ஏ.என்.எம். முனவ்வர்
(மாவட்ட இளைஞர் சேவை அதி.)
3. ஏ.ஜி. நியாஸ்
4. ஐ.எம். சறூாக்
5. ஏ.சி. அஸீனா

ஆசிரியர்கள்

1. எச்.எம். கதிஜா ரஹீம்
2. எச்.எம் றசீதா யூனுஸ்
3. ஏ.என்.சௌதா நூர்தீன்
4. சபியா நூர் முஹம்மட்
5. கே.எம். றைஹானா அமானுல்லா
6. ஹாஜத் உம்மா அஹ்மட் லெப்பை
7. எம்.ஏ. றஹீம்
8. லத்தீபா செய்யது அஹமது
9. ஏ.எம்.அபூபக்கர்
10. எஸ்.எச். அஹமட் ஷா (B.A)
11. எம்.எம். ரஹ்மத்துல்லா
12. எல்.அப்துல் அஸீஸ்
13. கே.எம். ஜுனைதா லத்தீப்
14. கே.எம். அப்துல் காதர்
15. ஏ.அபூதாஹிர்
16. ஏ.எல்.ஏ.ஜலீல் (B.A Dip in Edu)
17. ஏ.ஜீ. ஏ.வதூத்
18. எம்.எம்.ரஹ்மத்துல்லா
19. மர்ஹூம் என்.எம். நூர்தீன்
20. கே.எம்.தௌபீக்
21. எச்.கௌலத் ரஹீம்
22. கே.எம்.ஜனூரியா முஹமட் சாலி
23. மர்ஹூம். கௌலத் ரஹீம்

24. கே.எம்.சேகு அலாவுதீன்
25. என்.எம்.நிஸார் (B.A. Dip in Edu)
26. எம்.எம். நஜிமி ((B.A. Dip in Edu)
27. ஏ.சீ.எஸ். ஸமீனா
28. எஸ்.எப்.பாத்துமுத்து நஸீர்
29. என்.எம்.நபீலா
30. ஏ. ஆர்.ஏ.சிப்லி
31. எஸ்.சிபானி
32. எம்.எஸ்.முபீனா பேகம் நியாஸ்
33. ஏ.ஹாஜா அலாவுதீன்
34. எம்.ஜி.நஸ்லி
35. ஏ.எம்.ஜவாஹிரா
36. ஏ.எம்.மலிக்குல் நிஸா
37. எச்.எம்.எம். நாஸிரா
38. எம்.எஸ்.சாலீமா
39. எஸ்.எச்.றாபி (ஆங்கிலம்)
40. எஸ்.ஸகீல் (பதவி விலகல்)
41. ஏ.எச். அம்ருல்லா (பதவி விலகல்)
42. ஏ.ஹிஸாம் (பதவி விலகல்)
43. எஸ்.மக்கீயா அமீன் (B.Sc)
44. என்.ஹனீஸா (B.A)
45. எம்.எம். ரியால்தீன் (B.B.A)
46. வை.ஏ.அஸ்லம் (B.B.A)
47. ஏ.எச்.ஏ.வதூாத் (பயிற்றப்பட்ட)
48. எஸ்.மெஹர்பான் சாகீக் (பயிற்றப்பட்ட)
49. ஏ.ஆர்.எம்.மக்பூல்
50. ஆர்.மஹ்தியா (பயிற்றப்பட்ட)
51. எஸ்.எச்.மதீன் (B.com. Dip in Edu)
52. எஸ.எச். மர்சூக்
53. ஏ.ஆர். அர்சத்
54. எஸ். உ வைசியா ((B.Sc. Dip in Edu)
55. எஸ்.ரிஸானா நெளஸாத்
56. வை.அஸ்லிஹா முனவர்
57. என்.றினோஸா ரிப்கி
58. ஐ.சாமிலா (B.A)

59. டீ.எம். நபூஹறான்
60. எஸ்.ஆரிபா
61. எம்.எஸ்.பஸ்லியா ஹறாரீஸ்
62. எம்.மஸீரா மாஹிர்
63. ஏ.ஆர்.ஜலீல்
64. எஸ்.எம். தாரிக்
65. ஏ.எம்.நஸீமா
66. எஸ்.எச். ஏ ஹஸன் (B.A)
67. ஏ.சாலிஹறா

## தபால் அதிபர்கள்

1. முஹறமட் காஸீம்
2. ஏ.என்.ஏ.கபூர்
3. ஏ.ஜி.நௌபர்

## உபதாபால் அதிபர்கள்

1. எம்.எம்.நயீம்
2. றுஸைனா அல்ஹாதி

## தபால் விநியோகஸ்தர்கள்

1. எச்.எம். கௌது
2. எச்.எம்.றபீக்
3. ஏ.சி.பழீல்

## கிராம சேவையாளர்கள்

1. அப்துல் ரஹ்மான்
2. கச்சு முகைதீன்
3. மர்ஹூம் ஏ.எ.கல்[illegible]
4. ஏ.எஸ்.எம்.பாருக்

5. மர்ஹூம் எம்.எம். செய்யது ஹமீட்
6. எஸ்.இஸ்ஸதீன்
7. ஜீ.சுபைர்தீன்
8. எம்.எம். ஸாஜஹான்
9. ஏர்.ஆர்.அலிகான்
10. எம்.எம்.கமால்
11. எம்.ஐ.எம்.நஸீர்

புகையித நிலைய அதிபர்கள்

1. ஏ.ஜி.ரபீக் (ஓய்வு)
2. ஐ.எம்.ஸமாயில் (பதவி விலகல்)

கூட்டுறவு முகாமையாளர்கள்

1. எம்.கே. ஹூசைன்
2. ஏ.சி. கரீம்
3. ஏ.சி.எம். சியான்
4. எஸ்.எப். பாத்துமுத்து
5. ஏ.சி. அசினா
6. ஏ.சி. பளீல்

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள அலுவலர்கள்

1. அபுல் காசிம்
2. எஸ்.எம். சுபைர் (B.A)

கூட்டுறவு ஊழியர்கள்

1. ஏ.கே. அபூபக்கர்
2. மீரா நைனா

**மீனவர் கூட்டுறவுச் சங்கம்**

1. ஏ.எம். ரட்னம்
2. எஸ்.எம். றிஸ்வி
3. என். முபீன்

**சுங்க இலாகா**

1. மர்ஹூம் எஸ்.எஸ்.அப்துல் மஜீத்

**புகையிரத ஊழியர்கள்**

1. ஏ.எச். செய்னுல் ஆப்தீன்
2. எஸ்.எம்.கசீம்
3. எஸ்.ஜவர்லால்
4. ஏ.எம்.வாஹித்
5. ஏ.எம்.மன்சூர்
6. ஏ.ஜே.அமீர் மர்ஹூம்
7. ஏ.எம்.ஆரிப்
8. ஏ.எம்.அபுல்கலாம் மர்ஹூம்
9. கே.பீர்.மொஹமட்
10. எம்.எம்.ஜபருல்லா
11. எம்.கே. அப்துல் சலாம்
12. எம்.கே.சூர்தீன்
13. என்.றபாய்தீன்
14. ஏ.எம்.துஹுபுதீன்
15. ஏ.எச்.சக்கீன்
16. எஸ்.நஸ்ருல்லாஹ்
17. எச்.எம்.சரிபுதீன்
18. எம்.சி.ஹஸன்
19. ஏ.ஜி.ஏ.நஸார்
20. ஏ.ஆர்.சபீக்
21. ஏ.சி.ஏ.கரீம்
22. ஏ.எம்.மக்பூல்

23. எம்.சி.அக்பர்
24. கே.எம்.ரட்ணம்
25. ஏ.எம்.யஹியா
26. ஏ.சி.அப்துல் கரீம்

துறைமுக ஊழியர்கள்

1. என். கப்ப நைனா
2. கபீப் மொஹமட்
3. ஏ.அல்லாபிச்சை
4. ஏ.ஆர்.ஆசிக்
5. என்.பிஸ்மில்லாகான்
6. ஏ.ஆர்.உவைஸ்
7. கே.சலாமுதீன்
8. எஸ்.தஸ்லீம்
9. வை. எம்.கஸ்மர்

இலங்கை போக்குவரத்து சபை

1. எம்.ஹாஜா அலாவுதீன்
2. எஸ்.டி.அஹ்மட்கான்
3. எஸ்.நூர்தீன்
4. எம்.எம்.மஸாஹிர்
5. எச்.பீ.சாஜஹான்
6. எம்.கே.எம்.நியாஸ்
7. எம்.எம்.ஸவாஹிர்
8. எஸ்.சாஜஹான்
9. எஸ்.உசைர்
10. ஏ.ஹாதிக்
11. ஏ.எம்.றஹீம்
12. ஏ.எச். முஹ்சீன்
13. எஸ்.எம். யாக்கூப்
14. என்.ஜெமீல்
15. டி.எம்.பர்ஹான்

அரச சிற்றுழியர்கள்

1. எம்.மாஹிர்
2. பீ.மனாசீர்
3. பீ.மபாசீர்
4. ஏ.என்.தமீம்

காவல்துறை அதிகாரி

1. மர்ஹூம் என்.எம்.பாருக்

உள்ளூராட்சி மன்ற அதிகாரிகள்

1. மர்ஹூம் ஏ.ஏ.சுல்தான்
2. மர்ஹூம் ஏ.எம்.அபூல்காசீம்
3. ஏ.ஆர். றிப்கி
4. கௌ.அன்வர்
5. ஏ.எம்.சுஜப்
6. ஏ.எம். ஆரிபா ரஹீம்
7. ஏ.ஜெ.நஸார்

பட்டதாரிகள

கலைத்துறை

1. எம்.என். ஐயூப்
2. எஸ.எம். லியாவுதீன்
3. என்.எம். நிஸார்
4. எஸ்.எம். சாலிஹ்
5. ஏ.என். அமானுல்லா
6. ஏ.எஸ்.ஏ. ஜலீல்
7. எம்.எம். ஸியான்
8. எஸ்.எம். சுபைர்
9. என். ஹனிஸா
10. ஏ.ஆர்.ஏ. ஜலீல்

11. எஸ்.எச். இனாமுல் ஹஸன்
12. என்.எம். ஹலீஸ்.

வர்த்தகத் துறை

1. எஸ்.பதுர்தீன்
2. வை.கே.மரிக்கார்
3. எம்.வை.எம்.பஸ்லுதீன்
4. வை.ஏ.அஸ்லம்
5. எஸ்.எச்.மதீன்
6. எச்.எம்.எம்.பர்ஸானா
7. எம்.எம்.றைக்
8. ஏ.பௌசி
9. பி.எம்.இஸ்மத்
10. ஏ.எம்.அஸரப்
11. பி.எம்.இர்பான்
12. ஏ.ஏ.பௌஸீன்
13. எம்.எம்.ஹக்

முகாமைத்துவத் துறை

1. என்.எம்.மஹ்ருப்
2. எம்.எம். நஜமி
3. எம்.எம்.றியால்தீன்
4. ஏ.ஜீ ஹைருதீன்

பொறியியல் பீடம்

1. ஏ.எல்.எம்.நிஹார்
2. எஸ்.எம்.யாசீன்
3. ஐ.எம்.ஜவ்சி
4. ஏ.ஆர்.ஏ.சிப்லி
5. என்.ஹிஸாம்
6. ஏ.ஆர்.ஏ. அரபாத்
7. பி.ஏ.றிஸாட்
8. எச்.எம்.அஸீம்

விஞ்ஞானத்துறை

1. எஸ்.மக்கியா
2. என்.எம்.பர்ஸானா
3. என்.உவைசியா
4. என்.பௌமியா
5. ஏ.வசீமா

# குடியிருப்பு (மூர்வீதி) முஸ்லிம்களின் வரலாறும் கலாசார விழுமியங்களும்

- கலைவாதி கலீல் -

மன்னார் மாவட்டத்தில் 'குடியிருப்பு' என்ற பெயரில் ஐந்து ஊர்கள் இருக்கின்றன. இவை ஐந்தும் மன்னாரத் தீவிலேயே அமைந்துள்ளன. புதுக்குடியிருப்பு, சொன்னையன் குடியிருப்பு, கீழியன் குடியிருப்பு, கட்டுக்காரன் குடியிருப்பு, குடியிருப்பு என்பவையே இவ்வைந்துமாகும்.

மன்னார் ஒரு பெரிய மாவட்டமாகும். தீவு என்று அழைக்கப்படும் சிறிய நிலப்பரப்பும் பெரும் நிலப்பரப்பு எனும் மற்றொரு பகுதியும் இம்மாவட்டத்தில் உள. புரவைக்கடல் ஒன்று இதனை இரண்டாகப் பிரிக்கின்றது. இடையில் தாம்போதி ஒன்றுண்டு. அதன் நீளம் 3 கி.மீ. தீவின் நீளம் 19 மைல், அகலம் 2 மைல் (அதாவது 30 கி.மீ. நீளமும் 3 கி.மீ. அகலமுமாகும்.

புதுக்குடியிருப்பு எனப்படுவது முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒரு பெரிய கிராமமாகும். ஏனைய குடியிருப்புக்கள் சின்னச்சிறய கிராமங்களாகும். மன்னார் பட்டினத்திலுள்ள குடியிருப்பு ஒரு கிராமமல்ல, ஒரு பெரிய பட்டினத்தின் ஒரு பகுதி, ஒரு வட்டாரம். புதுக்குடியிருப்புக் கிராமம், மன்னார்ப் பட்டினக் குடியிருப்பு இரண்டிலும் முஸ்லிம்களே வாழ்கிறார்கள். ஏனைய குடியிருப்புக்களின் கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரை பெரும்பாலான கிறிஸ்தவர்களும், அதற்கு அடுத்ததாக முஸ்லிம்களும் வாழ்ந்து வருகிறார்கள். இரண்டாவது சிறுபான்மையாக ஹிந்துக்கள், அங்கொன்றும், இங்கொன்றுமாக பௌத்த சிங்களவர்கள் வாழ்ந்து வந்தார்கள். தற்போது அவர்களும் இல்லை. பாதுகாப்புப் படைகள், பொலிஸ் துறை போன்றவற்றில் மட்டுமே சிங்கள சமூகத்தவர்கள் உள்ளனர். பெரும் சமூகமாக பல்லாண்டு பல்லாண்டாய் வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் 1990ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெளியேற்றப்பட்டதன் பின்னர் ஒட்டுமொத்தமாக வெளியேறிய அவர்கள் இரண்டொரு வருடங்களின் பின்னர் ஒரு சொற்ப தொகையினராக மீள் குடியேறினர். அவ்வாறு மீள்குடியேறிய வர்கள் மன்னார் தீவிலும் முஸ்லிம் கிராமங்களான புதுக்குடியிருப்பு, எருக்கலம்பிட்டி, தாராபுரம், கரிசல் மன்னார் பட்டினம் ஆகிய வற்றிலேயே குடியேறினர். பெரும் நிலப்பரப்பில் எவரும் குடியேறவில்லை. தீவுக்குப் புறம்பாக உள்ள பெரும் நிலப்பரப்பில் இருக்கின்ற பெரிய முஸ்லிம் கிராமங்களான விடத்தல் தீவு, வட்டக்கண்டல், சிலாபத்துறை, மறிச்சுக்கட்டி, கரடிக்குளி, பாலைக்குளி, முசலி, பண்டாரவெளி, வேப்பங்குளம், பெரிய புள்ளச்சிப் பொற்கேணி, ரசூல்புதுவெளி போன்ற இடங்களில் எவரும் மீளக்குடியேறவில்லை. இப்புகழ்பெற்ற விவசாயக் கிராமங்கள் அனைத்தும் பாழடைந்து பற்றைமண்டி, காடு வளர்ந்து, வீடுகள் அழிந்து கோர நிலையிலேயே காணப்படுகின்றன. மூன்று வருடங்களுக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் முசலிப்பகுதியில் வேறு சிலர் சென்று குடியேறினர். அவர்களும் கூட விவசாய நோக்கோடுதானே தவிர நிரந்தரமாக வாழும் நோக்கிலல்ல. ஆயினும் விடத்தல் தீவு, அடம்பன், வட்டக்கண்டல், மறிச்சுக்கட்டி, கரடிக்குளி, பாலைக்குளி போன்ற இடங்களில் எவருமே குடியேறவில்லை என்பது பெரும் கவலைக்குரிய விடயமாகும்.

**ஊரின் அமைப்பு**

மன்னார் பட்டினமே மன்னார் மாவட்டத்தின் தலைநகராகும். நகரின் (மன்னார் பட்டினத்தில்) பிறந்தவர்கள் என்பதால் எமக்கெல்லாம் பெருமை. மன்னார் ஒரு சிறிய பட்டினமாகும். மன்னார் தீவில்

அமைந்திருக்கும் இரண்டு மைல் அலகம் இரண்டு மைல் நீளமான ஒரு பிரதேசமே மன்னார் பட்டினமாகும்.

மன்னார் பாலத்தின் முடிவிலிருந்து புறப்படுகின்ற பிரதான வீதி தலைமன்னார்த் துறைவரை நீண்டு சென்று முடிவடைகிறது. இது மதவாச்சியிலிருந்து புறப்படும் நெடுஞ்சாலையாகும். கொழும்பு □ மன்னார் மார்க்கம் இதுதான்.

அடுத்த வீதிகள் மன்னார் பெரியகடையிலிருந்து பள்ளிமுனை வட்டாரத்தை நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையாகும். இது கடலில் போய் முடிகிறது. மூன்றாவது சாலை மன்னார் பெரியகடையிலிருந்து புறப்பட்டு பணங்கட்டிக்கொட்டு வழியால் பெரியாஸ்பத்திரியை அடைந்து அங்கிருந்து புறப்பட்டு எழுத்தூர் ஊடாக, தோட்டவெளி, கீரி போன்ற இடங்களைத் தாண்டி தாழ்வுபாடு என்ற கிராமத்தை அடைகிறது. கொழும்பு மன்னார் பிரதான சாலையிலேயே தாராபுறம், எருக்கலம்பிட்டி, புதுக்குடியிருப்பு, கரிசல், தலைமன்னார் கிராமம், போன்ற பெரிய ஊர்கள் உள்ளன. இச்சாலை தலைமன்னார் துறையைச் சென்றடைகிறது. இத்துறையிலிருந்தே கப்பல் புறப்பட்டு தமிழக ராமேஸ்வரத்தைச் சென்றடைகிறது. இந்தியா செல்வோர் இத்துறையின் வழியாகவே சென்று வந்தனர். உள்நாட்டுப் போரின்போது இது முற்றாக நிறுத்தப்பட்டது. குறைந்த செலவில் தமிழகம் செல்வதற்கான இலகு பாதை இதுவாகும். இவ்விடத்தைத் தலை மன்னார் 'பியர்' என்று அழைப்பர்.

மன்னாரின் தலைநகர் மன்னார் பட்டினமாகும். இது ஒரு சிறிய பட்டினம் என்று நான் முன்னரே குறிப்பிட்டேன். ஆனால் கச்சேரி, உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், பிரபல பாடசாலைகள், வங்கிகள், ஏனைய சகல (எல்லா) அரசாங்க அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், நூலகம், விளையாட்டு மைதானங்கள், சிறுவர் பூங்காக்கள், திறந்த வெளியரங்கு, இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம், பௌத்த மதஸ்தானங்கள், உப்பளம் போன்ற அரச கைத்தொழில் நிறுவனம் 'செனத்பார்' என்ற மீன் பிடித்துறைமுகம் அனைத்தும் அருகருகே அமைந்திருப்பதால் நடந்து சென்றே தமது தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர் மன்னார் மக்கள்.

## குடியிருப்பின் நில அமைப்பு

மன்னார் பட்டினத்தின் நிர்வாகத்தைப் பட்டின சபை கவனித்து வந்தது. பட்டின சபைகளை மூடிவிட்டு பிரதேச சபைகளை உருவாக்கிய பின்னர் பட்டின சபை நிர்வாகம் இல்லாது போயிருந்தது. ஆனால் மன்னார் பட்டினம் ஏழு வட்டாரங்களாக வகுக்கப்பட்டிருந்தது. நிர்வாக இலக்காக அவ்வட்டார முறை இன்னும் அமுலில் உள்ளது.

சின்னக் கடை (Pettah), பெரியகடை, குடியிருப்பு, பள்ளிமுனை, பணங்கட்டிக் கொட்டு, உப்புக்குளம், வாணிபத்தெரு என்பவைகளே இவ்வேழு வட்டாரங்களுமாகும்.

குடியிருப்பிலும் உப்புக்குளத்திலும், முஸ்லிம் மக்கள் வாழ்கின்றார்கள். முஸ்லிம் வட்டாரங்கள் என்றே இவற்றை அழைப்பர். இவ்வட்டாரத்தின் பிரதிநிதிகளாக ஆண்டாண்டு காலம் முஸ்லிம்களே தெரிவாகினர். பெரிய கடையில் கொஞ்சம் முஸ்லிம் மக்கள் வாழ்கின்றார்கள். ஆனால் அதிகமான முஸ்லிம் வர்த்த நிலையங்கள் பெரிய கடையிலேயே உள்ளன.

குடியிருப்பு, மன்னார் பட்டினத்தின் மூன்றாம் இலக்க வட்டாரமாகும். இது முழுக்க முழுக்க முஸ்லிம்கள் வதியும் வட்டாரமாகும். குடியிருப்பு, சின்னக்கடைக்கும் பெரியகடைக்கும் உப்புக் குளத்துக்கு நடுவில் இருக்கிறது. மூன்றுபக்கம் இவ்வூர்கள் உள்ளன. வடக்குப் பக்கம் கடல் உள்ளது. இது பரவைக்கடலாகும். பெருங்கடலல்ல, வற்றும், பெருகும் கடல் இது.

மன்னார் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலிருந்து தொடங்கும் இவ்வூர் வடக்கு நோக்கிச் சென்று காட்டுப்பள்ளி தர்காவில் முற்றுப்பெருகிறது. தர்காவின் பின்னால் ஏலவே குறிப்பிட்ட பரப்பளவில் கடல் உள்ளது. கிழக்குப் பக்கமாக அயன் படமாளிகையை எல்லையாகக் கொண்டு. வாணிபத்தெருவுடன் கூடிய உப்புக்குள வட்டாரம் வருகிறது. முகைதீன் ஜும்ஆப்பள்ளியை எல்லையாகக் கொண்டு சின்னக் கடை வட்டாரம் ஆரம்பமாகிறது.

மூன்றுபுறம் ஊரும் நாலாம்புறமும் கடலும் சூழப் பெற்ற அழகிய

சிறிய பிரதேசம் குடியிருப்பு இதனை ஊர் என்று சொல்வதா, வட்டாரம் என்று சொல்வதா என்பதே பிரச்சினை. குடியிருப்பை சோனகத்தெரு வென்றும் அழைப்பர். அண்மைக்காலங்களில் முஸ்லிம் தெரு வென்றும் கூறியிருந்தனர். குடியிருப்பில், பெரியகடையில், (Grand Bazaar) இருந்து வருகின்ற நீண்ட பிரதான வீதியும், சின்னக் கடையிலிருந்து புறப்பட்டு உப்புக்குளத்தை நோக்கிச் செல்கின்ற மற்றொரு பிரதான வீதியும் சின்னக்கடைத் தண்ணீர்த் தாங்கியிலிருந்து (ஆஸ்பத்திரி வீதி) ஊருக்குள் வருகின்ற ஒரு வீதி உட்பட ஏராளமான குறுக்கு வீதிகளும், ஒழுங்கைகளும் உள்ளன.

இவ்வீதிகள், எஸ்பிளனேட் மூர்வீதி, புதிய சோனகத்தெரு, வயல் வீதி, காட்டுப்பள்ளி வீதி என்று பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

மன்னார்க் கிராமங்கள் குளங்களுக்குப் பெயர் போனதைப் போலவே பட்டினத்திலும் பல சிறிய குளங்கள் இருக்கின்றன. குடியிருப்பில் முதலியார்குளம், சின்னாச்சிக்குளம் (ஜஸ்குளம்), தரவைக்குளம், கேம்பக்குளம், வேப்பங்குளம், தரவைக்குளம், போன்ற பல குளங்கள் இருக்கின்றன. குடியிருப்பின் மேற்கெல்லையில் நெடுங்குளம் என்ற பெரிய குளம் ஒன்று உண்டு. இக்குளங்கள் அனைத்திலும் குடியிருப்பு மக்கள் குளிப்பர். ஆண்கள் காலையிலும் பெண்கள் பகல் மற்றும் மாலையிலும் குளிப்பது வழக்கம். மழை நீர் தேங்கி நிற்கும் இக்குளங்களில் வருடத்தில் ஐந்தாறு மாதங்கள் வரை குளிக்கலாம். சிலரது இல்லங்களில் குழாய் வசதியுண்டு. அதன் மூலம் நீரைப் பெற்றுக் கொள்வர். குளிப்பதற்கும் குடிப்பதற்கும் வேறு சிலரது வீடுகளில் கிணறுகள் உண்டு. கிணற்று நீரைக் குடிக்க முடியாது. உவர்ப்பானது. ஏனவே வேறு தேவைகளுக்கே இதனைப் பயன் படுத்துவர். குடிப்பதற்குப் பொதுக்குழாய்களைப் பயன்படுத்துவர். சிலரது வீட்டினுள்ளும் பொதுவாக வீதியோரங்களிலும் இக் குழாய்களை அரசாங்கம் பொருத்தியிருக்கிறது. கீரி, தோட்டவெளி போன்ற இடங்களிலிருந்தே தண்ணீர் பெறப்படும். ஒரு நாளைக்கு இரண்டு மணித்தியாலங்களே (காலை-மாலை) தண்ணீர் குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படும்.

## குடியிருப்பு மக்களின் குடிப்பரம்பல்

குடியிருப்பு என்ற சொல்லே புதிதாக வந்து குடியேற்றங்களை அடிப்படையாகக்கொண்ட சொல்லாகும். எனவே மன்னார் பட்டினத்தின் ஏனைய வட்டாரங்களைவிட, குடியிருப்பு வட்டாரம் பின்னர் தோன்றிய தாக இருக்க வேண்டும். முஸ்லிம்கள் மன்னாரின் பல பிரதேசங் களிலும் குறிப்பாக புத்தளத்திலிருந்தும் பட்டினம் நோக்கி வந்து இப்பகுதியில் குடியேறி இருக்கின்றனர். இங்கு வாழ்பவர்கள் பலரின் மூதாதையர்கள் சிலாவத்துறை, பண்டாறவெளி, முசலி போன்ற பகுதிகளிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள் என்பதற்கு ஆதாரங் கள் உள. பட்டணத்தில் வாழும் விருப்புடன் கிராமங்களில் இருந்து வந்தவர்களும் வர்த்தக நோக்குடன் வந்தவர்களுமே குடியிருப்பில் பெரும்பான்மையாக இருந்திருக்கின்றனர். ஆனால் மூன்று தலைமுறை யினருக்கும் கூடுதலான காலம் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

வடபகுதியில் வாழும் முஸ்லிம்கள் மொழியால் தமிழும் பண்பாட்டால் இஸ்லாமியராகவுமே வாழ்கின்றனர். தங்கள் மார்க்கத்தின் மீது அடங்காப்பற்று கொண்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

முஸ்லிம்களின் முதற்குடியேற்றம் நிகழ்ந்ததாகக் கருதப்படும் எட்டாம் நூற்றாண்டு முதலே மன்னாரில் முஸ்லிம்கள் குடியேறினார்களா என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. சிலாசனம் போன்ற வேறு வகைச் சான்றுகளோ இல்லை. எனவே இதில் ஒரு ஐயப்பாடு நிலவுகிறது.

1344ல் கடலோடி இபுனு பதூதா இலங்கைக்கு வருகைதந்தபோது மன்னாரில் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தார்களா என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் வசித்ததாக நம்பப்படுகிறது. அராபியர்களின் வழித்தோன்றல்களாகச் சிலரும், தமிழகத்துக் காயல், கீழக்கரை, தொண்டி முதலிய பட்டணங்களில் இருந்து குடியேறியவர்கள் சிலரும் மன்னார் பெரும் நிலப்பரப்புக் கிராமங்களான முசலி, புதுவெளி, சிலாபத்துறை , பண்டாரவெளி போன்ற இடங்களில் இருந்து வந்தவர்கள் சிலருமாகப் பெருகிய சனத்தொகையே தற்போது மன்னார் பட்டின மூர்வீதியில் வசிக்கின்றனர்.

"Moor" என்ற அரபியப் பதத்தின் தமிழ் வடிவமாகச் சோனகர் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. போத்துக்கேயரே முஸ்லிம்களை மூர் என்று விளித்தனர். போர்த்துக்கலுக்கு மிக அருகில் உள்ள முஸ்லிம் நாடு மொராக்கோ வாகும். அங்கு தாம் கண்டவர்களைப் போலவே இங்கும் முஸ்லிம்கள் சமய நடவடிக்கைகளில் ஈடுபடுவதை அவதானித்த போர்த்துக்கேயர் இலங்கை முஸ்லிம்களை 'மூர்' என்றே அழைத்தனர். இது சோனகர் என்ற தமிழ்ப்பதமாக உருப்பெற்றது. இந்திய வரலாற்றாய்வாளர்கள் முஸ்லிம்களைத் துலுக்கர், முஹம்மதியர் என்றே குறித்தனர். சிங்களவர்கள் முஸ்லிம்களை 'மரக்கலமினிசு' என்று அழைப்பர். ஆனால் மன்னார், யாழ்ப்பாணம், போன்ற இடங்களிலுள்ள தமிழர்கள் முஸ்லிம்களைச் 'சோனி' என்றும் அழைப்பர். 'சோனகர்' என்பதனைச் சுருக்கியே அவ்வாறு அழைக்கின்றனர். ஆனால் அதனை முஸ்லிம்கள் ஒரு அவமானமாகக் கருதினார்கள். கிராமத்து முஸ்லிம்களைத் தமிழர்கள் 'காக்கா' என்று அழைப்பர். யாழ்ப்பாணத்தவரும் இதனையே சொல்லி அழைப்பர். தென்னிலங்கை மற்றும் கொழும்பு முஸ்லிம்கள் 'நானா' என்று அழைக்கப்படுகின்றனர்.

குடியிருப்பில் முஸ்லிம் குடும்பத்தவர் வாழ்ந்தனர் (1990க்கு முன்னர், LTTE யினரால் முஸ்லிம்கள் வடபுலத்தைவிட்டு விரட்டியடிக் கப்பட்டபோது குடியிருப்பு முஸ்லிம்களும் புலம் பெயர்ந்தனர். இக்கட்டுரை 1990 முன்னர் உள்ள குடியிருப்பைப் பற்றியதாகும் என்பதை கருத்திற்கொள்க.

குடியிருப்பிலுள்ள வீடுகளில் வேம்பு, பூவரசு, வாவரசு, மொச்சை, கொய்யா, முருங்கை, மாதுளை, கறிவேப்பிலை, அன்னமின்னா போன்ற மரங்களை வளர்ப்பார்கள். விசேடமாக மாதுளை மரத்தை வளர்ப்பார்கள். மன்னாரில் இது செழித்து வளரும் பெரிய மாதுளங் காய்களை இம்மரம் தரும். மாமரங்கள் செழித்து வளர்வதில்லை. அவ்வாறு வளர்ந்தாலும் அவ்வளவாகக் காய்ப்பதில்லை. காய்த்தாலும் பழங்கள் இனிப்பதில்லை. (புளிக்கும்)

ஊருக்கும் வட கடலுக்கும் இடையே சிறிய காடு ஒன்று உண்டு. இக்காட்டில் உடை மரம், வியாயை மரம், விலாத்திமரம்

எருக்கலஞ்சொடி போன்றவையே வளரும். பெருக்கு மரம் எனப்படும் "Bio-Bub" மரம் இரண்டொன்று ஊரில் உண்டு. இவை அராபியரின் வருகையின் ஞாபகார்த்தமாகக் கருதப்படுகிறது. 'டானா' போன்ற கூரிய வெள்ளை நிற முள்ளைக் கொண்ட உடை மரங்கள் அமெரிக்கக் காடுகளிலும் காணப்படுகின்றன. இலங்கையில் புத்தளத்தில் மட்டுமே இத்தகையை மரங்கள் உள்ளன. ஆடுகள் விரும்பி உண்ணும் சின்னஞ் சிறிய இலைகள் இம்மரத்தில் உண்டு.

குளக்கரைகளிலும் சதுப்பு நிலங்களிலும் பயன்மிகு பற்றைகளும், கீரை, கிழங்கு வகைகளும் காணப்படுகின்றன. தகரைப்பற்றை, எருக்கிலம்பற்றை, கள்ளிச்செடி, அலரிச்செடி போன்ற செடி, கொடி பற்றைகளும் அல்லைக்கிழங்கு கொட்டிக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளும் செருப்படிக்கீரை, புளிச்சா கீரை, மட்டிக்கீரை, சிறு கீரை போன்ற கீரை வகைகளும் இப்பிரதேசங்களில் காணப் படுகின்றன. இவை வீட்டுத் தாவரங்களல்ல.

குடியிருப்பு மக்கள் ஆடு, மாடு, பூனை போன்ற வீட்டுப் பிராணிகளை வளர்ப்பர். நாயை விரும்பி வளர்ப்பதில்லை. அபூர்வமாக இரண் டொருவர் வளர்ப்பர். மாடு வளர்ப்பு படிப்படியாக அருகிப்போய் விட்டது. 30 வருடங்களுக்கு முன் குடியிருப்பு மக்களுடைய பெரும்பாலான இல்லங்களில் இரண்டொரு மாடுகளும் (பசு, காளை), ஆடுகளும் இருந்தன. வீட்டுப் பறவைகளாக கோழி, தாரா போன்றவற்றை வளர்ப்பர். கிளி, புறா, மைனா போன்றவை வெகு அபூர்வமாகவே வளர்க்கப்படும். வெகு சிலர் முயற் குட்டிகளை வளர்ப்பர். அவற்றுக்கு மொச்சை இலைகளை உணவாகக் கொடுப்பர். மொச்சை மரம் குடியிருப்பில் நிறையவே உண்டு.

மன்னாரில் போனிக்குதிரை, கழுதைகள் அதிகமதிகம் காணப் பட்டாலும் குடியிருப்பு முஸ்லிம் மக்கள் இவற்றை விரும்பி வளர்ப்பதில்லை. இவைகளெல்லாம் கட்டாக்காலிகளே.

மன்னார் குடியிருப்பில் இரு குடும்பங்கள் யானை வைத்திருந்த தாகவும் யானை வளர்த்ததாகவும் யானை வண்டியில் பிரயாணம் செய்ததாகவும் வரலாறு கூறுகின்றது. நான் சிறுவனாக இருந்தபோது எனது தெருவில் இரண்டு யானைகள் நின்று தென்னை ஓலை தின்றது

இன்றும் பசுமரத்தாணி போல் ஞாபகத்தில் வருகிறது.

மூர்வீதியின் செல்வந்தரான கா.ம.அ. கச்சு முகம்மது என்பவர் மறிச்சுக்கட்டி, கரடிக்குளி போன்ற இடங்களிலிருந்து யானைப் பணிக்கர்களிடம் யானைகளை பணம் கொடுத்து வாங்கியிருந்தார். இவரால் கண்டி தலதா மாளிகைக்கும் ஒரு யானை வழங்கப்பட்டது.

மொழியும் பண்பாடும

குடியிருப்பு மக்களின் தாய் மொழி தமிழ். இவர்கள் நல்ல தமிழிலேயே உரையாற்றுவார்கள். பண்டிதத்தமிழல்ல, பாமரத்தமிழுமல்ல. கொச்சையாகப் பேச மாட்டார்கள். ஒரு சில சொற்பிரயோகங்களைத் தவிர ஏனைய வார்த்தைகள் நியமத்தமிழில் அமைந்திருக்கும்.

இலங்கையிலேயே மன்னார் முஸ்லிம்கள் தான் நல்ல தமிழ் பேசுபவர்கள் எனத் துணியலாம். அதிலும் மன்னார் மாவட்டத்திலேயே மன்னார் பட்டினத்து முஸ்லிம்கள்தாம். அதுவம் குடியிருப்பு முஸ்லிம்கள்தாம். நல்ல தமிழில் உரையாடுகின்றனர் எனில் அது மாறுபட்ட கூற்றல்ல. இவ்வாறு அவர்கள் கொச்சைக் கலப்பின்றி நல்ல தமிழில் உரையாடுவதற்குக் காரணங்கள் உள. பிரதான காரணம் பட்டின முஸ்லிம்கள் தமிழர்களுக்கு மத்தியில் வாழுவதாகும். குறிப்பாக சின்னக்கடையென்றும் (Pettah) பறங்கித்தெருவென்றும் அழைக்கப்படும் கற்ற தமிழர்கள் வாழும் வட்டாரம் குடியிருப்பின் வெகு அண்மையில் இருக்கின்றது. மேலும் பட்டின முஸ்லிம்கள் அந்த நாட்களில் தமிழ் ஆசிரியர்களிடமே கல்வி கற்றார்கள். எனவே இவர்கள் தமிழை பிழையின்றியும் இலக்கணச் சுத்தமாகவும் பேச வாய்ப்பிருந்தது. மூர்வீதி மக்கள் கையாண்ட தூய தமிழ்ச் சொற்கள் ஏராளமாக உள்ளன. விரிவஞ்சி அவற்றைத் தவிர்த்துக் கொள் கின்றேன். ஏனைய மக்கள், பெண்பிள்ளைகள் பருவம் அடைந்ததை பெரியபிள்ளையாயிட்டா, சடங்காயிட்டா, வயதுக்கு வந்திட்டா என்று கூறுவதை முஸ்லிம்கள் 'குமராயிட்டா' என்றே தான் குறிப்பிடுவார்கள். இதுவே சரியான தமிழ்பதமாகும். முஸ்லிம் மக்கள் குழம்பை 'ஆணம்' என்றும் தேங்காய்ப்பாலில் செய்யப்படும் ஒரு வகை ரசத்தைப் 'புளியாணம்' என்றும் அழைப்பார்கள்.

ஆனால் அவர்கள், இவர்கள் என்ற பதப் பிரயோகத்தை மட்டும் 'அவ்வ .. .. இவ்வ' என்றுதான் கையாள்வார்கள். யாமர்களும் பெண்களும் வயோதிபர்களும் இவ்வாறுதான் பயன்படுத்துவர். நன்றாகக் கற்ற ஒரு சிலர் மட்டுமே ' அவர்கள், இவர்கள் ' என்று கூறுவர்.

வீட்டில் இருக்கும் ஒரு பெண்ணிடம் சென்று 'உங்கள் கணவர் வீட்டில் இருக்கிறாரா?' என்று கேட்டால் 'அது வெளியே போயிட்டு' அல்லது 'அவ்வ வெளியே போயிட்டாவ' என்றுதான் கூறுவார்கள். 'அவர் அல்லது அவர்கள் வெளியே போய்விட்டார்கள்' என்று கூறமாட்டார்கள். கணவன் மீது மரியாதை காரணமாகவே அது அல்லது அவ்வ என்று குறிப்பிடுகிறார்கள். 'அது' என்பது ஓர் அஃறிணைச் சொல்லாகும்.

**நடை, உடை பாவனைகள்**

குடியிருப்பு முஸ்லிம்கள் அழகாக ஆடை அணிவார்கள். சுத்தமான கவர்ச்சியான ஆடைகளை அணிவதில் சமர்த்தர்கள். பட்டினத்தில் வாழ்ந்ததால் நல்ல ஆடை அணிய வேண்டும், ஏனைய சமூகத்தார் மத்தியில் நடமாடும் போது தங்களைக் குறைவாக நினைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகவே சுத்தமான அழகிய ஆடைகளை அணிந்து வந்தார்கள்.

ஆண்கள் இந்திய பழைய காட்சாரம் அணிந்து அரைக்கை அல்லது முழுக்கைச் சட்டை அணிவார்கள். பெரும்பாலானோர் சட்டையை சாரத்தின் உள்ளே வைத்து உடுத்தாமல் வெளியே விட்டிருந்தார்கள். காலில் செருப்பு அணிவார்கள். ஐம்பது வயதைத் தாண்டியவர்களும் முதியோர்களும் இடுப்பில் தடித்த பட்டி (பெல்ட்) அணிந்திருப்பார்கள். அகலமான இந்தப்பட்டியில் இரண்டொரு பொக்கட்டுகள் இருக்கும். அந்தப் பொக்கட்டுக்குள் பணம், மூக்குத்தூள் போன்றவற்றை வைத்துக் கொள்வார்கள். அந்த இடுப்புப் பட்டி பச்சை, நீளம், சிகப்பு போன்ற வர்ணங்களில் காணப்படும். முதியவர்கள் 'மிதிஅடிக்கட்டை' களைக் காலில் அணிந்திருப்பார்கள். இவர்கள் நடக்கும் போது 'டொக் டொக்' என்ற சத்தத்தை எழுப்பும். அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் நீளக் கால்சட்டை அணிவார்கள். ஆனால் வயதான

ஆசிரியர்கள் சாரம் அணிவார்கள். பெண்கள் சாரி, ஜாக்கட் அணிந்து தலையில் முக்காடு போட்டிருப்பார்கள். இவர்களது சாரி அணியும் முறை தமிழர்களின் முறை போல் இருக்காது. அதற்கு எதிர்மாறாக அமைந்திருக்கும் மார்பகத்தை நன்றாக மூடி அதே சாரியினால் முக்காடு போடப்பட்டிருக்கும். இதனை முன் சாரி என்பார்கள். முதிய பெண்கள் கர்நாடகமாக ஆடை அணியும் வேளையில் இளம் பெண்கள் சற்று நாகரீகமாக அணிவார்கள். ஆனால் பெரும்பாலும் சாரிதான் உடுத்துவார்கள். ஒரு சிலர் பாவாடை சட்டை, தாவணி அணிவார்கள். ஆனால் எவரும் சல்வாரி, கிமோனாஸோட்டி போன்றவற்றை உடுத்த மாட்டார்கள். கழுத்தில் காதில் கையில் தங்க நகைகள் அணிந்திருப்பார்கள். கையில் மோதிரம் இருக்கும். சற்று முதிய பெண்கள் மோதிரம், மூக்குத்தி அணிந்திருப்பார்கள். மிக வயதான பெண்கள் காதில் பாரமான அலுக்கத்தி என்ற ஒரு வகை நகையை அணிவர். இளம் பெண்களும் சிறுமிகளும் வெள்ளிக் கொலுசு அணிவார்கள். குழந்தைப் பிள்ளைகளுக்குப் பட்டுச் சட்டை அணிவிப்பார்கள். குழந்தைகளின் இடையில் அரைஞான் கயிறு அணிவித்து மேகலை போன்ற அரை மூடி சதங்கை அணிவிப்பார்கள்.

பெண்கள் காறை, மூக்குத்தி, விலாங்கு போன்ற ஆபரணங்களையும் அணிவார்கள். இந்நகையில் பெரும்பாலும் வெள்ளி, ஐம்பொன், பொன்மணி போன்ற உலோகங்களே பயன்படுத்தப்பட்டன. வெகு அண்மையிலேயே தங்கம் பயன்படுத்தப்பட்டது.

ஆண்களைப் பொறுத்த அளவில் அரசாங்க ஊழியர்கள் விசேடமாக ஆசிரியர்கள் வெள்ளை சாரம் உடுத்தி ஷேட் அணிந்து அதன்மேல் கோட் அணிந்திருப்பார்கள். இளம் உத்தியோகத்தர்கள் ஷேட்டும் லோங்ஸ"ம் அணிவர்.

## குடியிருப்பின் புகழ் பெற்ற குடும்பங்கள்

குடியிருப்பில் பல புகழ் பெற்ற குடும்பங்கள் வசித்து வந்தன. இக்குடும்பங்கள் அனைத்தும் 1990ம் ஆண்டு புலிகள் முஸ்லிம்களை வெளியேற்றிய போது வேறு இடங்களுக்குச் சென்று விட்டன.

அசனா மரைக்கார் குடும்பம் (அ.ச. குடும்பம்) பி.ச. குடும்பம், கா.ம.அ. குடும்பம், நூர்தீனார் குடும்பம், அ.சீ.ம. குடும்பம் என்று சில புகழ் பெற்ற குடும்பங்கள் ஆண்டாண்டு காலமாக இங்கு வாழ்ந்து வந்தன.புகழ் பெற்ற நகை அணிகள் மற்றும் ஜவுளி, மளிகைப் பொருள், வர்த்தகரும் நிலச்சுவான் தாரும், பள்ளி பரிபாலனசபைத் தலைவருமான கௌது நானாவின் தந்தையார் அசனா மரைக்கார் சாகுல் ஹமீது என்பவர்தான். அக்குடும்பத்தின் முன்னோடி தென்னிந்தியாவில் இருந்து மன்னாரில் குடியேறி பிரஜா உரிமை பெற்று பெரும் வர்த்தகராகத் திகழ்ந்த க.ம.அ. கச்சு முகம்மது. இவரின் மகனாகிய அப்துல் றஹீம் என்பவர்தான் மன்னார் தேர்தல் தொகுதியின் முதலாவது முஸ்லிம் நடாளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது ஏனைய பிள்ளைகள் அரச அதிகாரிகளாக வர்த்தகர்களாகவும் மிளிர்ந்து வந்தனர். நூர்தீனார் குடும்பமும் குடியிருப்பில் புகழ் பெற்ற குடும்பமாகும். இவருக்குக் கீரி மற்றும் பெரும் நிலப்பரப்பில் காணி பூமிகள் உள்ளன. இவரது பிள்ளைகள் உயர் அரச அதிகாரிகளாகவும் ஆசிரியர்களாகவும் பணியாற்றினர்.

மற்றொரு புகழ் பெற்ற குடும்பம்தான் அதிகார் (Adigar Family) குடும்பம் எனப்படுவது. மன்னார் குடியிருப்பில் வாழ்ந்த நிலாமுதீன் உடையார் என்பவரது மகனாகப் பிறந்த அபுல் காசிம் மரைக்கார் என்பவர் தனது கல்வியின் பின்னர் மன்னாரின் முதலியாராக இருந்தார். ஆங்கிலேயர் ஆட்சியில் அதிகாரி என்ற பதவி வழங்கப்பட்டது. அப்போது அரசாங்க அதிபர் முறை இல்லை. அதிகாரம் என்பவரே மாவட்டத்தின் முழு நிர்வாகத்தையும் கவனிப்பவர். எதிர்காலத்தில் அதிகாரம் பதவி நீக்கப்பட்டு, DRO முறை உருவாக்கப்பட்டது. அதிகாரத்தின் மகளை கா.ம.அ. கச்சு முகம்மதின் மகனாகிய எம்.எஸ்.ஏ. றஹீம் (எம்.பி) திருமணம் செய்தார்.

அ.மீ. குடும்பமும் பிரசித்தமானது. ஆ.மீ.ம.வின் பிள்ளைகள் வர்த்தகர்களாகவும் அரச ஊழியர்களாகவும் சமூக சேவகர்களாகவும் விளங்கினர். றெஸீத் என்பவர் அரசியல் மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்டுழைத்தார்.

குடியிருப்பில் பெரும் செல்வந்தர்கள் அதாவது கோடீஸ்வரர்கள் எவரும் வாழவில்லை. இரண்டொரு நிலச்சுவான்தார்கள் இருந்தார்கள். இவர்களையும் பூரணமான நிலச்சுவாந்தர்கள் என்று கூறிவிட முடியாது. குடியிருப்பு மக்களுடைய பிரதான தொழில் வர்த்தகம்தான். ஆயினும் அனைவருமே வியாபாரிகளல்லர். ஒரு சில வியாபாரிகள் இருந்தனர். ஏனையோர் வர்த்தக நிலையங்களில் தொழில் புரிபவர்கள். கைத்தொழில் அறிந்தோர் மிகக் குறைவு. மன்னார் கடல்சூழ் தீவாக இருந்த போதும் குடியிருப்பு மக்கள் மீன் பிடித்தலில் ஈடுபடுவதில்லை. அதை அவர்கள் அறியார். அதனை ஓர் உயர் தொழிலாகக் கருதுவதுமில்லை. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் பணங்கட்டிக் கொட்டு மீனவர்கள் அதிகாலையில் மீன்பிடிப்பதற்காகக் குடியிருப்பினூடாகவே, கடலுக்குச் செல்வர். மன்னாரில் சிகை வெட்டுதல், செருப்புத்தைத்தல் போன்ற தொழில்களில் குடியிருப்பு முஸ்லிம்கள் ஈடுபடுபதில்லை. 'டோபி'த் தொழிலை முஸ்லிம்கள் முற்றாக நிராகரித்திருந்தனர். குடியிருப்பில் தையல் தொழிலாளர்கள் இருந்தனர். அதனைக் கௌரவமாகவும் கருதினர். இரண்டொரு ஏழைகள் பலகாரங்கள் செய்து விற்று வந்தனர். கடைகளுக்கும் கொடுத்தனர். குடியிருப்பில் ஒரு பக்கீர்க் குடும்பம் இருந்தது. (அவர்களது பிள்ளைகள் படித்து அரச தொழில் புரிகிறார்கள்) தற்போது இக்குடும்பம் எங்கிருக்கின்றது என்று அறிய முடியாதிருக்கிறது.

'கோழி மேய்த்தாலும் கோனர் மேந்தில் (Government) மேய்க்க வேண்டும்.' இது அந்தக் காலத்தில் மன்னாரில் வழக்கிலிருந்த பழமொழி. அதி உயர் தொழிலாகக் கருதப்படும் அரச தொழில்களில் ஒரு சிலர் ஈடுபட்டனர். குடியிருப்பைப் பொறுத்தவரையில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலிருந்தே அரச தொழில் புரிதல் இடம்பெற்றிருந்தது. அந்த நாட்களில் நன்கு ஆங்கிலம் கற்றவர்களே அரச தொழில் ஈடுபட முடியும். அத்தகையோரையே நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்வர். பியோனுக்குக் கூட ஆங்கில அறிவு வேண்டப்படும்.

அரை தசாப்தத்துக்கு முன்னர் ஒரு சில ஆசிரியர்களும் வைத்தியர் களும் சிற்றூழியர்களும் குடியிருப்பில் இருந்தனர். பின்னர் படிப்படியாக

அரச ஊழியர் தொகை உயர்ந்தது. அதிகாரத்தின் பின்னர் வர்த்தக எண்ணம் குறைந்து அல்லது வீழ்ச்சியடைந்தது எனலாம். குடியிருப்பு முஸ்லிம்கள் அதிகமதிகம் கற்றுத் தெளிந்தனர். பெண்பிள்ளைகளும் நன்கு கற்க ஆரம்பித்தனர். இவர்களது கல்விக்கு உறுதுணையாக மன்னார் முஸ்லிம் அரசினர் கலவன் பாடசாலை (தற்போதைய அல்-அஸ்ஹர்) விளங்கியது. ஒரு சிலர் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரி, மன்னார் புனித சவேரியார் கல்லூரி, கொன்வண்ட் (மகளிர் கல்லூரி) ஆகியவற்றிலும் கற்று வந்தனர். சில செல்வந்தரின் பிள்ளைகள் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற இடங்களுக்குச் சென்று படித்தனர். யாழ் மத்திய கல்லூரி, கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மற்றும் சென் ஜோசப் கல்லூரி போன்ற கிறிஸ்தவ கல்லூரிகளிலும் படித்தனர். இவர்களிற் சிலர் உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக் கழகம் சென்றனர். மன்னார் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் (அல்-அஸ்ஹர்) படித்தவர்களிற் சிலரும் பல்கலைக்கழகம் சென்றனர்.

சுமார் 25 வருடத்துக்கு முன், குடியிருப்பில் ஆசிரியர்களே அதிகமாக இருந்தனர். இதில் பெண்களும் கணிசமாக அடங்குவர். கலாநிதி டப்ளியூ தகநாயக்கா கல்வி அமைச்சராக இருந்த காலத்திலேயே அதிகமான முஸ்லிம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். பின்னர் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் காலத்தில் இது பெருகியது. இவர்கள் இருவரும் ஜீ.சி.ஈ. சாதாரண பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கும், சித்தியெய்யாதவர்களுக்கும் கூட ஆசிரிய நியமனங்களை வழங்கினர். விசேடமாக பெண்பிள்ளைகளுக்கு அசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. முஸ்லிம்கள் மத்தியில் போதிய ஆசிரியர் இன்மையாலும் விசேட முஸ்லிம் மகளிரை ஆசிரியர் பணிக்கு உள்வாங்கும் முகமாகவும் இந்நியமனங்கள் வழங்கப்பட்டன. ஆனால் இத்தகைய ஆசிரியர்கள் அட்டாளைச்சேனை, அளுத்கமை, பேராதெனிய, பாலாவி போன்ற இடங்களிலுள்ள ஆசிரியர் பயிற்சியைப் பெற்று சிறந்த ஆசிரியர்களாக மிளிர்ந்ததோடு எதிர்காலங்களில் அதிபர்களாகவும் இருந்து ஓய்வு பெற்றனர்.

ஆசிரியர் சேவைக்குப் புறம்பாக அரச அலுவலகங்களில் இலிகிதர்களாகவும் சிற்றூழியர்களாகவும் சிலர் தெரிவாகினர். உரிய பரீட்சைகளுக்கும் முகம் கொடுத்தே இந்த நியமனங்களைப் பெற்றனர்.

குடியிருப்பில் ஒரு சிலர் இந்திய ஆயுர்வேத மற்றும் யூனானி வைத்தியர்களாக (நாட்டு வைத்தியம்) வாழ்ந்து வந்தனர். இவர்கள் முறைப்படி பரம்பரை வைத்தியர்களைக் குருநாதர்களாகக் கொண்டு கற்றுத் தெரிந்தவர்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும். அதேவேளை ஆங்கில வைத்தியர்களிற் சிலரும் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். இவ்வாங்கில வைத்தியர்கள் அந்த நாட்களிலேயே இருந்திருக்கின்றனர். இவர்கள் முறைப்படி பல்கலைக்கழகங்களிலும் வைத்தியக் கல்லூரிகளிலும் கற்றவர்கள். சிலர் இங்கிலாந்திலும் கற்றனர். மன்னாரின் முதலாவது முஸ்லிம் டொக்டர், குடியிருப் பிலேயே உருவானார். அவரது பெயர் எஸ்.எச். ஹமீட் இவரது காலத்திலேயே டாக்டராக இருந்தவர்கள் என்.எஸ்.எம். புகாரி, எஸ்.எச். ஹமீட் ஆகியோருக்குப் பின்னர் ஏ. பிஸ்ருல்ஹாபி, முஹம்மது கலீல் ஆகியோர் டாக்டர்களாக உள்ளனர். தற்போது குடியிருப்பைச் சேர்ந்த மற்றும் இரண்டு டாக்டர்கள் வெளிநாட்டில் பேரும் புகழுடனும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வைத்தியக் கல்லூரியின் விரிவுரை யாளர்களாகவும் உள்ளனர். இருவரும் பாடசாலை அதிபர்களின் பிள்ளைகளாவர். ஒருவர் டாக்டர் மஹ்ரூப் மற்றவர் டாக்டர் ஸாஹிர். டாக்டர் மஹரூப் மன்னார் காலித் பெரியாஸ்பத்திரியில் மகப் பேற்றும் மருத்துவப் பேராசிரியராகக் கடமையாற்றுகிறார். இவர் Testubil குழந்தை ஆராய்ச்சி டாக்டர் குழுவில் ஒருவராக சிங்கப்பூரில் கடமையாற்றினார். டாக்கர் ஸாஹிர் தற்போது லண்டனில் புகழ்பெற்ற மருத்துவராகப் பணிபுரிந்து வருகிறார்.

குடியிருப்பின் முதலாவது பட்டதாரியான இஸட்.ஏ. றஹீம் என்பவரே முதலாவது முஸ்லிம் அதிபரும் முதலாவது கல்வி அதிகாரியுமாவார். ஜிப்ரி மேலும் அப்துல் சலாம், ஹாஜா முகைதீன், அப்துல் றஷீட், செய்னுல் ஆப்தீன் ஆகியோர் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் அதிபர்களாக இருந்தனர். இவர்களில் முதல் குறிப்பிட்ட மூவரும் காலஞ் சென்று விட்டனர். இவர்களின் பின்னர் ஊரில் அதிபர்கள் இருந்தும் கூட அதிகாரிகள் பதவிகளைப் பெறவில்லை. ஆயினும் குடியிருப்பு ஆசிரியர்கள், நியமனம் பெற்ற காலத்திலேயே நியமனம் பெற்றுக் கொண்ட எருக்கலம் பிட்டி, தாராபுரம், விடத்தல் தீவு போன்ற கிராமங்களிலுள்ள முஸ்லிம் ஆசிரியர்கள் பலர் அதிபர்களாகப் பதவி ஏற்றனர். தற்போது குடியிருப்பைச் சேர்ந்த ஹிதாயத்துல்லா என்பவர் மட்டும் அதிபராக இருக்கிறார். 1990ல் புலிகளினால் மன்னார்

முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்ட போது பல சிரமங்களை எதிர்கொண்ட பல சிறந்த ஆசிரியர்கள் மனச் சோர்வின் காரணமாக ஓய்வு பெற்றமையும் அதிபர் இல்லாமைக்கான காரணமாகும்.

இதேவேளை மன்னார் குடியிருப்பைச் சேர்ந்த சிலர் கல்வி அமைச்சில் அதி உயர் பதவிகளை வகித்துள்ளனர். குடியிருப்பைச் சேர்ந்த கே. ஜிப்ரி என்பவர் அதிபராக இருந்து மன்னார் பிரதேச கல்வி அமைச்சில் ஒரு பணிப்பாளராக பணியாற்றினார். மற்றொரு அதிபரான இஷட் ஏ. றஹீம் என்பவர் மன்னார் கல்விப்பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றார். அவ்வாறே கே.எம். வஸீர் என்பவர் மன்னார் கல்விப்பணிப்பாளராகவும் பின்னர் கிறீன்பாத் மாகாணக் கல்வி அபிவிருத்திப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றார். மற்றொரு அதிபராக தாஹா என்பவர் இதே அலுவலகத்தில் ஒரு பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றார். தற்போது முஹம்மது சியான் என்பவர் மட்டும் ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளராக இருக்கிறார். இஸட் ஏ. றஹீம், கே.எம். வஸீர், ஐ.எம். தாஹா, எம். சியான் போன்றவர்கள் இலங்கைக் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளாவர். கே. எம். வஸீர்தான் மன்னாரில் பரீட்சை மூலம் தெரிவான முதலாவது இ.க.நி. சேவையாளர்.

நாடெங்கிலும் நன்கறியப்பட்ட எழுத்தாளரும் ஊடகவியலாளருமான கலைவாதி கலீல் ஓர் ஆசிரியராவார். கல்வி நிர்வாக சேவை அதிகாரியான இவர்தான் ஆசிரியர் கலாசாலையொன்றில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்ட மன்னாரைச் சேர்ந்த முதலாவது முஸ்லிமாவார். பின்னர் அளுத்கமை ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபராகவும் இறுதியாக தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதியுமாகப் பணயாற்றினார்.

முஹம்மது மரிக்கார் என்பவரே மூர் வீதியிலிருந்து உருவான முதலாவது புரக்டரும் பிரசித்த நொத்தாரிசுமாவார். எம்.எம். அபூதாஹிர் என்பவர் மன்னாரின் முதலாவது முஸ்லிம் நீதவானாவார். தற்போது குடியிருப்பைச் சேர்ந்த இளம் சட்டத்தரணிகள் என்.எம். சப்ரி, பீ.ஏ. நியாஸ் ஆகியோர் ஆவர்.

குடியிருப்பைச் சேர்ந்த முஹம்மது கலீல் என்பவர் I.P.Tயாக கடமையாற்றினார். சாலிஹீன் மரைக்கார் என்பவர் விவசாயத் திணைக்களத்தில் உயர் பதவியை வகித்து வந்தார். எம்.ஓ.எஸ். மரிக்கார் என்பவர் கொழும்பு பிரதம தபாலகத்தில் (A.P.O) தபால் அதிபராகக் கடமையாற்றியவர். புவாத் என்பவர் ஒரு கலாநிதியாவார். வித்துவான் எம். ஏ. றஹ்மான் என்பவரே மன்னார் மாநிலத்தில் முதலாவதும் ஒரேயொரு தமிழ் மொழி வித்துவானுமாவார். இவர் சென்னையில் கல்வி பயின்றார். சுஹார் என்பவர் சிங்கள மொழியில் பீ.ஏ பட்டம் பெற்று வங்கியில் தொழில் புரிந்த முதல் முஸ்லிமாவார்.

மன்னார் குடியிருப்பைச் சேர்ந்த ஒரு சிலர் பொறியியலாளர்களாக இருக்கின்றனர். அப்துல் கபூர் என்பவர் புகையிரத நிலைய அதிபராகக் கடமையாற்றினார். வீரகேசரிப் பத்திரிகையிலும் வேலை செய்தார். இவரது பெண்பிள்ளைகள் மூவர் பட்டதாரிகளாவார். ஒருவர் அதிபராக இருந்தார். மற்றவர் அரச நிர்வாகப் பதவியொன்றை வகித்து வருகிறார். மற்றைய பெண்மணி ஆசிரியராக இருக்கிறார். என்.எம்.ஏ. கபூரின் ஆண்மகன் பிக்ரி என்பவர் இலங்கைப் பாராளுமன்றத்தின் சமநேர (Simultaneous Interpreter) உரை மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றி வருகிறார். கபீபு முஹம்மது என்பவருடைய மகனாகிய எச்.எம். ஷரீபு (மன்னார் சரீப்) என்பவர்தான் பாராளுமன்றத்தின் பணியாற்றிய மன்னாரின் முதலாவது சமநேர உரை பெயர்ப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஓர் ஆசிரியரும் கூட. நல்ல கலைஞர், சிறந்த நாடக நடிகர், மேடைப்பேச்சாளர்.

என்.எம்.ஏ. கௌது என்பவர் மன்னார் மாவட்ட கடற்தொழிற் திணைக்களத்தில் ஓர் உயர் பதவி வகித்தார். கே.எம்.ஏ. முஸ்தபா என்பவர் கமத்தொழில் திணைக்களத்தில் உயர் பதவி வகித்தார். இவர்தான் மன்னாரிலிருந்து அமரிக்காவுக்குப் புலமைப்பரிசில் பெற்றுச் சென்ற முதலாவது முஸ்லிமாவார்.

மன்னாரின் முதல் Attache யாக வெளிவிவகார அமைச்சினால் பாக்கிஸ்தான் இஸ்லாமாபாத்தில் வேலை செய்தவர் குடியிருப்பைச் சேர்ந்த அப்துல் ஸமட் என்பவர். எழுதுவினைஞர் பரீட்சையில் தேறிய (1956) மூர் வீதியின் முதலாவது முஸ்லிம் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நிருவாக உத்தியோகத்தராகவும் மன்னார் மாவட்ட

அமைச்சின் மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் (P.R.O) பணியாற்றியிருக்கிறார்.

குடியிருப்பின் முதல் அரச ஊழியராகப் பணிபுரிந்தவர் சுல்தான் இப்றாஹீம் என்று கூறிவைக்கலாம். இவர் சேகு தாவூத் தம்பி என்பவரின் மகனாவார். சுல்தான் இப்றாஹீமின் மகன்தான் புகழ் பெற்ற சித்த ஆயுர்வேத வைத்தியராகத் திகழ்ந்த அப்துல் ஜப்பார் என்பவர். அப்துல் ஜப்பாரின் பிள்ளைகளில் ஒருவர், ஆசிரியராக இருந்தார். மற்றொருவர் சித்த ஆயுர்வேத வைத்தியராகவும் திகழ்கிறார். இவர் திஹாரியில் வசித்து வருகிறார்.

ஆயினும் குடியிருப்பில் ஆசிரியர் தொழில் புரிந்தோரே அதிகம் என்று கூறிவிடலாம். சில குடும்பத்தில் மூவருக்கு மேல் ஆசிரியர்களாக இருந்தனர். மதாறு முகைதீன் குடும்பத்தில் மூவர் ஆசிரியர். ஹனீபா குடும்பத்தில் இருவர் ஆசிரியர். சஹாப்தீன் குடும்பத்தில் இருவர் ஆசிரியர், ஹாஜா முஹைதீன் குடும்பத்தில் மூவர் ஆசிரியர். வித்துவான் றஹ்மான் குடும்பத்தில் அவர் உட்பட மூவர் ஆசிரியர். இவ்வாறு குடும்பத்திலும் தனிப்பட்ட இல்லத்திலும் ஆசிரியர்களாகவே நிறைந்து காணப்பட்டனர்.

## கலை இலக்கியப் பங்களிப்புக்கள்

மூர்வீதியிலே கலைஞர்களும், இலக்கியவாதிகளும் பிற்காலத்தில் தோன்றினர். ஆனால் முற்காலத்தில் புலவர்களும் வரகவிகளும் வாழ்ந்திருக்கின்றனர். அந்த வகையில் இலங்கையெங்கிலும் புகழ் பெற்றவர் நொத்தாரிசுப் புலவர் எனப்படுபவர். அவரது குடும்பத்தினர் இன்னும் வாழ்கின்றனர்.

திருமணப் பதிவாளராகப் பதவி வகித்த செய்யது மஸ்தான் என்பவர் ஒரு சிறந்த நாடக நடிகராவார். சதாவதானி சேகுத்தம்பிப் பாவலராக வேடமேற்று இவர் நடித்துள்ளார். பின்னர் இந்நாடகத்தை மன்னாரில் நடைபெற்ற (1980) பௌர்ணமி கலைவிழாவின்போதும் மேடை யேற்றினார். கவிப்புலமையும் இவரிடமிருந்தது. அப்துல் கபூர்

என்பவரும் ஒரு நடிகர்தான். ஆங்கிலத்துரை 'கொக்' காக நடித்ததனால் இவர் கொக்கபூர் என்றே அழைக்கப்பட்டார். பிரபல வர்த்தகர் நாஸின் தந்தையார் ஒரு கலாரசிகராவார்.

வித்துவான் றஹ்மான் ஒரு கவிஞர், நாடக ஆசிரியர், நாடகங்களை நெறிப்படுத்தவும் செய்வார். வீரதீர சாகஸங்களான குதிரையேற்றம், மல்யுத்தம், வாள்வீச்சுக் கற்றவர். கழிகம்பு எனப்படும் கோலாட்டத்தில் கை தேர்ந்தவர். தனது மாணவர்களைக் கொண்டு பல கலை நிகழ்ச்சிகளை நடாத்தியிருக்கிறார். இவரது புகழ்பெற்ற நாடகங்கள் இதுதான் இஸ்லாம், வஞ்சகா வாளை எடு. இவர் உருவாக்கிய நடிகர்கள், மஜீத் முஹம்மதலி, கலீல், கபூர் றபீக், நிஸாம், சாகுல் ஹமீது, சாவன்னா, பதுருதீன், நிஸார், லேனாட், ஜேம்ஸ் யாழ்பகவான் போன்றவர்கள் எஸ்.எச்.எம். பாறுக் றாஸிக் போன்றோரும் நாடகக் கலைஞர்களாகத் திகழ்ந்தனர்.

கலைவாதி கலீல், மக்கள் காதர், றபீக் போன்றோர் இணைந்து மன்னார் வாசகர் வட்டம் என்றொரு அமைப்பை உருவாக்கி மன்னார் திறந்த வெளி அரங்கில் மாதா மாதம் பௌர்ணமி காலைவிழாக்களை மூன்று வருடங்களுக்கும் மேலாக தொடர்ச்சியாக நடத்தி வந்தனர். மன்னார்ப் பட்டின சபை இதற்கு நிதியுதவி வழங்கியது. பல நாடகக் கலைஞர்களும் இளங் கலைஞர்களும் அறிமுகமாகினர்.

குடியிருப்புப் பெண்பிள்ளைகள் பகிரங்க மேடைகளில் தோன்றுவ தில்லை. எனினும் பாடசாலை நிகழ்ச்சிகளில் கும்மி கோலாட்டம் போன்றவற்றில் பங்குபற்றியுள்ளதோடு நாடகங்களில் நடித்து மிருக்கிறன்றனர். ஷரீஅத்துக்குக் கட்டுப்பட்டு மேடைகளில் தோன்றுவதைத் தவிர்த்தனர். ஆயினும் பாட்டு, பேச்சு, விவாதப் போட்டிகளில் பங்கு கொண்டுள்ளனர்.

ஆண்கள், பெருநாள் விசேட நாட்களில் மேடை அமைத்துக் கலை நிகழ்ச்சிகளை நடாத்தி வந்துள்ளனர். வருடா வருடம் பாட்டுப்பாடல் என்றொரு புராண விரிவுரை நிகழ்ச்சியை இரண்டு மூன்று தினங்களுக்கு நடாத்தி வந்தனர்.

புகழ் பெற்ற கலைக்குடும்பங்கள் சில குடியிருப்பில் இருந்தன.

அவைகளில் ஒன்று தான் மதாறு முகைதீன் குடும்பமாகும். இவரது பிள்ளைகள் அனைவருமே பெரும்பாலும் கலைஞர்கள்தாம், விசேடமாக ஆண்பிள்ளைகள் வித்துவான் எம்.ஏ. றஹ்மான், புகழ் பெற்ற திரைப்பட ஒளிப்பதிவாளரும், டைரக்டருமான எம்.ஏ. கபூர், பல்துறைக் கலைஞன் கலைவாதி கலீல், மக்கள் காதர், நாடகக் கலைஞர் சாஹுல் ஹமீத் போன்ற அனைவருமே கலைஞர்கள்தாம். இதில் முதல் நால்வரும் அரச மட்டத்தில் பல்வேறு பட்டங்களைப் பெற்றவர்கள். கபூரும் கலைவாதியும் கலாபூஷண விருதுகளையும் பெற்றிருக்கின்றனர். இக்குடும்பத்தவரே 1970ல் மக்கள் என்றொரு சஞ்சிகையையும் நடாத்தினார்.

## நூல்கள் வெளியீடுகள்

குடியிருப்பு முஸ்லிம்கள் அதிகமதிகம் நூல்கள் வெளியிடாவிட்டாலும் பத்திரிகை சஞ்சிகைகளுக்கு நிறையவே எழுதி வருகின்றனர். சிலர் முன்னர் எழுதிவிட்டு தற்போது நிறுத்திக் கொண்டனர். வித்துவானும் கலைவாதியும் இன்றும் தொடர்ந்து எழுதுகின்றனர். சில புதியவர்களும் தோன்றியுள்ளனர்.

கபூர், மன்னார் ஷரீப், சமீஹா, செய்யது அப்துல் றகுமான், வித்துவான் றஹ்மான், எம்.ஏ.காதர், மக்கீனா றகுமான், பாத்திமா நஸ்வா, வாஹிதா றஹ்மான், அபூபக்கர் (மன்னார் உமா) போன்றோர் பத்திரிகை எழுத்தாளர்களே!. சிலர் வானொலிக் கலைஞர்களும் கூட. அபூபக்கரது மகன் அப்துல்லா என்பவர் வானொலி அறிவிப்பாளராக இருக்கிறார்.

மன்னார் ஷரீப் ஹிஜ்ரி 1400 என்ற நூலை வெளியிட்டார். வித்துவான் அவைகளில் ஒன்று தான் மதாறு முகைதீன் குடும்பமாகும். இவரது பிள்ளைகள் அனைவருமே பெரும்பாலும் கலைஞர்கள்தாம், விசேடமாக ஆண்பிள்ளைகள் வித்துவான் எம்.ஏ. றஹ்மான், புகழ் பெற்ற திரைப்பட ஒளிப்பதிவாளரும், டைரக்டருமான எம்.ஏ. கபூர், பல்துறைக் கலைஞன் கலைவாதி கலீல், மக்கள் காதர், நாடகக் கலைஞர் சாஹுல் ஹமீத் போன்ற அனைவருமே கலைஞர்கள்தாம். இதில் முதல் நால்வரும் அரச மட்டத்தில் பல்வேறு பட்டங்களைப் பெற்றவர்கள். கபூரும் கலைவாதியும் கலாபூஷண விருதுகளையும்

பெற்றிருக்கின்றனர். இக்குடும்பத்தவரே 1970ல் மக்கள் என்றொரு சஞ்சிகையையும் நடாத்தினார்.

## நூல்கள் வெளியீடுகள்

குடியிருப்பு முஸ்லிம்கள் அதிகமதிகம் நூல்கள் வெளியிடாவிட்டாலும் பத்திரிகை சஞ்சிகைகளுக்கு நிறையவே எழுதி வருகின்றனர். சிலர் முன்னர் எழுதிவிட்டு தற்போது நிறுத்திக் கொண்டனர். வித்துவானும் கலைவாதியும் இன்றும் தொடர்ந்து எழுதுகின்றனர். சில புதியவர்களும் தோன்றியுள்ளனர்.

கபூர், மன்னார் ஷரீப், சமீஹா, செய்யது அப்துல் றகுமான், வித்துவான் றஹ்மான், எம்.ஏ.காதர், மக்கீனா றகுமான், பாத்திமா நஸ்வா, வாஹிதா றஹ்மான், அபூபக்கர் (மன்னார் உமா) போன்றோர் பத்திரிகை எழுத்தாளர்களே!. சிலர் வானொலிக் கலைஞர்களும் கூட. அபூபக்கரது மகன் அப்துல்லா என்பவர் வானொலி அறிவிப்பாளராக இருக்கிறார்.

மன்னார் ஷரீப் ஹிஜ்ரி 1400 என்ற நூலை வெளியிட்டார். வித்துவான் றஹ்மான் குர்ஆன் குறள் என்ற நூலை வெளியிட்டிருக்கிறார். வஹீதா ரஹ்மான் பாலர் பாடலை என்ற நூலை வெளியிட்டிருக்கிறார். கலைவாதி ஐந்து நூற்களை வெளியிட்டிருக்கிருக்கிறார்.

புலம் பெயர்ந்ததன் காரணமாக மூர்வீதியின் இலக்கிய முயற்சிகள் தேக்கமடைந்துள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.

## அரசியற்துறையின் பங்களிப்புகள்

குடியிருப்பு முஸ்லிம்கள் சமூக சேவையுடன் அரசியலிலும் ஈடுபட்டு வந்துள்ளனர். உள்ளூர் அரசியல் மற்றும் பாராளுமன்ற அரசியல் போன்றவற்றிலும் அதித ஈடுபாடு காட்டியுள்ளனர்.

மன்னார் பட்டினசபைக்குரிய ஏழு வட்டாரங்களுள் ஒன்று குடியிருப்பாகும். பட்டினசபைத் தேர்தலில் குடியிருப்பு மக்களும் போட்டியிடுவர். டொக்டர் எம்.எஸ். ஹமீட், புரக்டர் எம்.எம். அபூதாஹிர், அபுல் காசிம் மரைக்கார், வர்த்தகர் எம்.எம். இப்றாஹீம், என்.எம்.ஏ. கபூர், அஸீஸ், எம்.எஸ்.ஏ. றஹீம் போன்றோர் உள்ளூர் ஆட்சித் தேர்தல்களில்

போட்டியிட்டிருக்கிறார்கள். இவர்களுள் டாக்டர் ஹமீத், அபூத்தாஹிர், அபுல்காசிம் மரைக்கார், இப்றாஹீம், றஹீம் போன்றவர்கள் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். பட்டின சபையின் உப தலைவராகவும் சிலர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிகாரம் அபுல்காசிம் மரைக்கார் பட்டினசபைத் தலைவராக இருந்த முதல் முஸ்லிமாவார்.

ஆனால் எம்.எஸ்.ஏ றஹீம் என்பவர்தான் பட்டின சபையின் செல்வாக்கு மிக்க முஸ்லிம் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. உப தலைவராக இருந்த இவர் நீண்ட காலம் தலைவராக இருந்தார். அழகும் கம்பீரமும் பொருந்திய றஹீம் நல்ல ஆட்சிப்புலமை மிக்கவர்.

இவரே மன்னார் மாவட்டத்தின் முதலாவது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவருக்கு முன்னர் எஸ்.எச். முஹம்மது போன்ற சில முஸ்லிம்கள் போட்டியிட்டாலும் அவர்கள் தோற்றுப் போனார்கள்.

அந்த நாட்களில் தொகுதிமுறைத் தேர்தலே இருந்தது. ஒரு தொகுதிக்கு ஒரு எம்.பி. பெரிய மாவட்டமாகிய மன்னாருக்கும் ஒரு எம்.பி. தான். கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையக் கொண்ட மன்னார் மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் எம்.பியாக வருவது நரிக்கொம்பு போன்றது. ஆயினும் எம்.எஸ்.ஏ. றகீம் எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்டார். கிறிஸ்தவ மக்கள் ஒரு சாராரின் ஆதரவைப் பெற்றே அவர் எம்.பி.யாக வரமுடிந்தது. அக்காலையில் இது ஒரு சாதனையாகப்பட்டது.

மன்னாரின் முதலாவது முஸ்லிம் எம்.பி குடியிருப்பினைச் சேர்ந்த ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. எம்.எஸ்.ஏ றஹீம் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வென்றார். ஆனால் ஆட்சி பீடமேறியதோ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி. றஹீம் எதிர்க்கட்சியில் இருந்தும்கூட மன்னாருக்குப் பல சேவைகள் புரிந்தார். கே.எம்.ஏ. அக்பர், எஸ்.எச்.எம். றஷீட் போன்றோரும் அரசியலில் ஈடுபட்டனர். மன்னார் தேர்தல் தொகுதி தமிழரசுக் கட்சியின் கோட்டை என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டுத் தூதுவராக நியமிக்கப்பட்ட முதலாவது மன்னார் மகனும் இவர்தான் என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. வன்னித் தேர்தல் தொகுதி அமைக்கப்பட்டதும்

எஸ்.எம். அபூபக்கர், என்.எம். ஐயூப், நூர்தீன் மசூர், றிஷாட் பதியுதீன் போன்றோர் பாராளுமன்ற உறுப்பினர்களாயினர். ஆனால் இவர்கள் எவரும் குடியிருப்பைச் சார்ந்தவர்களல்லர்.

இலங்கை வெளிநாட்டுச் சேவையில் (SLOS) சித்தியடைந்து தற்போது தூதுவராக இருக்கும் சிக்கந்தர் என்பவர் குடியிருப்பு அல்லாவிடினும் 100 மீற்றர் தள்ளியுள்ள உப்புக்குளத்தில் பிறந்தவர். இவரது உறவினர்கள் குடியிருப்பில் உளர். GSS தாஜுதீன் எனபவரும் தேர்தலில் போட்டியிட்டார். இவர் முஸ்லிம் காங்கிரஸ் 'பொலிட் பீரோ' அங்கத்தவராவார்.

## விளையாட்டுத் துறை

குடியிருப்பு இளைஞர்கள் சிறந்த விளையாட்டு வீரர்களாகத் திகழ்ந்தார்கள். இன்றும் திகழ்ந்து வருகிறார்கள். விளையாட்டுப் போட்டிகள் (Games) மற்றும் தடகளப் போட்டிகளில் (Athletics) சிறந்த வீரர்களாகவும் திகழ்ந்து வந்திருக்கிறார்கள். பல பரிசில்கள் பெற்றுள்ளார்கள். மன்னார் மாவட்ட ரீதியிலும் மாகாண ரீதியிலும் அகில இலங்கை ரீதியாகவும் பல சாதனைகள் நிகழ்த்தி யிருக்கிறார்கள்.

விளையாட்டுக்களைப் பொறுத்த அளவில் கரப்பந்து, காற்பந்து, டெனிஸ், டேபில் டெனிஸ், கிளித்தட்டு, கெரம் போன்ற போட்டிகளில் மிகச் சிறந்த வீரர்கள் எம்மத்தியில் இருந்தனர்.

மூர்வீதி இளைஞர்கள் தனியாக விளையாட்டுக்கழகங்களை அமைத்துப் போட்டியிடாவிட்டாலும் ஏனைய விளையாட்டுக்குழுவில் அங்கத்தவர்களாகி பிரதான விளையாட்டு வீரர்களாகத் திகழ்ந்தனர். கரப்பந்தாட்டத்தில் (Set-up-Game) புகழ் பெற்றுத் திகழ்ந்த மன்னார் மாவட்டச் சம்பியன்களான தாராபுரம் விளையாட்டுக் கழகத்தில் குடியிருப்பைச் சேர்ந்த இரண்டு சிறந்த வீரர்கள் அங்கத்தவர்களாக இருந்தனர். செய்யது அப்துல் றஹ்மான் (சேத்தரமான்), காசிம் ஸாஹிபு (காசிஞ்சா) ஆகிய இருவருமே குடியிருப்பைச் சேர்ந்த சிறந்த வீரர்கள். இருவரும் ஆசிரியர்கள். அதிபரான எம்.எம். அப்துல் காதர், ஆசிரியரான பீ. மஹ்மூத், மாவட்ட அமைச்சின் இணைப்பு அதிகாரியான எஸ்.எச்.ஏ. ஸமத், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்

மனேஜராகப் பணியாற்றிய ஏ.ஆர்.எம். பாறூக், எஸ்.எச்.எம். லாபிர் ஆகியோர் சிறந்த டெனிஸ் வீரர்களாவார்கள். ஆசிரியரான என்.எஸ். அப்துல் காதர் சிங்கர் கொம்பனியில் பணியாற்றிய மஸ்தான் சாஹிபு போன்றோர் சிறந்த 'கரம்' வீரர்களாவார்கள். எஸ்.எம். அன்சார் ஒரு பல்துறை வீரராவார்.

கிளித்தட்டு போன்ற கிராமிய விளையாட்டுக்களில் இளைஞர்கள் மட்டுமல்ல முதியோரும் சிறந்து விளங்கினர். மற்றொரு கிராமிய விளையாட்டு கிட்டிக்கம்பு அடித்தல். இவ்விளையாட்டு குடியிருப்பில் காணப்பட்டது.

கரப்பந்தைப் போலவே காற்பந்தாட்டத்திலும் தேர்ச்சி மிக்க இளைஞர்கள் மூர்வீதியில் வாழ்ந்தனர். இவர்கள் பாடசாலை அணி, மற்றும் குடியிருப்பு சாராத அணிகளில் சேர்ந்து விளையாடினர். காசீம் சாஹிபு செய்யது அப்துல் றஹுமான், அப்துல் மனார் (கோல் கீப்பர்) சிறந்த வீரர்களாவர்.

குடியிருப்பில் எம்.எஸ்.ஏ. சரூர் என்பவர் கரப்பந்து, காற்பந்து, கூடைப்பந்து போன்றவற்றிலும் தடகள விளையாட்டிலும் சிறந்து விளங்கினார். இவர் உடற்கல்வித்துறை ஆசிரியராகவும் கல்வியதிகாரி யாகவும் அதிபராகவும் கடமையாற்றினார். சென்னை Y.M.C.A. யின் ஆணழகனாகத் திகழ்ந்தார் (Mr. Madras). அவ்வாறே எச்.எம். அன்சார் என்பவரும் மன்னார் ஆணழகனாகத் தெரிவானார்.

தேசிய சேமிப்பு வங்கியின் தலைமையகத்தில் ஓர் உயர் அதிகாரியாகப் பணியாற்றிய, ஏ.ஸீ.எம். றிஸான் சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்ததுடன் யாழ் அணித்தலைவராகவும் பணியாற்றிார்.

மர்ஹும் அல்லாபிச்சை, சிறந்த தடைகள வீரராகவும், விளையாட்டு வீரராகவும் திகழ்ந்தார். இவர் அல்-அஸ்ஹறில் பயின்று கொண்டிருந்த காலத்தில் விளையாட்டுத் துறையில் பல சாதனைகளை ஏற்படுத்தினார். கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் பிரதி அதிபராகவும் சிலகாலம் அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

மன்னார் பட்டினத்து முஸ்லிம்கள் விசேடமாக மூர்வீதியில் வாழ்ந்தோர் புலம் பெயர்ந்த பின்னர் கல்வி மற்றும் அரச தொழில்சார் துறைகளில் மிகவும் பின் தங்கியுள்ளனர் என்றுதான் கூற வேண்டும். டாக்டர்கள்,

பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், பல்வேறு நிறுவனங்களின் பணிப்பாளர்கள், ஆணையாளர்கள் போன்ற உயர் பதவி வகிப்போர் மிக அரிதாகவே உள்ளனர். சாதாரணமாக பாடசாலை, கல்லூரி அதிபர்களும் ஆசிரியர்களும் கூட மிகக் குறைந்தே காணப் படுகின்றனர். பாடசாலை அதிபர்களாக மூர்வீதியைச் சேர்ந்த மூவரே (அஹ்மது யாஸீன், முஹம்மது கலீல், திருமதி ரெல்ஸிலீன் ஹஸ்மின்) மன்னாருக்கு வெளியே பணியாற்றி வருகின்றனர். பணிப்பாளர் களாகவோ, ஆணையாளர்களாகவோ தற்போது எவரும் இல்லை.

வர்த்தகத் துறையிலும் முன்னேற்றமில்லை. குடியிருப்பின் புகழ் பெற்ற வியாபாரிகள் சிலர் தங்களது வர்த்தகத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளவில்லை. குறிப்பிடத்தக்க பெரிய வர்த்தக நிறுவனங்களோ, கட்டமைப்புகளோ மூர்வீதி முஸ்லிம்களிடம் இல்லை. (ஆனால் மன்னாரைச் சேர்ந்த ஏனைய முஸ்லிம்களிடம் பெரிய வர்த்தக நிறுவனங்கள் உள) ஆத்மீகத்துறையிலும் ஏற்றமில்லை. அதிகமதிகம் மௌலவிகளும் மௌலவியாக்களும் உருவாகவில்லை.

## தற்போதைய நிலை

ஆண்டுகள் பதினைந்து ஆகிவிட்டன, மன்னார் முஸ்லிம்கள் விரட்டப்பட்டு, தற்போது குடியிருப்பு முஸ்லிம்கள், புத்தளம், கல்பிட்டி, பாணந்துறை, வத்தளை, குருநாகல், கண்டி, கம்பளை, திஹாரி, கொழும்பு போன்ற இடங்களில் வசித்து வருகிறார்கள். சிலர் நண்பர், உறவினர் இல்லங்களிலும் சிலர் வாடகை வீடுகளிலும் ஒரு சிலர் சொந்த இல்லங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். வெகு சொற்ப மானோர் மன்னார் பட்டினத்தில் தங்களது சொந்த மண்ணில் வாழ்ந்து வருகின்றனர். அப்துல் காதர் குடும்பம், இக்பால் குடும்பம், ஃபசல் குடும்பம், ஜஹுபர் குடும்பம் போன்ற ஒரு சில குடும்பங்களே மன்னாரில் வசிக்கின்றன.

பெரும்பாலானோர் (கிட்டதட்ட 75 வீதமானோர்) தங்கள் இல்லங் களையும் வயல் மற்றும் வெற்றுக் காணிகளையும் விற்றுவிட்டனர். உண்மையில் மன்னார் குடியிருப்பை (மூர்வீதியை) மூர்வீதி என்று கூறமுடியாதுள்ளது. முஸ்லிம் அல்லாதோர், பெரும் நிலப்பரப்பு மற்றும்

வன்னிப் பிரதேசத்திலே வசித்தோர் குடியிருப்பு வீடுகளை விலைக்கு வாங்கியோ அல்லது வாடகைக்குப் பெற்றோ வாழ்ந்து வருகின்றனர். நூற்றுக்கு நூறு முஸ்லிம்கள் வாழ்ந்து வந்த மூர்வீதியில் தற்போது பத்து வீதத்துக்கும் குறைவானோரே வாழ்ந்து வருவது கவலைக்குரியதாகும். மூர் வீதி முஸ்லிம்களின் நிலையை காலம் தான் கணிக்கும்.

# கடலும் வயலும் கலை நயம் பயிலும் கவின் மிகு கிராமம் விடத்தல் தீவு

- பாத்திமா றம்ஸானி -

மன்னார் மானிலத்தின் கிழக்கு மூலையில் சங்குப்பிட்டி - மன்னார் நெடுஞ்சாலையின் பதினைந்தாவது மைல் கல்லில் இயற்கை எழில் சிந்தும் இரம்மியமான சுற்றாடலிலே அமைந்துள்ள அழகிய கிராமம் விடத்தல்தீவு.

மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலே முல்லை, மருதம், நெய்தல் என முன்னிலமும், முஸ்லிம், இந்து, கிறிஸ்தவம் என்ற முச்சாதிச் சனங்களும் செறிந்து வாழும் இந்த ஊர் சுமார் இருநூறு வருடங்களுக்கு மேலான வரலாற்றுச் சுவடுகளைக் கொண்ட புராதன முஸ்லிம் கிராமமாகும்.

பெருங்களிப்பற்று என்ற இயற்கைப் பெயரைக் கொண்ட இக்கிராமம் பெயரளவிலே தீவு எனக் கொள்ளப்பட்டாலும் பிரதான நிலப்பரப்பின் ஒரு பகுதி என்பதே சரியானது. வடக்கு தெற்கு ஓரங்களிலே உள்ள பருவகாலச் சிற்றாறுகளின் சுழிமுகத்திலே அமைவு கொண்டதாலே கடல் வெள்ளப் பெருக்குக்காலங்களிலே கிராமத்தின் இரு மருங்கு ஆறுகளும் நீர் நிரம்பி ஜலக்கிரீடை செய்வதால், மேலெழுந்த பார்வைக்கு இக் கிராமம் ஒரு சிறு தீவைப் போல காட்சிதரும். இது இக்கிராமத்தின் அழகிற்கு இயற்கை தந்த கொடையாகும். மேற்குப் புறத்திலே இந்து மா கடலின் ஆழிப்பேரலைகள்

ஆரோகணம் செய்து நீர்ப்பாவாடை விரித்து ஒய்யாரமாய் ஓய்வுகொள்ளும் கழிமுகம் உள்ளது. இதனால் கடல் பொங்கினால் கிராமம் தீவாகும். வற்றினால் ஊராகும்.

**சரித்திரச் சுவடுகள்:**

சுமார் 250 ஏக்கர் குடியிருப்புப் பரப்பையும் நான்கு கிலோ மீட்டர் சுற்றளவையும் கொண்ட இக்கிராமம் நன்னீர்ச் சுனைகளுடன் செழிப்புற்று விளங்கியது. ஊருக்குள்ளே விவசாயம் செய்யப்பட்டது. குளம், குட்டை, கேணி, மோட்டை போன்றன எப்போதும் நிரம்பி வழிந்து சோலை நிலமாய்க் குளிர்மை வீசியது. ஆனாலும் காலத்தின் கோலம் அண்மையில் நமது நாட்டைக் கபளீகரம் செய்த சுனாமியைப் போன்றதொரு பாரிய கடல் கொந்தளிப்பு 1964களிலே இப்பகுதியிலே ஏற்பட்டுக் கடல் அள்ளிப்போன கிராமங்களிலே விடத்தல் தீவும் ஒன்றாகும். அந்த ஆழிப்பேரலையின் அனர்த்தத்திலே இக்கிராமம் ஜலசமாதிகொண்டதால், யாவும் அழிந்து போயின. அதிலிருந்து இக்கிராமத்திலிருந்த சகல நன்னீர் நிலைகளும் விளை நிலங்களும் மண்ணும் மனையும் உப்புப்பட்டு உவர்நிலமானது. அதிலிருந்து இக்கிராமத்து மண், மகிமை இழந்து உவர்நிலமாகி மக்கிப்போனது.

விடத்தல் தீவின் முந்தானை முக தலைப்பிலே அமைந்துள்ளது பள்ளமடுக்குளம். மேலே குறிப்பிட்ட ஆழி அனர்த்தத்தின் பிற்பாடு இக்கிராமத்து மக்களின் ஜீவநாடியாகத் திகழ்ந்தது பள்ளமடுக் குளம்தான். சுற்றிவர மதுரை, இத்தி, அத்தி மரங்கள் விண்முட்ட உயர்ந்து நிற்க அதன் குளிர்மையிலே எப்போதும் 'ஜில்' லென்றிருக்கும் குளத்து நீர், நீராட உடலுக்கும் மனதுக்கும் தென்புதரும். குளக்கரைகளிலே அமைந்துள்ள நாலைந்து கிணறுகளிலிருந்து பெறப்படும் மதுரமான நீர்தான் கிராமத்தவர்களின் குடிநீராகும். இந்த நீரைப் பெறுவதற்காகப் பெண்கள் தலையிலும் இடுப்பிலும் குடங்களைச் சுமந்தவாறு காலையும், மாலையும் சுமார் ஒரு கிலோ தொலைவிலுள்ள பள்ளமடுக்குளத்துக்குக் கால்நடையாய் வந்து அள்ளிச் செல்ல வேண்டும். இது இக்கிராமத்தவர்களுக்கு ஓர் அழகான தலைவிதி. அதுவே இனிமையானதொரு பொழுது போக்காகும்.

இக்கிராமத்தைச் சுற்றிச்சூழ பல சிற்றூர்கள் உள்ளன. கிழக்கே பெரியமடு, தெற்கே கோயில்குளம், குருந்தன் குளம், இலுப்பைக் கடவை, சவரிகுளம், தட்டான் பிட்டி மற்றும் வடக்கே விளாங்குடி, கட்டைக்காடு, மினுக்கன், ஆண்டான்குளம், வட்டக்கண்டல், பள்ளிவாசல்பிட்டி, மானையங்குளம், பறைய குளம் போன்ற பல குக்கிராமங்களுக்கெல்லாம் விடத்தல் தீவுதான் இராஜதானி. 'தாய்வீடு' என்றும் சொல்லலாம். விடத்தைத்தீவு, விடத்தல்தீவு, விடலைத்தீவு, வெடித்தீவு எனப் பல இடு பெயர்கள் இக்கிராமத்திற்கு இருந்தாலும் போதிய சான்றுகள் இல்லை. தீவு போன்ற அமைப்பைக் கொண்ட இக்கிராமத்திலே அதிக அளவு விடத்தை மரங்கள் காணப்பட்டதாகவும் அம்மரங்கள் விறகு அடுப்பு எரிக்கப்பெருமளவு பயன்படுத்தப்பட்டு அழிந்து போனதாயும், இதனை ஆதாரமாக வைத்தே விடத்தைத் தீவு என்ற பெயர் வந்திருக்கலாம், பிற்பாட இச்சொல் திரிவு அடைந்து விடத்தல் தீவு என மாறியிருக்காலம் என்பது இக்கிராமத்திலே வாழ்ந்து மறைந்த பெரியார், தமிழறிஞர் காஸீம் புலவர், ஆலீம் அவர்களது நூற்குறிப்புக்கள் மற்றும் புதினத்தாள் கட்டுரைகளிலிருந்து அறிய முடிகின்றது.

இக்கிராமத்து முஸ்லிம்களின் வரலாறு இந்திய வம்சாவழியிலிருந்தே தொடங்கியுள்ளது. பிற்பாடு அறபிகளின் வருகை மற்றும் வணிகத் தொடர்பிலே யாழ்ப்பாணத்திலே வாழ்ந்த 'சோனகர்களின்' வருகையும் தொடர்பும், ஊர்மனை உருவாக அனுகூலங்களாக அமைந்தன என ஊகிக்கமுடிகிறது. இங்கே உள்ள பெரிய பள்ளிவாசல் வளாகத்திலே சமாதி கொண்டுள்ள ஹஸ்ரத் மௌலானா அப்பா மற்றும் அவரது சீடர்கள் அல்லது சகோதரர்கள் எனப்படும் ரஹ்மான், கான் முகம்மது, கப்புடையார், செய்யதுக்குட்டி, கவ்னியப்பா போன்ற மார்க்க ஞானிகள் அவ்லியாத்தகைமை கொண்ட பல பெரியார்கள் இக்கிராமத்தினுள்ளும் அதன் எல்லைப்புறம், சுற்றுப்புறம், மற்றும் கானகங்களிலேயும் அடங்கப்பெற்றதிலிருந்து இப்பெரியார்கள் இந்திய முஸ்லிம்களாக கீழைக்கரை தொண்டி காயல்பட்டினம் போன்ற இடங்களிலிருந்து இங்கு வந்து குடியேறினார்கள் என்றும் அப்போது இப்பிரதேசங்களிலே நாடோடிகளாக வாழ்ந்த 'திமிலைச் சாதிப்' பெண்களை 'மஹர்' கொடுத்து மதம் மாற்றித் திருமணம் செய்து வாழ்ந்தார்கள் என்றும், பல உரிமை கோரப்படாத தகவல்கள் மூலம் அறியமுடிகிறது. அவற்றினை ஏற்கத்தக்க சான்றுகளாகவும் கொள்ளலாம்.

இது தவிர யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள் சிலர் புகையிலை வியாபாரிகளாக வந்துலாவிய குறிப்புக்களும் உள்ளன. இக்கிராமத் திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள மணற்பாங்கான இடங்களிலே சுருட்டுப் புகையிலைக்குப் புகையூட்டிப் பதப்படுத்தும் கட்டிடமொன்று பள்ளமடுச்சந்தி வாடியடியிலே இருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால் யாழ்ப்பாண முஸ்லிம்களின் தொடர்பு இப்பகுதிகளிலே காணப்பட்டன. காலம் சென்ற உயர்நீதியரசர் அப்துல்காதர் அவர்களின் தந்தை மற்றும் உறவினர்கள் இது தொடர்பான நடவடிக்கைகளிலே அதிகம் ஈடுபட்டுள்ளனர். பல யாழ் முஸ்லிம்கள் இக்கிராமத்திலே திருமண பந்தத்திலே இணைந்து கொண்டனர். இவர்களது பரம்பரையினர் இன்னமும் கூட இக்கிராமத்திலே வாழுகின்றனர்.

தவிர, அராபிய வர்த்தகர்களின் நடமாட்டமும் இப்பகுதிகளிலே பரவலாக இருந்துள்ளது. ஆனால் அது பற்றிய சரியான தகவல்கள் இல்லை. எனினும் அராபியர்கள் தமது ஒட்டகங்களுக்கு உணவாகக் கொடுக்கும் பெருக்கு மரங்களிலே ஒன்று வாடியடியிலும் மற்றொன்று பாப்பாமோட்டையடியிலும் வளர்ந்து நிற்பதால் அராபியர்கள் இப்பகுதிகளிலே குடியிருந்தமையை உணர முடிகின்றது. ஆனாலும் அவர்களது குடும்ப வரலாறு இல்லை.

சங்கு, முத்துக்குளித்தல், கடலில் மிதக்கும் நாவடம்போன்ற வாசனைப் பொருட்கள் மற்றும் கடல்படு திரவியங்களைச் சேர்த்தல், மிருக வேட்டையாடுதல் போன்றவற்றிலே இப்பகுதி முஸ்லிம்கள் அதிகளவு ஈடுபாடு கொண்டவர்களாக விளங்கினர். இப்படியே இக்கிராமத்தின் பூர்வீக வரலாறு ஆரம்பமாகியது.

### பொருளாதாரமும் வாழ்க்கைத்தரமும்.

மீன் வளம் மிக்க இக்கிராமத்துக் கடற்பரப்பிலே முஸ்லிம்களுடன் றோமன் கத்தோலிக்கர்களும் மீன்பிடித்தொழிலிலே ஈடுபட்டனர். பள்ளிமுனை வங்காலை போன்ற கிறிஸ்தவக்கிராமத்தவர்களும் திருகேதீஸ்வரம், பலவமுனைக் கரையோரமாகவும், தட்டாம்பிட்டி, இலுப்பைக் கடவை ஓரமாகவும் வியாபித்த மீன்பிடித்தொழில், விடத்தல் தீவுக் கடற்கரைப்பிட்டியே, சந்தைப்படுத்தும் தலமாகவும். ஏற்றுமதித் துறைமுகமாகவும் மாறியது. கருவாடு பதனிடுதல் முக்கியத்துவம்

பெற்றதால் மீன்வாடிகள் உருவாகின. பிற்பாடு சம்மாட்டிகள் எனப்படும் மீன் முதலாளிமார்களின் வருகையும் அதிகரித்ததால் குடியிருப்புக்கள் உருவாகின. சன நடமாட்டம் அதிகரித்தது. 'முக்குகன்' எனும் முக்குவர் பரம்பரை கடற்றொழிலுடன் சம்பந்தப்பட்டதாக வியாபித்தது. இம்மக்கள் கிறிஸ்தவர்களாக இருந்ததால் கடற்கரையை அண்டிய பகுதிகளிலே குடியேறத்தொடங்கினர். வடலிப்பிட்டியை மையமாகக் கொண்டு செபமாலை மாதா கோவில் உருவானது. பிற்பாடு அந்தோனிக் கோவில் கட்டப்பட்டது.

முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் இணைந்து தொழிலிலே ஈடுபட்டனர். பல இந்திய முஸ்லிம்கள் சுழியோடுவதிலே வல்லவர்களாக விளங்கியதாலே முஸ்லிம் கிறிஸ்தவ உறவு தொழில் ரீதியிலே இறுக்கமடைந்து இன ஐக்கியமாக மாறியது. முஸ்லிம்களிடம் வியாபாரத்திறனும், வர்த்தக நுணுக்கமும் இருந்ததாலே இன, மத, சாதி பேதமில்லாத ஐக்கியத்துள் இக்கிராமத்து மக்கள் ஒன்றுபட்டனர். ஒருவித புரிந்துணர்வின் நிமித்தம் கடற்கரையை அண்டிய பகுதிகளிலே கிறிஸ்தவர்களும் கிராமத்தின் முற்பகுதியிலே முஸ்லிம்களும் தமது குடியிருப்புக்களை உருவாக்கினர். சிறிது காலத்துள் கடைத்தெருவை அண்டிய பகுதியிலே, சில நாவிதர்கள், சலவைத்தொழிலாளர்கள், மற்றும் நம்பூதிரிகள், புரோகிதர்கள் தமது தொழிலின் நிமித்தம் வந்து குடியேறினர். இவர்கள் அனைவரும் இந்துக்களாக இருந்தமையினால் கடற்கரைப்பிட்டி மாதாகோவிலருகே பிள்ளையார் சிலைவைத்து வழிபட்டனர். பிற்பாடு அவ்விடத்திலேயே, பிள்ளையார் கோவில் கட்டி தமது இருப்பிடங்களை நிரந்தரமாக்கிக் கொண்டனர்.

இதன் பிற்பாடு இக்கிராமத்து முஸ்லிம் மக்கள் காடு வெட்டிக் களனிகளை உருவாக்கி வேளாண்மை, சேனைப்பயிர், புலவு, தோட்டம் போன்றவற்றிலே ஆர்வம் காட்டினர். மிகச் சிலர் வியாபாரிகளாயினர். வேறு சிலர் கால்நடை வளர்ப்பிலே ஆர்வம் காட்டினர்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலே இக்கிராம மக்கள் தமது சொந்த நிலமான சுமார் 3500 ஏக்கரிலே விவசாயம் செய்யக்கூடிய ஆற்றலும் வல்லமையும் பெற்றனர். மும்மாரி, முப்போகம் என சுழற்சி முறையிலே, விவசாயம் பண்ணினர். வானம்பார்த்த செய்கை காட்டாறுகளை மறித்தல், மற்றும் குளங்களை உருவாக்கி நீர்ப் பாசனம் பெற்றதாலே, ஆர்வமும் இலாபமும் அவர்களை வசீகரித்தது.

இதனாலே மற்றைய தொழில்களைக் கைவிட்டு பயிர்ச்செய்கையே, உயிர்ச்செய்கையாக எண்ணி நடந்தனர். இதனாலே இக்கிராம முஸ்லிம்கள் 'விவசாயி' என முத்திரை குத்திக்கொண்டனர்.

இப்போது விடத்தல்தீவுக் கிராமம் சனத் தொகையால் மிகை நிரம்பி வழிந்ததாலே 1956ம் ஆண்டளவில் இக்கிராமத்திற்குத் தென்கிழக்கிலே எட்டாவது மைல் கல்லுக்கப்பால், பெரியமடு என்ற செம்மண் வளமிக்க இடமொன்றிலே, குடியேற்றத்திட்டமொன்று உருவாக்கப் பட்டது. பாரிய குளம் கட்டப்பட்டது. வீடமைப்புக்கள், காணிகள் மற்றும் விவசாய ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன. இங்கே விடத்தல் தீவிலிருந்து மூன்றிலொரு பகுதியினர் சுயவிருப்பின் பேரிலே குடியேற்றப்பட்டனர். பெரிய மடுவுக்கும் விடத்தல் தீவுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பிலேயே விவசாயக் காணிகள் அனைத்தும் இருப்பதால், அவை இப்போது மென்மேலும் விருத்தி கண்டன.

தவிர, கல்வியைப் பொறுத்தவரை இக்கிராமத்தின் ஆரம்பகாலத்திலே பாடசாலைகள் இருக்கவில்லை. பிற்பாடு கிறிஸ்தவ மிஷனறி களினாலே ஒரு ஆரம்பப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு "விரும்பினால் படியுங்கள்" என்ற கோட்பாட்டிலே இத்திண்ணைப் பள்ளியில் சில முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் படித்தனர். பிற்பாடு முஸ்லிம் பகுதியிலே ஐந்தாம் வகுப்புவரை ஒரு பாடசாலை உருவானது. பிற்பாடு இப்பாடசாலை அபிவிருத்தியடைந்து மகா வித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டது. சகல இனப்பிள்ளைகளும், அயலூர்ப் பிள்ளைகளும் இங்கே கல்வி பயின்றனர். இதிலே படித்த மாணவர்கள் பலர் ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும் இப்பாடசாலையிலே பணிபுரிந்தது அதன் வளர்ச்சிக்கும் புகழுக்கும் ஒரு சிறப்பம்சமாகும். பிற்பாடு அலிகார் வித்தியாலயம் என இப்பாடசாலை புகழ்பெற்றது.

இக்கிராமத்திலேயே ஆண்களும் பெண்களும் படித்து உயர்வடைந்தது சிலாகிக்கத்தக்கது. வீட்டுக்கொரு அரசாங்க உத்தியோகத்தர் என்று சொல்லுமளவுக்கு இக்கிராமத்துக் கல்வித்தரம் சிறப்புற்றது. சகல துறைகளிலும் இக்கிராமத்து மக்கள் உயர்வும், மேன்மையும் பெற்றுள்ளனர். எல்லோரும் படித்தவர்கள் என்ற பெருமையும் இக்கிராமத்திற்குரியதாகும்.

**கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் :**

இலங்கையைப் பொறுத்தவரை இயற்கையாகவே அமைந்த இன ஒற்றுமைக்கான எழுச்சிக்கிராமம் விடத்தல்தீவு என்பதிலே தனித்துவம் மிக்க பெருமை உண்டு. சிறிய ஊர், சுற்றிவரக் கடல், தலை உச்சி வகிந்தெடுத்தாற்போல ஊருக்கு நடுவே ஒரேயொரு பாதை மட்டுமே உண்டு. போக்குவரத்துக்குரிய அப்பாதையாலேயே திரும்பி வரவேண்டும். கிராமத்தின் முற்பகுதியிலே முஸ்லிம்கள். நடுவே இந்துக்கள். பிற்பகுதியிலே கிறிஸ்தவர்கள். இது காலத்தின் ஏற்பாடு.

இவர்கள் அனைவருக்கும் ஒரே பாதை, குளிப்பதற்கு ஒரே குளம், குடிப்பதற்கும் ஒரே இடத்திலுள்ள கிணறுகள். இயற்கையின் இந்த ஏற்பாடு இவ்வூர் மக்களை இயல்பாகவே ஒற்றுமை, அன்னியோன்யம், இன சௌஜன்யம் போன்ற நற்பண்புகளுடன் ஆண்டாண்டுகாலம் வாழவைத்தது.

ஆதியிலே இங்கு குடியேறி வாழ்ந்த முஸ்லிம்கள் கடல் தொழில் புரிந்து வாழ்ந்தவரெனினும் கிறிஸ்தவ மக்கள் ஜீவனோபாயத்திற்காக இங்குவந்த போது கடற்தொழிலை அவர்களுக்குக் கொடுத்து விட்டு முஸ்லிம்கள் விவசாயத்திலே ஈடுபட்டனர். எல்லோருக்கும் பொதுவான ஒரே குளத்திலே சாதி, சமய ஏற்றத்தாழ்வின்றிக் குளித்தனர். ஒரே கிணற்று நீரை எல்லோரும் அள்ளிக்குடித்தனர். ஒருவர் மற்றவரின் சுக துக்கங்களிலே சரிசமமாகப் பங்குபற்றினர். ஒரே பாடசாலையிலே அனைத்துத் தரப்பினரும் ஒன்றாகப் படித்து உயர்ந்தனர். முஸ்லிம்களின் விவசாய தரிசு நிலங்களை இலவசக் குத்தகைக்கு எடுத்து தமிழர்கள் விவசாயம் செய்தனர்.

இவற்றிற்கும் மேலாக, இக்கிராமத்திலே பெயரும் புகழுடனும் வாழ்ந்து மறைந்த பெரியார் 'தமிழ்முழக்கம்' முகம்மது காசீம், ஆலீம், புலவர் நாடறிந்த தமிழறிஞர். இவரிடம் எல்லா மதஞானங்களும் நிறைந்திருந்தன. பள்ளிவாசலிலே மார்க்க உபன்னியாசம் செய்வார். மேடைகளிலே தமிழ்முழக்கம் புரிவார். இந்துக் கோவில்களிலும் சைவ விழாக்களிலும் இந்துமதச் சிறப்பு, அதன் தத்துவ தாத்பரியங்களை விரிவுரை செய்வார். வேதக்கோவில்களிலும் வேதாகமம், பைபிள், புதிய, பழைய ஏற்பாடுகளிலே சொற்பெருக் காற்றுவார். இவ்வாறு ஒரு முஸ்லிம் குடிமகன் எல்லா மார்க் கங்களிலும் ஞானம் பெற்று அதனை எல்லா இனத்தவர்கள்

மத்தியிலும் போதனை செய்து, எல்லா மக்கள் மனங்களிலும் நீங்காத நினைவாக நின்று நிலைத்து எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் மதம், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று மக்கள் மனங்களிலே, இன ஒற்றுமைக்கு வித்திட்டு மறைந்தது, இக்கிராமத்து மக்கள் மனங்களிலே நீங்காத நினைவுகளாகும். இவ்வாறு ஒற்றுமைக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த முன்னோடிக் கிராமம் விடத்தல் தீவு என்பது மிகையல்ல.

### பாரம்பரியங்கள்

பல நூதனமான பழக்க வழக்கங்கள் இக்கிராமத்திலும் அதை யொட்டிய பகுதிகளிலும் வழக்கத்திலிருந்தன. இதற்கு இரண்டு காரணங்களை முன்வைக்கலாம். இந்தியாவுடனான மக்கள் தொடர்பும், யாழ்ப்பாண மக்களது குறிப்பாக இந்து மக்களது பழக்க முறைகள் இவைகள் ஒன்றுகலந்து இக்கிராம மக்களிடையே புதிய நடைமுறைகளை உருவாக்கின. அவற்றில் பல இப்போது வழக்கொழிந்தபோதும் சில விஷயங்கள் இன்றுவரை நடைபெறு வனவாக உள்ளன.

'கந்தூரி' எனும் அன்னதானம் வழங்குதல் இப்பகுதியிலே ஒலியுல்லா பெயரிலே வருடா வருடம் பள்ளியில் பெரிய கந்தூரி நடைபெறும். விவசாயிகள் அரிசி கொண்டுவந்து குவிப்பர். தோட்டக்காரர்கள் வாழைக்காய், பூசணிக்காய், தேங்காய் கொண்டுவந்து கொடுப்பர். மாட்டுப்பட்டி வைத்திருப்போர் நெய், தென்னந்தோட்டக்காரர் தேங்காய் என ஒவ்வொருவரும் ஓரிருமாதங்களுக்கு முன்பிருந்தே இதற்கான ஏற்பாடுகளைச் செய்து அத்தனை பொருட்களும் குறித்த தினத்திலே, பள்ளி மதுரசாவுக்கு வந்து சேரும். துவக்கு வைத்திருப்போர் ஒரு வாரத்துக்கு முன்னரே காடுகளுக்குப் போய் விடுதிபோட்டுத்தங்கி மான், மரை வேட்டையாடி காவு போட்டுத்தூக்கிவருவர். உள்ளூர், அயலூர் மக்கள் நேர்ச்சை செய்து, வளர்த்த ஆடு, மாடு, கோழிகளெல்லாம் கந்தூரி தினம் வந்து குவிந்துவிடும்.

கந்தூரி வேலைகள் செய்ய இந்து, கிறிஸ்தவ மக்கள் முண்டியடித்து முன்னுக்கு நிற்பர். அயலூர் மக்கள் வண்டில்கள், சைக்கிள்களில் சாரை சாரையாக கந்தூரி வாங்க வருவர். பாரிய கூடாரங்களிலே 'கமகம' வாசனையுடன் நெய்ச்சோறு காச்சி, மரக்கறி, இறைச்சிக்கறி, சர்க்கரைப்புக்கை எனப் பிரமாதமான சமையல் செய்யப்பட்டு

எல்லோருக்கும் ஏராளம் தாராளமாக வழங்கப்படும். வண்டில்களிலே, சோறுகறிகளை ஏற்றி ஒவ்வொரு தெருத்தெருவாக, வீடுவீடாகக் கொண்டு போய்க்கொடுப்பர். கந்தூரியில் எஞ்சிய பொருட்களை ஏலம் போட்டு விற்பர். பாட்டுப்பாடுதல், கொடி ஏற்றுதல் போன்றவை பக்தி சிரத்தையுடன் கையாளப்படும்.

அசைவுறுகலைகள்

பொதுவான, சகல கிராமியக்கலைகளும் விளையாட்டுக்களும் விடத்தல்தீவிலேயும் பரவலாகப் பயிலப்பட்டது. ஆண்கள் கிளித்தட்டு மறித்தல், கன்னைவிளையாட்டு, பெண்கள் நொண்டியடித்தல், சித்தாடை, பாண்டி விளையாட்டு மற்றும் பெருநாட்களிலே ஊஞ்சலாடுதல் போன்றன விஷேடமானவை.

ஆசைக்கவி, நொடி தாலாட்டு, அரிவுவெட்டு, பொலிவளைப்பாட்டு, தாலாட்டு, மாப்பிள்ளை பைத்து, தோணிப்பாட்டு, நாட்டுப்பாடல், போன்றனவும் உள்ளூர் கலைஞர்கள், புலவர்கள், அண்ணாவிமார் போன்றோரால் இயற்றப்பட்டுப் பாடப்பட்டன.

மந்திரித்தல், ஓதிப்பார்த்தல், துஆ போடுதல், பால் பார்த்தல், தலைசுற்றிப்போடுதல், கழிப்புக்கழித்தல் போன்ற பழக்கவழக்கங்களும், இஸ்மு எழுதிக்குடித்தல், வெற்றிலை எழுதிச்சப்புதல், காலடிமண் எடுத்து எரித்தல், மிளகாய் தலைசுற்றிப் போடுதல் போன்ற முறைகளும் மரபுவழி நம்பிக்கையாகச் செய்யப்பட்டன.

கும்மி, கோலாட்டம், சீனடி, சிலம்படி போன்ற விளையாட்டுக்கள் வரவேற்பு, மாப்பிள்ளை அழைப்பு, மற்றும் மங்கள நிகழ்வுகளிலே நிகழ்த்தப்பட்டன. இக்கிராமத்து மண்வாசனையில், தூயதமிழ்ப் பிரயோகம் மணப்பதை அவதானிக்கலாம். தெளிவான இக் கிராமத்தவர்களின் பேச்சிலே வெளிப்படுகின்றன. நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் படிப்பறிவு கொண்ட இக்கிராம மக்கள் மார்க்க அனுஷ்டானங்களிலே ஆசாரமிக்கவர்கள். முக்காடு போடாத பெண்களை இங்கே காணமுடியாது. சூது, வாது, குடி, கூத்து என்ற எந்தவித அனாச்சாரப் பழக்கவழக்கங்களும் அற்ற, இக்கிராமத்து முஸ்லிம்கள் மார்க்க விடயங்களிலும் ஒழக்க நெறிச் சீலங்களிலும் மிக உன்னதமானவர்கள் எனத் துணிந்து கூறலாம்.

இன்றைய நிலை.

பல மாட்சிமை மிகு விழுமியங்களைக்கொண்டு கொடிகட்டி வாழ்ந்த இக்கிராமம் இனப்பிரச்சினை எனும் அரக்கனின் இரும்புக் கரங்களுக்குள் சிக்குண்டு, சீரழிந்து சின்னாபின்னமாகிவிட்டது.

பயங்கரவாதமெனும் கொடுமை மிகும் சுனாமி இந்த அழகிய கிராமத்தையும் ஆக்கிரமித்துத் துவம்சம் செய்துவிட்டது. இங்கே ஆண்டாண்டு காலமாகப் பரம்பரை பரம்பரையாகக் கோடுபோட்டு வாழ்ந்த முஸ்லிம் பெருங்குடி மக்கள் இப்போது எவரும் இல்லை. துப்பாக்கி பிசாசுகள் முஸ்லிம்களைப் பூச்சாண்டி காட்டித்துரத்திவிட்டன. ஈமானியத்தில் அசையாத நம்பிக்கை கொண்ட இப்பகுதி முஸ்லிம்கள் இறைவனையும், இறை றஸுலையும் முன்னிறுத்தி நம்பியவர்களாக தமது சொத்து, சுகம், சுதந்திரம், தொழுத பள்ளி அனைத்தையும் இழந்துவிட்டபொழுது ஒரு சூரியப்பொழுதினுள்ளே, கண்காணாத் திசை நோக்கி மிக அமைதியாக வெளியேறினர்.

இவர்களது வீடு வாசல், நிலபுலம், அசையும் அசையா உடைமைகள் மற்றும் முதுசங்கள், பொக்கிஷங்களெல்லாம், இன விரோதிகளால் சீரழிக்கப்பட்டு மண்ணோடு மண்ணாகிவிட்டன. இப்போது அங்கே இந்தியன் உடைமுள் பற்றைகளின் பாழ்பட்ட அராஜக ஆக்கிரமிப்பே எஞ்சிக் கிடக்கின்றது.

ஆனாலும் அனைவரையும் அரவணைத்து, எல்லோரும் இம் மண்ணின் மைந்தர்கள் என்று பறைசாற்றும் பள்ளமடுக்குளமும், அதனருகே இரண்டு ஆலமரங்களும் 'அஞ்சல்' என்ற சொல்லும் அடையா நெடுங்கதவும் உடையது விடத்தல்தீவு என்று பெருமை படக் கூறுவதுபோல இன்னும் செழிப்புடனே விளங்குகின்றன. அவை யாருக்காகவோ காத்துக் கிடக்கின்றன. அத் தாய்திரு பூமியிலே, எளிமையுடன் மீண்டும் போய் வாழும் வேணவாவிலே, அக்கிராமத்து முஸ்லிம்கள் பிரார்த்தனைகளுடன் ஆயத்தமாகின்றனர்.

LIBRARY
25 NOV 2011
*SEUSL*
008540